79/1

நூல் விவரப் பட்டியல்

நூலின் பெயர் : சித்தர்கள் தத்துவமும் யோக நெறிமுறைகளும்

பொருள் : வரலாறு

நூலாசிரியர் : கே. ஆர். சிவகாந்தன்

பதிப்பாண்டு : 2003

பதிப்பாளர் : சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் சென்னை - 18.

வெளியீட்டெண் : 2123

நூல் அளவு : டெம்மி

அச்செழுத்து : 9.5 புள்ளி

விலை :

தாள் : 16.0 Kg.

பக்கங்கள் : iv + 396

கட்டமைப்பு : அட்டைக்கட்டு

கணிப்பொறி அச்சு : அப்பர் அச்சகம், சென்னை - 108.

அச்சிட்டோர் : அப்பர் அச்சகம், சென்னை - 108

S. பாலமுருகன், குருக்கள், 9443039558
ஸ்ரீ பூண்டி மகான் ஆற்று சுவாமிகள்
பூண்டி கிராமம் & அஞ்சல்,
கலசபாக்கம் வட்டம்
திருவண்ணாமலை மாவட்டம்– 606 751

B. சந்தோஷ்குமார் – 9047775395
B. தாமோதரன் – 9600923049

உ



ஸ்ரீ பூண்டிமகான் ஆற்று சுவாமிகள்

பூண்டி அஞ்சல் – 606 751, கலசப்பாக்கம் வட்டம், தி.மலை மாவட்டம்.

S. பாலமுருகன் 94430 39558, ☎ : 04181 - 241336

79/1

மதிப்புரை

தமிழ்நாடு புண்ணியம் செய்து தோன்றிய சித்தர்கள் நிறைந்த நாடு. இவர்களில் பலர் இன்று நம் கண்ணுக்கு மறைந்திருக்கலாம். ஆனால் இன்றும் பரு உடல் நீக்கி நுண்ணுடலுடன் வாழ்கிறார்கள். நாம் அவர்கள் மறைந்து விட்டார்கள் என்று கருதி அவர்களின் பருவுடலைச் சமாதியாக்கி வழிபட்டு வருகிறோம். இன்றும் பொதிகை மலை, கொல்லி மலை, திருவண்ணாமலை போன்ற மலைகளில் நூற்றுக்கணக்கான சித்தர்கள் வாழ்கிறார்கள். மக்களும் அவர்களைக் கண்டு பயன் பெற்று வருகிறார்கள். ஆனால் பருவுடல் நீத்த சித்தர்களைச் சித்தர் நிலையடையாத சாதாரண மக்களால் காணமுடியாது.

இன்று திருவண்ணாமலை சென்று கிரிவலம் செல்வோர் பல நூறாயிரம் உளர். இவர்களைவிட எண்ணிக்கையில் கூடிய நுண்ணுடலுடன் வாழும் சித்தர்களும் முழுநிலவு நாளில் வலம் வருவது இவர்கட்குத் தெரியாது. நம்மிடையே வாழ்ந்து மறைந்த யோகி ராம்சுரத் குமார் அவர்கள் வலம் வருவோர் கையை வீசிக்கொண்டு கண்டபடி இங்குமங்கும் அலைந்து செல்லாது அமைதியாக ஒடுக்கமாக வலம் வர வேண்டுமென்பதற்கு அவர் கூறிய காரணம் அவ்வாறு நடந்தால் நுண்ணுடலுடன் வரும் சித்தர்களுக்கு இடையூறாக இருக்குமென்பதே.

அவ்வாறே சிறந்த பெண் சித்தராகிய மாயம்மா மேல்மருவத்தூர் அருகில் வந்தபோது வண்டியை நிறுத்தச் சொல்லி அத்திருக்கோயிலை வண்டியிலேயே வலம் வந்தார். எத்தனை கோயில்கள் கன்னியாகுமரியிலிருந்து சென்னைவரும் வழியில் இருக்க இந்தக் கோயிலை மட்டும் ஏன் வலம் வந்தீர்கள் என்று உடன் வந்தோர் கேட்க அவர் கூறியது "இக்கோயிலைச் சுற்றிப் பல்வேறு சித்தர்களும் மகான்களும் அடங்கியிருக்கிறார்கள்' என்பதே.

இவற்றைப் பார்க்கும் போது நம் தமிழ் நாட்டில் அன்றும் இன்றும் சித்தர்கள் நிறையவே வாழ்ந்து வந்தனர், வருகின்றனர் என்பதே.

இத்தகைய சித்தர்களுள் நம் காலத்தில் வாழ்ந்த ஒருவராய் 'ஆற்று சாமியார்' என்ற பூண்டி மகான் மிகவும் புகழ் பெற்றவர். சித்தர்கள் என்றால் சித்துவேலை செய்பவர்கள் என்ற ஓர் எண்ணம் மக்களிடையே உள்ளது ஆனால் உண்மையில் அத்தகைய ஆற்றல்கள் இருந்தாலும் அவற்றையெல்லாம் வெளிக்காட்டாது, தம் அருட்பார்வையால் மக்களின் துயர் நீக்குதலே தலையாய பணியாம். ஒரு சித்தர் எவ்வாறு உருவாகிறார் என்பதை இந்நூலைப் படிப்பதன் மூலம் உணரலாம். முதலில் நல்ல குருவைத் தேடி தலங்கள் தோறும் அலையவேண்டும். பின்னர் குரு அருள் பெற்று சித்தத்தை அடக்கப் பயில வேண்டும். சித்தத்தை அடக்கிச் சிவமானவர்களே சித்தர்கள். அவர்களுள் ஒருவர்தான் பூண்டி மகான் அவர்கள். சித்தத்தை அடக்கி ஓர் ஓட்டு வீட்டுத் திண்ணையில் 19 ஆண்டுகள் இருந்த நிலை அசையாது வருவோர்க்கெல்லாம் அருள்பாலித்து வாழ்ந்தவர்.

அவரைப்பற்றிய வரலாறு எழுத வேண்டமென்ற உந்துதலால் திருமிகு. கே.ஆர்.சிவகாந்தன் அவர்கள் மகான் வாழ்ந்த இடங்களுக்கெல்லாம் அவரைக் கண்டு பழகி, அருள்பெற்ற அடியார்களையெல்லாம் தேடிச் சென்று பல்வேறு செய்திகளைத் திரட்டி இந்த அரிய நூலைப் படைத்துள்ளார். மகான் வரலாற்றை எழுதும் போதே சித்தர்கள் தத்துவத்தையும் அவர்கள் பயின்ற யோக நெறிமுறைகளையும் பல்வேறு சித்தர் பாடல்களைப் பயின்று, அவற்றிலிருந்து நூற்றுக் கணக்கான பாடல்களை மேற்கோள்காட்டி இந்நூலைச் சிறப்பித்துள்ளார்.

இந்நூலைப் பயில்வோர் சித்தர்கள் பெருமையை நன்குணர்வர். படித்துப் பயன் பெற வேண்டுகிறோம்.

சைவசித்தாந்த நூற்பதிப்புக்
கழகத்தார்

79/1

முன்னுரை

இந்தப் புனித பூமியில் அவதரித்த அத்தனை மகான்களுக்கும் சித்த மகா புருடர்களுக்கும் என் மனமார்ந்த பிரார்த்தனையைச் செலுத்துகிறேன். தற்போது நடமாடிக் கொண்டிருக்கும் மகான்களுக்கும், அவர்கள் வழி பின்பற்றிப் போகும் யோகியர்களுக்கும், என் மனமார்ந்த வணக்கம் பலகோடி.

நாம் இந்தக் கலியுகத்தில் அதுவும் 20ஆம் நூற்றாண்டில் கண்ணால் கண்ட பெரிய ஞானி பூண்டி மகான். உனக்கும், எனக்கும் புராணக் கதை போல் பூண்டி மகானின் அற்புதங்களை யாரும் கூறக்கேட்டது அல்ல. நாம் நம் கண்ணால் கண்டு ஆனந்தப் பட்ட அவர் அற்புதங்கள் ஏராளம். பூண்டி மகானைப் பற்றி அற்புதங்களை, கைலாயத்தில் பரமசிவன் தன் பத்தினி பார்வதி தேவிக்கு இரகசியமாகச் சொல்ல, பார்வதி நந்திக்குச் சொல்ல, நந்தீஸ்வரன் சனகாதி முனிவருக்குச் சொல்ல, சனகாதி முனிவர் நாரதருக்குச் சொல்ல, நாரதர் சனமேசெய மகாராசாவுக்குச் சொல்ல, சனமேசெய மகராசன் எழுதி வைத்து விட்டுப் போன புராணக் கதையும் அல்ல.

நம் முப்பாட்டன், நம் பாட்டனுக்குச் சொல்ல, நம் பாட்டன் நம் தந்தைக்குச் சொல்ல, நம் தந்தை நமக்கு சொல்லிக் கொடுத்த கதையுமல்ல நம் பூண்டி மகான் அனுபூதிகள்.

பின் எப்படி? நாமே நேரில் நம் கண்ணால் கண்ட கலியுக தெய்வம் நம் பூண்டி மகான். உன்னைப் போலவும், என்னைப் போலவும் பல இலட்சம் மக்கள் தினம் தினம் தங்கள் குறைகளைக் கூறி அந்த கலியுகக் கண்கண்ட தெய்வத்திடம் நற்கதி அடைந்தவர்கள் பல கோடியாகும்.

அப்படிப்பட்ட கலியுகக் கண்கண்ட தெய்வம் பலகாலம் திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம், போளூர் தாலுக்கா கலசப்பாக்கம் வட்டம் உள்ள பல கிராமங்களில் நடமாடிய பிறகு, கலசப்பாக்கம் அருகில் உள்ள பூண்டி என்னும் புனித சிறு கிராமத்தில் ஒரு சிறிய ஓட்டு வீட்டுத் திண்ணையில் அமர்ந்து சுமார் 19 ஆண்டு காலம் அந்த திண்ணையை விட்டு எழுந்திருக்காமல் மலசலம் கழிவதும் தெரியாமலும் தினமும் வரும் பக்த கோடிகளின் வினையை அகற்றி அவர்களை நற்கதி அடையச் செய்த தெய்வம் நம் பூண்டி மகான் ஆற்று சுவாமிகள்.

சுவாமிகள் திண்ணையில் அமர்ந்திருந்தபோதே அவர் மக்களுக்குச் செய்த அற்புதங்களை எழுத சுவாமியிடமே கேட்ட போது "நமக்கு ஏம்பா சந்தைக் கூட்டம் - சனக் கூட்டம்" என்று கூறி மறுத்து விடுவார். ஞானிகள் பெரும் கூட்டத்தை விரும்பாதவர்கள். பெரும் கூட்டம் அவர்களின் ஞான நிலைக்கு ஊறு வந்து விடும் நிலை ஏற்பட்டுவிடும்.

இருந்தபோதிலும், இனிப்பு என்ன கடித்ம் போட்டா ஈயையும், எறும்பையும் அழைக்கிறது. இனிப்பின் சுவை கண்டு இனிப்பை நாடி

அவைகள் மொய்த்து விடுவதுபோல் பூண்டி மகானின் ஞானநிலை கண்டு யோகியர்களும், உலக மாந்தர்களும் பூண்டி வருவது தினம், தினம் திருவிழா கோலமாகக் காணப்பட்டது.

சுமார் 13 ஆண்டு காலம் கடந்து சுவாமிகள் பிர்மநிலை எய்திய பிறகு இந்நூல் வெளியிட முடிந்தது. சுவாமிகள் நடமாடியபோது அவர் எங்கெங்கு சென்றார், அப்போது நிகழ்ந்த அற்புதங்களை அவ்விடம் சென்று அதை கண்ணால் கண்ட புண்ணியவான்களையும் கண்டு கேட்டு எழுதிய நூல் ஆகும்.

பிறகு பூண்டியில் ஒரே இடத்தில் அமர்ந்து விட்ட பிறகு அப்போது நடந்த அற்புதங்களை அவ்விடம் பணியாற்றிய சாதுக்கள் நேரம் காலத்துடன் குறித்து வைத்து இருந்தனர். அதைக் கொண்டு எழுதப்பட்ட நூல் என்று அறிய வேண்டும்.

இது ஒரு பிரம்ம ஞானி பிர்மநிலையெய்தி பரபிரம்மாகி உலக மக்களின் நலன் பொருட்டு மானிட உருவம் கொண்டு, வந்து சமுதாயத்தில் உள்ள குப்பைகளையும், ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்களில் மூழ்கியுள்ள உலக மக்களின் மனதில் உள்ள குப்பைகளை அகற்றி நற்கதி அடையச் செய்ய வந்த மெய்ஞானியைப்பற்றி எழுதப்பட்ட நூல் ஆகும்.

ஞானி ஒருவர் தன் உடலில் உள்ள 96 தத்துவங்களைக் கண்டு அதை அடக்கித் தன் வசப்படுத்தி, அதனால் ஏற்படும் அட்டமாசித்திகளை கைவரப் பெற்று உலக மக்கள் நலன் பொருட்டு அந்த அட்டமா சித்துக்களைப் பயன்படுத்துவார்கள். அப்படி அட்டமா சித்துக்களைப் பெற்ற ஞானியைப் பற்றி எழுதிய நூல் என்று உணர வேண்டும்.

இந்நூல் எழுத எத்தனையோ படித்த வித்துவான்களையும், ஆன்மீகத் துறையில் இருப்பவர்களையும் அணுகி அவர்கள் இந்நூல் எழுதுவதற்கு வேண்டிய ஞான நூல்களையும் கொடுத்து எழுத மன்றாடிக் கேட்டுப் பார்த்தேன். யாரும் ஒப்புக்கொள்ளவில்லை.

ஆனால் என் வணக்கத்திற்குரியவரும், செங்கை மாவட்டம் திருப்போரூர் ஸ்ரீ கந்த சுவாமி கோயில் மடாதிபதி தவத்திரு. ஸ்ரீலஸ்ரீ சிதம்பர சிவஞான சுவாமிகள். "ஐந்தும் மூன்றும் அடுக்காயிருந்தா அறியா சிறுமியும் சமைப்பாள். அதுபோல் நீயே எழுது" என்று கட்டளை இட்டபடி இந்த அறியா சிறுவன் சமைத்ததை சுவைத்துச் சாப்பிடுவீர் என்று நினைக்கிறேன்.

மேலும் பூண்டியில் உறையும் புனித சோதி ஸ்ரீ பூண்டி மகான் அருள் ஆசியாலும் இன்று அவர் வழியில் நடமாடும் போளூர் தாலுக்கா, வில்வராணி "ஸ்ரீ பர்வத சுவாமிகள்" கருணை யினாலும் இந்த அரிய செயல் ஈடேறியது.

இந்நூல் எழுத பல ஞானநூல்களைக் கொடுத்து உதவிய ஆரணி பெரியவர் நமச்சிவாய முதலியார் அவர்களுக்கும், என்னுடன் இருந்து இதை

எழுதப் பல உதவிகளை புரிந்த செங்கல்பட்டு பெரியவர் திரு. ஆர். அரசப்ப முதலியாருக்கும் பல சாதுக்களுக்கும், சென்னை, கோவை, சேலம், மதுரை, வேலூர் போன்ற ஊர்களில் பழைய புத்தக வியாபாரம் செய்யும் அன்பர்கள் எனக்கு பல பழைய ஞானப் புத்தகங்களைக் கொடுத்து உதவியவர்களுக்கும் என் அன்பார்ந்த நன்றி பல.

போளூர் தாலுக்கா, வில்வராணி உது. கர்ணம் பெரியவர் அ. சந்திர சேகரப் பிள்ளை போன்ற பெரியவர்கள் கொடுத்த ஊக்கம் இந்நூல் எழுத காரணமாயின.

ஸ்ரீ பூண்டி மகானின் அற்புதங்கள் ஏராளம். அதை எழுத வேண்டுமானால் என் வாழ்நாளே போதாது. அதனால் அவர் அற்புதங்களை உதாரணத்திற்குச் சிலவற்றை மட்டுமே எடுத்துக் காட்டியுள்ளேன்.

ஞானிகள் நிலை என்ன, அவர்கள் எவ்விதம் உலக மக்களுடன் ஒட்டாமல் வாழ்கிறார்கள். அவர்கள் அந்நிலை அடைய என்ன என்ன இன்னல்களை எதிர் கொள்கிறார்கள் என்று கற்றுணர்ந்த பெரியோர்களின் கையில் இந்த நூல் மிக உயர்ந்த வைரம் என்று நினைக்கிறோம்.

அப்படிப்பட்ட வைரத்தின் நிலை என்ன, அது உலக மக்களுக்கு ஆசி வழங்கி அவர்கள் நற்கதி அடைய என்ன என்ன செய்தது என்று அறிய எழுதிய நூல் என்று உணர்ந்து படிக்குமாறு மிகவும் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

K.R. சிவகாந்தன்

ஆரணி

MAYELAI MA MUNIVAR
Guruji Sundararam Swamigal

Jayaram vilas
235, Ramakrishna Mutt Road,
Mylapore, Chennai - 600 004.

பாராட்டுரை

இந்த உலகத்திலே அதுவும் இந்தக் கலி காலத்திலே, மக்களின் மனப்பான்மை எத்தனையோ விதமான ஆசாபாசங்களுக்குள் ஈடுபட்டு, ஆசை என்ற மாயையிலே தன்னையே அவதார தத்துவமாக்கிக் கொண்டு அதன் அடிப்படை தோசமான செயல், ஆங்காரப் பேய், அவரவர்களை ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கும் காலத்திலே நல்லதோர் மனச்சாட்சி வளரவேண்டும் என்றால் தெய்வீக சத்தியசாட்சி ஒன்றுதான், தன்னைத் தானே திருத்தி அமைக்க வல்லமை பெற்றது.

காரணம், நல்லதோர் மனச்சாட்சி வளரும். பகுத்தறிவினுடைய தன்மையும் தெரியும். பொறுமை ஒழிந்து பொறுப்புள்ள பொறுமை வளர்ந்து தன்மையான சகிக்கும் தன்மையைப் பயன்படுத்தி உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்ற எண்ணம் நாளுக்கு நாள் குறைந்து எல்லோரும் வாழ நாமும் வாழ்வோம் என்ற சுத்த சத்திய சமரச நேர்மை என்ற வள்ளலாரின் வாக்கின்படி அவரவர் வாழலாம்.

ஆனால் இத்தனைத் தத்துவங்களையும் காலம் போகும் வழியில் உண்மையான உள்உணர்வு கொண்டு அவனவன் கடைப்பிடிக்க, நல்லதோர் வழிகாட்ட வேண்டும்.

அந்த மாதிரியான வழியில் தன்மையான நேர்மை ஊட்டிக் கொடுக்க உண்மையான ஒரு குரல் மகாத்மியம்தான் தேவை.

காரணம் இக்காலத்திலே காசுக்காகவே பெயர், புகழுக்காகவே மாயாசால சித்துக்களைச் செய்து மக்கள் மனதை ஏமாற்றி மகான்கள்போல் நடித்து, சுயநலமென்ற உள்ளத்தால் ஒன்றும் அறியாத மக்களை அடிமையாக்கிக் கொள்கிறார்கள்.

இந்த விதமான குரோதமான செயல்களை எல்லாம் அறவே ஒழிப்பதற் காகவே பஞ்சபூதங்களின் கருணையாலும் பற்பல தெய்வங்களின் கருணையாலும் முக்கோடி தேவாதி தேவர்களின் கருணையாலும் உண்மையான, தன்மையான மகத்தான சாட்சி தவசீலர் பூண்டி மகான் நம் தமிழகத்திலே வெகு சமீப காலத்திலே வட ஆற்காடு மாவட்டம், போளூர் தாலுக்காவில் பூண்டித் தலத்தில் அவதாரம் கொண்டு இந்த லௌகீக காலத்திற்கு ஏற்றவாறு எல்லா மக்களையும் புனிதமான வாழ்க்கையில் தெளிவுபட நடத்தினார்.

அவருடைய மெய்ஞ்ஞான அபார சக்திகளை நம்மால் வாய்விட்டுச் சொல்ல முடியாது. இருந்தாலும் ஒரு வகையில் மாந்தருள் தமிழ் மகான் என்ற வகையில் இந்த மகத்தான பிறவியை இக்காலத்திலும் வருங்காலத்திலும் எல்லோரும் புரிந்து கொள்ளும் வண்ணம் குருமகா சரித்திரம் என்ற வகையிலே இப்பொழுது வெளியிட வருகிறது என்றால் அவர் கூட்டிக் கொடுத்த குரு பக்தியின் தன்மை தான். அப்பேற்பட்ட தன்மை பெற்றவர் திருவாளர் **K.R.** சிவகாந்தன், ஆரணியைச் சார்ந்தவர்.

இந்த அளவிற்கு குரு சரித்திரத்தை விமரிசையாக, தெளிவு பட எழுத வேண்டுமென்றால் இந்த எழுத்தாளருடைய தாய், தந்தையர் செய்த புண்ணியம் தான், காரணம்.

ஏன் என்றால், பெயருக்கு ஏற்றவாறு சிவபக்திக்கு மெய்ஞ்ஞான காந்த சோதியைக் காட்டப்பெற்று சுத்தமான குரு பக்தியின் அருட்கடாச்சம் திறன், தன்னையே அர்ப்பணித்து இந்த அரிய பெரிய செயலில் ஈடுபட்டு அந்த குருதேவர் பூண்டி மகானின் ஆத்ம சாந்தியை ஒரு காலத்தில் உலகெங்கும் தெரியும்படி செய்துள்ளார்கள்.

"இதுதான் தெய்வீக சத்திய சாட்சி
இதுதான் தெய்வீக ஞானத்தின் மகத்துவம்
இதுதான் குருமகாத்மியத்தின் மகத்துவம்"

ஆகையினால் எல்லா மக்களும் (தமிழ் அறிந்தவர்கள்) இந்த மகத்தான புத்தகத்தைப் படித்து என்றென்றும் மனம் சாந்தி பெற்று வாழ்க என்று அடியேனுடைய குருநாதர் ஆகிய (வள்ளிமலை தெங்கால் ஆசிரமம் மௌனகுரு கிருபாகடாச்சத்தை இவன் பிராத்திக்கின்றான்.

ஓம் சாந்தி!   ஓம் சாந்தி !   ஓம் சாந்தி

30-04-92   **மயிலை குருஜி சுந்தரராம் சுவாமிகள்**



உ

ஓம் பூண்டி மகான் துணை

பகவான் ஆற்று சுவாமிகள் அருள்நெறி இயக்கம்

நெ. ஏ-11, நேதாஜி மார்கெட்,
வேலூர் - 632 004. வ.ஆ.அ. மாவட்டம்

உயிர்க்குரு உயர்நூலுக்கு உளவாழ்த்து

இயற்கையிலே பாசங்க ளொன்றுமிலார் குணங்கள்
ஏதுமிலார் தத்துவங்க ளேதுமிலார் மற்றோர்
செயற்கையில்லார் பிறப்பில்லா றிறப்பில்லார் யாதுந்
திரிபில்லார் களங்கமில்லார் தீமையொன்று மில்லார்
வியப்புற வேண்டுதலில்லார் வேண்டாமை யில்லார்
மெய்யே மெய்யாகி யெங்கும் விளங்குமின்ப மயமாய்
உயத்தகுமோர் சுத்தசிவானந்த சபைதனிலே
ஓங்குகின்ற தனிக்கடவு ளொருவருண்டே கண்டீர்.

- வள்ளலார் அருளிய குருவிளக்கம்

ஆற்றுசுவாமி போதநூல் அடியார்க்கு அமிர்தமாம்
ஆற்றுசுவாமி மோனநூல் அகிலத்தின் மாமறை
ஆற்றுசுவாமி தவநூல் அனைவர்க்கும் புதுமறை
ஆற்றுசுவாமி அருள்நூல் அளப்பதற்கும் அரிதே!


உலககுரு பூண்டி மகான் உயர்வான அருள்நூலும்
உலகமெலாம் உய்யசெய்து உறுதுணையாய் காத்தருளும்
அம்மையப்பன் ஆற்றுசுவாமி அருள்வேதம் படிப்போர்க்கு
இம்மை அம்மை துயர்நீங்கி இனிதுநிறை வாழ்வரே!

அவதார சற்குருவாம் ஆற்றுசுவாமி அருள்நூலில்
தவயோக நெறிவாழ்வை திடமாக தெரிந்துள்ளார்
சிவகாந்தன்; சங்கத்தார்; சீலசுப்ர மணியனார்
புவனம் போற்ற ஆசியுடன் பெருவாழ்வு வாழ்வரே!

அருணைமூல கருணையாலே அமைந்த நூலாம்
ஆனைமுகன் ஆசியாலே விளைந்த நூலாம்
ஆறுமுகன் சக்திவேலால் முளைத்த நூலாம்
அரங்கனும் ஆதித்தனும் அளித்த நூலாம்
ஆதிஅம்மை அருளினாலே ஆன நூலாம்
ஆதிசக்தி அப்பனாலே பொலியும் நூலாம்
இம்மைஅம்மை இருமையினில் இனிக்கும் நூலாம்
இங்கிதமாய் கரையேற்ற வந்த நூலாம்
இரக்கமுடன் ஈகைநலம் அளிக்கும் நூலாம்
இனிமைசுகம் நிறைவாழ்வு கிடைக்கும் நூலாம்
ஆனான தத்துவங்கள் அடங்கும் நூலாம்
ஆற்றுசுவாமி அவதாரம் சொல்லும் நூலாம்
எம்மவரை எழுமையுடன் காக்கும் நூலாம்
எல்லார்க்கும் ஏற்றங்கள் கொடுக்கும் நூலாம்
உம்பர்கள் உளம்கனிந்து ஓதும் நூலாம்
உயர்வுகள் அனைவர்க்கும் அளிக்கும் நூலாம்
ஐயங்கள் தீர்த்துவிடும் ஐயன் நூலாம்
ஐயப்பன் துணையாலே அமைந்த நூலாம்
பைந்தமிழால் பிரமன்நிலை பரப்பும் நூலாம்
பார்போற்றும் உத்தமரால் பதித்த நூலாம்
ஒற்றுமையை உலகுக்கு உணர்த்தும் நூலாம்
ஓதுவார்கள் ஒண்பதமே சேர்க்கும் நூலாம்
வேற்றுமத மத்தனைக்கும் வேத நூலாம்
வேண்டும்போது மாதவனைக் காட்டும் நூலாம்
குருவாலயம் அமைந்தோரால் ஆன நூலாம்
கும்பாஅபிடேகம் செய்தோரால் பதிந்த நூலாம்
கும்பகோணம் முருகபிள்ளை போற்றும் நூலாம்
குருபூசைசெய் பாலமுருகன் வணங்கும் நூலாம்
அண்ணாமலை அண்ணாமலை என்ற நூலாம்
ஆற்றுசுவாமி அருமறையாய் ஆன நூலாம்

அன்பு சீடர் சுப்பிரமணியர் ஆசி நூலாம்
அவர்துணைவி மார்க்கம்மாள் பக்தி நூலாம்
தவமான சண்முகனார் தலைவன் நூலாம்
தங்கசுபேதார் சம்பத்தும் மகிழ் நூலாம்
சிவகாந்தன் சிரத்தையாலே சிறக்கும் நூலாம்
சிவனடியார் தர்மராஜின் சிந்தை நூலாம்
அன்பூண்டி ஆறுமுகம் அத்தன் நூலாம்
அருள்திரு ராஜேந்திரன் அப்பன் நூலாம்
அரிகுமாரசுவாமி குருவினுடை மோன நூலாம்
குறையிலா இராதாகிருட்டிணன் ஞான நூலாம்
தவபூண்டி தியாகராசன் தர்ம நூலாம்
நலமான இலட்சுமணசிங் நல்ல நூலாம்
வளமான அரிசுவாமி வணங்கும் நூலாம்
வளகுண பழனிசுவாமி வனப்பு நூலாம்
உளநெறி முத்துகுடும்ப உயர்ந்த நூலாம்
இசைதாசர்; சுந்தர ராசன் நூலாம்
மலபீட நாதனுக்கு மலர்ந்த நூலாம்
மும்மலங்கள் மறைந்திட வந்த நூலாம்
உலகம்உள்ள நாள்வரை இருக்கும் நூலாம்
உலககுரு ஆற்றுசுவாமி அருளும் நூலே!

இங்ஙனம்
'ஆற்று சுவாமி அடிமை' கே.சி. தன்சிங்



தமிழகத் துறவியர் பேரவை

உலக இந்துப் பேரவை

அமைப்பாளர் :

தவத்திரு சாந்தலிங்க இராமசாமியடிகள்
பேரூராதீனம்
பேரூர் (அஞ்சல்) கோவை - 641 010.

வாழ்த்து

திருவண்ணாமலையின் பக்கம்
திகழ் பூண்டி தன்னில் ஞான
உருவினராகும் சித்தர்
உயர்வருள் மகானின் செய்தி
தருதமிழ் நூலியற்றி
தகுபூண்டி மகானை யாரும்
பெருமையோ டுணரத் தந்த
பேரன்பர் வாழி.

14-05-92

அன்புள்ள
சாந்தலிங்க இராமசாமியடிகள்

உ

ஸ்ரீ முருகன் துணை

அருள்மிகு கந்தசுவாமி திருக்கோயில்

திருப்போரூர் - 603 110. செங்கை - அண்ணா மாவட்டம்

ஸ்ரீலஸ்ரீ சிதம்பர சிவஞான சுவாமிகள்

ஆதீனபரம்பரை தர்மகர்த்தர்

பாராட்டுரை

திருவருள் கைவரப் பெற்ற மகான்கள் பலர் நம்தெய்வ நலஞ்சாற்ற நாட்டில் தோன்றியுள்ளனர். அத்தகைய மகான்களின் அருட்பெரும் தவவலிமையின் விளைவாகவே நம்மவர்கள் நலமே இன்றும் நாளையும் வாழ்கின்றனர். மகான்களின் குறிக்கோள் நம் மக்கள் இனத்தை உயர்த்துவதேயாகும். மக்களின் நலிவைக்கண்டு பொறுக்க மாட்டார்கள் மகான்கள். இறைநெறி எங்கே குறைகிறதோ அங்கே தோன்றி மக்கள் உள்ளத்தினை இறை நெறியில் தோயுமாறு அருள் பாலிப்பார்கள் மகான்கள்.

அத்தகைய மகான்களில் தெய்வநலஞ் சான்ற மாமுனிவர் நம் பூண்டி மகான்.

அப்பெருந்தகையைப்பற்றி எழுந்ததே இந்த அருள்நலம் சான்ற நூல் ஆகும்.

மகான்களுக்கே இருப்பிடம் திருவண்ணாமலையாகும். அத்தொடர்பு பற்றியே இந்நூலை அண்ணாமலையின் சிறப்பினை நவின்று தொடங்கியுள்ளார் இந்நூலாசிரியர். இது சாலப் பொருத்தமாகும்.

மகான்களைப் பற்றி முதற்கண் விரிவாக ஆய்வு செய்யப்பட்டுள்ளது இந்நூல். பலவகை சித்துக்களைத் தம்மகத்தே கொண்டு விளங்கியவர்கள் அவர்கள். அச்சித்துக்களைத் தமக்குப் பயன்படுத்தாது மக்களை திசை திருப்புவதற்காகவே அருள் வாழ்வு கொண்டவர்கள். பதினெண் சித்தர்களைப்பற்றியும், யோக சாதனம் பற்றியும், உடற்கூறு பற்றியும் மிகமிக விரிவாக ஆய்வு செய்துள்ளார் இந்நூலாசிரியர். பஞ்சாக்கர வடிவமே நம் உடல் அமைப்பு என்பதை காரண காரிய விளைவு குறித்தே இந்நூலில் எழுதப்பட்டுள்ளது. மானிட உடல் புனிதப்படைப்பில் சிறந்தது. உத்தமன் நம் உடலின் உள்ளே பிரியாது இருக்கிறான். ஆதல் பற்றியே இறைவனுக்குப் பிரான் என்று பெயர் வந்தது என்று கூறுகிறார் இந்நூலாசிரியர். 'புறத்தே தேடாதே, அகத்தே தேடு இறைவனை' என்பது பூண்டி மகானுடைய உபதேசம் என்பதைச் சுவைபட விளக்குகிறார் இந்நூலாசிரியர்.

வேண்டுதல் வேண்டாமை இலா சீலர்; பண்பு
நலஞ்சான்றவர் நம் பூண்டி மகான்.

"சித்தமயம் அறிவித்து சிவமாக்கி எனைஆண்ட
அத்தன் எனக்கு அருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே"

என்று மணிவாசகப் பெருந்தகையின் பெருநிலையைக் கூறுகிறார் நம் பூண்டி மகான் என்று சுட்டியுணர்த்திய நம்நூல் ஆசிரியரின் நுண்மான் நுழைபுலத்தைப் பாராட்ட வேண்டும்.

அந்தக் கரணங்களைப் பெற்று சிவனுடன் சிந்தித்தல் சித்தர்கள் நிலை. அந்நிலையை அடைந்தவர் நம் பூண்டி மகான். இவரை ஆற்றுச்சாமி என்றும் கூறுவர்.

சாலோகம், சாமீபம், சாரூபம் ஆகிய படிநிலை கடந்து சாயுச்சிய நிலையை அடைந்தவர்கள் சித்தர்கள். அந்நிலை எய்தியவர் நம் பூண்டி மகான்.

மகான்கள் நமக்காகவே தங்கள் மேல்நிலையிலிருந்து கீழ் இறங்கி வந்து அருள் பாவிக்கிறார்கள். தங்கள் நலங்கருதாது மக்கள் உயிர்கட்கு உரிய நலன் கருதியே அவதரிக்கிறார்கள். அத்தகைய புனிதப் பெரியோர்களில் நம் பூண்டி மகான் தலையாயவர் என்பதை இந்நூலாசிரியர் பலபடியாக எடுத்துரைக்கிறார்.

இந்நூல் படித்துப் பட்டம் பெற்றவர்களுக்கு ஓர் சிறந்த ஆய்வு நூலாகும். அறிஞர் பட்டம் பெற ஒரு சிறந்த நூலாகும். இந்நூலில் ஆசிரியர் சங்க இலக்கியங்கள், பன்னிருதிருமுறைகள், புராண இதிகாசங்கள், தனிப்பாடல்கள், தனிப்பெரும் புலவர்கள், இனிய பிங்க வள்ளல் ஆகியயோர் பாடல்கள் ஆங்காங்கே எடுத்து மேற்கோள் காட்டிய திறன் படித்து உணர்வதற்குரியவையாகும். சாத்திர தோத்திர நூல்களுக்கு ஆதாரமாய்த் தம் வாழ்க்கையில் வாழ்ந்து காட்டியவர் நம் பூண்டி மகான் என்பதை இந்நூல் ஆசிரியர் மிகவும் தெளிவாக எடுத்து உரைக்கின்றார். தம் வாழ்நாளில் சந்தித்த பலரின் துயர் துடைத்து அவர்களை அருளாளர்களாக மாற்றிய பெருமை நம் பூண்டி மகானையே சாரும் என்பதைப் பலருடைய அனுபவங்களை இந்நூலில் எடுத்து இயம்புகின்றார் இந்நூலாசிரியர்.

ஆசிரியரைப்பற்றிய சில செய்திகள்: ஆசிரியரின் பெயர் சிவகாந்தன் என்பது சிவப்பேரொளி உயர்ந்து மிளிரக் காண்கின்றோம். அவர் முகப்பொலிவில் பூண்டி மகானிடம் ஆழ்ந்த அகப்பற்று உடையவர். பல இன்னல்களையும் பொருட்படுத்தாது தம் குருநாதனின் குறிக்கோளே தம் வாழ்க்கையின் இலட்சியம் என்று கருதுபவர். மக்கள் கொடுக்கும் இன்னல்களை எல்லாம் தம் உள்ளத்தில் ஏற்றுக் கொள்ளாது பூண்டி மகானின் உள்ளக் கிடக்கையே தம் உயிர் மூச்சாகக் கொண்டு மகான் பூண்டி சுவாமிகளுக்கு கற்கோயில் எழுப்பியுள்ளார். இது ஒரு தனி மனிதன் தன் ஆத்மபலத்தினால் எழுப்பப்பட்ட இத்திருக்கோயில் மகான்களுக்கு ஆலயம் எழுப்புவது என்பது சாதாரண செயல் அல்ல. சிவன், முருகன் முனதலிய தெய்வங்கட்கு ஆலயம் எழுப்பி விடலாம். அது அதிக சிரமம் தான். ஆனால் அருளாளர்கட்கு, சித்தர்கட்கு, தவஞானச் செல்வர்கட்கு, யோகீசுவரர்கட்கு ஆலயம் அமைப்பது மிகமிகக் கடினமான செயலாகும். வாழ்க்கையில்

அனுபவ ரீதியில் இதை இங்கு எழுதுகிறோம். சிவத்தலங்களை தரிசித்தல் மிக எளிது. சிவப்பேறு எய்திய குருமார்களின் (அவர்கள் நெறியடைந்த இடங்களைக் கண்டறிந்து) சமாதி நிலையாகிய குருச்சேத்திரங்களைக் காண, கோடி புண்ணியம் செய்திருக்க வேண்டும். அத்தகைய புண்ணியத்தை நமக்கு நல்கியவர் நம் நூல் ஆசிரியர் சிவகாந்தன் அவர்கள். ஏன் என்றால், பூண்டி மகான் நெறியடைந்த இடத்தில் திருக்கோயில் அமைத்து அதைக் குருச்சேத்திரமாக நிலை நாட்டிய திறன் போற்றுதற்குரியது. பூண்டிக்கு புண்ணிய யாத்திரை செய்து மகான் உறையும் திருக்கோயிலைத் தரிசிப்பது நம்மவர்கட்கும் பெரும் பாக்கியமாகும். அத்தகைய பாக்கியத்தை நல்கிய்வர் நம் நூல் ஆசிரியர் சிவகாந்தன் அவர்கள், அவர் நீடுழி வாழ்க! அவர்தம் தொண்டு சிறக்க என வாழ்த்துகிறோம்.

ஸ்ரீலஸ்ரீ சிதம்பர சிவஞான சுவாமிகள்
ஆதீன பரம்பரை தர்மகர்த்தர்

GUNDOOSI
Devotional Tamil Monthly
Editor K. Radhakrishnan

78, Dr. Besant Road,
Madras - 600 014.

பாராட்டுரை

நண்பர் ஆன்மீகச் செல்வர் திரு. K.R. சிவகாந்தன் அவர்கள் மகான் பூண்டி சுவாமிகளிடம் மிகுந்த பற்றும் பக்தியும் கொண்டவர், "பூண்டி மகான் ஆற்று சுவாமிகள்" என்ற இப்புனிதமான படைப்பில் பக்தர்கள் பயன் பெறும் வகையில் நன்கு பயன் உள்ள வகையில் தொகுத்து எழுதி யுள்ளார்கள்.

ஆற்று சுவாமிகள் என்று பக்தர்களால் போற்றப்பட்டு வந்த மகானைப் பற்றிய செய்திகள் நன்கு ஆராய்ந்து விளக்கப் பட்டுள்ளது.


மனித உடல் கூற்றுக்களைப்பற்றிய நாம் தெரிந்து கொள்ள வேண்டிய செய்திகளையும் தொகுத்து அளிக்கப்பட்டுள்ளதுடன் பல அரிய கருத்துக்களும் சொல்லப்பட்டுள்ளன.

இறைபணி மணியாக தொண்டாற்றி வரும் திரு. சிவகாந்தன் அவர்களால் தொகுத்து அளிக்கப்பட்டுள்ள சுமார் நானூறு பக்கங்களைக் கொண்ட இப்புனித பொக்கிசத்தை நல்ல முறையில் தயாரித்துள்ளார்கள்.

அன்பர்கள் அவசியம் படித்துப் பயன் அடைவதுடன் பூண்டி மகான் அருளாசியும் பெற்று நல்வாழ்வு பெற வேண்டி திரு. சிவகாந்தன் அவர்களுடைய ஆன்மீக சேவை தொடர நல்லாசி கூறி வாழ்த்துகிறேன்.

"குண்டூசி" ராதாகிருஷ்ணன்
ஆசிரியர், குண்டூசி மாத இதழ், சென்னை

பொருளடக்கம்



கடவுள் வாழ்த்து
ஸ்ரீ பூண்டி மகான் துணை

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பவன் முதற்றே உலகு" -குறள்

வாக்குண்டாம் நல்ல மனமுண்டா மாமல ராள்
நோக்குண்டா மேனி நுடங்காது -
பூக்கொண்டு துப்பார் திருமேனித் தும்பிக்கையான் பாதம்
தப்பாமற் சார்வார் தமக்கு. -ஔவையார்

திரு அண்ணாமலை

பூலோகத்தில் அனேக சிவத்தலங்கள் உள்ளது. அதில் தென்னாட்டில் ஐந்து முக்கியமான ஐம்பூத தலங்கள் உள்ளது. அதனால்தான்

"தென்னாடுடைய சிவனே போற்றி
என்னாட்டவர்க்கும் இறைவா போற்றி"

என்று தென்னாடுடைய சிவனை பெரிதும் புகழ்ந்து பாடுகின்றனர். பஞ்ச பூதங்களாவது; நீர், நெருப்பு, காற்று, பூமி, ஆகாயம் என்பதாகும். அந்த பஞ்ச பூதங்களுக்கும் சிவனுடைய கோயில்கள் பிரசித்தி பெற்றவை. அவைகள்


நீர்	-	திருவானைக்காவல்
நெருப்பு	-	திருவண்ணாமலை
காற்று	-	திருக்காளத்தி
ஆகாயம்	-	சிதம்பரம்
மண்	-	காசி

ஆகும். அதில் சிதம்பரத்தைக் கண்டால் முக்தி என்றும், காசியில் இறக்க முக்தி என்றும், திருவாரூரில் பிறந்தால் முக்தி என்றும், காஞ்சிபுரத்தில் நடந்தால் முக்தி என்றும், ஆனால் நினைத்த உடன் முக்தி தரும் தலம், நெருப்புத் தத்துவமாகிய திருஅண்ணாமலையாகும்.

"தில்லையைக் காண, காசியில் இறக்க
சிறக்கும் ஆர் ஊர்தனில் பிறக்க
எல்லையில் பெருமை அருணையை நினைக்க
எய்தலம் முக்தி என்று உரைத்தீர்" - அருணாசல புராணம்

அப்படி நினைத்த உடன் எல்லையில்லாப் பெருமை வாய்ந்த மலை. தமிழ் நாட்டில் வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ளது. இதன் பெருமையை ஆயிரம் நாக்கு படைத்த ஆதிசேடனாலும் விளக்க முடியாத முக்தியைத் தரும் மலை.

பல்லாண்டு காலம் புனித மலையாக பாரத தேசத்தினர் போற்றி வணங்கும் மலை. ஈசன் அருணகிரியாக (நெருப்பு மலையாக) தோன்றிய மலை. அருணாசலம் சோதிலிங்கமாக வணங்கும் மலை அண்ணாமலை.



திருவண்ணாமலையின் கோயிலின் தோற்றம்

தென் கைலாயம் என்று புகழும் மலை உத்திர கைலாசத்தை விட தொன்மை வாய்ந்த மலை அண்ணாமலை. இமய பர்வதம் தோன்றும் முன் தோன்றியதாக "கந்த புராணம்" கூறுகிறது.

பூகோளத்தில் உள்ள நிலக்கரிப் பாளங்கள் ஏற்படும் முன் ஏற்பட்ட மலை, கோடான கோடி ஆண்டு ஆகும். பூகோள ஆரம்பத்தில் உண்டான மலை சிவ மலை, சோணகிரி மலை, அருணாசலம், சோணாசலம், அருணாத்திரி, சோணாத்திரி என்று பல பெயர்களை தன்னகத்தே கொண்ட பெருமை நிறைந்த மலை அண்ணாமலை. "ஆதியந்தம் அறியாது திகழும் அருணகிரி" ஆகும்.


கடலில் மூழ்கிப்போன லெமூரியாக் கண்டத்தின் எஞ்சிய பாகம் அருணாசலம். உலகத்தில் இருதயமாக உள்ள மலை என்று "கந்த புராணம்" கூறுகிறது:

"ஆத்ம சோதி அருணாசலத்தின் இதயத்திலே
விளங்குகிறது என்று தியானி." —சிவபெருமான் வாக்கு

திக்விசயம் பெற்ற சித்தமகா புருடர்கள் வசிப்பதாக வடநூல் "அருணாசல மகாத்மியம்" கூறுகிறது.

சாவ்ரியன்ஸ் என்றழைக்கப்படும் பெரிய இராட்சத பிராணி மலைபோல் ஊர்ந்து செல்லும் காலத்திற்கு முன் உள்ள மலை. பூமி உண்டானபோது ஏற்பட்ட மலை அண்ணாமலை, என்று வடநூல் "அருணாசல மகாத்மியம்" கூறுகிறது.

சிவபெருமான் தீபமாய் நின்று அடி முடி காணாத பிரம்மாவும், விட்ணுவும் அயர்ந்து அண்ணாந்து பார்த்த மலை அண்ணாமலை. திரு சிறப்பு சேர்த்து திருவண்ணாமலை ஆகியது. நெருப்பு மலையை அண்ண முடியாத (நெருங்க முடியாத) மலை அண்ணாமலை, அருணபுரி, அருணகிரி, சோணாத்திரி, சோதி மலை எனப் பல பெயர்கள் வழங்கப் படுகிறது.



படம்

கிரேதா யுகத்தில் அக்னி மலையாகவும், திரேதா யுகத்தில் மாணிக்க மலையாகவும், துவாபர யுகத்தில் பொன் மலையாகவும் மிகவும் பிரகாசமாகவும் கலியுகத்தில் கல்மலையாகவும் காட்சியளிக்கிறது.

"உண்ணாமுலையாள் ஒரு பாகம் ஆன மலை
கண்ணார் அமுதாய் காட்சி மலை - விண்ணோர்
துதிக்கும்மலை - அன்பர் தொழுதேத்தி நாளும்
மதிக்கும் மலை அண்ணாமலை" -குரு நமசிவாயர்

குகை நமசிவாய மகரிசி சீடர் குரு நமசிவாயர் திருவாய் மலர்ந்தருளியுள்ளார். நினைக்க முக்தி தரும் தேயு தலம் சோணகிரி, அருணம்

= சிவப்பு, கிரி = மலை, நெருப்புக் கோளமாய் இருந்த மலை அண்ணாமலை. சிவனே இலிங்க உருவாக ஆன மலை அண்ணாமலை. அதனால் தான் எவ்விடமும் இல்லாத இங்கு கிரிவலம் வருவது சிறப்பு வாய்ந்ததாக உள்ளது. ஞானத் தவசீலர்களை வா! என்று அழைக்கும் மலை அண்ணாமலை.

"ஆதி நடமாடும் மலையன்றிருவர் தேடுமலை
சோதிமறியாடவரும் ஆடு மலை - நீதி
தழைக்குமலை ஞான தபோதனரை
அழைக்குமலை அண்ணாமலை"

என்றார் குகை நமச்சிவாயர்.

மேலும்

"அண்ணாமலை தொழுவார் வினை
வழுவா வணம் அறுமே"

என்று திருஞான சம்பந்தர் பாடியுள்ளார். பஞ்ச பூதத் தலத்தில் ஒன்று சிதம்பரம், ஆகாசம் - வெட்ட வெளியைக் குறிக்கும் தலம். திரு அண்ணாமலை - நெருப்பு - அக்னியை குறிக்கும் ஸ்தலம். காளகத்தி, வாயுவை குறிக்கும் வாயு தலம். காஞ்சிபுரம் பூமியைக் குறிக்கும் மண் தலம். திருஆனைக்கா, அப்புவை குறிக்கும் தண்ணீர் தலம் ஆகும்.

ஒவ்வொரு சீவராசியிலும் பிரம்மம் உள்ளது. அது சோதி மயமாக உள்ளது என்பதை அறிந்தவன் யோகி. அப்படி சோதி வடிவு காண்பதுதான் திருக் கார்த்திகை தீப தரிசனம்.

முக்தி தலங்களில் முதன்மை பெற்ற தலம் திரு அண்ணாமலை.

"தில்லை வனங்காசி திருவாரூர், மாயூரம்
முல்லை வனங்கூடல் முதுகுன்றம் நெல்லைகாளார்
காஞ்சி கழுகுன்றம் மறைக்காடருணை - காளத்தி
வாஞ்சியமன் முக்தி வரும்"

என கட்டளைக் கலித் துறையில் விளங்குகிறது.

வந்திருக்கும் அடியார் தங்கள் வருமேல் வினையோடு
பத்தித் திருந்த பாவந் தீர்க்கும் பரமனுறை கோயில்
முந்தி எழுந்த முழுவின் ஓசை முதுகல்வரைகள்மேல்
அந்திபிறை வந்தணையுஞ் சாரல் அண்ணாமலையாரே

திருஞானசம்பந்தர் தன் தேவாரப் பாடலில் அண்ணாமலையார் பெருமையைக் கூறுகிறார்.

ஊசி முனையில் ஒரு காலின் பெரு விரல் ஊன்றிக் கொண்டு ஒருகாலை மடித்து மூக்கு நுனியில் கண்களை சேர்த்து (வாசி யோகப் பயிற்சி செய்யும் விதம்போல்) பஞ்சாக்கினி வளர்த்து பிரகாசமான அமிர்ததாரணை செய்து பிரமந்திரத்தின் வழியாய் வரும் அமிர்தத்தை சாப்பிட்டு தவமுனிகளாகிய விசுவாமித்திரர்போல் தவம் செய்வோர் கோடானு கோடி.

"ஊசியிலோர் கால் விரலையூன்றி யொறுகான்மடித்து
நாசி மிசை வழியை நாட்டி யழன் மூட்டித்
தேசினழுதுருக்கித் தெள்ளமுதையுண்டு தவக்
கேசிகனைப்போல் முயல்வர் கோடான கோடியே"

என்று அருணாசல புராணம் கூறுகிறது. ஒரு முறை தேவியார் பார்வதி சிவபெருமானை நோக்கி, 'சுவாமி,-காசி கைலாயத்தை விட திரு அண்ணாமலை எந்த விதத்தில் மகிமை வாய்ந்தது' என்று கேட்டார். அதற்கு சிவபெருமான் நமக்குச் சமமான தெய்வம், பஞ்சாக்கரத்தின் ஒப்பான மந்திரம், சைவத்திற்கு ஒப்பான சமயம், பொல்லாத பாவங்களை தீர்க்கும் தலம், அருணா தலம். இவைகளுக்கு ஈடாக உலகில் வேறு இல்லை. மேலும் பூலோகத்தில் தாயாகிய பார்வதி தேவிக்குத் தன் இடப் பாகம் அருளிய தலம் திரு அண்ணாமலை என்றார்.

"தன்னையே நிகருமத் தலத்திலே புவிக்
கன்னைமா தவம் புரிந் ததிகமாகவே
என்னையா ளுடையவ னினிடங் கலந்தனள்
புன்னையுமதி நலம் பேசலாமோ"

-அருணாசல புராணம்

"அவ்வுரை மறுத்தெங்கோ னருளுவாகை கொப்பான
தெய்வமைந் தெழுத்த மானத்திலிருந்து மந்திரமில்லை
சைவமே யனையதான சமயமு மருணைபோல்
வெவ்வினைதவிர்க்கு மூருமிலையென விளம்பில் போனான்!!

-அருணாசல புராணம்

பற்பல யோகீசுவரர்கள் சமாதி நிலை கூடி யோகப் பயிற்சிக்கு முயலவும் இவ்விடம் தேடிவந்து யோகம் கூடி யோகி ஆனவர்கள் அநேகம் கோடி.

"நேருமிய நயமாதவகையும்
பேர் பிராணயமம் பிரத்தி யாகரமொரு
தாரணை தியான சமாதி வகை தன்னிலுமெய்
கூடுமுயல் யோகியர் கோடன கோடியே

என்று அருணாசல புராணம் கூறுகிறது.

ஞானம் பெற பல தியான வகைகளை ஆரம்பத்தில் கடைப்பிடித்து படிப்படியாக யோக நிலையெய்துகின்றனர். அப்படிப்பட்ட ஆரம்ப யோக படிகளாகிய இயமம், நியமம், ஆதனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்று சொல்லப்பட்ட அட்டமா யோகங்களை வகையறிந்து அவைகளை உடலால் சிரமப்பட்டு முயலுகின்ற சிவயோகிகள் கோடான கோடிப் பேர்கள்.

மேலும் சமாதி நிலைக்கு எதிரான மும்மலங்கள் ஆகிய ஆணவம், கன்மம், மாயை என்பதை நீக்கித் தீயவினை, நல்வினை என்ற வேறுபாடு கொள்ளும் மனதினை நீக்கிச் சம நோக்கொடு நன்மையும், தீமையும் ஒன்றாகும். இன்பமும், துன்பமும் ஒன்றே என்று எண்ணி மனம் தன் பேதங்களை கெட்டு உலகம் ஒரே பிரம்மம்; அதுவே சிவ சொருபமாகி மோட்சம் பெறும் படியாக ஆசை கொண்டு மற்ற ஆசைகளை நீக்கி பஞ்சேந்திரங்களும் ஒருமித்து (மெய், கண், வாய், செவி, மூக்கு என்கிற பஞ்சேந்திரங்கள்) சிவ ஞானம் பெற்ற ஞானிகள் கோடான கோடி அந்த மலைச் சாரல்களில் வாழ்கின்றனர்.

"நாடு மல மூன்றகற்றி நல் வினையுந் தீவினையுஞ்
சாடி மனமிறந்து தானிழந்து தன்மயமாய் வீடு
பெற விரும்பி வேட்கையின்றி தில்லமற்
கூடு சிவ ஞானியர்கள் கோடான கோடியே"

என்ற நந்தி தேவர் மார்க்கண்ட முனிக்கு திருவாய் மலர்ந்தருளினார் என்பதாகும்.

குருநமச்சிவாய சுவாமிகள் திருவண்ணாமலையில் குகை நமச்சிவாய சுவாமிகளின் சீடர்கள் ஆவார். அவர் திருவண்ணாமலையை, ஏழைகளுக்கு மனமிரங்கி எது கேட்டாலும் கொடுக்கும் என்கிறார். மனம் இல்லை என்று கோழை மனம் படாமல் அருளும் என்கிறார். ஈசன் எப்போதும் யோகியர்களுக்கு யோக நிலையும், போகியர்களுக்கு போக நிலையும் உண்டாவதுபோல் இல்லை என்றும் கூறாதவர். அவரே மாமலையாக உள்ளரர் என்கிறார். பாவங்களைப் போக்கிய மலை உலக அகண்டாகாரங்களையும் தன்னிடத்தே வைத்துள்ள பார்வதி தேவிக்கு தன் இடப்பாகம் ஈந்த மலை அண்ணாமலை

"ஏழைக் கிரங்குமலை ஏதேது கேட்டாலும்
கோழைபடாமற் கொடுக்கும் மலை-வேழ
முரித்தமலை யம்மைக் கொருபாக மீந்த
மருத்துமலை யண்ணாமலை."

-குரு நமசிவாயர்

சித்த மகா புருடர்கள் இம்மலைச் சாரலில் வாழ்வதாக வடநூல் "அருணாசல மகாத்மியம்" கூறுகிறது.

"அடிமுடி தேடுதல்"

செல்வத்திற்கு நாயகனாம் திருமாலும், கல்விக்கு நாயகனாம் பிரம்மாவும் நமக்குள் யார் சக்திவாய்ந்தவர்கள் என்று கடும் போர் மூண்டு விட்டது. அகில உலகங்களையும் படைத்தல் தொழில் செய்யும் பிரம்மா தானே உயர்ந்தவரென்றும், பிரம்மாவே, நீ என் நாபிக் கமலத்தில் உற்பத்தி ஆனதால் நானே உயர்ந்தவன் என்று திருமாலும் போர் புரியத் தொடங்கி பல தேவ வருடம் சண்டையிட்டுக் கொண்டிருந்தனர்.

திருமாலும், பிரம்மாவும் சண்டை செய்கையில் மலைகளெல்லாம் பொடிப் பொடியாகின. நட்சத்திரக் கூட்டங்கள் உதிர்ந்தன. கங்கை முதலிய ஆறுகள் தண்ணீர் இல்லாமல் வற்றிப் போயின. எட்டுத் திக்கு யானைகளும் திடுக்கிட்டன.

"உடுக்கணம் முகிற்கணம், உதிர்ந்த உலகு எல்லாம்
இடுக்கணில் விழுந்தன; எழுந்தன பராகம்
அடக்கின பகீரதி முன் ஆன நதி எல்லாம்
திடுக்கொடு முழங்கின திசைக்கரிகள் எட்டும்"

- அருணாசல் புராணம்

இப்படி இருவரும் போர் புரியுங்கால் தேவர்கள் இந்திராதிகள் சிவபெருமானிடம் முறையிட்டனர்.

"ஆரணனும் நாரணனும்ஆன இரு வோரும்
தாரணியிலே மிகு சமர்த்தொழில் விளைத்தார்
ஏரணிய வேறு கதி இல்லை எவருக்கும்
காரணனையே தொழுதல் காரியம் இது என்றார்"

-அருணாசல புராணம்

ஈசன் இந்திராதி தேவர்களைப் பார்த்து நான் உங்கள் குறைகளை நீக்கி வைக்கிறேன் என்று கூறி பிரம்மாவும், விட்ணுவும் சமர்புரியும் இடம் வந்து அவர்கள் இருவருக்குமிடையில் பூமிக்கும் ஆகாயத்திற்கும் நெருப்பு மலையாக நின்றார்.

இப்படி ஆகாயத்திற்கும் பூமிக்கும் நிற்கும் சோதிமலையைக் கண்டு நம் இருவருக்கும் மேல் ஒருவர் உள்ளார் என்று அறிந்து வியந்து சண்டையை நிறுத்தினார்கள்.

இந்த சோதி மலையின் அடியையும், முடியையும் யார் கண்டு வருகிறார்களோ அவர்களே நம்முள் பெரியவர் ஆவர் என்று இருவரும் சொல்லிக்கொண்டனர். திருமால் பன்றி அவதாரம் கொண்டு பூமியைக் கிளறி அடியைக் காணப் போய்விட்டார். பிரம்மா அன்னப்பறவை உருக் கொண்டு முடியைக் காணப் புறப்பட்டு விட்டார்.

"கண்ணில் அளவிட அரிய சுடரினைக் கண்டு
இருவருமாய்க் கவலையானார்
எண்ணில் இதன் அடிமுடியை அறிபவரே
"பெரியவர்" என்று இசைந்தார் இந்த
மண்ணின் அடி அறிவென்னனப் பணவிடையில்
துக்கமிக்கோன் வராகமானான்
விண்ணின் முடி அறிவேன் என அன்ன வடிவு
எடுத்த அயனும் விறைந்து போனான்"

பன்றி அவதாரம் கொண்டு தன் கூறிய பற்களால் பூமியைக் கிளறி சோதி வடிவாய் நின்ற மலையின் அடி காண இயலாமல் சோர்வுற்ற பற்களுடைய திருமால் திரும்பி வந்தார். அன்னப் பறவை உருவம் கொண்டு மலையின் முடியைக் காணச் சென்ற பிரம்மா சோர்வுற்று இருக்கையில் சிவபெருமான் தலை முடியில் அலங்கரித்த பூக்களில் ஒன்று - தாழம்பூ - உதிர்ந்து நாற்பது ஆயிரம் ஆண்டுகள் கீழ்நோக்கி வந்தும் பூமியைக் காணமுடியவில்லை என்று வருந்தி பிரம்மாவிடம் கூறியது. அன்னப் பறவை உருவில் இருந்த பிரம்மா தாழம்பூவை நோக்கி "நான் அன்னப்பறவை" அல்ல பிரம்மா. நானும் திருமாலும் இதன் அடி முடியைக் கண்டு அறிய போட்டியிட்டு வந்துள்ளோம். அரை வினாடியிலே ஆயிரம் காதம் தூரம் கடந்து ஆயிரம் வருடம் தேடியும் இதன் முடியைக் காணாது சோர்ந்து விட்டேன். அதனால் நீர் இதன் முடியிலிருந்து வருவதனால் நான் முடியைக் கண்டேன் என்று பொய்ச் சாட்சி சொல்ல நான்முகன் வேண்டினான்.

தாழம்பூ முதலில் மறுத்தது. பிறகு பிரம்மன் வேண்டு கோளுக்கு இணங்கி பிரம்மா முடியைக் கண்டதாக பொய் சாட்சி சொல்ல ஒப்புக் கொண்டு பிரம்மனும் தாழம்பூவும் பூமியை நோக்கி வந்தார்கள்.

நான்முகன் திருமாலை நோக்கி திருமகளை மார்பகத்தில் தாங்கியிருக்கும் திருமாலே! நான் ஒரு நொடியில் 100 ஆயிரம் காதம் பறந்து திருமுடியைக் கண்டு வந்தேன் என்று கூறினார். அதற்கு இந்தத் தாழம்பூ சாட்சி என்றார். தாழம்பூவும் உண்மைதான் என்று பொய்ச் சாட்சி சொல்லியது. இதன் முடியிலிருந்துதான் என்னைக் கொண்டு வந்தார் எனக் கூறியது.

அப்படி பிரம்மன் சொன்னவுடன் அந்த நெருப்புமலை வெடித்து சிவபெருமான் தோன்றி பொய் வழிபாடு சொன்ன பிரமனுக்கு பூவுலகில் கோயில் ஆராதனை இல்லாமல் போக வேண்டும் என்றும், பொய்ச் சாட்சி சொன்ன தாழம்பூ சிவ வழிபாட்டிற்கு அருகதையற்றதாகி விட்டது என்றும் சாபமளித்தார்.

பிறகு திருமாலும், பிரம்மனும் சிவபெருமானை பலவாறு துதித்து மன்னிப்புக் கேட்டனர். சிவபெருமானும் கருணை கொண்டு மீண்டும் படைப்புத் தொழில் செய்ய பிரம்மனையும், காத்தல் தொழில் புரிய திருமாலையும் கட்டளையிட்டார். பூ உலகில் அந்தணர்கள் செய்கின்ற

பிரம்மாவுக்கு உரிய வழிபாடாக இருக்கட்டும் என்று வரமருளி இத்தலம் அருணைபுரி என வழங்கும் என்று கூறி மலையின்கண் மறைந்தருளினார்.

''இத்தலத்தி லுமக்குவரம் கொடுத்தலினால்
யோசனைமூன் றெல்லை தூரம்
சுத்தபவித்திர ஞானதலமாகப் பொலிக!
இந்த சோதி தானும் சிற்றுருவ
மலையாக வரம் உதவக் கடவது
இன்பதம் சிறந்த தான முத்திதனைத்
தகையாமல் உதவும் இதற்கு
அருணைபுரி பொழியும் நாமம்''

- அருணாசல புராணம்

அன்று முதல் இதற்கு அருணை புரி, சோதிமலை, பிரம்மாவும், விட்ணுவும் அண்ண முடியாத அண்ணாமலை. பிரம்மாவும், விட்ணுவும் அண்ணாந்து பார்த்தும் அடிமுடி காணாததால் அண்ணாமலை என்று பெயர் பெற்றது.

இன்றுபோல் எங்களுக்கும் தேவாதி தேவர்களுக்கும் சோதி தரிசனம் தர வேண்டும் என்று வணங்கி வேண்டினர். அதற்கு சிவபெருமான்

''கார்த்திகைக்கு கார்த்திகை நான் ஒரு சோதி
மலை நுனியில் காட்டா நிற்போம்
வாய்த்து வந்த சுடர்காணில் பசி பிணி இல்
லாது உலகில் மன்னி வாழ்வார்
பார்த்தவர்க்கும் அருந்தவர்க்கும் இடையூறு
தவிரும் இது பணிந்தோர் - கண்டோர்
கோத்திரத்தில் இருபத்து ஓர் தலைமுறைக்கு
முக்தி வரம் கொடுப்போம் என்றார்

-அருணாசல புராணம்

கார்த்திகை மாதம் கிருத்திகை நட்சத்திரத்தில் மலையின் உச்சியில் ஒரு ஒளி காண்பிப்போம். அந்த ஒளியைக் கண்டவர்களின், பசி, பிணி, நோயும் அகலும். இதைக் கண்ட அரசர்கள், தவசிகள் இடையூறு நீங்கும். இந்த ஒளி மலையில் பணிந்தவர்கள், கண்ணால் கண்டவர்கள், காதால் கேட்டவர்கள், மனதால் நினைத்தவர்கள் ஆகியவர்களின் கோத்திரங்கள் இருபத்தோரு தலைமுறை முக்தி அடையும் என்று திருவாய் மலர்ந்தருளினார் சிவபெருமான் என்றால் இந்த மலையின் பெருமையை யார் கூற முடியும்.

பிறகு விட்ணுவும் பிரம்மாவும் வேண்ட சிவபெருமான் சிவலிங்க வடிவமானார். மலையும் மற்ற மலைகளைப்போல் சிறிய மலையாகக் காட்சியளித்தது. இதுவே திரு அண்ணாமலையாகும்.

"தேவி இடப்பாகம் பெற்றது"

கைலாயத்தில் மலையத்துவசன் பர்வதராஜன் மகள் பார்வதியும் சிவபெருமானும் கூடி உலகத்துச் சீவராசிகளை காத்து வரும் வேளையில் ஒரு நாள் உமையவள் வேடிக்கையாக சிவபெருமானை நோக்கி, நாதா! சூரியன், சந்திரன் இவர்கள் யார் என்று கூற வேண்டினார். அதற்கு சந்திரனை முடி மீதும், ஒரு மானை கரத்திலும், ஒரு பெண் மானை தலையிலும் ஒரு பெம்மானை இடப்பாகத்தும் கொண்ட சிவபெருமான், தேவி! சூரிய சந்திரர் இருவரும் நம் இரு கண்கள் என்று விளக்கினார்.

உமையவர் விளையாட்டாக தன் இரு கரங்களினால் சிவபெருமானது இரு கண்களையும் மூடினார். உடனே அகில உலகங்களும் இருளில் மூழ்கியது. சூரியன் ஒளி, சந்திரன் செயல் இழந்தன. இரவு பகல் அற்றுத் தேவர்கள், பூவுலகத்தவர்கள் தத்தம் கடமைகளை மறந்து பித்தரைப் போல் திரிந்தனர்.

வேதங்களில் வல்லவர்களான நான்முகனும், திருமாலும், முனிவர்களும் அட்டவசுக்களும் நான்கு வேதங்களும் தேவர்களுக்கு அரசனாகிய தேவேந்திரனும் கண்களில் ஒளி இல்லாப் பிறவிக் குருடரைப் போல் தோன்றினர். பசு, காளை, பறவைகள் கண்களை இழந்தன. துறவறம், இல்லறம் இரண்டும் அற்றுப் போய்விட்டது. மற்ற தொழில்களும் நடைபெறாமல் நின்று போயின.

"மறையவனும் நாரணனும் முனிவர்களும்
வசுக்களும் நான்மறையும் வானோர்
இறைவனும் விழிஒளிப் போய் விறவிநெடும்
குருடர் என இருந்தார் - மற்றக்
கறவைநிரை முதல் விலங்கு பறவைகளும்
ஒளி இழந்த கண்ணது ஆன
துறவறமும் பிற அறமும் தொலைந்தன - மற்று
உள் தொழிலும் தொலைந்தது அன்றே!"

இப்படி உலகில் உள்ள சீவ ராசிகள் தத்தம் தொழில்களை மறந்து திரிந்தன. உற்பத்தி பாதிக்கப்பட்டது. வேதங்கள் மறைந்தன. பார்வதி தேவி, பரம சிவனாரை நோக்கி நாதா! என்னால் அல்லவா இவ்வாறு அகில உலகங்களும் தன் ஒளியிழந்து குருடரைப்போல் திரிய நேர்ந்தது. இந்தப் பாவம் தீர நான் பூ உலகில் தவம் செய்ய வேண்டும். அதற்குரிய இடத்தை எனக்குத் தெரிவிக்க வேண்டும் என்று வேண்டிக் கொண்டாள்.

அதற்குச் சிவபெருமான் பார்வதி தேவியை நோக்கி, என் மனதிற்கு இனியவளே! அகில உலகங்களையும் தன் வயிற்றில் கொண்டவளே! பயப்பட வேண்டாம். என்னுடைய நெற்றிக்கண் உட்பட மூன்று கண்களினால் உலகத்திற்கும் உயிர்களுக்கும் ஒளி கொடுக்கிறேன். உன்னால் எந்த வித பாதகமுமில்லை என்று திருவாய் மலர்ந்தருளினார்.

பரமசிவனார் தேவியே ! நீர் தவம் செய்ய விரும்பினால் மதுராபுரி, மாயபுரி, காசி, அவந்தி, துவாரகாபுரி, அயோத்தி ஆகிய தலங்களில் சிறந்தது காஞ்சிபுரம் என்னும் ஸ்தலம். அவ்விடம் சென்று அரிய தவம் செய்க என்று கட்டளை இட்டார்.

பார்வதி தேவி, சிவபெருமான் கட்டளையை ஏற்று காசியம்பதி அடைந்து அவ்விடத்தில் மழை இல்லாத காரணத்தால் அவ்விடம் தங்கி சீவ ராசிகளுக்கு அன்னமளித்து "அன்னபூரணி" யாகவும் காட்சியளித்து பின் பல நாள் தங்கி அறத்தைக் காத்து சீவ ராசிகள் உய்ய வழி செய்து விட்டு தொண்டை மண்டலத்தைச் சேர்ந்த கச்சி என்னும் காஞ்சிபுரம் அடைந்து, கம்பாநதிக் கரையில் ஒப்பற்ற மாமரத்தின் கீழ் அமர்ந்து இருக்கும் ஏகாம்பர நாதரை வணங்கிக் கம்பை நதிக்கரையில் மணலில் சிவலிங்கம் பிடித்து வழிபாடு புரிந்தார். அப்போது தேவியின் தவத்தின் உறுதியைச் சோதிக்க சிவபெருமான் கங்கையை வெள்ளமாக வரச் செய்தார். பார்வதி தேவி சிவலிங்கத்திற்கு ஊறு வருமோ என அஞ்சி சிவலிங்கத்தை மார்போடு தழுவிக் கொண்டார். அப்போது பரமசிவன் இடப வாகனத்தின்மேல் எழுந்தருளி காட்சி தந்தார்.

அப்போது பார்வதி தேவி இடப்பாகம் வேண்ட, திருவண்ணாமலை வந்து உடம்பில் இடப் பாகத்தை அடைவாயாக என்று பரமசிவனார் சொல்லி மறைந்தார்.

"ஆரணன் திருமாறேட வடிமுடியொளித்து ஞானப்
பூரண வெளியாய் மேல்கிழகெலாம் பொருந்தி நிற்போர்
தாரணி யவர்க்கு மற்றச் சயிலமாயிருப்போமங்கே
வாரணி முலையாய் பாகந் தருவோம் வருதியென்றார்"

-அருணாசல புராணம்

திருமாலும் பிரமனும் தேட பாதமும் சிரசும் அவர்களுக்குக் காட்டாமல் ஒளித்து பூரணமாகிய ஞான ஒளியாய் கீழ்மேலுலகங்களெல்லாம் ஒன்றாய் நிறைந்து நிற்போம். பூமிகளில் இருப்பவர்களுக்கு மலையுருவாய் இருப்போம். அவ்விடத்தில் வந்தால் இடப் பாகம் தருவேன் என்றார்.

பார்வதி தேவியார் உடனே தனது பரிவாரங்களாகிய யானை முகமுடைய வினாயகர், வேல் கொண்ட சுப்பிரமணியர், சப்த கன்னியர் (பிரமானி, உருத்திராணி, நாராயணி, வராகி, கௌமாரி, காளி, இந்திராணி) வைரவர் சிவகணங்கள் சூழ தொண்டை மண்டலமென்னும் காஞ்சியை விட்டு நடு நாட்டை நோக்கிப் பயணமானார். இரண்டு காத தூரம் சென்றதும் சுப்பிரமணியர் அன்னை சூரிய வெய்யில் தாள முடியாமல் துன்பப்படுகிறாள் என்றும், மேலும், சந்தியா வந்தனஞ் செய்ய வாழை மரங்களால் பந்தல், போட்டு அம்மனை அதில் இருந்து நேம நிட்டை செய்ய கூறினார். அதுவே இன்று "வாழைப்பந்தல்" என்ற ஊர் ஆயிற்று (செய்யாறு தாலுக்காவில் உள்ளது). -

மேலும் பார்வதிதேவி சுப்பிரமணிய சுவாமியை நோக்கி சந்தியாவந்தனஞ் செய்ய தூய தண்ணீர் வேண்டும். உன் கையில் உள்ள வேலையேவி கொண்டு வருக என்று கூறினாள்.

சுப்பிரமணியர் மேற்கே எறிந்த வேல் ஏழுமலைகளாகிய மேற்கு சவ்வாது மலையில் உடுருவி கடலுக்குப் போய்த் தண்ணீர் கொண்டு வந்தது. சேய் (முருகனால்) ஆக்கப்பட்ட நதி சேய் ஆறு. அதுவே இன்று செய்யாறு என்று அழைக்கப்படுகிறது.

பிறகு பார்வதி தேவி கங்கை நதிக்குச் சமமான சேயாற்றில் தன் தேவைகளை முடித்துக்கொண்டு தன் பரிவாரங்களுடன் பாவங்களை அழிக்க ஞானிகள் உரையும் திருவண்ணாமலை வந்து சேர்ந்தார். சுனைகளும் மாந்தோப்புகளும் சூழ்ந்த கௌதம முனிவர் ஆசிரமம் சென்றார். அவ்விடம் பிருகு, பராசர முனி, அத்திரி முனிவர். கௌதம முனிவர் அனைவரும் அன்னையை வரவேற்று வணங்கி எங்கள் பாவம் தங்கள் பொற்பாதம் கண்டு விலகியது என்று போற்றித் துதித்தனர்.

பிறகு முனிவர்களும் கௌதம முனிவரும் சேர்ந்து அருணாசலத்திற்கு கிழக்குப் பாகம் அம்மை தவம் புரிய பர்ண சாலை அமைத்துக் கொடுத்தனர். சத்த மாதர்கள் ஆகிய (பிராமி, மகேசுவரி, கௌமாரி, நாராயணி, வராகி, இந்திராணி, காளி) புறக்காவலாகவும், விநாயகர், சுப்பிரமணியர் இரு பக்கமும், நான்கு வாயில்களை எட்டு வயிரவர்களும், துர்க்கையம்மன் உட்பக்கக் காவலாகவும், பார்வதி தேவி பளபளக்கும் ஊசி முனையில் ஒரு கால் பெருவிரலை ஊன்றி இரவு பகலாக மனதிலே எல்லாம் வல்ல சிவபெருமானை நினைத்து அரிதாகிய பெரிய தவத்தைச் செய்து வந்தார். (இன்றும் தேவி உலக மாதா தவம் செய்த ஊசி கல் வடிவம் கொண்டு மலையைச் சுற்றி வரும் பாதையில் கிழக்குப் பக்கம் பஞ்சமூர்த்தி கோயிலுக்கு அருகில் உள்ளதை நாம் காணலாம்.)

திருமால் முதலான தேவர்கள் தேவியை வேண்டி தாங்கள் மகிடாசுரனால் வருந்த நேர்ந்ததை விண்ணப்பிக்க பார்வதி துர்க்கையை அனுப்ப மகிடாசுரனை வதம் செய்து சிவபெருமான் இடப வாகனத்தில் ஈசான்ய மூலையில் காட்சி தந்து இடப்பாகத்தை அருளினார். அப்படி அர்த்தநாரீசுவரரான மலை அண்ணாமலை.

வல்லாள மகாராசன் சரித்திரம்

அக்னி குல திலகமும் பக்தியில் சிறந்தவருமான வல்லாள மகாராசன் ருணாசலத்தில் செங்கோல் செலுத்தி வரும் காலம் தனக்கு எல்லா ல்வங்களும் இருந்தபோதிலும் இருப்பதை தன் மந்திரி பிரதானிகளிடமும் யோகிகளிடமும் கலந்து ஆலோசனை செய்து முப்பத்திரெண்டு தர்மங்களைக் கேட்போருக்கு இல்லை என்று கூறாமல் செய்து வந்தார்.

முப்பத்திரெண்டு தான தருமங்கள் உலகம் முழுவதும் பரவியது. நாரதர் கைலாய கிரிக்குச் சென்று சிவபெருமான் முன் பூ உலகில் நடுநாட்டில் அரணையம்பதியில் ஆளும் வல்லாள மகாராசன் புத்திர பாக்கியம் வேண்டி,

வரும் அன்பர்களுக்கு எதைக் கேட்டாலும் இல்லை என்று கூறாமல் தானம் செய்து வருகிறார் என்றும் கூறினார்.

வள்ளாள மகாராசன் எண்ணத்தை நிறைவேற்ற சிவபெருமான் திருவுள்ளம் கொண்டு குபேரனும் சிவ கணங்களும் உடன்வர அருணாசலம் வந்து சேர்ந்தார். துறவிகளைப் போல் சிவ கணங்களை வேடம் தரித்து தாசிகள் வாழும் வீதியில் ஒவ்வொரு சிவ கணங்களும் ஒவ்வொரு வீட்டிலும் இரவுக்குண்டான பொருளைக் கொடுத்து இரவு முடியும் வரை அவரவர் கைக்கொண்ட மாதர்களை விட்டுப் பிரியாதிருக்கும்படி குறிப்பால் உணர்த்தி ஒரு தாசி வீடும் காலி இல்லாமல் செய்து விட்டார்.

சிவபெருமான் துறவி உருவம் தாங்கி வள்ளாள மகாராஜன் அரண்மனை சென்று தான் மன்மதக் கணைகளால் துன்புறுபவர்போல் நடித்து அதைப்போக்கத் தமக்கு ஒரு மாது உடனடியாக வேண்டும் என்று அரசனிடம் விண்ணப்பித்தார்.

அரசன் அவ்வாறு தருவதாக வாக்களித்து தூதர்களை நோக்கித் தாசிகள் வீதி சென்று மிகவும் அழகு வாய்ந்த மாதை அழைத்து வரும்படி உத்தரவு பிறப்பித்தார். தூதுவர் தாசிகள் வீதி சென்று பார்க்கையில் எல்லா கணிகையர்களும் இன்று இரவு முழுவதும் முன்பாகவே சிவ வேடம் தரித்தவர்களுடன் இருக்கப் பொருள் பெற்று விட்டனர். ஒருவரும் வர முடியாத நிலை அறிந்த தூதுவர் அரசனிடம் நடந்ததைக் கூறினார்கள்.

வள்ளாள மகாராசன், ஐயோ! இதுவரை கடைப்பிடித்து வந்த-வரும் அடியார்களுக்கு இல்லை என்று மறுமொழி கூறாது செய்து வந்த-தானத்தின் புகழுக்கு இழுக்கு வருமோ என்று மனம் அயர்வடைந்திருந்தார்.

சந்திரோதயம் போன்ற அரசன் முகம் வாடியதைக் கண்ட இளைய அரசி சல்லம்மாதேவி அவரின் மனவாட்டத்திற்குக் காரணம் கேட்க நடந்ததைத் கூறி ஏழையே துறவிக்கு அவர் கேட்டபடி நடக்க முடியவில்லை என்று வருந்திக் கூறினார்.

உடனே கற்புக்கரசி சல்லம்மாதேவி அரசனை நோக்கித் தங்கள் புகழுக்கோ .தானத்திற்கோ இழுக்கு வராமலிருக்க அந்த சிவ துறவி விரும்பினால், நானே அவருடைய ஆசைகளைத் தீர்த்து வைக்கிறேன் என்று தன் எண்ணத்தை அரசனிடம் கூறினாள்.

அரசன் மகிழ்ந்து கணவன் குறிப்பறிந்து நடப்பவரே கற்புக்கரசி என்று கூற, அவ்வாறே அன்று இரவு அரண்மனையில் சிவத்துறவி இருக்கும் அறையை நோக்கிச் சல்லம்மா தேவி சென்றார்.

திருப்பள்ளியறையில் அம்ச தூளிகாமஞ்சத்தில் சிவபெருமான் ஆகிய சிவத் துறவி யோக நித்திரையில் இருந்தார். கற்புக்கரசி சல்லம்மா தேவி யோகியர் நித்திரை கொண்டு விட்டாரே, கணவனுக்கு தாம் கொடுத்த வாக்குறுதியும், கணவர் சிவயோகிக்கு கொடுத்த வாக்குறுதியும் தவறிவிடக் கூடாதே என்று தானே மஞ்சம் சென்று இரு கரம் கொண்டு துறவியை அணைக்கப் போகையில் இவர் கரம் பட்டுச் சிவ யோகி உருவில் இருந்த சிவபெருமான் இளங்குழந்தையாகினார். செங்குமுதம் போன்ற வாயைத்

திறந்து குழந்தை அழ ஆரம்பித்தது. பிஞ்சுக் கால்களை உதைத்துக் கொண்டும் அழ ஆரம்பித்தது.

திருக் கைலாயபதி குழந்தை வடிவமாய் அலறியழுததைக் கண்ட அரசன் இது ஆண்டவனாகிய அருணாசலேசுவரர் திருவிளையாடல் என்று மகிழ்ந்து குழந்தை இல்லாமல் வருந்திய நமக்கு ஈசனே குழந்தையானார் என்று தலைவனே! உண்மைப் பொருளானவனே! எனக்கு அருள் தர இப்படி வந்தனையா! என்று கூறித் துதிக்கையில் இடப வாகனத்தில் பார்வதி சமேதராய் அனேக சிவ கணங்கள் சூழத் தோன்றி, யானே உனக்குப் பிள்ளையாய் தோன்றியபடியால் உன் அந்தியகாலத்தில் வேத விதியில் கூறும் சடங்குகளைச் செய்து வருவேன் என்று ஆசி கூறி கைலாயம் சென்றனர்.

இன்றும் பள்ளிகொண்டாபட்டில் வள்ளாள மகாராசனுடைய ஈமக்கிரியையை வருடந்தோறும் அருணாசல ஈசுவரர் செய்து வருகிறார். அப்படி ஈசனே குழந்தையாய் அவதரித்த தலம் அருணாசலம்.

இப்படிப்பட்ட மகிமைகளைக் கொண்ட அருணாசலத்தைச் சுற்றிலும் புனிதக் குளங்கள் பல உண்டு. அதில் நீராடி அருணாசலத்தை வலம் வந்தால் பிறவித் துன்பம் நீங்கி நலங்கள் பல பெற்று ஈசன் பாதார விந்தத்தை அடையலாம் என்பது நந்தீசுவரர் வாக்கு. மலைக்குக் கிழக்கில் இந்திர தீர்த்தம், தென் கிழக்கில் அக்னி தீர்த்தம், தெற்கில் யம தீர்த்தம், நிருதி மூலையில் நிருதி தீர்த்தம், மேற்கில் வருண தீர்த்தம், ஈசான்யத்தில் அசுவனி தீர்த்தம், தென் பாகத்தில் சோணை நதி ஆகியவை உள்ளன. இதில் முறைப் படி மூழ்கி மலை வலம் வந்தால் எல்லா நன்மைகளும் உண்டு.

மேலும் எட்டுத் திக்குகளிலும் அட்டதிக்குப் பாலகர் பூசித்த அட்டலிங்க கோயில் உள்ளது முறையே:

கிழக்கு	:	இந்திரலிங்கம்: இந்திர தீர்த்தம் இந்திரன் வழிபட்டது.
தென்கிழக்கு	:	அக்னி லிங்கம் : அக்னி தீர்த்தம் அக்கினி பகவான் வழிபட்டது.
தெற்கில்	:	இயமலிங்கம், இயம பகவான் வழிபட்டது.
நிருதி மூலையில்	:	நிருதிலிங்கம் : வருணான் வழிபட்டது.
மேற்கே	:	சூரிய லிங்கம், சூரிய பகவான் வழிபட்டது.
வாயு திக்கில்	:	வாயு லிங்கம், வாயு பகவான் வழிபட்டது.
வடக்கில்	:	குபேரலிங்கம், குபேரன் வழிபட்டது.

ஈசான்யத்தில், ஈசான்யலிங்கம், ஈசனே தோன்றியது ஆக எட்டு லிங்கம் அருணாசலத்தைச் சுற்றியுள்ளது. தற்போது ஒரு பெரிய புண்ணிய ஆத்மா தவத்திரு மூப்பனரர் சுவாமிகள் பெரு முயற்சியால் தமிழ் மாதம் கடைசி நாள் இரவு (மறு நாள் தமிழ் மாதப் பிறப்புக்காக) எட்டுலிங்கத்திற்கும் அபிசேக ஆராதனை நடக்கிறது. அந்த எட்டுலிங்கமும் யாருக்கும் தெரியாமலும் மண் புல் முளைத்திருந்த கோயிலைச் சுத்தம் செய்து விளக்குகளைப் பொருத்தி

தேவலோகமாகச் செய்து அனைத்துப் புண்ணியங்களையும் பக்த கோடிகள் ஏற்றுக் கொண்டுள்ளார்கள்.

இவ்வளவு தெய்வ மகிமைகள் வாய்ந்த அருணாசலத்தில் உறையும் ஈசன் நந்தியம் தேவருக்கு திருவண்ணாமலையில் சுற்றிலும் 2 காத தூரம் சுமார் 25 மைலுக்கு அவ்வப்போது நானே குருவாகத் தோன்றி பூ உலக மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்துப் பக்தியையும் பரவச் செய்து மக்கள் நல்வழியில் வாழ வழி காட்டுவேன் என்று கூறியுள்ளார். அப்படிக் குருவாகத் தோன்றி மக்களின் அன்றாடப் பிரச்சினைகளையும் நீக்கி அவரவர் வினைகளையும் நீக்கி அருள, தோன்றி வந்த அருணாசல ஈசுவரனே நம் பூண்டி மகான்.

இப்படிப்பட்ட பெருமை வாய்ந்த மலையை சிதம்பரத் திருப்பாற் கடல் இளவரசர் (யோக நிலை இளவரசர்) குரு நமச்சிவாயர் கூறுகிறார்; முதன்மை வாய்ந்த மலை அநாதி மலை. உலக மாதா தேவியார் பார்வதிக்கு சிவபெருமான் தன் உடலில் இடப்பாகத்தில் பாதியருளிய மலை. ஓதும் மறை நான்கினையும் தன்னுள் அடக்கிய மலை - மறைகளைப் பாடும் மலை, நீதிகளை வழங்கும் மலை. பஞ்சாட்சரமாகிய ஐந்து எழுத்து - "நமசிவாய" - என்ற மந்திர மலை அண்ணாமலை.

ஆதிமலை யாதியநாதிமலை யம்மையொரு
பாதிமலை யோதி மறைபாடு மலை - நீதி மலை
தந்தரமலை யந்திரமலை சாற்றிய பஞ்சாக்கரமா
மந்திரமலை அண்ணாமலை

- குரு நமசிவாயர்

திருவண்ணாமலை தீபம்

எங்கும் நிறைந்த சச்சிதானந்த பரப்பிரம்மத்தை மலையின்மேல் தீபமாகக் காட்டினார்கள். மலை மேல் எரியும் தீபமே பரப்பிரம்மம். இந்த பரப்பிரம்மத்திலிருந்து ஆன்மாவாகப்பட்டது, சிறு சிறு வடிவமாக பூமியில் ஆசை என்னும் மாயையில் உழன்று கட்டுப்பட்டுள்ளது.

திருவண்ணாமலையில் தீபம் என்னும் பரப்பிரம்மத்திற்கும் தீபத்தி லிருந்து வந்த பூமியில் உள்ள மிகச் சிறிய பல ஆன்மாக்களுக்கும் இடையில் ஆசை என்னும் திரை மறைத்துள்ளது. இந்த ஆசை என்னும் திரை, மலையில் உள்ள தீபத்தை மறைக்கும் படுதா துணியாகக் கருத வேண்டும். ஆசை என்னும் திரையை யோகத்தினால் நீக்கிவிட்டால் அந்த ஆத்மா பரிசுத்த ஆத்மா ஆகி விடுகிறது. இந்தப் பரிசுத்த ஆத்மாவை பாணங்களாகக் காட்டினார்கள். பாணரூபமாய் உள்ளதை பூமியில் இருந்து சென்று படுதாவை நீக்கிப் பரப் பிரம்மமாகிய சோதியில் (தீபத்தில்) ஐக்கியமாகி விடும் என்பதே தீப தரிசனம்.

தீபம் பரப்பிரம்மமாகக் கொண்டால் தீபத்தை மறைத்துள்ள படுதா உலக ஆசை என்னும் மாயை. (பாணங்கள்) அந்த மாயை சிறிய ஆன்மாக்கள் யோக நெறியில் முதிர்ச்சி பெற்றல்.

பாணங்கள் என்ற பரிசுத்த ஆன்மாக்கள் கீழிருந்து மலை நோக்கி படுதாவை நீக்கித் தீபமென்னும் பரப்பிரம்மத்துடன் ஐக்கியமாகலாம் என்ற தத்துவத்தை உணர்த்துவதே தீப தரிசனம்.

"உதிரும் மயிரிடுவெண்தலை கலனாவுல கெல்லாம்
எதிரும்பலி யுணலாகவும் எருதேறு வதல்லால்
முதிருஞ்சடையிள வெண்பிறை முடிமேல்கொள அடிமேல்
அதிருங்கழல் அடிகட்கிடம் அண்ணாமலை யதுவே"

-திருஞானசம்பந்தர் தேவாரம்

நம் உடலில் ஞானிகள் ஆறு ஆதாரங்கள் இருப்பதாகக் கண்டு கூறுகின்றனர். அவை 1. மூலாதாரம் 2. சுவாதிட்டானம் 3. மணிபூரகம் 4. அனாகதம் 5. விசுத்தி 6. ஆக்கினை. இவை முறையே நம் உடலில் 1. மலவாய் 2. கருவாய் 3. தொப்புள் 4. இருதயம் 5. உள் நாக்கின் அடிப்புறம் 6. கண்களுக்கு இடையே உள்ள புருவ மத்திபம் ஆகும்.

மூலாதாரத்தில் உள்ள குண்டலினி சக்தியானது ஒரு மெய் ஞானியின் யோகபலத்தால் கிளம்பி, மற்ற ஐந்து ஆதாரங்களைக் கடந்து ஆறாவது ஆதாரமாகிய ஆக்கினை அடைந்து பிறகு சகசுராரம் என்னும் நம் உடலில் கபால உச்சியில் போய் ஒளியாகிறது என்பதை விளக்கவே, திருவண்ணா மலை தீபம் ஏற்றி நம் அஞ்ஞானத்தைப் போக்க உணர்த்தப்பட்டது.

கர்பக்கிரகமாகிய மூலத்தானத்தில் பரணி தீபம் ஏற்றி (மூலாதாரம்) பிறகு சுவாதிட்டானம் என்னும் முதல் நந்தியை அடைந்து பிறகு மணிபூரகம் என்னும் இரண்டாம் நந்தியை அடைந்து பிறகு அனாகதம் (இருதயம்) என்னும் கோயில் பிரகாரத்தை சுற்றிக்கொண்டு விசுத்தி (நெஞ்சுக்குழி) என்னும் கோயில் வெளிப் பிரகாரத்தைச் சுற்றி விட்டு ஆக்கினை (புருவநடு) என்னும் இடத்தில் நம் உடலில் உள்ள பஞ்சபூதங்களாகிய மண், குண்டலினி தீ என்பதை உணர்த்த "பஞ்ச மூர்த்திகள்" ஒன்று கூடி தீபத்தை ஏற்றவும், மலை நம் உடலில் உள்ள கபால உச்சி என்பதை விளக்க மலை உச்சியில் தீபம் ஏற்றப்படுகிறது என்பதை ஞானநூல்கள் கூறுகின்றன.

ஸ்ரீ பூண்டி மகான் நிலை

பூண்டி மகான் ஒரு சித்த மகா அவதாரம். அவதூதர் சித்தர்கள் என்றால் அட்டமா சித்திகளைப் பெற்றவர்கள். சித்தத்தை அடக்கி சிவன்பால் மனம் வைத்து சிவனானவர்.

சிவன் எல்லா சீவராசிகளுக்கும் அதிபதியாகையால் அவன் சித்தன் எனப்பட்டான். அவர்மேல் சித்தம் வைத்து அவருடன் சாயுச்ச நிலை பெற்றவர்கள் சித்தர் எனப்பட்டனர். அப்படிப்பட்ட சித்தமகா அவதாரம் நம் பூண்டி மகான் ஆற்றுச் சுவாமிகள்.

''சித்தனே திருவண்ணாமலையானே,

''சித்தனே திருவாலவாய் மேவிய அத்தனே''

''சித்தா சித்தித் திறங்காட்டுஞ் சிவனே''

என பெரியவர்கள் ஆண்டவனைச் சித்தனாகத் தன் கூட்டத்துடன் சேர்த்துக் கொள்கிறார்கள். அவரே சித்தர்களுக்குத் தலைவர். சித்த மார்க்கம் உண்டாகிய காலத்தை எவராலும் கூற முடியவில்லை. அது காலத்தால் அகப்படாமையால் அதனை ''அநாதி'' என்றும் கூறுவர்.

''ஒப்பிலா எழு கோடி யுகமிருந்தேன்'' - என்று திருமூலம் கூறுகிறது. சித்தர் கூட்டம் இமயத்தின் முடியுள்ள கைலாயத்தில் வீற்றிருக்கிறார்கள். அக் கைலாயம் ''இராப் பகல்'' அற்றது. அது வேறு, பூவுலகில் உள்ள கைலாயம் வேறு.

''இராப் பகல் அற்ற இடத்தே இருந்து
பராக்கற ஆனந்தத் தேறல் பருகான்
இராப்பகல் அற்ற இறையடி இன்பத்து
இராப்பகல் மாயை இரண்டிடத்தேனே''
-திருமூலர்

என்று சித்தர்களுள் திருமூலர் கூறுகிறார். சித்தர்கள் கைலாயத்தைவிட்டு பூவுலக மாந்தர் நன்மைக்காகவும் அவர்கள் பிறவிப் பயனடையவும் தென்னாட்டில் 18 பேர் (பதினெண் சித்தர்கள்) வட நாட்டில் 9 பேர் (நவ நாத சித்தர்) தோன்றிச் சித்துகள் பல செய்து பல பெயர்களைத் தாங்கி நன்மைகள் பல செய்தனர். அப்படி பூவுலக மக்கள் வினை தீர்க்க வந்தவரே நம் பூண்டி மகான் ஆற்றுச் சுவாமிகள்.

சித்தர்கள் அட்டமா சித்தியை எப்படிப் பெறுவார்கள், அவர்கள் அதற்கு என்ன வழி கூறுகிறார்கள் என்பதைக் காணும் போது தன்னுள் உள்ள சிவனைக் கண்டு உணர்ந்து சிவனுடன் ஒன்றி அந்தச் சிவமயமாய் கற்பகோடி காலம் ஆனந்தமாய் வாழ்கின்றனர். அப்படிப்பட்ட நிலையில் இருந்தவர் நம் பூண்டி மகான் ஆற்றுச் சுவாமிகள். சித்த மகா புருசர்கள் அழிவதுமில்லை.

வருவதுமில்லை. போவதுமில்லை. பிறப்பதுமில்லை. இறப்பதுமில்லை. முக்தி குணமாகிய ராட்சச, தாமச, சத்துச குணங்களும் அவர்களுக்கில்லை.

"போவதொன்றுமில்லை வருவதானில்லை
சாவதொன்றில்லை தழைப்பது தானில்லை
தாமதமில்லை தமருகத்தினொளி யாவதுமில்லை
அறிந்து கொள்வார்க்கே"

என்று சித்தர் கூட்டத்தின் முதல்வரான திருமூலர் வாக்கால் அறியலாம்.

18 சித்தர்கள்

1. அகத்தியர் 2. திருமூலர் 3. போகர் 4. கோரக்கர் 5. கைலாச நாதர் 6. சட்டை முனி 7. நந்தி 8. கூன் கண்ணர் 9. கொங்கணவர் 10. மச்ச முனி 11. வாச முனி 12. கூர்ம முனி 13. கமல முனி 14. இடைக்காடர் 15. புண்ணாக்கீசர் 16. சுந்தரானந்தர் 17. உரோமமுனி 18. பிரம்ம முனி இவர்களுடன் காகபுசண்ட முனி, தன்வந்திரி, கருவூரார், புலத்தியர், ராம தேவர், கபிலர் முதலியோர் என்று மிக பழைய சுவடி அபிதான சிந்தாமணி கூறுகிறது.

9. நவ நாதர்கள்

1. சத்திய நாதர் 2. சகோத நாதர் 3. வெகுளி நாதர் 4. ஆதி நாதர் 5. அநாதி நாதர் 6. மதங்க நாதர் 7. மச்சேந்திரர் 8. கடேந்திர நாதர் 9. கோரக்க நாதர் ஆவார்கள். இவர் தவிர எண்ணற்ற சித்த புருசர்கள்.

"நாத்தியகத்தியர் மூலர் புண்ணாக்கீசர்
நற்றவத்துப் புலத்தியரும் பூனை கண்ணர்
கந்திடைகாடரும் போகர் புலிகையீசர்
கருவூரர் கொங்கணவர் மாகாலாங்கி
சிந்தியழுகண்ணாகப் பையர் பாம்பாட்டித்
தேரையரும் குதம்பை சட்ட சித்தர்
செந்தமிழ்ச்சீர் சித்தர் பதினெண்மர் பாதம்
சிந்தித்தே அணியாகச் சேர்த்து வாழ்வாம்" -சித்தர் வணக்கம்

என்பது 18 சித்தர் வணக்கம். சிவன் எல்லா வல்லமையுடைய முழுமுதற் கடவுள். அவன் சித்தன் என அழைக்கப்பட்டான். அவன் தொடர்பு கொண்டு தன்னுள் உள்ள சிவனைக் கண்டு சிவனானவர்கள் சித்த மகா புருடர்கள்.

சித்தர், சிவத்தை நினைத்து, நினைத்து சிவமானவர்கள். ஆதலால், அவர்களுக்கு நரை, திரை, மூப்பு, சாக்காடு முதலியவைகள் இல்லை என்றும் உள்ளவர்கள் தென்னாட்டில் சித்தர்கள் 18 பேர் என்றும், மேலும் 21 பேர் என்றும் கூறுவர்.

சித்தர்கள் தென்னாட்டில் மட்டுமின்றி எல்லா நாடுகளிலும் உள்ளனர். நவ நாத சித்தர்கள் என்றும் அந்த நவ நாத சித்தர்களுக்கு ஒவ்வொருவருக்கும் 1 கோடி சீடர்கள் என்றும் ஆக நவகோடி சித்தர்கள் உள்ளனர் என்றும் கூறுவர்.

"ஆடையிலே விண்ணுக்குட் சித்தர் கோடி
யந்தந்த மலைகளினால் தாக்க கோடி
உடையிலே யண்டத்தில் முனிவர் கோடி
உற்ற நின்ற பதமளவும் ரிசிகள் கோடி"

என்று சட்டை நாத முனி கூறுகிறார்.

இப்படிப்பட்ட சித்தர்களும் மனிதர்களே ஆவார்கள். அந்நிலை அடைய அவர்கள் அகில உலகங்களிலும் நிறைந்துள்ளப் பரபிரம்மம், தன்னிடத்தே உள்ளது என்று கண்டவர்கள். "அண்டத்தில் உள்ளது பிண்டத்தில் உள்ளது" என்று அறிந்தவர்கள். அப்படிப்பட்ட தன்மை வாய்ந்தவர் நம் பூண்டி மகான். அண்டத்தில் உள்ளதை பிண்டத்தில் காண பல கோடிப் பிறவிகளை எடுத்து வந்து இப்படிப்பட்ட சிவத் தன்மையை அடைகிறார்கள். திடீரென்று ஏற்படும் நிலையில்லை, சித்தர் நிலை.

"உடலுக்குள் நீ நின்று லாவினதைக் காணாமல்
கடல் மலை தோறுந் திரிந்து காலலுத்தேன் பூரணமே"

"என்னையறியாமல் லெனக்குள்ளே நீயிருக்க
உன்னையறியாம லுடலழிந்தேன் பூரணமே"

"எனக்குள் நீயிருக்க வுனக்குள்ளே நானிருக்க
மனக்கவலை தீரவரமருள்வாய் பூரணமே"

"ஊனுக்குள் நீனின்றுலா வினதைக் காணாமல்
நானென்றிருந்து நலமிழந்தேன் பூரணமே"

என்று பட்டினத்தடிகள் கூறுகிறார். தன்னுள் உள்ள பிரம்மத்தை கண்டவர்கள் சித்தமகா புருசர்கள். அப்படி சித்த நிலை எய்தி எல்லா சித்திகளும் கைவரப்பெற்று மானிடவர்க்கத்துடன் வந்து அவர்கள் வினை தீர்ப்பார்கள். அப்படி வினை தீர்க்க வந்தவரே நம் பூண்டி மகான் ஆற்று சுவாமிகள்.

இவர்கள் எல்லா நாட்டிலும் இருப்பார்கள். மொழி, மதம், இனம் கடந்தவர்கள். இவர்கள் எல்லா மொழியும் கடந்தவர்கள்.

"தமிழ் மண்டலம் ஐந்தும் தானிய ஞானம்
உமிழுவது போல உலகம் திரிவார்

அவிழு மனமும் எம் மாதி அறிவும்
தமிழ் மண்டலம் ஐந்தும் தத்துவமாமே!''

தமிழ் மண்டலம் என்னும் திராவிட மொழி - தமிழ், கன்னடம், தெலுங்கு, மலையாளம், மராட்டியம் ஆகும். இது சேர, சோழ, பாண்டிய, கொங்கு, தொண்டை மண்டலமாகும். ஆனால் திருமூலர், மண்டலம் என்பதை ஆசியா, ஐரோப்பா, ஆப்பிரிக்கா, அமெரிக்கா, ஆசுதிரேலியாத் கண்டங்கள் ஐந்திலும் தமிழ் மண்டலத்தில் தழுவிய ஞானம் உலக மண்டலம் ஐந்திலும் உமிழ்ந்து (கொட்டி) திரிவார்கள் என்று கூறுகிறார்.

தமிழிலிருந்து சிங்களம், சோனகம், சீனம், சாவகம், கொங்கணம், குடகம், கொல்லம், துளுவம், வங்கம், கடாரம், கலிங்கம், மகதம், கோசலம், கங்கம், காச்மீரம், நேபாளம், அங்கம், காந்தாரம் ஆகிய மொழிகளைத் தாங்கி வளரும் தமிழ்நாடு.

''சிங்கள சோனகம் சீனம் சாவகம்
கொங்கணம் குடகம் கொல்லம் துளுவம்
வங்க கடாரம் மகதம் கோசலம்
கங்கம் காச்மீரம் கலிங்கம் நேபாளம்
அங்கம் காந்தாரம் தங்கி வளரும் தமிழ் நாடென்ப''.

இப்படிப் பதினெட்டு மொழிகளையும் கொண்ட, பதினெட்டு சித்தர்களும் எல்லா மொழிகளையும் கடந்தவர்கள். அப்படி மொழியாலும், மதத்தாலும் அப்பாற்பட்டவர் நம் பூண்டி மகான் ஆற்று சுவாமிகள்.

''பண்டிதராவார் பதினெட்டுப் பாடையும்
கண்டவர் கூறும் கருத்தரிவார் என்க
பண்டிதர் தங்கள் பதினெட்டு பாடையும்
அண்ட முதலாக அரன் சொன்னவாறே''

என்று திருமூலர் பதினெண் சித்தர்கள் பதினெண் மொழிகளில் புலமையும் கொண்டவர்கள் என்று கூறுகிறார். இதற்குத்தான் பின்னால் வந்த பாரதியார் ''செப்பு மொழி பதினெட்டுடையாள் சிந்தனை ஒன்றுடையாள்'' என்று தேச ஒற்றுமைக்குப் பாடினார்.

இப்படிப்பட்ட ஞானிகள் மொழி, நாடு கடந்தவர்களும் தன்னுள் தெய்வத்தை கண்டு, அதுவானவர்களும் இந்த நிலை அடைய சில மார்க்கங்களைத் தக்க குருவின் மூலம் பயின்று நீயும் அந்தப் பிறப்பும் அற்ற இறப்பும் அற்ற தன்மை நினைப்பும், மறப்பும் அற்ற நிலையும் வேண்டும். வேண்டாம் என்ற நிலை அற்ற தன்மை அடைய வழி கூறுகிறார்கள். அப்படி உலக மக்கள் நலன் கருதி வந்த சித்த மகா அருளாரே நம் பூண்டி மகான் ஆற்று சுவாமிகள்.

மனிதனின் தன்மையிலிருந்து ஆண்டவன் தன்மை அடைய படிகள் பல. பக்தர்கள் ஆரம்ப நிலை பக்தி நிலை. அடுத்த படி நிலை யோகங்கள் கூடி கைவரப் பெறுதல் யோக நிலை. அடுத்தபடி தாரம் மும்மலம் நீக்கி ஞாலம் பெறுதல் ஞான நிலை, ஞானிகள் நிலை அதற்கும் மேல்படி நிலை சீவன் முக்தர் நிலை. சித்தர்கள் நிலை. இவர்கள் நிலை சிவ நிலை. இச் சிவநிலையை அடைந்தவர்கள். சித்த மகா புருசர்கள். அப்படிப்பட்டவரே நம் பூண்டி மகான் ஆற்று சுவாமிகள்.

"சித்த மலம் அறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட
அத்தன் எனக்கு அருளியவாறு ஆர்பெருவர் அச்சோவே!"

என்று மாணிக்கவாசகர் பெரு நிலையைக் கூறுகிறார். அப்படிப் பட்ட பெருநிலையையும் பெற்ற பெரிய பொருளே நம் பூண்டி மகான் ஆற்று சுவாமிகள்.

இறைவனைப் புற உலகில் தேடியலைபவன் பக்தன். அதே இறைவனை தன்னுள் உள்ளார் என்று அறிந்து உயர்ந்தவர்கள் சித்தர்கள். கோயில்கள் தோறும் தேடிய ஆண்டவன், தீர்த்தங்கள் பல ஆடி தேடிய ஆண்டவன், மூர்த்திகள் தோறும் தேடிய ஆண்டவன், தன்னுள்ளே உள்ளான் என்பதை கண்டவர்கள் ஞானிகள். மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்னும் அந்தக் கரணங்களை வென்று சிவனுடன் சித்தித்தல் சித்தர்கள் நிலை. அப்படிப்பட்ட சித்த நிலையில் இருந்தவர் நம் பூண்டி மகான் ஆற்று சுவாமிகள்.

சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுச்சம் போன்ற நான்கு படி நிலை கடந்து சாயுச்ச நிலை அடைந்தவர்கள் சித்தர்கள். சாலோகம் என்றால் இறைவன் உலகில் இருக்கும் பாக்கியம். சாமீபம் என்றால் இறைவன் அருகில் இருக்கும் பாக்கியம். சாரூபம் என்றால் இறைவன் உருவம் அடைந்த நிலை, சாயுச்சம் என்றால் இறைவனுடன் இறைவன் ஆகிய பெரு நிலை. அப்படி சாயுச்சம் நிலை பெற்றவரே நம் பூண்டி சித்த மகா புருசர்.

ஒரு கோடி முனையில் அணு உயிர் என்ற ஆரம்ப நிலை உள்ளது. மற்றொரு கோடியில் நிறை ஞானி என்னும் சித்த புருசன் உள்ளான். இவர்களை பல மதங்கள் பலவாறு பெயரிட்டு அழைக்கிறது.

ஒரு மதம் ஜீவன் முக்தன்.
ஒரு மதம் எல்லாவற்றையும் கடந்து கடவுள் ஆனவர்.
ஒரு மதம் இயற்கைக்கு (நடைமுறைக்கு) நியதிக்கெல்லாம்
அப்பாற்பட்டு மெய்யுறவு உள்ளவர்.
ஒரு மதம் பிறப்பும் இறப்பும், நினைப்பும், மறப்பும் அற்ற
பெரு நிலை அடைந்தவர் என்கிறது.

ஒரு மதம் பரிபூரணத்துவம் எய்தியவர்கள். அவர்களிடம் வியக்கத்தக்க தன்மை வாய்ந்த பெரு நிலை, பெரிய பொருள் உள்ளது என்கிறது - அப்படிப்பட்ட வியக்கத்தக்கத் தன்மையில் பரிபூரணத்துவம் வாய்ந்தவர்கள். நினைப்பும், மறப்பும், பிறப்பும், இறப்பும் எல்லாவற்றையும் கடந்து கடவுள் தன்மை ஆனவர் நம் பூண்டி ஞான யோகீசுவரர் ஆவர். சாகும் இனத்தைச் சேராதவர்கள். சாகாக்கலை, வேகாக்கால், போகப் புனல் போன்ற அரிய பெரிய இரகசியங்களை உணர்ந்து தேர்ந்தவர் நம் பூண்டி மகா யோகீசுவரர்.

அகத்தியர் தமிழ் இலக்கணத்தில் புலமை பெற்றவர் இவர் இலக்கணம் பரவிய இடம் செந்தமிழ் நாடு என்று பெயர் பெற்றது. இதைச் சேர்ந்த நாடுகளிலும் தமிழ் மொழியே பேசப்பட்டு வந்தது. அவைகள் பன்னிரண்டு: சிங்களம், பழந்தீவுகள், கொல்லம், கொங்கணம், துளுவம், கூபம், கர்நாடகம், குட்டம், வடுகம், தெலுங்கு, கலிசகம் (ஒரிசா) இவைகளுக்கெல்லாம் தமிழ்ச் சங்கம், தலைச் சங்கம் எனப்பட்டது. அது பழைய தென் மதுரையில் இருந்தது; அது கடல் கொண்டு விட்டது. அதற்கு தலைவர்கள் அகத்தியரும், இறையனாரும், குமரவேளும், முரிஞ்சியூர் முடிநாகராயர் நிதியின் கிழவர், மார்க்கண்டேயர், வான்மீகனார், கௌதமர் ஆகியவர்கள் ஆவர். இச்சங்கம் 4444 ஆண்டு இருந்ததாகவும், அதில் 4449 புலவர்கள் இருந்ததாகவும், சங்கப் பலகை ஏறிய பாண்டியர்கள் ஏழு பேர் என்றும் உள்ளது.

தலைச் சங்கம் இருந்த தென் மதுரை கடல் கொண்டு விட்டழிந்ததாக சித்தர்கள் நூல் கூறுகிறது.

அகத்தியர் உடன் வந்த இளவரசர்களே சேர, சோழ, பாண்டியர் ஆவர். காடாக இருந்ததை நாடாக மாற்றினார்கள் அந்த இளவரசர்கள்.

சமதக்கினியுடைய குமாரர், திரண தூமாக்கினியை சீடராக வேண்டி ஏற்றுக்கொண்டு, புலசுத்தியர் தங்கை லோப முத்திரையை மணந்துகொண்டு வில்லாளன் வாதாபியை வென்று, சைல மலையில் வீணாகிய தண்ணீரை தன்னுடன் கொண்டுவந்த கங்கை நீரால் சுத்தப்படுத்தி உடன் வந்த இளவரசர்களால் ஒரு முகப்படுத்தி காவிரி நதியாக்கி, அப்பாற் வேங்கடத்தில் உறையும் முருகவேளை வணங்கிப் பொதிய மலையை அடைந்தார், என்று பழம்பெரும் நூல் அபிதான சிந்தாமணி கூறுகிறது.

எல்லா மதங்களும், சமயங்களும் தெரிந்தோ தெரியாமலோ ஒத்துக் கொள்ளப்பட்ட உண்மை ஒன்று உண்டு. அது மனிதனிடம் தெய்வத் தன்மையுள்ளது என்பதே.மனிதனுடைய உண்மை நிலை தெய்வீகமே. சீவ ஆன்மாவுக்கும், பரமான்மாவுக்கும் உள்ள தொடர்பைப் பலப்பல சமயங்கள் பலப்பல விதமான அபிப்பிராய பேதங்களைக் கூறலாம். ஆனால் பரிசுத்த தன்மை சீவாத்துமாவுக்கு உண்டு என்பதை எல்லா சமயங்களும் கூறுகிறது. அப்படிப்பட்ட பரிசுத்த சீவாத்மாவை பரிபூர்ண நிலையாகிய பரமாத்மா (பிரம்மத்துடன்) எய்திக் கடவுளை ஐக்கியமாகித் தானும் அதுவாகி நிற்பதே சித்த யோகிசவரர்கள் நிலை. அப்படிப் பரிசுத்த

ஆன்மாவை பரிபூர்ண பிரமத்தடன் கலந்து அதுவாகியவரே நம் பூண்டி சித்த மகா புருசர்.

ஆத்மாவனது, சச்சித்தானந்த சொரூபம். சீவர்கள் அனைவரும் செய்கிற முயற்சிகள் இந்த சச்சிதானந்தப் பொருளை விளக்குவதுதான்.

''சத்'' - எப்போதும் நிலையான பொருளை, ''சித்'' - அறிவை கொண்டு மேன்மேலும் முயன்று கொண்டு ''ஆனந்தம்'' - பெருநிலை ஆனந்தம் கொண்டிருப்பதே 'சத்-சித்-ஆனந்தம்'' அதையே ''சச்சிதானந்தம்'' என்பர். அப்படிப்பட்ட சச்சிதானந்த நிலை பெற்றவரே நம் பூண்டி மகான் ஆற்று சுவாமிகள்.

பூண்டி யோகி ஆத்ம சொருபி. அவர் மரணத்தை வென்றவர். அச்சத்தை வென்றவர். சாதி பேதம், மொழி பேதம், என்பதே அற்றவர். மாதா, பிதா; ஆத்ம சொருபியான அவருக்கில்லை. அவர் பிறந்தவருமில்லை. சமாதி நிலை விட்டு வந்த சித்தமகா புருசர். அவருக்கு உற்றார், உறவினர் இல்லை, குரு இல்லை, சிஷ்யன் இல்லை, அந்த ஆன்ம சொருபத்திற்கில்லை. அது சத்-சித்-ஆனந்த பொருள். பிரதம சீடருமில்லை.

சிதானந்த சொருபம் - அது உடலிலும் உள்ளத்திலும் சிதானந்த சொருபமாகி மயக்கம் தானே மறைந்து ஞான ஒளி உருவெடுத்தவர். இப்படிப்பட்டவர்களை சீவன் முக்தர்கள் என்பர். அப்படிப்பட்ட சீவன் முக்தரே நம் பூண்டி மகான்.

யோகிகள், யோக நிலை கடந்து சமாதி நிலை வரப்பெற்று பெருநிலை யெய்தி, மறுபடியும் சீவ போதத்திற்கு வருவதில்லை. ஆனால் ஈசுவர கோடிகளும் அவதார புருசர்களும் சமாதி நிலை யெய்திய பிறகு உலக நன்மைக்காக அப்பெரு நிலையிலிருந்து கீழிறங்கி வருகிறார்கள். உதாரணம்: நாரதர், சங்கரர், இராமானுசர், மத்வர் போன்ற ஞானிகள். அப்படி கீழிறங்கி உலக நன்மைக்காக வந்த அவதார புருஷரே நம் பூண்டி மகான்.

''மனிதரிலும் பறவையுண்டு விலங்குண்டு
மனிதரிலும் கல்லுண்டு மரமுண்டு
மனிதரிலும் நீர் வாழுஞ் சாதியுண்டு - அதுபோல்
வானவரும் மனிதராய் வருவதுண்டு.''

அப்படிப்பட்ட அவதூதரே, வான்வேர மனித உருக் கொண்டு வந்தவர் நம் பூண்டி ஆற்று சுவாமிகள். ஒரு முறை அவரே தன் திரு வாயால் ''நாங்கள் நான்கு பேர் ஒருவர் தோள் மீது மற்றொருவர் கைப்போட்டு ஆகாய வீதியில் வந்தம்பா! வழி தெரியவில்லை. மூவர் வடக்கே போய் விட்டார்கள். நான் இவ்விடம் வந்தேம்பா! என்று கூறினார்.

நான்கு சிறுவர்கள் சேர்ந்து ஒரு பெரிய மதில் சுவற்றை அடைந்தனர். அங்கு மதிற் சுவற்றுக்கு அந்த பக்கம் உள்ள பொருளைக் காண முடியாமல் பெரிய சுவர் மறைக்கப்பட்டுள்ளது. அச்சுவருக்கு அப்பால் சோலைகளும், அழகான பழத் தோட்டங்களும், பல அதி அற்புதமான கனிகளும் உள்ளது. குலை குலையாய்த் தொங்கிக் கொண்டிருக்கிறது. பலர் கூறக் கேட்டும்

உள்ளார்கள். ஆனால் பெரும் சுவர் அதைக் காண முடியாமலும், அதன் சுவையை சுவைக்க முடியாமலும் தடுக்கிறது.

நான்கு சிறுவர்களும் எப்படி ஏறுவது என்று புரியாமல் கடைசியாக ஒரு ஏணி கொண்டு மதிர் சுவற்றின் மேல் ஒருவர். ஒருவராக ஏறினார்கள். ஏறியவர்களில் முதலில் ஏறியவன், ஆகா! என்ன அருமை! என்று கூறி அந்த சோலைக்குள் குதித்து விட்டான். மற்ற இருவரும் அவனைப் பின் தொடர்ந்து சோலையின் அழகையும் வனத்தையும் கண்டு சோலையில் குதித்து பழங்களைப் புசித்தும் அந்தச் சோலை அழகைக் கண்டும் ஆனந்தமாக உள்ளனர்.

ஆனால் நான்காவதுசிறுவன் மதில்மேல் உட்கார்ந்து அந்தச் சோலையில் உள்ள கனி வகையின் சுவை, சோலைகளின் அழகு, அதில் இருந்தால் ஏற்படும் ஆனந்தம் எல்லாவற்றையும் கண்டு கீழ் இறங்கி வந்து காணாதவர்களுக்கும் மற்றவர்களுக்கும் கூறினான்.

அதேபோல் பிரம்மம் என்கிற பூந்தோட்டமும் கனி நிறைந்த சோலைளும், மாயை என்கிற சுவரினால் மறைக்கப்பட்டுள்ளது. அதை ஏணிப் படிகள் என்ற யோக சமாதியில் முன்னேறி, பிரம்மம் என்ற ஆனந்த சோலைகளைக் காண்கிறார்கள், சித்த மகா புருசர்கள். அப்படி சமாதி நிலையில் கண்ட பிரம்மத்தின் ஆனந்தத்தை மக்களிடம் போதிக்கவும் அவர்களை நல்வழிப்படுத்தவும் தனக்கு மோட்சமாவதற்கு கிடைத்த பெரு நிலையையும் விட்டுக் கீழ் இறங்கி வருகிறார்கள். அப்படி பெரு நிலையெய்தி பெரிய பொருளாக ஆகிய நம் பூண்டி மகான். நம் பொருட்டு மானிட வடிவம் தாங்கி நம் எல்லோரையும் நல்வழிப் படுத்தவந்த சித்த யோகீஸ்வரரே நம் பூண்டி மகான் ஆற்று சுவாமிகள்.

உலகில் உயிருள்ள பொருள்கள், உயிரற்ற பொருள்கள் உதாரணமாக உயிர் உள்ள பொருள் - மனிதன், விலங்கு, பறவை, ஊர்வன, மரம், செடி, கொடி. உயிரற்ற பொருள் - மலை, நதி, பாறை, போன்ற பொருட்களை நாம் கண்ணால் காணுகின்றோம். பிறருக்கு காட்டியும் கொடுக்கின்றோம். ஒருவனுக்குத் தெரிவதுபோல் எல்லோருக்கும் அது தெரிகிறது.

எல்லோருக்கும் அந்த பௌதீகப் பொருள் தெரிகிறது. ஆனால் ஞான நிலை அப்படியல்ல. உள்ளத்தினுள்ளே உணரப்படுவது. ஞானியின் நிலை, மற்றவர்களுக்குத் தெரியாது. புறக் கண்ணுக்கு அது "நோக்கறிய நோக்கு", ஞானியின் அகக்கண்ணுக்கு தெளிந்த அறிவுடன் "நுணுக்கறிய நுண்ணுணர்வு" என்று அறிந்தவர்கள் பெரிய ஞானியாவார். ஞானிக்கு அந்த நுணுக்கரிய நுண்ணுணர்வில் உலகம், அண்டம் அனைத்தும் ஒரே பிர்மம் என்று ஞானம் ஏற்படுகிறது. அப்படிப்பட்ட ஞானம் எல்லையில் அடங்காத் பெரு நிலை. எல்லையில்லா அடங்காத ஆனந்தம், எல்லையில்லா சக்தியை ஏற்படுத்துகிறது.

அப்படிப்பட்ட எல்லையில்லா ஆனந்த நிலையில் இருந்தவர், எல்லையில்லாச் சக்தியைக் கொண்டவர் நம் பூண்டி மகான் ஆற்று சுவாமிகள் ஆவார்.

சீவன் ஒருவர் பல பிறவிகளை எடுத்துக்கொண்டே போகிறார். அனுபவங்களினாலும், யோகப் பயிற்சிகளினாலும் தன்னுடைய சுய சொருபத்தை அறிகிறார்கள். அந்த சீவர்களுக்கு அஞ்ஞானம் அகன்று போகிறது. தனது மேலான சொருப தோற்றத்திற்கு வருகிறார்.

அப்படி மேலான சொருபத்திற்கு வந்தவர் பரிபூர்ண நிலைக்கு வருகிறார்கள். அவர்கள் தூல சரீரம் எடுக்க தேவை இல்லை. சூக்கும சரீரமும் எடுக்க அவசியமில்லை பிறப்புத் தன்மை, இறப்புத் தன்மை, நினைப்புத் தன்மை, மறப்புத் தன்மை அவர்களுக்கு இல்லை. அப்படிப்பட்ட தன்மை வாய்ந்தவர்கள் "சீவன் முக்தர்கள்". அப்படிப்பட்ட சீவன் முக்தரே நம் பூண்டி மகான் ஆற்று சுவாமிகள்.

ஞானம் கைவரப் பெறுதல் என்பது "ஆன்மா" தன் உண்மை வடிவை கண்டுவிட்டது என்பதே ஆகும். ஆன்மா ஒரு உருவமல்ல இந்த கலர், இந்த வடிவம், இதுதான் ஆன்மா என்று சுட்டிக் காட்ட முடியாது. கடவுள் இந்த உருவம், இந்தக் கலர் என்று எப்படி நம்மால் அறுதியிட்டுக் கூற முடியாதோ, அதேபோல் ஆன்மாவின் வடிவம் கூறத் தக்கதல்ல. பரபிர்மம் எந்த சொருபமோ அதே சொருபம் ஆன்மா. சிறியது பெரியது என்று வித்தியாசமே தவிர, வேறுபாடு இல்லை. பரபிர்மம் ஒரு பெரும் நெருப்புத் தீ என்றால், ஆன்மா ஒரு சிறு தீபம். பரப்பிரம்மம் பெருங் கடல் என்றால், ஆன்மா ஒரு சிறு நீர்த் துளி போன்றது. இரண்டும் ஒன்றே ஆகும்.

இந்த ஆன்மாவை எப்படிக் காண்பது? முடியாத காரியம். ஏன் என்றால் ஆன்மா வேறு பொருளுடன் கலந்துள்ளது. அந்தப் பொருள் மூலம் உணரலாம்.

ஒரு கூடையில் லட்டு, சிலேபி, சாங்கிரி, நாவல் போன்ற பழங்கள் உள்ளது. அதில் நாவல் பழம் மட்டும் நமக்குத் தேவை. ஆனால் நாவல் பழம் இப்படி உள்ளது, இன்ன கலர் என்று நமக்குத் தெரியாது. நம் வேலைக்காரனைக் கூப்பிட்டு அவனை எடுக்கச் சொல்லலாம் என்றால் அவனுக்கும் நாவல் பழத்தின் வடிவம், கலர் தெரியாது. பிறகு எப்படித்தான் அந்த பழத்தை நாம் சாப்பிடுவது?

நமக்குக் கூடையில் உள்ள பலகாரங்களில் நாவல்பழம் தவிர மற்றது எல்லா பலகாரங்களும் தெரியும். அதனால் தெரிந்த எல்லாப் பலகாரங் களையும் ஒவ்வொன்றாகக் கூடையில் இருந்து வெளியே எடுத்துப் போட்டு விட்டால் மிஞ்சுவது தெரியாத பலகாரம் நாவல்பழம் ஆகும்.

அதுபோல் கூடையாகிய நம் தேகத்திலுள்ள நமக்குப் பல பிறவிகளில் தொடர்ந்து வரும் ஆணவம், கன்மம், மாயை என்ற பழங்களை எடுத்துவிட்டால் மிஞ்சுவது நாவல் பழமாகிய ஆன்மா ஆகும்.

இப்படிப்பட்ட "ஆன்ம" நிலையைப் பல பிறவி எடுத்துக் கண்டவர் நம் பூண்டி மகான். அகப்பற்றும், புறப்பற்றும் ஒழிந்தால் ஆன்ம நிலை தன்னால் ஏற்படும். புறப்பற்றை விட்டால் அகப்பற்றும் தன்னால் ஒழிந்து விடும். அகத்துறவே ஞானத்தின் வழி. அப்படி ஞானம் வரப்பெற்றவர்கள் சித்த மகா புருசர்கள்.

இப்படிப்பட்ட சித்த மகா புருசர்கள் சமாதியுள்ளதே பெருங் கோயில்களும் தலங்களும் ஆகும். அவர்கள் இன்றும் அருவமாக (ரூபமற்ற தன்மை) இருந்து ஆசி வழங்குகிறார்கள். அப்படி சமாதியான ஊர்களையும் சித்தர் பெயர்களையும் காணலாம்.

1. அகத்தியர் - அனந்த சயனம்
2. கும்ப முனி - கும்பகோணம் (கும்பேசுவரர் ஆலயம்)
3. புலத்தியர் - பாபநாசம் (ஆவிடையார் கோயில்)
4. திருமூலர் - தில்லை (சிதம்பரம் - தில்லை நடராசர் ஆலயம்)
5. திருமூலர் நோக்கம் - மேலை சிதம்பரம்
6. சட்டை முனி - சீர்காழி
7. கோரக்கர் - திருகோணமலை
8. கருவூரர் - திருக்காளத்தி
9. பதஞ்சலி - அழகர் மலை
10. அழுகண்ணர் - நாகப்பட்டினம்
11. நாரதர் - திருவிடைமருதூர்
12. இராமதேவர் - அழகர் மலை
13. மச்ச முனி - திருப்பரங்குன்றம், திருவானைக்காவல்
14. மார்க்கண்டேயர் - கருவை நல்லூர்
15. கொங்கணவர் - திருப்பதி
16. பாம்பாட்டிச் சித்தர் - விருத்தாசலம்
17. புண்ணாக்கீசர் - நண்ணாசேரி
18. காசிபர் - உருத்திரகிரி
19. வரதர் - தென்மலை
20. கன்னி சித்தர் - பெருங்காவூர்
21. போகர் - திருக்கழுக்குன்றம்
22. போக நாதர் - பழனி
23. இடைக்காட்டு சித்தர் கௌதமர் - திரு அண்ணாமலை
24. நந்தி - காசியம்பதி
25. அகப்பேய்ச் சித்தர் - எட்டுக்குடி
26. காலங்கி - சித்தர் கோயில் (சேலம்)
27. கஞ்சமலையான் - திருக்கடையூர்
28. கமல முனி சுந்தரானந்தர் - மதுரை
29. சுந்தரர் - வாரிஷ்டம்

30. கடுவெளி சித்தர்
சிவசாமி சித்தர் - காஞ்சிபுரம்
31. தன்வந்தரி - வைத்தீஸ்வரன் கோயில்
32. ஆற்று சுவாமிகள் - பூண்டி
33. நிர்வாண சித்தர் - வில்வாரணி (போளூர் தாலூக்கா)

எந்த சீவனும் தன் உயிரிடம் கவனமாக உள்ளது எந்த உயிரும் தன்னை மறந்தது இல்லை. புலன்கள் ஒடுங்கி உறங்கும்போது மனம் விரிந்து வெளியே போகிறது. அதனால் கனவு நிலை ஏற்படுகிறது. அந்தக் கனவில் தன்னை மறந்து ஒரு மாயை புணர்வது போலும், மற்ற ஏதாவது பொருள்களை ஆசையின் காரணமாக கவர்வது போலும் மனதை செலுத்த விடாமல் கவனமாக இருக்க வேண்டும். இதைத்தான் ஞானிகள் தன் உரையில் மிகுந்த கவனம் தேவை என்று கூறுகிறார்கள்.

"தூங்காமல் தூங்கிச் சுகம் பெறுவதெக் காலம்"

என்று பத்திரகிரியார் கூறுகிறார். அப்படி தூங்காமல் சுகம் பெற்ற சுக தேவரே நம் பூண்டி மகான் ஆற்று சுவாமிகள். இதை கவனத்திலும் கவனம் என்பர் ஞானிகள்.

ஞானிகள் தூங்குவதுபோல் தெரியுமே ஒழிய அவர்கள் அக உலகத்தில் மனதை உள்நோக்கி எப்போதும் ஒரு நிலை கொண்டு சஞ்சலமின்றி இருப்பார்கள். புற உலக அலுவல்களைப்பற்றி எந்தக் கவலையும் படமாட்டார்கள்.

மனிதன் கனவுகளைக் காண்கிறான். அப்போது அவன் உடல் செத்த பிணம் மாதிரி இருக்கிறது. ஆனால் மனதோ மிக அதிசயமான அலுவல்களை அந்த நேரத்தில் (கனா நிலை) செய்து கொண்டிருக்கிறது. இந்த உடம்பு உண்மையாக மரணம் எய்திய பிறகும் மனம் அதேபோல் இயங்கிக் கொண்டிருக்க வேண்டும் என்ற முடிவுக்கு மனிதன் வர நேர்ந்தது. இயற்கைக்கு அப்பாற்பட்ட நிலை கனவு நிலை. அதனால் ஒருபயனும் இல்லை. ஆனால் இதையே முன் உதாரணமாகக் கொண்டு யோகிகள் தங்களது உள்ளத்தில் ஆழ்ந்து மூழ்கிப் பார்த்தார்கள்.

கனவு நிலைக்கும், நினைவு நிலைக்கும் ஆகிய இரண்டு நிலைக்கும் மேல் ஏதோ உயர்ந்த நிலை ஒன்று உண்டு என்பதை உணர்ந்தார்கள். அப்படி உள்ளத்துள்ளே (அக நிலையில் தியானித்து) மூழ்கி உண்மையான உயர் நிலையைக் கண்டார்கள். இதையே மதங்கள் "பரவச நிலை" என்றும், 'அருள் நிலை' என்றும் கூறுவர். இந்த நிலையானது நினைவு நிலைக்கும், மறப்பு நிலைக்கும், விழிப்பு நிலைக்கும், உறக்க நிலைக்கும் உயர்ந்ததாக வும், உண்மை நிலையாகவும் அறியப்பட்டது. அப்படி உண்மை நிலையைப் பெற்றவர்கள் முனிவர் (உண்மையை உணர்ந்தவர்) எனப்பட்டார்கள்.

அப்படிப்பட்ட உண்மையாகிய உயர்ந்த நிலையில் இருந்த பெரிய பொருள் நம் பூண்டி மகான். ஞானத்தில் பழுத்த பழம். பெரு நிலை நம் பூண்டி யோகீசுவரர் நிலையாகும்.

ஞானிகள் தன் உடலை மறந்தவர்கள். புற உலகில் என்ன நடக்கிறது என்பதைப்பற்றி அவர்கள் கவலைப்படுவதில்லை. அவர்களுக்கு கங்கை தூய நீரும், சாக்கடையும் ஒன்றே. சமநிலைக்கு வந்தவர்கள். கொல்ல வருபவனும், காக்க வருபவனும் அவர்களுக்கு ஒரே நபராகத் தோன்றும். எல்லாம் ஒரே பிர்மம் என்பதைத் தேர்ந்து தெளிந்து கண்டவர்கள்.

''கொல்லான் புலாலை வெறுப்பே யானால்
எல்லா உயிரும் கை கூப்பி வணங்கும்''

இதற்கு உயிர்களிடத்தில் கொல்லாமை பற்றியது என்பது பொருள். எவன் ஒருவன் புலாலை (மாமிசத்தை) வெறுப்பான் ஆகில் எல்லா உயிர்களும் அவனைக் கை கூப்பி வணங்கும் என்பதாகும். இது சாதாரண மக்களுக்கு. ஆனால் இதையே ஞானிகள் வேறு பொருள் கூறுகிறார்கள்.

புறப் பொருளை புறக் கருத்துக் கொல்லாமை உள்ளவனை வணங்க வில்லை. ஆனால் ஒருவர் தன் சரீரத்தை மறந்து (வெறுத்து) தன் உயிரையே (ஆன்மா) பார்த்துக் கொண்டிருக்கும்போது அவரை பெரிய ஞானி என்று எல்லா உயிர்களும் வணங்கும். அப்படி எல்லா உயிரினங்களும், எல்லா மதத்தவர்களும் எந்த நேரம் வணங்கப்பட்டவர்தான் நம் பூண்டி ஞான யோகீசுவரர்.

சீவர்கள் (மனிதர்கள்) தன்னைவிட உயர்ந்த பொருள் ஒன்று தன்னை சூழ்ந்திருப்பதாக உணர்கிறார்கள். அந்த அந்தப் பொருளை அறிய பலவகைகளிலும் புற உலகில் (மனிதனுக்கு வெளியில்) தேடினர். சுவர்க்கம், மற்றும் வேறு பல உயர்ந்த உலகங்களை மனிதன் தேடினான். ஆனால் அதனால் அவன் நினைவு பெறவில்லை. நாளடைவில் சீவர்கள் தன்னைப் பற்றி ஆராய்ந்தார்கள். உண்மையான நான் யார்? என்ற விசாரணை செய்தார்கள். நம் புலன்களுக்குத் தெரியும்நான். நானல்ல. உண்மையான 'நான்' யார் என்பதைத் தனக்குள்ளே அக உலகில் ஆழ்ந்து தியானித்துக் காண்பது, தனக்குப் புற உலகில் தேடிய இலட்சியம் எதைத் தேடி வழி பட்டதோ, அகஉலகில் அந்த இலட்சியம் அடைந்தது.

இத்தனை நாள் அந்தச் சீவன் எதை வெளியில் வழிபட்டதோ எந்த லட்சியத்திற்காக புற உலகில் தேடியதோ அதுஅத்தனையும் தன்னுள் அக உலகில் கண்டது. இதையே ஞானிகள் 'அண்டத்தின் கண் உள்ளது பிண்டத்தில்'' என்றனர்; அதை அறிந்தவன் ஞானிகளில் அரசன். அப்படி ஞானிகளில் அரசனாக விளங்கியவர் நம்பூண்டி ஞான அரசன்.

இப்படிப்பட்ட ஞான அரசனைப் பற்றி, அவர் பூ உலக மக்களுக்கு செய்த நன்மைகளும், அவர் நிலை எத்தகையது என்பதைப் பற்றியும், இந்த புத்தகத்தில் படித்து அவர் அருளைப் பெற்று எல்லா நன்மைகளை இப் பூ உலக மக்கள் அடைய எல்லாம் வல்ல எம்பெருமான் சுழி முனை கண்ட சூரர், மும்மலம் அறுத்த முனிவர், ஞானப்பழமான பழமலை நாதர் பூண்டி மகானை வேண்டுகிறோம்.

ஸ்ரீ பூண்டி மகான் யார்? அவர் எந்த ஊர்? அவர் பெயர் என்ன?

'நாம் ஒரு ஞானியையோ, மகான்களையோ தரிசிக்கப் போகும்போது அவர் நிலை என்ன? அவர் அருள் பார்வை நம் மீது படாதா? நம் வினை தீர்ந்து கடைத் தேற வழி என்ன? என்பதை நினைப்பது கிடையாது.

சாமியார் எந்த ஊர்? அவர் பெயர் என்ன? அவர் குலம், கோத்திரம் என்ன? என்பதை அறிய இந்தப் புத்தியில்லா பிறவி நினைக்கிறது. ஏன், மற்றவர்களையும் கேட்கிறது.

ஆனால் நம் பூண்டி மகான் சித்த மகா புருசர். அவர் சமாதியை விட்டு வந்தவர். சம = சமம், ஆதி = தெய்வம். தெய்வத்திற்குச் சமமாக இருந்து வந்து மானிடருடன் மானிடராய் இருந்த தேவ புருசர்.

அவதார புருசர்கள், ஈசுவரன் என்னும் எல்லையில்லா விவரிக்க முடியாத கடலிலிருந்து ஏற்பட்ட அலைகளைப் போன்றவர்கள். சம்சாரக் கடலில் அல்லல்படும் மக்களைக் கரை சேர்க்க வந்த அலைகள் அந்த சித்த மகா புருசர்.

உலகத்தைப் படைத்த பிரம்மா, தனது மனதால் பல (மானச புத்திரர்கள்) புத்திரர்களைத் தோற்றுவித்ததாக புராணம் கூறுகிறது. யோகத்தின் எல்லையைக் கடந்த சித்த மகா புருசர்கள் தங்களுடைய மனோ சங்கல்பத்தால், தங்களையே, பல சீவர்களாக ஏக காலத்தில் பிரித்து வைத்துக்கொள்ள முடியும். பல தோற்றத்தை அடைய முடியும். அப்படி தோற்றம் கொண்டு தங்கள் வினையைத் தீர்த்துக்கொள்ள முடியும் என்ற யோக சாத்திர நூல் கூறுகிறது. அப்படித் தாய் தந்தை சேர்க்கையின்றி தன் யோக பலத்தால் சமாதியை விட்டு வந்தவர் நம் பூண்டி மகான்.

உலக காட்சிகளைத் தன் ஆன்மா மூலம் உட்புறம் (அகத்தில்) காண்பது தவம். அதன் முதிர்ச்சியே சமாதி நிலை. அப்படி சமாதி நிலையில் இருந்தவர் நம் பூண்டி மகான். சூரியன் மறைவதுமில்லை, தோன்றுவதுமில்லை. நமக்கு அவ்விதம் பூமியின் சுழற்சியால் தெரிகிறது. அதுபோல் மகான்கள் பிறப்பதுமில்லை, இறப்பதுமில்லை. நம் அஞ்ஞான அறிவிற்கு அப்படி தோன்றுகிறது. நாம்தான் பிறப்பு, இறப்பு என்று உலகம் சுற்றுவது போல் பிறவி எடுக்கிறோம். சூரியனைப்போல் மகான்கள் ஒரே நிலையாக உள்ளவர்கள். நாம்தான் பூமியைப்போல பலபிறவிகள் எடுத்துச் சுற்றிக் கொண்டிருக்கிறோம்.

மனிதனுடைய உருவத்தில் மூன்று பகுதிகள் உள்ளது. அவை உடல் (தூல சரீரம்) 2. உள்ளம் (சூக்கும சரீரம்) 3. உயிர் (காரண சரீரம்) இம் மூன்றும் சரீரம் என்ற கட்டிடத்தில் ஆத்மா கூடியிருக்கிறது. யோகிகள் தன் யோகத்தின் பயனாக நினைத்த சரீரம் எடுக்க முடியும். அப்படி நினைத்த சரீரம் கொண்டு வந்தவரே நம் பூண்டி மகான் ஆற்று சுவாமிகள்.

சாதாரண சீவர்கள் தாய், தந்தையிடம் தங்களின் வினைகளுக்கு ஏற்ற பிண்டங்களை வாங்கிக் கொள்கிறார்கள். சாதாரண சீவர்களின் எண்ணம் வலிமை பெற்றது அல்ல. ஆனால் யோகியர்கள் எண்ணம் வலிமை

பெற்றது. யோக வலிமையாலும் தங்களை, தாங்களே பல சீவர்களாக பிரிக்க முடியும். யோகியர்கள் நொடிப்பொழுதில் தம்மை வயது முதிர்ந்த சீவர்களாக அமைத்துக்கொள்ள முடியும். உதாரணமாக அவதார புருசர் கிருட்டிணன், கோபாலர்களுக்கும், கோபியர்களுக்கும் நொடிப் பொழுதில் கணக்கற்ற கண்ணபிரானாக தோன்றி ஆனந்தம் ஊட்டினார். மேல்நிலைக்குப் போன சீவர்கள் தெய்வ சங்கல்பத்தால் ஆண், பெண் சேர்க்கையின்றி தன் யோக பலத்தால் அவரவர் ஆற்றலுக்கு தகுந்தாற்பால் மண்ணுலகில் அவதரிக்க முடியும். அப்படி அவதாரம் எடுத்து வந்தவரே நம் பூண்டி அவதார புருசர்.

ரிஷி மூலம், நதி மூலம் காண்பது அரிது. மலை உச்சியில் ஏதோ ஓரிடத்தில் தோன்றி பிறகு மறைந்து, பிறகு கொஞ்சம் தூரம் கண்ணுக்குத் தெரிந்து, மறுபடியும் மறைந்து பிறகு தோன்றி வெகு வேகமாக பூமியை நோக்கி வரும். அதுபோல் யோகிகள் தோன்றுவார்கள். மறைவார்கள். பிறகு இன்னொரு இடத்தில் தோன்றுவார்கள். அப்படி எங்கோ மறைந்து (சமாதி) பிறகு தோன்றியவரே நம் பூண்டி மகான்.

பூண்டி மகான் எந்த ஊரிலிருந்து பூண்டிக்கு வந்தார் என்பது மற்றுமோர் கேள்வி. நாம் எல்லாம் தந்தை என்ற சுக்கிலமாகிய சுங்குவார் சத்திரத்திலிருந்து தாய் என்ற பையூரில் சில நாள் தங்கி வந்தவர்கள்.

ஆனால் பூண்டி மகானுடைய ஊர் அப்படிப்பட்ட ஊர் இல்லை. மனம், புத்தி, இந்திரியம் என்ற சூக்கும சரீரத்தையும், தூல சரீரத்தையும் தன் ஞான சக்தியால் எரித்து வந்தவர் நம் பூண்டி மகான். அதனால் அவரது ஊர் "ஞானபுரம்" என்று கூறலாம்.

ஆரம்பமும், நடுவும், முடிவும் இல்லாமல் ஆகாயத்தைப் போல் எப்போதும் எக்காலத்தும் ஞான வடிவான சற்குருவினது திருவடிகள் பதிந்த ஊர் எதுவோ அதுவே பூண்டி மகான் ஊர் "திருவடிபுரம்" எனலாம்.

பந்தமாகிய இப் பிரபஞ்சம், நாம் ஆன்ம சொருபம் காண முடியாமல் பந்தத்தால் தடுத்து விடுகிறது. அந்த பந்தமாகிய பிரபஞ்சக் கட்டுகளை நீக்கியும் மற்ற எல்லா பந்தங்களை அறுத்தும் பிரம ஞானிகள் நிறைந்த ஊர் பூண்டி மகான் ஊர், "பந்தம் அறுத்த ஊர்" எனலாம்.

பந்தங்களில் விடுபட்டு, பிர்ம சொருப நிலை அடைந்து சீவன் முக்தர்களும், நித்தியமானதும் அழிவில்லாததும் என்றும் நிலைக்கக் கூடியதும் மாறுதலுக்கு உட்படாததுமான சத்-சித்-ஆனந்த நிலை பெற்றவர்களும் வாழும் "சச்சிதானந்தபுரம்" பூண்டி மகான் ஊர் என்று கூறலாம்.

அந்தக் கரணத்தை (மனம், புத்தி, சித்தம், அகங்காரம்) உலக விஷயங்களில் செல்லாதவாறு நிறுத்தியவர்கள். புறக்காரணங்களை (மெய், வாய், கண், மூக்கு, செவி) ஆகிய ஞானேந்தரியங்கள் வழியாக உலகத்து நடப்புகளை அகத்தின்கண் தடுத்து நிறுத்திய ஞானிகள் நிறைந்த ஊர் ஸ்ரீ பூண்டி மகான் ஊர், "தடுத்தாண்டபுரம்" எனலாம்.

பெண், பொன் ஜாதி குலம் போன்ற வெளி சாதனங்களால் சகல விதமான வெறியூட்டும் கருமங்களையும், காமம், குரோதம், லோபம், மோகம், மதம்,

மாச்சரியம் போன்றவற்றிற்கு கலங்காது அதை எரித்தவர்கள் உள்ள ஊரிலிருந்து பூண்டி வந்தவர் நம் பூண்டி மகான்; அவ்வூர் ''எரித்தபுரம்'' எனலாம்.

காம, குரோத, ஆசாபாசங்களை கழித்து எல்லா சாத்திரங்களையும், வேதங்களையும், தெளித்து அதற்கு அப்பால் கடந்து சென்றால் அவ்விடம் எந்த நாம ரூபம் இல்லாமல் (பெயரில்லா) வெறும் ஞான சொருபமாக உள்ள ஊர் எதுவோ அங்கிருந்து வந்தவர் நம் பூண்டி மகான். அந்த ஊர் ''தெளிந்தாண்டபுரம்'' எனலாம்.

கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு நான்கு திக்கும் நிறைந்து யாதொரு புண்ணிய பாவமில்லாமல் ஏகாந்த வெளியாய் இருக்கும் ஊரிலிருந்து பூண்டி வந்தவர் நம் பூண்டி மகான். அவ்வூரை ''புண்ணிய மங்கலம்'' எனலாம்.

கண்களை மூடி ஒரு குறியை வைத்துப் பார்த்த போதிலும், அந்த இடத்தில் எந்தக் குறியும் நிற்காமல் வெறும் வெட்ட வெளியாயும் துன்பமற்ற, இன்பமும், இறப்பு, பிறப்பும், நினைப்பும், மறப்புமற்ற வெறும் வெளியாக உள்ள ஊரிலிருந்து வந்தவர் நம் பூண்டி மகான். அதை 'வெட்டவெளிபுரம்' எனலாம்.

சகல எண்ணங்களையும் விட்டு உலகத்தையும் மறந்து உண்மை பொருள் எதுவோ அதை அறிந்து, கள்ளப் புலன்கள் அனைத்தும் அறுத்த ஊரிலிருந்து வந்தவர் நம் பூண்டி மகான். அதனால் 'கள்ள புலன் அறுத்தபுரம்' எனலாம்.

அருணாசல ஈசனே சித்தர் உருக் கொண்டு சித்துக்கள் பல ஆடி பூ உலக மக்களுக்கு நன்மைகள் பல புரிந்து அவர்கள் தீவினைகளை அகற்றி மனித உருவில் சமாதி ஆனார். பிறகு வேறு பல பெயர் தாங்கி வேறு பல இடங்களில் தோன்றுவார். இப்படி சமாதியிலிருந்து வந்தவரே நம் பூண்டி மகான். அதனால் இவர் ஊர் 'சமாதிபுரம்' என்றும் கூறலாம்.

''எட்டுத் திசையும் நிறைந்த வூரெங்களூர்
ஏகாந்த மாயிருக்கு மூரெங்களூர்
தட்டற்ற யோகிக்கடங்கு மூரெங்களூர்
தன் பாவங்கடவிர்த்த வூரெங்களூர்
இந்திரியர்க் கள்வர் சேர்விலாதெங்களூர்
இன்பநற் பயிரோங்கிய தெங்களூர்
பந்த மற்றவர் பற்றிடமெங்களூர்
பார்வையற்ற பரம் பொருளெங்களூர்
கத்துஞ்சிலுகு மிலாத வூரெங்களூர்
சுத்த வெளியில் தோன்று மூரெங்களூர்
சோம்பர் சுகமென்றுணர்ந்த வூரெங்களூர்

இப்படிப்பட்ட ஊர் என்கிறார் நம் பூண்டி மகான். மேலும் மந்திரி இல்லா ஊர், எம்.எல்.ஏ இல்லாத ஊர், பஞ்சாயத்து போர்டு தலைவர்கள் இல்லாத ஊர், பஸ், லாரி, கார், கடை வீதி இல்லாத ஊர், குளம், குட்டை இல்லாத ஊர், தேர்த் திருவிழா இல்லாத ஊர், தேர்தல் நடக்காத ஊர், சினிமா தியேட்டர் இல்லாத ஊர் எதுவோ, அந்த ஊரிலிருந்து பூண்டிக்கு வந்தவர் நம் பூண்டி மகான் ஆற்று சுவாமிகள்.

எப்போதும் பரிபூர்ண சமாதி நிலையிலிருப்பவர்கள் ''நித்திய சித்தர்கள்''. இவர்கள் பூசனிக் கொடியில் முதலில் காய் வந்த பிறகு பூவெல்லாம் வெளிப்படுவதுபோல் என்றும் பரிபூர்ணம் உள்ளவர்கள். பிறவியிலேயே ஞானிகளாக அவதரிக்கின்றார்கள். அவர்கள்பூர்ண நிலை அடைவதற்கு முயற்சிகள் செய்பவர்களைப் போல் தோன்றுவதெல்லாம் உலக மக்களுக்காகவும் உலக மக்கள் அவர்களைப் பின்பற்ற வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்திற்காகவும் அப்படித் தோன்றுகிறார்கள்.

''துறந்தான் வழி முதற் சுற்றமும் இல்லை
இறந்தான் வழி முதல் இன்பமும் இல்லை
மறந்தான் வழி முதல் வந்திலன் ஈசன்
அறந்தான் அறியும் அளவறிவாரே''

புறப்பற்றும் அகப்பற்றும் விட்டவர்களுக்கு சொந்த பந்தமில்லை. ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்பதாகும். உலகில் செத்தாரைப்போல் திரியும் மெய்ஞானிக்கு இன்பமும் துன்பமும் கிடையாது. முற்றும் துறந்தவன் இறந்தவனுக்குச் சமமாகும். மெய்ப் பொருளை உணர்ந்து சிவன்பால் உள்ளவர்களுக்கு சிற்றின்பம் இல்லை. அவர்கள் பேரின்பத்தில் இரக்கும் நிலை உள்ளவர்கள்.

அவதாரங்கள் அனைத்தும் ஒரே கடவுளின் (பரம் பொருளின்) அவதாரங்கள்தான். சீவிதமாகிய சமுத்திரத்தில் மூழ்கி ஒரு புறம் கிருட்டிணனாகவும், இன்னொருபுறம் ஏசுவாகவும், மற்றொரு புறம் அல்லா, புத்தர் போன்ற அவதாரங்களையும் எடுக்கிறது. அப்படி பரம்பொருளிலிருந்து மூழ்கி ஒரு புறம் வந்தவரே நம் பூண்டி மகான்.

அவதார புருசர்கள் எல்லாம் ஈசுவரனிடத்திலிருந்து மானிட வடிவம் தாங்கி வருகின்ற தூதுவர்கள் ஆவார். அவர்கள் உலகப் பெரும் சக்கரவர்த்தியிடமிருந்து வரும் தூதுவர்கள். ஒரு தேசத்தில் கலகம் நடைபெறுகிறது என்றால், சக்கரவர்த்தி தன் தூதுவர்களை அனுப்பி கலகத்தை அடக்குவதுபோல் உலக நன்மைகளுக்காக ஈசுவரனே தன் சக்தியை (தூதாக) அனுப்பி தர்மத்தை நிலை நாட்டவும் உலக நன்மைக்காகவும் உதவுவார். அப்படிப்பட்ட ஈசுவர அவதார புருசரே நம் பூண்டி சித்த மகா புருசர் அவார்.

நமது கண்களுக்குப் புலப்பட்டு நமக்கு அன்னியமாய் நம்மால் அறியப்படும் சடப்பொருளாகிய இத் தூல தேகம் (உடல்) இன்னதென்றும், இதற்குள் இருந்து ஆட்டி வைக்கும் சித்துப் பொருளாகிய உயிர்

இன்னதென்றும் வேறு பிரித்து அறியக் கூடியவன் எவனோ அவனே "தன்னைத்தான் உணர்ந்தவன்" சித்த மகா புருசன். அப்படித் தன்னைத் தான் உணர்ந்த தனிப் பெரும் தெய்வம் நம் பூண்டி மகான் ஆற்று சுவாமிகள்.

ஸ்ரீ பூண்டி மகான் ஒரு பெரிய பொருள். சாதாரண மக்கள் அவர் நிலை அறிய முடியவில்லை. அவர்கள் பெரிய ஞான நிலை அடைந்த ஞானி. முக்காலமும் உணர்ந்த மகான். அவர்கள் சித்த மகா புருசர் கூட்டத்தைச் சேர்ந்தவர். அவரைப் 'பாம்பாட்டிச் சித்தர்" என்று கூறுவார்கள். இதை உணர்த்துவதற்காகவே அவர் அமர்ந்து இருந்த திண்ணையில் இவர் பக்கம் வைத்திருந்த பெட்டிக்கு அடியில் எப்போதும் ஒரு நாக சர்ப்பம் காணப்பட்டது.

பதினெண் சித்த மகா புருசர்களில் ஒருவர் "பாம்பாட்டிச் சித்தர்" ஆவர். சித்தர்கள் பல சமயங்களில் பல இடங்களில் தோன்றுவார்கள். அப்படித் தோன்றும்போது காலத்தினாலும் இடத்தினாலும் அவர்களை மக்கள் பலவாறு பெயரிட்டு, அழைக்கிறார்கள். சாக்கடை ஓரம் வாசம் செய்யும் ஞானியைக் கண்டால் "சாக்கடைச் சாமி". கையில் சட்டியுடன் திரிந்தால் "சட்டிச் சாமி". சூட்டுக்கோல் உடன் திரிந்தால் "சூட்டுக்கோல் சாமி"

குழந்தைபோல் பேசினால் "குந்தைச் சாமி". கொஞ்சம் தடியாய் இருந்தால் 'தடிச் சாமி'. அழுக்குடன் காணப்பட்டால் 'அழுக்குச் சாமி'. வேலை செய்தால் 'நீதிபதி சுவாமி'. குள்ளமாக இருந்தால் 'குள்ளச் சாமி'. நடை வேகமாக நடந்து கொண்டே இருந்தால் 'நடைச் சாமி'. சடை நிறையக் காணப்பட்டால் 'சடைச் சாமி'. விட்டோப! விட்டோப என்று அடிக்கடி கூறினால் 'விட்டோப சுவாமி'. குரும்பேரியலில் இருந்தால் 'குரும்பேரிச் சாமி'. சுடுகாட்டில் இருந்தால் 'சுடுகாட்டுச் சாமி'. கோடி, கோடி, கோடி, என்று கூறினால் 'கோட்டீஸ்வர சுவாமி'. சுரைக்காய் உடன் கொண்டு சென்றால் 'சுரக்காய் சாமி' நிர்வாணமாகத் திரிந்தால் 'நிர்வாண சாமி' என்பதைப் போல் இவர் பூண்டியில் அமர்ந்து இருந்ததால் "பூண்டிச் சாமி" என்றும், பூண்டி கலசப்பாக்கம் ஆற்றில் அமர்ந்து எந்த நேரமும் யோக சமாதியில் இருந்ததால் "ஆற்று சுவாமிகள்" என்று மக்கள் அழைத்து ஆனந்தம் அடைந்தார்களே தவிர அவர் ஊர், பெயர், தாய், தந்தையர் கடைசி வரையில் யாருக்கும் தெரியாத இரகசியம். ஞானிகளுக்கு எல்லா ஊரும் அவர்கள் ஊரே.

ஞானப் பழமாக அவர் பூண்டி என்னும் சிறிய கிராமத்தில் ஓர் ஓட்டு வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்து சமாதி நிலையில் இருந்தார். பூண்டி மகான் ஒரு சித்த மகா புருசர். அவர்கள் மக்களுக்கு தன்னைத்தான் உணர ஆன்ம நிலை காண வழி கூற வந்த மகான். யார் யாருக்கு அந்த நிலையை தன் மௌன நிலையில் பரிபாசையில் வழங்கினார் என்பது வந்த யோகிகளுக்குத்தான் தெரியும். அது பரம இரகசியம்.

சித்த மகா புருசர்கள் அந்த அட்டமா சித்துகளை எப்படிப் பெறுகிறார்கள் என்பதை நம் பூண்டி மகான் பலவித செயல்களால் மறைமுகமாக உபதேசம் செய்துள்ளார். அதைப் புரிந்து விளங்கிய புண்ணிய ஆத்துமாக்கள் யார் என்பதும் பரம இரகசியமாகவே உள்ளது.

ஒரு சாதாரண மனிதன், தன் மனிதத் தன்மையில் இருந்து பேரின்ப பெருநிலையை எப்படி அடைகிறான் என்பதை சித்த மகா புருசர்கள் பலர், நமக்கு நூல் வாயிலாக தெரிவித்த போதிலும் ஒரு தக்க "ஞான குரு" கொண்டு ஞான நிலையைப் பெறவேண்டும் என்று வலியுறுத்திக் கூறுகிறார்கள். அப்படி ஞான குரு நில்லையில் வந்து, பல யோகியர்களுக்கு யோக நிலை பற்றியும், குடும்பத்தார்களுக்கு அவரவர் குடும்பப் பிரச்சனைகளையும், நோயுற்றவர்களுக்கு நோயின்றி நல்ல நிலை பெறவும், பிள்ளைப் பேறும், தன் ஞானப் பார்வையால் அவரவர்கள் தீவினைகளை அகற்றி நல் வழி காட்டியருளிய பெரும் பொருள் நம் பூண்டி மகான் ஆற்று சுவாமிகள்.

பூண்டி ஆற்று சுவாமிகள் ஞானப் பழமாக காட்சி தந்து வரும் அன்பர்களின் குறையை நீக்கிய தெய்வம். அவர் நிலை என்ன என்று அறியாத மக்கள் அவர் எந்த ஊர், என்ன சாதி, என்ன குலம் என்று அறிய வேண்டும் என்று எண்ணினார்கள். ஞானிக்கு ஊர் எல்லாம் அவர் ஊர்தான். எல்லாச் சாதியும் அவர் சாதி தான். எந்தக் குலமும் அவர் குலம் தான். என்பதை உணர வேண்டும். "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்று கூறியவர்கள். ஈசனுக்கு எந்த ஊர் என்று நாம் கூற முடியுமா? எல்லார் இதயமும் அவர் ஊர்தான். அது போல் நீக்கமற நிறைந்தவர் நம் பூண்டி மகான் ஆற்று சுவாமிகள்.

வெட்ட்வெளி தன்னை மெய்யென்றிருந்தவர் பூண்டி மகான்.
மெய்ப் பொருள் கண்ட விளங்கும் மெய் ஞானி பூண்டி மகான்.
வஞ்சக மற்ற வழிதனைக் கண்டவர் பூண்டி மகான்.
ஆதாரமான அடிமுடி கண்டவர் பூண்டி மகான்.
நித்திரை கெட்டு நினைவோடு இருந்தவர் பூண்டி மகான்.
சத்தியமான தவத்தில் இருந்தவர் பூண்டி மகான்.
நாட்டத்தைப்பற்றி நடுவணை சேர்ந்தவர் பூண்டி மகான்.
உச்சிக்குமேல் சென்று உயர் வெளி கண்டவர் பூண்டி மகான்.
வேகாமல் வெந்து வெளியொளி கண்டவர் பூண்டி மகான்.
சாகாமல் தாண்டித் த்னி வழி போனவர் பூண்டி மகான்.
அந்தரம் தன்னில் அசைந்தாடும் முக்தர் பூண்டி மகான்.
சித்திரைக் கூத்தை தினம் தினம் கண்டவர் பூண்டி மகான்.
முக்கோணந் தன்னில் முளைத்தெழுந்த ஞானிபூண்டி மகான்.
அல்லல் நீக்கி அறிவோடு இருந்தவர் பூண்டி மகான்.
அட்டாங்க யோகம் அறிந்த மெய் ஞானி பூண்டி மகான்.
தன்னையறிந்து தலைவனைச் சேர்ந்தவர் பூண்டி மகான்.
மாங்காய் பாலுண்டு மலைமேல் இருந்தவர் பூண்டி மகான்.
செத்தாரைப்போல திரிந்த மெய் ஞானி பூண்டி மகான்.

வேகமடக்கி விளங்கிய மெய்ஞானி பூண்டி மகான்.
தந்திரமான தவத்தினில் நின்றவர் பூண்டி மகான்.
காணாமற் கண்டு கருத்தோடு இருந்தவர் பூண்டி மகான்.
முத்தமிழ் கற்று முயங்கிய மெய் ஞானி பூண்டி மகான்.
ஆனந்தம் பொங்கி அறிவுடன் இருந்த மெய் ஞானி பூண்டி மகான்.
மாத்தளை வென்று மலைமேல் இருந்தவர் பூண்டி மகான்.
ஆமைபோல் ஐந்து மடக்கி திரிந்த ஞானி பூண்டி மகான்.
எல்லார்க்கும் மேலான ஏகனைப்பற்றிய ஞானி பூண்டி மகான்.
ஆதியும் அந்தமும் ஆன ஒருவன் நம் பூண்டி மகான்.
எங்கும் நிறைந்தே இருக்கின்ற சோதி பூண்டி மகான்
காமனை வென்று கடுந்தவம் செய்தவர் பூண்டி மகான்.
ஐம்புலன் வென்று அனைத்துந் துறந்தவர் பூண்டி மகான்.
அகமும் புறமும் ஆன பற்றற்ற மெய் ஞானி பூண்டி மகான்
இருந்த இடத்தில் இருந்தே அறிந்த மெய் ஞானி பூண்டி மகான்.
சாதனையாலே தனிப் பதஞ் சேர்ந்தவர் பூண்டி மகான்.
தூங்காமல் தூங்கிச் சுகம் பெற்றவர் பூண்டி மகான்.
தனித்திருந்த தவமணி நம் பூண்டி மகான்.
விழித்திருந்த ஞான அரசன் பூண்டி மகான்.
பசித்திருந்த பசுபதி நம் பூண்டி மகான்.

தன் உடலில் சித்தர்கள் கண்டு அடக்கிய 96 தத்துவம்

சுக்கில உற்பத்தி

நாம் உண்ணப்பட்ட உணவானது மறுநாள் இரசமாகவும் மூன்றாம் நாள் இரத்தமாகவும், நான்காம் நாள் மாமிசமாகவும் ஐந்தாம் நாள் கொழுப்பாகவும், ஆறாம் நாள் எலும்பாகவும் ஏழாம் நாள் மூளையாகவும், எட்டாம் நாள் சுக்கிலமாகவும் (இந்திரியம்) மாறும். பிறகு தாதுவாக மாறி உடற்குன்றா வண்ணம் தரும்.

"ஒரு நாளுண்ணன விரமிரத தாதுவை நனைத்தங்கூறிநிற்கு
மிரு நாளுண்டிடி னஃதங்கிரத் தாதுவிலேறு மிவ்வாறேபின்
வரு நாளுண்டெழு நாளுமாயின் ஃதெழுதாதுவையும் வளர்த்தே
தரு நாளுஞ்சேராத வவிதனை யெட்டாநாட் சடத்தினுக்கே

(பலகுண சிந்தாமணி)

உலக உற்பத்தி

பராபரத்தில், பரந்தோன்றி, பரத்தில் சிவன் தோன்றி, சிவத்தில் சக்தி தோன்றி, சக்தியில் நாதன் தோன்றி, நாதத்தில் விந்து தோன்றி, விந்தில் சதாசிவம் தோன்றி, சதாசிவத்தில் மகேசுவரன் தோன்றி, மகேசுவரத்தில் உருத்திரன் தோன்றி, உருத்திரனில், விட்ணு தோன்றி விட்ணுவில் பிர்மம் தோன்றி, பிரமத்தில் ஆகாயம் தோன்றி, ஆகாயத்தில் காற்றுத் தோன்றி, காற்றில் நெருப்புத் தோன்றி, நெருப்பில் நீர் தோன்றி, நீரில் மண் தோன்றி, மண்ணில் அன்னந் தோன்றின. (மனிதன், மிருகம், பறவை, தாவர வகைகள், சங்கமாதிகள் மலை, நதி போன்றவை)

உலக பிரளயம்

மனித, பட்சி, மிருகம், தாவர, மலை, பாறை, நதிகள் அன்ன சக்தியில் ஒடுங்கி அன்னம் மண்ணில் ஒடுங்கி, மண் நீரில் ஒடுங்கி, நீர் நெருப்பில் ஒடுங்கி, நெருப்பு காற்றில் ஒடுங்கும். காற்று பிர்மாவில் ஒடுங்கி பிர்மா, விட்ணுவில் ஒடுங்கி, பிர்மா உருத்திரனில் ஒடுங்கி, உருத்திரன் மகேசுவரத்தில் ஒடுங்கி, மகேஸ்வரன் சதா சிவத்தில் ஒடுங்கி, சதாசிவம் விந்துவில் ஒடுங்கி, விந்து நாதத்தில் ஒடுங்கி, நாதம் சக்தியில் ஒடுங்கி, சக்தி சிவத்தில் ஒடுங்கி, சிவன் பரத்தில் ஒடுங்கி, பரம் பரமேசுவரனாகிய பராபரத்தில் ஒடுங்கும் என்று அறியவும்.

சுக்கலும்

மனிதன், எலும்பு கூடு, தசை, நரம்பு முதலியவற்றால் மட்டும் ஆனவன் என்பது தவறு அவனுள் பேரண்டமாகிய உலகத்தில் உள்ள எல்லாப்

பொருள்களும் சூட்சுமமாக (அருவமாக) உள்ளது என்பது ஞானிகள் கண்டறிந்த உண்மை.

அவனுடைய மனமும், உயிரும், தாதுப் பொருள்களைப் போல் உடலைச் சேர்ந்தது. இந்த மனித உடலைச் சித்தர்கள், ஞானிகள் இருவகைப்படுத்திக் கூறுகிறார்கள்.

1. தூல உடல் : இது எலும்பு, தசைகள், நரம்புகள், இரத்தக் குழாய்கள் முதலியவற்றால் ஆக்கப்பட்ட உணவு உடம்பு என்றும்.

2. சூக்கும உடல் : நுட்ப உடல் என்றும், ஞானிகள் ஆன்ம சரீரம், இலிங்க சரீரம் என்றும் கூறுகிறார்கள். இது முன்சொன்ன தூல உடலுக்குக் காரணமாம்.

நுட்ப உடலுக்குக் காரண உடல் என்றும்
தூல உடலுக்குக் காரிய உடல் என்றும்

ஞானிகள் கூறுகின்றனர்.

நுட்ப உடலை அறிய நாம் தெரிந்து கொண்டால் உலகம் அனைத்திற்கும் கருவாய் நின்ற பொருளின் தத்துவத்தை தெரிந்துகொள்ள வழியாகும்.

ஐம்பெரும் பூதங்களால் (மண், நீர், காற்று, நெருப்பு, ஆகாயம்) ஏற்பட்டவன் மனிதன். உலகத்தில் உள்ள தாது பொருள் (சுக்கிலம், ரத்தம், எலும்பு, தசை, தோல், மூளை, நரம்பு) சங்கம பொருள் ஆகிய இவைகள் சிறிய உலகம் ஆகும். மனித உடலில் உள்ள ஒவ்வொரு உறுப்பும் உலகத்தில் பரவி நிற்கும் தத்துவங்களின் பொதுவான சக்தியால் உண்டானவை. இச் சக்திகளின் சேர்க்கை இவற்றின் வாயிலாக உண்டாக்கப்பட்ட உறுப்புக்களை ஆட்டுவிக்கும் தன்மையுடையது.

உதாரணமாக தமகரம் என்னும் உறுப்பு சூரிய சக்தியாலும், மூளை சந்திர சக்தியாலும், பித்தப்பை செவ்வாய்க் கிரகத்தாலும், நுரையீரல் புதன் கிரகத்தாலும், கல்லீரல் குரு சக்தியாலும் மண்ணீரல் சனிக் கிரகத்தாலும் சம்பந்தப்பட்டது ஆகும்.

எனவே மனித உடலின் அமைப்பு உலகத்தில் உள்ள கிரக நட்சத்திரங்களை அசைவிக்கும் சக்தியைப் பெற்றுள்ளது.

ஞானி ஒருவர் யோக ஆன்மீக சக்தியின் பெருக்கால் பெரும் நிலையால், நட்சத்திரம், கிரகம் முதலியவைகளை இயக்க வல்லவர்கள். உலகத்தில் உள்ள அத்தனையும் ஞானியின் யோக சக்திக்குக் கட்டுப்படுகிறது.

தன்னுடைய உடம்பில் உள்ள தத்துவங்களையும் நிலையையும், ஞானி ஒருவர் யோக நிலையாலும் சமாதி நிலையாலும், தன்னுடைய உடம்பில் உள்ளதையும், உலகத்தில் உள்ளதையும் அடக்கி ஆளும் பெருநிலையை அடைகின்றார்கள். அப்படிப்பட்ட பெருநிலை எய்திய பெரிய பொருள் நம் பூண்டி மகான். பெரிய மெய் ஞானி நம் பூண்டி மகான். பெரிய ஞானப் பழம் நம் பூண்டி மகான்.

மனித உடலில் 72,000 நாடி நரம்புகள். அவைகள் பின் வருமாறு அமைந்துள்ளது.

ஆறு ஆதாரங்களில்	பெரிய நரம்பு	11,000
	சிறிய நரம்பு	18,000
கை, கால்களில் உள்ளவை	பெரிய நரம்பு	7,000
	சிறிய நரம்பு	12,000
நாபிதுவாரம் (அ) தொப்புள்	பெரிய நரம்பு	1,000
	சிறிய நரம்பு	2,000
நவ துவாரங்கள்	பெரிய நரம்பு	15,000
	சிறிய நரம்பு	3,500
எலும்புகளிலும், குடலிலும் முடிவில் உள்ளது	பெரிய நரம்பு	7,000
	சிறிய நரம்பு	3,000
	ஆக நரம்புகள்	72,000

தண்ணீர் அளவு

மூக்கில்	-	41	பலம்
எலும்பில்	-	7	பலம்
தசையில்	-	21	பலம்
		69	நீரின் அளவு

உடலில் உள்ள சந்து பொந்துகள்

கை, கால்	-	69	
கழுத்துக்கு கீழ்	-	86	
கழுத்துக்கு மேல்	-	3	
		158	ஆக

உடலில் உள்ள எலும்புகள்

கை, கால் எலும்பு	-	160	
ஆறு ஆதாரங்கள்	-	30	
கழுத்திற்கு மேல்	-	30	
கழுத்திற்கு இருபக்கம்	-	20	
		240	எலும்புகள்

உடலில் உள்ள எலும்புகள் : 360

பல் உரல்கள்	-	32	தோள் பட்டை	-
பல்	-	32	குறி	-
நகங்கள்	-	20	ஆசனம்	-
கை, கால், முருந்துகள்	-	20	முதுகுதண்டு	-
கால், கை விரல்கள்	-	20	கழுத்து	-

குதிகால்	-	2	முகவாய்க் கட்டை	-	1
கைமணிக்கட்டு முன்பாகம்	-	2	முகவாய்க் கட்டை இணை எலும்பு	-	1
கணுக்கால்	-	4			
மணிக்கட்டு	-	4	நெற்றி	-	2
முழங்கால்	-	4	மேல் வாய்	-	2
முழங்கை	-	4	கண் எலும்பு	-	2
முழங்கால் சில்லு	-	2	தாடை	-	2
முழங்கைச் சில்லு	-	2	மூக்கு	-	1
தொடை	-	2	மார்புக் கூடு	-	48
புசம்	-	2	மார்புக் கூடுபடியும் எலும்பு	-	24
தோல் முன்னெலும்பு	-	2			
காறை எலும்பு	-	2	பொட்டு	-	1
பின்புறப் பட்டை	-	2	தலை ஓடு	-	1
மார்பு	-	17			
			ஆக 360 எலும்பு கூடும்	-	360

தசைகள்	500	தசை நார்கள்	900
கை, கால்	400	கை, கால்	600
உடம்பில்	66	உடம்பில்	230
கழுத்துக்கு மேல்	34	கழுத்துக்கு மேல்	70
	500		900

உடம்பில் ஓடும் ரத்தக் குழாய்கள்700

இதையெல்லாம் தன் வசம் கொண்டுவந்து தன் விருப்பம் போல் மாற்றம் செய்தவர்கள் சித்த மகா புருசர்கள்.

மயிற்களின் தொலை $3^1/_2$ கோடி. நாள் ஒன்றிக்கு 21,600 சுவாசமும், 96 தத்துவங்களையும் 360 பலம் தசைகளையும், பிராண வாயு உள்ளே போவது 12 அங். உள்ளே 4 அங். கழித்து 8 அங்குலம் உடலில் ஊடுருவிச் செல்லும். இது சித்தர்கள் கண்ட உண்மை விளக்கம். இதை இன்றைய மேல்நாட்டு மருத்துவம் மிகவும் ஆச்சரியத்துடன் ஒத்துக்கொள்கிறது.

இந்த 96 தத்துவங்களையும் 72,000 நாடியில் உள்ள அசைவு 21,600 சுவாசம். இதை தன் கட்டுக்குள் தன் யோகப்பயிற்சியால் கொண்டு வந்து இவைகளைத் தன் விருப்பம் போல் இயக்குபவர்களே சித்தமகா புருசர்கள், மெய் ஞானிகளின் நிலையாகும்.

உலகில் வாழும் உயிர் வாழ்பவற்றில் சிறந்தவை மனிதனே ஆவான். பிராணிகளின் தத்துவங்களெல்லாம் மனிதனில் அடங்கியுள்ளது. மேலும் தன்னைத்தான் அறியும் அறிவு மனிதனிடம் மட்டும் உள்ளது. அது பிராணிகளிடம் கிடையாது. மனிதனிடம் மட்டும் சடப்பொருள்களில்

(மலை, நீர், மண்) உள்ள தத்துவம் முதல் ஈசனிடம் நிரம்பியுள்ள தத்துவம் வரை எல்லா தத்துவங்களும் நிரம்பி உள்ளது. அதனால்தான் நம் ஔவைப் பிராட்டி

"அரிது அரிது, மானிடராய்ப் பிறத்தல் அரிது"

என்று பாடுகிறார். ஆனால் மனிதன் தன்னுள் நிறைந்துள்ள சக்தியை வெளியே கொண்டு வர முயற்சிப்பது கிடையாது. இந்த அரிய பெரிய தத்துவ சக்திகளை தன்னுள் கண்டு அதை அடக்கி அதை தன் வசப்படுத்தி வெற்றிகண்டவர்களே மெய்ஞ்ஞானப் புருசர்கள் ஆவார்கள். அவர்கள் எப்படி தன்னுள் உள்ள சக்திகளைக் கண்டு அதை அடக்கி ஆளும் தன்மையைப் பெறுகிறார்கள் என்று பார்ப்போம்.

மனிதனின் உடலில் அனேக நரம்புகளில் மர்மங்கள் பல உள்ளன. அவை சக்தியை அடக்கி வைத்துள்ளது. இவ்வாதாரங்கள் பிராண சக்திக்கு ஏற்ப நிலையாய் நிற்பதால் இதைத் தட்டி யோகப் பயிற்சியால் எழுப்பி, அதனால் ஏற்படும் சக்தியைக் கொண்டு ஆன்ம சக்தியை மேலும் மேலும் வளர்க்க வேண்டும்.

பிராணாயாமத்தால் பயிலப்படும் இடகலை, பிங்கலை, என்னும் சந்திர கலை, சூரியக் கலையால் தன் விருப்பம்போல் பிராணாயாமம் செய்து அதை அடக்கிச் சுழி முனையில் சுவாசத்தை நிலை நிறுத்தி பொறி ஐந்தும், புலன் ஐந்தும், அந்தக் கரணம் நான்கும், அறிவு ஒன்றும் ஆக பதினைந்தும் அடக்கினால் பேரானந்தப் பெருநிலையை அடையலாம் என்று மெய்ஞ்ஞானிகள் தன் சொந்த அனுபவங்களைப் பல நூல் வாயிலாக நமக்குப் பாடல்களாகப் பாடி இருக்கின்றனர்.

மனிதன் ஐம்பூதங்களையும் அடக்கி ஆளும் சக்தி பெற்று இயற்கையின் நியதியை இயக்கவும் மாற்றவும் வல்லமை பெறுகிறான். புதியதோர் உலகத்தையும் தோற்றுவிக்க சக்தியையும் பல உருவங்களை எடுக்கவும் சக்திபெற்றவன் ஆகிறான்.

சேதனப் பொருள் (உயிருள்ள பொருள்) அசேதனப் பொருள் (உயிரற்ற சடப்பொருள்) களுக்கு தலைவன் ஆக அடையும் தன்மை பெறுகிறான். மனிதன் இந்த வித நிலை அடையத் தடைகள் ஏராளம். தடையாக உள்ளது அனைத்தையும் கடந்தவன், கடவுள் ஆகிறான்.

உடம்பு என்கிற கண்ணுக்குத் தெரியக் கூடியதை உள்ளம் என்னும் கண்ணுக்குத் தெரியாத நுண்பொருளையும் ஆன்மா என்ற அதி நுண் பொருளாகிய உயிரையும் இதை மூன்றையும் இணைத்து ஆராய்ந்து எல்லாக் காலத்திற்கும் எல்லா நாட்டிற்கும், விஞ்ஞானிகளுக்கும் பொருந்துமாறு ஆராய்ந்து தெளிவோடு மாபெரும் உண்மையை நமக்கு சித்த மகா புருசர்கள் கூறி உள்ளனர்.

"உறுதியாம் பூதாதி யோரைந் தாகும்
உயர்கின்ற பொறியைந்து புலனைந்தாகும்

கறுதியால் கம்ம விந் திரிமைந்தும்
கடிதான ஞானவிந் திரிமைந்தும்
திருதியாந் தீதாய கரணம் நான்கும்
திறமான வறிவொன்றும் நாடி பத்தும்
மறுதியாம் வாயுவது பத்துமாகும்
மகத்தான விஷயமஞ்சு கோசமஞ்சே.
அஞ்சவே யாதார மாறு மாகும்
அறிய மண்டலமூன்று மலமூன்றாகும்
தொஞ்சவே தோடமூன்றீ ட்ணைதான்மூன்று
தோதகமாங் குணமூன்று வீணையிரண்டாம்
தஞ்சவே ராகமெட்டு வவத்தையந்து
தங்கியதோர் கருவிகடாம் தொண்ணூற்றாறு
ஒஞ்சவே யொவ்வொன்றாய் விரித்துச் சொல்வேன்
உறுதியாம் பூதாதியுரைக் கக்கேளே. (யூகி சிந்தாமணி)

நமது உடலில் உள்ள தொண்ணூற்றாறு தத்துவங்களை யூகி சிந்தாமணி என்னும் யோக நூலில் கூறியபடி

பூதங்கள்	-	*5*	*ஆதாரம்*	-	*6*
பொறிகள்	-	*5*	*மண்டலம்*	-	*3*
புலன்	-	*5*	*மலம்*	-	*3*
தொழில்	-	*5*	*தோஷம்*	-	*3*
கன்ம விஷயம்	-	*5*	*ஏடணை*	-	*3*
அந்தகரணம்	-	*4*	*குணம்*	-	*8*
அறிவு	-	*1*	*ராகம்*	-	*8*
			வீணை	-	*2*
ஆக முதற் தத்துவம்	-	*30*	*அவசுத்தை*	-	*5*
நாடிகள்	-	*10*	*ஆக மூன்றாம் தத்துவம்*	-	*36*
வாயுக்கள்	-	*10*			
ஆசயங்கள்	-	*5*			
கோசங்கள்	-	*5*			
ஆக இரண்டாவது தத்துவங்கள்		*30*			

ஆக மூன்றும் சேர்ந்து 96 தத்துவங்கள் ஆகும்.

இதைத் திருமூலர் தன் திருமந்திரப் பாடலில் அழகாக உவமையுடன் பாடுகிறார்.

"முப்பதும் முப்பதும் முப்பத் தறுவருஞ்
செப்ப மதிளுடைக் கோயிலுள் வாழ்பவர்
செப்ப மதிளுடைக் கோயில் சிதைந்தபின்
ஒப்ப அனைவரும் ஓட்டெடுத்தார்களே"

மூன்று முப்பது தொண்ணூறு. மேலும் ஆறும் ஆக தொண்ணூற்றாறு மெய்களும் திடமாக அமைந்த மதில் கோட்டை உடைய உடம்பின்கண் வாழுகின்றனர். அந்தத் திடமான உடல் சிதைவுற்றால், இந்த 96 பேரும் (மெய்களும்) உடலை விட்டு ஓடி விடுவார்கள் என்று கூறுகிறார்.

இப்படிப்பட்ட தொண்ணூற்றாறு மெய்களை ஞானி ஒருவர் அடக்கித் தன் வசப்படுத்தி புற உலகமாகிய அண்டத்தில் உள்ளதை தன் அக உலகமாகிய பிண்டத்தில் கண்டு அடக்கி ஆள்பவரே மெய்ஞானி ஆவார்.

இதையே "தத்துவ தீபிகை" கீழ்க்கண்டவாறு கூறுகிறது.

வாசல்கள்	-	9	அவத்தை	-	5
பொறி	-	10	குணம்	-	3
புலன்	-	10	மிலம்	-	3
ஆதாரம்	-	6	ராகம்	-	8
மண்டலம்	-	3	வியாதி	-	3
நாடி	-	10	வாயு	-	10
தாது	-	7			
கோசம்	-	5			96
கரணம்	-	4	ஆக தொண்ணூற்றாறு ஆகும்		

ஐம்பெரும் பூதங்கள்

1. பிருதிவி (மண்) 2. அப்பு (நீர்) 3. தேயு (நெருப்பு) 4. வாயு (காற்று) 5. வெளி (ஆகாயம்)

1. மண் (பிருதிவி - பொன்னிறம்)

பூசவிரணம் பொருமல் போம் பொன்முதலாம்
ஆசையுள்ள பண்ட மதிலுண்டாம் - நேசமதாய்த்
தின்றிடிற் பாண்டு செழிக்குமிகத் தேமொழியே!
சென்றுலகில் மண்குணத்தைத் தேர்! -(ப.கு.சி.)

மண்ணை அரைத்துப் பற்றிடுவதால், உடலில் உண்டாகும் கட்டியாகிய இரணங்களும் வாதப் பொருமலும் போகும். பொன், வெள்ளி, உலோகங்கள் பிறப்பதற்கு இடமாகும். பொன்னிறம் போன்று தோற்றமளிக்கும். எலும்பு, தோல், தசை, மயிர், நாடி முதலிய உடல் கூற்றினை உடையதாய் நான்கு கோணம் உடைய சக்கரத்தைப் பெற்று, பிரம்மனுக்கு இருப்பிடமாய் இருக்கும்.

"ந" என்ற மூல எழுத்தை பெற்றுள்ளது என்று ஞானநூல் கூறுகிறது. சுமை, பருமன், பெருகியோடக் கூடாத குணம். வளர்ச்சி, மேன்மை யுடையது.

மண்ணில் மண்	-	எலும்பு
மண்ணில் நீர்	-	மாமிசம்
மண்ணில் தீ	-	தோல்
மண்ணில் காற்று	-	நரம்பு
மண்ணில் ஆகாயம்	-	மயிர்

போன்ற புறக்காரணம் பெற்றுள்ளது. தலம் : காஞ்சிபுரம்.

2. நீர் (அப்பு - படிகநிறம்)

காச மறும் தந்தங்கழலாது மேகமுதல்
வீசு மனல் தணியும் வீரியமாம் - வாசமென
உந்திவளர் குன்ம முதிரஞ் சொறியிவைபோம்
இந்து நறுந் தண்ணீருக்கே. (ப.கு.சி.)

நீரினால் சுக்கில விருத்தியுண்டாகும். பற்களுக்கு உறுதியுண்டாகும். கண் காசம், பித்த மேகம், உடல் சூடு, பித்த குன்மம், வெட்டுக் காயங்களில் இருந்து வரும் ரத்தம், சொறி சிறங்கு ஆகியவை போகும்.

மேலும் ரத்தம், கொழுப்பு, வென்னீர், சிறுநீர், மூளை முதலிய உடற்சுற்றினை உடையது. இது மூன்றாம் பிறை வடிவமாக உடற் சக்கரத்தைப் பெற்றுள்ளது. இது மகாவிட்ணுவின் இருப்பிடமாகும். இது "ம" என்ற மூல எழுத்தையுடையது. கைப்பு ருசி உள்ளது.

குளிர்ச்சி, மென்மை, தோய்ந்து போதல், தளர்ந்து பெருகுதல், நனைந்து கசிதல் போன்ற கூறுபாட்டை உடையது மனத்தின்கண் ஆனந்தம் உண்டாக்கும். சிதறிக் கிடப்பதை ஒன்று கூட்டும் என்பனவாம்.

நீரில் நீர்	-	சிறுநீர்
நீரில் மண்	-	உமிழ் நீர்
நீரில் தீ	-	வியர்வை
நீரில் வாயு	-	இரத்தம்
நீரில் ஆகாயம்	-	சுக்கிலம்

போன்ற கூறுபாட்டைப் பெற்று மகாவிட்ணு வாழுமிடம் "ம" மூல எழுத்தாகும். தலம் : திருவானைக்காவல்.

3. நெருப்பு (தேயு - செந்நிறம்)

"கண்டைக்கா னொயுள்வலி காதம்போங் காய்ந்தக்கால்
விண்டே பலபிணியும் விட்டேகும் - விண்டோம்

பொருப்பனைய வட்டமுலைப் பூவையே - நாளும்
நெருப்பினது குணங் காணீ.''

நெருப்பினால் கண்டைக்கால் என்கிற சிறுதொடையில் ஏற்படும் தோயும், உடற்கடுப்பும், வளி வேற்றுமையினால் உண்டாகும் நோய்கள். இதன் நிறம் செந்நிறம் உடையது. இதன் தொழில் உலர்தல்.

இறுமாப்பு, சோம்பல், மைதுனம் (சுக்கிலம் வெளிப்படுதல்) அச்சம், தூக்கம் முதலிய உடல் செயல்பாடு உடையது. முக்கோணம் என்னும் உடற் சக்கிரத்தைப் பெற்று உருத்திரன் இருப்பிடம், ''ச'' என்ற மூல எழுத்தையுடையது. உப்பு ருசியுள்ளது. வெப்பம், வறட்சி உண்டாக்குதல் ஆகிய தன்மையுடையது.

நெருப்பில் நெருப்பு	-	தூக்கம்
நெருப்பில் மண்	-	பசி
நெருப்பில் நீர்	-	தாகம்
நெருப்பில் காற்று	-	ஆலசியம்
நெருப்பில் ஆகாயம்	-	சேர்க்கை

போன்றவை உடையது. தலம் : திருவண்ணாமலை

4. காற்று (வாயு - நீல நிறம்)

''மேகங் கடுப்பை விளைவிக்கும் வீறிநின்ற
தாக மனவிளைப்பைச் சாந்திசெய்யும் - மேகத்தின்
புண்ணொய்க்கும் பொல்லாத பூவையரே - ரூட்சைக்குங்
கண்ணோய்க்கு மாகாது காற்று'' (ப.கு.சி.)

காற்றின் தன்மை கீழ் விழும்போது ஆண் குறியின் நாளத்தில் கடுப்பு உண்டாகும். மேக விரணம், உடற் தளர்ச்சி, கண்ணோய் இவைகளுக்கு ஆகாது. இவை ιϊக்க நீர் வெட்டை, உடல் அனல் சோர்வை நீக்கும் தன்மையுள்ளது.

ஓடல், இருத்தல், நடத்தல், கிடத்தல், நிற்றல் முதலிய உடற்கூற்றை உடையது. அறுகோணம் உடைய உடற் சக்கிரத்தை உடையது. மகேசுவரனுக்கு இருப்பிடமாய் இருந்து ''வ'' என்ற மூல எழுத்தை உடையது என்பதாம். இதன் நிறம் நீல நிறம் உடையது. புளிப்புச் சுவை உடையது என்றும் ஞானநூல் கூறுகிறது. மனவாட்டம், உடல் வாட்டம் உடையது. சாந்தி க்லில் உடையது.

வாயுவில் வாயு	-	ஓடல்
வாயுவில் மண்	-	படுத்தல்
வாயுவில் நீர்	-	நடத்தல்
வாயுவில் காற்று	-	உட்காருதல்
வாயுவில் ஆகாயம்	-	தாண்டல்

போன்ற கூறுகளைப் பெற்று மகேசுவரனுடைய இருப்பிடமாக ''வ'' என்ற அட்சரம் பெற்றது. தலம் : ஸ்ரீ காலாஸ்திரி

5. ஆகாயம் (வெளி - புகை நிறம்)

''உலகுமன மும்பலவா மோடதியு மண்ணுஞ்
சலமுமன லுங்காலுஞ் சாற்ற - அலகில்
அநந்தம் பொருளு மடங்கவுழி நல்கும்
அநந்தந்தனை கண்டறி'' (ப.கு.சி.)

ஆகாயத்தின் தன்மை, எல்லா உயிரினங்களுக்கும் அடிப்படையான உணவுகளும், பலவகைப்பட்ட மருந்துகளும், மண், நீர், நெருப்பு, காற்று முதலியன அளவிலாப் பொருட்களை அடங்கியுள்ளது.

இதன் நிறம், புகை போன்ற நிறமுடையது. ஆசை, பகை, மோகம், மதம், வஞ்சனை முதலிய உடற் தன்மையுடையது. வட்டமான உடற் சக்கிரத்தைப் பெற்றுச் சதாசிவன் இருப்பிடமாகும். இதன் மூல எழுத்து ''ய''வை பெற்றுள்ளது.

மேற்சொல்லப்பட்ட நிறம், உருவ அமைப்பு உடையது ஆகாயமாகும்.

நுட்பம், தெளிவு, தணிவுத் தன்மை உண்டாக்குதல், தோலை உடைய பாகங்களை அடைதல் என்பனவாகும். இது இனிப்புத் தன்மை பெற்றுள்ளது என்பது ஞானநூல் கூறும் உண்மை, சாந்தியாதீதம் கலையப் பெற்றுள்ளது.

ஆகாயத்தில் ஆகாயம்	-	மோகம்
ஆகாயத்தில் பூமி	-	இராகம்
ஆகாயத்தில் நீர்	-	வெறுப்பு
ஆகாயத்தில் காற்று	-	நாணம்
ஆகாயத்தில் நெருப்பு	-	பயம்

போன்ற தன்மையைப் பெற்றது. இந்தப்படி ஐம்பூதங்களுக்கும் அதி தேவதை ஆதி எழுத்தை உச்சரிப்பதே. பஞ்சாட்சர மந்திரமான ''நமசிவாய'' ஆகும். அண்டங்களில் உள்ள ஐந்து பூதங்களும் நம் உடலாகிய பிண்டத்தில் உள்ளது என்பதை ஞானம் பெற்ற ஞானிகள் கண்டறிந்த உண்மையாகும். அது பொருட்டே ஞானிகள் தன்னைத் தான் உணர்ந்தால் இந்த செகத்தை (உலகத்தை) கைக்கொள்ளலாம் என்று கூறுகிறார்கள்.

''அண்டத்தில் உள்ளதே பிண்டத்தில்''

என அறியவும்.

தலம் : சிதம்பரம் (ஆகாய தலம்)

அண்டத்தி லுள்ளதே பிண்டம்
பிண்டத்தி லுள்ளதே அண்டம்

அண்டமும் பிண்டமு மொன்றே
அறிந்துதான் பார்க்கும் போதே. (சட்டை முனி பாடல்)

இந்த ஐம்பெரும் பூத தத்துவமாகிய மண்ணில் பிரமன் சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் ஐந்து குணங்களை உடைய மண் ஆகிய பூமியில் தாவர சங்கம உருவங்களான பிரபஞ்சம் அனைத்தும் உண்டாக்குகிறார்.

அப்பு (நீர்) சப்த ஸ்பரிச ரூப ரசம் என்னும் 4 குணம் தத்துவத்தில் பிரபஞ்சங்கள் அனைத்தும் மகாவிஷ்ணு காத்தல் தொழில் புரிகிறார்.

தேயு (நெருப்பு) தத்துவமாகிய சப்த ஸ்பரிச உருவ என்னும் மூன்று குணங்களை உடைய நெருப்புத் தத்துவத்தால் பிரபஞ்சங்கள் அனைத்தும் அழித்தல் தொழில் புரிகிறார்.

வாயு (காற்று) தத்துவமாகிய சப்த ஸ்பரிசம் என்னும் இரண்டு குணங்களை உடைய வாயுவினால் மகேசுவரன் மாய சம்பந்தப் பிரமையை சீவன்களுக்கு உண்டாக்குகிறார்.

ஆகாயம் (வெளி) தத்துவமாகிய சப்தம் ஒன்றே என்னும்

குணமுள்ள ஆகாச தத்துவத்தால் சீவன்களுக்கு ஞானத்தை அளிக்கிறார் என்பது ஞானிகள் கூற்று ஆகும்.

பொறிகள் 5 + 5 புலன்கள்
(ஐம்பொறிகள் (அ) பஞ்ச ஞானேந்திரங்கள்)

1. மெய்	2. வாய்	3. கண்	4. செவி	5 மூக்கு
1. ஊறு	2. சுவை	3. ஒளி	4. ஓசை	5. நாற்றம்

1. மெய் (உடம்பு தோல் ஊறு)

இது காற்றின் தன்மை. இது உடலுடன் பொருந்தி, குளிர்ச்சி, வெப்பம், மென்மை என்னும் நான்கு வித ஸ்பரிசங்களை உணர்ந்து அறியும் தன்மை உள்ளது.

ஊறு என்பதும் ஸ்பரிசம் என்பதும் ஒன்றே. நாம் தொடும் பொருளோ அல்லது நம்மேல் படும் பொருளோ இன்னதென்று பகுத்து அறியச் செய்வது புலன் ஆகும். தோலின்கண் இருக்கும் நரம்புகளே இப்புலனுக்கு ஆதாரம். உணர்ச்சி எவ்விடம் அதிகமாக உள்ளதோ அங்கு நரம்புகள் அதிகமாக ஓடியிருக்கிறது என்று அறிய வேண்டும். விரல் நுனி, உதடு விளிம்பில் நரம்பு கூந்தல் அதிகமாகவும் கூர்மையான ஸ்பரிசத்துடன் உள்ளது என்று அறியப்படும்.

2. (சுவை) வாய் (அ) நாக்கு

சுவையை அறிவிப்பது நாக்கின் தன்மை. இது நீர் ஊறும் சவ்வினால் மூடப்பட்டுள்ள தசை இலைகளின் கூட்டமாகும். நாக்கின் மேல்பாகம்

நாக்கடு என்னும் சிறு கூர்மையான முனைகளினால் நாக்கின் மேல்பாகம் மூடப்பட்டிருக்கும். அந்த நாக்கடுகில் சுவை நரம்புகள் கூந்தலாகச் சென்று மூடியுள்ளது. மிகப் புளிப்புள்ள பொருளை நாவில் தடவ அந்த நாக்கடுகள் நீண்டு காட்டும். உண்பவைகளை தெரிந்து கொண்டு மற்றவைகளை நீக்கும்.

இனிப்பு, கசப்பு, துவர்ப்பு, புளிப்பு, காரம், உப்பு ஆகிய 6 சுவைகளை அறியும் தன்மையுள்ளது.

3. கண் (ஒளி)

ஒளி அல்லது உருவம் கண் வழியாக, உள்ளத்திற்கு ஆனந்தத்தையும், கவலையையும், வெறுப்பையும் கொடுக்கும். அந்த உருவத்தின் தன்மையும், உருவத்தையும், நிறத்தையும், பருமனையும் போன்ற நிலையைத் தோற்றுவிக்கும்.

கருப்பு, சிகப்பு, பச்சை, நீலம் போன்ற ஒளியையும் நீளம், குட்டை, பருமன் போன்ற உருவங்களையும் பார்த்து அறியும் தன்மை இந்தப் பொறி புலனுக்கு உரியது.

4. செவி (பொறி) ஓசை (புலன்)

ஓசை அல்லது ஒலி என்பது, மனதிற்கு ஆறுதல் அளிக்கவும், மகிழ்ச்சி, அறிவுத் தோற்றத்திற்கும் உதவியாய் உள்ளது. இவ்வோசை (அ) ஒலியைக் கேட்கும் கருவி செவியினிடத்தில் உள்ளது.

அச்செவி - வெளிச்செவி, நடுச்செவி, உட்செவி என்று மூன்று வகைப்படும். இவற்றுள் வெளிச்செவி தலைக்குப் புறமாக சில விளிம்புகள் உள்ளது. சற்று வளைவு உள்ளது. துளையும் தோலினால் மூடப்பட்டும் உள்ளது. செவியில் உள்ள குரும்பி மயிர்கள் புழு, பூச்சி செல்லாமல் தடுக்கும். பழக்கத்தின் காரணமாக வரும் ஒலியை இன்ன ஒலி, இன்ன தூரத்திலிருந்து வருகிறது என்று செவியினால் அறியப்படும்.

5. மூக்கு (நாற்றம்) பொறி (புலன்)

நாற்றம் அல்லது கந்தம், என்பது பொருள்களில் வாசனையைத் தெரிவிக்கும் புலனாகும். இந்த மூக்கினிடையாய் மூச்சுக் காற்று செல்வதற்கான மூக்குத் துளையில் நிலை பெற்றிருக்கும்.

மூக்குத் துவாரத்தில் மூடிக்கொண்டிருக்கும் சளி ஊறும் சவ்விலே நீர் சொறியும். பொருள்களின் வாசனைகளை நுகரும் பொழுது, அது மூளைக்கு எடுத்துச் சென்று மணங்களை முகர்ந்து இன்பம் அடையும்.

சுகந்தம், துர்கந்தம் என்னும் வாசனைகளை நுகர்ந்து அறியும் தன்மை உள்ளது.

ஐம்பொறிகளின் வழியாக மனதின்கண் உண்டாகும் உணர்ச்சியே புலன் எனப்படும். இந்த ஐந்தும் ஒவ்வொன்றும் ஒவ்வொன்றை அறிவதால் பஞ்ச ஞானேந்திரங்கள் என்று பெயர். இதை ஞானி ஒருவர் தன் யோக பலத்தால் அடக்கி விடுகிறார். பஞ்ச ஞானேந்திரங்களை வென்றவரே ஞானியாவார்.

கன்மேந்திரங்கள் (தொழில் உறுப்புக்கள்)

கன்மேந்திரங்கள் 5 வகைப்படும். அவை வாய், கால், கை, குதம், குறி என்பன.

1. வாய்

இது ஆகாயத்தின் தத்துவம். அதன் குணமாக நின்று பேசுவது வாக்கு ஆகும்.

2. கை

பாதம் இது அக்னி அம்சமாக கையால் கொடுப்பது, வாங்குவது, பிடிப்பது, விடுவது போன்றவற்றைச் செய்யும் தொழில் உறுப்புகள்.

3. கால்

இது காற்றின் அம்சமாகையால் நடத்தல், நிற்பது, அமர்வது, எழுந்திருத்தல் போன்ற தொழில் புரிபவை.

4. குதம் (மலவாய்)

இது நீரின் தன்மையுடையது. மலசலங்களை வெளியேற்றும் தன்மையுள்ளது. உடலில் உண்ட உணவை மலமாக வெளியேற்றும் செயல்பாடு உடையது.

5. (கருவாய்) குறி

இது மண்ணின் தன்மையுடையது. இது சிறுநீர் கழிக்கத் தொழில் புரியும். மேலும் ஆண், பெண் இந்திரியங்களை வெளிப்படுத்திப் போக ஆனந்தத்தை கொடுக்கும் தொழில் புரியும்.

இந்த பஞ்ச கன்மேந்திரங்களை ஞானி ஒருவர் த்ன் யோக பலத்தால், தன் வயப்படுத்தி தன் விருப்பம் போல இயங்கச் செய்வார்கள். புற உலகில் உள்ள அனைத்தையும் ஞானி அக உலகில் தன் உடலின்கண் கண்டு அதை தன் யோக பலத்தால் அடக்கி ஆளுகிறார்கள். அதனால் அந்த யோகிகள் புற உலகில் உள்ளதையும் அடக்கி ஆளும் தன்மை பெறுகின்றனர்.

அந்தக்கரணங்கள் (அகக் கருவிகள்)

அந்தக்கரணங்கள் 4 வகைப்படும். அவை முறையே -

1. மனம், 2. அறிவு, 3. நினைவு, 4. அகங்காரம்

மனம்

இது காற்றின் அம்சமாக தன் சொரூப குணமான நினைப்பு, மறப்பு என்னும் சங்கல்ப விகல்பங்களைச் செய்துகொண்டு, காற்றைப் போல் அலைந்து திரியும். இது தொப்புளில் இருந்து புறப்படும் என்பர்.

இதற்குத் தெய்வம் சந்திரன். தொப்புளில் இருந்து புறப்படும் நினைப்பை அறுக்க வேண்டும். நினைவு அறுந்தால், ஆசைகள் தானாக அறுபடும். ஆசையை விட்டவனே யோகியாவான். ஆசையை விட்டவன் வீரமே வீரம், மனம் பற்றும், அந்த பற்றற்ற தன்மை ஞானி நிலை.

அறிவு (புத்தி)

இது நெருப்பின் அம்சம். இதற்குத் தெய்வம் பிரம்மா என்று யோக நூல்கள் கூறுகிறது. இது பொருட்களின் சுய உருவை நிச்சயிக்கும். பொருள் வகைகளையும் நன்மை தீமைகளையும் ஆராய்ந்து, நிச்சயிக்கும் தன்மை அறிவுக்கு உண்டு.

நினைவு

இது நீரின் தன்மையுள்ளது. பொருள்மேல் உள்ள கவனமே நினைப்பாகும். இது பொறிகளுக்குச் சலனத்தை விளைவித்து அதன் வழியே செய்திகளுக்கு இழுத்துச் செல்லும். மனமே நினைவு ஆகும். நினைவுக்கும் தொப்புள் இருப்பிடமாகும். இதற்குத் தெய்வம் மகா விட்ணு ஆகும்.

அகங்காரம்

இது மண்ணின் கூறு ஆகும். இந்த மலசலம் உள்ள ஊன் உடலை "நான்" என்று நினைப்பது அகங்காரம். நான், எனது என்ற தன்மையை உண்டாக்கிப் பாவ புண்ணியங்களைச் செய்து கொண்டிருக்கும். இது இருதயம் இருப்பிடமாகக் கொண்டும் உருத்திரரை அதிதேவதையாகக் கொண்டும் உள்ளது. "நான்" என்ற அகங்காரத் தன்மை விட்டவனே ஞானி. அதனிடம் அதுவாகிய தன்மையுள்ளவர்கள் மெய்ஞ்ஞானி. இந்த நான்கு அந்தக்கரணங்களையும் யோக பலத்தால் தன் வயப்படுத்தி, தன்னில் தன்னை உணர்ந்தவன் யோகியாகிறான்.

"அந்தக்கரண மறிந்து துறப்பார்க்குப்
பந்த மிறந்ததென றுந்திபற
பாழ்வெளி யுள்ளதென் றுந்திபற
– திருவுந்தியார்

அந்தக்கரணத்தை அறிந்து துறந்தவர்களுக்குப் பந்தம் பங்கப்பட்டு அழிந்துவிடும். அப்படிப்பட்ட அந்தக்கரணம் அழிந்தால் பாழ்வெளியாகிய வெட்டவெளி அடையும் என்பது.

மனம் வெட்ட வெளியான் இடமே ஞான நிலையாகும். ஞானிக்கு மனம் வெட்ட வெளியான இடமே ஆகும்.

நம் மனித உடலில் ரத்தம் செல்ல எப்படி நரம்பு மண்டலம் பயன்படுகிறதோ அப்படி வாயுக்கள் (காற்றுகள்) இயங்க, நம் உடலில் நாடிகள் 10 உள்ளன. கண்ணுக்குத் தெரிகின்ற நரம்பு மண்டலத்தைக் காணலாம். ஆனால் நுண்பொருளான நாடிகளைக் கண்ணால் காண முடியாது. மண்ணில் பாதை தெரியும். ஆனால் விண்ணில் பாதை

தெரியுமா? கண்ணுக்குத் தெரியாது. மண்ணில் பூமியில் பாதை போட்டு ரயில் விடுகிறான். ரயில் பாதை தெரிகிறது. ஆனால் விண்ணில் ஏவுகணை களை விடுகிறான். அதன் பாதையை நம்மால் காண முடிவதில்லை.

அது போலவே நம் உடலில் ஓடும் காற்று பாதையான நாடிகளும் நம் கண்ணுக்குத் தெரியாத நுண்பொருள்கள். நாடிகள் யாவும் சூக்கும் பொருள். நம் உடலில் பத்துவித நாடிகள் இயங்குகின்றது. அவைகளின் குணம், தன்மையைப் பார்ப்போம்.

1. இடக்கலை (சந்திரக்கலை)

இடக்கலை என்பது வலக்கால் பெருவிரலில் இருந்து புறப்பட்டு எதிர்மறையாக கத்திரிக்கோல் போலச் சென்று, இடது மூக்குத் துவாரத்தை பற்றி நிற்கும். இதற்குச் சந்திரநாடி என்றும் சக்தி நாடி என்றும் கூறுவர். நம் உடலில் ஓடும் பத்து நாடிகளில் முக்கியமான மூன்று நாடிகளில் இதுவும் ஒன்று என்பதாம்.

2. பிங்கலை (சூரியக்கலை)

இடதுகால் பெருவிரலில் இருந்து புறப்பட்டு எதிர்ப் புறமாக கத்திரிக்கோல் போல் சென்று வலது மூக்குத் துவாரத்தில் வியாபிக்கும் நாடிக்கு பிங்கலை என்றும், சூரியக் கலை (அ) சிவநாடி என்றும் பெயர். பத்து நாடிகளில் முக்கியமாக மூன்று நாடிகளில் இது ஒன்று என்று கூறுவர். இடக்கலை நாடியும் பிங்கலை நாடியும் நெற்றிச் சக்கரம் முதல் மூலாதாரம் வரை வலமாக உட்சென்று இடமாக வெளியேறவும். இடமாக உட்சென்று வலமாக வெளியேறியும் தொழில் புரியும். இப்படிச் செயல்படும் சமயம், இதன் மத்தியில் உள்ள சுழி முனையை கலந்து செல்லும் தன்மை என்ப.

3. சுழிமுனை (சூஷூம்னா நாடி)

இது ஆறு ஆதாரங்களில் மூலாதாரமாக விளங்கும். மலவாய் ஆன குதத் தானத்தில் தொடர்ந்து எல்லா நாடிக்கும் ஆதாரமாக நடுநாடியாய் பிரம்ம கபாலம் (சிரசு வரை) இயங்கிக் கொண்டிருக்கும். முக்கிய மூன்று நாடிகளில் இதுவும் ஒன்று ஆகும். யோகப் பயிற்சிக்கு ஆதாரமான நாடி சுழிமுனை நாடியாகும்.

இடக்கலை, பிங்கலை என்னும் இடது, வலது நாசிகளில் இயங்கும் காற்றை சுழிமுனையிலே இயங்கி, கத்திரிக்கோலின் பாகமாகி வீணா தண்டு (முதுகு எலும்பு) என்னும் வில்லில் அம்பைப் பூட்டி எய்வதுபோல் கபாலத்தை முட்டி குதிரை முகமாய் மூக்களவு வரை பற்றி நிற்கும்.

இவ்விரண்டும், மாறுமிடம் புருவங்களின் நடுவே உள்ள நெற்றிடத்தில். இங்கு தாமரைக் கொடியில் உள்ள நூல்போல் சின்னஞ்சிறு யந்திரம் உண்டு. அதுதான் இடக்கலை+பிங்கலை+சுழிமுனை கூடும் இடம். இதை திரிவேணி சங்கமம் என்றும், அது தான் சத்-சித்-ஆனந்தம், (மெய்யறிவின்) இருப்பிடம் என்று ஞானிகளும், யோகம் பயிலும் யோகியர்களும் கண்டு தெளிந்து பேரானந்தம் அடைகின்றனர். நாடிகளில் முக்கியமாக கருதப்படும் நாடிகள்

- இடக்கலை, பிங்கலை, சுழிமுனை ஆகும் இதைக் கொண்டு தான் ஞானிகளைச் சுழிமுனை கண்ட சூரர்கள் என்று ஆன்றோர்களால் பேசப்படுகிறது. நாடிகளில் நடனமிடும் நடராசன் என்றும், மும்மண்டலம் வென்ற முனிவர்கள் என்றும் ஞானநூல் கூறுகிறது.

4. சிகுவை (உள்நாக்கு நாடி)

சிகுவை நாடி என்பது, மூலாதாரத்தில் தொடங்கி உள்நாக்கில் நின்று நாம் உண்ணும் உணவு, தண்ணீர் போன்றவற்றை விழுங்கச் செய்யும்.

5. புருடன் (வலக்கண் நாடி)

புருடன் நாடி என்பது மூலாதாரத்தில் தொடங்கி வலது கண் வாய் நின்று திறக்கச் செய்யும். பொருட்களைக் காணச் செய்யும்.

6. காந்தாரி (இடக்கண் நாடி)

காந்தாரி என்னும் நாடி மூலாதாரத்தில் தொடங்கி இடது கண் வாய் நின்று திறக்கச் செய்யும். பொருட்களைக் காணச் செய்யும்.

7. அத்தி

அத்தி என்னும் நாடி மூலாதாரத்தில் தொடங்கி, வலது காது வரை வியாபித்திருக்கும். காதுகளில் ஒலி கேட்கச் செய்யும்.

8. அலம்புடை

அலம்புடை என்ற நாடி மூலாதாரத்திலிருந்து புறப்பட்டு இடது காது வரை வியாபித்திருக்கும். செவியில் பற்பல சப்தங்கள் கேட்கச் செய்யும்.

9. சங்கினி

சங்கினி என்னும் நாடி மூலாதாரத்திலிருந்து புறப்பட்டு ஆண், பெண் இனக்குறிவரை வந்து நிற்கும்.

10. குகு

குகு என்னும் நாடி மலவாய் வரை வந்து நிற்கும். மலசலங்களை வெளியேற்றச் செய்யும் இது. அனாகதம் சக்கர முதல் (ஆறு ஆதாரங்களில் முக்கியமான இருதயம் என்னும் அனாகதம்) இலிங்க குதத்தானம் வரை வியாபித்திருக்கும். மர்ம (ஆண் பெண்) தானத்தில் ஆண் பெண் இன்பச் சுரப்புகளான "சுக்கில" சோனிதங்களை அதிகமாய் வெளியே தள்ளச் செய்யும்.

இந்தப்படி நம் உடம்பில் உள்ள 10 நாடிகளையும், 10 வாயுக்களையும் ஞானிகள் தம் யோகத்தின் தன்மையால் தன் வசப்படுத்தித் தன் விருப்பம் போல் இயங்கச் செய்யும் வல்லமை படைத்தவர்கள். உடலில் உள்ள

அவயவங்களைத் தன் யோகபலத்தால் தன் வசப்படுத்தி அடக்கி ஆளும் தன்மையுள்ளவனே ஞானியாவான்.

வாயுக்கள் 10 (தசவாயு)

1. பிராணன் (உயிர்க் காற்று)

"பிறமையா மிதன்பிரிவு பிராணவாயு
பெருமூலா தாரத்தின் கட்டோன்றித்தான்
உறமையா மசவையெனு மந்திரத்தாலே
ஓங்கார முதலெழுத்தை யுண்ணித்தானே:
உண்ணியே மேலெழுந்து பனிரெண்டங்குலம்
உயர்ந்த வெட்டங்கலந்தான் மீளவாங்கி
நன்னிதா லங்குலந்தான் பாழிற்பாயும்
நலமான குணமெல்லாம் பிராணவாயு
பன்னவே நீளவண்ணம் தெய்வம் சந்திரன்
பலப்பலவாம் பொசிப்பெல்லாம் சீர்ணமாகும்
உன்னநா ழிகைமுந்நூற்றருபது சுவாசம்
உயர்ந்த நாளொன்றுக்கு மூச்சைகேளே.
நாளொன்றுக் கிருபத்தோ ராயிரத்தறுநூறு
நலமான சுவாசந்தா னெழுந்திருக்கும்
கோளொன்றிப் பதினாலா யிரத்து நானூறு
குவித்த மூலாதாரத் துள்ளொடுங்கும்
பாளொன்றி யேழாயிரத்திருநூறு சுவாசம்
பாழினிற் பாய்ந்திடுமென்றறிக : பின்னை
எளொன்றி யிதனையே யுட்சாதித்தால்
எப்போதும் பாலரா யிருக்கலாமே!

– யூகிமுனிவர் (யூகிசிந்தாமணி)

பிராணவாயுவானது மூலாதாரம் என்ற இடத்தில் புறப்பட்டு நாசி வழியாக 12" தூரம் வெளியே சென்று திரும்பவும் 8" தூரம் நாசி வழியாக உள் இழுக்கப்படும். பிராணவாயுவில் 4" வீணாக போய்விடும். இந்த 4" தூரம் வீணாக போகாதபடி பந்தனம் செய்வதே வாசி யோகம் எனப்படும். இப்படி உள்வாங்குவதலும் வெளியே விடுதலும் செய்து நாம் உண்ணும் உணவை செரிக்கச் செய்ய உதவும். இதற்கு நீல நிறமான கலர் என்று கூறுவர். நாழிகை ஒன்றுக்கு 360 சுவாசமாக 60 நாழிகைக்கு 21600 சுவாசம் நடைபெறும். இதற்குக் கடவுள் "சந்திரன்" என்றும் ஞானிகள் கூறுகிறார்கள். இதில் 14,000 சுவாசம் உள்இழுப்பதால் 7200 சுவாசம் வெளியேறி வீணாகிவிடும். அந்த

வீணாகும் காற்றின் தன்மை உயிருடன் கலந்து தலை இருப்பிடம், மார்பு, கழுத்து வாழும் ஐம்பொறிகள் இதனைத் தன் வயப்படுத்தும்.

இப்படி வீணாகும் 7200 சுவாசத்தை யோகி யோகப் பயிற்ச்சியினால் பந்தனம் செய்து குறைவான சுவாசம் வெளியே விடுவர் என்பதாம். இது ஆயுளை விரிவடையச் செய்யும்.

2. அபானன் (மலக்காற்று) அபானவாயு

"இருக்கவே யபானத்தி னியக்கங் கேளாய்
ஏற்றசுவா திட்டானத் துற்பத்தியாகும்
மருக்கவே கீழ்நோக்கி மலசலந் தள்ளும்
வாகாக நிற்ந்தானும் பச்சை யாகும்
அருக்கவே யாசனத்தைச் சுருக்கி வைக்கும்
அன்னசா ரத்தையெலாஞ் சேரவைக்கும்
திருக்கவே தேவதையும் வரத ராசனே
திரமான வியானிட சிறப்பைகேளே.

அபானன் என்ற வாயு ஆறாதாரத்தின் இரண்டாவது சக்கரமான சுவாதிட்டானத்தில் உற்பத்தியாகி. சுவாதிட்டானத்திற்கு கீழ் நோக்கி மலம், சலத்தைத் தள்ளும். ஆசனவாயைச் சுருக்க உதவும். நாம் உண்ட உணவை சேரவேண்டிய இடத்தில் சேர்க்கும் தன்மை உள்ளது. இதன் நிறம் பச்சை நிறமாகும். இதற்கு கடவுள் வரதராசன் என்பதாம். யோகிகள் ஒவ்வொரு வாயுவுக்கும் ஒரு கடவுளைக் குறிக்கின்றனர்.

இது நெருப்பின் தன்மை. எருவாய், அடிவயிறு, இடுப்பின் பூட்டு, நீர்ப்பை, ஆண், பெண் குறிகள், தொடை ஆகியன இதன் இடமாகும். விந்து, சிறுநீர், மலம், கருவை வெளியேற்றும்.

3. வியானன் (ஒலிக்காற்று)

சிறப்பான வியானனது தோளினின்று
திகழெவத் தீராயிரம் நரம்பில் சென்று
தருப்பான சரவசரந் தனிலே நின்று
தானீட்டல் முடக்கல் பண்ணிப் பரிசமறியும்
அருப்பான வன்னசாரந் தன்னைத்தான்
ஆங்காங்கே நிறைப்பித்தாகக் கையைக்காக்கும்
பறப்பான தந்துபாலின் வண்ணமாகும்
பாரதனிற் றெய்வந்தானே யமனாமே.

நம் உடலில் 72000 நரம்புகள் உள்ளது. வியானன் என்ற வாயு அந்த 72000 நரம்பில் புகுந்து நம் உடலில் உள்ள அசையும் அசையாப் பொருளை நீட்டவும், முடக்கவும், படுக்கவும் போன்ற தொழில் புரிய உதவுகிறது. மேலும் நாம் உண்ணும் உணவின் சாரத்தை அவ்விடத்தில் தங்க வைத்து நம் உடலைப் பேணிப் பாதுகாக்கும் தன்மை உள்ளது. இது பாலின் வெண்மை நிறத்தை உடையது. இதன் தேவதை இயமன் என்று ஞானிகள் கூறுகிறார்கள்.

இது ஆகாயத்தின் தன்மை, உடல் முழுவதும் பரவியிருக்கும் இதனிருப்பிடம் இதயம்.

4. உதானன் (தொழில் காற்று)

ஏமனா முதானனிட வேற்றங் கேளாய்
எழிலான வுதரவக் கினியெழுப்பிப்
பூமனா மன்னசா ரந்தனைத்தான்
பொருந்தவே சமீபத்து நிறுத்திவைக்கும்
காமனா யெடுப்பித்தும் கலக்கி வைத்தும்
கலக்கியே வருத்துவிக்கும் வளப்பமாகும்
வீமனா மின்னிட வண்ணமாகும்
விளங்கியதோ ரக்கிதான் தெய்வமாமே.

உதானன் என்ற காற்று உதிரத்தில் உள்ள நெருப்பால் உண்டாகும். நாம் உண்ணும் உணவின் சாரத்தில் கூடியிருந்து அதை அங்கங்கு நிறுத்தும், வெளிப்படுத்தியும் கலக்கியும் தொழில் புரிந்துவரும் இதை மின்னல் நிறமுள்ளது என்றும் கூறுவர். மேலும் இதற்கு அதிதேவதை அக்கினி தேவன் என்பர்.

மண்ணின் தன்மை, மார்பை இடமாகக் கொண்டது. தொப்பில், கழுத்து, மூக்கு மூன்று இடங்களில் வாழும்.

நாம் பேசும் பேச்சுக்கு முதலிடமாக உள்ளது. மனதிடம் உடல்திடம், உடல் நிறம், உடல் ஒளி, நினைப்பு ஆகியவை இதன் தொழில்.

5. சமானன்

ஆமென்ற சமானிட வாண்மை கேளாய்
அடிநாபி பாதாங்கஞ் சமன்கொண்டேகி
வாமென்ற வாயுவினை மிஞ்சொட்டாமல்
மடக்கியே சமன்செய்து மருவப்பண்ணும்
தாமென்ற அறுசுவையைத் தண்ணீ ரன்னம்
சமன்செய்து சாரீரமெலாஞ் சாரப்பண்ணும்
வாமென்ற வண்ணமது புட்பராகம்
மகத்தான தெய்வமா தித்தனாமே.

சமானன் என்ற வாயு ஆறாதாரத்தில் மூன்றாவது ஆதாரமான நாபியின்கண் (தொப்புளில்) தோன்றி, தொப்புளிலிருந்து கால் வரையிலும் சமமாக வியாபித்து மற்ற வாயுக்களை மிஞ்ச விடாமல் மடக்கிச் சரியாக இயங்கச் செய்யும். நாம் உண்ணும் அறுசுவை, தண்ணீர், அன்னம் ஆகியவற்றைச் சமமாக பங்கிட்டு உடலில் எல்லா பாகங்களுக்கும் செல்ல உதவும்.

இந்த சமான வாயுவின் நிறம் புட்பராகம் என்றும், இதன் அதிதேவதை சூரிய பகவான் என்றும் யோக நூல்கள் கூறுகின்றன.

இது நீரின் கூறு. உடலின் நடுவான பக்குவாசயமே இடம். வயிறு முழுவதும் வியாபித்து சாரத்தையும் திப்பியையும் வெவ்வேறாக்கி சாரத்தை உடலின் எல்லா பாகங்களுக்கும் அனுப்பும் வேலை.

6. நாகன் (நிரவுக்காற்று)

தெய்வமா நாகனிட சிறப்பைக் கேளாய்
செயலான சகலகலை யாக்கும் வித்து
பவ்யமாய்ப் பாடுவிக்கும் கண் விழிக்கு
பாங்காகவே சிமிழ்க்கும் ரோம மசைக்கும்
பெய்வமாம் பொன்னிட வண்ணமாகும்
பெரிதான தெய்வந்தா னனந்த னாகும்!

நாகன் என்ற வாயு 64 கலைகளை ஒரு மனிதன் கற்க உதவும். பாட்டுக்களைப் பாடவும், கண்களைத் திறக்கவும், இமைக்கவும் செய்யும். மயிர்களைச் சிலிர்க்கச் செய்வதும் நாகன் என்ற வாயுவே. இதன் நிறம் பொன் போன்றிருக்கும். இதன் அதிதேவதை அனந்தன் ஆகும்.

7. கூர்மன் (தும்பக் காற்று)

கொய்வமாங் கூர்மனிட குணத்தைக் கேளாய்
கொடியமனந் தனினின்று நிமைகொட்டும்மே
நிமைகொட்டுங் கொட்டாவி தானுங் கொள்ளும்
நேராக கண்விழிக்கு பலனுண்டாக்கும்
கமைகொட்டுங் கண்விழிக்கு மூடப் பண்ணும்
காட்சியெலாங் காண்பிக்கும் விழிநீரோடும்
இமைகொட்டும் வண்ணமது வெளுப்பதாகும்
மேலான தெய்வந்தான் விண்டுவாகும்."

கூர்மன் என்னும் வாயு மனதின் கண் எழுப்பி கண் இமைத்தல், கொட்டாவி விடல், வாயை மூடல், பலத்தை உண்டு பண்ணுதல், கண் திறக்கவும் மூடவும் செய்யும். புற உலகத்தில் உள்ள பொருள்கள் அனைத்தும் மனிதன் கண்களினால் காணச் செய்யும். கண்களிலிருந்து

நீர்விழச் செய்யும். இது வெளுப்பு நிறங்களை உடையது என்றும் இதன் அதிதேவதை திருமால் என்றும் ஞானிகள் கூறுகிறார்கள்.

8. கிருகரன் (விழிக்காற்று)

"கமை கொட்டுங் கிருகரன்றன் குணத்தை கேளாய்
கசிநாவு நாசிதனிற் கசிவுண் டாமே
கசிவுண்டாங் கடும்பசியிற் கன்மஞ் செல்லும்
கண்ணியே யிருத்தலொடு போதலாகும்
துசிவுண்டாய்த் தும்மலோ டிருமலுண்டாம்
சுயமான வண்ணமது கருப்பதாகும்
தெசிவுண்டாந் தெய்வமது சிவன்றா னாகும்
திரோதாயின் கூறான திறமுமாகும்"

கிருகரன் என்ற பெயரிட்ட வாயு நாவினில் உண்டாகும். நாவின் அசைவையும், மூக்கின் அசைவையும் உண்டாக்கும். மிக்க பசியுண்டாக்கும். ஓனறை நினைக்கச் செய்யும் தன்மையும் கிருகரனுக்குண்டு. தும்மலையும், இருமலையும் உண்டு பண்ணும். இது கருப்பு நிறமுள்ளதாக இருக்கும். இதன் கடவுள் சிவன் என்பதாம்.

9. தேவதத்தன் (கொட்டாவிக் காற்று)

"குசி வுண்டாந் தேவதத்தன் குணத்தை கேளாய்
குசிமலமாய்ச் சோம்பிமுரித் திடுதலாமே
முரித்திடுதல் விழிக்கும்போ தயர்ச்சியாகி
முகுளிதமாய்க் கண்ணையோட் டுலாவுவித்துத்
தரித்திடுதல் சண்டை கொளல் தர்க்கம் பேசல்
சண்டாள கோபத்தை யுண்டுபண்ணல்
குறித்திடுதல் குதங்குய்யத் தானந் தன்னில்
கூர்ந்த தெய்வந் தேவேந்திரன் படிகவண்ணம்"

தேவதத்தன் என்னும் வாயுவாகப்பட்டது வளைவுவடிவமாக கிளம்பி சோம்பலையும், உடல் முறித்தலையும் உண்டாக்கும். தூங்கி எழுந்தபோது அயர்ச்சியை உண்டாக்கும். கண்ணை பல இடங்களில் ஒட்டி உலாவிக்கும். தாங்குதல், சண்டை போடுதல், தர்க்கம் பேசுதல், சண்டாளத் தனமாக கோபம் உண்டாக்குதல் போன்றவை இதன் குணம். பலபொருட்களை குறிக்கச் செய்து குதம், குய்யம் என்னும் இடங்களில் இருக்கும். படிகநிறம் இதன் நிறமாகும். இதற்கு அதிதேவதை தேவேந்திரன் என்பது ஞானிகள் கூற்று ஆகும்.

10. தனஞ்சயன் (இமைக்காற்று)

"தரித்திடுதல் தனஞ்சயனைச் சாற்று கேளாய்
சாங்கமாய் மூக்கினின்றுந் தடிக்குந் தானே
தடித்துமே யுடம்பெல்லாம் வீங்கப் பண்ணும்
தந்திரமாய்க் கன்னத்திற் சமுத்திரம் போல
துடித்துமே சுதந்திரமாய் கோஷமாகித்
திரண்டுமே துஞ்சுகா லந்தனிற்றான்
வடித்துமே வாயுவெல்லாம் போனபின்பு
வளமான தலைவெடிக்கும் மூன்றா நாளில்
அடித்துமே தலைவெடித்தா லப்பாற் போகும்
அதன் வண்ண நீலவண்ண மறிந்துகொள்ளே
அறிந்ததோர் தெய்வமது தன்வந் திரியாம்
ஆகவிந்த வீரைந்து மாதிவாயு".

தனஞ்சயன் என்னும் வாயு மூக்கிலிருந்து புறப்படும். தடித்த தன்மை உள்ளது. உடல் முழுவதும் வீக்கங்களை ஏற்படுத்தும். காதில் பேரிரைச்சல் உண்டாக்கும் தன்மை. மனிதன் இறந்து போய் விட்டால், மற்ற காற்றெல்லாம் வெளியே போனபின், இது அவ்வுடலை வீங்கச் செய்து வெடித்துத்தான் வெளியேறும் தன்மையுடையது. இதன் நிறம் நீலமாகும். இதன் அதிதேவதை தன்வந்திரி என்பதாகும்.

இந்த பத்து வாயுக்களும் நம் உடம்பில் உள்ள பத்து நாடிகளுடன் சேர்ந்து திரிந்து கொண்டிருக்கும். அவை கீழ்க்கண்ட 10 நாடிகளாகும்.

1. இடைகலை 2.பிங்கலை 3. சுழிமுனை 4. சிகுவை 5. புருடன் 6. காந்தாரி 7. அத்தி 8.அலம்புடை 9. சங்கினி 10. குகு ஆகியவைகள் 10 நாடிகளின் பெயர் ஆகும். இவைகளின் செயல்பாட்டையும் இவைகள் நம் உடலில் உள்ள இடங்களையும்பற்றி யோகநூலில் ஞானிகள் விரிவாகக் கூறுகிறார்கள். இதை விஞ்ஞான மருத்துவ உலகம் பெரிதும் ஆச்சரியத்துடன் ஆராய்ந்து ஒத்துக்கொண்டதாகும். மெய்ஞானத்திடம் விஞ்ஞானம் ஒத்துப்போகும்படி ஞானிகள் உண்மையைத் துல்லியமாக எழுதி வைத்துள்ளார்கள்.

பஞ்ச ஆசயங்கள்

(ஐந்து குடல்கள்)

பஞ்சாசயங்கள் ஐந்து வித குடல்களைக் குறிக்கும். அவைகள்: 1. அமர் ஆசயங்கள் (இறைக் குடல்) 2. பகர் ஆசயங்கள் (செரிக் குடல்) 3. சல ஆசயங்கள் (நீர்க் குடல்) 4. மல ஆசயங்கள் (மலக்குடல்) 5. சுக்கில ஆசயங்கள் (வெண்ணீர்க் குடல்)

1. அமர் ஆசயம் (இறைக் குடல்)

அமர் ஆசயங்கள் என்பது நாம் உண்ணும் உணவைப் பெற்று அதை செரிக்கும் வரை தங்க வைக்குமிடம் ஆகும். இது ஆகாயத்தின் கூறு ஆகும்.

2. பகர் ஆசயம் (செரிக் குடல்)

பகர் ஆசயம் என்பது நாம் உண்ணும் உணவை திப்பு வேறு, சாரம் வேறாகப் பிரித்து உடலின் பல பாகங்களுக்கும் பகிர்ந்து அளிக்கும் தன்மை உள்ளது. இது வாயுவின் கூறு ஆகும்.

3. சல ஆசயம் (நீர்க் குடல்)

நாம் உண்ணும் உணவில் உள்ள தண்ணீரையும் உடலில் உள்ள தண்ணீரையும் ஒன்று சேர்ப்பதற்கு சல ஆசயம் என்று பெயர். இது தண்ணீரின் கூறு என்று யோக நூல் கூறுகிறது.

4. மல ஆசயம் (மலக் குடல்)

நாம் உண்ணும் உணவை செரிக்கச் செய்து அதன் சக்திப் பொருளை நீக்கி, ங்கையை (மலத்தை) உடையது மல ஆசயம். இது மண்ணின் கூறு என்பர்.

5. சுக்கில ஆசயம் (வெண்ணீர்க் குடல்)

நாம் உண்ணும் உணவில் ஏற்படும் சுக்கிலத்தை (இந்திரியத்தை) பெறும் குடல் சுக்கில ஆசயம் எனப்படும். இது நெருப்பின் தன்மை ஆகும் என்று ஞானநூல் கூறுகிறது.

யோக நிலையில் செல்லும் யோகியர்களுக்கு மலசுத்தம், குடல் சுத்தம் அவசியம் என்பதற்காகவே இதை யோக நூல்கள் கூறுகிறது. முதலில் உடலில் உள்ள அவயவங்களை யோகிகள், ஒரு கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருகிறார்கள். அது தன் யோக நிலைக்கு இடையூறு செய்யாவண்ணம் இருக்க அவர்கள் இந்த ஐந்து ஆசயங்களையும் சுத்தம் செய்கிறார்கள். நம் உடலில் உள்ள 96 தத்துவங்களில் யோக நிலைக்கு இதுவும் ஓர் முக்கிய அங்கமாக விளங்குகிறது என்பது யோகிகளின் அனுபவம்.

பஞ்ச கோசங்கள் (5 வித உடல்கள்)

நம் தூல உடம்பை ஏழு தாதுக்களால் உண்டானதை அன்னமயக் கோசம் என்றும், பிராணனும் சக்தியும் அடங்கி உள்ளது பிராணமய கோசம் என்றும் கூறுவர். பிராணமய பலத்தினால் உண்டானது மனோகோசம் என்றும் அந்த மனதினால் வித்தை தோன்றுவதை விஞ்ஞான கோசம் என்றும் கூறுவர். இந்த விஞ்ஞனாத்தின் முதிர்ச்சியில் ஆனந்தம் தோன்றும். அது ஆனந்தமய கோசம் என்றும் கூறுகிறார்கள் யோகிகள்.

1. அன்னமய கோசம் (பரு உடல்)

தாய், தந்தையர் உண்ட உணவின்கண் ஏற்பட்ட இந்திரியங்கள் மூலம் ஏற்பட்ட உடம்பு, உணவு, பால் முதலியவைகளை உண்டு கை, கால் வளர்ச்சியாகி உடல் வளர்ச்சி மாறுபாடு கொண்டு வளர்ந்து பிறகு ஏழு தாது மயமாய் தோன்றுவது தூல சரீரம். அது மரணமாகும்போது மண்ணில் ஒடுங்கும். அறிவு வளர்ச்சி இல்லை என்பதாம்.

2. பிராணமய கோசம் (காற்றுடம்பு)

முன் சொல்லப்பட்ட 10 வித வாயுக்களாலும் (தச வாயு) பஞ்ச கர்மேந்திரங்கள் சேர்ந்தது பிராணமய கோசம். காற்றுடம்பிற்கும் பரமாத்மாவிற்கும் சேர்க்கை உண்டாகும். சேர்க்கை உண்டாக பலத்தால் தீரமுள்ளவன் என்றும் ஊனம், குருடன், முடம் என்றும் இது உச்சி முதல் உள்ளங்கால் வரை பரவி இருக்கும். இந்திரியங்கள் பலத்தால் நன்மை, தீமை வழியில் கொண்டு செல்லும் தன்மை உள்ளது.

3. மனோமய கோசம் (மன உடம்பு)

பஞ்ச ஞானேந்திரங்களான மெய், வாய், கண், மூக்கு, செவி என்பன வற்றுடன் மனமாகப்பட்டது சேர்ந்து மனோமய கோசம் எனப்படும்.

ஆன்மா என்னும் சத் - சித் - ஆனந்தத்துடன் சேர்ந்து இருப்பதால் இது ஆன்மாவுடன் சேர்ந்துள்ளது. பிராணமய கோசத்திற்கு வேறாக இருந்து காம, குரோதம், மனம், மாச்சரியம் முதலிய தொழில்களை உண்டாக்கி "நான்"என்னும் தன்மை உள்ளது.

"நான்"என்பதை விடுத்து அது "அவன்"ஆகும் தன்மையே யோகிகளின் யோகப் பயிற்சியாகும். சீவ ஆன்மா, பர ஆன்மாவுடன் ஒன்றிய நிலைக்கு அவர்கள் போக விரும்பி யோகப் பயிற்சி செய்தவற்கு இது தடையாக இருக்கக் கூடாது என்பது யோகியர்களின் எண்ணம்.

4. விஞ்ஞானகோசம் (அறிவு உடல்)

புத்தியும், ஞானேந்திரங்களின் பொறிகளுடன் சேர்ந்தது அறிவு உடம்பு ஆகும். இது அன்னமய கோசம் (பரு உடல்) பிராணமய கோசம் (காற்றுடல்) மனோமய கோசம் (மன உடல்) ஆகிய மூன்றுடன் கூடி அந்தக்கரணங் களாகிய முதிர்ச்சித் தன்மை எப்போது வருகிறதோ அதன் முதிர்ச்சித் தன்மையே விஞ்ஞான கோசம் எனப்படும். நான் புத்திசாலி, நான் பக்தன், நான் செயல் திறன் கொண்டவன், நான் ஆசையை விட்டவன் என்பன் போன்றவை இதன் தன்மை ஆகும்.

5. ஆனந்தமய கோசம் (இன்ப உடல்)

பிராண வாயுவும், சுழுத்தியும் கூடிய உடம்பு ஆனந்தமய கோசமாகும். இந்த ஐந்து உடல் உடன் ஆன்மா சேர்ந்து இருந்தபோதிலும் ஆன்மா வேறானது என்று ஞானிகள் கூறுகின்றனர்.

''பஞ்ச கோசத்தைப் பகுத்தறிந் தோருக்கு
நெஞ்ச மிறந்ததென் றுந்தீபற
நிட்டை யதாகுமென் றுந்தீபற (திருவுந்தியார்)

பஞ்சகோசங்கள் ஆகிய ஐந்து உடலை நீக்கியவன் மனது அழிந்துவிட்டது. (மனமே எண்ணங்களின் பிறப்பிடம், எண்ணங்களே உலக விசயங்களில் ஈடுபட்டுத் துயரங்களைச் சேர்க்கிறது.) அப்படி அழிந்து விட்ட மனம் நிட்டைக்கு உரியதாக ஆகிவிடும் தன்மை வாய்ந்தது.

''கோசமைந்து மொவ்வொன்றாய்ப் பிரித்துவேறாய்க்
குறித்தறியி லன்னியமா யிருக்கையாலே
கோசமைந்து மொவ்வொன்றாய்ப் பிரித்துவேறாய்க்
குறித்தறியில் விசேபமீன்ற தாகுங்
கோசமைந்து மொவ்வொன்றாய்ப் பிரித்துவேறாய்க்
குறித்தறியில் நீயறிவாயது நீயல்ல
கோசமைந்து மொவ்வொன்றாய்ப் பிரித்துவேறாய்க்
குறித்தறியு முயர்சாசி நீயாங்காணே.'' (பிரமானந்த தீபம்)

உடம்பு, அந்தக்ரணங்களாலும், பிராணன், அவத்தை முதலிய தத்துவக் கூட்டங்கள் அனைத்தும் உடைய பஞ்ச கோசங்கள் (ஐந்து உடல்) ஆன்மாவாகிய நாமல்ல என்று உணர்ந்து பஞ்சகோசங்களை வேறு பிரித்து ''ஆன்மா'' தனித்திருக்கும். இதுவே சீவசாட்சி என்று நாம் அறிய வேண்டும். பஞ்சகோசங்களை நீக்கிய இடம் ''ஆன்ம'' நிலையம். அதுவே வெட்ட வெளி. வெறும் சூன்ய இடம்.

எது எல்லாவற்றையும் அறிகிறதோ; எதை வேறு எந்தப் பொருளாலும் அறிய முடியாதோ,அதுவே சாட்சியாய் உள்ளது-''ஆன்மா''.


ஐந்து உடல் ''புளியம்பழமும் ஓடும் சேர்ந்து இருப்பது''. ஆனால் ஞானிகள் தன் யோகப் பயிற்சியால் புளியம்பழம் ஓடு தனித்து இருப்பதுபோல் ''ஆன்மா'' உடலை விட்டுத் தனித்து சாட்சிப் பொருளாய் இருப்பார்கள்.

ஆறு ஆதாரங்கள்

மனித உடலில் ஆறு ஆதாரமான நிலைகள் இருப்பதால் ஞானிகள் துல்லியமாகக் கணித்துக் கூறுகின்றனர். அந்த ஆறு ஆதார நிலைகளும் யோகம் பயிலும் யோகியர்களின் அகக்கண் கொண்டு காண்கிறார்கள். அந்த ஆதாரங்களை தாமரை இதழ் போல் உள்ளதாக ஞானிகள் கூறுகின்றனர். அவைகள் 1.மூலாதாரம் 2. சுவாதிட்டானம் 3. மணிபூரகம் 4.அனாகதம் 5 .விசுத்தி 6. ஆக்கினை என்று பெயர். இவைகள் நம் உடலில் எங்கெங்கு உள்ளது என்பதையும், அதன் வடிவம், அதன் தன்மைகளையும் பற்றிப் பார்ப்போம்.

1.மூலாதாரம்

கீழே கண்ட படத்தில் காட்டியபடி மனித உடலில் மலம் கழிக்கும் வாய்க்கு மேலேயும், குறிக்குக் (உயிர்நிலை) கீழேயும் இடையே உள்ளது மூலாதாரம் எனப்படும். மனிதனின் இரண்டு கால் எலும்புகளின் மேலேயும், வீணா தண்டு என்று அழைக்கப்படும் மனித முதுகு எலும்பின் அடியேயும், இரண்டிற்கும் இடையில் இருப்பது மூலாதாரம் எனப்படும். அது குண்டலி வட்டமாகவும், அந்த வட்டத்திற்கு நடுவே முக்கோண வடிவமாய் அந்த முக்கோணத்திற்கு நடுவே நான்கு இதழ் பூவின் நடுவில் ஓங்கார எழுத்து நிற்கும். அந்த ஓங்கார எழுத்தின் நடுவில் மூலகணபதி வீற்றிருப்பார் என்று ஞானிகள் கூறுகின்றனர்.



படம்

பூமி எல்லாவற்றிற்கும் ஆதாரமாக இருப்பதுபோல் மனித உடலுக்கு ஆதாரமாக இருப்பது மூலாதாரம் ஆகும். உயிர் மூச்சாகிய பிராணன் எனப்படும் மூலாதாரம் மின்னல் போன்ற ஒளியுடன் உள்ளது. இது பாம்பு தன் வாலை தன் வாயால் கவ்வியது போல் சுருண்டு செயல்பாடு இல்லாமல் இருக்கும். இதுவே பிர்ம நாடி என்று கூறுவர். நமக்குள் இந்த மாபெரும் சக்தி

உறங்குவதால்தான் நாம் ஆற்றல் குறைந்தவர்களாக உள்ளோம். மூலாதாரத்தில் உள்ள மாபெரும் சக்தியை தன் யோக பலத்தால் யோகி ஒருவர் எழுப்புவார். அதற்கு குண்டலினி சக்தி என்று பெயர்.

சங்கரர் மூலாதாரத்தை சக்தியாகப் பாவித்துப் பாடுகிறார்.

பூமி தத்துவமாகிய மூலாதாரத்தில் ஐம்பத்தாறும், நீர்த் தத்துவமாகிய மணிபூரகத்தில் ஐம்பத்திரண்டும், நெருப்புத் தத்துவமாகிய சுவாதிட்டானத்தில் அறுபத்திரண்டும், வாயுத் தத்துவமாகிய அனாகதத்தில் ஐம்பத்திநான்கும், ஆகாச தத்துவமாகிய விசுத்தியில் எழுபத்திரண்டும், மனதத்துவமாகிய ஆக்ஞையில் அறுபத்து நான்கும் என்று கிரணங்கள் எவை உண்டோ, அவைகளுக்கு மேலான உன்னுடைய இரண்டு பாதார விந்தங்களும் விளங்குகின்றது என்று மகான் சங்கரர் தன் சௌந்தர்ய லகரியில் குறிப்பிடுகிறார். ஆக தத்துவம் 360.

அண்டத்தில் அக்கினி கலை	108
சூரியக் கலை	116
சந்திரக் கலை	136
மொத்தம்	360

ஆக 360 கலை. அதுவே வருஷத்திலும் 360 நாட்கள் அல்லது கலைகள் 360 ஆகும். அண்டத்தில் உள்ளது தன் பிண்டத்தில் உள்ளது ஆகும். தன் பிண்டத்தில் உள்ள சக்தியையும் சிவனையும் ஒன்று சேர்த்து தன்னுள் காண்பதே ஞானிகள் நிலையாகும்.

தேவியின் தானம் அக்கினி கலைக்கும் சூரிய, சந்திர கலைக்கும் அப்பாற்பட்டு அவைகளையெல்லாம் விழுங்கும் உருவ முடையது. இதில் தேவியின் உருவம் விளங்கும்.

எல்லாவற்றிற்கும் ஆதாரமாக பூமி தத்துவமாக இருப்பதால் அடிப்படையான முதல் சக்கிரம் மூலாதாரம் எனப்படும். அம் மூலாதாரம் இல்லாவிட்டால் நமது உடல் கீழேயாவது விழுந்து விடும் அல்லது மேல்நோக்கியாவது போய்விடும் நிலை உள்ளது. அதனால் நமக்கு முக்கிய ஆதாரம் மூலாதாரம் ஆகும்.

இதன் தன்மைகள் :


1. முக்கோணம்
2. நான்கு இதழ் தாமரை போன்றது
3. மாணிக்க நிறம் (மஞ்சள்)
4. கணபதி
5. குண்டலினி சக்தி
6. ஓங்காரம்
7. பூமி தத்துவம்
8. நறுமணம், துர்நாற்றம், சுவை உணரும் தன்மை

ஆறு ஆதாரங்களுக்கு (கணங்களுக்கு) அதிபதி வினாயகர், கணங்களுக்கு அதிபதி கணபதி, மூலாதாரத்திற்கு அதிபதி மூலகணபதி. இவைகளுக்கு காற்றே உணவு. காலை 6 மணியிலிருந்து 6:40 வரை நடக்கும். 600 மூச்சுகளே இதன் உணவு என்று யோக நூல்கள் கூறுகிறது.

இந்த மூலாதாரத்தில்தான் நம் உடலில் உள்ள மாபெரும் சக்தியாகிய குண்டலினி சக்தி இருக்கிறது.

2. சுவாதிட்டானம்

மூலாதாரத்திற்கு இரண்டு விரற்கடைக்குமேல் இருப்பது சுவாதிட்டானம் என்று பெயர். படத்தில் காட்டியபடி இது நான்கு சதுரங்களையும், அந்த நான்கு சதுரத்தின் ஆறு இதழ்த் தாமரை போன்ற புட்ப வட்டவடிவமாக இருக்கும். அதன் உள்ளே கமலம் போன்ற வடிவம் உள்ளது. இது உயிரினங்களை உற்பத்தி செய்வது. இலிங்க பீடமாகவும் அக்கினி தத்துவமாகவும் உள்ளது.



படம்

இது முதுகுத் தண்டின் அடியுமாகப் பிரகாசித்துக்கொண்டு அதன் நடுவில் 'நகார' எழுத்தும் இருக்கும். இதில் படைக்கும் கடவுளான பிர்மாவும்,

சரசுவதியும அதிதேவதைகளாக வருணிக்கப்படுகிறது. இதற்கும் மூச்சுக்காற்றே உணவு, காலை 6-41 லிருந்து பகல் 1-20 வரை நடைபெறும் 6000 மூச்சுக் காற்றே இதன் உணவு என்று ஞானிகள் தன் அகக்கண் கொண்டு துல்லியமாகக் கூறுகிறார்கள்.

சுவாதிட் டானத்தில் சரசுவதி பிர்மா
சகத்திர மாறு தளத்தினில்
கம்ச வாகனந் தன்னில் ஏறிய

அகிலம் சிருட்டிக்கும் நாதனைக்கண்டு தொழுதேன் என்று யோக நூல்கள் கூறுகிறது. இதன் தன்மைகள் :

1. நாற் சதுரம்
2. ஆறு இதழ்த் தாமரை
3. செம்பொன்னிறம்
4. பிரமன், சரசுவதி
5. 'நகாரம்'
6. அறுசுவை (இனிப்பு, கசப்பு, துவர்ப்பு, உவர்ப்பு, புளிப்பு, காரம் உடையது)

வாயுவில் இருந்து நெருப்புத் தோன்றுகிறது. அந்நெருப்பிற்குகு சுவாதிட்டானம் இருப்பிடமாகும் என்று ஞானிகள் தன் ஞான நூல்களில் கூறுகிறார்கள். ஐம்பெரும் பூத தத்துவத்தில் சுவாதிட்டானம்நெருப்பு தத்துவமாகும். அதனால்தான் இதற்கு 'திரு அண்ணாமலை' ஆதித்தலமாக யோகிகள் கூறுகின்றனர்.

3. மணிபூரகம்

சுவாதிட்டானத்திற்குமேல் 8 விரற்கடைக்குமேல் இருக்கும் நாடி தானத்தில் இருப்பது மணிபூரகம் என்று பெயர். இது 1008 நாடி நரம்புகளைக் கொண்டது. மனித உடலில் உள்ள 72000 நாடிகளுக்கு எல்லாம் ஆணி வேராக உள்ளது.

இதை உந்திக் கமலம் என்றும் கூறுவார்கள். இது கோழி முட்டை போன்ற வடிவம் உள்ளது. பத்துத் தாமரை இதழ்களைக் கொண்ட வடிவம் உள்ளது. இதன் அமைப்புப் பெட்டியில் பாம்பு தன் உடலைச் சுருட்டி சுரணையாக படுத்திருப்பதுபோல் மூச்சிற்குத் தாயான பெரும் பாம்பு அந்த கொப்புழில் படுத்திருக்கும். இது தண்ணீரின் கூற்றாகும். அதனால் மகாவிட்ணுவும், மகாலட்சுமியும் வாசம் புரியும் அதிதேவதையாக ஞானிகள் கூறுகிறார்கள். 'நார' என்றால் தண்ணீர் என்று பெயர். தண்ணீரில் இருப்பதால் மகாவிட்ணுவிற்கு 'நாராயணன்' என்று பெயர் ஏற்பட்டது.

இதைத்தான் நம் யோகிகள், ஞானிகள் பாற்கடலில் ஆதிசேசன்மேல் நாராயணன் பள்ளி கொண்டிருப்பதாக காட்டினார்கள். 72,000 நாடி நரம்புகளைப் பாம்பாக உருவகப் படுத்தி அது விடும் காற்றை ஐந்து

தலைகளுடன் (ஆயிரம் நாக்கு படைத்துள்ள ஆதிசேசன்) காற்றை புசு, புசு என்று விடுவதாக யோகிகள் நமக்குக் காட்டினார்கள்.

பத்துஇதழ்த் தாமலரையின் நடுவில் 'மகார' எழுத்து இருக்கும். அதனுள் விட்ணுவும், திருமகளும் உறைவார்கள். இதன் நிறம் பச்சை நிறம். அதனால்தான் மகாவிட்ணுவை 'பச்சை மா மலைபோல் மேனி' என்று ஆழ்வார்கள் வர்ணிக்கிறார்கள்.

மணிபூரகத்திற்கு பத்து விரற்கடை அளவு மேலே உதய சூரியனைப் போன்று பிரகாசத்துடன் இருக்கும். இதை இதயக்கமலம் என்றும் கூறுவர். அடிபெருத்து நுனி சிறுத்துத் தலைகீழ் தொங்கிக் கொண்டிருக்கும். இது வாயுவின் தத்துவமாகும். இந்த இருதய கமலத்தில் பன்னிரெண்டு தாமரை இதழ்போல் அமைப்பு உள்ளது. இதன்மத்தியில் அனேக சூரிய காந்தியோடு கூடிய பாணலிங்கம் இருக்கிறது. இந்த இதய கமலத்தின் மத்தியில் சோதி வடிவாக உருத்திரனும் பார்வதியும் அதிதேவதையாக குடியிருக்கிறார்கள் என்று ஞானிகள் கூறுகிறார்கள்.

அக்கினி நிறத்தை உடையது. இங்குள்ள இருட்டு தேவி என்னும் அக்கினி மின்னலால் ஒழிந்து விடுகிறது.

'திமிர பரிபந்தி ஸ்புரண்ய சக்தியோ' என்று ஆதிசங்கரர் குறிப்பிடுகிறார். ஆதாரங்களைக் கடந்து வந்த சாதகனுக்கு இங்கு தேவியின் அருள் கிடைக்கிறது. அதனால் இங்கு அதன் அறிகுறியாக ஒரு ஒலி கேட்கிறது. இது நாதம் என்று கூறப்படுகிறது. இந்த வினோத ஒலியைக் கொண்டிருப்பதால் இதற்கு அனாகதம் என்று பெயர். இது இரவு 8 மணியிலிருந்து இரவு 2 மணி வரை செயல்படும். 6000 மூச்சுகள் இதன் உணவு என்று ஞானிகள் கூறுகிறார்கள்.

இது 'சிகார' எழுத்தை மந்திரமாகக் கொண்டு நிற்கும். இதன் தன்மைகள்.

1. முக்கோணம்
2. பன்னிரண்டு இதழ் தாமரை
3. அக்கினி நிறம்
4. உருத்திரன் பார்வதி
5. 'சிகாரம்'
6. பலவித பரிச்ச உணர்வு உள்ளது.
   தென்றல், கடினம், காற்று, நீர், மலை போன்றது.

5. விசுத்தி (நெஞ்சுக்குழி)
(அடி நாக்கின் இடம்)

அனாகத்திற்கு பத்து விரற்கடைக்கு பிரமாணமுள்ள இடத்திற்குமேல் உள்ளது விசுத்தியாகும். இது கண்டத் தானத்திலே வாயுத் தானத்திலே உள்ளது. அறுகோணமாக இருக்கும். அந்த அறுகோணத்தின் நடுவில் பதினாறு தாமரை இதழ் கொண்ட வடிவமாக இருக்கும். அந்த பதினாறு தாமரை இதழ்கொண்ட வடிவத்துள் 'வகார' எழுத்து மூல மந்திரமாக

இருக்கும். அந்த மூல மந்திர 'வகார' எழுத்தின் அதிதேவதைகளாக மகேசுவரனும் மகேசுவரியும் வீற்றிருக்கிறார்கள் என்று ஞானிகள் கூறுகிறார்கள். இது கருமை நிறமாக இருக்கும்.

ஆத்ம தானமான இங்கு சீவன் வலது நாசித் துவாரத்தில் வரும் வாயுவையும் இடது நாசித் துவாரத்தில் வரும் வாயுவையும் நடுநாடி என்னும் சுழிமுனையில் வரும் வாயுவையும் வாயுவை உள்ளே இழுத்தும் வெளியே விடும்படியும் செய்கிறது. இது ஆகாசத்தின் தத்துவமாகும். இது பிரதம தரிசனத்தால் சீவாத்மாவுக்குசுகத்தைத் தருவதால் விசுத்தம் (விசுத்தி) என்று பெயர் பெறும்

இது இரவு 2-40க்கு மேலும் 3-45 வரை நடைபெறும் மூச்சுக்காற்றுகளாகிய 1000 மூச்சுகள் இதன் உணவு ஆகும். சாதகன் வாசியோகம் (பிராணாயமம்)செய்யும் சமயம் இங்கு காதில் பலவித இசை வாத்திய ஒலி கேட்கும். அப்படிக் கேட்கும் பட்சம். யோகி ஒருவர் யோகப் பயிற்சியில் முதுமை அடைந்து விட்டார் என்று அறிந்து கொள்ளலாம். இங்கு சிவனும் சக்தியும் இணைந்து அர்த்தநாரீசுவரராக காட்சியளிக் கிறார்கள். அதாவது சந்திர நாடியில் உள்ள அம்பிகையாகிய உள்ளுக்கு சுவாசிக்கும் சுவாசமும், சூரிய நாடியில் உள்ள சிவனாகிய வெளியேற்றும் சுவாசமும் விசுத்தியாகிய நெஞ்சுக் குழியில் விளங்கும்போது எல்லாவித ஆனந்தங்கள் மங்கிப் போய் சிவ தம்பதிகள் ஆனந்த மயமாக விளங்கும் ஒளியே சீவ ஆத்மாவுக்கு சீவாதாரம் என்று ஞானிகள் கூறுகின்றனர். இதன் தன்மைகள்:

1. பதினாறு தாமரை இதழ்கொண்டது
2. அறுகோணம்
3. மேக நிறமடையது
4. மகேசுவரன், மகேசுவரி
5. 'வகாரம்' மந்திரம்
6. சப்த சுவரங்கள் அதற்கு மேலும் ஓங்கார சப்தம் உடையது.

6. ஆக்கினை (புருவ நடு)

இது விசுத்தி சுக்கிரத்திற்கு பன்னிரெண்டு விரற்கடை பிரமாணமுள்ளது. இரண்டு கண்களின் புருவங்களுக்கு மத்தியில் ஞானக் கண் ஆனது தீபமாக பிரகாசமாய் பிரகாசித்துக் கொண்டிருக்கும். இப் புருவங்களுக்கு இடையே சக்தியையும் சிவனையும் நினைத்துத் தியானிப்பவர்களுக்கு சூரியன், சந்திரன், அக்னி ஆகிய ஒளிகளுக்கு அப்பாற்பட்ட பரஞ்சோதி வடிவான தேவியின் அருளைப் பெறுவார்கள். இறைவன் ஆக்கினையாகப் பிரகாசிக்குமிடம். ஆதலால் இதற்கு ஆக்கினை என்று பெயர். லலாடத்தானம் என்றும் கூறுவர்.

இவ்விடம் சீவ ஆன்மாவும், பரமான்மாவும் (சீவனும், இறைவனும்) சந்திப்பு ஏற்படுமிடம் முச்சந்தி எனவும் பெயர். சீவனுக்கு ஆக்கினை

ஏற்படும். ஆகாயத்தில் மூன்று இதழ்த் தாமரை இதழ் போலிருக்கும். அதில் 'யகார' மந்திரம் மூலமந்திரமாக இருக்கும். இதில் சதாசிவனும் மனோன்மணியும் வீற்றிருப்பார்கள். இது படிக நிறமுடையதாக இருக்கும். வாசி யோகப் பயிற்சியின் முதிர்ச்சியில் இந்த ஆக்கினை (லலாடத் தானம்) பூட்டு திறக்கும். அதற்குமேல் போய் பிரம்ம கபாலத்திற்குள் ஏக வெளியாகவும் ஆகாயமாக இருக்கும். பரப்பிர்மமான சிவபெருமான் வெட்ட வெளி ஆகாயமாக நிவாசித்துக் கொண்டிருக்கிறார் என்பதே. 'சிதம்பரம் இரகசியம்', வெட்டவெளி இரகசியம் என்று கூறுவர்.

இதன் தன்மைகள்:

1. மூன்று இதழ்த் தாமரை
2. விட்டமான வடிவம்
3. படிக நிறமாகும்.
4. சதாசிவன் மனோன்மணி
5. "யகாரம்"
6. திருத்தணி அதிதேவதா தலம்

மண்டலம் மூன்று

உலகத்தில் உள்ளவைகளில் மண்டலம் மூன்று. அவை சூரிய, சந்திர, நெருப்பு மண்டலங்கள் ஆகும். இதையே ஞானிகள் 1. சூரிய மண்டலம் (வலது நாசிக் காற்று), 2. சந்திர மண்டலம் (இடது நாசிக் காற்று), 3. சுழிமுனை (நெருப்பு (அ) அக்கினி, காற்று) என்றும், அண்டங்கள் எப்படி சூரியன், சந்திரன், அக்னி போன்றவற்றால் அறியப்படுகிறதோ அதேபோல் நம் உடலின் கண் சூரிய, சந்திர சுழிமுனையின்கண் நடப்பது என்பதாம் ஞானிகளின் துணிபு.

வினைகள் இரண்டு

1. நல்வினை 2. தீவினை.

1. நல்வினை

விரதங்களை அனுசரித்தும், கோயில், குளங்களை ஏற்படுத்தித் தான தருமம் செய்தல், கொல்லாமை, கள்ளஞ் செய்யாமை, கள்ளுண்ணாமை போன்றவற்றை நீக்கிப் புண்ணியங்கள் செய்தல் என்பன.

2. தீய வினை

பிறர் பொருள் ஆசை, பிறர் மனைவி மீது ஆசை, கொலை, களவு, கள் உண்ணல் போன்ற தீய காரியங்களைச் செய்வது தீவினையாகும்.

1. சூரிய மண்டலம்

இது மனித இதயத்தில் அறுகோணமாய் எட்டுத் தாமரை இதழ் பூப்போல் தோற்றமளிக்கும். இது வாழைப் பூப்போன்று மேல் பருத்து அடி சிறுத்து,

கீழ்நோக்கி உள்ளது. உந்திக்கு 4. விறற்கடை அளவு உள்ளது என்று யோகி முனிவர் கூறுகிறார்.

2. சந்திர மண்டலம்

இது கோடி சந்திரர்களால் ஏற்படும் ஒளியைப் போல் பிரகாசமாக தலை நடுவில் நிலையாய் நிற்கும். இதை "அமுத கலை" என்பர் ஞானிகள். அமுதம் மேல்நோக்கியும், அக்னி கீழ்நோக்கியும், நிற்கும். இதற்கு நடுவில் "பராசக்தி" எழுந்தருளியிருக்கும் என்று யோகி முனிவர் கூறுகிறார்.

3. அக்கினி மண்டலம்

இது மண்ணும் தண்ணீரும் கூடிய இடத்தில் (பிருதிவி+அப்பு) நான்கு சதுரமாய், நடுவே முக்கோணமாய், நான்கு இதழ் தாமரை பூ வடிவில் உள்ளது. இது மூலாதாரத்திற்கு இரண்டு விரற்கடைக்குமேல் உள்ளது. "அண்டத்தில் உள்ளது பிண்டம்".

(ஏடணை) முப்பற்றுகள்

பற்றுக்களை மூன்று விதமாக ஞானிகள் குறிப்பிடுகின்றனர். 1. பொருள் பற்று 2. புதல்வர் பற்று 3. உலகப்பற்று.

1. பொருள் பற்று

பிறர் பொருள் மீது ஆசை வைப்பதும், பொருள் சேர்க்கப் பல பொய் களை சொல்லியும், பலரை ஏமாற்றியும், தீய வழிகளில் சம்பாதித்தல் போன்றவை பொருள்மீது பற்று வைப்பதால் ஆகும். அது கூடாது என்பது ஞானி நிலை.

2. புத்திரப் பற்று

புத்திரன்மேல் பற்று வைத்தல் அவன் பாபச் செயலில் போக முனையும்போது நாம் அவன்மேல் வைத்த பற்றின் காரணமாக, நாமும் பாபச் செயல் புரிய எத்தனிக்க வேண்டும். இது மகன் மீது வைக்கும் பற்று ஆகும். சுற்றத்தார் பற்றினால் தொல்லை வரும்.

3. உலகப் பற்று (அ) மனைவி பற்று

உலகத்தில் உள்ள பொருள் மீது ஆசை கொள்வதும். அது கிடைக்கப் பெறாதபோது தொல்லையும் வருத்தமும் அடைதல் ஆகும். மனைவிமீது பற்று வைத்தலும், அதனால் ஏற்படும் தொல்லை என்பதாம். இது ஞான நிலைக்குச் சிலபடிகள் போய்க் கொண்டிருப்பவர்களுக்கு எழுதப்பட்ட கருத்து, பற்றற்றவன் ஞானி என்பதற்காக எழுதப்பட்ட கருத்து. எந்த ஞானியும், மகான்களும் உன் மனைவி மக்களை விட்டுவிட்டு ஓடிவிடக் கூறவில்லை. அவர்கள் அதை விரும்பவும் இல்லை. "இல்லறமே நல்லறம்".

உன் கர்மாவுக்கு வாய்த்த பெண்டுபிள்ளைகளை உலக தருமத்தில் வழுவாதபடி வாழக் கூறுகிறார்கள். இதைப் படித்துவிட்டு யாரும் மனைவியையும், மகனையும் விட்டுவிட்டுச் செல்வது தவறு.

குணங்கள் மூன்று + மலங்கள் மூன்று

மனிதத் தன்மையில் மூன்றுவித பேத குணம் உள்ளது. 1. ராசஸம் 2. தாமசம் 3. சாத்வீகம் என்பன. இதையே 1. மனவெழுச்சி 2. மயக்கம் 3. அமைதி என்றும் மும்மலங்கள் 1. ஆணவம் 2. மாயை 3. காமியம்

1. ராசசம் (மன எழுச்சி) குணம்

ஆணவம் (மலம்)

இது ஆன்மாவின் அறிவை மறைத்து, நானே கர்த்தா நானே பிரபு, என்ற ஆணவம் கொண்டுள்ளது. அறிவற்ற ஆணவத்தால் ஒருவனுக்கு தான், தன் பொருள், தன் மனைவி, தன் பிள்ளை, தன் நண்பன் என்று ஆசையை உண்டாக்கி எல்லாம் என்னுடையது என்று ஆணவம் கொள்வது.

2. தாமசம் (மயக்கம்) குணம்

மாயை (மலம்)

இது பிறர் பொருளை தனதென்று நினைத்து இடையூறு ஏற்படுத்துவதும் அதனால் துன்பத்தை வருவித்துக் கொள்ளுதலும் ஆகும். தூக்கம், சோம்பல், அலட்சியம், திருட்டுத்தன்மை, கள்ளுண்ணல், மோகம், கோபம் முதலிய குணங்களை உடையவன் ஆக்கும்.

3. சாத்வீகம் (அமைதி) குணம்

காமியம் மலம்

இது முந்தைய ஆணவம், மாயை இரண்டு குணங்களிலிருந்து வேறுபாடு உடைய குணம் உள்ளது. இது உண்மை, பொய் கூறாமை, கொல்லாமை, களவின்மை, கோபமின்மை, ஆடம்பரமின்மை போன்றவையும், சீவகாருண்யம், விரதம், அடக்கம், ஆனந்தம் முதலிய குணங்களையும் உடையது.

ஞானநிலை பெறவேண்டிய யோகியர்களுக்கு நான் என்ற ஆணவத் தன்மை, கள்ளுண்ணாமை, களவு தவிர்த்தல், கொல்லாமை, வாய்மை, கோபமின்மை இவைகள் மிக அவசியம். இவைகள் தன் யோகநிலைக்கு ஏற்ற பாதையாகவும், அதே நேரம் யோகம் இடஞ்சல் இல்லாமல் பயிற்சி செய்யவும் உகந்தது என்பதை யோக நூல் கூறுகிறது. மும்மலத்தை அறுத்தவனே பெரும் ஞானி. மும்மலமும் அறுத்தவன் ஞான மன்னன் எனப்படுவான்.

எண் விவகாரங்கள்

1.காமம், 2. குரோதம், 3. கருமித்தன்மை (உலோபம்) 4. மோகம், 5. மதம் (வெறி), 6. மாச்சரியம் (பொறாமை), 7. இடும்பை, 8. அகங்காரம் என்பன எண் விவகாரங்கள்.

இந்த எண் விவகாரங்களை ஞான நிலைப் பயிற்சிக்கு தடையென்பதால் இதை அறுத்தவர் யோகப் பயிற்சிக்கு உரிய தன்மை பெற்றவர் ஆவார்கள் என்பதாம்.

1. காமம்	=	ஆசை
2. குரோதம்	=	பிணக்கு
3. உலோபம்	=	பிடிப்பாடு (அ) கருமி
4. மோகம்	=	பிரியம் (அ) மயக்கம்
5. மதம்	=	கர்வம் (அ) வெறி
6. மாற்சரியம்	=	உட்பகை, குரோதம், பொறாமை
7. இடும்பை	=	"நான்" என்ற அகங்காரம்
8. அகங்காரம்	=	பிறர் குற்றத்தைக் கூறி தன் குற்றம் மறைத்தல்

பஞ்சவத்தை (5 அவத்தை)

1. நினைவு (சாக்கிரம் 2. கனவு (சொப்பனம்) 3. உறக்கம் (சுழுத்தி) 4. பேருறக்கம் (துரியம்) 5. உயிர்ப்படக்கம் (துரிய தீதம் நிட்டை)

1. நினைவு (சாக்கிரம்)

நினைவு என்பது மூக்கிற்கும் புருவமத்திக்கும் நடு சக்கரத்தில் இரண்டங்குலம் பிரமாணத்தில் இருப்பது ஞானேந்திரங்களாகிய மெய், கண், வாய், மூக்கு, செவி ஆகிய ஐந்தும், கர்மேந்திரங்களாகிய வாய், கால், கை, எழுவாய், கருவாய் ஆகிய ஐந்தும், அந்தக்கரங்களாகிய மனம், புத்தி, சித்தம், அகங்காரம் ஆகிய நான்கும், தன் மாத்திரைகளாகிய சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் ஆகிய ஐந்தும், வாயுக்கள் பத்தாகிய பிராணன், அபானன், வியானன், உதானன், சமானன், நாகன், கூர்மன், கிருகன், தேவதத்தன், தனஞ்செயன் ஆகிய பத்தும், வசனாதிகள் 5ம்-வசனம், கமனம், தானம், விசர்னம், ஆனந்தம் எல்லாம் ஒன்று கூடி உயிரானது. புருவ நடுவில் நிற்கும் நிலையானது நினைவு நிலை அல்லது விழிப்பு நிலை என்கிறார்கள் யோகிகள்.

தத்துவங்கள் 35ம் மந்திரி சேனாதிபதிகளாகக் கொண்டு ஆன்மாவாகப் பட்டது. புருவமத்தியில் இருந்துகொண்டு உலக விவகாரங்களைச் செயல்பட்டு வருகிறது. இது விஞ்ஞானத்துடன் பொருந்திய ஆன்மா. இது சுத்த ஆன்மா இல்லை.

நினைவு நிலை நம் மூளைக்குக் கட்டுப்பட்ட நிலை. இதில் கனவு மில்லை. தூக்கமுமில்லாத நிலை நினைவு நிலை. நிகழ் காலத்தில் மட்டும் இருக்கும்

நிலை. கடந்த காலம், எதிர்காலம், அற்ற நிலை நினைவு நிலை, இன்பம் துன்பம் அறிந்த நிலை, விழிப்பு நிலை.

கண்டன ஐந்தும் கலந்த வோரைந்தும்
உண்டன நான்கும் ஓங்கியது உணர்ந்தபின்
பண்டை பினாதி பரந்து சாக்கிரம்
அண்டமும் தானாய் அமர்ந்தது காணே. (திருமந்திரம்)

2. கனவு (சொப்பனம்)

ஞானேந்திரங்கள் ஐந்தும், கர்மேந்திரங்கள் ஐந்தும் புருவ நடுவில் நின்றுவிட மற்ற 25 தத்துவங்களுடன் ஆன்மா கழுத்தில் நின்று, நினைவு வாசனை ஆகிய கனவில் நிலையில்லாத அனுபவத்தில் நிற்கிறது.

கனவில் ஒருவன் தான் தேர்தலில் நின்று மந்திரி ஆகி பல செல்வங்களையும், 5 பிள்ளைகளையும் பெற்று அவர்களுக்குண்டான செல்வத்தையும் சேர்த்துவிட்டான். பிறகு மறு தேர்தலில் தோல்வியடைந்து எல்லாச் செல்வங்களையும் பறிகொடுத்து விட்டான். மேலும் பிள்ளைகள் ஐவரும் தேர்தல் கலாட்டாவில் இறந்துபோய் விட்டார்கள்.

ஆனால் தூங்கியவனை தன் மனைவி வந்து எழுப்பி நம் ஒரே செல்வன் காரில் அடிப்பட்டு இறந்து விட்டான் என்று கூறி அழுகிறாள். அரசியல்வாதியோ தன் மனைவியைப் பார்த்துச் சிரிக்கிறான். அதற்கு மனைவி நம் ஒரே செல்வன் இறந்து விட்டான் என்கிறேன். நீர் அதற்கு வருத்தப்படாமல் சிரிக்கக் காரணம் என்ன? என்று கேட்கிறாள்.

அரசியல்வாதி கூறுகிறான்: அடப் பைத்தியக்காரி! கனவில் நம் ஐந்து பிள்ளைகளும் நான் சம்பாதித்த செல்வங்களும் போய் விட்டது. அதனால் கனவில் இறந்த ஐந்து பிள்ளைக்கு அழுவதா? நினைவில் இப்போது இறந்த ஒரு பிள்ளைக்கு அழுவதா என்று கூறினான்.

நினைவு நிலைக்கும் கனவு நிலைக்கும் அப்பாற்பட்ட நிலை ஒன்று உள்ளது என்று ஞானிகள் உள்முகமாக நோக்கி ஆராய்ந்து கண்டனர். அந்த நிலையே பேரின்ப நிலை என்று ஞானிகள் கூறுகின்றனர்.

கனவின் நிலை எப்படி உண்மை இல்லையோ அது மாதிரி இந்த பிரபஞ்ச வாழ்க்கையும் நிலையில்லாதது என்று ஞானத்தை அடைந்தால் அவ்வுண்மை நன்றாகப் புலப்படும்.

ஐயைந்து மத்திமை யானது சாக்கிரங்
கைகண்ட பன்னான்கிற் கண்டங் கனாவென்பர்
பொய்கண்டிலாத புருடனிதயஞ் சுழுனை
மெய்கண்டத வனுந்தியாகுந் துரியமே.

(பேருறக்கம் துரியம்) (திருமந்திரம்)

3. உறக்கம் (சுழுத்தி)

ஆன்மா (உயிர்) நெஞ்சில் இருந்துகொண்டு தன்மாத்திரைகளாகிய சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்ற ஐந்தும், அந்தக்கரணத்தில் சித்தத்தை தவிர மற்ற மூன்றாகிய மனம், புத்தி, அகங்காரம், பிராண வாயுவைத் தவிர மற்ற ஒன்பது வாயுக்களும் வாசனாதிகள் ஐந்து ஆக இருபத்திரண்டு தத்துவங்களும் கழுத்தில் (கண்டத்தில்) தங்கிவிட ஆன்மாவானது சித்தம், பிராண வாயு, உள்ளம் ஆகிய மூன்று தத்துவங்களுடன் நெஞ்சிலே நின்ற நிலை சுழுத்தி எனப்படும்.

"நான்", "எனது" என்ற தன்மை மறந்து நாம் ஆணா, பெண்ணா என்று மறந்த நிலை உறக்க நிலை. எண்ணங்கள் இல்லாத மனம் புலன்கள் விட்டு ஓய்வு எடுக்கும் நிலை சுழுத்தியாகும். ஆன்மா சலனமின்றித் தன்னை மறந்த சுகத்தில் இருந்தாலும் அஞ்ஞானமாகிய அந்தகாரத்தால் மூடப்பட்டிருக் கிறது. இந்த நிலைக்கு "கேவல நிலை" என்று பெயர்.

சுழுத்தி நனவென்றுந் தோன்றாமை தோன்றல்
சுழுத்தி கனவதனுண்மை சுழுத்தியிற்
சுழுத்தி யறிவறிவாலே யறிகை
சுழுத்தித் துரியமாஞ் சொல்லறும் பாழே! (திருமூலர்)

உறக்கத்திற்கும் ஞானநிட்டைக்கும் உள்ள வித்தியாசம் கொஞ்சமே. நிட்டையில் ஆன்மாவாகிய உயிர் தன் யோக நிட்டையில் தூலதேகம் முதல், இந்திரியங்கள், அந்தக்கரணங்கள், பிராணவாயு இரண்டும் யாவும் தனக்கு அன்னியம் என்று நீக்கி அதற்குமேல் உள்ள அஞ்ஞான அந்தகாரமாகிய ஆவரணத்தையும் நீக்கித் தன்னை அறிந்து, தன்னில் தானாக நிற்கிறது.

ஆனால் உறக்கத்தில், ஆன்மா அஞ்ஞானத்தால் இழுக்கப்பட்டு தூலதேகம் முதல் பிராண வாயு வரையில் உள்ள ஒவ்வொன்றும் மனதிலிருந்து நழுவி விட, மனமும் ஒடுங்க ஆன்மா அந்தகாரமாகிய அஞ்ஞான இருளில் மூழ்கிவிடுகிறது, நிட்டையிலும், உறக்கத்திலும் ஆன்மா தனித்து இருந்தபோதிலும் நிட்டையில் அஞ்ஞானமில்லை. ஆனால் உறக்கத்தில் அஞ்ஞானம் மூடிக்கொண்டிருக்கிறது. இதையே "கேவல நிலை" என்பர் ஞானிகள்.

உறக்கம்

ஆன மனமும் அறிகின்ற பக்தியும்
ஊனை யிழந்து நின்றுள்ளே உயிர்பெய்தி
தான மிழந்து தயங்கியவாறு போல்
ஊனை யிழந்து சுழுத்திய தாமே.

அந்தகரணங்களாகிய மனம், புத்தி, சித்தம். அகங்காரமும் சுழுத்தியோடு சீவான்மாவைக் கலந்து சுவாச இதயத்தில் நின்று, கண்டவை, கேட்டவை எதுவும் பிறருக்குச் சொல்லப் புலப்படாத நித்திரை நிலையே சுழுத்தியாகும்.

4. பேருறக்கம் (துரியம்)

ஜீவான்மா சித்தம், பிராண வாயு இந்த இரண்டு தத்துவங்களுடன் நாபி (உந்தியில்) நின்ற நிலை, தினம் நமக்கு ஏற்படும் நிலை இல்லை. எப்போதோ ஒருமுறை ஏற்படும் நிலை.

ஒருவர் ஒரு சமயம் அபாயகரமாக காயம் ஏற்பட்டாலும் சில வியாதிகளின் தன்மையாலும் மூர்ச்சையடைகிறார்கள். அப்போது அவர்களுக்குச் சுரணை இல்லை. உறக்கத்தில் உள்ளவனைக் கூப்பிட்டால் உடனே விழித்துக் கொள்கிறான். ஆனால் மூர்ச்சையுள்ளவனுக்கு அப்படி உடனே உணர்ச்சி வருவதில்லை. அவனை துன்பத்தின் மேல்தான் விழிப்பு நிலை (உணர்ச்சிநிலை)க்கு கொண்டு வர முடியும். இந்த நிலையே சீவான்மா துரியாவைத்தை நிலையாகும்.

5. உயிர்ப்படக்கம் (துரியா தீதம்)

பஞ்சேந்திரங்கள் ஐந்தும், கர்மேந்திரங்கள் ஐந்தும் அந்தக் கரணங்கள் நான்கும் ஆக பதினான்கு தத்துவங்களும் பற்று அற்று ஆன்மாவாகியது. குதத்திற்கும் குய்யத்திற்கும் மத்தியில் உள்ள மூலாதாரத்தில் பொருந்தி இருக்கும் நிலை. துரியா தீதம் என்றால் எட்டாத தூரத்தில் உள்ள நிலையென்பதே பொருள். இந்த நிலைக்குச் சென்ற ஆன்மா மறுபடியும் திரும்பி சாக்கிரத்திற்கு வருவது இல்லை என்ற நிலை, துரியா தீதம் எனப்படும்.

மூன்று சரீரங்கள்

1. பருவுடல் 2. நுண்ணுடல், 3. காரண உடல்

1. பருவுடல்

ஐம்பெரும் பூதங்களாகிய நீர், நிலம், நெருப்பு, காற்று, ஆகாயம் (பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம்) போன்றவைகளால் ஆன உடல்.

2. நுண்ணுடல் (சூச்சும தேகம்)

ஞானேந்திரங்களாகிய மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐந்தும், கர்மேந்திரங்கள் ஆகிய வாய், கால், கை, எருவாய், கருவாய், ஆகிய ஐந்தும் அந்தக்கரணமாகிய மனம், புத்தி, சித்தம், அகங்காரம் ஆகிய நான்கும் உயிர் வளியாகிய பிராண வாயு ஒன்றும், ஆக பதினைந்து தத்துவங்கள் சேர்ந்தது நுண்ணுடல்.

3. காரண உடல்

மேற்சொன்ன இரண்டு உடல்களில் இருந்தும் பற்றற்ற உடல் காரண உடல் ஆகும்.

குண்டலி

நம் மனித உடலில் 96 தத்துவங்களில் நாடிகள் 72,000 என்று யோகநூல் கூறுகிறது. இதை மருத்துவ நூல்களும் ஆமோதிக்கின்றன. இந்த 72,000 நாடிகளில் முக்கியமானது, 24 (இருபத்து நான்கு நாடிகள்) ஆகும். இந்த இருபத்து நான்கு நாடிகளும் எப்போதும் செயல்பாடு இல்லாமல் உறங்கும் தன்மையுள்ளது. இவைகள் பாம்பைப் போல் $3^1/_2$ சுற்றாக சுற்றிக் கொண்டு அமைதியாக உள்ளது. இது இரண்டாவது ஆதாரமாகிய சுவாதிட்டானத்திற்கு கீழேயும் உள்ளது. இது மத்திய தானத்தில் மேலே பத்து நாடிகளாகவும் கீழே பத்து நாடிகளாகவும் இரண்டு பக்கங்களிலும் பக்கத்திற்கு இரண்டு நாடிகளாக உள்ளது. ஆக 24 நாடிகள் உள்ளது. இதுவே குண்டலி சக்தி எனப்படும். இது சக்தியின் தன்மையாகும். இதை வேதங்கள் மந்திரங்களுக்கு உற்பத்தித்தானமாகவும், சிவனின் கிரியா சக்தியாகவும் உள்ளது என்று கூறுகின்றன.

எப்படி சக்தியில்லையேல் சிவனில்லை என்று ஆகுமோ அது போல் குண்டலினி சக்தி நம் உடலில் இல்லையேல் சீவன் நம் உடலில் இல்லை என்று பொருள். சீவன் சிவனுடைய அம்சம். குண்டலி சக்தியினுடைய அம்சம், பழைய புராணங்களிலும் வேதங்களிலும் "குண்டலினி" என்பதற்கு வல்லப சக்தி (அ) சிவனின் கிரியா சக்தி என்று கூறுகிறது. மேலும் இது பாம்பு, மான், மயில்போல் விரியும் தன்மையும் மான் போலும் குதித்து வேகமாக மேலேறும் தன்மையும் உடையது என்று ஞானநூல்கள் கூறுகிறது.

நமது உடலின் ஆறு ஆதாரங்களில் (பக்கம் 85 படம் பார்க்க) முதல் ஆதாரமாகிய மூலாதாரத்தில் ஒரு பாம்பு தனது வாலைத் தன் வாயால் கவ்விப்பிடித்து இருப்பதுபோல் $3^1/_2$ சுற்றாக சுற்றிக்கொண்டு இருப்பது குண்டலி சக்தி. குண்டலியே நம் உடலில் சக்தி அம்சமாகும்.

இப்படிப்பட்ட சக்தியை குண்டலினி என்கிறோம். அதனால் தான் சக்தி பீடங்களில் முக்கிய பீடமும் தவசிரேட்டி பரசுராமரை ஈன்ற பதிவிரதை ரேணுகா தேவி அமர்ந்துள்ள போளூர், தாலுக்கா படைவீடு என்னும் தலம் ஆதியில் "குண்டலிபுரம்" என்று வழங்கப்பட்டது. இன்றும் அது பல அரசாங்க பதிவேட்டில் "குண்டலிமாபுரம்" என்று உள்ளது.

குண்டலினி

குண்டலியானது கந்தத்தானம் என்று சொல்லப்பட்ட மனிதர்களின் தேகமத்தியில் மூலாதாரத்தில் உள்ளது. (கந்தத் தானம் என்பது குதத்திற்கு இரண்டு அங்குலம் மேலேயும் தேக மத்தியில் 1 அங்குலத்திலிருந்து 9 அங்குலம் வரை கந்தத் தானமாகும்.)

மேற்சொன்ன முக்கிய நாடிகளாகிய இருபத்து நான்கிலும் பத்து நாடிகள் (தச நாடிகள்) முக்கியமாகும். அந்த பத்து நாடிகளிலும் அதிமுக்கியம் வாய்ந்தது மூன்று நாடிகள் அவை நம் உடம்பில் உள்ள முதுகுத் தண்டின்

இடது பக்கமாக உள்ளதை இடக்கலை என்றும் அல்லது சந்திரக்கலை என்றும் கூறுவர். வலது பக்கமுள்ள நாடிக்கு பிங்கலை (அ) சூரிய நாடி என்றும் கூறுவர். முதுகுத் தண்டின் மத்திய பாகம் உள்ள நாடி சுழிமுனை (அ) அக்கினிகலை என்றும் கூறுவர். இவ்வக்கினி கலையாகிய சுழிமுனை நம் முதுகு எலும்புக்கூடு ஆகிய 33 கூட்டுக்குள் வீணா தண்டத்தில் வெள்ளை நரம்பாக தாமரைக்கொடியில் உள்ள சிறிய நூலைப்போல் சிறுதுவாரம் கண்ணுக்குப் புலப்படாத அளவு உள்ளதாக ஞானிகள் கூறுகிறார்கள்.

நாம் சுவாசிக்கும் மூச்சானது கண்டத்தில் நிறுத்திய பிறகு தொண்டைக்குப் பின்னால் உள்ள உணவுக் குழாய் வழியாக இரைப்பையை அடையும்.

22 அடி நீளமுள்ள இரைப்பையை அடைந்த மூச்சு ஆனது ஆசனத்தின் வழியாக வெளியே போகும் தன்மை உடையது. நாம் அந்த மூச்சுக் காற்றை ஆசன வழியாக வெளியே போக விடாமல் இரண்டு பிட்டங்களையும் இறுக்கிப்பிடிக்க வேண்டும். தற்போது மூச்சுக்காற்றானது ஆசனவழியாக வெளியே போக முடியாமல் முதுகுத் தண்டில் உள்ள வெள்ளை நரம்பு (சுழி முனையில்) உள்ள சிறிய தாமரைக் கொடியில் உள்ள சிறு நூலைப்போன்ற துவாரத்தின் வழியாக மேலேறி சுற்றித்திரியும்.

இதைத்தான் வாசியை சுழிமுனையில் கும்பகம் செய்வது என்றாகும். இப்படி கும்பகம் செய்து கும்பித்த மூச்சுக்காற்றை, பிராணாயாமம் என்ற வாசியோகப் பயிற்சியால், யோகியர்கள் மூலாதாரத்தில் உள்ள குண்டலினியை எழுப்பி மேல் நோக்கிக் கொண்டுசெல்ல பலகாலம் யோக அப்பியாசம் செய்வார்கள். யோகப் பயிற்சி செய்பவர்களுக்கு மட்டும் முதுகு எலும்பிலுள்ள வெள்ளை நரம்பிலுள்ள சிறிய துவாரம் வழியாக சுவாசம் மேலேறும் தன்மை பெறுவர். இத்தன்மையடைய அந்த யோகி பலகாலம் தக்க குருமூலம் பயில வேண்டும்.

ஏட்டில் எழுதியதைக் கொண்டு சாதகன் ஒருவன் வாசி யோகப் பயிற்சியைக் கைக்கொள்ள முயன்றால் தொல்லைகள் பல அனுபவிக்க நேரிடும். ஏன், சில சமயம் உயிருக்கே ஆபத்து வந்துவிடும். அதனால் யோகத்தில் உயர்வு பெற்ற தக்க குரு மூலம் பயில்வது நல்லது என்று ஞானிகள் எச்சரிக்கை விடுகின்றனர்.

இப்படி பல காலம் பல சோதனைகளுக்கு மத்தியில் யோகி ஒருவர் வாசியோகம் அப்பியாசம் செய்து வந்தால் அவர்களுக்கு ஒரு காலத்தில் குண்டலினி சக்தி எழுந்திருப்பது நிச்சயம். இது எப்போது எழுந்திருக்கும் என்று கூற முடியாது. யோக பயிற்சிக்கும் யோகி அதைப்பற்றி நினையாமல் வாசி யோகப் பயிற்சியைத் தொடர்ந்து செய்து வரவேண்டும். அப்படி தொடர்ந்து வாசி அப்பியாசம் செய்து வருங்கால், அவர்களுக்கு உடலிலும், உள்ளத்திலும், அமைதியும் ஆனந்தமும் ஏற்படும். குரலிலும் மாற்றம் ஏற்பட்டு, இனிமையாகவும், தெளிவாகவும் பேசும் நிலை ஏற்படும். மனம் தெளிந்த நீர் போல் தெளிந்திருக்கும். உடல் அழகு மயமாகக் காட்சி அளிக்கும். இது குண்டலினி சக்தி எழுப்பும் முனைப்பு என்று யோகி உணர வேண்டும்.

மனித உடலில், எலும்பு, நரம்பு, ரத்தம், மாமிசம், மஜ்ஜை, மூளை, சுக்கிலம் என்னும் தாதுக்கள் ஏழு ஆகும். இந்த ஏழு தாதுக்களும் சேர்ந்ததே (விந்து) இந்திரியம் ஆகும். இதுவே மானிட உற்பத்திக்கு வித்தும் ஆகும்.

இந்த விந்தை வெளியே விடாமல் கட்டி உள்முகமாக மனதை சுத்தப்படுத்திக் கொண்டால், இதுவே ஓஜஸ் சக்தியாக மாறும். ஓஜஸ் என்பது உறுதி படைத்த உள்ளத்தை சித்சக்தியாக்கி, அது உடலில் வலிவு படைக்கச் செய்யும். அந்த உடல் சக்தியை தெளிவுரும்போது அதை ஓஜஸ் என்கிறோம். இந்த ஓஜஸ் சக்தியைக்கொண்டு குண்டலினியை எழுப்ப வேண்டும். இந்திரிய சக்தியே ஓஜஸ் ஆகும்.

மூலாதாரத்தில் எல்லாவித சக்தியும் அடங்கி இருப்பதால் யோகம் புரியும் யோகி அந்த மூலாதாரத்தின் மீது அதிக கவனத்தைச் செலுத்த வேண்டும். மூலாதாரத்தில் புதைந்துள்ள எல்லாச் சக்திகளையும் திரட்டி எடுத்து ஓஜஸ் சக்தியாக மாற்றி அமைப்பதே யோக சாதனத்தின் குறிக்கோள் ஆகும். காமத்தை வெல்ல வேண்டும். காமத்தை வெல்லும் அளவிற்கு யோகி தூய்மையே வடிவெடுத்தவன் ஆகிறான். காமத்தை வெல்லுவதற்குண்டான ஓஜஸ் சக்தி அவனிடம் நிறைய ஏற்படுகிறது.

யோகி ஒருவர் தன் வாசி யோகப் பயிற்சியால் மூலாதாரத்தில் உள்ள ஓஜஸ் சக்தியைக் கொண்டு குண்டலியை எழுப்பி, அதற்கு மேல் உள்ள ஒவ்வொரு ஆதாரங்களின்மூலம் வெகு கவனமாக மேலேற்றி பிரம கபாலத்தை அடையச் செய்வதே ஞானியர்களின் ஞானப் பயிற்சியாகும்.

வலது, இடது நாசி வழியாக உள்ளே இழுத்த சுவாசமானது சுழி முனையில் விணா தண்டின் நடுப்பாகம் கும்பித்து அக்கினி சுவாலை (ஓஜஸ் சக்தி) யாகக் கிளம்பிச் சிங்கக்குட்டிபோல் குதத்திற்குக் கீழ்நோக்கிச் சென்று, பிறகு வீணா தண்டின் வழியாக (முதுகு எலும்பின் நடுவில் உள்ள கண்ணுக்கு புலப்படாத வெள்ளை நரம்பின் வழியாக) தூங்கிய பாம்பாகிய குண்டலினி, பாம்பு சீறுவதுபோல் எழுந்து ஒவ்வொரு ஆதாரமாக மேல்சென்று கடந்து பிரம கபாலத்தை அடையும். அதுவே சிவசக்தி சேர்க்கை என்பர். கந்தன் உற்பத்தித்தானம் என்பர். ஆறு ஆதாரங்களில் இருந்து குண்டலி சக்தி வந்ததால் ஆறுமுகன் என்றனர்.

இதைத் திருமூல பகவான் தன் திருமந்திரத்தில் கூறுகிறார்.

கோணா மனதை குறிக்கொண்டு கீழ்கட்டி
வாணாள் அடைக்கும் வழி அதுபோகும் - திருமூலர்

இதையே காகபுசண்ட முனி கூறுகிறார்.

போமட முன்சொன்ன நரம் பினூடே
பூரித்த ரவிமதியும் சுடர்தான் மூன்றும்
ஆமடா பின்னியுந்தான் கீழே பாயும்
அந்தரங்கந் தன்னைப்பார்க்க அடங்கி போகும்

நாமடா வெளிதிறந்து சொல்லி விட்டோம்
நாதாந்த பரபிர்மம் நாட்டந் தன்னை
ஓமடா விந்துவுந்தான் அண்ட வுச்சி
உறுதியுடன் சித்தமதை வூணிப் பாரே.

என்று காகபுசண்ட முனி தன் புசண்டர் 1000த்தில் குண்டலியைப் பற்றிக் கூறுகிறார்.

இந்த சக்தி அம்சமான "குண்டலினி"யை வாசி யோக அப்பியாசத்தால் பலமுறை, ஏன் பல காலம் முறையுடன் அப்பியாசித்தபின், மூலக்கனல் என்ற சுழிமுனையில் கும்பித்து மூலாதாரத்தில் தூங்கிக்கொண்டிருக்கும் குண்டலினி சக்தியை சுழிமுனை மூலம் எழுப்பி ஆதாரங்கள் ஐந்திலும் ஒவ்வொரு ஆதாரமாகக் கடக்கச் செய்வார்கள். ஒவ்வொரு ஆதாரங்களிலும், சக்கரங்களில் தாமரை இதழ் போன்ற அமைப்புகள் உள்ளது. அத்தனை இதழ்களையும் குண்டலி சக்தியினால் இதழ்களைப் பிரித்து ஒவ்வொரு ஆதாரமாக குண்டலினியைத் தங்க வைப்பார்கள். இது பெண் ஒருவள் பிரசவிக்கும் வேதனை எப்படியோ அப்படி ஞானி ஒருவர் இதை அனுபவிப்பார். பிறகு குண்டலினியை ஒவ்வொரு ஆதாரமாக தங்க வைத்து, மேலேற்றி, நடு நாடி என்றும் சந்திர மண்டலம் என்றும் ஞானிகளால் வர்ணிக்கப்படும். புருவ மத்தியில் அந்த குண்டலினி சக்தியைக் கொண்டுவந்து சேர்ப்பார்கள். அந்த நடுநாடியாகிய சந்திர மண்டலத்தில் உள்ள அமிர்தத்தைப் பெருகச் செய்யும். யோகிகள், ஞானிகள் இப்படி சந்திர மண்டலத்தில் பெருகும் அமிர்தத்தை உண்டு, அன்ன ஆகாரமில்லாமல் பல காலம் உயிர் வாழும் சக்தியைக் கைவரப் பெறுகின்றனர்.

இந்த ஞான அமிர்தத்தைத்தான் வள்ளல் பெருமான் வெண்ணிலாப் பாட்டாகப் பாடுகிறார். அருள் மருந்து என்றும் வர்ணிக்கிறார். அமுதப்பால் என்று சித்த மகா புருஷர்கள் வர்ணிக்கிறார்கள்.

மதிமண்டலத்து அமுதம் வாயார - உண்டே
பதிமண்டலத்து அரசு பண்ண - நிதிய
நவநேய மாக்கு நடராசனே - என்
சிவனே கதவைத் திற.

சாகா அருளமுதந்தான் அருந்தி நான் களிக்க
நாகா அதிபர்சூழ் நடராசா - ஏகா
பவனே பரனே பராபரனே - எங்கள்
சிவனே கதவைத் திற.

எல்லாம் வல்லசித் தென்றெல்லா மறைகளுஞ்சொல்
நல்லார் அமுதம் அது நான்அருந்த - நல்லார்க்கு
நல்வாழ்வளிக்கு நடராயா மன்றோங்கு
செல்லா கதவைத் திற.

இப்பாடல்களில் ''கதவைத் திற'' என்பது ஞானக் கதவு ஆகும். வள்ளலார் பெம்மான் தில்லைக் கூத்தனிடம், ஞானக்கதவு திறந்து மேலான ஞான அமிர்தம் பருக வேண்டும் என்று பாடுகிறார். மேலும்,

சோதிமலை மேல்வீட்டிற் றூயதிரு வமுதம்
மேதினிமேல் நானுண்ண வேண்டினேன் ஓதரிய
ஏகவனேகா எழிற் பொதுவில் வாழ்ஞான
தேகா கதவைத் திற.

என்று இராமலிங்க சுவாமிகள் பாடுகிறார்.

குண்டலிப்பால் நின்றிலங்கும் வெண்ணிலாவே - அந்த
குண்டலிப்பால் வேண்டுகின்றேன் வெண்ணிலாவே.

என்று வள்ளலார் பெருமகனார் பாடுகிறார்.

குண்டலினி மூலாதாரத்தை விட்டு ஞானி ஒருவர் ஒவ்வொரு ஆதாரங்களை அடையும் சமயம், யோகி ஒருவர் பலவித ஒலிகளை அனுபவிப்பார் என்று ஞானிகள் கூறுகிறார்கள். குண்டலி கிளம்பும் சமயம் ஆண் அல்லது பெண் குறியோ அல்லது யோனிக்கும் எருவாய் ஆகிய குதத்திற்கும் இடையில் வீணா தண்டின் (முதுகுத் தண்டின்) அடியில் குரு, குரு என்று எறும்பு ஊர்வதைப் போலவும், பாம்பு ஊர்ந்து செல்வது போலவும், மீன் நீந்துவது போலவும், பறவை பறப்பது போலவும் உணர முடியும். பிறக்கும் குழந்தை அழுவதுபோல் குவா! குவா என்னும் ஒலியை யோகம் பயிலும் யோகி ஒருவர் கேட்கும் நிலை ஏற்படும் என்று ஞானிகள் கூறுகின்றனர். இந்த ஆரம்ப குண்டலினி சக்தியை ஞானிகள் குமரி என்று கூறுகின்றனர்.

அனாகத சக்கிரத்தை குண்டலி அடையும் சமயம் சூரிய வெப்பத்தால் பக்குவமடைந்து (பருவம்) தாருணி (அ) வாலை பெண் என்று ஞானிகள் கூறுகின்றனர். இந்த குண்டலினி சக்தி, கபாலத்தில் உள்ள ஆயிரம் தாமரை இதழ்களைக் கொண்ட சகசுராரத்தில் சேரும்போது சிவசக்தியாக சிவனுடன் ஒன்றிக் கந்தன் உற்பத்தி என்று கூறுகிறார்கள் ஞானிகள்.

ஒவ்வொரு ஆதார சக்கரங்களில் தாமரை இதழ்கள் உள்ளது. அத்தனை இதழ்களையும் குண்டலினி சக்தியால் பிரித்து ஒவ்வொரு ஆதார குண்டலி சக்தியை தங்க வைத்து தன் யோகப் பயிற்சியினால் மேலேற்றி கபாலத்தின்கண் உள்ள பூரணத்தில் (சகசுராரத்தில்) கொண்டுபோய் நிறுத்துவார்கள். இப்படி நிறுத்திய குண்டலிசக்தி மறுபடியும் கீழ்நோக்கி வர துடிக்கும் தன்மையுள்ளது. அந்த குண்டலி சக்தியை கீழ்நோக்கி வாராவண்ணம், ஞானி ஒருவர் தன் யோக பலத்தால் சகசுராரத்திலே நிறுத்தி சிவசக்தி இணைப்பைக் கண்டு சமாதி நிலையை அடைவார்கள். (சமாதி என்பது சம=சமம், ஆதி=ஆண்டவன்) ஆண்டவனுக்கு சமமாக நிட்டையில் ஒன்றி விடுவார்கள்.

வாசி யோகம் பயிலும் யோகி ஒருவர் பலகாலம் ஓம் என்ற வாசி யோகப் பயிற்சியின் பயனாக மூலாதாரத்தில் செயல்பாடு இல்லாமல் தூங்கும் நிலையில் உள்ள குண்டலினி சக்தியைச் சுழு முனையில் கும்பகம் செய்த வாசியினால் எழுப்பி, மற்ற ஐந்து ஆதாரங்களை மிகவும் எச்சரிக்கையுடன் அதை மேலேற்றிக் கொண்டு செல்வார்கள்.

"நாடிக்கு கீழே பன்னிரண்டங்குலம்
தாபிக்கு மந்திரந் தன்னை அறிகிலர்
தாபிக்கு மந்திரந் தன்னை அறிந்தபின்
கூவிக்கொண் டீசன் குடியிருந்தானே" -திருமூலர்

தொப்பிளின் கீழ் பன்னிரெண்டு அங்குலம் கீழே உள்ள மூலாதாரத்தில் உள்ள குண்டலினி சக்தியை எழுப்ப ஒரே மந்திரம் "ஓம்" என்னும் பிரணவ எழுத்தாகும். அந்த "ஓம்" என்னும் பிரணவ எழுத்தை யாரும் உணரவில்லை. அப்படி உணர்ந்து அம்மூலாதாரத்தில் உள்ள சக்தியை ஓம் என்ற மந்திரத்தினால் தூண்டி எழுப்பினால், ஈசனைக் காணலாம் என்று திருமூலர் திருமந்திரத்தில் கூறுகிறார்.

மேலும் அவர் மலவாய்க்கு இரண்டு விரற்கடை மேலேயும் கருவிடும் வாய் (இலிங்கமாகிய ஆண்குறி (அ) யோனியாகிய பெண் குறி)க்கு இரண்டு அங்குலம் கீழே இருக்கும் இடம் மூலாதாரம் எனப்படும். அவ்விடம் உள்ள குண்டலினி சக்தியை கலந்து ஆண்டவன் சோதி இருக்கிறது. அந்த சோதியை வாசியோகப் பயிற்சி மூலம் எழுப்பிப் பல ஆதாரங்களைக் கடந்து பிர்ம கபாலத்துடன் நிறுத்தினால் ஆண்டவன் சோதியைக் காணாலாம் என்கிறார். திருமூலர் தன் திருமந்திரத்தில்

"எருவிடும் வாசலிரு விரன்மேலே
கருவிடும் வாசலிரு விரன்கீழே
யுருவிடு சோதியை யுள்கவல்லார்க்குத்
கருவிடுஞ் சோதி கலந்துநின்றானே" - திருமந்திரம்

குண்டலினி சக்தியை சங்கர பகவான் தன் சௌந்தர்ய லகரியில் கீழ்க்கண்டவாறு வர்ணிக்கிறார்.

"சூதா தாரா ராஸாரைச் - சரண யுகலாந்தர் - விகலிதை
ப்ரபஞ்சம் சித்த சந்தீ புனரபிரஸாம்னாய - மஹபெ
அவாப்யஸ்வாம் பூமிம் புஜகநிப - மத்யுஷ்டவலயம்
ஸ்வமாத் மானம் கிருத்வாஸ்வபிஷி குலகுண்டே குஹரிணி"
- "சௌந்தர்ய லஹரி"

சூதா - தாரா; ராஸாரை = அமிர்த தாரை பிரவாகத்தால்
சரண யுகள ஆந்தர் = திருவடிகள் இரண்டின் இடையில் இருந்து

குலகுண்டே	=	மூலாதார குண்டத்தின்கண்
பூமிம்	=	பூமி தத்துவமாகிய மூலாதாரத்தில்
அத்யுஷ்ட வலயம்	=	சுருண்ட குண்டலி வடிவமாக
ஸ்வம்	=	உன்னுடைய உருவம் உள்ளது

தேவியே! உன் இரண்டு திருவடிகளின் இடையில் உண்டாகிய அமிர்த பிரவாகத்தால், ஐம்பூதங்களாகிய கண், வாய், மூக்கு, செவி, மெய்யும் உடலில் உள்ள 72,000 நாடிகள் எல்லாவற்றிற்கும் ஊடுருவி நனைந்து அமிர்த கிரணங்களைப் பொழியும் சந்திரமண்டலத்திலிருந்து உனது இயற்கையான இருப்பிடமாகிய பூமி தத்துவமாகிய மூலாதாரத்தில் மறுபடியும் வந்து பாம்பைப் போல் குண்டலமிட்டு (வட்டமிட்டு) உறங்கும் தேவியாகிய குண்டலினியை வணங்குகிறேன் என்று பாடுகிறார்.

இதையே போகர் தன் "போகர் 7000த்தில்"

காணவே மூலமக்துதண்டம் காரணமாம் - திரிகோணமாக நிற்கும்
பூணவே மூன்றின்மேல் வலைய மாகும் புறம்பாக
விதழுதுவும் நாலுமாகும்
நாணவே நாற்கமலத் தட்சரங்கள் நலமான வ-ச-ஷ-ஸவ்வுமாகும்
மூணவே முக்கோணத்துள் ளொளி யோங்கார முயற்சியா
யதற்குள்ளே அகாரமாமே" -"போகர் 7000"

குல குண்டம் - "கு" என்பது பூமி தத்துவம், அது மூலாதாரத்தில் பூமி தத்துவம் அடங்குவதால் மூலாதார சக்கரம் குல குண்டம் எனப்பட்டது. இதன் மத்தியில் தாமரைக்காய் இருப்பதுபோல் ஒரு கிழங்கு இருப்பதாகவும் அதன் நடுவில் ஒரு மெல்லிய கண்ணுக்குப் புலப்படாத துவாரம் இருப்பதாகவும், அதில் இந்த குண்டலினி சக்தி தலையை வைத்துக் கொண்டு மூன்றரை சுற்றாக பாம்பு சுருண்டு படுத்திருப்பதுபோல் மெல்லிய பிழம்பு வடிவில் உறங்குவதாகவும் ஞானிகள் தன் அளப்பறிய யோகப் பயிற்சியின்கண் அகக்கண் கொண்டு அறிகிறார்கள்.

குண்டலினி சக்தியை தேவியாக ஞானிகள் உருவகப்படுத்தி கூறுகின்றனர். சகசுராரம் என்னும் கபால உச்சியில் பரம சிவனுடன் ஒன்று சேர்ப்பதே ஞானியின் யோகப் பயிற்சி ஆகும். அப்படி பரமசிவனுடன் சேர்ந்த தேவியாகிய குண்டலினி சக்தி, நம் உடலில் உள்ள 72,000 நாடி நரம்புகளை நனைத்துவிட்டு ஆனந்தத்தைப் பெருக்கி, மீண்டும் கீழ்நோக்கி மூலாதாரத்தை அடையத் துடிக்கும். அதைக் கீழ்நோக்கி வராத வண்ணம் மேலே சகசுராரத்தில் நிறுத்தி அதனால் ஏற்படும் ஆனந்த அமிர்தத்தைப் பருகி ஞானி ஒருவர் கற்பகோடி காலம் வாழும் நிலையை அடைகின்றார். இதை மேலே நிறுத்தி ஆளும் சக்தியுடையவரே பெரும் ஞானியாவார்.

மூலாதாரத்தை விட்டு எழும்பிய குண்டலி சக்தி அடுத்த ஆதாரமாகிய சுவாதிட்டானத்தை அடையும். அது மறுபடியும் கீழ்நோக்கிச் செல்லும் தன்மையுள்ளது. யோகி ஒருவர் அதைத் தன் கடும் யோகப் பயிற்சியால்

கீழ்நோக்கிச் செல்ல விடாமல் சுவாதிட்டானம் என்னும் நெருப்புத் தத்துவத்தில் நிற்க வைப்பார்கள். இவ்விடம் குமரி என்று ஞானிகளால் வர்ணிக்கப்படும்.

ஆதி சங்கரர் குண்டலினியை, அம்மையே உன்னுள் உள்ள சுவாதிட்டான சக்கரத்தில் நெருப்பின் தத்துவத்தை நினைந்து, அதில் காலாக்கினி ரூபமான உருத்திரனையும், சக்தி வாய்ந்த சந்திர கலையான உன்னையும் வணங்கு கிறேன். உருத்திரனின் பார்வையான அக்கினி கோபத்தால் வளர்ந்து உலகை எரிக்கும்போது கருணை நிறைந்த உமது பார்வை குளிர்சசியைத் தருகிறது என்று கூறுகிறார். அதனால்தான் நாம் பருவ மங்கையரை குளிர்ச்சி நிறைந்த தாகக்கண்டு ஆனந்தப்படும் தன்மை நம்முள் ஏற்படுகிறது. இவ்விடம் வந்த குண்டலினி சக்தியால் யோகி ஒருவர் அட்டமர் சித்துகளில் (ஆறு வகை) சித்துக்கள் கைவரப்பெற்றவர் ஆகிறார். அவர் பார்வை பேச்சுகள் நமக்கு ஆனந்தத்தைத் தரும் தன்மையை ஞானி ஒருவர் பெறுகிறார்.

பிறகு சுவாதிட்டானத்தை விட்டு கிளம்பிய குண்டலினி சக்தி, எட்டு விரற்கடை தூரமுள்ள மணிபூரகம் என்னும் தொப்பிளை வந்து அடையும். இருள் நிறைந்த மணிபூரகத்தில் நீருண்ட மேகம் போன்ற நிறமுள்ள இடத்தில் சாதாரண மின்னல் கொடி போன்ற குண்டலினி காட்சியளிக்கிறார் என்று ''நாராயண ஸூக்தம்'' கூறுகிறது.

மணிபூரகத்தை விட்டு கிளம்பிய குண்டலினி சக்தி பத்து விரற்கடைக்கு மேல் அனாகதம் என்னும் இதய கமலத்தை அடையும். பல படிகளைக் கடந்து வந்த கண்டலினி சக்தி இதய கமலத்தை அடையும்போது தேவியின் பூரண அருளை யோகி ஒருவர் பெறுவார் என்று ஆதி சங்கர பகவான் கூறுகிறார். அப்படிப்பட்ட அருள்பெற்ற யோகியர்களுக்கு பலவித இனிய நாதங்களை உள்முகமாகக் கேட்டு ஆனந்தம் அடைவார்கள் என்றும் அட்டமா சித்திகளை பெறும் த்குதிகளை அடைவார்கள் என்றும் ஞானிகள் கூறுகின்றனர். இங்கு குண்டலினியை மிகவும் கவனமாக மேல்நோக்கிச் செல்ல வைக்க வேண்டும் என்றும், ஞானிகள் கூறுகின்ற குண்டலினி சக்தி கீழே போகத் துடிக்கும் என்றும் யோகியை பல விதங்களில் சோதிக்கும் என்றும் ஞானிகள் கூறுகின்றனர். யோகி ஒருவர் கடும் யோகப் பயிற்சியாலும் கட்டுப்பாட்டுடனும் இருக்க வேண்டிய காலக் கட்டம் இது என்று ஞானிகள் கூறுகிறார்கள்.

ஆதிசங்கரர் தன் சௌந்தர்ய லஹரியில்:

''மலர்ந்த ஞானத் தாமரையின்கண் ஆனந்தத் தேனையே விரும்புகிறதும் மகான்களுடைய மனமென்னும் மானச்சரசில் நீந்துவதுமான இரு அம்சங்களை வணங்குகிறேன்''. அதில் பதினெட்டு வித்தைகளை ஞானி அடைவதாகக் கூறுகிறார். அந்த இரு அம்சங்களும் குற்றம் என்னும் நீரை குணமென்னும் பால் நீக்குவதாகக் கூறுகிறார்.

அனாகதத்தைவிட்டு கிளம்பிய குண்டலினி சக்தி யோகி ஒருவர் தன் யோகப் பயிற்சியினால் மேன்மேலும் பத்து விரற்கடை பிரமாணமுள்ள விசுத் என்னும் நெஞ்சுக்குழி சக்கிரத்தில் பதினாறு இதழ்களை மெதுவாக விரித்து உள்ளே சென்று தங்கும்.

இவ்விடம் யோகி ஒருவருக்குப் பலவித இன்னிசையும், வாத்திய ஒலியும் கேட்கும். அப்படிக் கேட்டால் யோகி ஒருவர் யோகம் பயின்றதில் முதிர்ச்சித் தன்மையைப் பெற்று விட்டதாக உணர வேண்டும். சந்திர நாடியில் உள்ள அம்பிகையும், சூரிய நாடியில் உள்ள சிவனும் கூடி விசுத்தி சக்கிரத்தில் அர்த்த நாரீசுவரராக தோன்றுகிறார்கள் என்று ஞானிகள் கூறுகின்றனர்.

இப்படி சந்திரக்கலையாகிய அம்பிகையும், சூரியக் கலையாகிய சிவனும் கூடிய நிலையில் மற்றைய எண்ணங்கள், ஆனந்தங்கள் ஆற்றுவிடும் தன்மையை யோகி பெறுகிறார். சிவத் தம்பதிகளின் ஆனந்தமயமான ஒளி ஒன்றே சீவாத்மாவுக்கு சீவாதாரம் என்று ஞானிகள் கூறுகிறார்கள்.

விசுத்தி சக்கரத்தை விட்டு மேலெழும்பிய குண்டலினி சக்தியாகப்பட்டது. பன்னிரெண்டு பிரமாணமுள்ள ஆக்கினை என்னும் புருவ நடுவில் வந்து சேர்ந்து லலாடத்தானம் திறக்கும் என்னும் கூறுவர்.

இவ்விடம் உயிரும் இறைவனும் சேரும் இடம் என்றும், சூரியன், சந்திரன் அக்கினி ஆகிய ஒளிகளுக்கு அப்பாற்பட்ட விளக்கிட முடியாத தத்துவ ஒளி ஏற்படும். இதை ஞானிகள் முச்சந்தி என்றும், மனோன்மணி பீடம் என்றும் வர்ணிக்கிறார்கள். குருவும் சீடனும் சேரும் டம் என்றும், சீவான்மா பரமான்மா விடம் கூடும் இடம் என்றும் கூறுவர். இப்படிப்பட்ட லலாடத்தானம் திறந்து கபால உச்சியில் உள்ள சகசுராரத்தில் அமையும்.

''நெற்றிக்கு நேரே புருவத் திடைவெளி
உற்றுப் பார்க்க ஒளிமிகு மந்திரம்
பற்றுக்குப் பற்றாய் பரம னிருந்திடஞ்
சிற்றம்பலம் என்று சேர்த்துக் கொண்டேன்''

என்று திருமூலர் தன் திருமந்திரத்தில் விளக்குகிறார்.

முதுகுத் தண்டின் நடுவில் உள்ள சூக்குமனை வழியாக மூலாதாரத்தி லிருந்து எழுந்த குண்டலினி சக்தி ஒவ்வொரு ஆதாரங்களைக் கடந்து புருவங்களுக்கு இடையே உள்ள ஆக்கினையை அடையும்போது, அந்த அருள் ஒளிகாரணமாக அக்கண் திறக்கும். இதுவே ஞானக் கண் என்று ஞானிகள் கூறுகிறார்கள். இதை ஞானிகள் அருள்நிலை, அருள் ஒளிநிலை என்று கூறுவர்.

ஞானி ஒருவர் இங்கு தான் ''தூங்காமல் தூங்கிச் சுகம் பெறுவது'' என்ற நிலையை அடைகின்றார். இது புறக்கண்ணிற்கு 'நோக்கறிய நோக்கு'' என்றும், அகக்கண்ணுக்கு 'நுணுக்கறிய மென்நுணுக்கு' என்றும் ஞானிகள் பரிபாசையில் கூறுகிறார்கள். இதை மகேசுவரி பீடம் என்றும் ஞானிகள் அழைக்கிறார்கள்.

''கண்ணுக்கு மூக்குச் செவி ஞான கூட்டத்துட்
பண்ணாக்கி நின்ற பழம்பொருள் ஒன்றுண்டு

அண்ணாக்கின் உள்ளே அகண்ட ஒளிகாட்டி
புண்ணாக்கி நம்மை பிறப்பித்த வாறே''

மூன்று கண்களாகிய இடக்கண், வலக்கண், நெற்றிக்கண்கள் பிரணவத்தின் 'ஓம்' என்ற வடிவத்தின் தத்துவமாகும்.

'ஓம்' என்ற பிரணவத்தில் அ+உ+ம்-மின் கூட்டுத்தொகைஉள்ளது என்பதாகும்.

'அ' என்பது இடக்கண்

'உ' என்பது வலக்கண்

'ம்' என்பது புருவநடு (அ) நெற்றிக்கண். இதுவே பிரணவ எழுத்து. 'ஓம்' என்றாகியது.

சகசுராரம் என்பது ஆறு ஆதாரங்களுக்கு மேல் உள்ள ஏழாவது சக்கரமாக பிரம்ம கபாலத்தில் ஆயிரம் தாமரை இதழ் போல் கொண்டதாக உள்ளது. இதை பிந்து சக்ரம் என்றும் கூறுவார்கள். இது சிவனையும் சக்தியையும் ஒன்று சேர்க்கும் தன்மை உள்ளது.

பரமாத்மா ஏகவெளியாய் ஆகாய வடிவாய் இருக்கிறார் என்பது ஞானிகளின் திண்ணம். பிரம்ம கபாலத்தின் கீழ் மிருதுவான சவ்வினால் வளைவாக மூடப்பட்ட மூளையிருக்கிறது. 1000 தாமரை இதழ்போல் உள்ளது. இதை ஞானிகள், காமம், அவித்தை முதலியவை நீக்கி யோகப் பயிற்சியினால் கண்டு பெரும் நிலையெய்தி ஆனந்தம் அடைகின்றனர்.

மூலாதாரத்தில் உள்ள குண்டலியை சுழிமுனை நாடியின் மூலம் ஆறு ஆதாரங்களைக் கடந்து, சகசுராரத்தில் கலந்து விட்டால் சாதகன் சர்வசக்தியும் அட்டமா சித்திகளையும் பெறுவார்கள் என்று ஞானிகள் கூறுகிறார்கள். இங்கே குண்டலி அம்பிகையாகவும், சகசுராரம் சிவனாகவும் கொண்டு சேர்தலே யோக நெறியின் முதிர்ச்சி நிலை சித்திப்பதாகும். இதுவே கந்தன் உற்பத்தியாகும்.

சித்தி என்ற சொல்லுக்கு வெற்றி என்று பொருள். சித்தி என்பது ஆன்மா பரமான்மாவில் சேர்வதின் நோக்கமேயாகும்.

''அறுபத்துநாலு கலையாவும் அறிந்தோம்
அதற்குமேலும் ஒருகலை யானதும் அறிந்தோம்
மறுபற்று சற்றுமில்லா மனமுடையோம்
மன்னனை ஆசானென் றாடுபாம்பே'' - பாம்பாட்டிச் சித்தர்

திருமூலர் குண்டலினி சக்தியை யெழுப்பிக் கூறுகிறார்.

''மேலாம் அருந்தவம் மேன்மேலும் வந்தெய்தக்
கலால் வருந்திக்கழிவர் கணத்திடை
நாலா நளின நின்றேத்தி நட்டுச்சிதன்
மேலா மெழுத்தின ளாமத்தினாளே''

உயர்ந்த பெரும் தவம் செய்ய காடும், மலையும் நகரங்களையும், ஆறுகளையும், கடல்களையும், குளங்களையும், குகைகளையும், கால்கள் தளர்ந்திட நடந்து வாழ்நாளை விணாக்கி வேண்டாம். அப்படியில்லாமல் கண்ணிமைப்பொழுது கை கூடிவரும். எப்படி யென்றால் இரைக்குடலாகிய ஆமத்தின்கண் திருவள் அம்மை (குண்டலினி சக்தி) அவளை மூலமாகிய நான்கு இதழ்த் தாமரையின் கண் இடக்கலைப் பிங்கலை நாடிகளைக் கொண்டு சுழிமுனை மூலம் எழுப்பி உச்சியில் கொண்டு சகசுராரத்தில் நிலைக்கச் செய்து ஓம் என்ற மொழியை உன்னுதலே பெரிய தவத்தின் பலன் என்று கூறுகிறார்.

"நாலிதழ் ஆறில் அவிர்ந்தது தொண்ணூறு
தானித ழானவை நாற்பத்து நாலுள
பாலித ழானவள் பங்கய மூலமாய்த்
தானித ழாகித் தரித்திருந்தாளே"

நான்கு (இதழ் தாமரை பூப்போல் உருவகப்படுத்துகிறார்கள் ஞானிகள்) இதழ்த் தாமரை இதழ் மூலாதாரம். ஆறு இதழ் கொண்டது நாபி (தொப்பிள்), தொண்ணூறு இதழ் கொண்டது மேல்வயிறு. நாற்பது இதழ் கொண்டது நெஞ்சுக்குழி, பதினாறு இதழ்கொண்டது மிடறு (கண்டம்). பத்து இதழ் கொண்டது புருவ நடு. இப்படிப்பட்ட தாமரை இதழ்களில் தேவி நின்று இயங்குவாள் என்று திருமூலர் கூறுகிறார். மேலும்.

"அடுக்கு தாமரை ஆதியிருப்பிடம்
எடுக்கு தாமரை இல்லத்துள்ளது
மடுக்கு தாமரை மத்தகத்தேசெல
முடுக்கு தாமரை முச்சதுரத்தே"

என்கிறார். நெஞ்சத் தாமரை (அனாகதம்) ஆதியாகிய சிவன் இருப்பிடம். அடுக்குத் தாமரை ஆன்சை, எடுக்குத் தாமரை விசுத்தி, மடுக்கு தாமரை அனாகதம், முடுக்கு தாமரை மணிபூரகம் ஆகும்.

இது என்ன? அடுக்குத் தாமரை, முடுக்குத் தாமரை என்று குழப்புகிறார்கள் என்று எண்ண வேண்டாம். இதுயோகியர் தன் யோக பரிபாஷைகளே ஆகும். இந்த நூல் ஸ்ரீ பூண்டி மகான் அந்த நிலையை அடைய எவ்வளவு வைராக்கியமுடனும் கட்டுப் பாட்டுடனும் யோகம் பயின்று இந்த நிலையை அடைந்தார்கள் என்று நாம் உணர எழுதப்பட்ட நூல் ஆகும். இதைப் படிக்கும் அன்பர்கள் உடனே ஞானப்பால் குடிக்க முயற்சிக்க வேண்டாம். இது யோகங்களை கைவரப்பெற்றவர்களைத் தக்க குருவாகக் கொண்டு குரு காட்டும் பாதையில் படிப்படியாக முன்னேற பல பிறவிகள் கூடத் தேவைப்படும். ஏட்டில் பலர் பல கருத்துடன் எழுதியதைக் கண்டு அமிர்தப் பால் குடிக்க முயற்சித்தால் அது வெறும் மனப்பால் குடித்தலாகப் போய்விடும்.

ஏன், என்னால் முடியும் என்று நீ கூறுவது எனக்குப் புரிகிறது. உன்னால் முடியுமானால் இப்போதே 'நீ' இலட்சத்தில் ஒருவன், கோடியில் ஒருவன் ஆவாய். பிறகு படிப்படியாக 'நீ' பிர்மமாவாய். பிரமம் நீயாகும் தன்மை வந்து விடும். முயன்று தக்க குருவை நாடிப்போ என்கிறார்கள் ஞானிகள்.

குண்டலி சக்தியெழுப்ப ஔவை பிராட்டி 'வினாயகர் அகவலில்' வினாயகரை வேண்டி வணங்குகிறார்.

"ஒன்பது வாயிலே ஒரு மந்திரத்தால்
ஐம்புலக்கதவை அடைப்பதுங்காட்டி
ஆறாதாரத்து அங்குச நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை அறுத்தே
இடையின் கலையின் எழுத்தறிவித்துக்
கடையிற் சுழிமுனை கபாலமுங் காட்டி
மூன்று மண்டலத்தில் முட்டிய தூணின்
நான்றெழு [redacted]பின் நாவிலுணர்த்தி
குண்டலியதனில் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உணர்த்தி
மூலாதாரத்து மூண்டெழு கனலைக்
காலா லெழுப்பும் கருத்தறிவித்தே
அமுதநிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையும் கூறி
இடைச் சக்கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற் சக்கரத்தின் உறுப்பையுங் காட்டி
சண்முக தூலமும் சதுர்முக சூக்கமும்
எண்முகமாக இனிதெனக் கருளி"

என்று பாடுகிறார்.

நம் உடம்பில் உள்ள ஒன்பது துவாரங்களாகிய கண்கள் இரண்டு, செவிகள் இரண்டு, மூக்கின் துவாரம் இரண்டு, வாய் ஒன்று, ஆசனவாய் ஒன்று, குறி (பெண் (அ) ஆண்) ஒன்று ஆக ஒன்பது துவாரத்தை ஞானி ஒருவன் தன் ஐம்புலனாகிய சுவை, ஒளி, ஊறு ஓசை, நாற்றம் போன்றவைகளையும் அடக்கி ஆளும் தன்மை உள்ளவர்கள். ஔவையார் கணபதியை நோக்கி ஒன்பது வாயில்களினால் ஏற்படும் ஐம்புலன்களை அடக்கவும், ஆறு ஆதாரங்களில் உள்ள நிலைகளையும் தெரிவித்தும், சூரிய, சந்திர கலைகளையும் காட்டியும் அதனால் சுழிமுனையின்மூலம் சகசுராரத்தையும் காட்டியும், மூன்று மண்டலமாகிய சூரிய மண்டலம், சந்திர மண்டலம் அக்னி மண்டலமும் சேரும் முதுகுத் தண்டினடியில் உள்ள குண்டலினி சக்தியை எழுப்பவும், அதை நடுநாடி எனப்படும் சந்திர

மண்டலத்தில் நிறுத்தியும் அதனால் ஏற்படும் தேவஅமிர்தத்தையும் அதற்கு மேலுள்ள சூரிய மண்டலம் என்னும் சகஸ்ராரத்தையும் காட்டினார் என்று பாடுகிறார்.

மூலாதாரம் முதல் குண்டலினி சக்தியை ஞானி ஒருவர் தன் அகக்கண் கொண்டு யோக அப்பியாசங்களினாலும் எழுப்பி, சுவாதிஷ்டானம், மணிபூரகம், அனாகதம், விசித்தி, ஆக்கினை (லலாடத்தானம்) ஆகிய ஆறு நிலகளையும் கடந்து ஏழாம் நிலையாகிய கபால உச்சியை அடையச் செய்து இறை இன்பம் அனுபவிப்பதே ஞானிகளின் ஞான யோகமாகும்.

இப்படி மூலாதாரத்திற்குக் கணபதியும், சுவாதிட்டானத்திற்கு பிரமனையும், மணிபூரகத்திற்கு விட்ணுவையும் அனாகதத்திற்கு உருத்திரனையும், விசுத்திக்கு மகேசுவரனையும், ஆக்கினைக்கு சதாசிவமும், இப்படி ஆறு ஆதார தெய்வங்களை விந்து, நாதம், சக்தி, சிவன் என்ற ஒன்பது நிலைகளும் ஒருமைப்படுத்தி சீவனை சிவன் தன்மையாக்குவதே ஞானியின் ஞான யோகமாகும்.

மலர்ந்த அயன்மால் உருத்திரன் மகேசன்
பலந்தரும் ஐம்முகன் பரவிந்து நாதம்
நலந்தரு சக்தி சிவன் வடிவாகிப்
பலந்தரு லிங்கம் பரநந்தி யாமே. -திருமூலர்

அருணகிரி நாதர் தன் திருப்புகழில், பார்வதியின் புத்திரரான குமரக் கடவுளை அருள் வேண்டி பாடிய பாடலில் தேவியை குண்டலினியாக குறிப்பிடுகிறார்.

குமரி காளி பயங்கரி சங்கரி
கவுரி நீலி பரம்பரை யம்பிகை
குடிலை மோகினி சண்டினி குண்டலி - எமதாயி

என்கிறார்.

பார்வதி தேவியைப் பார்த்துக்கெடாத கன்னிப் பருவத்தை உடையவளும், கருப்பு நிறமுடைய காளி என்ற நாமத்தை உடையவளும், பாவிகளுக்குப் பயத்தை அளிக்கக் கூடியவளும், எல்லா ஆன்மாக்களுக்கும் இன்பத்தைத் தருபவளும் பச்சை நிற முடையவளும் நீலநிற துர்க்கை என்னும் பெயரை உடையவளும் சர்வ உலகத்திற்குத் தாயாய் விளங்கும் மூல மந்திரமாகிய குண்டலினி சக்தியாய் விளங்குபவளும் மாய ரூபிணியாகவும், சண்டன் என்ற அசுரனை வதைத்தவளுமான பார்வதி தேவிக்குமரன் முருகக் கடவுள் எனக்கு ஞான அமிர்தம் தர வேண்டும் என்று விண்ணப்பிக்கிறார்.

குண்டலினி சக்தியினின்று பிரிந்தால் சிவனும் சவம் போல் ஆகிறான்.

ஓம் சிவோபி சவதாம் யாதி
குண்டலின்யா விவர்ஜித: -தேவிபாகவதம்

குலபதம் : சூசுமனா மார்க்கமே குலபதம் என்றும், ராச வீதி என்றும் சொல்லப்படுகிறது. இதில் வியாபித்திருக்கும் குண்டலினி சக்திக்குக் "குலாங்கனா" என்பது பெயர்.

அண்டமாகிய உலகத்தை ஆட்டிப் படைக்கும் தன்மை ஒன்பது நவக்கிரகங்களுக்கும் அதிகாரம் இருப்பதுபோல் நம் பிண்டமாகிய உடலில் மேலே சிவ அம்சமாகிய மஜ்ஜை பிராணன், சுக்கிலம், சீவன் நான்கும் சக்தி அம்சமாகி கீழே தோல், ரத்தம், மூளை, எலும்பு, மாமிசமாகிய ஐந்தும் ஆக ஒன்பதும் நம் பிண்டமாகிய உடலை ஆட்டிப் படைக்கும் என்பதாம்.

வாசி நடத்தி தருவாண்டி - ஒரு
வாசியிலே இங்கே வுருவாண்டி
இராப்பக லில்லா விடத்தாண்டி - அன்பர்
இன்ப வுளங் கொண்டத் தாண்டி.

தத்துவத் துள்ளே யடங் காண்டி - பர
தத்துவ மன்றித் துடங் காண்டி
சத்துவ ஞான வடிவாண்டி - சிவ
சண்முகா னந்தனை பாடுங்கடி

சச்சி தானந்த உருவாண்டி - பர
தற்பர போகந் தருவாண்டி
உச்சிதா ழன்பர் க்குருவாண்டி - அந்த
உத்தமதேவனை பாடுங்கடி

அற்புதமான வழகனடி - துதி
அன்பர்க் கருள்செய் குழகனடி
சிற்பர யேகத் திறத்தனடி - அந்த
சேவகன் கீர்த்தியைப் பாடுங்கடி ---

"சத்தியஞ் செய்கின்றேன் சகத்தீ ரறிமின்கள்
சித்தியெல்லாம் வல்ல சிவமொன்றே - நித்தியமென்
றெண்ண மெண்ணத்தாலே நம்மெண்ணமெலாங் கைகூடும்
நண்ணு மின்பத்தே நின்று நான்".

ஈசனருளாற் கடலிலேற்ற தொருவேடம்
ஏரிக்கரை யேறினேனிருந்த தொருமாடம்
தேசுறுமம் மாடநடுத் தெய்வ மணிப்பீடம்
தீபவொளி கண்டவுடன் சேர்ந்தது சந்தோடம்

மேருமலை உச்சியில் விளங்கும் நீட்சி
மேவுமதன் மேலுலகில் வீறும் அரசாட்சி
சேரு மதிற்கண்ட பலகாட்சிகள் கண்காட்சி
செப்ப லரிதாமிதற் கென்னப்ப னருட்சாட்சி

கொடிகட்டிக் கொண்டோமென்று சின்னம்பிடி
கூத்தாடுகின்றோ மென்று சின்னம்பிடி
அடிமுடியை கண்டோமென்று சின்னம்பிடி
அருளமுத முண்டோமென்று சின்னம்பிடி

சிற்சபையைக் கண்டோமென்று சின்னம்பிடி
சித்திகள் செய்கின்றோ மென்று சின்னம்பிடி
பொற்சபை புகுந்தோமென்று சின்னம்பிடி
புந்தியகிழ்கின்றோ மென்று சின்னம்பிடி

வேகாத காலுணர்ந்து சின்னம்பிடி
வேகா நடுத்தெரிந்து சின்னம்பிடி
சாகாத் தலையறிந்து சின்னம்பிடி
சாகாத கல்விகற்று சின்னம்பிடி

மீதான நிலையெறிச் சின்னம்பிடி
வெட்டவெளி நடுநின்று சின்னம்பிடி
வேதாகமங் கடந்து சின்னம்பிடி
வேதாந்த சித்தாந்த சின்னம்பிடி

சித்தாடுகின்றோ ரென்று சின்னம்பிடி
செத்தா ரெழுவரென்று சின்னம்பிடி
இத்தரணியிலென்று சின்னம்பிடி
யிதுவே தருணமென்று சின்னம்பிடி (ஆறாவது திருமுறை)

போய்விட்டகன்றே னென்றூதுது சங்கே
புண்ணியனானே னென்றூதுது சங்கே
மெய்தொட்டு நின்றே னென்றூதுது சங்கே
மேல்வெளி கண்டேனென்றூதுது சங்கே

ஏழுநிலைகளோங்குந் தெய்வமாட மொன்றிலே
யேற்றிக் களிக்கவைத்தாய்தன் மேலிலருகுன்றிலே

வாழும் பரிசுங்கவிக்குங் கொடையுமதிக்குந் தூசுமே
மகிழ்ந்துகொடுத்துப் பின்னுங்கொடுத்தாய் மணிபொற் காசுமேஎன

துரியமேற் பரவெளியிலே சுகநடம் புரியும்
பெரியதோர் அருட்சோதியைப் பெருதல் எவைக்கும்
அரியபேறு மற்றவை எல்லாம் எளியவே அறிமின்
உரிய விம்மொழி மறைமொழி சத்தியம் உலகீர்

மாயை வினையாணவமா மலங்களெல்லாந் தவிர்த்து
வாழ்வளிக்கும் வள்ளல் வருதருணம்
மேயைதி துவாமிதற் கோரையமலையிங்கே விரைந்துலக
மறிந்திடவே விளம்புகநீ மனனே......

"காடுவெட்டி நிலந்திருத்திக்காட் டெருவும்போட்டுக்
கரும்பை விட்டுக் கடுவிரைத்துக் களிக்கின்ற வுலகீர்
கூடுவிட்டுப் போயினபின் எதுபுரிவீர் எங்கேகுடியிருப்
பீரையோ நீர்குறித்தறியீ ரிங்கே

பாடுபட்டீர் பயனறிவீர், பாழ்கிறைத்துக் கழித்தீர்
பட்டதெல்லாம்போது மிதுபரமர் வருதருணம்
ஈடுகட்டி வருரேலின்பமிகுப் பெறுவீரெண்மையுரைத்
தேனலநானுண்மை யுரைத்தனனே" (உறுதி கூறும் படலம்)

சிவமே பொருளென் றறிவாலறிந்தேன்
செத்தாரை மீட்கின்ற திண்மையைப் பெற்றேன் (அருட்பா)

இப்படி நம் உடலில் உள்ள மூலாதாரத்தின் குண்டலினியை நம் கபாலத்தில் உள்ள சகசுராரத்தில் உள்ள சதாசிவனுடன் சேர்ப்பித்து அண்டத்துள் உள்ளதை அனைத்தும் நம் பிண்டமாகிய உடலில் கண்டவர்கள் ஞானிகள்.

இப்படிக் கபால உச்சியில் உள்ள ஆயிரம் தாமரை இதழ் கொண்ட சகசுராரத்தை திறந்து வெட்டவெளி என்னும் ஆகாய தத்துவத்தை கண்டவர்கள் நம் சித்தமகா புருசர். அந்த வெட்ட வெளியான இடமே சிவன்சக்தி தாண்டவம் ஆடும் இடம். இதைத்தான் தில்லை சிதம்பரம் வெட்டவெளி தலம் என்று அழைக்கப்படுகிறது. இதை மணி மண்டபம் என்று ஞானிகள் அழைக்கிறார்கள். இடக்கலை, பிங்கலை என்னும் வாசியின் போக்குவரத்தை தில்லை நடராசர் நாட்டியமாக விளக்கப் படுகிறது. கால் மாறிய ஆட்டம் நடராசர் ஆடினார் என்பது நம் சூரிய, சந்திர கலைகளை மாற்றி வாசியோகம் பயிலுவதை அப்படி உணர்த்தினார்கள்.

கால் உயரத் தூக்கி ஆடியது என்பது சுழிமுனையில் வாசியை (பிராண வாயுவை) வீணா தண்டு (முதுகுத் தண்டு) மூலம் மேலே ஏற்றியதை காலை தூக்கி நடராசர் நடனமாடுவதாக உணர்த்தப்பட்டது. குண்டலினி சக்தியை சிவபெருமான் தன்னுடன் ஐக்கியமாக்கிக் கொண்டதே காளி நடனத்தில் தில்லைக் கூத்தனிடம் தோற்றுப் போய் விட்டதாக உணர்த்தப்பட்டது. மேலும் மூலாதாரத்தில் உள்ள குண்டலினி சக்தியை மூலக்கனலை, பிராண வாயுவின் சேர்க்கையால் (அதாவது இடக்கலை, பிங்கலை, சுழிமுனை மூன்றும் சேர்ந்தால் நெருப்புத் தன்மை பெற்று விடும்) ஆறு ஆதாரங்களைக் கடந்து பிரம கபாலத்தில் கொண்டு சென்று பார்க்க அது தீப ஒளி அடைகிறது. இந்தக் கபால உச்சியில் சேர்க்கும் தீப ஒளியே சேர்க்கையே கந்தன் உற்பத்தி அதனால் தான் கந்தன் பிறந்த கிருத்திகை நட்சத்திரத்தில் திருவண்ணாமலை யில் தீபம் ஏற்றப்படுகிறது. நம் உள் உறையும் சக்தியை அக அறிவு கொண்டு அகத் தவத்தால் எழுப்பி நம் உடலின் கபால உச்சியில் சேர்த்து சிவசக்தியுடன் ஒன்றிய நிலை ஞானிகள் நிலை.

முச்சதுரத் தேளழுந்த முளைச் சுடர்
எச்சதுரத்தும் இடம்பெற ஓடிடக்
கைச்சதுரத்து கடந்துள் ஒளிபெற
எச்சதுரத்தும் இருந்தனள் தானே.

முச்துரமாகிய மூலத்திடத்து (மூலாதாரம்) எழுந்த சுடர் எங்கும் இடம் பெற்று விளங்கும்படி செல்வம் அழகிய பெருமை மிக்க இவ்வொளி எய்தும்படியும் எல்லா இடங்களிலும் திருவருளம்மை நிறைந்திருந்தனர். (கைச்சதுரம் - பிரம்ம மந்திரம்).

உள்ளொளி மூவிரண் டோங்கிய அங்கங்கள்
வெள்ளொளி அங்கியின் மேவி அவரொடுங்
கள்ளவிழ் கோனைக் கடந்துடனே நிற்குங்
கொள்ள விசுத்திக் கொடியமு தாமே

ஆறு ஆதாரங்களுக்கு ஒளி கொடுத்தவள் சக்தி அந்தந்த ஆதாரங்களின் தெய்வங்களுடனும் சிவபெருமானுடனும் ஒன்றிய நிலையில் இருப்பாள். அவளே மிகவும் இயற்கைத் தூய்மை எய்தியவள்.

யோகம் (புசண்டர்)

ஆரென்ன யெத்தனையென் றெண்ணிச் சொல்வேன்
அய்யய்யோ சொன்னாரே முகங்காணாதார்
வாரென்ன சுழிமுனையுஞ் சிலம்புங்கண்டு
வாய்கொண்டு பிதற்றினரே கண்டத்தாலே

தூரென்ன கொண்டைக்கால் மூலந்தொட்டு
துப்பிமுகன் நடுமூலம் உச்சிமூலம்
கோரென்ன சொன்னாரோ யிடுப்பின் மேலே
குண்டலியைச் சொன்னாரே உச்சிமட்டே

குண்டலி (கந்தன்)

குண்டலியைக் கண்டாக்காற் கருக்குமென்பார்
குண்டலியி னிருப்பிடமும் மூலமென்றார்
குண்டலிதா னென்றாக்கால் நரம்போதோலோ
குருத்தண்டோ முள்ளெலும்போ பிடரிமார்போ
குண்டலியே யென்றவர்கள் பெயரார் சொன்னார்
கொத்தளத்தின் பெருமைதனைச் சொல்லினார்கள்
குண்டலியே வாய்திறக்கப் பேசுமென்றார்
குருவென்றார் வாலையென்றார் குமரென்றாரே

அமிர்தம் (புசண்டர்)

சென்றேனே உச்சிநீர் தயேயாகும்
சிரசிலுள்ள நீரெல்லாம் வாலையாகும்
சென்றேனே உச்சிமேல் கபாலஒட்டில்
சென்றதினா லுச்சியின்கீழ் கோழைகண்டேன்
சென்றேனே அதுயிறக்க முட்டிநானே
சீக்கிரத்திலே யுடைத்தேன் கதவைத்தானே
சென்றேனே அக்கதவின் தானே கோழை
தீயிட்டு நானெரித்தேன்மேலே தீயே!

யோகம் (புசுண்டர்)

தீயென்றால் மூலக் கனல் உச்சி வாசல்
தீண்டிவிட்டு மேலேறிற்ந் தீபசோதி
நீயென்றால் நான் தெரியச் சோதி சொல்லும்
நிமிடமுத லெக்காலும் நிகழ்த்தும் ஜோதி
ஈயென்றால் வாய்திறக்கும் ஞாயஞ் சொல்லும்
இப்படியே உச்சிவெளி கபாலமேடை
ஊவென்றால் உள்மூலந் திறந்து காட்டும்
உச்சரிக்கு மந்திரமுஞ் சொல்லுந்தானே

சொல்லுமே கபாலமதிற் சேர்ந்தவாசி
சோதியொளி கண்டிடுமே கனலாற்காலால்
நில்லுமே மூலதலம் வாசி கொண்டு
நிமிர்ந்திருந்து பார்க்கவுமே பிடரியேறும்
கொல்லுமே பிடரியெமன் கோழைதன்னை
கொட்டிவிடுங் கக்கிவிழச் சள்ளைமெத்த
வெல்லுமே யவ்விடத்திற் பின்னால் நின்று
வேதாந்த உச்சிவர மூலம்பாரே.

மூலம்பார் பின்னிடுப்பில் முடிச்செலும்பில்
முதுகு தண்டுத் தாரைவழி விலாவோடாமல்
காலம்பாரி ராக்காலங் கதவடைத்து
கண்மணியே பார்ப்பவர்கள் தேறுவார்கள்
சிலம்பார் முன்னோர்கள் தெளிவாய்ச் சொல்ல
சிலம்பொலியைக் கண்டதன்றி முடிவைக்காணார்
கோலம்பா ரதனாலே சாத்திரத்தைக்
கொட்டினார் கண்டவரை தீட்டினாரே

யோகம்

போக்குவீரென்று சொல்லிப் போக்கத்தானே
பொருளதனைச் சொல்லிவைத்தே னிடங்கள்தோறும்
நாக்குமே லண்ணாக்கு உண்ணாக்குள்ளே
நடுத்தாமரைத் தான்திறந்தா லுச்சிவாசல்
மூக்குமேற் தண்டிலே முனைமூக்குக்குள்
முளைத்தெழுந்த வாசிவரப் பார்த்தபேர்கள்
தாக்குவார் புருவநடு மேலேபார்ப்பார்
தமர்வாச லடைத்திருக்கும் பூட்டுத்தானே.

என்று காகபுசண்ட மகரிசி கூறுகிறார்.

அமிர்தம்

திறந்துகொண்டே மேலேற் நெற்றி மார்க்கம்
தீயவழி நடவாதே மூக்கின் மார்க்கம்
மறந்துவிட லாகாது தினமோர் காலம்
வாய்பிதற்ற லாகாது அடக்கமாகில்

கறந்துவிழும் பாலமுர்தம் மனதிற்றானே
தூங்கினவர் போலிருக்கு மேங்கிடாதே
கறந்துகொள்ளச் சொன்னாரே மற்றோர் வீட்டிற்
கால்வைக்க சொல்லவில்லை உள்ளேதானே
உள்ளேதான் பாலமுர்தம் வடியுமென்பார்
உண்டஅன்னம் பசியடக்கும் வாரதாகும்
தெள்ளினே னிதுவிபரந் தெரிந்து கொள்ளு
தெளியாட்டால் யான் சொன்ன சூட்சம் பாரு
கள்ளேதான் வடியுமென்பார் உச்சிவாசல்
கட்டறுத்தாலே கோழை வடியுமல்லோ
பிள்ளைகா ளிதுவறியார் மட்டியாகும்
பேசினார் யானறுத்து மேற்சென்றேனே

என்று காகபுசண்டர் கூறுகிறார்.

விருப்பு, வெறுப்பு இதில் ஒன்றிருந்தால் மற்றொன்றும் இருக்கும். இரண்டும் அற்ற இடம் இறைவன் திருவடியாகும்.

"ஆறாதாரம் தொல்லையடி அதற்கப்பால் ஒன்றுமில்லையடி"

கர்ம யோகம்

ஞானம் பெற யோகிகள் பல வழிகளை யோக நூலில் கூறுகிறார்கள். அதில் சித்தர்கள் ராச யோகத்தையே வலியுறுத்திக் கூறுகிறார்கள். அவர்கள் வழி ராசயோக வழியே.

கர்ம யோகம், ஞான யோகம், பக்தி யோகம், ராச யோகம் என்று நான்குவித யோகங்களில் சாதகன் ஏதாவது ஒன்றினை வைராக்கியமாக ஏற்றுக் கொண்டால் அச்சாதகன் ஞான நிலைப்பெற்று, பரபிர்மத்துடன் கலந்து அழியாத பேரின்பப் பெருங்கடலில் இருக்கும் தன்மையைப் பெறுகின்றான்.

யோகம் என்பதற்கு ஒருநிலைப்பட்டு ஒன்றுபடுதல் என்று பொருள்படும். பேரான்மாவில் இருந்து விடுபட்ட 'ஆன்மா'வை மாறுபடும் பேரான்மாவிடம் ஒன்றுபடுதலே, 'யோகத்தின் முடிவு. அதுவே ஞான நிலை.

வடமொழியில் சரியை என்பதே கர்ம யோகமாகும். நாம் தினம் செயல்படும் வேலைகளை, நமக்கு என்று இல்லாமல் எல்லாம் ஈசுவரனுக்கே என்று ஈசுவர ஆராதனையாக செய்யவேண்டும். (இவ்விடம் ஈசுவரன் மட்டும்தானா, என்று மதவாதிகள் வாதிடலாம். ஏன் நாராயணனாக எண்ணிக்கொள் அல்லாவாக எண்ணிக்கொள். ஏசுவாக எண்ணிக்கொள். தீர்த்தங்கரராக எண்ணிக் கொள் அது அவரவர் வந்த பாதைப்படி எண்ணிக் கொள்ளலாம்.) குளம் ஒன்றுதான். அதற்கு 4 புறம் படிகள் உள்ளன. அந்தக்

குளத்தில் இறங்கி, தண்ணீர் எடுக்கப் பல படிகள் உள்ளது. அதில் எந்தப் படியில் இறங்குகிறோம் என்று வாதம் தேவையில்லை. அரிசி ஒன்றுதான். அதில் செய்யப்படும் பலகாரம், பலவிதம் இது அவரவர்கள் பழக்க வழக்கங்களை ஒட்டி வரும். ஆனால் நான் செய்த பலகாரம்தான் உயர்ந்தது. நீ செய்யும் பலகாரம் மட்டம் என்ற வாதத்திற்கு இடமே இல்லை. ஆக எல்லாம் பசி தீர்க்கும் உணவு ஆகும். நீர் எந்த மதத்தை பின்பற்றுகிறீர் என்பது முக்கியமல்ல. நீர் ஆன்மீகப் பாதையில் எவ்வளவு தூரம் முன்னேறியிருக்கிறீர் என்பதே முக்கியம். பாதைகள் எதுவாக இருந்தாலும் ஊரை அடைய ஞான வைராக்கியம் இருந்தால் போதும்.

கர்ம யோகம் (சரியை)

தாச மார்க்கம்

ஞானத்தின் மூன்று படிகளாகிய கர்ம யோகம், பக்தி யோகம், ராச யோக (வாசி யோகம்)த்தை கடந்தால் ஞானத்தை அடையலாம் என்பது ஆன்றோர்கள் முடிவு. ஆன்ம பயணத்தின் படிகளே இவைகள். இதில் கர்ம யோகம் என்பது ஞான யோகத்திற்கு முதற்படியாகக் கொள்ளலாம். சரியை, கிரியை, யோகம், ஞானம் இவைகள் தனித்தனி நெறிகளல்ல. இவை யாவும் ஒரு நிறை ஞானியாவதற்கு படிக்கற்களே.

நாம் தினம் செய்யும் அலுவல்களையும் கர்மங்களையும் தனக்கு என்று எண்ணாமல் எல்லாம் ஈசுவரனுக்கே என்று நாம் முடிவுக்கு வருவோமானால் அது கர்ம யோகம் எனப்படும்.

நாம் ஆண்டவனுக்கு அர்ப்பணமாக செய்கின்ற எந்தச் செயலும் யோகம் என்று அழைக்கப்படும். கலெக்டராக இருப்பவர் இது நமக்கு ஆண்டவன் இட்ட கர்மா என்றும், தோட்டியாக இருப்பவன் இது நமக்கு ஆண்டவன் இட்ட கர்மா என்றும், தேவாலயங்களில் தபதியாக இருப்பவன் இது நமக்கு ஆண்டவன் இட்ட கர்மா என்றும், விவசாயியாய் இருப்பவர் இது ஆண்டவன் நமக்கு இட்ட கர்மா என்றும், குயவனாக உள்ளவன் இது ஆண்டவன் இட்ட கர்மா என்றும், வியாபாரியாக இருப்பவன் இது ஆண்டவன் இட்ட கர்மா என்றும் எண்ணி அந்தந்தத் துறைக்குள்ள நிதியக் கர்மாப்படி எல்லாம் ஈசுவர செயல் என்று நினைத்து கர்மாவை முடிக்க வேண்டும். ஈசுவரனை புறஉலகில் பூசை செய்வது கர்மயோகம் (அ) சரியை என்று பெயர்.

ஞானத்தின் முதல்படியாகிய சரியை (கர்மயோகம்) என்ற முதல்படியில் இறைவனுக்கு பணியாளாகத் தொண்டு செய்தல். அவைகள் : இறைவன் திருவிளையாடலைக் கேட்டல், இறைவனைப் புகழ்ந்து பாடுதல், இறைவன் திருவடியில் இறைவனுக்குரிய மெய்த் தொண்டு செய்தல், திருமூலர் தன் திருமந்திரத்தில் சரியையும் கிரியையும் (கர்ம யோகம், பக்தி யோகம்) புற உலக பூசையென்றும், யோகம், ஞானம் (ராஜ யோகம், ஞான யோகம்) அக உலகின் பூசையென்றும் கூறுகிறார்.

சரியையைக் கடைப்பிடிப்பவர்	:	பக்தர்கள் என்றும்
கிரியையைக் கடைப்பிடிப்பவர்	:	தொண்டர் என்றும்
ராசயோகம் கடைப்பிடிப்பவர்	:	சித்தர்கள் என்றும்
ஞானயோகத்தைக் கடைப்பிடிப்பவர்	:	மெய்ஞானிகள் என்றும்

இந்த நான்கு படிகளைக் கடந்து ஞானத்தை அடைகிறார்கள்.

"பத்தர் சரியை படுவோர் கிரியையோர்
அத்தகு தொண்டரருள் வேடத் தாகுவோர்
சுத்த வியமாதி சாதகர் தூயோகர்
சித்தர் சிவஞானஞ்சென் றெய்துவோர்களே"

சைவ மதத்தைச் சேர்ந்தவர் கிரியா பாதத்தவர், சரியா பாதத்தவர், யோக பாதத்தவர், ஞான பாதத்தவர் என்று நான்கு வகைப்பட்டு மெய்ஞானம் அடைவார்கள் என்று திருமூலர் கூறுகிறார்.

"சார்ந்தமெய் ஞானத்தோர் தானவனாயினோர்
சேர்ந்தவெண் யோகத்தா சித்தர் சமாதியோர்
ஆய்ந்த கிரியையோர் அருச்சனை தப்பாதோர்
நேர்ந்த சரியையோர் நீள்நிலத்தோரே"

கர்மயோகத்தைச் (சரியை) சிறப்பாகக் கடைப்பிடிப்பவர்களிடம், தானாக பக்தி யோகமும், ஞான யோகமும் கூடிவரும் படிகளாகும். தீவிரமாக வினையாற்றுபவன் கர்ம யோகி ஆகிறான்.

நாம் வசிக்கும் பூமி சூரியனிடமிருந்து சிதறிய சிறு கோளம். பூமியிடமிருந்து சிதறிய சிறு கோளம் சந்திரன். ஆனால் இவைகள் பூமி சூரியனிடமிருந்து விடுதலையும் சந்திரன் பூமியிடமிருந்து விடுதலையும் அடையத் துடிக்கிறது. ஆனால் ஆகர்சண இயற்கை சக்தி பூமியையும், சந்திரனையும் நிலைதவறாது இருக்க இழுத்துப் பிடித்துக் கொண்டுள்ளது. அதுபோல் ஆன்ம பயிற்சிக்கு சாதகன் பந்தங்களிலிருந்து விடுபடப் பார்க்கிறான். உயிர் உள்ள பொருள், உயிரற்ற பொருள் யாவும் விடுதலையை விரும்புகிறது.

அப்படிப்பட்ட பந்தங்களில் இருந்து விடுபட சாதகன் ஒருவனுக்கு ஞானத்தின் முதல்படி கர்மயோகமேயாகும். அந்த கர்மத்தின் மூலம் ஆண்டவனை அடையலாம் என்பது கர்மயோகம் (சரியை) எனப்படும். சீவனிடம் ஞானப்பயிற்சி உண்டு பண்ணுவதே கர்மயோகம் ஆகும்.

கர்மயோக இன்பம், துன்பத்தை ஒரே ப்ாங்கில் ஏற்றுக் கொள்பவன். எல்லாம் ஈசன் செயலன்றி நம் செயல் அல்ல என்று எண்ணுபவன் கர்மயோகி. இத்தன்மையினால் தன் குணத்தையும் இயல்பையும் மேலானதாக அவன் மாற்றிக் கொள்ளும் பக்குவம் வந்துவிடும் குணசீலனாக அவன் மாற்றப்பட்டு, மக்கள் தொண்டே மகேசன் தொண்டு என்று இருப்பவர்களும் கர்மயோகிகளே.

கர்மயோகி ஒவ்வொரு வினாடியும் தாம் ஆற்றும் வினையின் மூலமாக "நான்", "எனது" என்னும் பந்தத்தை ஒழித்து எல்லாம் ஈசன் செயல் என்று இருப்பவன். நாம் ஒரு இயந்திரம், நம்மை ஆட்டுவிப்பவன் பரம்பொருள் என்று உணர்ந்து கர்மத்தைச் செய்பவன் கர்மயோகி.

நாம் ஒரு பொம்மை. ஈசன் கொடுக்கும் சாவிப்படி நாம் நடக்கிறோம் என்று எண்ணுபவன் கர்மயோகி.

தத்துவ விசாரம் செய்பவர் ஞானயோகி. அன்பை வளர்ப்பவன் பக்தியோகி. மனதை பண்படுத்தியவன் ராசயோகி. தீவிரமாக வினையாற்றுபவன் கர்மயோகி. சாதனையில் மேல் நிலைக்குப் போகுங்கால் நான்கு யோகமும் ஒன்றே, பாதைகளைப் போல்.

கர்மயோகத்தில் ஒருவன் அனுட்டிப்பது தாச மார்க்கமாகும் கோயில்களிலே தீபம் ஏற்றுதல், தெய்வத்திற்குப் பூக்கொய்து மாலையாக்கிச் சூட்டி மகிழ்தல், ஆலயத்தை மெழுகுதல், ஆலய மணி அடிக்கும் பணி, திருமஞ்சனம் சேர்த்தல் முதலிய தன்னலம் கருதாமல் தெய்வ சிந்தனையுடன் செய்தல் கிரியை (அ) கர்மயோகமாகும். கர்ம யோகத்தில் உள்ளவர்கள் இன்று அலுவலர்களிலும் வியாபாரிகளிலும் ஏன் புலால் விற்பவர்களிலும் மறைந்து கிடக்கிறார்கள். இதற்கு ஒரு வரலாறும் கூறுப்படுகிறது.

கொங்கணவ மாமுனிவர் காட்டில் தவமிருந்தார். மேலே பறந்துபோன கொக்கு தன் மலத்தை சொரிந்தது நிட்டையிலிருந்த கொங்கணவர்மீது பட்டுவிட்டது. உடனே கோபமாக அந்தக் கொக்கை இவர் பார்க்க, கொக்கு இவர் தவ வலிமையால் எரிந்து விட்டது.

நிட்டை கலைந்து நகரத்துள் வந்து திருவள்ளுவர் வீட்டில் பிச்சை கேட்டு தெருவில் நின்றார். அப்போது திருவள்ளுவரின் மனைவி வாசுகி அம்மையார் தன் கணவனுக்குப் பணிவிடை செய்து கொண்டிருந்தார். பிச்சை கொண்டு வரக் காலதாமதம் ஏற்பட்டு விட்டது.

கால தாமதமாக பிச்சையிட வந்த வாசுகி அம்மைய்யை கொங்கணவர் - மிகுந்த தவவலிமை மிகுந்தவர் - நம்மை இவ்வளவு நேரம் காக்க வைத்து விட்டாரே என்று கோபமாகப் பார்த்தார். அதற்கு வாசுகி அம்மையார் கூறினார்.

"கொக்கென்று நினைத்தாயோ கொங்கணவா" என்றார்.

கொங்கணவருக்கு ஆச்சரியமாகப் போய் விட்டது. தன் பெயர் கொங்கணவர் என்று எப்படி இந்த அம்மையாருக்குத் தெரியும். மேலும் காட்டில் கொக்கு எரிந்த சம்பவம் எப்படி இந்த அம்மையாருக்குத் தெரியும். இவர் பெரிய ஞானி என்று உணர்ந்து, அவரிடம் ஞானம் ஏற்பட்ட விதம் கேட்க, அதற்கு வாசுகி அம்மையார் இந்த தெருக் கோடியில் கசாப்பு கடை வைத்திருப்பவரிடம் போய் கேளுங்கள் என்று அனுப்பி வைத்தார்.

கொங்கணவர் நம் தவ வலிமை என்ன, நம்மைப் போய் கசாப்புக் கடைக்காரனிடம், போகச் சொல்வதா என்று எண்ணி வருத்தமுற்று கசாப்பு கடைக்காரனிடம் சென்றார். கொங்கணவர் வந்து கசாப்புக் கடைப்பக்கம்

நின்றார். கசாப்புக் கடைக்காரன் கொங்கணவரைப் பார்த்து ''வாசுகி அம்மையார் இவ்விடம் அனுப்பினார்கள் என்று எனக்குத் தெரியும். கொஞ்சம் அப்படி நில்லுங்கள். இந்த வேலையை முடித்துவிட்டு வருகிறேன்'' என்றான்.

கொங்கணவருக்கு மேலும் பெரும் ஆச்சரியமாகப் போய் விட்டது. வாசுகி அம்மையாரை விட இவன் ஞானத்தில் உயர்ந்தவனாக இருப்பான் போலும் என்று எண்ணி கசாப்புக் கடை ஓரம் நின்றிருந்தார். கறி விற்பவன் எல்லாம் முடிந்து தாய், தந்தையை நீராட்டி, சீராட்டி அவர்களை வணங்கியபின், கொங்கணவரிடம் வந்து, யாது காரணமாக என்னிடம் வந்தீர்கள் என்று கொங்கணவரைக் கண்டு கேட்கின்றார், கசாப்புக் கடைக்காரர்.

கொங்கணவர் கேட்கிறார்: ''நாங்கள் முற்றும் துறந்த பற்றற்ற ஞானிகள். முக்காலமும் தெரிந்தவர்கள். நாங்கள் இந்நிலை அடைய நீண்ட நாட்களாக ஆண்டவனையே நினைத்துத் தவமியற்றி பெறுகிறோம். நீங்கள் எப்படி இப்படிப்பட்ட ஞானத்தைப் பெறுகிறீர்கள். மேலும் ஆன்மாவைப் பற்றியும் விளக்கம் கேட்டார். இப்படிப்பட்ட ஞானமுள்ள நீவீர் ஏன் இந்த கொலைபாதகத் தொழிலில் ஈடுபட்டுள்ளீர்கள் என்று கேட்கிறார்.

அதற்கு கசாப்புக் கடைக்காரர் கூறுகிறார். தொழில்கள் எதுவும் இழிவானது அல்ல. ஆண்டவனால் அளிக்கப்பட்ட தொழிலை அந்தந்தத் தரும நீதிப்படி செய்யவேண்டும். அந்தத் தொழிலில் பற்று வைக்காமலும், இல்லறத்தில் பற்று வைக்காமலும் நம் கடமையை இல்லறத்தில் உள்ளோர்புகளுக்கு முறைப்படி சுயநலமற்று கடமை தவறாமல் செய்வதும் ஒரு யோகமே. அதுவே கர்மயோகமாகும்.

கடமை என்பது ஒழுக்கம் என்ற பொருளில் இருந்தாலும், அன்பு என்ற பொருளிலிருந்தாலும் அதன் குறிக்கோள் மற்ற எல்லா யோகங்களைப் போலவே நம்மிடமுள்ள இழி குணங்களைக் களைந்து உயர்ந்த குணங்களை தரும். தொடர்ந்து கர்மாவை கடமையுணர்வுடன் சுயநலமின்றி செயல்பட்டால் இறுதியில் ஆன்மா வடிவம் காணலாம் என்பதே கர்மயோகமாகும் என்று கூறினார்.

சுயநலமில்லாமல் கடமையைச் செய்து கொண்டே போனால் இறுதியில் கடமை என்ற நினைவு நம் மனதில் இல்லாமல் காரியங்களைத் தானே செய்து கொண்டு போகும். அதற்கு எந்தவிதப் பற்றும் கிடையாது. இப்படிப்பட்ட பற்றற்ற தன்மையே பெரிய வழிபாடு அல்லது அதைவிட மேல்நிலைக்குக் கொண்டு போய் மற்ற யோகங்களைப்போல் ஆன்ம நிலை தன்னால் உணர ஏதுவாகும் என்று கூறுகிறார்.

அலையும் மனதை ஒருமுகப்படுத்த உதவுகிறது கர்மயோகம். இதை சித்தம் சுத்தி அடைதல் என்பதாகும்.

எல்லாம் நான் செய்தேன். என்னால் முடிக்கப்பட்டது என்று ஆணவம் இல்லாமல், நான் ஒரு கருவி. நடந்தது யாவும் ஈசன் செயல், நடக்கப் போவதும் ஈசன் செயல் என்று சித்தத்தைச் சுத்தியாக்குவது கர்மயோகமாகும்.

நீ உன் கடமையைச் சரிவரச் செய். நடப்பவைகளை நான் பார்த்துக் கொள்கிறேன் என்று கீதையில் கண்ணன் கூறுவதும். அதன்படி நம் கடமையைச் செய்வோம். விளைவுகள் ஆண்டவன் கையில் என்று சித்தம் சுத்தியாவதே, கர்ம யோகப் பலன்.

திருநீலகண்டர் ஒரு குயவர் அவரிடம் உள்ள சட்டி, பானைகளை விலை கேட்பாரிடம் அவர் நான்கு காசு திருநீலகண்டம், 3 காசு திரு நீலகண்டம் என்று கூறுவார். நான் வியாபாரம் செய்யவில்லை. என் உடல் செய்கிறது. ஆனால், அதன் நல்லவை கெட்டவை திருநீலகண்டத்தைச் சேர்ந்தது என்ற வைராக்கிய எண்ணம் கர்ம யோகமாகும்.

நாம் எடுத்த பிறவியின் முடிவுவரை நான் செயல்படவில்லை, என் செயலெல்லாம் ஈசுவரனின் அதிகாரத்திற்குட்பட்டு வினையாற்றுகிறது என்ற சித்த சுத்தியுடன் செயல்படும் தன்மைக்குக் கர்ம யோகம் என்று பெயர்.

எனக்கு மூன்று பிள்ளைகளும் மூன்று பெண்களும் ஆண்டவனால் அளிக்கப்பட்டது. அதைப் பேணித் தர்ம சாத்திரப்படி காப்பதே என் கர்மாவின் பயன். அதுவே கர்ம யோகமாகும். நான் அவர்களை வளர்க்கவில்லை. என் கடமையைச் செய்தேன். அவர்கள் என்னைக் கொண்டு ஆண்டவனால் வளர்க்கப்படுகிறார்கள். அவர்கள் பெறும் பேரும் புகழும் ஆண்டவனைச் சார்ந்தது. என்னால் அல்ல. "நான்", "எனது", "என்னால்" என்ற அகங்காரம் நீக்கி அவன் ஆட்டியபடி நாம் ஆடுகிறோம் என்ற சித்த சுத்தியே கர்மயோகமாகும்.

நான் கோயில் கட்டினேன். குளம் வெட்டினேன். எனக்கு இறைவன் ஒரு நன்மையும் செய்யவில்லை, ஏற்படவுமில்லை என்று எண்ணுதல் கூடாது. பலனை எதிர்பார்க்காமலும் "நிட்காமியமாக"வும் செய்யும் பணியும் கர்மயோகமாகும். நீ கட்டவில்லைக் கோயிலை, உன்னால் ஆண்டவன் கட்டிக் கொண்டார். ஆனால் நான் கட்டியதாக ஆணவமடைகிறாய். நீ ஒரு பொம்மை. உனக்குச் சாவி கொடுத்து இயக்கியவர் இறைவர் என்பதை அறியும் சித்த சுத்திக்கு கர்ம யோகம் என்று பெயர்.

நான் தினம் இந்தக் கோயிலை மெழுகிக் கோலமிட்டுச் சுத்தப் படுத்தினேன். நான் தினம் பூஞ்சோலை சென்று பூப்பறித்து மாலையாக்கி இறைவனுக்குச் சூட்டினேன். ஆனால் எனக்கு ஒரு பயனும் இல்லை என்று எண்ணாதே. நான், என்னால் என்னும் ஆணவம் நீங்கி, பயன் கருதாது செய்யும் கடமைக்குக் கர்ம யோகம் என்று பெயர். நமக்கு என்ன கொடுக்க வேண்டும், நம்மை எப்படிப்பட்ட தன்மையில் கொண்டு செல்லவேண்டும் என்பது இறைவனுக்குத் தெரியும். நீ உன் கடமையைச் செய். பலனை ஆண்டவன் உனக்கு அளிப்பார். பயன் எதிர்பார்க்காமல் எல்லாம் இறைவன் செயல் என்று நீ செயல்படும் தன்மைக்குக் கர்ம யோகம் என்று பெயர்.

உடைத்த கல்லில் ஒன்று தெய்வ விக்ரகம், ஒன்று வாசற்படி, ஒன்று உத்திரம், ஒன்று நடைபாதைக்குப் போடுகிறோம்.

ஓசை உள்ள கல்லை நீர் உடைத்திரண்டாய் செய்துமே
வாசலில் பதித்தகல்லை மழுங்கவே மிதிக்கிறீர் -

பூசனைக்கு வைத்த கல்லில் பூவும் நீரும் சாத்துறீர்
ஈசனுக்கு உகுந்தகல் எந்தக்கல்லு சொல்லுமே? -சிவ வாக்கியம்

எல்லாக் கல்லும் ஒன்றே என அறியவும். படைப்பில் வித்தியாசம்.

அதனதன் தன்மையில் அது உள்ளது. அதுபோல் ஆன்மா அதனதன் கர்ம வினையில், ஒன்று மந்திரி, ஒன்று பிச்சைக்காரன், ஒன்று யோகியாக பிறக்க வைக்கிறார். அதனதன் கர்மாவை சாத்திர முறைப்படி செயல்படுத்தல் கர்ம யோகமாகும்.

கர்ம யோகம், பக்தி யோகம், தியான யோகம், ஞான யோகம் என்று நான்கு விதமாக ஞான வழிக்கு பிரிக்கப் பட்டுள்ளதே தவிர, ஒரு யோகத்தில் இன்னொரு யோகம் கலந்தே வருகிறது. பக்தி யோகிக்கு கர்மமோ, தியானமோ இல்லை என்றும், கர்மயோகிக்கு பக்தியோ, தியானமோ இல்லை என்றோ, தியான யோகிக்கு, பக்தியோ, கர்மமோ இல்லை என்றும் கூறிவிட முடியாது. ஒன்றுடன் ஒன்று கலந்தே வரும்.

ஒரு பெரிய நகரத்திற்குப் போகும் பாதைகள் நான்கு விதமாக உள்ளதுபோல், ஞானநிலை பெற, நான்கு வித யோகப் பாதைகளை ஞானிகள் வகுத்துள்ளார்கள். ஒரு நகரத்தை அடைய, கார்களிலும், பேருந்திலும், ரயிலிலும், விமானத்திலும் போய்ச் சேரலாம். அதுபோலவே, ஞானநிலை பெற நான்குவித யோகப் பாதைகளை ஞானிகள் கையாளுகின்றனர். அதில் சித்தமகா புருசர்கள் ராச யோகத்தையே (விமானம்) பெரிதும் கடைப்பிடித்து ஞானங்களைப் பெற்று பரபிர்மத்துடன் ஒன்றி விடுகிறார்கள். இங்கு நம் பூண்டி மகான் போன்ற ஞானிகள், ராச யோகத்தையே ஆரம்ப நிலையில் பயிலுகிறார்கள் என்று நாம் உணர வேண்டும். ராச யோகமென்பது தன்னுள்ளே ஈசனைக் காண தன் அக உடலால் செய்யும் யோகப் பயிற்சியே ராச யோகம் என்று பெயரிடுகின்றனர். அது ஞான யோகமாகும். அதுவே ஞானத்தின் பெருநிலை ஆகும்.

"கருத்துடன் என் கடமையைச் செய்வதே உன் வழிபாடு என்பதை இறைவா, நான் நன்கு உணர்ந்து விட்டேன்.

"செய்கருமத்தே யன்றிச் சேரும் பயன்தன்னில்
ஐயவுனக் கில்லை அதிகாரம்." -பகவத் கீதை

கடமையைச் செய்வதே கடவுள் வழிபாடு. ஆகையால் அந்தக் கடமையில் உயர்வானது தாழ்வானது என்பது கிடையாது. சுய நலம் படைத்தவனே கடமையைத் தொல்லை என்று எண்ணுகிறான். சலிப்பும், சஞ்சலமும் சுயநலத்திலிருந்து பிறக்கும் குழந்தை. ஆகையால் கடமையைக் கருத்துடன் செய்யாதவன், ஒழுக்க நிலை தவறியவன். தன் கடமையைத் தொடர்ந்து செய்பவன் இறைவனுக்கு உகந்த கருவியாவான்.

கர்மயோகம் குழந்தையிலிருந்து வாழ்வு துவங்குவது போன்று யோக நிலைக்கு முதல் சாதனம் சரியையில் துவங்குகிறது. பின்பு கடைசிவரை அது பின்பற்றப்பட்டு ஞானநிலை அடைகிறது. ஒரு குடும்பத்தில் பிறந்து வளரும்

குழந்தைக்கு முதலில் வாழ்க்கை நெறிகள் கற்பிக்கப்படுகிறது. தாய் தந்தையர் சொற்படி பணிந்து நடக்க வேண்டும். தாய் தந்தையரின் ஒழுக்க நிலைகண்டு அது பின்பற்றுகிறது பழக்கத்தால் நல்ல வாழ்க்கை வாழுதலில் படிந்து விடுவது கர்மயோகமாகும்.

நாடும் நகரமும் நற்றிருக் கோயிலுந்
தேடித் திரிந்து சிவபெருமான் என்று
பாடுமின் பாடிப் பணிமின் பணிந்தபின்
கூடிய நெஞ்சத்து கோயிலாய்க் கொள்வானே - திருமந்திரம்

முழுமுதற் கடவுளான சிவபெருமானை நாடு நகரத்திலும் கோயிலிலும் தேடி அவர் புகழ் பாடி பணிந்தால், தொண்டு ஆற்றினால் நம் நெஞ்சம் கோயில் எனச் சிவபெருமான் உறைவார் என்று திருமூலர் கூறுகிறார்.

"பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு" -குறள்

பற்றுதல் இல்லாத கடவுளை மட்டும் பற்றிக்கொள்ள வேண்டும். மற்றவைகளின்மேல் உள்ள பற்றுக்களை அறுக்க வேண்டும். அப்படி அறுக்க அந்த பற்றற்ற இறைவனைப் பற்றிக் கொள்ள வேண்டும் என்று தெய்வப் புலவர் திருவள்ளுவர் கூறுகிறார். இப்படிப்பட்ட பக்தி வழிக்கே கர்மயோகம் என்று பெயர்.

புலன் ஐந்தும் பொறி ஐந்தும் மனதால் இழுக்கப்படாமல், மனதால் இவைகளை கட்டுப்படுத்தி எவன் கர்மயோகம் என்னும் தொழில் நிலையில் ஈடுபடுகிறானோ அவனே கர்மயோகி.

மனிதனுக்கு ஆண்டவன் அருளால் எந்தத் தொழில் விதிக்கப் பட்டிருக்கிறதோ அதையே செய். எந்த தொழிலும் பற்றில்லாமல் எல்லாம் ஈசன் செயல் என்று இறைக் கடமையைச் செய். அதுவே கர்மயோகம். பற்றில்லாத தொழிலை செய்கிறவன் பரம்பொருளை அடைய வழி வகுத்துக் கொள்வான். நம் நலம் மட்டும் கருதாமல் உலக நலன்களையும் கருதி செய்யும் தொழில் கர்ம யோகமாகும்.

பற்றுடைய சன்யாசியை விட பற்றற்ற கொலைகாரனே கர்மயோகி ஆவான். உதாரணமாக, ஒரு ஊரில் ஒரு பாழ் அடைந்த கோயில் அருகில் ஒரு தாசி, தன் விபச்சார தொழிலை செய்துகொண்டு இருந்தாள். சில நாள் கடந்து அந்த கோயில் மறுபக்கம் ஒரு சன்யாசி வந்து அமர்ந்திருந்தார்.

சன்யாசி தாசி செய்யும் விபச்சாரத் தொழிலைக் கண்டு கேவலமாக எண்ணி ஒரு நாளைக்கு எத்தனை பேர் வருகிறார்கள் என்று கணக்கிட, ஆள் ஒன்றிற்கு ஒரு கல்லாக எடுத்து ஒரு பக்கம் போட்டுக் கொண்டு வந்தார். அது பெரிய குவியலாகக் கூடி விட்டது.

ஒருநாள் சன்யாசி அமர்ந்திருந்த பக்கம் தாசி வர நேர்ந்தது. சன்யாசி தாசியைக் கண்டு, அடி, பாதகப் பெண்ணே, ஏன் இந்த ஈனத் தொழிலைச் செய்து பாவத்தை சேர்த்துக் கொள்கிறாய். நீ செய்த பாவத்தின்

எண்ணிக்கையே இந்த கற்குவியல். அந்த பாதகச் செயலை இன்றோடு விட்டுவிடு என்றார்.

தாசி கூறினாள்; ''சுவாமி அது என் குலத்தொழில். நான் உயிர் வாழ வேறு வருமானமில்லை. அதனால் இப் பாதகத் தொழில் செய்து பிழைக்கிறேன்'' என்றாள். சன்யாசி தாசியைப் பார்த்து இன்றுடன் இதை விட்டுவிடு என்றார். அதற்குத் தாசி, இது என்கர்மா, நான் என்ன செய்வது என்று கூறி போய்விட்டாள்.

தாசி வீடு சென்று சன்யாசி கூறியதுபோல் நாம் இவ்வளவு பாவமா செய்துள்ளோம். இறைவா! என்னை ஏன் இந்த பாவச் செயல் புரியும்படி பிறக்க வைத்தாய் என்று நினைத்து அன்றையிலிருந்து விபச்சாரம் செய்யும்போது ஈசனை நினைத்து ''கூடிய விரைவில் என்னை இந்த பாபச் செயலிலிருந்து விடுபடச் செய் என்றும், எல்லாம் சிவன் செயல், என்னால் ஒன்றுமில்லை'' என்று நினைத்து மனதால் கெடாமல் இறைவனை நினைத்து உடலால் தன் கர்மாவை அனுபவித்து வந்தாள்.

தொடர்ந்து நடந்துவரும் விபசாரத்தில் எவ்வளவு ஆண்கள் வருகிறார்கள் என்று அந்த சாமியார் ஒவ்வொரு கல்லாக போட்டது பெரிய கற்குவியல் ஆகிவிட்டது.

ஒருநாள் இருவரும் மாண்டனர். தாசியைச் சொர்க்க லோகத்திற்கும், சன்யாசியை நரக லோகத்திற்கும் எமதூதர்கள் அழைத்துச் சென்றனர்.

சாமியார் எமதூதர்களைப் பார்த்து ''இது என்ன அநியாயம், நான் சாது, எனக்கு நரகம். விபச்சாரப் பாவம் செய்தவளுக்குச் சொர்க்கமா'' என்று கேட்டார்.

அதற்கு எமதூர்கள் கூறினார்கள்.

சன்னியாசியே! தாசி தனக்குவந்த கர்மாவை இறைவன்பால் போட்டுவிட்டு எப்போதும் மனதில் ஆண்டவ்னை நினைத்து உடலால் கெட்டுத்தன் தாசி கர்மாவை சரிவரச் செய்தாள். தாசிக்குரிய கர்மாவில் அவள் தன்னை உடலால் கெடுத்துக் கொண்டாள். ஆனால் அவள் உள்ளம் ஆண்டவன் பால் எப்போதும் நிலை நிறுத்தியிருந்தாள். அதனால் அவளை சொர்க்கத்திற்குக் கொண்டு போகிறோம்.

நீ முற்றும் துறந்த சன்யாசி. நீ உன் சன்யாசி கர்மாவைச் சரிவரக் கடைப்பிடிக்காமல், தாசியின் நடவடிக்கையை கவனித்து உன் மனதைச் செலுத்தி விட்டாய். உன்னிடம் இறை பக்தி சிறிதளவுமில்லை. நீ கொண்ட சந்யாசி கோலத்தின்படி உன் சந்யாசி கர்மாவை நீ சரிவர நடக்காத காரணத்தால் உன்னை நரகத்திற்கு கொண்டு போகிறோம்.

தாசி உடலால் கெட்டதால், அவள் உயிரற்ற உடல் பூ உலகில் ஒரு ஊரின் ஒதுக்குப்புறமாக நாயும், நரியும், காக்கையும் கொத்துகிறது பார். நீ உடலால் சந்நியாசி ஆனதால் உன் உடலைப் பக்தர்கள் எப்படி அலங்காரம் செய்து எவ்வளவு ஆடம்பரத்துடன் இடுகாட்டிற்கு எடுத்துச் செல்கிறார்கள் பார் என்று எமதூதர்கள் சந்நியாசிக்கு பூவுலகில் நடப்பதைக் காட்டினார்கள்.

அதனால் ஆண்டவன் தனக்கிட்ட தொழில் நம் கர்மா என்று நினைத்து ஆண்டவன் பேரில் போட்டு விட்டுச் செயல்பட வேண்டும்.

இதன்படி உனக்கு ஆண்டவனால் இடப்பட்ட கர்மாவை நீ, ஆண்டவன் செய்கிறார், நான் செய்யவில்லை என்று நினைத்து, அதனால் பிரதி பலன் எதிர்பார்க்காமல் செய்ய வேண்டும். இது கர்ம யோகமாகும். நம் கர்மாவை ஒழுங்காகச் செய்து கொண்டு வந்தால் அந்தக் கர்மாவைக் கொண்டே இறைவன் நமக்கு முக்தி நிலை கொடுப்பார். இக்கர்ம யோகத்தை நம் போன்ற உலக மாந்தர்கள் நெறி தவறாமல் கடைப்பிடித்து வந்தால் நாமும் ஒரு பிறவியில் (அ) ஒரு காலத்தில் ஞானியாவோம். ''செய்யும் தொழிலே தெய்வம்.'' அந்தத் தொழில் தன்னலமில்லாமல் இருக்க வேண்டும்.

நீ எதைச் செய்கிறாயோ அதை ஈசுவரனுக்கு அர்ப்பணம் என்று காணிக்கையாக்கிவிடு. அது உன்னுடையது என்பதை மறந்து விடு. பலனை ஈசுவரன் அளிப்பார். இதுவே கர்ம யோகமாகும்.

புலன்களும், மனமும் உணவும்தான் ஆசைகள் தங்குமிடம். இந்த மூன்றும் ஆசையால் அறிவை ஆட்டிப் படைக்கிறது. புலன்களை கட்டுப்படுத்தி விட்டால் மனம் கட்டுக்கடங்கிவிடும். அறிவு வெளிப்பட்டால் ஆத்ம ஞானம் பெற வழி ஏற்படும். இதுவே கர்மயோகத்தின் படிகளாகும்.

இயக்கத்தில் இயங்காமையும், இயங்காமையில் இயக்கத்தையும் காணக் கூடிய சக்தி எவனுக்கு இருக்கிறதோ அவனே பேரறிவாளி ஆவான். அவன் எந்தத் தொழில் செய்தாலும் தவம் செய்வதுபோல் செய்வான். அவனே கர்மயோகி.

ஆசையில்லாமல் எவன் செயல்களைச் செய்கிறானோ அவனுடைய செயல்களெல்லாம் ஞான நெருப்பில் புடம் போட்டு எடுக்கப் பட்டவைகள். அவனே கர்மயோகி ஆவான்.

தன்னால் ஒரு செயலும் ஆகவில்லை. எல்லாம் இறைச்செயல் என்று எண்ணிவரும் இலாபத்தில் விருப்பு வெறுப்புமின்றி, வெற்றி தோல்வியைப் பற்றிக் கவலைப்படாமல் சமநிலையில் இருப்பவன் கர்மயோகி ஆவான். இது தொடர்ச்சியே ஞான நிலைக்கு அவன் தள்ளப்படுகிறான்.

மிக மோசமான முட்டாள்கூட தன் சுயநலமில்லா காரியங்களைச் செய்து கொண்டு பொறுமையுடன் இது நமக்கு ஆண்டவன் இட்ட கட்டளை என்றிருந்தானானால், உலகம் முழுதும் ஒரு நாள் அவன் நிச்சயம் ஆள்வான்.

அன்பு, சத்தியம், ஒழுக்கம், சுயநலமில்லாமை இவைகள் எல்லாம் வெறும் ஒழுங்கு கட்டுப்பாடு மட்டும் இல்லை. அது மனிதனுக்குக் கொடுக்கும் மிகப் பெரிய ஆற்றல் உடையதாகும். அந்த ஆற்றலே நாளடைவில் ஞானநிலைக்குப் படிகளாகும்.

நாமாக எந்த வேலையையும் தேடிச் செல்லக் கூடாது. வந்த வேலைகளைப் புறக்கணிக்காமல் பயன் கருதாமல் செய்து வந்தால் சில நாட்களில் நம்மை சுயநலவாதியிலிருந்து பிரித்துவிடும். சுயநலம் விட்டவனை சேர்க்க நமக்கு வந்த வேலையை விட்டுவிடக் கூடாது. இது ஆண்டவனால் நமக்குக் கொடுத்த கர்மா என்று நினைத்து செயல்பட்டு

வந்தால், நம்முள் மறைந்துள்ள நம்முடைய எல்லா ஆற்றல்களும் ஒன்று சேர்ந்து நம்முள் மறைந்துள்ள ஞானமும் வெளிப்படும்.

பயன் கருதாமல் கர்மாவை ஆண்டவன் பணி என்று செயல் தந்தை மகனுக்குப் பயன் கருதாது தன் கடமை செய்தலும் மனைவி கணவன் மகனுக்கு பயன் கருதாத கடமை செய்வதும், மனிதன் தன் நாட்டிற்குப் பயன் கருதாமல் செய்யும் கடமை செயலும், பக்தன் ஆண்டவன் தொண்டில் சுயநலமில்லா பயன் கருதாத தெண்டும், குருவிற்கு தன் சீடன் சுயநலமில்லாமல் பயன் கருதாத செய்யும் கடமையும், கர்ம யோகங்களாகும். பயன் கருதாது செய்யும் கடமையின் முதிர்ச்சி மன ஆற்றல் பெறக் கூடிய நிலை வந்துவிடும் மன ஆற்றல் உள்ளவனே ஞானி ஆகும். ஞானம் அடைய அவ்வரவர் பக்குவத்திற்குத் தகுந்தபடி ஞானிகள் வழி கூறுகிறார்கள். அதில் ஒருபடியே கர்மயோகம்.

கர்ம பலனைப்பற்றி மனதில் உண்டாகும் கற்பனை சக்திக்கே சங்கற்பம் என்று பெயர்.

இனி கிடைக்கப் போகும் பலனை மனம் இப்போதே கணக்குப் போடுகிறது.

இப்படிப்பட்ட ஆசைகள் எழும் வேகத்தால் எண்ணில்லா கோடி எண்ணங்கள் உதிப்பதே சங்கற்பம் எனப்படும். இதனால் மனம் சலனமடைகிறது. மன சலிப்பு (அ) மன அலைச்சல் இருக்குமளவுக்கு யோகி ஆக முடியாது; எண்ணங்களை ஒடுக்கினால் ஆசைகளைத் துறக்கச் செய்யும். ஆசைகளற்ற தன்னலம் கருதாத மனது உறுதி பெற்றவனே யோக நிலைக்கு உகந்தவன். அவனே கர்மயோகி.

சுகதேவரோ பெரிய மகான். அவர் வேதங்களை ஒழுங்கு படுத்திய வியாசர் மகன். எல்லா நாடுகளிலும் போற்றப்படும் பெரிய மகான் சுகர். தேவமாதர்களையும் கண்டு மயங்காத நித்தியப் பிரம்மச்சாரி சுகதேவர். ஒருமுறை சுகர் தவம் செய்ய வியாசரைவிட்டுப் போகும்போது வியாசர் சுகரைத் தொடர்ந்து சென்றார். செல்லும் வழியில் கங்கையில் தேவ மங்கையாகிய அரம்பை நீராடிக் கொண்டிருந்தார். சுகர் முன்னே சென்றார். அவரைக் கண்டு அரம்பையர் தன் உடலை மறைக்க ஆடைகளை உடுத்தாமல் நிர்வாணமாக நீராடிக் கொண்டிருந்தார். பின் வந்த வியாசரைக் கண்டு, உடனே அரம்பை ஆடைகளைக் கொண்டு தன் உடலை மறைத்தார். இதைக் கண்ட ரம்பையின் தோழி, மகனை (சுகரை) கண்டு வெட்கமடையாத நீ, தந்தையைக் (வியாசரை) கண்டு நாணமடையக் காரணம் என்ன என்று கேட்டார்? அதற்கு அரம்பை கூறினாள். ''சுகர் உலகப்பற்றை விட்ட பெரும் ஞானி. அவருக்கு ஆசாபாசமில்லை. சுத்தப் பிரம்மச்சாரி. அதனால் அவரைப் பற்றி நாம் நாணப்பட வேண்டியதில்லை. வியாசரோ, அப்படியில்லை. ஞானியாக இருந்தபோதிலும், சுகரைப் பெற்றவர். அவருக்கு உலக பந்தம் இருக்கிறது. அதனால்தான் வியாசரைக் கண்டு நாணம் ஏற்பட்டு ஆடையால் என் உடலை மறைத்தேன்'' என்றாள்.

அப்படிப்பட்ட சுகதேவரை, ஞான தீட்சைப் பெற வியாசர், சனக மகாராசனிடம் அனுப்பினார். சனக மகாராசன் சுகருடைய ஞான

வைராக்கியத்தைச் சோதிக்க அரச சபையில் பலவித இசை, பாடல், கேளிக்கையின் நடுவில் சுகரிடம் ஒரு கிண்ணத்தில் பாலைக் கொடுத்து, இந்த சபையை ஒரு சுற்றுச் சுற்றி வர வேண்டும் என்று கூறினார்.

சுகரும் எந்தவித கேளிக்கைக் களியாட்டத்திலும் மனதைச் செலுத்தாமல் பாலில் ஒரு துளிக்கூட சிந்தாமல் 7 முறை சுற்றி வந்துவிட்டார்.

உலக நிகழ்ச்சியின் ஆரவாரத்தில் மனதைச் செலுத்தாமல் தன் கர்மமே கண்ணாக இருக்கிறாரா என்று சோதிக்கவே சனகர். சுகதேவருக்கு அப்படி ஒரு சோதனை செய்தார்.

எந்த மனிதன் தன்னைத்தான் கட்டுப்படுத்திக் கொள்கிறானோ அவன்மீது வெளி ஆற்றல் எதுவும் செய்யாது. அவன் மனமே விடுதலையுடையும் தன்மையுள்ளது.

கர்மமே கண்ணாக செயல்படும் தன்மைக்குக் கர்மயோகம் என்று பெயர்.

தன்னலம் விட்டவனுக்கு இந்த உலகம் சொர்க்கம். தன்னலம் பெரிதும் உடையவனுக்கு இந்த உலகம் நரகமாக அமைந்து விடும். தன்னலமற்றவனே கர்ம யோகியாவான்.

பக்தி யோகம்

இறைவனை வழிபடும் முறை பக்தியோக (அ) கிரியை என்று பொருள். அகமும் புறமும் ஆண்டவனை நினைத்துத் தொண்டு புரிதல் பக்தி யோகமாகும்.

இறைவனைத் தாயாய்த் தந்தையாய்த் தோழனாய் எண்ணி அக ஒழுக்கம் புற ஒழுக்கத்துடன் தன்னலம் கருதாமல் ஆண்டவன் தொண்டு புரிவது பக்தி யோகமாகும். இறைவனையே நினைத்து அவனைப் புகழ்ந்து பாடுதல், அவன் புகழ் பரப்புதல், அவனை நினைத்து நோம்பிருத்தல் போன்றவை பக்தியோகமாகும்.

ராமதாசர், புரந்தரதாசர் போன்றவர்கள் ஆண்டவன் புகழ் பாடியும் அவர்களுக்கு ஆலயம் கட்டியும் அதில் பக்தியைப் பரப்பியது பக்தி யோகமாகும். இறைவனிடம் கொண்ட இடையறாத அன்பினால் மனமுருகி தினந்தோறும் பக்திப் பாடல்களைப் பாடுபவர்களும், இறைவனிடம் தன்னை ஒப்படைத்துவிட்டு அவர் தொண்டு அவரின் பெருமைகளைப் பரப்புதலே என்றும் உள்ளவர்கள் பக்தி யோகியர்கள் ஆவார்கள்.

இதையே திருமூலர் தன் திருமந்திரத்தில்,

பக்தன் கிரியை சரியை பயில்வற்றுச்
சுத்த அருளால் துரிசற்ற யோகத்தில்
உய்த்த நெரியுற்றுணர்கின்ற ஞானத்தாற்
சித்தங் குருவருளாற் சிவமாகுமே!

இறைபக்தியுடயோன் தூய மந்திரம் முதலியவற்றை நினைந்தும் அதைப் பாடியும் தூய யோகத்தால் தன்னையும் தலைவனையும் உணர்கின்ற ஞானத்தால் சித்தம் குருவின் மண்டலப் பிரவேசத்தால் சிவன் தன்மை அமையும் என்று கூறுகிறான்.

இறைவன் பத்துத் திசைகளிலும் உள்ளார். எந்த திசையிலும் இல்லை என்று எண்ணுதல் கூடாது என்பதை உணர்ந்து அவரது திருவடிப் பெருமையை அடைக்கலம் ஆகும்போது நமக்கு மேற்கொண்டு எந்த வினையும் சேராது. வினை அறுந்தால் ஞான நிலை கைகூடும் என்கிறார் திருமூலர் பெருமான்.

''பத்துத் திசையும் பரமொரு தெய்வமுன்
எத்திக் கிலரில்லை என்பதின் அமலர்க்
கொத்துத் திருவடி நிழல் சரணெணத்
தத்தும் வினைக்கடல் சாராது காணுமே!
– திருமந்திரம்

இறைவனைத் தாயாய்ப் பாவித்து பக்திப் பாடல்கள் மூலம் பாடிப் பரப்புதல் பக்தி யோகமாகும். குற்றங்கள் பல குழந்தை செய்தாலும் தாய் மன்னித்து விடுவாள். குழந்தை செய்யும் குற்றத்தை போக்கப்

பாடுபடுவாள். பிள்ளைகளைத் தாய் நல்ல விதமாகப் பேணிப் பாதுகாப்பாள். அது போன்றே இறைவன் பக்தர்களின் குறைகளைக் களைந்து நல்வழிப்படுத்துவார். அதனால் அவரைத் தாயாகப் பாவித்துக் கொள்ள வேண்டும். இது பக்தி யோகம்.

''கன்றினுக்குச் சேதா கனிந்திரங்கல்போல எனக்கு
என்று இரங்குவாய் கருணை எந்தாய் பராபரமே! - தாயுமானவர்

''சிந்தை அவிழ்ந்து அவிழ்ந்து சின்மயமா நின்னடிக்கே
வந்தர்க்கு இன்பநிலை வாய்க்கும் பரா்பரமே!''.

''எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி எண்ணி ஏழை நெஞ்சம்
புண்ணாகச் செய்தது இனிப் போதும் பராபரமே''. - தாயுமானவர்

சித்தம் சுத்தியாக்குவதே ஆண்டவன் தொண்டு. ஆணவத்தை அகற்றி ஆண்டவன்பால் மனதை நிலைநிறுத்தி அவன் புகழ்பாடுவது பக்தி யோகமாகும். எல்லா உயிர்களையும் ஆண்டவன் பக்தியால் தன்னுயிர்போல் எண்ணுவது ஆண்டவன் சேவையாகும். ஆண்டவன் சேவை செய்தவன் வள்ளல் ஆகிறான். அவன் பிறவியை நற்பெரும் பிறவியாக்கிவிடும்.

அன்பர் பணி செய்ய எனை ஆளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலை தானே வந்து எய்துவிடும் பராபரமே! - தாயுமானவர்

சரியையின் முதிர்ச்சியே கிரியா யோகமாகும். இரண்டு புறத் தியானமாகும்.

யோகங்களில் பக்தியோகம் புற யோகமாகும். புறத் தியானத்தில் ஒருவன் முன்னேறினால் அதுவே நாளடைவில் ஞான நிலைக்கு கொண்டு செல்லும் படிகளாகும். சித்தம் சுத்தியாவதே ஞானநிலைக்கு முதல் படிக்கற்களாகும். சித்தம் சுத்தமில்லாவிட்டால் மனம் ஒருநிலைப் படாது. மனம் ஒரு நிலைப் படாவிட்டால் ஞானம் பெற மனம் தடையாக நிற்கும் கல். ஆதலால் ஞானவழி போக சித்தம் சுத்தியாக வேண்டும்.

இதையே சுந்தரர் தன்தேவாரத்தில் இறைவனைத் தந்தையாகக் கொண்டு பாடுகிறார்.

ஐயனை அத்தனை ஆளுடை ஆமாத்தூர் அண்ணலை
மெய்யனை மெய்யார்க்கு மெய்ப்பொருளான விமலனை
மையனை மையணி கண்டனை வன்றொண்டன் ஊரன்சொல்
பொய்யொன்று மின்றிப் புலம்புவார் பொற்கழல் சேர்வரே - சுந்தரர்

''உற்றார் சுற்றமெனும் அதுவிட்டு நுன்னடைந்தேன்
எற்றால் என்குறைவென் இடரைத் துறந்தொழிந்தேன்

சேற்றாய் மும்மதிலுந்திரு மேற்றளி உறையும்
பற்றே றுன்னை அல்லால் பணிந்தேத்த மாட்டேனே'' - சுந்தரர்

மேலும் சுந்தரர் தன் தேவாரத்தில் இறைவனைக் கண்ணேயென்றும், கரும்பின் சுவையே என்றும், அமுதமேயென்றும், மனமுருகிப் பாடுகிறார். இறைவனைத் தன்னுடைய மனம் எதில் அதிகம் விருப்பமுள்ளதோ, அதே பாங்கில் இறைவன் பெருமையைப் பாடி, இறைபெருமையைப் பரப்புதல் பக்தி யோகமாகும்.

கங்கை தங்கிய சடையுடைக் கரும்பே
கட்டியே பலர்க்குங்களை கண்ணே
அங்கை நெல்லின் பழுத்திடை அமுதே
அத்தா என்னிடர் ஆர்க்கெடுத் துரைக்கேன்
சங்கும் இப்பியுஞ் சலஞ்சலம் முரல
வயிரம் முத்தோடு பொன்மணி வரன்றி
ஓங்குமா கடல் ஓதம் வந்துலவும்
ஒற்றியூரெனும் ஊருறை வோனே.

கங்கையொரு மாதை தலையின் சடையில் தாங்கியிருக்கும் கரும்பே, உள்ளங்கைப் பழமே என்றும், அமுதமே என்றும் திருவொற்றியூரில் உறையும் தியாகராசப் பெருமானைப் பாடிக் கூவி அழைக்கிறார். பக்தித் தொண்டே பக்தி யோகமாகும்.

சிவாய நமவென்று சிந்தித் திருப்போர்க்கு
அபாயம் ஒருநாளும் இல்லை - உபாயம்
இதுவே மதியாகும் அல்லாத வெல்லாம்
விதியே மதியாய் விடும். -ஔவையார் "நல்வழி"

சிவபெருமானுக்குரிய ஐந்தெழுத்தை இடையறாது நினைந்து கொண்டிருப்போர்க்கு விதியால் வரும் துன்பமில்லை. ஏனையவர்க்கு அபாயம் உண்டு என்று அறியவும்.

ஆத்மத் தியானத்தைக் காட்டிலும் அதற்கு உபாயமாய் இருக்கின்ற பல தியாகத் தொண்டுடன் செயல்பாடு உடைய பக்தி யோகம் விசேடமானது. தன்னலம் கருதாத இறைத்தொண்டு பாவங்களை நீக்கி மனதிற்கு சாந்தி உடையதாகச் செய்வது பக்தி யோகமாகும்.

தேகத்தின் பொருட்டு செய்யப்படும் லௌகீக கர்மங்களாவன; யாகம், தானம், தவம், ஓமங்கள் செய்து ஆண்டவனை அடைவதும் பக்தி யோகமாகும். கீதையில் அர்ச்சுனனுக்கு பகவான் கிருட்டிணமூர்த்தி கூறுகிறார்:

"அர்ச்சுனா!

விரைவில் கிடைக்கின்ற, ஈடில்லா பெரும் பயனாய் இருக்கின்ற என்னிடத்தில் மனதை ஒரு நிலையாக்கி நீ நானாகும்படியான யோகத்தினை அடைய முயற்சித்தால் உன்னில் நானிருப்பதை உணர்வாய்.

அப்படிச் சலியாத ஒரு நிலையில் மனதை வைக்க உன்னால் முடியாத பட்சம், என்னுடைய அதிசயம் பொருந்திய சௌந்தரியம், காருண்யம், கம்பீரம் முதலியவை செய்து முடிக்கும் திறமை எல்லையில்லா என் கல்யாண வடிவை அப்பியாசம் செய்து, உன்னில் என்னைக் காண்பாய்.

அப்பியாசம் செய்வதில் உனக்குச் சாமர்த்தியம் இல்லாத போது நீ எனக்கு கைங்கரியம் செய். அதாவது, திருக்கோயிலில் சமைப்பது, பூஞ்சோலைகளை நிறுவி அதைப்பேணி பாதுகாப்பது. எனது சந்நிதானத்திற்குத் திருவிளக்கு ஏற்றுதல், கோயிலை மெழுகிக் கோலமிடல், பூமாலை தொடுப்பது, என்னுடைய பெயர்களைக் கீர்த்தனை செய்தல். திருப்பல்லாண்டு பாடுவது, தண்டன் சமர்ப்பிப்பது, மிகவும் பிரியத்தோடு எனது தொண்டைப் புரிந்து வந்தால், வெகு விரைவில் அப்பியாச யோகத்தை அடைவாய். பிறகு என்னிடம் நிலை பெற்ற மனதுடன் கூடிய யோகம் பெறத் தகுதியடைவாய். ஒருமனதுடன் கூடிய யோகத்தின் முதிர்ச்சியில் நம்மை அடையும் சித்தியைப் பெறுவாய்'' என்று பக்தி யோகத்தை பகவான் அர்ச்சுனனுக்கு கூறுகிறார்.

பக்தி யோகமென்பது ஞானநிலைக்கு இரண்டாம் படி என்று ஞானிகள் கூறுகிறார்கள். பக்தி யோகத்தால் பக்தன் தான் ஆண்டவன் தொண்டிற்கு ஒரு கருவி என்று எண்ணி, வினையாற்றுவதால் சித்த சுத்தி உண்டாகி, ஞானப்படிகளை ஏற பக்குவமடைகிறான். இறைவனுக்குத் தொண்டு செய்வதால் சீவ பேதம் போய்ப் பரபேதம் வந்து விடுகிறது.

முழு மனதையும் இறைவன் தொண்டிற்கே ஒப்படைத்துவிட வேண்டும். மனம் வெளி உலகத்தின்பால் நாட்டம் உடையது. அதை இறைவன்பாலும் இறைவன் தொண்டின் பாலும் திருப்ப வேண்டும். இப்படி இறைவன்பால் திரும்பும் மனது யோக அப்பியாசத்திற்கு தகுதி உடையதாகும்.

உலகில் உண்டாகும் பாவ, புண்ணியங்களை விருப்பு வெறுப்பு மின்றி செயல்படும் கர்மாவுக்கு கர்ம பற்றுதல் அற்று விடும். இவ்வித மனோபாவத்துடன் செயல்படும் கர்மம் முடிவில் கடவுளிடம் கொண்டு போகும் வழியாக ஏற்படும். இத்தன்மை பக்தியோகம் எனப்படும்.

கர்மயோகத்தில் ஆண்டவன் விக்ரகவடிவாக இருந்து, வழி படுவோனுக்கு வேறாக இருந்து அருள் புரிவார். பக்தி யோகத்தில் மந்திர வடிவமாய் மனத்துள் தோன்றுவான். தியான யோகத்தில் தன்னுள் உள்ளொளியாய் திகழ்வான். ஞானத்தில்தான் அதுவாகி நம்மை தானாக்கிக் கொண்டு ஏக பிர்மமாய் உருவாவான். அதனால் பரபிர்மத்தில் கலப்பதற்கான படிகளே இந்தக் கர்ம, பக்தி, தியான யோகங்கள் என்பது ஞானிகளின் கூற்றாகும்.

அருவத்தை (உருவமற்றதை) தியானிப்பது கடினம். முதலில் உருவத்தை தியானித்த பிறகு அருவமான பொருள் நமக்குக் கிடைக்கும்.

"உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
வருவாய் குகனே"

என்ற பாடலை நாம் கவனித்தால் முதலில் உருவாக வணங்க வேண்டும். அதற்கு பிறகு உள்ளதாகத் தியானிக்க வேண்டும்.

பக்தி யோகம் என்றால் இறைவனைப் பற்றுதல். முடிவான ஒப்பற்ற இலட்சியத்தைப் பற்ற வேண்டும். பற்றற்ற பொருளைப் பற்றுதல் வேண்டும்.

அத்திப்பழத்தினுள் உள்ள சிறு பூச்சிகள் நினைப்பது; நாம் ஒரு பெரிய கோட்டையில் யாராலும் அசைக்கமுடியாத நிலையில் இருக்கிறோம் என்று எண்ணி அதனுள் உள்ள இனிப்பை உண்டு மகிழுமாம். சிலநாளில் பழம் மரத்திலிருந்து கீழே விழுந்து விட்டால், பூச்சிகளெல்லாம் அழிந்துவிடுமாம். இதுபோல் நாம் இப்பிரபஞ்ச வாழ்க்கையில் பற்றுடன் போலி வாழ்க்கையில் வாழ்கிறோம். பற்று அறுபட வேண்டுமானால் ஆண்டவன் மேல் பற்றும் அவர் தம் தொண்டுமே சிறந்த வழி. இதுவே பக்தி யோக வழியாகும்.

தன் மனதை ஏமாற்றாத ஒருவனே இறைவன் சந்நிதானத்தை அடையப் பெறுவான். அதாவது கள்ளம் கபடமற்ற தன்மையும் உண்மையான அன்பும் பரமனை அடைய நேரான பாதைகள் ஆகும். அதுவே பக்தியோகமாகும்.

பக்தி யோகத்தில் பகவத் நாமத்தைப் பல தடவை உச்சாடனம் பண்ணுதல், உபவாசமிருத்தல், தீர்த்தயாத்திரை போதல், சாம கிரியை களையும் பூசை பண்ணுதல் முதலியவை பக்தி யோகமாகும்.

அன்பின் உருகு வனாளும் பணிசெய்வன்
செம்பொன் செய்மேனி கமலத் திருவடி
முன்புநின் றாங்கே மொழிவ தெனக்கருள்
என்பினுட் சோதி இலங்கு கின்றானே.

இறைத் தொண்டு செய்பவன் எல்லையில்லா இறைவன்பால் உருகுவானாம். அவன் இறைவன் திருவடித் தொண்டை எந்நாளும் செய்வான். பொன்போல உடம்பும் செந்தாமரை போன்ற திருவடியை உடைய சிவன் ஒரு மெய்யடியாரை ஊர்ந்து செறிந்த அறிவொளியாய் விளங்குவான் என்ற இறை பக்தியை திருமூலர் கூறுகிறார்.

பக்தி யோகத்தில் தலை சிறந்த சிகா மணிகள் 1. புண்டரீக சுவாமிகள், 2. பக்த நாம தேவர், 3. பக்த கோரக் கும்பர் 4. துகாராம் சுவாமிகள், 5. சோக மேளர், 6. ஏகநாத சுவாமிகள், 7. பானுதாசர், 8. ராமதாசர், 9. புரந்தரதாசர், 10. பக்தநரஹரி, 11. சக்குபாய் அம்மையார் போன்றவர்களும் பொய்கை ஆழ்வார், பூதத்தாழ்வார், நம்மாழ்வார், பெரிய ஆழ்வார், தொண்டரடிப் பொடியாழ்வார், மதுரகவியாழ்வார், ஆண்டாள் போன்றவர்கள் இறைவனை தாயாகவும், தந்தையாகவும், தோழனாகவும், கணவனாகவும் நினைந்து பாடித் தொண்டு செய்து முக்தியை அடைந்தவர்கள் ஆவார்கள்.

"நயேன் பிறர்பொருளை நள்ளேன் கீழாரோடு
உய்வேன் உயர்ந்தவரோடு அல்லால் - வியவேன்
திருமாலை அல்லது தெய்வம் என்று ஏத்தேன்
வருமாறு எம்மேல் ஆணை -பொய்கையாழ்வார்

என்று திருமாலைப் பாடித் தொண்டு செய்து பிறகு ஆத்ம விசாரணை செய்து முக்தி அடைந்தார்.

இறைவனைத் தாயாக, தந்தையாக, நண்பனாக, குருவாக, தோழனாக நினைந்து, பக்தியுடன் அவர்களைத் தொழுதல் வேண்டும். அருணகிரிநாதர் பாட்டன் பாட்டியாக இறைவனைப் பாடி இன்புறுகிறார்.

"ஆத்தாள் குறத்தியென் அப்பன் குமரன் அரனெனக்குப்
பார்த்தால் ஒருமுறை பாட்டனு மாம்பதினாலகும்
காத்தாளென்பாட்டி நற்காமனென் மாமன் கனகவெற்பைப்
பேர்த்தாலும் பேர்க்க ஒண்ணாப் பிள்ளையாரென் பெரியப்பனே"

கிரியா சக்தியாகிய வள்ளியம்மையையும் குமரக்கடவுளையும் தாய் தந்தையாகவும், பரமசிவனாரும் பதினான்கு உலகத்தைக் காத்தருளும் பார்வதியும் பாட்டனும் பாட்டியாகவும், மன்மதன் தாய் மாமனாகவும், (வள்ளியும் மன்மதனும் திருமாலின் புத்திரி புத்திரன் ஆவார்கள்) குமரக் கடவுளின் அண்ணன் விநாயகர் தனக்குப் பெரியப்பா ஆகும் என்று முறை வைத்துக் கவிபாடி மகிழ்கிறார், அருணையம்பதி வாழ் திருப்புகழ் மாமணி அருணகிரி நாதர்.

வள்ளலார் பெருமான் சிவபெருமானை தந்தையாகவும், கணவனாகவும், தோழியாகவும், தன் திருமறையில் பாடி பக்தியைப் பரப்புகிறார்.

"தாயுமென் னொருமைத் தந்தையும் ஞான
சபையிலே தனிநடம் புரியுந் தூயநின்பாதம்
துணையெனப் பிடித்தேன்"

என்று வள்ளலார் இறைவனைப் பல பெயரிட்டு பாடி மகிழும் தன்மை பக்தி யோகமாகும்.

இப்படி ஆண்டவனைத் தாயாகவும், தந்தையாகவும், குருவாகவும், தோழனாகவும், தோழியாகவும் முன்னிலைப்படுத்தி சதா ஆண்வடன் சிந்தனையில் இருக்கும் நிலை பக்தி யோகமாகும்.

அன்பே தகழியா ஆர்வமே நெய்யாக
இன்பு உருக சிந்தை இடுதிரியா - நன்புஉருகி
ஞானச்சுடர் விளக்கு ஏற்றினேன் நாரணற்கு
ஞானத் தமிழ் புரிந்த நான்.

இறை அன்பே அகல் விளக்காகவும் அதில் ஆண்டவன்பால் உள்ள ஆர்வமே நெய்யாக, ஆண்டவன்பால் சிந்தை உருகி பாடுவதே திரியாகவும், ஞானச் சுடர் விளக்கு ஏற்றினேன் திருமாலவனுக்கு, என்று பூதத்தாழ்வார் பக்தியைப்பற்றிப் பாடுகிறார். இது பக்தி யோகமாகும். சிவன், விட்ணு என்ற பேதம் வரக்கூடாது. ஏக பிர்மத்தை ஒருவர் விட்ணு என்கிறார். ஒருவர் சிவன் என்கிறார். ஒருவர் அல்லா என்கிறார். ஒருவர் ஏசு என்கிறார். ஒருவர் புத்தர் என்கிறார். எல்லா மதங்களும் தெரிந்தோ தெரியாமலோ ஒரே குறிக்கோளை அடைய வழி தேடுகிறது அதுதான், ஆன்மா பேரான்மாவில் ஐக்கியமாகும் நிலை. வேதத்தின் முடிவே வேதாந்தம். இவ்வுலக வாழ்க்கையை இம்மை பற்றியும் மறுமை பற்றியும் பகர்வது வேதம். அதாவது, இவ்வுலக வாழ்க்கையும் சுவர்க்க வாழ்க்கையும் பற்றிக் கூறுவது வேதம்.

இந்திரியங்கள் மூலம் உணர்ந்து அனுபவிப்பது இவ்வுலக வாழ்க்கை. அது வேதம். இந்திரியங்களுக்கு மனதுக்கும் அப்பாற்பட்ட பரத்தைப் பற்றி அறிவது வேதாந்தம். எல்லா மதங்களின் அடிப்படைத் தத்துவம் வேதாந்தத்தில் உள்ளது. வேதாந்தத்தில் இல்லாத கோட்பாடு, உலகத்தில் எந்த மதத்திலும் இல்லை. மதங்களுக்கெல்லாம் தாய் மதம் வேதாந்தம்.

அவரவர் சூழ் நிலைக்கும், விருப்பத்திற்கும், இடத்திற்கும், காலத்திற்கும் தகுந்தபடி மதங்களைப் பல பெயரிட்டு அழைக்கிறார்கள். எல்லா மதங்களின் அடிப்படை கோட்பாடு வேதாந்தமே.

தாகத்தை தீர்ப்பது தண்ணீர், அதை நீரு என்றும், பானி என்றும், வெள்ளம் என்றும், தண்ணீர் என்றும், வாட்டர் என்றும் எப்படி பெயரிட்டாலும் அது ஒரு பொருளே. மனிதன் அடையும் பெருநிலையை குற்றம் குறையின்றி விளக்குவது வேதாந்தமாகும்.

ஒரு மனிதன், தன் பிள்ளைக்கு அப்பா. தன் மனைவிக்குக் கணவன். தன் மாமனாருக்கு மாப்பிள்ளை. தன் மாப்பிள்ளைக்கு மாமனார். தன் பேத்திக்குப் பாட்டான். தன் பாட்டனுக்கு பேரன். தன் மைத்துனருக்கு மைத்துனன். தன் தோழனுக்குத் தோழன். தன் வேலையாட்களுக்கு எசமான். இப்படி பல தோற்றங்களை பலருக்குக் கொடுத்த போதிலும் மனிதன் ஒருவன்தான். அது போலவே பரபிர்மம் பல பெயர்களிலும் பல மதங்களாலும் வேறுபட்டாலும் பரபிர்மம் ஒன்றே ஆகும்.

அதனால் சிவன், விட்ணு, அல்லா, ஏசு என்று நீர் கூறிய போதிலும் அடிப்படைப் பொருள் ஒன்றே. நம் சிறுவர்களுக்குக் கூடத் தெரிந்த பாடல்.

''அரியும் சிவனும் ஒண்ணு-அதை
அறியாதவன் வாயில் மண்ணு''.

அதனால் பக்தர்கள் யாரைக் குறிப்பிட்டு பாடல் எழுதி தொண்டு செய்தாலும் பரம்பொருள் ஒன்றே. அந்தப் பரம்பொருளை பக்தியின் மூலம் செய்து முக்தி நிலை பெறும் நிலைக்கு பக்தியோகம் என்று பெயர். பக்தியின் வாயிலாக பெருநிலை அடைய வழி காண்பதே பக்தி யோகம் எனப்படும். ஞான நிலைக்கு இது முதற்படி யோகமாகும் என்று ஞானிகள் கூறுகிறார்கள்.

தங்கம் ஒன்றே, அதில் நாம் பல ஆபரணங்களைச் செய்து அணிந்து கொண்டு, ஆனந்தம் அடைகிறோம். காதாணி, மூக்குத்தி, அட்டிகை, காசுமாலை, இரட்டவட செயின், வங்கி, வடமாலை, ஒட்டியாணம், அரை ஞான், அரை ஞாண் கயிறு, பவித்திரம் போன்ற ஆபரணங்களை ஒரே தங்கம் என்னும் பொருளிலிருந்து செய்வதுபோல் பரபிர்மம் ஒன்றே. அவரவர் மனம், இடம், காலம் போன்ற பேதத்தால் பல உருவங்களில் பரபிர்மத்தை வணங்குகிறார்கள். அதனால் பேரான்மா என்பது பரபிர்மத்தைக் குறிக்கும் என அறிய வேண்டும். சிவ மதத்திற்கொரு சூரியன், விட்ணு மதத்திற்கொரு சூரியன், கிருத்து மதத்திற்கொரு சூரியன், இசுலா மதத்திற்கொரு சூரியன் உலகத்தில் தோன்றவில்லை. ஒரே சூரியன் தான் தோன்றுகிறது. அது எல்லா மதத்தவருக்கும் சொந்தம். அதன் ஒளிக்கதிரை எல்லா மதத்திற்கும் அளிக்கிறார் என்பதை நாம் உணர வேண்டும்.

சூரியனின் பிம்பம் குளத்திலும், ஏரியிலும், கிணற்றிலும், குட்டையிலும், சாக்கடையிலும், குடத்தின் நீரிலும் எல்லாவற்றிலும் தெரிந்தாலும் சூரியன் ஒருவனே என்பதை நாம் உணர்கிறோம். அதுபோல் பரபிர்மம் எல்லா மதத்தவர்களுக்கும் ஒன்றே என உணர்தல் வேண்டும்.

சைவ மதத்தில் 63 நாயன்மார்களும் பக்தியோகத்தை கடைப் பிடித்து முக்தி அடைந்தவர்களே. அவர்களின் வைராக்கிய பக்தி ஈசனையும் நெகிழ வைத்துத் தன்பால் அவர்களைச் சேர்த்துக் கொண்டார் என்பதை நாம் 63 நாயன்மார்களின் சரிதையில் காண்கிறோம். இதுவே பக்தி யோகமாகும்.

உலகை அறிவது	:	பாச ஞானம்
தன்னைத்தான் அறிவது	:	பசு ஞானம்
இறைவனை அறிவது	:	பதி ஞானம்

பதி ஞானம் சிறந்தது. அதுவே சிவ ஞானமாகும் என்று ஞானிகள் கூறுகிறார்கள்.

"பக்திநெறி அறியாத மூர்க்கரோடு முயல்வேனைப்
பக்திநெறி யறிவித்துப் பழவினைகள் பாறும் வண்ணம்
சித்தமலம் அறிவித்துச் சிவமாக்கி யெனையாண்ட
அத்தனெனக் கருளிய வாறார் பெறுவார் அச்சோவே"

"நெறியல்லா நெறிதன்னை நெறியாக நினைவேனைச்
சிறுநெறிகள் சேராமே திருவருள் சேரும் வண்ணம்
குறியொன்றும் இல்லா கூத்தன்றன் கூத்தையெனக்
கறியும்வண்ணம் அருளியவா றார்பெறுவார் அச்சோவே"

பக்தி நெறியைக் கடைப்பிடித்தால் பழைய வினைகளை அறுத்து புதுவினைகள் ஏற்படுத்தாமல், நம்மைத் தொடராமல், சித்தத்தைச் சுத்தி செய்து சிவமாக்கினார் என்று பாடுகிறார்.

பக்தி நெறியினால் தில்லைக் கூத்தனின் திருக் கூத்தைக் காணும் பேறு பெறலாம் என்பதே பக்தியோகமாகும். எனக்குத் தெரிந்த ஒரு நண்பர் அவர் அலுவலகத்தில் பணியாற்றினாலும் எப்போதும் ஆண்டவன் நினைவுடனே இருப்பார். தன் அலுவலக வேலையிலும் எந்தக் குறையும் வைக்க மாட்டார். அவரை எந்த மேலதிகாரியும் குறை கண்டதில்லை. ஆனாலும் ஆண்டவன் நினைவு எப்போதும் பேச்சில் இருந்துகொண்டே இருக்கும்.

ஒருசமயம் அர்ச்சுனன் உள்ளத்தில் தன்னைவிட கிருட்டிணனிடம் அதிக பக்தியும் அன்பும் உள்ளவன் இல்லை என்று கர்வம் கொண்டான். இதை தன் ஞான திருட்டியில் அறிந்த, கிருட்டிண பரமாத்மா அர்ச்சுனனைக் கண்டு 'அர்ச்சுனா, வா, நாம் உல்லாசமாக அந்தச் சோலைப் பக்கம் உலாவி வரலாம்' என்று அழைத்துச் சென்றார்.

அந்த சோலையின் அருகே ஒருவன் உலர்ந்த பில்லைத் தின்று கொண்டு தன் மடியில் கூரிய வாளை வைத்துக் கொண்டிருந்தான். அர்ச்சுனன் அவனைக் கண்டு இவன் விட்ணு பக்தன் போல் தோன்றுகிறது. அதனால் பசுமை நிறைந்த புல்லில் உயிர் உள்ளது என்று உலர்ந்த புல்லைத் தின்கிறான். ஆனால் மடியில் ஏன் இப்படிப்பட்ட பட்டாகத்தியை வைத்துக் கொண்டிருக்கிறான் என்று புரியாமல் கிருட்டிணனிடம் சென்று 'கிருட்ணா, இந்த மனிதன் பசும்புல்லை தின்னால் உயிரை கொன்ற பாபம் வரும் என்றெண்ணி உலர்ந்த புல்லைத் தின்னுகிறான்.ஆனால் கத்தி ஏன் வைத்துள்ளான்' என்று கேட்டான்.

கிருட்டிணன், நீயே போய் அவனிடம் கேள் என்றார். அர்ச்சுனன் அந்த ஒருவனை அணுகி ஐயா, தாங்கள் உயிர்க் கொலை செய்யக் கூடாதென்று தானே இந்த உலர்ந்த பில்லைத் தின்கிறீர். பின் ஏன் உனக்கு இந்த கத்தி என்றான். அதற்கு அந்த மனிதன், இந்த கத்தி நான்கு பேரை கொல்வதற்கு, அவர்களைத் தேடிக் கொண்டிருக்கிறேன். அந்த நால்வர் கிடைக்கவில்லை.

1. நாரதன் (எப்போதம் வீணாகானம் செய்து என் பிரபு நாராயணனை தொந்தரவு செய்து கொண்டிருக்கிறார்)

2. துரோபதை (நாராயணன் சாப்பிடும்–சமயம் தன் மானம் காக்க கூப்பிடடாள் துணி வேண்டி. தான் உண்ட உணவின் மிஞ்சியதை அதாவது, ஒரே ஒரு பருக்கை சாதத்தை என் பிரப்புவுக்கு கொடுத்தாள்).

3. பிரகலாதன் (தான் மலையிலிருந்து உருட்டப்படும் போதும், கொப்பரை எண்ணெய்யில் போட்ட போதும், யானையின் காலில் தன்னை மிதிபட வைத்தபோதும், எல்லாப் பொருளிலும் ஆண்டவன் உள்ளான் என்பதை நிருபிக்கத் தூணிலிருந்து.பிறக்க ஆண்டவனை அழைத்ததும்).

4. அர்ச்சுனன் (தனக்கு தேர் ஓட்டும் சாரதியாகவும், பாண்டவர்களுக்கு பாரத யுத்தத்தின் போது உடனிருக்க வைத்ததும், தான் பல பெண்களை மணக்க கிருட்டிணனை தூது போகத் துன்புறுத்தியதும்)

இந்த எளிய மனிதனின் இறைவனுக்காக உருகும் பக்தியைக் கண்டு அர்ச்சுனனின் கர்வம் நீங்கியது. இப்படிப்பட்ட வைராக்கிய பக்தி ஆரம்ப நிலைக்கு உள்ள படிகளாகும்.

மண்டோதரி இராவணனைக் கண்டு உமக்குச் சீதையிடம் இவ்வளவு பிரியமாக மனைவியாக அடைய வேண்டுமானால் ஏன் உமக்குத் தான் மாய அவதாரம் எடுக்க தெரியுமே. அதனால் இராமனாக ஏன் மாய உருக்கொண்டு சீதையை ஏமாற்றக் கூடாது? என்றாள். அதற்கு இராவணன், இராமனுடைய பரிசுத்தமான உருக்கொண்டு சிற்றின்பங்களில் விருப்பம் வைக்க முடியுமா? முடியாது. இராமனுடைய உருவத்தை என் மனதில் நினைத்தாலே எனது இருதயம் சொல்லொணா சுகத்தையும், பிரம்ம லோகத்தையும் எனக்கு கிடைப்பதுபோல் உணர்கிறேன் என்றான்.

ஞான யோகம்

உலகத்தில் பல யோகங்கள் உள்ளது என்றும் சமய வாதிகள் தன் சுயநலன் கருதி எழுதிவைத்து மக்களை மயக்கிவிட்டனர் என்றும், நம்முள் உள்ள ஆன்ம சக்தியை வெளிக்கொண்டுவர வாசியோகம் என்னும் பிராணாயாம யோகமே சிறந்தது என்றும் அதையே சித்த மகா புருடர்கள் கைக்கொண்டு தன்னைத்தான் உணர்ந்து கற்பகோடி காலம் வாழ்ந்தனர் என்றும் ஞானிகள் அறுதியிட்டுக் கூறுகின்றனர்.

"பார்தனில் அறுபத்து நாலு யோகம்
ஆறப்பா யிருக்கு தென்று வெவ்வேறாக
அலைந்தலைந்து கெட்டார்க ளந்தகோடி — காகபுசுண்ட முனி

சிலர் நம் உள் நாக்கின் கீழ் உள்ள நரம்பை வெட்டி அண்ணாக்கின் முனையில் உள்ள சுவாச துவாரங்களை அடைத்து வாயுவை கும்பகம் செய்வது ஒரு வித அடயோகம் என்று நினைத்து நாக்கை வெட்டி மிக்க துன்பங்களை அனுபவித்தனர். இதை காகபுசுண்ட முனிவர் தவறுஎன்று தன் "புசுண்டர் 1000" பாடலில் குறிப்பிடுகிறார்.

பாரப்பா நாக்கை யுந்தன் அண்ணாக் கேத்திப்
பார்தனில் பார்த்தவர்க்கு பலிதமில்லை
ஆரப்பா கண்வெடித்து தேகம் போகும்
அடயோக மென்பார்க ளாதப்பா — காகபுசுண்டர்

இருக்கும் பல யோகங்களில் ராச யோகம் என்பது சித்தர் கையாளும் பிராணயாமம் எனப்படும். வாசியோகப் பயிற்சியே சிறந்தது என்றும் நாம் உணர வேண்டும். பின்வரும் ராச ஞான யோகத்தைப் பார்ப்போம். இதுவே ஹடயோகம் என்பர். ஹ=சூரியன், த=சந்திரன். முச்சுக்காற்றை ஒழுங்குபடுத்துதல் ஹதயோகமாகும்.

சூரியக்கலை+சந்திரக்கலையை கொண்டு யோகம் பயிலுதல் ஹதயோகமாகும்.

ராஜயோகம்

ஞானயோகம் என்பது வித்தைக்கெல்லாம் ராசா. அதனால் இதை ராச யோகம் என்று கூறுவார்கள். இது இரகசியங்களுக்கெல்லாம் இரகசியம். ராச இரகசியம் என்று பெயர். தன்னுடன் ஒட்டி விடாமல் சகல பாவங்களையும் விட்டது. அதனால் இது பரிசுத்தமான யோகமாகும்.

தன்னைத்தான் உணரக் கூடிய யோகம் ராச யோகம் ஆகும். மேலும் தர்ம நெறியிலிருந்து சிறிதும் நீங்காத தன்மையுடையது ராசயோகமாகும். இந்த யோகத்தில் தன்னைத் தானறிந்து, தன்னுள் உறையும் இறைவனைக் கண்டு தானும் இறைவனுடன் ஒன்றிய இறை நிலையெய்தி மோட்சத்துடன் இருக்கும். அதனால் இது யோகங்களுக்கு எல்லாம் ராசா ஆகும். ஆகவே இதற்கு ராசயோகம் என்று ஞானிகள் கூறுகிறார்கள்.

சித்த மகா புருடர்கள் இந்த ராச யோகத்தையே கைக்கொண்டு சிவனுடன் ஒன்றி சிவமாகி விடுகின்றனர். ஞானத்திற்கெல்லாம் அப்பாற்பட்ட தன்மை ராசயோகமாகும்.

தவத்தில் காமியத்தவம், நிட்காமியத்தவம் என இருவகைப்படும். அதில் காமியத்தவம் என்பது, தவமியற்றும் யோகியவர்கள் அட்டமகா சித்துக்களை கைவரப்பெற்று அதன் மூலம் சுய இன்பம் அடைவார்கள் அவர்களுக்கு மோட்சம் கை கூடுவது கடினம். உதாரணமாக, பத்மாசூரன், இராவணேசுவரன், சூரபத்மன் இவர்கள் தவம் காமியத்தவம், பலன் வேண்டிச் செய்யும் தவங்கள்.

இவர்கள் அட்டமா சித்துக்களை கைவரப்பெற்று தன் சுய நலத்திற்கு பல சித்துக்களை ஆடியவர்கள் அவர்களுக்கு முக்தி கிடையாது. அவர்கள் சீவன் முக்தர்கள் அல்ல. ஆனால் சீவன் முக்தர்கள் நிட்காமியத் தவமியற்றி எல்லா சித்துக்களையும் கை வரப்பெற்று சுயநலத்திற்கு அந்த சித்துக்களை பயன்படுத்தாமல் உலக நலனுக்கு பயன்படச் செய்து முக்தி அடைவார்கள்.

மேலும் அவர்கள் சித்தாடாமல் ஞானநிலையில் மேன்மேலும் முன்னேறி மோட்சமடைபவர்கள் சீவன் முக்தர்கள். நிட்காமிய யோகமிருந்து பிரம்ம சொருபமடைந்து பிர்மத்துடன் ஒன்றிய நிலையே ஞான ராச யோகமாகும்.

நிட்காமிய தவமே மற்ற எல்லா யோகங்களுக்கும் ராசாவாகும். அதுவே ராச யோகமாகும். காமிய யோகத்தில் சித்திகளை அடையலாம். முக்தி அடைய முடியாது. நிட்காமிய யோகத்தால் எல்லா சித்துக்களையும் அடையலாம். விதேக முக்தி நிலை அடையலாம். இது ராச யோகமாகும். கர்மயோகத்திற்கும், பக்தி யோகத்திற்கும் ராசா, ராசயோகமாகும். அப்படிபட்ட ராசயோகத்தில் நிட்காமியத் தவமிருந்த நிறை ஞான அரசனே நம் பூண்டி மகான் ஆற்று சுவாமிகள்.

ஞானம் பெற ஞான நூல்களில் பல வித யோக சாதனங்கள் விரிவாக கூறுப்படுகிறது. அதில் யோகிகள் பலவித சாதனங்களில் ஒன்றை உறுதியாகக் கடைப்பிடித்து ஞானநிலை பெற்று குருமூலம் ஞான நிலை அடையலாம் என்கிறது. ஆனால் எல்லா யோக சாதனங்களைக் காட்டிலும்

ராசயோகமே தலை சிறந்தது. அதுவே சித்த மகா புருசர்கள் கையாளுவது ஆகும்.

பக்தி யோகம், கர்ம யோகம் என்பது இயற்கைக்குக் கட்டுப்பட்டு புற உலகில் அதற்கு ஏற்றாற்போல் வாழ்வதாகும். இப்படிப்பட்டவர்கள் இராசச, தாமோத குணங்களால் உட்பட்டவர்கள். இவர் சத்துவ குணம் அடைவதில்லை. ஆனால் ஞான யோகம் பயிலும் ஞானி, நிறை ஞானியாகி, இயற்கையின் விளையாடல்களுக்கு ஆட்படாது உயர்ந்து நிற்கிறான். இவர்களுக்கு இராசச,தாமோத குணம் இருப்பதில்லை. சத்துவ குணமாகிய உயர்ந்த குணத்தில் நிலைத்து நிற்கிறார்கள். இப்படிப்பட்ட சத்துவ குணமாகிய உயர்ந்த குணமாகிய நிலையில் இருந்தவர் நம் பூண்டி மகான் ஆற்று சுவாமிகள்.

இப்படிப்பட்ட சத்துவ குணத்தினால் இவ் உலகம் உள்ளது என்பதை புரிந்து கொள்கிறார்கள். அதனால் இயற்கையின் திருவிளையாட்டால், எந்தவித பாதிப்பும் நிறை ஞானியை ஆட்படுத்துவது கிடையாது. இப்படிப்பட்ட மனோ நிலையை உடைய நிறைஞானி, உலக வாழ்க்கையில் ஈடுபட்டாலும் அவர்களை அசைக்க முடியாது. அவர்கள் உள்ளம் வைரம் கொண்ட தன்மை உள்ளது. அதனால் அவர்கள் பெரும் அமைதி அடைகின்றார்கள். அவ்வித நிலையே சீவன் முக்தன் நிலையாகும். அதுவே நம் பூண்டி சீவன் முக்தன் ஆற்று சுவாமிகளின் நிலையாகும்.

இப்படிப்பட்ட நிறை ஞான நிலையெய்திய நம் கண்கண்ட கலியுக தெய்வம் ஸ்ரீ பூண்டி மகான் நிலை. அவர்கள் தாங்கள் கைக்கொள்ளும் ராச யோகத்தின் சித்துக்களைப்பற்றி பின்வரும் தொடர்களால் அறிவோம்.

"சித்த மார்க்கமே ராச ஞான மார்க்கம்
மத்த ஞானமார்க்கம் மனிதனில் உயர்ந்த மார்க்கம்"

சித்த மகா புருசர்கள் அட்டமாதி சித்துக்களை கைவரப்பெற்றவர்கள். அவர்கள் இந்த அட்டமா சித்துக்களை அடைய என்ன ஞான யோக மார்க்கங்களைச் செய்கின்றனர் என்பதை நாம் அறிய வேண்டும். அவர்கள் யோகங்களை கடுமையாகப் பயின்று பிறகு அட்டமா சித்துகளை பெறுகின்றனர்.

அட்டங்க யோகம் என்பது அட்டமா சித்திகள் பலன் பெற்று அதையும் தாண்டி சமாதியில் தன்னைத்தான் உணர்ந்து பரபிர்மத்துடன் கலக்கும் சமாதி நிலைக்கு அத்திவாரமே இந்த அட்டங்க யோகங்கள் ஆகும். சாதாரண மனிதன் உறுதியான மனக்கட்டுப்பாட்டுடன் எட்டுவித அட்டங்க யோகங்களை செய்து ஞானநிலை அடைய படிக்கற்களாக அமைத்துக் கொள்கிறார்கள். அந்த எட்டுவித யோகங்கள் 1.இயமம் 2.நியமம் 3.ஆசனம் 4.பிராணாயாமம் 5. பிரத்தியாகாரம் 6.தாரணை 7. தியானம் 8.சமாதி என்பனவாகும்.

இவைகள் ஞானி ஒருவர் ஞானம் பெற ஆரம்ப நிலைகள் ஆகும். இந்நிலையை அடைவற்குப் பல பிறவிகளை எடுக்க வேண்டி வருவதும்

உண்டு. அதனால்தான் ஞானிகள், சித்தர்கள் தன் உடலை நீண்ட நாட்களுடன் இருக்க காயகல்பமாக்கி இந்த உடலிலே ஆயிரம் வருடங்கள் வாழ்ந்து ஞான நிலை பெற முயற்சிக்கின்றனர். இந்த எட்டு வித யோக நிலையை ஞானம் பெற நினைக்கும் அன்பர்கள் மனதிடத்துடனும் கட்டுப் பாட்டுடனும் பயின்று படிப்படியாக ஞான நிலை பெற முன்னேற வேண்டும்.

இந்த எட்டு வித அட்டங்க யோகங்களை கடந்த யோகிக்கு பிறப்பு, இறப்பு தன்மை, விருப்பு வெறுப்பு தன்மையிலிருந்தும் விடுபட்டு மரணமில்லா பெருவாழ்வு வாழ்வார்கள் என்று ஞானிகள் கூறுகிறார்கள். இது சித்த மகா புருசர்களின் ஞான யோகமாகும்.

கர்மயோகம் முதல் படித்துறை, பக்தி யோகம் இரண்டாம் படித்துறை, ஞான யோகம் முடிவு நிலை, பெருநிலை, பரபிர்மத்துடன் ஒன்றிய நிலை ஆகும். அதுவே ராசயோக நிலையாகும். கர்மயோகம், பக்தி யோகம், ஞான யோகம் இவைகள் அனைத்தும் கடந்த பேரின்ப பெருநிலை சித்த மகா புருசர்கள் நிலையாகும். கர்ம யோகம், பக்தி யோகம் புற நிலை யோகமாகும். ஆனால் ஞான யோகம் அக (தன்னுள்) நிலை யோகமாகும். அகநிலை யோகமே யோக நிலைகளில் சிறந்த யோகமாகும். அச்சிறந்த யோக நிலையைக் கடந்த சித்த மகா புருசரே நம் பூண்டி மகான் ஆற்று சுவாமிகள் என்பதை அறிய வேண்டும். இந்த அட்டமா யோகங்களைப் பயிலும் முறைகளை ஞானிகள் தெளிவுபடக் கூறுகிறார்கள். அப்படிப்பட்ட அட்டங்க யோகத்தின் தன்மைகளைக் காண்போம்.

1. இயமம் (தீமைகளை அகற்றுதல்)

தீய வழியில் செல்லும் மனதைக் கட்டுப்படுத்தி வைராக்கியமாக ஆண்டவனிடம் மனம் ஒன்று சேருதல் இயமம் எனப்படும். அவைகள்: கொல்லாமை - பிற உயிர்களைக் கொல்லுவதும் சீவ இம்சை புரிவதும் கூடாது. மனதினால் கூட கொல்ல நினைக்கக் கூடாது. எல்லா உயிர்களிலும் பிரமம் உள்ளது என்று உணரும் தன்மை வேண்டும். தன்னுயிர்போல் பிற உயிரைப் பேண வேண்டும். கொல்வதற்கு உடந்தையாகவோ தூண்டுகோலாகவோ கூட நாம் இருக்கக் கூடாது.

பொய் சொல்லாமையைக் கடைப்பிடிக்க வேண்டும். கண்ணால் கண்டு உணர்ந்ததையும் காதால் கேட்டதையும் மாறுபாடு இல்லாமல் பேச வேண்டும். பிறருக்குத் தீங்கு ஏற்படும் என்று தெரிந்தும் பொய் கூறுதல் கூடாது. பொய்யை அறவே ஒழித்து, உண்மைகளைப் பேசும் தன்மை வேண்டும்.

''கொல்லான் பொய்கூறான் கலவிலான் எண்குணன்
நல்லான் அடக்க முடையான் நடுச்செய்ய
வல்லான் பகுந்துண்பான் மாசிலான் கட்காமம்
இல்லான் இயமத் திடையின் நின்றானே!''

என்று திருமூலர் இயமத்தின் தன்மையைத் தன் திருமந்திர நூலில் கூறுகிறார். கள்ளாமை - பிறர் பொருளைக் கவரவேண்டும் என்ற எண்ணம் கூட வரக்கூடாது என்பது இயமத்தின் முக்கிய தன்மையாகும்.

புறந்தூய்மை நீரான் அமையும் அகத்தூய்மை
வாய்மையால் காணப் படும். - குறள்

நம் புற உடலை நீரினால் கழுவித் தூய்மையாக்கலாம். அதுபோல் அகத்தூய்மை நாம் பேசப்படும் வார்த்தையால் அகத்தை தூய்மையாக்கலாம் என்று வள்ளுவர் கூறுகிறார். யோக நிலைக்கு முதலில் நம் அகம் (மனம்) தூய்மை அடைதல் அவசியமாகும்.

களவின்கண் கன்றிய காதல் விளைவின்கண்
வீயா விழுமம் தரும்.

பிறர் பொருளை களவாடுவதால் ஏற்படும் விருப்பம், அதன் பின்வரும் பயன் விளையும்போது தீராத துன்பம் தரும் என்று வள்ளுவர் வாக்கால் அறியலாம்.

காமமின்மை - பிற மாதரைத் தாய் போல் எண்ண வேண்டும். அவர்களை மனத்தாலும் விருப்பத்துடன் பார்க்கக் கூடாது. பிற மாதருடன் விருப்பத்துடன் பேசுதல், பார்த்தல், அவர்களுடன் விளையாடல், அவர்களைத் தனிமையில் சந்தித்தல் போன்றவையும் கூடாது. அவர்களிடம் வாக்குறுதியோ, உடன்பாடோ கொள்ளுதல் கூடாது. நாம் செய்யும் ஆண்டவன் தொண்டிலோ, அவர்மீது கொண்ட எண்ணத்திலோ மாசு வராமலிருக்கவும், சிதறாமல் இருக்கவும் உறுதியுடன் இருக்க வேண்டும்.

நேர்மையுடன் எல்லா சீவராசிகளிடமும் சமமாக பாவித்து பகை உணர்ச்சியோ, உறவோ, உணர்ச்சியோ கூடாது. மனம் எல்லாம் சமம் என்று உணரும் நிலை அடைய வேண்டும்.

"பிறன்மனை நோக்காத பேராண்மை - சான்றோர்க்கு
அறனொன்றோ ஆன்ற ஒழுக்கு" - குறள்

காமமே குலத்தினையும் நலத்தினையும் கெடுக்கவந்த களங்கம்
காமமே தரித்திரங்க ளனைத்தையும் புகட்டி வைக்குங் கடாரங்
காமமே பரகதிக்கு செல்லாமல் வழியடைக்குங் கபாடங்
காமமே யனைவரையும் பகையாக்கிக் கழுத்தரியுங் கத்திதானே.
- விவேக சிந்தாமணி

காமம் என்ற ஒரு நிலை நம் சாதி நெறிகளையும் நன்மைகளையும் கெடுக்கும். வளமையை உண்டாக்கி செல்வத்தை அழித்து விடும் கருவி. ஞான மார்க்கத்திறகு போகும் வழியை அடைக்கும் கதவு. ஒருவரை ஒருவர் பகைகொண்டு கழுத்தை அறுக்கும் கத்தி என்று விவேக சிந்தாமணி

கூறுகிறது. காமத்தை வென்றவன் வீரமே வீரம் என்று யோகிகள் கூறுகிறார்கள்.

கொல்லாமை கொன்றதைத் தின்னாமல் சூத்திரங் கோள்களவு
கல்லாமை கைதவரோடு இணங்காமல் கனவிலும்பொய்
சொல்லாமல் சொற்களைக் கேளாமல் தொகையர் மாழையிலே
செல்லாமல் செல்வம் தரும் சிதம்பரதேசிகனே. - பட்டினத்தார்

புலால் உணவை விடாதவன் பல கோயில்களுக்கும் போய் பல தீர்த்தங்களில் மூழ்கியும் யாதொரு பயனும் கிடையாது.

"கங்கையில் படிந்திட்டாலும் கடவுளைப் பூசித்தாலும்
மங்குல்போற் போடிதானம் வள்ளலாய் வழங்கினாலுஞ்
சங்கையில்லாத ஞானசாத்திர முணர்ந்திட்டாலும்
பொங்கும் புலால் புசிப்போன் பேய் நரகடைவன்றே"

என்பது ஆன்றோர் வாக்கு. மனம், வாக்கு, காயத்தால் சீவனுக்கு மற்றோர் சீவன் மனம் புண்படும்படி நடந்து கொள்வதும் கொலைக்குச் சமமாகும். கங்கையில் பல தடவை மூழ்கியும் தானங்கள் பல செய்தும் ஆண்டவன் ஆலயம்தோறும் சென்று வந்தாலும், புலால் உணவை உண்டவன் பேய்கள் உலாவும் நரகம் அடைவான் என்பதாம்.

தன்னுடைய ஊன் உடலை வளர்க்க பிற உயிரின் மாமிசத்தை உண்ணுபவனிடம் அன்பு, அருள் இருக்காது என்கிறார் வள்ளுவப் பெருமான்.

"தன்னூன் பெருக்கற்குத் தான்பிறிது ஊனுண்பான்
எங்ஙனம் ஆளும் அருள்" - குறள்

யாகத்தில் நெய், ஓம திரவியங்களைப் போட்டு ஒருவர் யாகங்களை செய்வதைக் காட்டிலும் ஒரு உயிரைக்கொன்று அதன் உடம்பைத் தின்னாது இருத்தல் அந்த யாகப்பயனை விடச் சிறந்தது என்கிறார் வள்ளுவப் பெருமான்.

அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத் துண்ணாமை நன்று. - வள்ளலார்

பிற உயிரைக் கொல்லாமலும், புலால் உணவை உண்ணாமலும் வாழ்கின்றவனை உலகத்தில் உள்ள எல்லா உயிர்களும் கைக்கூப்பி வணங்கும் என்கிறார்.

"கொல்லான் புலாலை மறுத்தானை கைகூப்பி
எல்லா உயிருந் தொழும்"

யோகி ஒருவர் யோக நிலை பயில, கள், காமம், புலால் இவைகளை அறவே விட்டுவிடும் தன்மை வேண்டும். மனம் ஒன்று பட இவைகள் தடையாக இருக்கும் என்பதால் இவைகளை மனதாலும் நினைக்கக் கூடாது என்கிறார்கள் ஞானிகள்.

புத்தர் ஒருநாள் ஒரு குளக்கரையில் அமர்ந்து கொண்டு இருந்தார். அவ்வழியாக வேதபிராமணர்கள் இருவர், தம் தோள்மீது ஆளுக்கு ஒரு ஆட்டைத் தூக்கிக் கொண்டு வந்தனர். ஆடுகள் தன்னை வெட்டப்போகிறார்கள் என்று உணர்ந்து கத்திக் கொண்டு வந்தன.

புத்தர் அந்த வேத பிராமணர்களைக் கண்டு ஆட்டை எங்கு எடுத்துச் செல்கிறீர்கள் என்று கேட்டார். அதற்குப் பிராமணர்கள் தாங்கள் செய்யும் வேள்வியில் இந்த ஆட்டைப் பலி கொடுக்கச் செல்கிறோம் என்றனர். புத்தர் அந்த வேத பிராமணர்களுடன் சென்று யாகம் செய்யும் பிராமணர்களுடன் இப்படிப்பட்ட கொலை பாதகம் வேண்டாம் என்று தடுத்தார்.

அதற்குப் பிராமணர்கள் யாகத்தில் போடும் உயிரும், போடுபவனும் சொர்க்கபதவி அடைவார்கள் என்று கூறினார்.

புத்தர் 'அப்படியானால் இதோ உங்களில் வயதான பிராமணர்களால் நாட்டிற்கும், வீட்டிற்கும் எந்தவித பயனுமில்லை. ஆதலால் இவர்களை இந்த யாகத்தில் போட்டுவிட்டால் இவர்களுக்கும், போடுபவர்களுக்கும் சொர்க்கப் பதவி கிடைக்கும்'' என்று கூறி அந்த வயோதிக பிராமணர்களைப் போடச் சொன்னார்.

வேதபிராமணர்கள் அதற்குச் சம்மதிக்காமல் புத்தரை வந்த வழி பார்த்து போகச் சொன்னார்கள். வேதம், வேள்வி இவைகள் சுயநல வாதிகளிடம் போய்விட்டது என்று புத்தர் வருந்தினார்.

ஒரு உயிரினிடத்தில் அன்பு காட்டாதவன் வேள்வி, யாகம் போன்றவைகளினால் மேன்மை அடைய முடியாது. எவன் ஒருவன் தன்னுயிர்போல் பிற உயிர்களையும் எண்ணுகின்றானோ அவனே இம்மையிலும், மறுமையிலும் மேன்மையடைய தகுதி உடையவன். அதனால் யோக நிலைக்கு போகும் மாணவன் முதலில் புலால் உணவை விட்டு விடவேண்டும். மனதாலும் கொலை பாதகச் செயலை எண்ணக் கூடாது என்பது இயமத்தில் சாரமாகும்.

திருமூலர் தன் திருமந்திர நூலில் இழிந்த தன்மை உடைய காமமும், பெருமையை அழித்தலை உடைய கள்ளும் கீழ்நிலையில் உள்ளவர்கள் விரும்புவார்கள். அதைவிடுத்து தூயவெண்ணீரால் யாவரையும் தூய்மை யாக்கும் புனிதனாகிய சிவபெருமான் திருவடியினை எண்ணிச் சிறந்த இன்பத்தை உண்ணுங்கள் என்கிறார் (வெண்ணீர் : வெள்ளையான திருநீர்)

தாயுமான சுவாமிகளும், வடலூர் வள்ளலார் பெருமானும் புலால் உணவை அறவே ஒழியுங்கள் என்று வற்புறுத்துகிறார்கள்.

கொல்லா விரதங் குவலயமெல்லாம் ஓங்க
எல்லார்க்குஞ் சொல்வதென இச்சை பராபரமே! – தாயுமானவர்

சாதாரண மனிதர்கள் ஆகிய நாம் ஒரு வாரம் மரக்கறி பதார்த்தங்களை உண்டு வந்தோமானால் அந்த ஒரு வாரம் நம் மனநிலை, உடல் நிலை எப்படி உள்ளது என்று பாருங்கள். இதையே ஒரு வாரம் மாமிச கறி வகைகளை உண்டு, அந்த ஒரு வாரம் மனநிலை உடல்நிலை எப்படி உள்ளது என்பதை நீங்களே பரிசீலனை செய்து பாருங்கள்.

யோக நிலை பயில விரும்பும் யோகியர்களுக்கு மனம் பழுக்க வேண்டும். மனம் பழுத்தால் ஒரு நிலைப்படும். ஒரு நிலைப்பட்ட மனமே யோக நிலைக்கு உகந்தது என்பதை அறிய இமயம் என்ற படித்துறையை சாதகன் ஒருவன் கடக்க வேண்டும் என்று ஞான நூல்கள் கூறுகின்றன.

மனத் தூய்மையே தவத்திற்கு ஏறுபடிகள் என்பது ஞானிகள் போதிக்கும் ஆரம்ப ஞான பாடமாகும் என்பதை இயமத்தின் மூலம் அறிந்தோம். அடுத்த யோக நிலைப்படி நியமம் ஆகும்.

இயமத்தில் உணவு வகை அளவுடன் இருக்க வேண்டும். எந்தக் காரணம் கொண்டும் யோகம் பயிலும் மாணவன் புலால் உணவை உண்ணுதல் கூடாது. அது குணத்தை மாற்றி விடும். யோகி உணவு $^1/_2$ வயிறு, தண்ணீர் $^1/_4$ வயிறு, காற்று $^1/_4$ வயிறு என்று கடைப்பிடிக்க வேண்டும். நாம் ஏழையாக இருந்தாலும் யாசிக்கக் கூடாது. மனக்கட்டுப்பாடு இயமம் ஆகும்.

இவைகளெல்லாம் மனம் ஒன்றை நினைத்து ஒரு நிலைப்பட வேண்டும் என்பதற்காகவும், யோகி ஒருவர் ஞானம் பெற மனம் பண்பட வேண்டும் என்பதற்காகவும் இவைகளை ஞானிகள் கடைப்பிடிக்கக் கூறுகிறார்கள்.

அஞ்சருளைப் போற்றி ஐந்து புலனைத் துறக்க
நெஞ்சே உனக்கு நினைவு நான் சொல்லுகிறேன்
வஞ்சகத்தை நீக்கி மறு நினைவு வாராமல்
செஞ்சரணத் தாளைச் சிந்தை செய்வாய் நெஞ்சமே - பட்டினத்தடிகள்

பட்டினத்து அடிகள் தன் மனதை வஞ்சனை நீக்கி ஐந்தெழுத்துப் பஞ்சாட்சர மந்திரத்தைப் போற்றி, புலன் ஐந்தையும் துறக்க, சிவனை நினை மனமே என்கிறார். இத்தனையும் மனம் ஒரு நிலைப்பட யோகிகள், ஞானிகள் பல தீய வழிகளை அறுக்கக் கூறுகிறார்கள். அக மனம் ஒருமைப்படுதலே நியமத்தின் தன்மை யாகும்.

ஔவையார் மனம் ஒரு நிலைப்படக் கூறுகிறார். நல்லவர்களைக் காண்பதுவும், அவர்கள் சொல்லைக் கேட்பினும், அவர் குணம் பேசினும், அவரோடு இருப்பினும், நல்லறிவு, நல்ல ஒழுக்கம் உண்டாகும் என்பதாம். ஒழுக்கம், மனம் சீராக இருப்பதே நியமத்தின் தன்மையாகும்.

"நல்லாரைக் காண்பதுவு நன்றே நலமிக்க
நல்லார் சொல் கேட்பதுவு நன்றே - நல்லார்
குணங்க ளுரைப்பதுவு நன்றே - யவரோடு
இணங்கியிருப்பதுவு நன்று"

என்று கூறுகிறார்.

தவம் மேற்கொள்ளும் யோகிகள் மனம் உறுதிபட வேண்டும். உறுதியான மனதை பெண்களிடம் வாய்ப் பேச்சால் பழகி வந்தாலும் அது ஒரு நேரம் தவத்திற்கு ஊறு வந்துவிடும். எப்படி எனில் பல காலம் சிறிய எறும்பு ஊர்ந்தால் கல்லும் குழி வீழ்ந்து விடும் தன்மைபோல் தவத்திற்குரிய மன உறுதி பெண்ணுடன் பேசுவதாலும் கெட்டுவிடும் என்று நன்னெறியில் கூறப்படுகிறது.

பகர்ச்சி மடவார் பயில நோன்பாற்றல்
திகழ்ச்சி தருநெஞ்சத் திட்பம் - நெகிழ்ச்சி
பெரும் பூரிக்கின்ற முலைப்பேதாய் - பலகால்
எறும்பூரக் கற்குழியுமே - நன்னெறி

2. நியமம்

நியமம் என்பது அகம், புறம், தூய்மையாக இருத்தல் ஆகும். உணவை சுருக்கிச் சிக்கின வாழ்வு வாழ்தல், பொறுமை, செம்மை, வாய்மை, நிலையாமை, காமமகற்றுதல் களவு அகற்றுதல், கொலை அகற்றுதல் ஆகியவைகளை வைராக்கிய மனதுடன் கடைப்பிடித்தல் நியமம் ஆகும்.

தவம் செய்தல், ஐந்தெழுத்து மந்திரமாகிய ''நமசிவாய' என்னும் மந்திரம் செபித்தல், சிவனையே மனதில் நினைத்தல், வேறு நினைவுக்கு இடம் தராது இருத்தல் நியமத்தின் தன்மையாகும். யோக நிலை விரும்பும் மாணவர்களுக்குத்தான் இவைகள் என்பது கிடையாது. மற்றவர்களும் கடைப்பிடித்தால் அலையும்மனம் ஒரு நிலைப்படும் என்பதாம். சிவனடியார்களுக்கு தன்னால் இயன்ற தானமும், சிவபெருமான் பெருமைகளைப் படித்தல், அல்லது பிறர் கூறக்கேட்டு மனம் ஒரு நிலைப்படுதல், புராண பிரசங்கங்களைக் கேட்டு மனம் தூய்மையாக்குதல் நியமத்தின் தன்மையாகும்.

யோக நிலைக்குப் போகும் சாதகனுக்கு இவைகள் ஆரம்பக் கல்வி ஆகும் என்று ஞான நூல்கள் கூறுகிறது. திருமூலர் நியமத்தின் தன்மையைக் கூறும்போது :

தவஞ் செபஞ் சந்தோடம் ஆத்திகந்தானஞ்
சிவன் தன் விரதமே சித்தாந்தக் கேள்வி
மகஞ் சிவ பூசையொண் மதி சொல்லீர் ஐந்து
நிலம்பல செய்யின் நியமத்தனாம் - திருமூலர்

மனதில் வரம்பு கடந்த ஆனந்தமோ வியாக்குலமோ கூடாது மனம், மொழி, மெய் ஆகிய மூன்றும் தூய்மையுடன் இருக்க வேண்டும். மனம் எப்போதும் இனிமை கூடிய உற்சாகத்துடன் இருக்க வேண்டும். உலக வாழ்க்கை நிலையாமை என்று உணர்ந்து சிவன் ஒருவனே நிலையானவன் என்ற தீவிர பக்தி வேண்டும்.

"களவு வஞ்சனை காம மென்றிவை யெல்லாங்காட்டும்
அளவு மாயை இங்கா ரெனக்கமைத்தனர் ஐயா
உளவிலே எனக்குள்ளவா றுணர்த்தின் உன்அடிமை
வளரும் மாமதிபோல் மதி தளர்வின்றி வாழ்வேன் - தாயுமானவ சுவாமி

களவும், வஞ்சனையும், காமமும் ஒழித்து தன்னுள் உலவும் பரம்பொருளைக் கண்டு, வளர்கின்ற சந்திரனைப் போல் அறிவு வளர்ந்து வாழ வேண்டும் என்று சிவபிரானைவேண்டுகிறார் தாயுமான சுவாமிகள். ஞானம் பெற பயிலும் யோகியர் மனம் காமம், களவு, வஞ்சனை போன்ற தீய செயல்களில் இருந்து அறுபட வேண்டும்.

மேலும் நிலையாமையை உணரவேண்டும். நிலையான சிவனை நினைக்க வேண்டும். மனைவி, மக்கள், உடன் பிறந்தார் சுற்றத்தார் எல்லோரும் நாம் இறக்கும் தறுவாய் அவர்கள் தனித்தனியே எனக்கு எங்கே சொத்து, எனக்கு எங்கே என்று கேட்பார்கள். நாம் எவ்வளவு பெரும் சொத்து சேர்த்து இருந்தாலும் இதே நிலைதான். அதனால் நன்மை தரும் தருமத்தை வழித் துணையாகக் கொள்ள புண்ணியம் செய்யவேண்டும் என்றும், அப்புண்ணியத்தால் சிவன் தோன்றி ஐந்தெழுத்தைக் கூறுவார் என்பதாம். யோகநிலைக்குச் செல்லும் மாணவன் உலகில் நித்தியம், அநித்தியம் எது என்று உணரவேண்டும் என்பதாம்.

வாழ்வும் மனைவியும் மக்கள் உடன்பிறந்
தாறுமளவே தெமக் கென்பார் ஒண்பொருது
மேவுமதனை விரிவு செய்வார் கட்குக்
கூவுந்துணை யொன்று கூடலு மாமே. - திருமூலர்

தர்மத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதாம். மேலும் நியமத்தில் 63 நாயன்மார்களின் வரலாறுகளைப் படித்தல், படிக்கக் கேட்டல், அவர்களின் பக்தி வைராக்கியத்தை தெளிந்து உணருதல், பட்டினத்தடிகள், அருணகிரிநாதர் போன்ற அரும்பெரும் யோகிகளின் வாழ்க்கை வரலாறு, அவர்கள் இறைவன்மேல் பக்தியுடன் பாடிய பாடல்களைக் கேட்டல், படித்துத் தெளிதல் போன்ற சிவபெருமான் பெருமையை விளக்கும் நூல்களைப் படித்து மனம் ஒரு நிலைப்பட வேண்டும்.

சிவமன்றி வேறு வேண்டாதே - யார்க்குத்
தீங்கான சண்டையைச் சிறக்கத் தூண்டாதே
தவநிலை விட்டுத் தாண்டாதே - நல்ல
சன்மார்க்க மில்லாத நூலை வேண்டாதே - கடுவெளி சித்தர்

அகத்தூய்மையும், புறத் தூய்மையும் யோகம் பயிலும் யோகியர்களுக்குக் கண்டிப்பாக தேவை என்பதே இயமம், நியமம் என்ற யோகமாகும். இவை ஆரம்பப் பாடமாகும். 'மனம் பழுத்தால் பிறவி

தங்களம்' என்பதுபோல் மனதை ஒரு முகப்படுத்துவதே இந்த இரண்டு யோகத் தன்மைகளாகும்.

உயிர் நிலையாமையை யோகி ஒருவர் உணர்ந்து, என்றும் நிலையான சிவன் நாமத்தையே கூற வேண்டும் என்று ஞான நூல் கூறுகிறது. நிலையாமையைத் திருமூலர் கூறுகிறார் :

ஊரெல்லாம் கூடி ஒலிக்க அழுதிட்டுப்
பேரினை நீக்கிப் பிணமென்று பேரிட்டுச்
சூரையங் காட்டிடைக் கொண்டுபோய்ச் சுட்டிட்டு
நீரினில் மூழ்கி நினைப் பொழிந்தார்களே.

ஒருவர் வாழும்போது, கா.மு.த.வி. ரங்கசாமி நாடார் என்று பெயரிட்டு அழைத்தவர்களும், மாமா என்று அழைத்தவர்களும், மருமகனே என்று அழைத்தவர்களும், மகனே என்று அழைத்தவர்களும், அப்பா, அண்ணா என்று அழைத்தவர்களும், முதலாளி என்று அழைத்தவர்களும், புண்ணியவான் என்று புகழ்ந்தவர்களும், அந்த கா.மு.த.வி. ரங்கசாமி நாடார் இறந்தவுடன், கந்தசாமியை எப்போது எடுக்கிறார்கள் என்றோ அல்லது மாமனை எப்போது எடுக்கிறார்கள் என்றோ, மருமகனை எப்போது எடுக்கிறார்கள் என்றோ, முதலாளியை எப்போது எடுக்கிறார்கள் என்றோ, புண்ணியவானை எப்போது எடுக்கிறார்கள் என்றோ கூறுவதில்லை. பிணத்தை எப்போது எடுக்கிறார்கள் என்றுதான் கூறுகிறார்களே ஒழிய, மற்ற அடைமொழி உறவின் முறையிட்டு அழைப்பது இல்லை. இப்படிப்பட்ட நிலையாமை வாழ்வில் சிவன் ஒருவனே நித்யப் பொருள் என்று உணர்ந்து சிவ நாமத்தையே கூறி மனதை ஒருநிலைப்படுத்த வேண்டும் என்று யோக நூல்கள் கூறுகிறது. இது இயமம், நியமம் என்ற இரு யோகங்கள். இரு புறத் தவப் படிகள் என்று ஞானிகள் கூறுகின்றனர்.

3. ஆதனம் (இருக்கை)

அட்டங்க யோகப் பயிற்சியில் ஆதனம் மூன்றாவது படியாகும். ஆதனம் என்றால்–இருக்கை, ஆசனம் என்று பொருள். யோகம் பயிலும் யோகி ஒருவன் தன் வாசியோகப் பயிற்சிக்கு உடல் ஒரு சீராக அமர்ந்து யோகம் பயில வேண்டும். அதுவே ஆசனமாகும்.

நம் உடலின் முதுகுத் தண்டு நடுபாகமாக குதத்திலிருந்து கழுத்துவரை உள்ளது. அதில் சூக்மணாநாடி என்று கண்ணுக்கு தெரியாத தாமரை நூல்போல் உள்ளது. யோகி ஒருவர் யோகப் பயிற்சி செய்யும்போது பராணன் நேராக மேல் ஏறிப்போக வயிறு இடை, கண்டம், தலை தூண்களைப் போல் ஒரே சீராக இருக்க வேண்டும். அப்படி இல்லாவிட்டால் வாயு ஒரே சீராகப் போகாமல் யோகியர்களுக்குப் பலவித இன்னல்களைக் கொடுத்து விடும். அதனால் பெரும் தீங்கு ஏற்பட வாய்ப்பு உண்டு. என்று ஞானிகள் எச்சரிக்கின்றனர். எதையும் தக்க குருமூலம் யோகம் பயில முயலவேண்டும் என்றும் ஞானிகள் எச்சரிக்கையிடுகின்றனர்.

வாசியோகத்திற்கு உடல் பரிபக்குவமாக்குவதே ஆசனமாகும். யோகி மேன்மேலும் யோக நிலைக்குப்போக இது பெரும் உபயோகமான சாதனமாகும். ஆசனங்கள் பலநூறு வகைப்படும். ஆனால் அதில் முக்கியமாக எட்டு ஆசன முறைகளையே ஞானிகள் கையாளுகின்றனர். அவைகள் முறையே: 1. பதும ஆசனம், 2. பத்ராசனம், 3. குக்குடாசனம், 4. சிம்மாசனம், 5. கோமுகாசனம், 6. சோத்திராசனம், 7. வீராசனம், 8. சுகாசனம். இதையே திருமூல பகவான் தன் திருமந்திரத்தில் கூறுவதாவது:

''பத்திரங் கோமுகம் பங்கயங்கேச
சோத்திரம் விரஞ்சுகாதனம் ஓரேழும்
உத்தமமாமது ஆசனம் எட்டெட்டுப்
பத்து நூறு பல ஆசனம்

திருமூல பகவான யோகாசனங்கள் $8 \times 8 = 64$ம் இன்னும் பல நூறு ஆசனங்கள் உள்ளது என்று கூறுகிறார். ஆயினும் இதே திருமூல நாயனார் சன்யாசிகளுக்கு பலவும், குடும்பத்தவனுக்கு பதும ஆசனமும் என்று கூறுகிறார். இதையே சன்யாசிகளுக்கு சித்தாசனமும், குடும்பத்திலிருந்து யோகம் பயில்வோர்களுக்கு பத்மாசனமும் சிறந்தது என்று 'அடயோககதீபிகை' என்ற ஞானநூல் கூறுகிறது.

யோகம் பயிலும், ஒரு யோகி தன் உடலை யோகப் பயிற்சிக்கு ஏற்றபடி செய்வதே ஆசனமாகும். யோகி ஒருவன் யோகம் பயிலும் இடம் சுத்தமாக இருக்க வேண்டும். பூசைக்குரிய அறையாக இருக்க வேண்டும். அவ்விடம் நித்திரை செய்யும் இடமாக இருக்கக் கூடாது. அந்த இடம் நம் வழிபாட்டுக்குரிய தெய்வ படங்கள் இருக்க வேண்டும். அந்த இடம் எப்போதும் புனிதத்தன்மை நிறைந்ததாக இருக்க வேண்டும். ஏன் என்றால் யோகம் பயிலும் யோகியின் மனம் வேறு புறவழிகளில் செல்லாமல் இருக்க வேண்டும். அந்த இடம் தூப தீபங்கள் நிறைந்து மணம் வீசும் மலர்களால் சூழ்ந்து இருக்க வேண்டும். மனம் சிதறாமல் இருக்கும் சூழ்நிலையில் அந்த இடம் இருக்க வேண்டும்.

அவ்விடம் பிறர் தலையீடுகள் இல்லாமலும் சண்டை சச்சரவு செய்யும் இடமாக இருக்கக் கூடாது. யோகம் பயிலும் சாதகன் சினம் கொள்ளக் கூடாது. சினம் வாசி யோகப் பயிற்சியில் வாயு நிலை தடுமாற இடமளித்துவிடும். அதனால் சாதகனுக்கு பெரும் தீங்கு உண்டாகக் காரணமாகி விடும். புலித் தோல், மான் தோல் (அ) தருபை புல் விரித்தோ சாதகன் யோகம் பயில வேண்டும். தரையில் உட்கார்ந்தோ அல்லது மற்ற பொருள்களின் மீது உட்கார்ந்தோ யோகம் பயின்றால், நாம் யோகம் பயிலும் சமயம் ஏற்படும் காந்த சக்தி வீண்ணாகி தரையில் போய்விடும். அதனால் மான், புலித் தோல் போன்ற இருக்கைகள் நமக்குத் தேவை.

நேராக நிமிர்ந்து உட்கார்ந்து யோகம் பயில்வது நல்லது. அப்போதுதான் யோகி ஒருவர் அப்பியாசம் செய்யும் வாயு சீராக ஓடும். உடல் வளைந்தோ ஒரு பக்கம் சாய்ந்தோ யோகம் பயின்றால் வாயுவின் ஓட்டம் சீராகாமல் மாறி

உயிருக்கே ஆபத்து ஏற்பட்டு விடும் என்று ஞானிகள் எச்சரிக்கை விடுகின்றனர். யோகப் பயிற்சியில் எந்த நிலயையிலும் தக்க குருவின் ஆசியுடனும், ஆலோசனையுடனும் பயில வேண்டும். அதை விட்டுவிட்டு இடக்கலை, பிங்கலை, சுழிமுனை என்று ஏட்டில் எழுதியதைக் கண்டு யோகம் பயில முனையக் கூடாது என்று மிகவும் எச்சரிக்கையை விடுகின்றனர் ஞானிகள்.

ஆசனமிட சாதகனுக்கு எந்த ஆசனம் இடர் இல்லாமல் இருக்கிறதோ அதையே பயில வேண்டும். இருக்கும் 100க்கு மேற்பட்ட ஆசனங்கள் செய்ய வேண்டிய அவசியமில்லை. சாதகன் உடல் ஒரு சுமையாக கருதக் கூடாது. சாதகன் உடல் ஒரு தொல்லையாகவோ கருதக் கூடாது. சாதகன் உடல் இருப்பதை மறந்து யோகம் பயில வேண்டும். ஆன்மப் பயணம் மேற்கொள்ளும் யோகியர்களுக்கு எந்த ஆசனம் எளிதாகத் தோன்றுகிறதோ அதையே யோகப் பயிற்சிக்கு மேற்கொள்ள வேண்டும்.

அவரவர் உடல் நிலைக்குத் தகுந்தாற்போல் ஆசனமிட்டுப் பயிலலாம். யோக நிலைக்கு இதுவும் ஓர் முக்கிய படிக்கற்களாகும். இந்த யோகப் படியாகிய ஆசனத்தைக் கைவரப் பெற்றவர்கள் அடுத்த முக்கிய யோகப் படியான பிராணாயாமம் செய்யத் தகுதி வாய்ந்தவர்கள் ஆகிறார்கள்.

> வருந்தித்தவஞ் செய்து வானவர் கோவாய்த்
> திருந்த மராபதிச் செல்வன் இவனெனத்
> தருந்தண் முழுவங்குழலும் இயம்ப
> இருந்தின்பம் எய்துவர் ஈசன் அருளே. - திருமூலர்

அகத்தவத்திற்கு வேண்டிய எட்டு யோகங்களில ஒன்றாகிய இருக்கைப் பேறு பெற்றவர். வருந்தித் தவஞ்செய்துள்ளாரை யொப்பர். இனிமை தரும் புல்லாங்குழல் இசையைப் பொருந்திய சிவபெருமான் திருவருளில் மூழ்குவர். ஆசனத் தவத்தால் வானவரை ஆளும் ஈசன் இவன் என்று புகழப்படுவான் என்று திருமூலர் ஆசனத்தின் பெருமையைக் கூறுகிறார்.

4. பிராணாயாமம்

மனித உடலில் உள்ள பஞ்சேந்திரங்களாகிய கண், மூக்கு, செவி, வாய், மெய் என்னும் ஐந்தையும் உயிர்ச் சக்தி இயக்குகிறது. இந்த உயிர் சக்தியானதுதான் வாயு. உயிர் வாழ்வதற்கு பிராண வாயுவே முக்கியமானது ஆகும். இந்தப் பிராணவாயு தன் விருப்பம்போல் போகாமல் மூச்சு (வாசியோகம்) பயிற்சியினால் ஒழுங்குபடுத்தி, அதன் மூலம் தன் உடலில் உள்ள ஆறு ஆதாரங்களில் முதல் ஆதாரமாகிய மூலாதாரத்தில் உள்ள குண்டலி சக்தியை எழுப்ப யோகியர்கள் முன்னேறும் ஒழுங்கு முறை மூச்சுப் பயிற்சியே பிராணாயாமம் எனப்படும்.

பிராணனை (பிராண வாயுவை) ஒழுங்குபடுத்தி (ஆயமம் செய்து) அதன் மூலம் யோக நிலைக்கு படிகள் அமைப்பதே பிராணாயாமம் எனப்படும். அப்படி அந்த பிராண வாயுவை ஒழுங்குப்படுத்தும் சமயம்

பிராண வாயு தன் விருப்பம் போல் சென்று யோக நிலைக்கு முயற்சிக்கும் சாதகனை இன்னல்கள் பல விளைவித்து தாறு மாறாக செய்து விடக்கூடும். அதனால் சாதகன் மனதை கட்டுப்பாட்டுடனும், ஆசாபாசங்களி, காம குரோதங்கள் போன்றவைகளை அறவே நீக்கி மனக் கட்டுப்பாட்டுடன் சாதகன் பிராணாயாமம் செய்ய வேண்டும்.

அப்படி பிராணாயாமம் செய்ய முயற்சிக்கும் சாதகன் தக்க குரு மூலம் கற்க வேண்டும். குரு இல்லாமல் எந்தக் காரணம் கொண்டும் ஏட்டில் பலர் பலவித கருத்துடன் எழுதியதைக் கண்டு மயங்கி விடக்கூடாது. இந்த பிராணாயம யோகப் பயிற்சியில் சாதகன் சிறு தவறு செய்தாலும் சொல்லொண்ணாதுயரை அடைய நேரிடும். ஏன்சில சமயம் உயிருக்கே ஆபத்து வந்துவிடும். தக்க குருமூலம் இப்பிராணாயாமப் பயிற்சியை சாதகன் ஒருவன் வெற்றிகரமாகச் செய்யும் தன்மையைப் பெற்று விட்டால், அவன் எல்லையில்லா இன்பத்தை அடைவான். பறவைகளைவிட வேகமாக செல்லும் தன்மை அவனுக்கு கிடைத்துவிடும் என்கிறார் திருமூலர். இளமை குன்றாமல் இருக்கும் தன்மை வந்துவிடும்.

வளியினை வாங்கி வயத்தில் அடக்கில்
பளிங்குக் கொத்த காீயம் பழுக்கினும் பிஞ்சாம்
தெளிய குருவின் திருவருள் பெற்றால்
வளியினும் வேட்டு வளியனு மாமே — திருமந்திரம்

பிராணாயாமம் என்பது பிராணன் என்ற உயிர்க்காற்றை ஒழுங்குப் படுத்துதல் என்பதாகும். பிராணன் என்ற நம் உடலில் செயல்படும் சக்திக் காற்றை கட்டுப்படுத்தி முறைப்படுத்தலே பிராணாயாமம் எனப்படும். யோகி ஒருவர் யோக நிலைக்கு போக மிக முக்கியமான யோகப் பயிற்சியே, இந்த பிராண்ாயாமம் என்ற வாசி யோகப் பயிற்சி. இவ்வாசியோகப் பயிற்சியை முறைப்படுத்தி விட்டால் சாதகன் ஒருவன் மனமும் தேகமும் இன்பமடையும் நிலை வந்து விடும்.

பிராணாயாமம் செய்யும் மாணவன், தன் உடல் நிலைக்கு எந்த ஆசனம் உகந்ததோ அந்த ஆசனமிட்டு நிமிர்ந்து கம்பம்போல் உட்கார வேண்டும். ஏன் என்றால் நம் உடலில் பின்புறமுள்ள பிரம்ம தண்டம் என்று கூறப்படும் முதுகுத் தண்டின் எலும்பு கூட்டுக்குள் கண்ணுக்குப் புலப்படாத சூக்குமமான நரம்புத் துவாரம் உள்ளது. அது சரிவர வேலை செய்ய நிமிர்ந்து உட்கார வேண்டும். கோணலாக ஆசனமிட்டு உட்கார்ந்து பிராணாயாமம் பயிலும் மாணவனுக்கு அந்த சூக்குமமான நரம்பின் வழியாகப் பிராண வாயு மேலேறிச் செல்லத் தடையாய் இருந்து மாணவருக்குப் பலவித தொல்லைகளை ஏற்க நேரும் என்று ஞானிகள் கூறுகிறார்கள்.

நெஞ்சு, கழுத்து, தலை ஆகிய உடலின் மூன்று உறுப்புகளும் ஒரே சீராக நேர்கோட்டில் தோன்றும்படி செய்ய வேண்டும். நாம் பிராணாயாமம் பயிலப் பயிலத் தானாக நேராக உட்காரும் நிலை வந்துவிடும் என்று யோகிகள் கூறுகிறார்கள். இப்படி நிமிர்ந்து நேராக ஆசனமிட்டு உட்கார்ந்து

பழகிய பிறகு, நாடி நரம்புகளின் செயல்களை சாதகன் ஒருவன் தன்வசப்படுத்த ஆரம்பிக்க வேண்டும். தச (பத்து வித) நாடி நரம்புகளில் உள்ள சுவாசமானது, உடலெங்கும் உள்ள 72,000 நாடி நரம்புகளில் ஆதிக்கம் செலுத்துகிறது. அதனால் சுவாசிப்பதில் ஒழுங்குபாடு மிகவும் அவசியமாகிறது.

சாதாரணமாக நாம் சுவாசிக்கும் வாயுவில் ஒழுங்குபாடு கிடையாது. ஒவ்வொரு மனிதனும் அவனவன் மனப்பான்மைக்கு தகுந்தவாறும், உடல் நிலைக்குத் தகுந்தவாறும் சுவாசம் நடைபெறுகிறது. ஆண், பெண் சுவாசம் ஒரே மாதிரியானதும் அல்ல.

பிராணவாயுவை உள்ளே இழுத்து அளவுடன் நாசி வழியாக வெளியே விடவேண்டும். பிராணவாயுவை வெளியேற்றி வீணாக்காமல் செய்யும் செயலுக்கு பிராணாயாமத்தின் முக்கிய குறிக்கோள் ஆகும். இந்த அளவுடனும் ஒழுங்கு முறையுடனும் சுவாசித்தால் நம் உடலில் உள்ள உறுப்புக்களுக்கிடையில் பொருத்தமும், இசைவும் நன்மையாக அமைந்துவிடும். பிராணாயாமம் தெய்வீக முக்கியத்துவம் பெற்றது. குண்டலினி எழும்புவதற்கு பிராணாயாமம் முக்கியப் பயிற்சி முறை ஆகும். பிராணாயாமப் பயிற்சி, நம் உடலில் உள்ள 72,000 நாடிகளையும், நாள் ஒன்றுக்கு நம் உடலில் உள்ள 3.5 கோடி மயிர்த் துவாரத்தில் வரும் சுவாசத்தையும், உடலில் உள்ள 360 எலும்புகளையும் 500 தசைகளையும் 900 தசை நார்களையும், உடலில் ஓடும் 700 ரத்தக குழாய்களையும் சுத்தப்படுத்தி, ஒரே சீராக செயல்படும் தன்மையும், நாள் ஒன்றுக்கு நாம் விடும் 21,600 சுவாசம் எல்லாமும் நம் உடலில் முன்கண்ட 96 தத்துவங்களும் ஒரே சீர்படும் என்பதே பிராணாயாமத்தின் செயல்திறன் ஆகும்.

நமது உடலில் உள்ள மூக்கின் வலது புற துவாரத்தின் வழியாக வரும் பிராணவாயுக் காற்றுக்கு பிங்கலை என்றும் சூரியக்கலை என்றும் கூறுவர். மூக்கின் இடது துவாரத்தில் வரும் சுவாசத்தை இடக்கலை என்றும் அல்லது சந்திரக்கலை என்றும் கூறுவர். நமது உடலில் பின்புறமுள்ள முதுகு தண்டின் அடியில் குதஸ்தானத்தில் தொடர்ந்து எல்லா நாடிகளுக்கும் ஆதாரமாக பிரம்ம கபாலம் சிரசு வரை இயங்கும் நாடி நடு நாடி என்றும் சுழிமுனை என்றும் கூறுவர். சூரிய கலை, சந்திரக் கலை சேருமிடம் நடு நாடி எனப்படும். சுழிமுனையாகும். மேலும் யோகிகள் சந்திர மண்டலம், சூரிய மண்டலம், அக்னி மண்டலம் என்றும் கூறுவர்.

சுழிமுனை என்னும் நடு நாடியில் சுவாசம் வரும் சமயம் உலக விஷய நடவடிக்கைகளை நிறுத்தி விடவேண்டும்.

பிராணாயாமம் பயிலும் சாதகன் தக்க குருவின் ஆலோசனையுடனும், ஆசியுடனும் குருவின் சொற்படி தன் உடலில் உள்ள மூக்குத் துவாரத்தின் வலது பக்கத்தை தன் கட்டை விரலால் அடைத்துக் கொண்டு, இடது மூக்கு துவாரத்தின் வழியாக சுவாசத்தை உள்ளே இழுத்துக்கொண்டு அதன் துவாரத்தைச் சுண்டு விரலால் அடைத்துக் கொள்ள வேண்டும். தற்போது மூக்கின் வலது துவாரத்தைக் கட்டை விரலாலும் மூக்கின் இடது துவாரத்தை

சுண்டு விரலாலும் அடைத்துள்ளது. சிறிது நேரம் அப்படியே இரண்டு விரல்களால் இரண்டு நாசித் துவாரத்தை அடைத்த பின், உள்ளே வாங்கிய காற்று மனதால் அழு! என்னும் நாடியால் மூலாதாரத்தில் தாக்கிய தாக பாவனை செய்ய வேண்டும். பிறகு, காற்றை வலது நாசி வழியாக நிதானமாக வெளியே விடவேண்டும் காற்றின் வேகம் குறைந்து காணும் அளவிற்கு வெளியே விடவேண்டும்.

இதே முறையில் இடது மூக்குத் துவாரத்தைச் சுண்டு விரலால் மூடிக் கொண்டு வலது நாசித் துவாரத்தின் வழியாக காற்றை உள்ளே வாங்கிய பிறகு, வலது நாசித் துவாரத்தில் கட்டை விரலைக் கொண்டு அடைத்து விடவேண்டும். உள்ளே வாங்கிய காற்றை மனதால் வலது நாடி வழியாக மூலாதாரத்தை தாக்கியதாக பாவனை செய்ய வேண்டும். பிறகு, சிறிது நேரம் காற்றை மூலாதாரத்தின் இடது பக்கமாக மாற்றியதாக பாவனை செய்ய வேண்டும். இடது பக்க மூலாதாரத்தை அடைந்ததாக பாவனை செய்த காற்றை இடது பக்க நாசி துவாரத்தின் வழியாக நிதானமாக வெளியே விடவேண்டும்.

இதை பழகப் பழக கால ஓட்டத்தில் சாதகன் ஒருவனுக்கு எளிதாகிவிடும் என்று யோகியர்கள் கூறுகிறார்கள். ஏட்டில் கண்டதை கண்டு யாரும் வாசியோகப் பயிற்சியை முயற்சிக்க வேண்டாம். இந்த வாசி யோகத்தை முற்றிலும் அறிந்து வெற்றி கண்டு சாதனை படைத்த குருமூலம் கற்க வேண்டும் என்பதைக் கண்டிப்பாக உணரவேண்டும்.

பிராணாயாமத்தின் நோக்கமே நாம் சுவாசிக்கும் காற்றை ஒழுங்குபடுத்தி அந்தக் காற்றை வெளியே வீணாக்காமல் படிப்படியாக காற்றை சுழிமுனையில் நெடுநேரம் கும்பகம் செய்து அதன் உதவியால் மூலாதாரத்தில் செயல்பாடு இல்லாமல் தூங்கிக் கிடக்கும் குண்டலினி என்ற சக்தியை எழுபி, அதை நம் உடலில் உள்ள மற்ற ஐந்து ஆதாரங்கள் வழியாக மேலேற்றி, பிரம்ம கபாலத்தில் உள்ள சகசுராரத்தில் சேர்ந்து, சிவசக்தி இணைத்து சிவத்தன்மையை அடைவதே ஞானிகளின் நோக்கமாகும். (குண்டலினி யோகம், வரும் அத்தியாயங்களில் விரிவாக விவரிக்கப்படுகிறது).

இப்படிப்பட்ட பிராணவாயுவை மனிதன் ஒருவன் வினாடிக்கு 12 அங்குலம் காற்றை உள்ளே இழுத்து, 8 அங்குலம் காற்றை வெளியே விடுகிறான். 4 அங்குலம் காற்று வீணாகி விடுகிறது. இப்படி 4 அங்குலம் வீணாகாமல் காற்றை உள்ளே கும்பகம் செய்வதே பிராணாயாமத்தின் நோக்கமாகும்.

மனிதன் தினந்தோறும் நிமிடம் ஒன்றுக்கு 15 மூச்சுகளாக 24 மணி நேரத்தில் 21,600 மூச்சு நம் மூக்கு நாசி சுவாரத்தின் வழியாக நடைபெறுகிறது. இந்த 21,600 தடவை நடக்கும் சுவாசத்தை வீணாக்காமல் குறைப்பதே பிராணாயாமத்தின் நோக்கமாகும். மூச்சுக் காற்றை வீணாக்காமல் இருந்தால், பல நூறு வருடங்கள் உயிர் வாழலாம் என்று ஞானிகள் கூறுகிறார்கள்.

மனிதன் தன் செயல்பாடுகளால் வீணாக்கும் மூச்சுக் காற்று :

மனிதன் பேசும்போது	12''	8''	4''
மனிதன் நடக்கும்போது	16''	8''	8''
மனிதன் தொழில் புரியும்போது	20''	10''	10''
மனிதன் சண்டையில்	24''	12''	12''
மனிதன் ஓடும்போது	54''	37''	37''
மனிதன் தூங்கும்போது	48''	30''	18''
மனிதன் புணரும்போது	64''	24''	24''

இடக்கலை என்ற இடது மூக்குத் துவாரத்தின் வழியாக உள்ளே இழுத்த வாயு பிங்கலை என்னும் வலது நாசித் துவாரத்தின் வழியாக வெளியேறும். இவ்விரண்டும் மாறும் இடம் நெற்றியின் புருவங்களுக்கிடையே தாமரைக் கொடியில் உள்ள நூலைப் போல் மிக நுண்ணிய ரந்திரம் உண்டு. அதுவே திருவேணி சங்கமம் என்றும், அந்த இடம் உண்மை அறியாவிக ஆனந்தம் இருக்குமிடம் என்றும், சூரியக்கலை (பிங்கலை), சந்திரக்கலை (இடக்கலை) சுழிமுனை ஆகியவை ஒன்று கூடும் நடு நாடி என்றும் பெயர்.

பிராணாயாமம் அல்லது வாசி யோகம் என்பது நமதுஉடலில் உள்ள 72,000 நாடிகளில் உறையும் வாயுவை முறைப்படுத்தலே ஆகும். யோகம் பயிலும் சாதகன் ஒருவனுக்கு உடல் ஒரு தொல்லையாக இருக்கக் கூடாது என்பதற்காக நாடிகளை சுத்தப்படுத்தியும், அதன் ஓட்டங்களை முறைப்படுத்தியும் செயல்படாவிட்டால் உடலில் பல உபாதைகள் ஏற்படாது. உதாரணமாக குடலில் உள்ள புழுக்களை வெளியேற்றுகிறது. மூக்குச் சளி, கபங்களை நீக்கி விடுகிறது. பலவித நரம்புகளினால் ஏற்படும் வியாதிகளைச் சரி செய்து விடுகிறது.

முதுமையை வெல்லும் சக்தி, மரணத்தை வெல்லும் சக்தி, குண்டலினி சக்தியை எழுப்ப உதவும் சக்தி ஆகியவைகள், பிராணாயாமம் செய்து வெற்றி பெறுவதால் ஏற்படும் என்று யோக நூல்கள் கூறுகிறது.

வாசியோகம் (பிராணாயாமம்) செய்வதில் பலன் நம் உடல் வலுவடைவதற்காக செய்யப்படுகிறது. இதனால் ஆத்துமா, மூக்குத் தண்டு, நுரையீரல் தலைசுற்றல் பலவீனமாய் இருத்தல் போன்ற நோய்களில் இருந்து விடுபடலாம்.

பிராணாயாமம் செய்து வெற்றி கண்ட யோகி ஒருவருக்குக் காமம், குரோதம், மதம், மாச்சர்யம், எல்லாம் அற்றுப் போகும் நிலை வந்து விடும். அவன் மனதை ஒரு நிலைப்படுத்தியவன் ஆவன். மனதை அடக்கியவனே ஞான வழிக்குச் செல்ல தகுதி உடையவன் ஆகிறான். அதனால் அலையும் மனதை வாசியோகத்தால் சாதகன் ஒருவன் அடக்கி விடுகிறான்.

நாம் உள்ளே இழுக்கும் வாயு (சுவாசம்) 4 வினாடி நேரம் எடுத்துக் கொள்ள வேண்டும். அப்படி உள்ளே வாங்கிய சுவாசத்தை 16 வினாடி நேரம் உள்ளே கும்பகம் செய்யவேண்டும். அப்படி கும்பகம் செய்த சுவாசத்தை நிதானமாக 8 வினாடி நேரம் வெளியே விடவேண்டும்.

இங்ஙனம் ஆரம்ப நிலையில் சாதகன் ஒருவன் பயில நேரங்களைக் கையாள வேண்டும் என்று ஞானிகள் கூறுகிறார்கள்.

பிறகு படிப்படியாக சாதனை புரியும் யோகிகள் நேரத்தைக் கூட்டி சுவாசத்தை கும்பகம் செய்ய வேண்டும். உதாரணமாக, உள்ளே வாங்கும் வாயு 4 வினாடி ஆனால் கும்பகம் செய்வது 16 வினாடி. வெளியே விடுவது 8 வினாடியாக 1 = 4 = 2 ஆக இருக்க வேண்டும். இந்த 1க்கும் 4க்கும் இரண்டுமான கால அளவு கூடவோ குறையவோ கூடாது என்று யோகிகள் அறிவுறுத்துகிறார்கள். நாளடைவில் சாதகன் ஒருவன் படிப்படியாக கீழ்க்கண்டவாறு விகிதாரசாரத்தைக் கையாளலாம் என்று ஞானிகள் கூறுகிறார்கள்.

உதாரணமாக :

உள்ளே வாங்கும் சுவாசம்	கும்பகம் சுவாசம்	வெளியே விடும் சுவாசம்
6 வினாடி	24 வினாடி	12 வினாடி
8 வினாடி	32 வினாடி	16 வினாடி
10 வினாடி	40 வினாடி	20 வினாடி

இந்த விதமான விகிதாசரத்தின்படி சாதகன் ஒருவன் குரு மூலம் வாசியோகம் அப்பியாசித்தல் வேண்டும். சுவாசத்தை நீண்ட நேரம் உள்ளே கும்பகம் செய்தல் கூடாது. படிப்படியாக குருவின் சொல்படி செய்ய வேண்டும் என்று ஞான நூல்கள் கூறுகிறது.

பிராணாயாமம் செய்யும் சாதகன் உணவைக் குறைக்க வேண்டும். உணவு அரை வயிறு, கால் வயிறு தண்ணீர், கால் வயிறு வாயு இருக்க வேண்டும். ஏன் என்றால் நாம் சுவாசிக்கும் வாயு குடலின் ஒரு பாகத்தில் சஞ்சரிக்க வேண்டும். வாய் நிறைந்திருந்தால் வாயு உள்ளே சஞ்சரிக்க இடமில்லாமல் போய்விடும்.

பிராணாயாமம் செய்யும் சாதகன் உணவு நிலையில் கட்டுப்பாட்டுடன் செயல்பட வேண்டும். காம உணர்ச்சி தூண்டும் உணவு வகைகளையோ, புளிப்பு, இனிப்பு, உவர்ப்பு, காரப்பு போன்றவைகளைக் குறைக்க வேண்டும். மாமிச உணவு எந்தக் காரணம் கொண்டும் உபயோகிக்கக் கூடாது.

இவ்வாறு வாசியோகம் பயிலும் யோகி ஒருவர் தொடர்ந்து "ஓம்" என்ற மந்திரத்துடன் பயிலுவார் ஆகில், சுவாசத்தின் (வாயுவின்) வேகம் குறைந்து விடும். மூச்சு யோகியின் கை வசமாகி விடும். மூச்சு யோகியின் கைவசமாகி விட்டால் அந்த யோகிக்கு எண்ணங்கள் உதிக்க மாட்டாது. ஏன் என்றால் எண்ணங்கள் மூச்சிலிருந்து உற்பத்தியாகிறது. எண்ணங்கள் அற்ற இடம் விருப்பு, வெறுப்பு அற்ற இடம்.

யோகி ஒருவன் மூச்சை அடக்கி எண்ணங்களை உதிக்காமல் செய்து விட்டால் பிறகு எதையும் பேசாமல் சும்மா இருப்பவர் ஆகிறார். 'சும்மா இருப்பதே சுகம்' என்னும் மாபெரும் தத்துவம் உணர ஆரம்பித்து விடுகிறான்.

இப்படிப்பட்ட வாசி யோக அப்பியாசம் பயின்று வெற்றி கண்ட யோகி ஒருவர் நீண்ட காலம் வாழத் தகுதி உடையவர் ஆகிறார். இந்த பிராணாயாமம் பயிற்சியில் முன்னேற முன்னேற யோகி ஒருவர் நிலை உயர்ந்து கொண்டே போகும்.

சுவாசம் பந்தனம் செய்யச் செய்ய ஏற்படும் நன்மைகள் :

1. (அங்குலம்) குறைந்தால் உலக வாசனை மறப்பான்.
2. குறைந்தால் மனம் ஒரு நிலைப்பட்டு ஆனந்தம் அடையும்.
3. குறைந்தால் உலகத்தில் விவேகி ஆவான்.
4. குறைந்தால் தூர தேசத்தில் நடக்கும் நடவடிக்கை சொல்வான்.
5. குறைந்தால் ஆகாய வீதியில் சகலமும் காண்பான்.
6. குறைந்தால் எட்டு வகை சித்துக்களை அடைவான்.
7. குறைந்தால் 9 கிரகங்களிலும் சஞ்சரிப்பான்.
8. குறைந்தால் கூடு விட்டு கூடு பாய்தல் உண்டாகும்.
9. குறைந்தால் "ஆன்மா"வை அறிந்து ஆனந்தம் அடைவான்.

மேல்கீழ் நடுப்பக்க மிக்குறப் பூரித்துப்
பாலாம் இரேசகத் தாலுட் பதிவித்து
மாலாசி யுந்தியுட் கும்பித்து வாங்கவே
ஆலாலம் உண்டான் அருள் பெறலாமே — திருமந்திரம்

மேலே எனப்படும் தலை, கண், காதுகளும், கீழே எனப்படும் கால், கால் பெருவிரல் முதலியவைகளும் நடு எனப்படும் நெஞ்சுக் குழி, தொப்புள் முதலியவைகளும், நிறையுமாறு பிராண வாயுவை உள்ளே வாங்கி, அதை உள்ளே அடக்கி (கும்பித்து) வெளியே விடும் வாயு குறைவாக வெளியேற்றி அப்பியாசம் செய்து வந்தோமானால், நஞ்சினை உண்டவன் ஆகிய சிவபெருமான் அருளைப் பெறலாம் என்று திருமூலப் பெருமான் கூறுகிறார்.

இப்படிப்பட்ட வாசியோகம் பயின்று அதன் வெற்றியைக் கண்டவர்கள். ஞான நிலைக்குப் போகும் தகுதியை அடைகின்றார்கள். அவர்கள் இறக்கும் தன்மையிலிருந்து விடுபட்டுத் தேகம் பொன்னிறமாகக் காணப்படும் என்கிறார் திருமூலர்.

புறப்பட்டுப் புக்குத் திரிகின்ற வாயுவை
நெறிப்பட வுள்ளே நின்மல மாக்கில்
உறுப்புச் சிவக்கும் உரோமங் கறுக்கும்
புறப்பட்டுப் போகான் புரிசடையோனே — திருமந்திரம்

ஏற்றி இறக்கி இருகாலும் பூரிக்குங்
காற்றை பிடிக்குங் கணக்கறி வாரில்லை

காற்றை பிடிக்குங் கணக்கறி யாளர்க்குக்
கூற்றை யுதைக்குங் குறியது வாமே.

இடக்கலையின் உள்ளே வாங்கிய காற்று உள்ளே கும்பித்துப் பிறகு பிங்கலை வழியாக வெளியே விடும் கணக்கு தெரிவாரில்லை. அப்படிப்பட்ட கணக்கு

உள்ளே வாங்கும் காற்று	16 மாத்திரை
கும்பகமாகும் காற்று	64 மாத்திரை
வெளியேவிடும் காற்று	32 மாத்திரை

இந்தக் கணக்கை அறிந்து வாசியோகம் பயிலும் யோகியர்களுக்கு எமனை வெல்லும் குறி அதுவாகும் என்பதாம்.

வாசி யோகமாகிய பிராணாயாமத்தை முறைப்படி பயிலும் சாதகனுக்கு, நாட்கள் ஆக, ஆக யோகப் பயிற்சியின் முதிர்ந்த நிலையில் யோகியின் காதுகளில் வினோதமான ரீங்கார சப்தங்களும், வாத்திய ஒலிகளையும் அவர்கள் உணருவார்கள்.

"இத்திறமான யோக சாதனையிலிருந்து சாதிப்பவர் தமக்குச்
சுத்தமான நாதத்தொனிகளும் பல வாத்திதோன்றடு மணிகடன்மேக
மத்தளம் பெரியாழொலி சிலம்பு வளையணி தாளம றுமையாட்
கத்தனு மொழிந்தா னன்றியு முரவோராய் எடுத்துரைத் தனன்அன்றே."

முதிர்ந்த வாசி யோகிக்குப் பத்துவித வாத்தியங்களான. மணியின் ஓசை, கடல் அலை சப்தம், யானையின் பிளிறல், புல்லாங்குழல் ஓசை, மூங்கிலின் உராயும் ஓசை, மேகங்களின் உராயுதலால் ஏற்படும் ஓசை, வண்டின் ஓசை, தும்பியின் ஓசை, பேரிகை ஓசை, யாழின் ஓசை, சிலம்பு ஓசைகள் போன்றவை யோகி உணரும் வண்ணம் கேட்கும் என்று ஞானிகள் கூறுகின்றன.

இங்கே "மூச்சை பிடித்தால் சீவன் போகிறது" நீ என்னய்யா மூச்சுக் கலையைப் பற்றிக் கூறுகிறீர் என்று இதைப் படிக்கும் அன்பர்கள் கேட்பது எனக்குப் புரிகிறது. இது உனக்கும், எனக்கும் எழுதிய புத்தகம் அல்ல. ஞானி ஒருவர் தான், அந்த மெய்ஞானத்தைப் பெற்று பரபிர்மத்துடன் கலந்து பரபிர்மமாகும் தன்மையைப் பெற்ற எங்கள் பூண்டி தேவதேவன் நிலை என்ன? அவர் அந்நிலையை அடைய எவ்வளவு காலம் அல்லது எத்தனைப் பிறவி எடுத்து யோக நிலை கடந்து வந்து நமக்கெல்லாம். நம் வினைகளை அகற்றினார் என்று அறிய எழுதிய நூல் இது. உனக்கும், எனக்கும் எழுதிய புத்தகமல்ல. நாம் இன்னும் ஆன்மீகப் பாதையில் வரவில்லை. நாம் வேறு பாதையில் போய்க் கொண்டிருக்கும் அஞ்ஞானிகள். அதனால் மெய்ஞானி நிலை அறியவும், அவர்கள் அந்த மெய்ஞானம் பெற எவ்வளவு காலங் களையும், கட்டுப்பாட்டையும் கடந்து வந்தார்கள் என்று அறிய எழுதிய நூல். இம்மாபெரும் வாசி யோகத்தை சிதம்பரம் நடராசர் தன் நடனத்தின் மூலம் விளக்குகிறார் என்று யோகநூல் கூறுகிறது.

ஒருபாதந் தன்னைத்தூக்கி யொருபாதந் தன்னைமாற்றி
இருபாத மாடுகின்ற யியல்பை நீயறிந்தாயானால்
குருபாதமென்று கூறுங் குறிப்புனக்குள்ளே யாச்சு
விருபாதனா னகநாதர் மலரடி காண்பாய் நெஞ்சே! -நெஞ்சரி விளக்கம்

பிங்கலை (வலது நாசி)யை மூடி, இடது நாசியில் (இடக்கலை) மூச்சை உள்ளே இழுத்து நிறுத்த வேண்டும் என்று நாம் உணர, நடராசர் வலது காலை ஊன்றி, இடது காலைத் தூக்கி நடனம் செய்து காட்டினார்கள் என்றும், காலைத் தூக்கி நடனமாடி காளியை வென்றார் என்பது இடது, வலது நாசியினால் வாசியை உள்ளே இழுத்து கும்பகம் செய்து சுழிமுனையின் மூலம் (குண்டலினி சக்தி) மேலேற்றி சக்தியை தன் வசப்படுத்தினார் என்பதை நாம் உணரவே இப்படித் தில்லையில் ஆனந்த நடனமாடுகிறார்.

சூரியக்கலை, சந்திரக்கலையால் வாசியை உள்ளே இழுத்து அப்பியாசம் செய்து, மூலாதாரத்தில் கும்பகம் செய்து, சுழி முனையால் மூலாதாரத்தில் உள்ள குண்டலினி சக்தியை எழுப்பி, ஆதாரங்களைக் கடந்து, சகசுராரம் என்னும் பிர்ம கபாலத்தில் சேர்த்து, மனதை அவ்விடம் ஒன்றி அதற்கு மேல் ஆகாயம் போன்ற வெட்ட வெளியை அடையும். அந்த ''வெட்டவெளி ஆகாயமே'' சிதம்பர இரகசியம் என்று ஞானிகள் கூறுகின்றனர்.

''எங்கும் பரந்த பெரும் பொருள் என்னடி சிங்கி-அது
அங்கும் எங்குமாய் கண்டபெருவெளி சிங்கா!
கத்தன் ஒளிவு கலந்திடம் எவ்விடம் சிங்கி-அது
அத்தன் நடனம் தான் ஆடிய தற்பரஞ்-சிங்கா
என்னத்திலே பாலனேறி நின்றாடுது சிங்கி-அது
உன்னுக்குள் வாசி நடனப் புரவிமேற்சிங்கா'' -பீர்முகமது பாடல்

உருத்தரித்த நாடியில் ஒடுங்குகின்ற வாயுவைக்
கருத்தினால் இருத்தியே கபாலம் ஏற்றவல்லீரேல்
விருத்தரும் பாலராவர் மேனியும் சிவந்திடும்
அருள்தரித்த நாதர்பாதம் அம்மைபாதம் உண்மையே. -சிவவாக்கியர்

இடக்கலை, பிங்கலை நாடிகளில் வரும் வாயுவை சுழிமுனையாகிய நடுநாடி வழியாக் கபாலத்தில் யோக அப்பியாசம் மூலம் ஏற்றினால், முதுமையுடையவரும் இளமையான உருவம் அடைவார் என்றும் அப்படிப்பட்டவர் உடல் பொன்னிறமாகும் தன்மை வாய்க்கும் என்று சிவாக்கியர் கூறுகிறார்.

இதையே பட்டினத்து அடிகளார் ஆண்டவனைப் பார்த்து, இடக்கலையிலும், பிங்கலையிலும், சுழி முனையிலும் உயிராகிய பிராணனாகி நீ இருப்பதை அறியாமல் இருந்தேன் என்று கூறுகிறார்.

1. "இடையாகிப் பிங்கலையாய் எழுந்த சுழுமுனையாய் உடல்
உயிராய்நீ இருந்த உளவறியேன் பூரணமே"

2. "இடைபிங்கலையின் இயல்பறிய மாட்டாமல்
தடையுடனே யானும் தயங்கினேன் பூரணமே."

3. "மூக்குமுனையை முழித்திருந்து பாராமல்
ஆக்கைகெட்டு நானும்அறிவழிந்தேன் பூரணமே."

4. உச்சிவெளியை உறுதியுடன் பாராமல்
அச்சமுடன் நானும் அறிவிழந்தேன் பூரணமே."

சிவ ராசயோகம் பயின்று குண்டலியை எழுப்ப சித்த மகா புருசர்கள், வாசியோகத்தை மூலாதாரமாகக் கொண்டு யோகம் பயின்று அட்டமா சித்திகளையும் சமாதி நிலையையும் அடைகின்றார்கள். சிவராச யோகத்தில் வாசியோகம் முக்கியமான அங்கமாக விளங்குகிறது என்று ஞானிகள் தன் ஞான நூல்களில் கூறுகிறார்கள்.

நமது உடலில் உள்ள முதுகுத் தண்டாகிய பிரம் தண்டத்தின் வலது பக்கம் உள்ள நாடிக்கு பிங்கலை (அ) சூரியக்கலை என்றும், இடது பக்க நாடிகள் இடக்கலை (அ) சந்திர நாடி என்றும் பெயர். முதுகுத் தண்டின், அடிப்பாக மாகிய சிரசுவரை மத்தியில் உள்ள நாடி சுழிமுனை என்று ஞானிகள் கூறுகிறார்கள்.

சுவாசம் ஒன்னரை மணிக்கு ஒரு தரம் இடக்கலையில் உள்ளே சென்று பிங்கலை வழியாகவும், மற்ற ஒன்னரை மணிக்கு பிங்கலையின் உள்ளே இழுத்த சுவாசம் இடைகலை வழியாக வெளியே வரும். உள்ளே இழுக்கும் சுவாசம் பூரகம் என்றும், வெளியே விடும் சுவாசம் ரேசகம் என்றும், உள்ளே நிறுத்தும் சுவாசம் கும்பகம் என்றும் யோகிகள் கூறுகிறார்கள்.

ஒழுங்காக வாயுவை உள்ளே இழுத்து காற்றுப் பையை நிரப்பி வெளியே விடுவதால், இரத்தத்தில் உள்ள அழுக்கு இந்த வாயுவின் மூலம் வெளியே தள்ளப்பட்டு இரத்தம் சுத்தப்படுத்தப் படுகிறது. இப்படிப்பட்ட பிராணாயாமம் பயிற்சியால் உடலும் உள்ளமும் சுத்தப்படுத்தப்படுகிறது. பிராணாயாமம் என்பது "நாடி சுத்தி" ஆகும்.

சாதாரணமாய் மனிதர் விடும் சுவாசம் எவ்வளவு நேரம் குறையுமோ அந்த அளவில் அந்த மனிதன் ஆயுள் நீடிக்கும்.

சுவாசம் 12 அங். நீண்டால் மண்ணின் கூறு
சுவாசம் 16 அங். நீண்டால் தண்ணீரின் கூறு
சுவாசம் 4 அங். நீண்டால் நெருப்பின் கூறு
சுவாசம் 8 அங். நீண்டால் காற்றின் கூறு

மூக்கினுள் ஆடிக் கொண்டிருந்தால் அது ஆகாயத்தின் கூறு. இதுவே வெட்டவெளி எனவும், சிவன் தாண்டவன் எனவும், இப்படிப்பட்ட வாயுவை அடக்கி, மூக்கினுள் அடக்கியவன் பெரும் ஞானி ஆவான் என்று யோக நூல் கூறுகிறது. நாள் ஒன்றுக்கு 21,600 சுவாசத்தை திருமூல பகவான் நாள் ஒன்றுக்கு 730 ஆக குறைத்து இப்பூவுலகில் 3000 ஆண்டு வாழ்ந்ததாக கூறப்படுகிறது.

வாசியோகத்தால் நன்மையையும் அந்த யோகப் பயிற்சி செய்யும் யோகியர் வாசியைத் தவற விடுவதால் ஏற்படும் தீமையையும் போகர் 7000த்தில் ரொம்பவும் அழகாகக் குறிப்பிடுகிறார்.

சத்தான வாசியென்ற குதிரை தன்னை
தளரவிட்டால் தள்ளிவிடும் பேரொட்டாது
சித்தான சித்தியில்லை வாதமில்லை
திறமான யோகமில்லை ஞானமில்லை
பித்தான பித்தன்போல் பேயனாகி
பேரான ரசவாதம் பெருகசெல்வான்
நத்தான பெண்கள்பின் நாய்போல் சுற்றி
நன்மையற்றுப் பாவத்தில் நலங்குவனே.

அதே வாசியோகப் பயிற்சியில் யோகி வாசியை ஒழுங்கு படுத்தித் தவற விடாமல் கும்பகம் செய்தால் அந்த யோகி அடையும் நன்மையைக் கூறுகிறார்.

நலங்காமல் வாசியினில் ஏறிநின்று
நாள்தோறும் பழக்கமதி லுற்றானானால்
விளங்காமல் சிகாரத்தை வெளியிலூத
வெந்திடுமே நினைத்ததெல்லாம் நீறாய்வேகும்
அலங்காமல் அரனுள்ளே ஆடுவான்பார்
அங்கிருந்த திசநாதமங்கு வோங்கும்
புலங்காமல் பிறவியறும் ஒன்றாமொன்றில்
பித்தான ஆணவமும் சமயம் போமே!

பிராணாயாமம் ஒழுங்குமுறைப் படுத்தினால் நமக்கு வயது கூடும் என்று ஒளவையார் தன் செய்யுளில் கூறுகிறார்.

1. "வாயு வழக்கம் அறிந்து செறந்தடங்கில்
ஆயுட் பெருக்க முண்டாம்"

2. "துரியங் கடந்து சுடரொளியைக் கண்டால்
மரணம் பிறப்பில்லை வீடு"

வாசியோகப் (பிராணாயாமம்) பயிற்சியினால் சுடர் ஒளியைக் கண்டால், பிறப்பு, இறபபில்லை என்று ஞானிகள் கூறுகின்றனர்.

நம் உடலில் உள்ள காற்று வாசி என்கிறோம். அதை ஒழுங்கு படுத்தி உள்ளிழுக்கும் காற்று அதிகமாகவும் வெளியேறும் காற்று குறைவாகவும் விடும் மூச்சுப் பயிற்சியே வாசி யோகமாகும். அதுவே பிராணாயமாம் எனப்படும்.

வாசி என்ற பதத்தைத் திருப்பினால் சிவா என்னும் சிவபெருமானைக் குறிக்கும் பதமாகும். சிவா என்ற பதத்தைத் திருப்பினால் வாசி என்ற உயிர்க் காற்றைக் குறிக்கும் பதமாகும். வாசியில் சிவனும், சிவத்தில் வாசியும் அடங்கியுள்ளது. வாசியாகிய பிராணவாயு மூக்கினால் உள்ளிழுக்கும் போதும், வெளியே விடும்போதும் அதிலே மனதை ஒரு நிலையாக்கி சிவத்தை நினைக்க வேண்டும்.

வாசியில் சிவனும், சிவத்தில் வாசியும் அடங்கினால் வாசி (பிராணவாயு) நம் வசமாகும். வாசி நம் வசமானால், சிவனும் நம் வசமாகி விடும். இதுவே வாசி யோகம் என்று யோகியர்களால் வர்ணிக்கப்படுகிறது.

நம் மனம் புற உலகின்கண் சென்ற வண்ணம் இருக்கிறது. ஒவ்வொரு தரம் வாசி வரும்போதும் போகும்போதும் ஒவ்வொரு எண்ணங்கள் தோன்றுகிறது. அதனால் மனதை அடக்கினால் எண்ணங்கள் ஒடுங்கிவிடும். எண்ணத்தை அடக்கினால் வாசி நம் வசமாகும். வாசி நம் வசமானால், எந்த நேரமும் எண்ணங்களை உற்பத்தி செய்யும் மனதும் நம் வசமாகி கட்டுப்பட்டு விடும். மனம் கட்டுப்பட இடமே சஞ்சலமற்ற தியானத்திற்கு வழிவகுக்கும். சஞ்சலமற்ற மனமே இறைவன் உறையும் இடமாகும். இதுவே கால ஓட்டத்தில் இறைத் தன்மை பெற வழி வழிக்கும் என்று ஞானிகள் தன் ஒப்பற்ற நூல்களில் கூறுகிறார்கள்.

வாசியில்தான் சிவன் தாண்டவமாடுகிறார் என்றும் கூறுகிறார்கள். வாசி வாசி என்று தொடர்ந்து சொன்னால் சிவா சிவா என்று வரும். சிவா சிவா என்று தொடர்ந்து செபித்தால் வாசி வாசி என்று வரும். வாசியும் சிவாவும் ஒன்றை ஒன்று விட்டு பிரியாது. அதனால் வாசியைக் கட்டுப்படுத்தியவர்களுக்கு உலகம் கட்டுப்படும். வாசி என்றால் வா = வா! என்று அழைப்பதாகும். சி : சிவம், சிவத்தை வா! என்று அழைத்து என் உலக மாயையை அறுத்து என் புருவ நடுவில் தில்லை நடனம் புரிய வேண்டும் என்று கூறிக்கொள்வதே வாசி யோகம்.

5. பிரத்தியாகாரம்

பொறி உணர்வு எல்லாம் புற உலகில் செல்லாமல் அக உலகில் ஒரு வழிப்படுத்துவது பிரத்தியாகாரம் என்று பெயர். எட்டுவித யோகங்களின் பயிற்சியில் பிரத்தியாகாரம் முக்கியமானது என ஞானிகள் குறிப்பிடுகிறார்கள்.

நம் மனதின் மீது யாரும் ஆதிக்கம் செலுத்தாவண்ணம் அந்த மனதை ஒரு நிலைப்படுத்தி தன் வசமாக்குதல் பிரத்தியாகாரம் என்று ஞானிகள் கூறுகிறார்கள். நம்முடைய அறிவையும் நல் உணர்வுகளையும் தன் வசப்படுத்துதல் பிரத்தியாகாரம் என்று பெயர்.

ஒரு சிலர் ஆடம்பரமான பக்தியை ஏற்படுத்தி நம் மனதையும் அறிவையும் அவர்கள் வசம் கைக் கொள்வார்கள். அப்படி நம் அறிவையும் மனதையும் புற உலகில் அவர்கள் இழுக்கும் இழுப்பிற்குப் போகாமல் மனதை நம் வசம் அடக்கி வைத்திருப்பதே பிரத்தியாகாரம் எனப்படும்.

கருவி கரணங்களை அனைத்தும் உள்முகமாகச் சேகரம் செய்தல் பிரத்தியாகாரம் எனப்படும். ஞானி ஒருவர், தனது மனதை வெவ்வேறு இந்திரியங்களிடமிருந்து பிரித்து எடுக்கவோ அல்லது அந்த இந்திரியங்களுடன் சேர்க்கவோ வல்லவனாய் இருந்தால் அவரே பிரத்தியாகாரத்தின் நிலை பெற்றவர் ஆவர்.

மனதினில் செயல்கள் எல்லாம் பொறி, புலன் வாயிலாக புற உலகின்கண் போய் வீண் விரயங்களும் செய்து கொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட மனதின் செயல்களைப் பொறி. புலன் வழியாக வீண் விரயம் செய்யாமல் தடுத்து ஒரு நிலைப்படுத்துவதே பிரத்தியாகரம் என்று பெயர்.

நம் மனம் இந்திரியங்கள் அனைத்திற்கும் அடிமைப்பட்டுக் கிடக்கிறது. இந்திரியங்கள் இழுத்துச் செல்லும் இடங்களுக்கு எல்லாம் கட்டுப்பாடு இல்லாமல் நம் மனம் ஓடிவிடுகிறது. அப்படி கட்டுப்பாடில்லாமல் தறிகெட்டு இந்திரியங்களுடன் ஓடும் மனதை இந்திரியங்களிடமிருந்து விலகி இருக்கும்படி செய்வதே பிரத்தியாகாரம் எனப்படும்.

நம்முடைய மனதைச் சிதற விடாமல் நம் ஆணைக்கு உட்பட்டு நடக்கும்படி எப்பொழுது செய்கிறோமோ, அன்றைக்கே நாம் நல்ல ஒழுக்கத்தையும் சீலமும் பெற்றவர்கள் ஆகிறோம் இப்படிப்பட்ட மனதை முற்றிலும் தன் வசப்படுத்தியவர்களே ஞானத்தை நோக்கிப் பயணம் செய்பவர்கள் ஆகிறார்கள்.

மனதை அடக்கத் தெரியாத வரையில் நாம் சாதாரண மனித இயந்திரங்கள் என்ற நிலையில் உள்ளோம். நம் மனதை அடக்கி ஆள்பவர்களே உறுதி படைத்த மனிதர்கள் ஆகிறோம்.

மனமானது சஞ்சலப்படும் தன்மையுள்ளது. குரங்கிற்கு கள்ளையும் ஊற்றி, தேள் ஒன்றைக் கொட்ட வைத்து விட்டு, அந்த குரங்கினுள் ஒரு பேய் புகுந்து விட்டால் அந்த குரங்கின் நிலை எப்படி வர்ணிக்க முடியாதோ, அதுவே குரங்கு. இதற்கு இத்தனை தூண்டும் தன்மையை ஏற்படுத்தினால் அதன் நிலை எப்படியோ, அப்படி நம் மனமானது ஓயாமல் குரங்குபோல் அலைபாய்ந்து கொண்டிருக்கிறது. அதனுள் ஆசை என்னும் கள்புகுந்து, வெற்றி என்னும் பெருமையாகிய தேள் கொட்ட, தற்பெருமை என்னும் பிசாசு அதனுள் புகுந்தால் குரங்கின் வர்ணிக்க முடியாத நிலைபோல் ஆகிவிடும். இப்படிப்பட்ட அலையும் தன்மையுள்ள குரங்கு போன்ற மனதை கட்டியாளும் தன்மையே பிரத்தியாகாரம் எனப்படும்.

"ஒருக்கால் உபாதியை ஒண்சோதி தன்னை
பிரித்துணர் வந்த உபாதிப் பிரிவைக்
கரைத்துணர் வுண்ணல் கரைதல் உள்நோக்கல்
பிரத்தியாகாரப் பெருமை தாமே. –திருமந்திரம்

திரு அருளால் துன்பப்படும் உபாதியாகிய மாயையை அளவிட முடியாத பேரொளியாகிய சிவபெருமானிடம் வேறு பிரித்துப் பார்க்கும் உயிரை, மாயையினின்று பிரித்துச் சிவனுடன் சேர்க்க நினைத்தல்,

அகத்தவத்தால் கரைதல், உணர்வினில் நோக்கல் போன்ற அருஞ்செயல்கள், பிரத்தியாகாரம் எனப்படும் என்று திருமூலர் விவரிக்கிறார்.

யோகி ஒருவர் தன் சிந்தையை அடக்கிச் சும்மா இருப்பது யோகிகளின் முதல் பாடமாகும். எண்ணங்கள் மனதிலிருந்து எழும்போது அதை நாம் பார்த்துக்கொண்டு சும்மா இருக்க வேண்டும். அந்த எண்ணங்களுக்கு நம் மனதை விடக்கூடாது.

நம் மனம் பலப்பல கேவல எண்ணங்களை எண்ணக்கூடும். நல்லதையும் எண்ணக்கூடும். தீயதையும் எண்ணக்கூடும். எதற்கும் உடன்படாமல் நாம் அதன் ஓட்டத்தைக் கண்டு சும்மா இருக்க வேண்டும். நாள் ஆக, ஆக இந்த எண்ணங்களின் எண்ணிக்கை குறைந்து, கால ஓட்டத்தில் எண்ணங்கள் யாவும் அடியோடு அகன்று போய்விடும். அப்போது மனமானது முழுமையாகக் கட்டி ஆளப்படும். அது தன் வசமாகும் தன்மை ஆகும்.

மனம் முற்றிலும் நம் வசமான பிறகு புற உலகில் உள்ள பொருள்களைப் பற்றியும் அது கவலைப்படுவதில்லை. புறத்தில் இடி, மின்னல் பற்றியோ, நறுமணம், நாற்றம் போன்ற மணங்களின் வித்தியாசங்களைப் பற்றியோ கவலைப்படாமல் ஆடாமல் அசையாமல் இருக்கும் தெள்ளிய நீர் போன்று இருக்கும். இதை யோகி ஒருவர் பலநாள் யோக சாதனை செய்து வெற்றி பெறுவதே பிரத்தியாகாரம் எனப்படும்.

இயல்பான சரீரமென்ற பிரத்தியாகார மெய்துவரெண்டு
விதம் நன்றாய்கேளு
நயல்பான பிரபஞ்சத்தில் மனம்போகாமல் நலமாகச் சமாதியிலே
யிருத்தலொன்று
கயலாக நாடிசுத்தி கலந்தபின்பு போமிளமை மெல்லா
மழைப்பதொன்று
ஒயிலானவொரு பொருளை நாடிநின்றல் உத்தமனே
பிரத்தியாகாரமாச்சே -போகர் 7000

ஆச்சென்ற விந்திரிய பிரத்தியாகார மாண்மையுற்ற
தாதுவேனுந் தத்தரோகம்
போச்சென்று போகாமல் சமாதியில் வைத்து
புத்தியொத்த பூட்டுறது வொன்றுகாணும்
நீச்சென்று பிராணனும், பிரத்தியாகாரம் நேர்மையொத்து
நாடிசுத்தி சுத்தியான பின்பு
ஊச்சென்று விச்ச முகலாடத்தோடு உறுதியுற்ற வாக்கினையுஞ்
சோத்திறந்தானாமே -போகர் 7000

தானான நேத்திரமு நாசிவாய்தான் தனித்தபடி நாக்கு தான்
கண்டம் நெஞ்சு

ஊனானவுதிரமோடு யிருப்பு நாபி உற்றதுடை
முழங்கால் பாதங் கேளு
ஆனானயங் குட்டம் வயங்களோடு மன்பான பிராணனைத்
தான் தானம்விட்டு
வேனான காலத்தில் விரைந் தனைத்து விடுகிறது ராணமென்ற
பிரத்தியாரமே! -போகர் 7000

போக மகரிசி தன் "போகர் 7000" என்ற அரிய நூலில் பிரத்தியாகாரத்தின் தன்மை அதன் அவசியம் போன்றவற்றையும் குறிப்பிடுகிறார்.

யோகத்தின் அடுத்த நிலையான தாரணைக்கு இது பெரிதும் உதவும் படிகளாகும். இதிலிருந்துதான் அகத்தவம் (அந்தர்முக யோகம்) ஆரம்பமாகிறது. இதனால் உடலில் உள்ள நாடி, நரம்புகள், தசைகள் நம் விருப்பப்படி இயக்க உதவுகிறது. மனம் ஒடுங்கினால் யோகம் பயில, தடையில்லாமல் முன்னேறலாம். ஆகவே, அட்டங்க யோகத்தில் பிரத்தியாகாரம் ஒரு முக்கிய படிக்கற்கள் ஆகும்.

"ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளிக்
கருவிகள் ஒடுங்கும் கருத்தினை அறிவித்து
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து" -"ஔவையார் பாடல்"

நம் தூல உடம்பில் உள்ள பொறி ஐந்தும், புலன் ஐந்தும் புற உலகை நோக்கி ஓடும் தன்மை உள்ளது. உதாரணமாக, கண் வெளியே பார்த்து பொர்ருள் அறிகிறது. காது வெளியே நடைபெறும் அலுவல்களின் ஒலியைப் பெறுகிறது. மூக்கு வெளி உலகில் உள்ளதை உணர்கிறது. நாக்கு வெளிப் பொருளின் சுவைகளை அறிகிறது. இப்படி புற உலகின்கண் போகும் புலன் ஐந்தையும், பொறி ஐந்தையும் உள்முகமாக அக உலகில் ஒடுக்க வேண்டும். அப்படி அக உலகத்தில் ஒடுக்குபவனே யோகப் பயிற்சியின் வெற்றிப் படிகளைக் கடந்தவன் ஆகும்.

இதைத்தான் "ஔவையார்" தன் வினாயகர் அகவலில் யோகத்தின் தன்மையைப்பற்றி வினையகர் ஔவைக்கு அருள வேண்டி பாடுகிறார். ஔவைப் பிராட்டி புலவர் மட்டுமல்ல; அவர் பெரிய ஞானி ஆவார்.

கண்களையும், காதுகளையும், மூக்கின் துவாரத்தையும் தன் கை கொண்டு மூடிக் கொள்வது புலன் ஒடுக்கம் ஆகாது. புலன்களுடன் உள்ள மனதை மூட வேண்டும். மனது புற உலகில் போகாமல் அக உலகில் மூடி ஒருமைப் படுத்தியவன் யோக நிலைக்குத் தகுதியானவன் ஆகும். எனவே, பிரத்தியாகாரம் அட்டங்க யோகங்களில் முக்கிய படியாக யோகி ஒருவர் உணருவார்.

மந்திரங்களை செபிப்பதால் யோகி ஒருவர் தன் மனதை வெளி உலக காட்சியிலிருந்து உள்முகமாக ஈர்க்க முடியும். அதனால் தான் யோகம் பயிலும் சாதகர் ஒருவர் சதா ஏதாவது ஒரு மந்திரத்தை செபித்துக் கொண்டிருக்க வேண்டும். உள்மன ஒருமைப்பாடும், மனக்கட்டுப்பாடும் பிரத்தியாகாரம் என்று யோக நூல் கூறுகிறது.

வெளி உலகில் நம் புலன்களை ஈர்க்க எவ்வளவோ உள்ளது. யோகி ஒருவர் அதன்மீது மனதை பரவவிடாமல் மனதை தன் வசப்படுத்தினால் யோக நிலைக்கு போக வெற்றிப் பாதையைக் கடந்தவர் ஆவார். இது யோகம் பயிலும் யோகிக்கு மட்டும் கூறப்பட்டதாக எண்ண வேண்டாம். சம்சாரக் கடலில் உழலும் மாந்தர்களும் மனதை புற உலகில் போய் அலைந்து துன்பப் படுவதைத் தடுத்தால் உடலுக்கும், உள்ளத்திற்கும், ஏன் அவனைச் சார்ந்த குடும்பத்திற்கும் நன்மை பல பெற வாய்ப்புண்டு என்று நாம் உணர்ந்து அலைபாயும் மனதை கட்டுப்படுத்த வேண்டும். நமக்கு இன்னதென்று ஆண்டவனால் பிச்சையிடப்பட்டது தான் நமக்கு கிடைக்கும். மாற்றானைக் கண்டு அவன் வளர்ச்சியிலும் அவன் ஆடம்பரத்தையும் கண்டு நீ உன் மனதை அலையவிடாதே என்று சம்சாரிகளைப் பார்த்து, யோகியர்கள் கூறுகிறார்கள்.

தன் வசப்படாத இந்திரியங்களை வசப்படுத்துவதால் உடல் மனக் கட்டுப்பாடு அடைகிறது. வேண்டியதை நம் விருப்பப்படி தெரிந்து கொள்ளலாம். வேண்டாததை தெரிந்து கொள்ளாமல் இருக்கவும் முடிகிறது.

இந்த பிரத்தியாகாரம் பயிற்சியினால் உடலின் தன்மை இன்பகரமாக இருக்கும் என்பதை உணரலாம். என்றென்றும் நம் இளமைத் தோற்றத்துடன் காட்சி அளிக்கும் தன்மை நம் உடலில் பிரத்தியாகாரப் பயிற்சியினால் ஏற்படும் என்று யோக நூல் கூறுகிறது.

வாசி யோகப் பயிற்சியில் (பிராணாயாமம்) ஒரு யோகி கும்பக நிலையில் மனதை தன் உடல் உறுப்பு ஒன்றில் நிலைநிறுத்திட பழகினால் மனம் ஒருமைப்பட்டு விடும். இதுவே பிரத்தியாகாரம் எனப்படும்.

6. தாரணை

யோகி ஒருவர் பிரத்தியாகாரம் சாதனத்தில் முன்னேறிய பிறகு தாரணை என்ற யோகப்படிகளைக் கடக்க வேண்டும். தாரணை, பிரத்தியாகாரத்தின் அடுத்த ஞானப் படியாகும்.

தாரணை என்பது ஒரு நிலைப்படுத்துதல் ஆகும். ஏதேனும் ஒரு குறியில் மனதை உறுதியாக நிலைநாட்ட வேண்டும். புலன்களைப் பற்றிக் கொள்ளும் தன்மை வாய்ந்த மனதினை புலன் வழியாகப் போக விடாமல் கீழ்நோக்க விடாமலும் வரிந்து மனதை அடக்கும் தன்மை தாரணை என்பதாகும்.

''கோணாமனத்தைக் குறிகொண்டு கீழ்க்கட்டி
வீணாத் தண்டுடே வெளியுத் தானோக்கிக்

காணாகண், கேளாச் செவி யென்றிருப் பார்க்கு
வாணாள் அடைக்கும் வழியது வாமே! -திருமூலர்

எப்போதும் அலைபாயும் தன்மையுடைய மனமானது ஒரு குறிக்கொண்டு, வாசி யோகப் பயிற்சியால் மூலாதாரத்தில் முக்காரமிட்டு வீணா தண்டாகிய சுழிமுனை மூலம் வெள்ளியாகிய சுக்கிலம் (இந்திரியம்) ஊற அது வாழ்நாள் கழிந்து போகாதபடி காக்கும் என்று திருமூல பகவான் கூறுகிறார்.

அரித்த உடலை ஐம் பூதத்தில் வைத்துப்
பொருந்த ஐம் பூதஞ்சத் தாதியிற் போந்த
தெரித்த மனாதிசத் தாதியிற் செல்லத்
தரித்தது தாரணை தற்பரத் தோடே!

ஆற்று வெள்ளத்தால் கரையினை அரித்துப் பாழாக்குவது போல், புலன் ஐந்தும் உடம்பினை அரித்துப் பாழாக்குகின்றன. ஐம்பெரும் பூதங்களை புலன் ஐந்தில் ஒடுங்கச் செய்து, புலன்கள் ஐந்தை அந்தகரணங்கள் நான்கில் ஒடுங்கச் செய்து, அந்தகரணங்களை மாயையில் ஒடுக்கி, மாயையை ஆன்மாவில் ஒடுங்கச் செய்து, ஆன்மாவை பிரமத்தில் ஒடுங்கச் செய்வது ஆகும். அதனால் புலன் பொறி அடங்கி ஒரு குறியுடன் இருத்தல் தாரணை என்பதாகும்.

மனது ஒரு நிலைப்படும்போது நாடி நரம்புகள் நுண்ணியவைகளாய் ஆகிவிடுகின்றன. குண்டூசி ஒன்று தரையில் வீழ்ந்தாலும் இடி முழக்கம் போல் சாதகன் காதில் விழும்.

மனதை ஒரு நிலைப்படுத்தும் சாதனையில் யோகி ஒருவர் முன்னேற, முன்னேற வெகு துரத்தில் அடிக்கும் மணியோசை கேட்கும். சாதகனுடைய குரல் இனிமையாகவும் கவர்ச்சியாகவும் தென்படும்.

சுவாதி நட்சத்திரம் உச்சத்தில் இருக்கும் சமயம் முத்துச் சிப்பியில் வீழும் மழைத்துளி ஒன்று முத்து ஆகிவிடுகிறது.

முத்துச் சிப்பியானது சுவாதி நட்சத்திரம் உச்சத்தில் இருக்கும் சமயம் அது ஆழ்கடலிலிருந்து மேல்பரப்பிற்கு வந்து மழைத் துளியைப் பெற்றுக் கொண்டு தன் மேல்ஓட்டை மூடிக்கொள்ளும். கடலின் அடிமட்டத்திற்குச் சென்று அங்கு அமைதியுடன் இருந்து ஒருதுளி மழைநீர் முத்தாக மாறுகிறது.

யோக சாதனை புரிபவர்களில் ஒரு முத்துசிப்பி போல். சாதகன் சாதனை விசயங்களைக் கேட்டு பிறகு எண்ணிப் பார்த்து மனது என்னும் கடலுக்குள் அவன் மூழ்குகிறான். மெய்ப்பொருளை தன் சுவானுபூதியில் காணும் வரை ஒரே நாட்டத்தில் இருந்து சாதனையில் வெற்றியடைகிறான்.

ஆழ்கடலில் உள்ள சிப்பிக்கு-கேவலம் ஆறு அறிவு அற்ற அதற்கு-சுவாதி நட்சத்திரம் உச்சத்திலிருப்பது தெரிந்து ஆழ்கடலை விட்டுவந்து மழைநீரைப் பெற்று முத்தாகக் கொடுக்கிறது.

ஆறு அறிவுபடைத்த மனிதன் ஆறு அறிவு உள்ளதாகப் பெருமை அடைகிறானே தவிர, காலம் நேரம் பார்க்கக்கூட கையிலும் பையிலும் கடிகாரத்தை வைத்துள்ளான். அப்படியும் மணி சரிவரச் சொல்லத் தெரியவில்லை, வெட்கமடைய வேண்டும்.

ஐம்புலன்கள் அதற்குறிய தன்மையிலிருந்து மீட்கப்பட்டு ஒரே பொருளின் மீது குவிக்கப்படும் போது அதற்கு தாரணை என்று பெயர். ஐம்புலன்களையும் ஒருமைப்பட்ட மனம் நிலையாகி விட்டால் சிறிய ஓசைகளும் பெரிதாகக் கேட்கும். ஒரு வித சுகத்தையும் ஏற்படுத்தும். இப்படி ஒரு நிலைப்பட்ட மனம் எதையும் எளிதில் புரிந்து கொள்ளும் தன்மை ஏற்படும். இப்படிப்பட்ட நிலையில் அறிந்த செய்திகள் மறப்பதே இல்லை. இதற்குச் சக்தி அதிகம் என்று யோக நூல்கள் கூறுகிறது.

இதற்கு ஓர் உதாரணமாக கல்கத்தாவில் நடந்த ஓர் நிகழ்ச்சியைக் கூறுகிறார் பகவான் பரமகம்சர்.

தியானப் பயிற்சிக்கு, சாதகர் ஒருவர் தினம் ஒரு மைதானத்தில் தியானப் பயிற்சி செய்து வருவது வழக்கம். இப்படிப்பட்ட சூழ்நிலையில் ஒருநாள் அந்த மைதானத்தில் இவர் தியானப் பயிற்சி மேற்கொண்டிருந்த சமயம் யாரோ இரண்டு நபர்கள் தங்களுக்குள் சண்டையிட்டுக் கொண்டனர். இவர்கள் இருவரும் பேசி சண்டையிட்ட மொழி தியானம் செய்பவருக்கு தெரியாது.

வழக்கு நீதிமன்றம் சென்றது. அதில் சாட்சியாக தியானம் பயிற்சி செய்த சாதகன் சாட்சி சொல்ல வேண்டிய கட்டாயம் வந்து விசாரிக்கப்பட்டார். அதற்கு அவர், அவர்கள் இருவரும் பேசிச் சண்டையிட்ட மொழி தனக்குத் தெரியாது என்றும், ஆனால் அன்றைய தினம் அவர்கள் ஏற்படுத்திய ஓசை அப்படியே தன் மனதில் உள்ளதாகவும் அதை அப்படியே திரும்ப கூறினார். இதனால் நீதிபதிக்குத் தீர்ப்பளிக்க அது உதவியாக இருந்தது.

மனம் ஒன்றையே நினைக்கும் யோகியர்களுக்கு சிறிய ஓசையும் பெரும் ஓசையாகக் கேட்டு அப்படியே பதிந்துவிடும் தன்மை ஏற்படும் என்பதை தாரணை மூலம் அறியலாம்.

பஞ்சேந்திரங்களை ஒருமைப்படுத்திய மனம் ஒரே பொருளின் மீது ஆழ்ந்து இருப்பது தாரணையாகும். யோகிகள் தன் உடலில் ஏதாகிலும் ஒன்றை நினைத்து அதில் ஆழ்ந்து வெகு நேரம் தன் மனதை ஒருமையுடன் கொண்டு செல்கிறார்கள்.

நம் ஞானப் பழம் ஸ்ரீபூண்டி மகான் வலதுகையை ஆட்ட ஆரம்பித்தால் நாட்கணக்கில் கையை ஆட்டிக் கொண்டே இருப்பார். அன்ன ஆகாரம் ஏதுமின்றி ஆட்டிய கை ஆட்டிய படியே திடவைராக்கிய மனதை ஒரே நிலையில் வைத்திருப்பார். இது நம்மில் பல பேர் நேரில் கண்டு இருக்கிறோம்.

ஏதோ ஒரு பொருளின் மீது திட வைராக்கியத்துடன் இருப்பது தாரணை. இது படிப்படியாக நம் கட்டுப்பாட்டிற்கு வந்துவிடும். பிறகு தியானம் செய்ய இது முக்கிய படிக்கட்டுகள் ஆகிறது.

அட்டங்க யோகங்களில் இயமம், நியமம், ஆசனம் இவைகள் உடற்பயிற்சியையும் மனதின் பங்கு சிறிதளவு உடல் ஒருநிலைப் படுத்தலும் ஆகும்.

பிராணாயாமம் (வாசி யோகம்), பிரத்தியாகாரம், தாரணை இவை மனப்பயிற்சிகள். இவை உள்ளத்தை ஒருநிலைப் படுத்தும்.

தியானம், சமாதி இவை ஆன்மப் பயிற்சிகள், ஆன்மாவை பிரம்மத்துடன் சேர்க்கும் சம=ஆதி நிலை ஆகும். ஒரு சாதகன் இயமம், நியமம், ஆசனம் முறைப்படி தக்க குரு உபதேசப்படி பயிற்சி செய்து முன்னேறி விட்டால், பிறகு வாசியோகம், தாரணை, பிரத்தியாகரம் பயிற்சி பெற முடியும். இவை மூன்றும் சாதகன் பயிற்சியில் வெற்று கண்டு விட்டால் அவன் ஞான நிலையில் பல படிகளைக் கடந்தவன் ஆகிறான். அடுத்தது தியான நிலையைப் பார்ப்போம்.

நல்வழி நாடி நமன்வழி மாற்றிச்
சொல்வழி யாளர் சுருங்காப் பெருங்கொடை
இல்வழி யாளர் இமையவர் எண்டிசைப்
பல்வழி எய்தினும் பார்வழி யாமே! -திருமூலர்

தாரணை வழிச் சென்றவர்கள் நல்லவழியினைக் கொண்டவர்கள் ஆவர். எமனிடமிருந்து வழி மாற்றியவர்கள் ஆவர். ஆருயிர்க்கும், தேவர்களுக்கும் வேண்டுவன கொடுப்பது தாரணையாகும். திருமால் சிவன் நிலையின் அமருவர். குறையாத பெரும் செல்வம் அருளுதலை உடைய சிவன் வழியாகும் என்பதாம்.

அட்டங்க யோகத்தில் தாரணை நிலையை யோகிகள் முக்கிய படிக்கற்கள் என்று கூறுகிறார்கள். ஒரு பொருள் மீது குறிவைத்து யோகப் பயிற்சி செய்தல் தாரணை எனப்படும்.

7. தியானம்

ஞானி ஒருவர் எட்டுவித யோகங்களைக் கடந்து பெருநிலை எய்துகிறார். யோகி ஒருவர் ஆரம்ப நிலையாகிய இயமத்தில் எந்த உயிர்களுக்கும் தீங்கு செய்யாமலும், செய்ய மனதாலும் நினையாமலும், ஒழுக்க நெறியில் நிற்கிறார். பிறர் பொருள்மீது ஆசை வைக்க மாட்டார்கள். யாசிக்க மாட்டார்கள். சத்தியம், உண்மை வாய்மை, மெய்மையைக் கடைப் பிடிப்பார்கள். பிரம்மச் சரியத்தை வைராக்கியமாகக் கடைப் பிடிப்பார்கள். காமத்தை அறவே வெறுத்து வெற்றி கொள்வார்கள். கொல்லாமை, பொய்யாமை, கள்ளாமை, பொறிவழி செல்லாமை, ஏலாமை ஆகிய ஐந்தும் கடுமையாகக் கடைப்பிடித்து இரண்டாம் படியாகிய நியமத்தை அடைகிறார்கள்.

இரண்டாம் படியாகிய நியமத்தில் மனம், மெய் ஆகியவைகளை தூய்மையுடன் வைத்திருப்பார்கள். ஆண்டவன் திருவிளையாடல்களை பிறர் கூறக்கேட்டு மனதை தூய்மையாக்கிக் கொள்வார்கள். தானே பல பக்தி

நூல்களைக் கற்று மனதை எப்போதும் இனிமையுடன் கூடிய சாந்தமும் சந்தோசமாகவும் வைத்திருப்பார்கள். இது நியமம் என்ற யோகப்படியை கடத்தல் ஆகும்.

நியமத்திற்கு பிறகு ஆசனம் யோக நெறி ஆகும். யோகி ஒருவர் யோகம் பயில முயலும்போது அவர்கள் உட்கார்ந்து யோகம் பயிலும் முறை ஆசனமாகும். நமது உடலில் முதுகுத் தண்டில் சூக்குமண நாடி உள்ளது. அது நேராகப் போகக் கூடியது. அதனால் யோகி உடலை நேராக ஆசனமிட்டு உடலுக்கு எந்தவிதத் தீங்கும் வராமலும் நாடிகள் ஒழுங்காக நேர்கோட்டில் செல்லவும், அவைகளுக்கு இடையூறு வராதவண்ணம் இருக்கவே இப்படிப்பட்ட ஆசனங்கள் தேவைப்படுகிறது. இது மூன்றாவது யோகப் படியை அடைதல் ஆகும்.

ஆசனமிட்டு நிமிர்ந்து உட்கார்ந்த யோகி சுவாசிப்பதின் மூலம் ஏற்படும் வாயுவை (காற்றை) போக்குவரத்து மூலம் ஒழுங்குபடுத்தும் தன்மை பிராணாயாமம் எனப்படும் நாடிகளை ஒழுங்குபடுத்துதல் ஆகும். அளவு எடுத்தாற்போல் வாயுவை உள்ளே வாங்கி வெளிவிடும் பயிற்சிக்கு பிராணாயாமம் என்று பெயர். இடக்கலை, பிங்கலை நாடிகளில் சஞ்சரிக்கும் வாயுவை யோக முறைப் படுத்துதல் ஆகும். இது வாசி யோகம் எனப்படும்.

வாசி யோகத்தில் உள்ளிழுத்த காற்றை உள்ளே இருக்கச் செய்து வெளிவிடும் தன்மையில் யோகி ஒருவன் தன்து ஐம்பொறிகளை வேறு அலுவல்களிலும் வேறு புறச் சிந்தனைகளிலும் செல்ல விடாமல் அதை தன் வசப்படுத்துதல் பிரத்தியாகாரம் என்று கூறுகிறார்கள்.

பொறிகளை வெளி சிந்தனையில், வெளியிடாமல் தடுத்து ஏதேனும் ஒரு குறியில் மனதை உறுதியாக நிலை நிறுத்துதல் தாரணை என்று யோகியர்கள் பெயரிட்டு அழைக்கிறார்கள்.

இப்படிப் பன்னிரெண்டு நியமத்தில் வெற்றி கண்டவர் ஒரு பிராணாயாமம் என்ற படியை அடைகிறார். பன்னிரண்டு பிராணாயாமம் வெற்றி கண்டவர் ஒரு பிரத்தியாகர்ரம் என்ற யோக நிலையை அடைகிறார். பன்னிரண்டு பிரத்தியாகாரம் வெற்றி கண்ட யோகி ஒரு தாரணையை அடைகிறார். பன்னிரெண்டு தாரணையில் வெற்றி கண்ட யோகியர் ஒரு தியான நிலைப் படியை எட்டிப் பிடிக்கிறார். இப்படிப்பட்ட யோக நிலைப் படியைக் கடக்க பல சென்மங்களை யோகி எடுக்க வேண்டியுள்ளது. அதனால் நீ இந்தப் பிறவியில் பக்தி என்னும் இயமத்தைக் கடைப்பிடித்து, முன்னேற வழியைத் தேடு என்று யோகியர்கள் கூறுகிறார்கள். ஒவ்வொரு சென்மந்தன்னில் ஒவ்வொரு நிலை கடந்தால் அதன் வாசனை அடுத்தப் பிறவியிலும் தொடரும், இப்போதே நீ பக்தியையும் ஒழுக்கத்தையும் கடைப்பிடிக்கத் தவறினால் அடுத்த பிறவியில் நீ இப்போது என்ன செய்கிறாயோ அதே கர்மம் பின் தொடரும் என்று யோகிகள் நமக்கு நூல்கள் வாயிலாக அறிவுறுத்துகிறார்கள்.

யோகி ஒருவர் ஒரு பிறவியில் ஞானநிலை எய்து விடுவதில்லை. போன பிறவியின் வாசனையே அவர்களைத் தொடர்ந்து வந்து அவர்கள்

ஞானநிலையை இந்தப் பிறவியில் கடும் வைராக்கியத்துடன் எய்துகிறார்கள் என்று நாம் உணர வேண்டும். இலஞ்சம் கொடுத்து பெறுவதில்லை ஞானம். உலகையே இலஞ்சமாக கொடுத்தாலும் பெறமுடியாது. தன்னைத்தான் உணரும் தன்மை பிறவிகள்தோறும் தொடரவேண்டும். தொடர்ந்து வந்துதான் ஞானநிலை பெறமுடியும்.

ஏதேனும் ஒன்றின்மேல் மனதை நிலைநிறுத்தி பயிற்சிக்கும் முறைக்கு தாரணை என்று அறிந்தோம். தாரணையில் முதிர்ச்சி தன்மையே தியான நிலை ஆகும்.

மனதைக் குறிப்பிட்டு ஒரு உறுப்பின்மீது அல்லாமல் எல்லா புற உறுப்புகளின் மீதும் முழுமையாக மனதைக் குவித்து நிறுத்தி பயிற்சி செய்வது தியானமாகும். இடைவிடாமல் தாரணை மனநிலையில் கொஞ்சங் கொஞ்சமாக முன்னேறி தியானநிலை அடைகிறார்கள் யோகிகள்.

தியானத்திற்கும் தாரணைக்கும் உள்ள கால இடைவெளிதான் வித்தியாசம். நீண்ட நேர தாரணையே தியானமாகும் என்று யோகிகள் கூறுகிறார்கள். ஒரே நேரத்தில் பிரத்தியாகாரத்தையும் தாரணையையும் வென்ற நிலை தியானநிலை. நம் ஐம்பொறிகளும் நம் வசப்பட்ட நிலை தியானநிலை. நம் கண்களுக்கு எதிரே உள்ள பொருட்களை காட்சி இருந்தும் அதைக் காணாத நிலை தியான நிலை. நல்ல மணம் நம் அருகில் வந்தாலும் அதை நம் மூக்கு உணரும் தன்மை இருந்தும் உணராத நிலை தியான நிலை. நல்ல சுவையுள்ள ஆகாரம் யோகம் பயிலும் யோகிக்கு கிடைத்தாலும் அதன் சுவையை நாக்கு விரும்பாத தன்மை தியான நிலை. காதுக்கு இனிமையான கானமோ (அ) பெரும் ஓசையோ, காது கேட்கும் தன்மை இருந்தும் அதை கேட்காத தன்மை தியானநிலை. நம் தொடு உணர்வு ஒழுங்காக இருந்தும், யோகி ஒருவர் ஒரு பொருளைத் தொட்டு இது நீர் (அ) நெருப்பு என்று அறியாத நிலை தியானநிலை. அறிய விரும்பாத நிலை தியான நிலை.

ஒன்றையே குறிக்கோள் கொண்டு தியானிப்பதால் ஐம்பொறிகள் அந்த ஒரு குறிக்கோள்மேல் குவிந்து விடுவதால், மற்றைய புறப்பொருட்களில் ஐம்பொறிகள் நாட வழியில்லாமல் போகும் தன்மை தியான நிலை.

ஐந்து பொறிவழிபோய் அலைந்தும் இந்த பாழ்மனதை
வெந்து விழப்பார்த்து விழிப்பதெக்காலம் –பத்திரகிரியர் பாடல்

ஐந்து பொறிகளாகிய மெய், கண், வாய், மூக்கு, காது வழியே மனதை விடாமல் அதை வேக வைத்து வீழ்த்தி விட்டு ஒரே நிலை காண்பது எக்காலம் என்று கூறுகிறார்.

மனத்து விளக்கினை மாண்பட ஏற்றிச்
சினத்து விளக்கினைச் செல்ல நெருக்கி
அனைத்து விளக்குந் திரியொக்கத் தூண்ட
மனத்து விளக்கது மாய விளக்கே! –திருமந்திரம் (582)

மனத்தின் ஒளியை ஆண்டவன் அருளால் மூலப்பகுதியில் ஏற்றினால் கோபம், வெகுளி, காமம் அகலும். மற்ற எல்லாப் புலன்களையும் நன்றாக விளங்குமாறு தியானம் செய்து தூண்டுதல் வேண்டும். தூண்டினால் சினம், கோபம், காமம் அகன்று மனத்தின் விளக்கு மாய விளக்காகும் என்று திருமூல பகவான் கூறுகிறார்.

ஒண்ணா நயனத்தில் உற்ற ஒளிதன்னைக்
கண்ணாரப் பார்த்துக் கலந்தங் கிருந்திடில்
விண்ணாறு வந்து வெளிகண்டிட வோடிப்
பண்ணாமல் நின்றது பார்க்கலு மாமே. -திருமந்திரம் (580)

புருவத்தின் நடுவில் தியானத்தில் உற்றுப் பார்த்தால் உண்மை உணர்வு ஒளி தென்படும். அதை அகக் கண்ணால் பார்த்து கலந்திடல் வேண்டும். அப்படிப்பட்ட ஒளியை தொடர்ந்தால், முழுமுதல் தெய்வம் சிவபெருமானைக் கண்டு பெரிய இன்பம் அடையலாம் என்பதாம். தியானத்தின் தன்மையே தொடர்ந்தால் ஒளி வடிவாக எல்லாம் வல்ல ஈசனைக் காணலாம் என்பதாம்.

வருமாதி யீரெட்டுள் வந்த தியானம்
பெருவாத புந்தி புலன்போக மேவல்
உருவாய் சக்தி பரத்தியான முன்னுங்
குருவார் சிவத்தியானம் யோகத்தின் கூறே. -திருமூலர்

ஆருயிர் நீங்கா நினைவுடன் ஓங்கும் பண்பு தியானமாகும். ஐம்பூதங்களாகிய மெய், வாய், கண், மூக்கு, செவி புலன்கள் ஐந்தும், சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் அந்தகரணங்கள் நான்கும், மனம், அறிவு, நினைவு, முனைப்பு (அகங்காரம்), மாயை ஒன்று, சீவன் ஒன்று ஆக பதினாறு மெய்களை நினைப்பது தியானம். இருப்பு மெய்யாகிய புந்தி இயல்பாகவே புலன்களின் பற்றுதலை விட்டுக் கடந்து நிற்றல் வேண்டும். இந்நிலை அன்னை அத்தனாகிய சக்தி பரத்தியான நிலையாகும். சிவகுருவை நினைத்தல் சிவத் தியானமாகும். இவ்விரண்டும் முறையே உருவத் தியானமும் அருவத்தியானமும் ஆகும். இவை அகத்தவமாகிய யோகத்தின தன்மை ஆகும். எனவே தியானம் என்பது அகத்தவமேயாகும்.

கண்ணாக்கு மூக்குச் செவி ஞானக்கூட்டத்துட்
பண்ணாக்கி நின்ற பழம்பொருள் ஒன்றுண்டு
அண்ணாக்கின் உள்ளே அகண்ட ஒளிகாட்டிப்
புண்ணாக்கி நம்மை பிழைப்பித்தவாறே. - திருமந்திரம்

கண், நாக்கு, மூக்கு, காது, மெய் ஆகிய ஐம்பெரும் பூதக்கூட்டத்துள் பண்ணாகிய ஓசையை எழுப்பிச் சொல்லாக்கி பொருள் உணர்த்தும் பழம்பொருள் ஒன்று உள்ளது. அப்பழம் பொருள் சிவபெருமான் அதனை

நினைத்தால் (தியானித்தால்) அண்ணாக்கின் உள்ளாக எல்லையில்லா எங்கும் நீக்கமற நிறைந்த பேரொளியைக் காணலாம். இப்படிப்பட்ட தியானப் பயிற்சியால், நம்மை பிறப்பு, இறப்புத் தன்மையிலிருந்து விடுவித்து விடும் என்ற தியானத்தின் பெருமையை திருமூலர் தன் திருமந்திரத்தில் கூறுகிறார்.

எண்ணாயிரத் தாண்டு யோகம் இரக்கினும்
கண்ணார் அமுதனைக் கண்டறிவாரில்லை
உள்நாடி உள்ளே ஒளிபெற நோக்கிற்
கண்ணாடி போலக் கலந்து நின்றானே. - திருமூலர்

எட்டு ஆயிரம் ஆண்டுகள் யோகி ஒருவன் யோகம் பயின்ற போதிலும், சிவன் நினைவு இல்லாமல் யோகம் பயின்றால் பயனில்லை. கண்ணின் மணியாய் அம்மணி உணர் அமிழ்தும் அனைய சிவபெருமானைக் காண முடியாது உள்ளே நோக்கி திருவருள்கண் மனதை நோக்கினால் சிவபெருமானைக் கலந்து நிற்கலாம். பரம்பொருளைக் காணவும் முடியும். முகம் பார்க்கும் கண்ணாடியை நாம் பார்க்கும்போது பார்க்கும் நாமும் கண்ணாடியும் நமக்குத் தோன்றுகிறது. அதுபோல் சிவனை உள்நோககி (தியானத்தால்) பார்த்தால் சிவன் விளங்குவார் என்பதாம். சிவனுடன் நாமும் கலந்து நிற்கலாம் என்பதாம்.

தியானத்தில் யோகி ஒருவர் முதிர்ச்சியடையும் நிலை எய்தினால் அவர்களுக்கு தன்னுள் பத்துவித ஓசை கேட்கும் என்று யோகிகள் கூறுசிறார்கள். அக்த் தவத்தின் பயனாக இவை கேட்கும் என்று கூறுகிறார்கள். இதையே திருச்சிற்றம்பல ஓசை என்றும் ஞானிகள் கூறுகிறார்கள். இது அகத் தவத்தின் முதிர்ச்சியுற்றவர்களுக்கு அல்லாமல் மற்ற யோகிகளுக்குக் கேட்காது என்றும் ஞானிகள் கூறுகிறார்கள். அந்த பத்துவித ஓசைகள் மணியின் ஓசை கடல் அலைகளின் ஓசை, யானை பிளிறும் சப்தம், புல்லாங்குழல் கீதம், மேகம் மோதும் இடியோசை வண்டு ரீங்காரம் இடும் ஓசை தும்பியின் நாதம், சங்கின் ஓசை, பேரிகை முழங்கும் சப்தம், யாழின் ஓசை போன்ற பத்துவித ஓசை அகத் தவத்தில் முதிர்ந்த யோகி கேட்பார் என்பதாம்.

---

1. மணிகடல் யானை வார்குழல் மேகம்
அணிவண்டு தும்பிவளை பேரிகை யாழ்
தனிந்தெழு நாதங்கள் தாமிவை பத்தும்
பணிந்தவர்க் கல்லது பார்க்க ஒண்ணாதே.

2. கடலொடு மேகம் களிறொடும் ஓசை
அடவெழும் வீணை அண்ட ரண்டத்துச்
சுடர்மண்ணு வேணு சுரிசங்கின் ஓசை
திடமறி யோகிக் கல்லாற் றெரியாவே.

யோகி ஒருவர் தியானத்தை முறைப்படி நிறுத்தாமல் தியானிப்ப வர்களுக்கு நம் உடலில் உள்ள ஆறு ஆதாரங்களாகிய மூலாதாரம், சுவாசிட்டானம், மணிபூரகம், அனாகதம், விசுத்தி, ஆக்ஞை போன்றவைகளிலும், இது போலவே உடலின் உள்ளே உள்ள இடக்கலை, பிங்கலை, சுழிமுனை, ஞான பூமி, சகசுராரமாகிய ஐந்து நிலைகளிலும் பேரொளி உண்டாகும். இப்படிப் பட்ட பேரொளி ஏறபட்ட உடன் ஆணவ இருள் அகன்று ஞானநிலை ஏற்படும்.

ஐந்து புலனாகிய சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்றவற்றுள் சிறந்தது ஓசை. அது ஒடுங்குதல் வேண்டும். இப்படி ஓசை ஒடுங்கினால் கொன்றைப் பூ அணிந்த பரம்பொருளாம் சிவபெருமான் திருவடியைச் சேரலாம். இதைத் திருமூலர் தன் திருமந்திரத்தில் கீழ்க்கண்டவாறு கூறுகிறார்.

உதிக்கின்ற ஆறினும் உள்ளங்கி ஐந்துந்
துதிக்கின்ற தேசுடைத் தூங்கிருள் நீக்கி
அதிக்கின்ற ஐவருள் நாதம் ஒடுங்கக்
கதிக்கொன்றை ஈசன்கழல் சேரலாமே. - திருமந்திரம்

யோகி ஒருவர் தியானத்தின் முதிர்ச்சியாலும் தான் கொண்ட வைராக்கிய நிலையாலும் பிராணனை முதுகுத் தண்டு வழியாக மேலேற்றிக் கொள்வார்கள். இவர்களுக்கு இடக்கலை, பிங்கலை, சுழிமுனை மூன்றும் ஒப்ப வளரும் என்பதாம். அப்படி ஒப்பவளர்ந்தால் பிராணனுக்கு அழிவில்லை. உடலும், ஊழிக்காலம் வரை அழியாது என்கிறார்கள்.

கொண்ட விரதங்குறையாமற் றானொன்றித்
தண்டுடன் ஓடித் தலைப்பட்ட யோகிக்கு
மண்டல மூன்றினும் ஒக்க வளர்ந்தபின்
பிண்டமும் ஊழி பிரியா திருக்குமே - திருமூலர்

தியானம் படிப்படியாக ஆண்டவன் உருவத்தைத் தன் இருதயம், புருவ மத்தி போன்ற இடங்களில் ஒரு குவிந்த மனமுடன், அகத்தவமிருக்க வேண்டும். ஒரு முரட்டுக் காளையை இழுத்து வந்து மாட்டுத் தொழுவத்தில் கட்டிப்போட்டு பழகி வந்தால் நாளடைவில் அந்த முரட்டுக்காளை நம் வயப்பட்டுவிடும். அதுபோலவே முரட்டுத்தனமாக அலைபாயும் மனதை தியானம் என்ற கயிறு கொண்டு புருவமத்தி என்கிற மாட்டுத் தொழுவத்தில் கட்டி தியானம் பழகி வந்தால் அந்த முரட்டுக்காளையாகிய மனது நம் வயப்பட்டுவிடும். மனம் அடங்கினால் அவன் சித்தன் ஆகிறான். சிந்தையை அடக்கி வென்றவர் சித்த மகா புருசர்கள்.

அலையும்மனத்தை அகத்தடக்குமவனே சரியைக் கடந்தவனாம்
அலையும்மனதை அகத்தடக்குமவனே கிரியை முடித்தவனாம்
அலையும்மனதை அகத்தடக்குமவனே யோக தற்பரனாம்
அலையும்மனத்தை அகத்தடக்குமவனே ஞானி அதிசூரன் -நிஷ்டானுபூதி

ஆக புறத்தில் ஓடும் பொறி ஐந்தும், புலன் ஐந்தும், அந்தக் கரணங்கள் நான்கையும் கொண்ட மனதை அகத்துள் கொண்டு வந்து அதை இறைவன்பால் ஒடுங்கச் செய்வதே தியானமாகும்.

தியானம் என்பது சிந்தையை ஒருமுகமாக ஆண்டவன்பால் நிறுத்துவதாகும். இதையேதான் தாயுமானவ சுவாமிகள்

சித்தந் தெளிந்தோர் தெளிவில் தெளிவான
சுத்த சுகக்கடலுள் தேயுநாள் எந்நாளோ!

என்றும்,

பேச்சுமூச் சில்லாத பேரின்ப வெள்ளமுற்று
நீச்சுநிலை காணாமல் நிற்கும்நாள் எந்நாளோ!

என்றும் கூறுகிறார்.

எண்ணங்கள்தான் துயரங்களுக்கு ஆணிவேர், அந்த எண்ணங்கள் புறப்படும் இடத்தில் ஒடுக்கி, பேச்சு மூச்சு இல்லாமல் இருந்தால் பேரின்ப வெள்ளமுற்று இருக்கலாம் என்கிறார்.

தன்னைத்தான் உணர்ந்தவன் ஞானி. அப்படி தன்னைத்தான் உணர புலன், பொறி போன்ற 96 தத்துவங்களை வென்றவனே ஞானி.

ஐம்பூதத்தாலே அலகழிந்ததோ டமற
வேம்பூத நாதனருள் எய்துநாள் எந்நாளோ
நாளும் பொறிவழியை நாடாதவண்ணம் எமை
ஆளும் பொறியால் அருள்வரு தெந்நாளோ!

என்று தாயுமான சுவாமிகள் கூறுகிறார். எனவே தியானத்திற்குரிய புலன், பொறி அடங்குதல் முதிர்ச்சித் தன்மையை தியானம் செய்த யோகி அடைவார் என்பது உண்மை. மனம் தூய்மை அடைந்தால் இந்திரியங்கள் தூய்மை அடையும்.

மனமது செம்மையானால் மந்திரஞ் செபிக்கவேண்டா
மனமது செம்மையானால் வாயுவை உயர்த்தவேண்டா
மனமது செம்மையானால் வாயுவை நிறுத்தவேண்டா
மனமது செம்மையானால் மந்திரம் செம்மையாமே - அகத்தியர்

மனதை ஒருநிலைப்படுத்துவதே தியானம் ஆகும். யானையை அதன் பாகன் ஒரு இடத்தில் கட்டி விடுகிறான். அது துதிக்கையை மட்டும் சும்மா வைத்திருக்காமல் முன்னும் பின்னும், இடது பக்கமும் வலது பக்கமுமாக அதை அசைத்துக் கொண்டே இருக்கும். யானைத் துதிக்கையை அசையாமல் ஆட்டாமல் இருக்க, அதன் கையில் பளுவுள்ள சங்கிலியைக் கொடுத்து விடுவான். யானை தன் துதிக்கையால் அந்த சங்கிலியைப் பெற்று துதிக்கையை ஆட்டாமல் அசையாமல் நின்றுவிடும்.

இதைப்போல் நாலாவிதமாக அலைபாயும் நம் மனதை சங்கிலி என்னும் தியானத்தினால் ஒரே அசையாத நிலை கொண்டு ஆண்டவன்மேல் மனதை நிறுத்தும்போது, நம் சீவன் பரமாத்விடம் கலந்து விடும். ஞானியின் குறிக்கோளே அண்டத்தில் உள்ளதை பிண்டத்தில் கண்டு அதை யோக நெறியால் தன் வசப்படுத்தி இந்த சீவான்மாவை பேரான்மாவிடம் சேர்ப்பதே ஆகும்.

நம் உடலை ஆட்டிப் படைக்கும் மனம், பலகோடி பிறவிகளை எடுத்து புறத்தில் உள்ள மாயா உலகில் எவ்வளவு நாள் இருந்ததோ, அவ்வளவு நாள் உடலின் அகத்தில் மனதை அடக்க வேண்டிவரும் என்கிறார் தாண்டவராய சுவாமிகள். அதாவது, வெளி உலகில் எவ்வளவு நாள் மனம் பழகியதோ அவ்வளவு நாள் தியானத்தில் அக உலகில் பழகியாக வேண்டும் என்கிறார்.

அசத்திலெம் மட்டுண்டம் மட்டும் பாரா முகமாகினாய மட்டும்
நிசத்தினுள் விழிப்பார்வையா யிப்படிநிரந்தரப் பழக்கத்தால்
வசத்திலுன் மனநின்று சின்மாத்ர வடிவமாகிடின் மைந்தா
கசத்தேகத்திருக்கினு மானந்தக் கடல் வடிவாயே- நவநீத கைவல்யம்

தியானமே மனதை அகத்துள் கொண்டு அடக்குவதேயாகும். மனம் அடங்கில் ஆண்டவன் அருள் நிச்சயம்.

உள்ளத்தில் ஆழமாக தியானத்தால் அவ்விடம் ஏதுமற்றதாகிவிடும். அந்த ஆழமான மனதில் எண்ணங்கள் அணுகாமலிருக்கவேண்டும். எண்ணங்கள் ஒழிந்த பிறகு மறுபடியும் எண்ணங்கள் தோன்றலாம். அது தோன்றாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். ஒன்றுமில்லா வெட்டவெளியான இடம் பாழ்போன்ற அந்த எண்ணம் உதிக்குமிடம். ஏதுமில்லா அவ்விடத்தில் ஒருவன் இறைவனின் காட்சியை பெறுகிறான். ஒன்றும் காணாத இடத்தில் தன்னைத்தானே காண்கிறான். தன்னைத் தான் அறிவதுதான் ஞானியின் நிலை, தியான நிலை அதன் படிக்கற்கள் ஆகும்.

பிராணாயாமம் செய்து ஞானநிலை அடையும் யோகிகள் முரட்டுக்காளையை அதன் இருகொம்பைப் பிடித்து அடக்கி ஆளும் தன்மை வாய்ந்தது. ஆனால் தியான நிலை என்பது முரட்டுக் காளையை பசும்புல் கொடுத்து அதை மெதுவாக தடவி தாச்சா செய்து தன் வழிக்கு கொண்டு வரும் முறை என்று ஞானிகள் யோக நூலில் கூறுகிறார்கள்.

சீவன் சர்க்கரையைப் போன்றது. அதைத் தியானித்து பரப்பிரம்மாகிய நீரில் சேர்த்து விட்டால் பிறகு சர்க்கரைக்கு தனி உருவமில்லை. அது தண்ணீராகத் தெரிகிறது. அதுபோல சீவன் என்னும் சர்க்கரை பிரம்மமுடன் சேர்ந்து பரபிரம்மாகிறது.

உப்பு தண்ணீரில் போட்டவுடன் அது கரைந்து தண்ணீர் ஆவது போல், எபபோதும் சஞ்சல எண்ணங்களுடன் உள்ள மனது பிரம்மத்தில் கலந்த உடன் அந்த மனமும் பிரம்ம சொருபமாகிறது. அப்படி உப்புடன் கலக்கும் தன்மையே தியானம் ஆகும்.

8. சமாதி

ஞானி ஒருவர் தன் வாசி (பிராணாயாமம்) யோகத்தால் நம், உடலில் உள்ள ஆறு ஆதாரங்களில் முறையே மூலாதாரம் சுவாதிட்டானம், மணிபூரகம், அனாகதம், விசுத்தி, ஆக்கினை, போன்றவற்றில் மூலாதாரத்தில் உள்ள குண்டலினி என்னும் உயிர்ச் சக்தியை எழுப்பி, அதை ஒவ்வொரு ஆதாரமாக தன் யோக பலத்தால் தாண்டி ஆக்கினை என்னும் புருவ மத்தியில் சக்தியையும், சிவனையும்இணைப்பது சூரிய சந்திரன் அக்கினியாகிய திருவேணி சங்கமம் ஆகும் தன்மையாகும். பிறகு சிவன் சக்தி பரப்பிரம்மாகிய சகசுரார்த்தில இணைத்து வெட்ட வெளியைக் காண்பது. இதுவே சிதம்பர ரகசியமும் ஆகும்.

இப்படி மூலாதாரத்தில் உள்ள குண்டலினி சக்தியை வாசி யோகத்தால் மேல் எழுப்புவது, முரட்டுக் காளையை அடக்கி அதை அதன் கட்டுத் தறியில் கட்டி, ஆனந்தப்படுவது ஆகும். இதுவே மந்திர தியான யோகத்தால் குண்டலினி சக்தியை மேல் எழுப்புவது. இது காளை மாட்டை, பசும்புல், வைக்கோல் காட்டி தாசா செய்து அதைப் பிடித்துக் கட்டுத்தறியில் கட்டி ஆனந்தப்படுவது போல ஆகும். ஆனால் சித்த மகா புருஷர்கள், வாசி யோகத்தையே கையாளுகிறார்கள். அவர்கள் ஞான முரடர்கள், அதனால் அந்த முரட்டுக் காளையை அடக்கி விடுவார்கள்.

இப்படி சக்தியையும் சிவனையும் இணைத்து பரபிர்மத்திடம் சேர்த்து பரபிர்மத்திற்கு சமமாக உள்ளதே சமாதி நிலை ஆகும். ஆதியாகிய பரப்பிர்மத்துடன் சமமாக ஆகும் நிலையே சமாதி நிலை. சமம் + ஆதி. ஆதியுடன் சமமாக இருத்தல் சமாதியாகும்.

இது சக்தியும் சிவனும் புணர்ந்த நிலை கந்தன் நிலையாகும். உயிரும் இறைவனும் புணர்ந்த நிலை (அ) சேர்ந்த நிலை. ஒரு ஆணும் பெண்ணும் மனம் ஒத்து மஞ்சத்தில் இணைரும் நிலை சிற்றின்பம். ஆனால் உயிரும் இறைவனும் புணரும் நிலை பேரின்ப நிலை ஆகும். இதையே சித்தர்கள் சமாதி நிலை என்கிறார்கள். இறைவனை ஒன்றிய நிலை சமாதி நிலை. அகங்காரம் அற்ற நிலை சமாதி நிலை. தன்னைத்தான் அறிந்த நிலை சமாதி நிலை. தன் திரேகத்தை மறந்த நிலை சமாதி நிலை. உலகத்தில் உள்ளது அனைத்திலும் சமமாக ஈசன் நிறைந்துள்ளான் என்று அறிந்து அதுவாகிய நிலை சமாதி நிலை. ஞானத்தின் முதிர்ச்சி நிலை சமாதி நிலை. வேண்டும், வேண்டாம் என்ற தன்மை அற்ற நிலை சமாதி நிலை. விருப்பு, வெறுப்பு அற்ற நிலை சமாதி நிலை. இறப்பும், பிறப்பும் அற்ற நிலை சமாதி நிலை. ஆதிக்குச் சமமான நிலை சமாதி நிலை.

மனிதனின் உடலின் குண்டலினி சக்தி பாம்புபோல் மூன்று சுருளாக சுருண்டு செயல்பாடு இல்லாமல் இருக்கிறது. நம் முதுகு எலும்பின் அடியில் இது அமைதியாக உள்ளது. ஞானி ஒருவர் தன் வாசி யோகத்தால் இடக்கலை என்னும் இடது மூக்குத் துவாரத்தில் போகும் காற்றையும் பிங்கலை என்னும் வலது மூக்குத் துவாரத்தின் வழி வாங்கும் காற்றை நீண்ட நாள் வாசியோகப் பயிற்சியினால் சுழிமுனை என்னும் முதுகுத் தண்டின் நடுநாடியில் கும்பிக்கச்

செய்து அதை உட்ணப்படுத்தி சுழிமுனை மூலம் செயல் பாடு அற்றுள்ள குண்டலினி என்கிற தெய்வ சக்தியை எழுப்பி முதுகுத் தண்டு வழியாக கபாலத்தை நோக்கி மேலே யோகப் பயிற்சியின் மூலம் கொண்டு சென்று உச்சந்தலையில் உள்ள ஆயிரம் தாமரை இதழ்களைப் போல் உள்ள சகசுராரத்தில் சேர்ப்பது சிவன்சக்தி சேர்க்கை என்பர். அதனால் சமாதி நிலை ஏற்பட்டு எப்போதும் சகசுராரத்தில் உண்டாகும் அமிர்தத்தை அருந்தி அன்ன ஆகாரமில்லாமல் சமாதி நிலையில் ஞானி ஒருவர் இருக்கும் நிலை சமாதி நிலையாகும்.

சமாதி இருவகைப்படும் 1. சவிகற்ப சமாதி, 2. நிருவிகற்ப சமாதி.

1. சவிகற்ப சமாதி : (சக்ச சமாதி) விகற்பம் என்றாலே வேறுபாடு அல்லது பேதம் என்று பொருள்படும். கொஞ்சம் வேறுபாடு உள்ள சமாதி எனப்படும். ஆன்மாவை அணுவுக்கு அணுவாய் தரிசித்தல் சவிகற்ப சமாதி எனப்படும்.

2. நிருவிகற்ப சமாதி : இது பேதமற்ற பேதம் நீங்கிய சமாதி எனப்படும். இது ஞாதுரு, ஞானம், ஞேயம் என்கிற திரிபுடியற்ற சமாதி, தான் அதுவாய்த் தற்போதமற்று, அகண்டமான சாட்சாத்கார நிலையை அடைவதாகும். தானும், அதுவும் ஒன்று என்ற நிலை, தானும், அதுவும் பேதமில்லாத நிலை, நிருவிகற்ப சமாதி எனப்படும்.

தானான தன்மயமே யல்லா லொன்றைத்
தலையயெடுக்க வொட்டாது தலைப்பட் டாங்கே
போனாலும் கற்பூரம் தீபம் போலும்
போயொளிப்ப தல்லாது புலம்பவே றின்றும்
ஞான காரத்தினொடு ஞேயமற்று
ஞானதுருவு நழுவாம னழுவி நிற்கும்
ஆனுலுமிதன் பெருமை யெவர்க்கார் சொல்வா
ரதுவானா லதுவாவ ரதுவே சொல்லும்,
அதுவென்றால் எதுவென வொன்றடுக்குஞ் சங்கை
ஆதலினால் அதுவெனலும் அறவே விட்டு
மதுவுண்ட வண்டெனவுஞ் சனக னாதி
மன்னவர்கள் சுகர் முதலோர் வாழ்ந்தாரென்றும்
பதியிந்த நிலையெனவும் என்னை யாண்ட
படிக்கு நிருவிகற் பத்தாற் பரமானந்த
கதிகண்டு கொள்ளவும் நின்னருள் கூரிந்த
கதியன்றி யுறங்கேன் மேற்கருமம் பாரேன்.

சமாதி நிலையைப்பற்றி தாயுமான சுவாமிகள் இவ்விதம் கூறுகிறார். சனகாதி முனிவர்கள், சுகதேவர் போன்றோர் சமாதி நிலையில் பெரும் ஆற்றல் பெற்ற முனிவர்களாவர்.

நடுநாடியாகிய புருவ மத்தியில் விந்தின் நாதங்கள் நிலை பெற்றுவிட்டால் திருவருள் வெளிப்படுவதாகிய சமாதி நிலை கை கூடும். சமாதி நிலை கை கூடிப் பெற்றால் பேரில்லா அறிவினை உடைய அரும்பெரும் பொருளாக முழுமுதற்தெய்வம் சிவபெருமானில் அளவில்லாத வனப்புப் பேரொளியைப் பெற்றுத் திகழலாம் என்பதாக திருமூலர் கூறுகிறார்.

விந்துவும் நாதமும் மேருவில் ஓங்கிடிற்
சந்தியிலான சமாதியிற் கூடிடும்
அந்தமிலாத றிவின் அரும்பொருள்
சுந்தரச் சோதியுந் தோன்றிடுந் தானே. - திருமூலர்

அட்டமாசித்து ஆகிய எட்டு வகை சித்துகளை கைவரப் பெற்றவர்கள் ஞானிகள். இந்த எட்டு வகை சித்துக்களைப் பெற, அட்டங்க யோகங்களாகிய, எட்டுவகை யோகங்களை கைவரப் பெறவேண்டும். அவற்றுள் முக்கியமானது சமாதி நிலையே. அட்டங்க யோகங்களாகிய தீது அகற்றல், நன்றாற்றல், இருக்கை, வளிநிலை, தொகை நிலை, பொறை நிலை, நினைத்தல் என எட்டு வகைப் பயிற்சியில் முதிர்ச்சியடைவதே சமாதி நிலை ஆகும். இந்தச் சமாதி நிலைக்கு எண் வகை சித்திகள் கைகூடும்.

சமாதி யமாதியிற் றான்செல்லக் கூடும்
சமாதி யமாதியிற் றானெட்டுச் சித்தி
சமாதி யமாதியில் தங்கினோர்க் கன்றே
சமாதி யமாதி தலைப்படுந் தானே. - திருமூலா திருமந்திரம்

சமாதி நிலையெய்தியவர்களுக்கு அட்டமா சித்திகள் கைகூடும் என்று திருமூலர் தன் திருமந்திரத்தில் சுருக்கமாகவும், விளக்கமாகவும் கூறுகிறார். எட்டுவித யோகப் பயிற்சியின் முடிவு சமாதி நிலை. சமாதி நிலை வந்த ஞானிகள் அடைவது அட்டமா சித்திகள் என்று உணரவேண்டும்.

கற்பனை யற்று கனல்வழி யேசென்று
சிற்பனை எல்லாஞ் சிருட்டித்த பேரொளிப்
பொற்பனை நாடிப் புணர்மதி யோடுற்றுத்
தற்பர மாகத் தகுந் தண் சமாதியே.

ஒருவன் மனதை கற்பனையில் செல்லாது ஒடுக்கி மூலக்கனல் வழியே சென்றால் திருவருள் கிருபையால் எல்லாம் சிருட்டிக்க வல்ல சிவபெருமானின் பேரொளி காணலாம். அந்தப் பேரொளி பொற்பினை கூடும். அந்த திருவடிவுணர்வு கைகூடும். மேலும் அத்திருவடியாகிய சிவபெருமானுடன் சமமாக இருக்கும் பேறு கிடைக்கும். சிவபெருமானை பிரியாத நிலை சமாதிநிலை கிடைக்கும் என்கிறார் திருமூலபகவான். சிவனுடன் சமமாக ஆகும் நிலை சமாதி நிலை.

எண்ணங்களின் நொசிப்புத் தன்மையே சமாதி நிலை. அப்படிப் பட்ட சமாதி நிலையெய்தியவர்கள் மூலமலத்தின் காரணமாக ஏற்படும் ஏழுவகைத் துன்பங்களை நீக்கியவர் ஆவார்கள். அந்த ஏழுவகைத் துன்பமானது மயக்கம், மதம், ஆவல், கவலை, உட்சூடு, வாட்டம், வியப்பு போன்ற உபாதைகளிலிருந்து விடுபட்டு சமாதி நிலையெய்தியவர் இந்த சமாதி நிலையெய்துவர். திருவருளாற்றல், தொழிலாற்றல், அன்னை, ஆள்வி, துடைப்போன், காப்போன், படைப்போன் என்னும் காரணநிலை பெறுவது சமாதி நிலையாகும்.

காரிய மான உபாதியைத் தான்கடந்\
தாரிய காரணம் ஏழுந்தன் பாலுற\
வாரிய காரண மாயத் தவத்திடைத்\
தாரியல் தற்பரஞ் சேர்த்தல் சமாதியே

என்று திருமூலர் திருமந்திரப் பாடலில் சமாதிநிலை பற்றிக் கூறுகிறார். எண்ணங்களில் நொசிப்புத் தன்மையே சமாதி நிலையாகும். இது இல்லாமல் மண்ணில் போய் புகுந்து கொள்வது அல்ல சமாதி. புறத்தில் ஓடும் எண்ணங்களையும் பொறி ஐந்தினையும், புலன் ஐந்தினையும் சமாதி கட்ட வேண்டும். இதை சமாதியாக்கியவர்களே சமாதி நிலை பெற்றவர்கள் ஆவார்கள்.

மனம் எங்குண்டு வாயுவும் அங்குண்டு\
மன் மனம் எங்கில்லை வாயுவும் அங்கில்லை\
மன் மனத்துள்ளே மகிழ்ந் திருப்பார்க்கு\
மன் மனத்துள்ளே மனோ லயமாமே — திருமந்திரம்

சமாதியின் நிலையைப் பற்றி முனிவர்களிலே பெரும்பதவி பெற்றவர் காகபுசண்டர் முனிவர். அவர் பல பிர்மாக்களைக் கண்டவர். மகாவிட்ணுவின் பத்து அவதாரங்களைக் கண்டவர், உலகப் பிரளயக் காலத்தில், காக உருவமாக, ஒரு மரக்கிளையில், இருந்து மறுபடியும் உலக உற்பத்தியைக் கண்டவர். நான்கு யுகங்களையும் கண்டவர். அவரைப் பற்றி அவரே கூறுகிறார்.

உ
குருவே துணை

காகபுசண்டர்

திருவாய் மலர்ந்தருளிய பெருநூல் காவியம் 1000

காப்பு

ஆதியென்ற மூலமந்திர மைந்தெழுத்தை
அன்புடனே மனதில்வைத்து ஓங்கரத்தை
நீதியுடன் றான்பணிந்து பெருநூல் தன்னை
நிகழ்த்துதற்கு ஐங்கரன்றன் பாதங்காப்பு
சோதியென்ற சுழிமுனையைத் தியானஞ்செய்து
சுந்தரமாய்ப் பிராணாயம் விரிந்துரைக்கப்
பாதிமதி யணியீச னுமையாள்காப்பு
பக்தியுள்ள வாலையின்றன் பாதங்காப்பே. 1

பாதமதைச் சிரசில்வைத்து யுகங்கள்தோறும்
பண்பாகத் தானிருந்து கோடிகாலம்
சாதகமாய்ப் பிரளயங்கள் முடியும்போது
தனியாகக் கல்லாலின் மேலிருந்து
சேதமென்று மில்லாமல் மவுனமுற்று
சிறப்பாக எத்தனையோ யுகங்கள்கண்டு
வேதமென்ற பிர்மத்தி லடங்கிக்கொண்டு
வெகுகோடி யுகங்கள்வரை யிருந்திட்டேனே. 2

இருந்திட்டேன் காகத்தின் சொரூபமாக
இன்பமுடன் வசிட்டருந்தான் யென்னிடத்தில்
வருந்தியே வந்துயென்றன் முன்னேநின்று
வாய்திறந்து கோடியுகம் கல்லால்தன்னில்
பொருந்தியே யிருந்துதான் வந்தீரையா
புகழாக யிருந்துவந்த விதங்கடன்னை
திருந்தியே சொலவேணு மென்றுகேட்க
செப்பினே னுண்மைதனைத் திறந்துதானே. 3

தானென்ற ஞானமதை வெளியதாகத்
தான்சொல்ல வேணுமென்று வசிட்டர்கேட்க

நானென்ற சித்தர்களும் வசிட்டரோடே
நாட்டமுடன் றான்சேர்ந்து ஞானந்தன்னை
தேனென்ற அமுர்தம்போல சொல்லவேண்டும்
திருவருளால் கடந்தேறச் செய்யவேண்டும்
கோனென்றே வேண்டினதால் வசிட்டருக்கு
குறிப்பாக ஞானமதைச் செப்பினேனே. 4

செப்புகிறேன் சுழிமுனையின் பாகந்தன்னை
திறமாக யிருகலையுந் தெரியவேதான்
முப்புமுறை வகையோடு ஆராதாரம்
முப்பாழும் அப்பாழாய் முடியுகின்ற
அப்புவுடன் ஞானதிருட்டி தூரதிருட்டி
அடைவான ரவிமதிமுச் சுடரின்நேர்மை
இப்புவியில் அண்டபிண்டம் காயசித்தி
இன்னதென்றும் திரிகால மியம்புவேனே. 5

திரிகால வர்த்தமுடன் ஆராதாரம்
செவிதூரம் கேட்பதுடன் கெவுனம்பாய்தல்
மரிகால மறிவதுடன் சடலத்தாலே
மருவுடலைப் பகுத்தறியும் வர்த்தமானம்
செரிகால மித்தனையு மறிதல்கொண்டு
சேர்ந்தோம்நா மிருவருமே யின்றுகாலம்
குறிகாலம் மறிந்துணர்ந்த காலந்தன்னிற்
கொண்டுணர்ந்து கூறியே நோக்கினேனே. 6

நோக்கினே னிதையறிந்து வசிட்டர்தானும்
நுவலுமென்று சொல்லவுமே அடியேனுந்தான்
தாக்கியே யெதைவெளியாய்ப் பேசவேண்டும்
சாற்றுமெனக் கேட்கவுமே வசிட்டரப்போ
பாக்கியில்லா தெல்லாமுஞ் சொல்லவேண்டும்
பண்பாய்மா னிடர்பிறக்கு மார்க்கமுந்தி
தூக்கியே சொலவேண்டு மென்றுகேட்க
சுந்தரமாய் வசிட்டருக்குச் சொல்லினேனே. 7

சொல்லுகிறேன் பெண்களுக்குக்கெற்பப்பூச்சி
தொன்றுதொட்டு நாமான வாருதன்னை

கிவிலுகிறேன் பெண்மரங்கள் காய்ப்பதேபோல்
கெற்பமங்கைமுன்னாடிக் கன்னிகாலம்
தொல்லுலகில் சதைக்குஞ்சு வுள்ளிருக்கும்
துடர்மனதை வென்றவர்கள் கண்டகாட்சி
நில்லுகிறேன் புருசரன்றிப் பிள்ளையுண்டோ
நீர்வினவுஞ் சொல்லுகிறேன் மார்க்கந்தானே. 8

மார்க்கமிந்தப் புல்பூண்டு செடிமரங்கள்
மண்ணிருந்த நீருண்டு காய்ந்தாலுந்தான்
ஆர்க்கிந்த வகைதெரியு மரத்திற்பெண்ணும்
ஆண்மலடு யென்றுசொல்லக் கேட்பதுண்டு
பார்க்குளிதை நீரறிவீர் மண்ணினுள்ளே
பலபேரும் பார்த்தறிவார் யீசல்புத்தை
நோக்குமிதை யுள்ளறிந்து வெடித்தகாலம்
நுட்பமே வாய்திறக்கும் பூமிதானே. 9

பூமிபோற் பெண்ணணங்கும் புருடராலே
பூதந்திறக்கக் கூடியதால் வாய்திறந்தே
காமியாய் நாமிணங்க நீரைவாங்கி
கருவுருவாய் நாமானோம் சிசுவின்பூச்சி
நேமியோ தந்தையுட நீரையுண்டு
நீண்டுடலும் பெரிதாகிச் சிலதுநாளிற்
சாமியே யாயிடவே சாப்பாடுண்டு
தாக்கித்தேன் நீபாரு ஆண்பெண்ணென்றே. 10

ஆண்பெண்ணின் கூர்விதங்கள் மார்க்கந்தன்னை
அறைகிறேன் பின்னாடி யதன்முன்னேதான்
காணிந்தச் சூரியனார் மடிந்தபோது
கங்குலது வந்துவிடும் மறைவார்சீவர்
பூணிந்தச் சூரியனார் வருவார்வந்தால்
பூடிதனிற் புற்றீசல் வந்தாப்போலத்
தோணிந்தச் சீவர்களும் புற்பூண்டோடு
தோன்றிடுவார் மண்ணிலிருந் தேறுவாரே. 11

ஏறுவார் மண்ணுடைய நிறமேபோல
யெப்படியென் றெண்ணாதீர் நிறமண்மாறும்

பாருபார் குழந்தைகள்போல் வரவாரப்பா
பந்தடிக்கும் பாவனைபோ லோடுவார்கள்
நீருயா ரெனவினவக் கூறுவார்போல்
நிமிடம்உற வாடியவர் பிரிந்தார்பின்னே
வாருவா ரவர்களுமே வந்தபோது
வாசிமூச் சாடினதோ ருயரந்தானே. 12

தானிருந்த மூச்சிருந்து வருமேவாசல்
தாழ்மூக்கு முதல்வாசல் அகலந்தானே
தேனிருந்த மண்ணதனிற் கண்டகாட்சி
செப்பினேன் பெண்ணாணும் பிறக்குமார்க்கம்
வானிந்த வாகாய மண்ணில்மாந்தர்
மங்கையரின் கெற்பமதி லாண்பெண்ணான
ஊனிந்தக் கெற்பக்கூர் சொல்லிவந்தேன்
உத்தமனே ஆண்கெற்பம் கேளும்நீரே. 13

சமாதி நிலையைப் பற்றி காகபுசண்டர் வசிட்டரிடம் கூறுகிறார்.

1. சமாதியை சொல்லுகிறேன் வசிட்டநாதா
சந்ததிகள் அனைத்திற்கும் தெளிவாக
சமாதியே நீஆனாய் வெகுநாள் யோகி
சாகும்நாள் தெரிந்தவரே சமாதி தன்னில்
சமாதியே மண்மூடல் அரையாங்கில்லை
தான்வைத்து மூடலல்ல ஒளியுமல்ல
சமாதியே பிறர்காணா மறையுமல்ல
தானிறந்த உயிர்விடலு மல்லத்தனே.

2. அல்லவென்றால் சமாதிநிலை உயிராம் மூக்கில்
அசைந்தாடுஞ் சிவனுயிர் பிராணமூச்சு
சொல்லவென்றால் நூல்தோறுஞ் சொல்லிவைத்தார்
சுகமுடனே தானிருந்து ஏங்கிடாமல்
நில்ல வல்ல பேர்களுமே மூக்கோடாமல்
நிறுத்திடவுந் தடுத்திடவும் உள்ளேதானே
செல்லவல்ல பேர்களுமே சிவன் மால்போல்
தெந்தன மென்றாடலுமே உயிரின்சித்தே.

3. சித்தியாமிது தானே சமாதியாகும்
சிவனாணை மாலாணை சித்திதானாம்

முத்தியே யிதுதானே சீவன் முத்தி
முனிமுத்தி காயசித்தி யோகசித்தி
வெத்தியே யிதுதானே நரகந் தன்னை
விரட்டுவதுந் துரத்துவதும் உயிரைவைத்து
புத்தியே யிதுதான் மற்றதெல்லாம்
புலவுடம்பைக் கார்ப்பதற்கே மத்திதானே!

4. மத்திதான் புத்தியெல்லாம் பொருளைத் தேடும்
மனிதர்புத்தி சீவனுயிர் பிறிதல் காணும்
சத்திதான் பிரிந்தாலே யென்னவாகும்
தவம் செய்த உடலல்லோ எமனுக்கஞ்சா
சித்தியே யுடல் வேண்டு மரணத்தாலே
சீவனுயிர் பிரிவதற்கு உடல் நடுங்கும்
நத்தியே தானிருக்கும் அறிவேமத்தி
நாயகரின் பாரிமத்தி சிசுவைப்போலே -காகபுசண்டர்

மனம் பல வழிகளில் விருத்தியாகும் தன்மையுள்ளது. அந்த மன விருத்திகளில் ஒடுங்கி (நொசித்து) நானே பிர்மம், பிர்மமே நான் என்று தன்னைத் தான் அறிந்துகொண்டு சும்மா இருக்கும் தன்மை சமாதி. இதைத் தான், 'தூங்காமல் தூங்கி சுகம் பெறும்'' என்மை என்பது. 'உறங்குவோர் உணர்வில் உணர்வு எனப்படுவது'' சமாதி நிலையாகும்.

இப்படிப்பட்ட சமாதி நிலையெய்திய ஞானிக்கு அட்டமா சித்திகள் தானாக கைவரப்படுகிறது. ஞானிகள் அந்த அட்டமா சித்தியைப் பெற்ற போதிலும் அதை உலகத்தார் நலம்பொருட்டுப் பயன்படுத்துகிறார்கள். சகல அட்டமாசித்திகளைப் பெற்ற போதிலும் அவர்கள் சமாதி நிலையில் கற்ப கோடி காலம் வாழ்கிறார்கள்.

மன ஒருமைப்பாட்டின் கடைசி நிலையே சமாதி நிலை. சமாதி இன்னதென்று வர்ணிக்க முடியாது ஆன்மா, பரபிர்மத்துடன் ஐக்கியம் ஆகும் நிலை. சர்க்கரையைத் தண்ணீரில் கரைத்து விட்டால் சர்க்கரை தன் நிலை இழந்து தண்ணீருடன் கலக்கும் தன்மைபோல் சீவான்மா பரமான்மா நிலையுடன் கலந்து பரமான்வா ஆனநிலை சமாதி நிலை. யோகத்தின், ஞானத்தின், இறுதி நிலை சமாதி நிலை.

சமாதி நிலையை எவராலும் வர்ண்க்க முடியாது. சமாதி நிலையில் இருப்பவரால்கூட விவரிக்க முடியாத நிலை சமாதி நிலை. ஒரு குடம் தண்ணீர்க் கடலில் கலந்த நிலை. அந்த ஒரு குடம் தண்ணீரை என்னவென்று கூறுவது, கடல் என்றுதான் கூற முடியும். அதனால் சமாதி நிலை பரபிர்மத்துடன கலந்த நிலை. பரபிர்மநிலை என்றுதான் கூறமுடியும். அப்படிப் பரபிர்ம்மத்துடன் சமமாக ஒன்றிய நிலை சமாதி நிலையாகும்.

அட்டமா சித்திகள்

ஞானி ஒருவர் தன் யோகப் பயிற்சியில் குண்டலினி சக்தியை ஆறு ஆதாரங்களுக்கு அப்பால் உள்ள சகசுராரத்தில் சிவனுடன் சேர்த்து சிவன் ஒருவனே தெய்வம் என்றுணர்ந்து திருச்சிற்றம்பலம் என்னும் ஆகாய வெட்டவெளியைக் கண்டவர்களுக்கு பிறப்பு இறப்புத் தன்மையற்று எண் வகை சித்திகள் கைவரப் பெறும் என்று யோக நூல் கூறுகிறது.

1. பணிந்தென் திசையும் பரமனை நாடித்
துணிந்தென் திசையுந் தொழு தெம்பிரானை
அணிந்தென் திசையினும் அட்டமா சித்தி
தணிந்தென் திசை சென்று தாபித்தவாறே.

2. பரிசறி வானவர் பண்பன் அடியெனத்
துரிசற நாடியே தூவெளி கண்டேன்
அரிய தெனக்கில்லை அட்டமாசித்தி
பெரிதருள் செய்து பிறப்பறுத்தானே. -திருமூலர்

ஆறு ஆதாரங்களில் மூலாதாரத்தில் உள்ள குண்டலி சக்தியை யோகி தன் யோகப் பயிற்சியால் மற்ற ஐந்து ஆதாரங்கள் வழியாகச் செல்லும் சமயம் இந்த குண்டலினி சக்தி ஒவ்வொரு ஆதாரங்களிலும் தங்கிச் செல்லும். அப்போது யோகியர்களுக்கு ஒவ்வொரு சித்திகள் கூடிவரும். அப்படி வரும் சித்திகள் அட்டமா சித்திகள் என்று பெயர்.

ஞானி ஒருவருக்கு அட்டமா சித்தி பெற்ற போதிலும், அவர்கள் அதைப் பற்றிக் கவலைப் பட்டாமல் மேன்மேலும் ஞான நிலையில் முன்னேறிக் கொண்டே போவார்கள். கரும சித்திகள் எட்டு வகை: அணிமா, லகிமா, மகிமா, கரிமா, பிராத்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம், முதலியன.

யோக சித்திகள் 64 வகைப்படும் என்றும், ஞான சித்திகள் 688 கோடி என்றும் ஞான நூல்கள் கூறுகிறது. இதனால் ஞான சித்தியே சிறந்தது என்றும் ஞான நூல்கள் கூறுகிறது. அவைகளில் பல பிரிவுகளும் அடங்கும். ஆனால் எல்லா சித்திகளும் அட்டமாசித்களில் அடங்கும் என்றும் ஞானநூல் விரிவாகக் கூறுகிறது.

தானான அறுபத்து நாலு சித்து
சாற்றினேன் மறைவின்றி திறவுகோல் போல

என்று யாகோபு சித்தர் கூறுகிறார்.

ஞானிகள் எட்டுவித யோகங்களில் முதிர்ச்சியில் குண்டலினியை எழுப்பி சகசுராரம் என்ற அமுத நிலையில் பொருந்தி ஞானாமிர்தம் உண்டு ஞானப்பழமாய் சமாதி நிலையில் இருப்பார்கள். அப்படி தங்கள் யோகப் பயிற்சியின் மூலம் எட்டுவித ஆன்ம ஆற்றல்களைக் கைவரப் பெறுகிறார்கள்.

பலகோடி சித்திகளை சித்தர்கள் பெற்றபோதும் முக்கியமாக இந்த எட்டுவித சித்திகளுக்குள் அடக்கிவிடுகின்றனர். அதற்கு அட்டமாசித்தி என்று பெயர்.

"ஆடு சித்திகள் அறுபத்து நான்கெழுகோடி
கூட்டுறுசித்திகள் கோடி பலகோடி
அறிவுறு சித்திகள் அனந்தங் கோடி" -திருஅருட்பா

"சாற்று மதிசயந்தான் எண் விதமாகும்" -கோரக்க சித்தர்

"மாதவத்தால் இட்டசித்தி எட்டுபெற்ற
வரிசையினால் வைத்தியநூல் வகையாய் சொல்வேன்" -அகத்தியர்

எனவே பலகோடி சித்திகளும் இந்த அட்டமாசித்தியில் அடங்கும் என்று ஞானிகள் கூறுகிறார்கள். பின்வரும் அட்டமா சித்திகளைக் காணலாம்.

1. அணிமா, 2. மகிமா, 3. இலகிமா, 4. கரிமா, 5. பிராத்தி, 6. பிராகாமியம், 7. ஈசத்துவம், 8. வசித்துவம்.

1. அணிமா (நுண்மை)

பெரும்பொருளின் தோற்றத்திலிருந்து அதை சிறிய பொருளாக மாற்றும் சக்திக்கு அணிமா என்று பெயர். அணுவைக் காட்டிலும் மிக்வும் நுண்ணிய வடிவத்தை எடுத்துக் கொள்ளும் தன்மை அணிமா என்று பெயர்.

"மந்தர மேறு மதிபானுவை மாற்றிக்
கந்தாய்க் குழியிற் கசடற வல்லார்க்குத்
தந்தின்றி நற்காய மியலோகஞ் சார்வாகும்
அந்தவுலகம் அணிமா தியாமே" -திருமந்திரம்

இடக்கலையாகிய சந்திரநாடியும் பிங்கலையாகிய சூரிய நாடியும் யோகப் பயிற்சியால் சிறந்து விளங்கும் உடல். இது நுண்ணியமாகிய அணிமா என்னும் சித்தியால் கிடைக்கும் என்று ஞான நூல்கள் கூறுகிறது.

மாபலி சக்கரவர்த்தியிடம் மகாவிட்ணு அவதாரமான வாமணன், தன் மூன்றடி மண் வேண்டி மாபலி சக்கரவர்த்தியிடம் கமண்டல நீரில் சத்தியம் செய்யப்போகும் சமயம், அதைத் தடுக்க சுக்கிர பகவான் வண்டு உரு தாங்கியது, அணிமா சித்தியின் சிறு உருவாக எடுக்கும் தன்மையாகும்.

2. மகிமா (பருமை)

மகிமா என்பது பார்வைக்கு மிகச் சிறிய பொருளையும், பெரிய பொருளாக மாற்றக் கூடிய தன்மைக்கு மகிமா சித்தி என்று பெயர்.

கிருட்டிண பகவான் அர்ச்சுனனுக்கு காட்டிய விசுவரூப தரிசனம், மகிமாவின் தன்மை ஆகும். வாமன அவதாரத்தில் மகாவிட்ணு, மூன்றடி மண்கேட்டு, இரண்டடியால் மூவுலகை அளக்க எடுத்த பெரிய உருவம்,

மகிமாவின் தன்மையாகும். இது யோகி ஒருவன் தன் வாசியோகத்தால் சிவன் ஒருவரே பிர்மம், என்றுணர்ந்த யோகியர்களுக்கு இந்த மகிமா சித்தி ஒரு ஆண்டில் கை கூடி வரும், என்று ஞானநூல் கூறுகிறது.

மெய்ப்பொருள் சொல்லிய லாளுடன்
தற்பொருளாகிய தத்துவங் கூடிடக்
கைப்பொருளாகக் கலந்திடு மோராண்டில்
மைப்பொருளாகு மகிமாவ தாகுமே -திருமந்திரம்

ஞானி தன் யோகத்தின் முதிர்ச்சியால் ஆன்மா எந்தவிதமான உருவங்களையும் எடுக்கும். சிறிய உருவத்திலிருந்து பெரிய உருவங்களை எடுக்கவும் தன் ஆன்ம சக்தியால் முடியும் என்று ஞான நூல் கூறுகிறது.

3. இலகிமா (மென்மை)

அதிகச் சுமையுள்ள பொருள்களை மிகவும் லேசான சுமையாயிருக்கும்படி யோகியர் தன் ஆன்மபலத்தால் அடைவார்கள். ஆஞ்சநேய பகவான் சஞ்சீவி மலையைத் தூக்கினார் என்பதும், இந்த ஆன்ம சக்தியினால்தான். ஆஞ்சநேய சுவாமி மிகச் சிறந்த ஞானி என்று ஆஞ்சநேயப் புராணம் கூறுகிறது.

ஒரு காலத்தில் சமண மதம் ஓங்கியிருந்தபோது, சைவ மத திருநாவுக்கரசு சுவாமிகளை சமயப் பகையால் கல்லில் கட்டி கடலில் போட்டு விட்டனர். ஆனால் அந்தக் கல் சுமை குறைந்து திருநாவுக்கரசருக்கு அதுவே படகாகிக் கரை சேர்ந்தார் என்று அறிகிறோம். அப்படி பெரும் சுமை, சிறிய சுமையாகும் தன்மைக்கு இலகிமா என்று பெயர்.

கிருட்டிண பகவான் தன் பசுக்களுக்கு மலையைக் குடையாய்ப் பிடித்ததும் இலகிமா தன்மையே.

ஆகின்ற வத்தனி நாயகி தன்னுடன்
போகின்ற தத்துவம் எங்கும் புகலதாய்ச்
சாகின்ற காலங்கள் தன் நின்றிடின்
மாய்கின்ற தையாண்டின் மாலகு வாகுமே. -திருமந்திரம்

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணை திருந்தடி பொருந்தக்கை தொழக்
கற்றணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே. -திருநாவுக்கரசர்

திருநாவுக்கரசரைக் கல் தூணில் கட்டி கடலில் போட்டு விட்டனர். அதுவே படகாகி, திருப்பாபுலியூர் என்னும் பதியில் சேர்த்ததாக பெரியபுராணம் கூறுகிறது.

4. கரிமா

எடையில் லேசான பொருட்களை மிகவும் சுமை கூடுதலாக்கும் தன்மை ஆகும்.

. சோழ நாட்டில் பழையாறை என்ற ஊரில் வாழ்ந்த அமர்நீதி நாயனாரிடம் சிவபெருமான் தன்னுடைய கௌபீனத்தைத் தந்து, காவிரியில் குளித்து விட்டு வாங்குவதாகச் சொல்லிப் போனார். கௌபீனத்தைப் பெற்ற அமர்நீதியார் ஓரிடத்தில் பாதுகாப்பாக வைத்தும் ஈசனருளால் அதை மறையச் செய்து விட்டு அதே கௌபீனம் கேட்க.

சிவபெருமான் மற்ற ஒரு கௌபீனத்தைக் கொடுத்து இதன் எடைக்கு ஒரு கௌபீனம் தரச் சொல்லினார். அமர்நீதி நாயினார் தராசில் பல பொன் பொருள், துணி வகை வைத்தும் தராசு, நிலை வராததால் தானும் தன் குடும்பமும் தராசு தட்டில் ஏறினார் என்பது பெரிய புராணக் கதை.

இந்தச் சிறிய கௌபீனத்தை ஈசன் பெரிய சுமையாக்கினார். அதன் தன்மையே கரிமா சித்தி ஆகும். சித்தருக்கு எல்லாம் தலைவன் சிவன். சதா சித்து ஆடுபவர் சதாசிவன் ஆனார்.

இலகுவான பரவணுப் போல்
இருக்கும் யோகிதனை யெடுத்தால்
இலகுமேரு பாரம்போ லிருப்பதன்றோ கர்மாவாம்

பரம அணுப்போல் உள்ளதை பெருமலை பாரம் வரையில் கூட தன் யோகத்தால் செய்ய முடியும் என்று பரஞ்சோதி முனிவர் கூறுகிறார்.

5. பிராத்தி (விரும்பிய இடம் செல்லல்)

யோகி ஒருவர் தன் யோகப் பயிற்சியின் பலத்தால் நினைத்த இடம் எந்த உலகத்திற்கும் எந்த இடத்திற்கும் போய்வரும் தன்மை பிராத்தி சித்தி எனப்படும்.

நின்றன தத்துவ நாயகி தன்னுடன்
கண்டன பூதப் படையவை யெல்லாங்
கொண்டவை யோராண்டு கூட இருந்திடில்
விண்டுவே நல்ல பிராத்தியந் தாமே". -திருமூலர்

ஐம்பூதங்களை வென்ற யோகி ஒருவருக்கு தாரணை என்கிற அட்டங்க யோக சாதனையில் ஓராண்டு பயிற்சியில் பிராத்தியென்னும் சித்தி கைவரப் பெறுவார் என்று திருமூலர் கூறுகிறார்.

பிலத்தி லிருந்தோ னயனுலகில்
புகுதன் மீண்டும் பிலமடைதல்
பலத்தின் மிகுந்த பிராத்தி யாமே.

6. பிராகாமியம் (கூடுவிட்டுக் கூடுபாய்தல்)

தன்னுடைய யோக பலத்தால் யோகி தன் ஆன்மாவை பிறர் உடலில் செலுத்திச் செயல்படும் முறைக்கு பிராகாமியம் என்று பெயர். பிறர்காயத்தில் ஆன்மாவை செலுத்தித் செயல்படும் தன்மை பிராகாமியம் என்று பெயர்.

விண்ணில்ரவி தன்னுடம்பின்
வெயிலாலனைத்தும் விளக்குபோல்
மண்ணிலுளவாம் பொருள்பலவும்
கால மூன்றும் வானத்தின்
கண்ணிலுளவாம் பொருளுந்தன்
காயத் தொளியா லிருந்தறில்
எண்ணிலிதுவும் மறையொடுசார்
பிராகாமியமென் றியம்புமால் - பரஞ்சோதி முனிவர்

திருமூல மாமுனிவர் திருவாவடுதுறையில் மாடுமேய்த்த இடையன் மூலன் சடலத்தில் தன் கூடுவிட்டுக் கூடுபாய்ந்து திருமூலர் என்ற பெயர் பெற்று "திருமந்திரம்" என்று அரிய நூலை உலகிற்கு வழங்கினார் என்று நாம் அறிகிறோம்.

ஔவையாரை வளர்த்த புள்ளூர் பாணன் என்பவர் ஔவைக்கு மணவயது வந்துவிட்டது என்று எண்ணி மணம் முடிக்க குலாச்சாரப்படி பாணன் சேலையை ஔவைக்கு கொடுத்து அதை உடுத்திக் கொண்டுவர வேண்டினார்.

திருமணம் விரும்பாத ஔவையோ சேலையை வாங்கி அதை உடுத்திக்கொண்டு கிழ உருவம் தாங்கி வந்து கடைசிவரை கிழஉருவத்துடன் இருந்தார். ஔவை பெரிய ஞானி. இப்படி நினைத்தவுடன் எந்த உருவமும் பிறர் சடலத்தில் தன் உயிரைப் புகுத்தலும் யோகியர்களுக்கு கிட்டும் சித்தியே பிராகாமியம் எனப்படும். விக்ரமாதித்தன் கதையிலும் கூடு விட்டுக் கூடுபாயும் நிலை நிறைய வருகிறது. ஒரு சமயம் ஆதிசங்கரருக்கும் உபயபாரதியுடன் தர்க்கம் நேர்ந்தபோது காமத்தின் தன்மைப்பற்றி தர்க்கம் நடைபெற்றது. இவர் கூறும் விடையை உபயபாரதி ஏற்றுக் கொள்ளவில்லை. நித்திய பிரமச்சாரியாகிய உனக்கு சிற்றின்பத்தின் தன்மை இன்னதென்று தெரிய ஞாயமில்லை என்று உபயபாரதி கூறினார்.

சங்கரர் தன் சீடருடன் காட்டில் வேட்டைக்கு வந்த அமரகன் என்ற அரசன் உடம்பில் புகுந்து காமக்கலை பயின்று அனுபவித்து வந்தார். சங்கரர் அமரகன் உடலிலிருந்து நாட்டையாளும்போது இது வரையில்லாத சுபிட்சத்தில் நாடு சுபிட்சமாக இருக்கக் கண்ட மந்திரி அரசரின் உடலில் ஏதோ பெரிய மகான் இருக்கிறார் என்று உணர்ந்து சேவகர்களை அழைத்து நம் நாட்டில் உள்ள மலை, காடுகளில் எங்கேயாகிலும் செத்த சவம் கண்டால் எரித்து விடுங்கள் என்று கூறினான். சேவகர்களும் அப்படியே சங்கரர் உடலைக் கண்டு எரித்தனர். இதை அறிந்த சங்கரர் உடனே தன் உடலில்

புகுந்து "சுவாலா நரசிங்க தோத்திரம்" செய்து உடலைக் காப்பாற்றினார் என்று சங்கரர் வரலாற்றின் மூலம் காண்கிறோம். இது கூடுவிட்டுக் கூடுபாயும் நிலை.

அருணகிரிநாதர் பாரிஜாதக மலர் கொண்டுவர தன் உடலை திருவண்ணாமலையில் உள்ள கிளி கோபுரத்தினுள் வைத்துவிட்டு செத்த கிளியின் உடலில் புகுந்து, சொர்க்க லோகத்தில் உள்ள பாரிசாதக மலரை கொண்டு வந்தார் என்றும் அருணகிரிநாதர் வரலாற்றில் காணப்படுகிறது.

யோகி ஒருவர் தன் வாசி யோக மூலம் யோகம் பயின்றுவரும் சமயம் இப்படிப்பட்ட சித்திகள் கைகூடி வரும் என்று யோக நூல்கள் கூறுகிறது.

ஆனவிளக் கொளி யாவதறிகிலர்
மூலவிளக் கொளி முன்னேயுடையவர்
கானவிளக் கொளி கண்டு கொள்வார்க்கு
மேலைவிளக் கொளி வீடெளிதா நின்றே - திருமந்திரம்

எப்பொருளையும விளக்கும் முழுமுதற்கடவுள் சிவத்தின் இயற்கை ஒளி புருவ நடுவிலுள்ள உயிருக்கு உயிராய் உதவும் சிவ ஒளி. வானோர்களுக்கு உயர்ந்த உலகத்துறையும் சிவஒளி. இவ்வொளியைக் காணும் யோகியர்களுக்குப் பிராகாமியம் என்றும் சித்தி சிவனருளால் ஏற்படும் என்றும் திருமூல முனிவர் கூறுகிறார்.

7. ஈசத்துவம்

யோகி ஒருவர் தன் யோக பலத்தால் ஈசருடன் சமமாகி முத்தொழில் களாகிய படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் உடம்பின்கண் செய்யப் படும் முத்தொழிலும் செய்வார் என்பது ஈசத்துவ சித்தியாகும்.

தானே படைத்திடவல்லவ னாயிடும்
தானே யளித்திடவல்லவ னாயிடும்
தானே சங்காரத் தலைவனுமாயிடும்
தானே யிவனெனுந் தன்மையனாமே - திருமூலர்

முழுமுதற் சிவன் இவனே என்று யோகியை சொல்லப்படும் என்று திருமூலர் கூறுகிறார்.

சென்னை மயிலையில் வாழ்ந்த சிவனடியார் சிவநேசர் என்பவருடைய மகள் பூம்பாவை இறந்து அவள் சாம்பலையும் எலும்பையும் ஒரு குடத்தில் வைத்திருந்தனர். ஞான சம்பந்தர் அந்த எலும்பையும் சாம்பலையும் முன்பு போல் பூம்பாவையை எழுப்பி படைத்தல் தொழில் புரிந்தார் என்பதாகும்.

கானமர் சோலைக் கபாலீச்சர மமர்ந்தான்
தேனமர் பூம்பாவைப் பாட்டாக செந்தமிழான்

ஞானசம்மந்தன் லம்புகழ்ந்த பத்தும் வல்லார்
வான சம்மந்தத் தவரோடும் வாழ்வாரே -சம்பந்தர்

ஆண் பனையைப் பெண் பனையாக திரு ஒத்தூரில் சமணர் வாதத்தில் படைத்துக் காண்பித்தார். இந்த யோக சித்தியை சித்தர் வல்லபத்தில் பாம்பாட்டி சித்தர் கூறுகிறார்.

தூணைசிறு துரும்பாகத் தோன்றிடச் செய்வோம்
துரும்பைப் பெருந்தூணாகத் தோற்றச் செய்குவாம்
ஆணைப் பெண்ணும் பெண்ணை ஆணும் ஆச்செய்குவோம்
ஆரவாரித்து எதிராய் ஆடுபாம்பே!
எட்டுநாகம் தம்மைகையால் எடுத்து ஆட்டுவோம்
இந்திரனார் உலகத்தை இங்கே காட்டுவோம்
கட்டுக் கடங்காத பாம்பை கட்டி விடுவோம்
கடுவிடந் தன்னைகக்கி ஆடுபாம்பே!

ரிசி தன்மகனுக்காக ஒரு கிரகத்தையே, பூமியையே படைத்துள்ளார். யோகத்தின் மகிமையால் முத்தொழிலும் செய்யும் சித்திக்கு ஈசத்துவ சித்தியாகும்.

8. வசித்துவம்

ஏழு வகை உயிர்த் தோற்றங்களை தன் வசப்படுத்துவது. தேவர், மானிடர், நரர், மிருகம், பறவை, ஊர்வன, மரம், செடி, கொடி முதலியவைகளை தன் வசப்படுத்துவது வசித்துவமாகும்.

சமணர்களுக்கும் அப்பர் சுவாமிக்கும் தர்க்கம் வந்து சமணர்கள் யானையை அப்பர் மீது ஏவிவிட, அப்பர் தன் கை சைகையால், யானையை ஏவிவிட அது சமணர்களையே கொன்றதாக, நால்வர் வரலாற்றின் மூலம் அறிகிறோம். அதாவது யானையை அப்பர் சுவாமிகள் தன் யோக பலத்தால் தன் வசமாக்கினார் என்று அறியவும்.

இராமபிரான் ஒரு ஆல மரத்தில் பறவைகள் ஒன்று கூடி எழுப்பிய ஒலியை தன் கை சைகையினால் நிறுத்தச் செய்தார் என்றும் அறிகிறோம். ஒரு நேரம் நம் பூண்டி மகானை இரயிலில் டிக்கெட் எடுக்கவில்லை என்று கீழே இறக்கி விட்டுவிட்டார்கள். சுவாமிகள் கீழே இறங்கி ஒரு ஓரமாக உட்கார்ந்துவிட்டார். பிறகு, என்ன செய்தும் இரயில் புறப்படவில்லை. சுவாமியின் மகிமை கண்ட இரயில்வே (கலசப்பாக்கம்) அதிகாரி சுவாமிக்கு ஆகாரங்கள் கொடுத்து வேண்டிய பிறகு, சுவாமிகள் "போகும்! போப்பா! என்று கூறிய பிறகு ரயில் புறப்பட்டுச் சென்ற அற்புதத்தைக் கண்டவர்கள் இன்றும் உள்ளனர்.


சேதன, அசேதன பொருட்களைக் கைவரப் பெற்றவர்கள் யோகிகள். தன் பிண்டத்தில் உள்ள 96 தத்துவங்களை கைவரப் பெற்றவர்கள்

யோகிகள். தன் பிண்டத்தில் உள்ள 96 தத்துவங்களை கைவரப் பெற்று அடக்கி ஆளும் தன்மையுள்ள யோக அண்டத்தில் உள்ளதையும் அடக்கி ஆளும் தன்மை வந்துவிடும். இந்த அடக்கி ஆளும் சித்திக்கு "வசித்துவம்" - தன் வசப்படுத்துதல் என்று பெயர்.

காலொ டுயிருங் கலக்கும் வகைசொல்லிற்
காலது அக்கொடி நாயகி தன்னுடன்
காலது ஐந்நூற்றறுபத்து மூன்றையுங்
காலது வேண்டிக்கொண்டே இவ்வாறே -திருமூலர்

இப்படி யோகி ஒருவர் தன் யோகத்தின் முதிர்ச்சியால் அட்டமா சித்தியைக் கைவரப் பெறுகின்றார். இப்படிப்பட்ட சித்திகளைப் பெற்ற போதிலும் ஞானி ஒருவர் வெளியே காட்ட மாட்டார். அவர்கள் ஞானநிலையில் மேன்மேலும் முன்னே பார்ப்பார்கள்.

சிவனே இன்னும் யோகத்தில் இருக்கிறார். அதனால் உண்மை சித்தர்கள் யோக நிலையில் தான் இருப்பார்கள். சித்துக்களை வெளிப்படுத்தவோ, ஆடவோ மாட்டார்கள்.



ஆசிரியர் கே.ஆர். சிவகாந்தன், ஸ்ரீ சக்தி ரைஸ் மில், ஆரணி (தி.ச.மா)

ஞானம் வேண்டேன்! நல்வேதம் வேண்டேன்!
சூரியக்கலை வேண்டேன்! சந்திரக்கலை வேண்டேன்!
சுழிமுனை வேண்டேன்! அட்டமா சித்தி வேண்டேன்!
ஆறு ஆதாரம் வேண்டேன்! அதற்கு மேலும் வேண்டேன்!
நின் பாதாரவிந்தம் வேண்டும். நின் கருணை வேண்டும்.
நின் பாதாரவிந்தம் மறவா மனம் வேண்டும்.
பூண்டி ஈசா சரணம்! சரணம்! சரணம்!

சுவாமி நடமாடியது

இப்படிப்பட்ட தொண்ணூற்றாறு தத்துவங்களை தன் உடலில் கண்டு அதை அடக்கி தன் வசப்படுத்திய யோகராசன், அட்டங்க யோகங்களை வென்று அட்டமா சித்திகளைக் கைவரப் பெற்ற தவ அரசன், ஆறு ஆதாரங்களை வென்று அதற்கு மேல் உள்ள ஆதாரத்தையும் கண்டு ஞான அமிர்தப் பாலை அருந்திய ஞான அரசன், வெட்டவெளிதனைக் கண்ட ஞான வேந்தன் ஒருவர், திருவண்ணாமலை மாவட்டம், போளூர் தாலுக்கா, கலசப்பாக்கம் நோக்கி வந்து கொண்டிருக்கிறார்.

தொண்ணூற்றாறு தத்துவங்களையும், அட்டமா சித்திகளையும், ஆறு ஆதாரங்களையும், அதற்குமேல் உள்ள ஆதாரங்களையும், ஒரு மூட்டையாகக் கட்டி, தன் தோள் மீது தொங்க விட்டுக் கொண்டு, ஒரு ஞான வேந்தன், ஞான அரசன், பார்ப்பதற்கு பித்தம் பிடித்தவர் போல் தோற்றம் கொண்டு, பூஉலக மாந்தர்களின் நலன் கருதி, கலசப்பாக்கம் நோக்கி வந்து கொண்டிருக்கிறார்.

திரு அண்ணாமலையில் உறையும் அண்ணாமலை ஈசன் தன் திருவிளையாடலில் பல அவதாரங்களைக்கொண்டு பூவுலக மாந்தர்களுக்கு நன்மைகள் பல செய்து உள்ளார் என்று நாம் ''திருவிளையாடல் புராணத்தில்'' காண்கிறோம். அப்படிப்பட்ட அண்ணாமலை ஈசன் மானிட உருவம் கொண்டு பூலோக மக்களின் துயரைத் தீர்க்க ஒரு பித்தம் பிடித்தவன் போல் தோற்றம் கொண்டு நடுநாட்டில் உள்ள திருவண்ணாமலை மாவட்டம், போளூர் வட்டம், கலசப் பாக்கத்தை நோக்கி வந்து கொண்டிருக்கிறார்.

இன்றைக்கு சுமார் 60 ஆண்டுக்கு முன் கலசப்பாக்கம் (1992) வட்டம், இலாடவரம் என்னும் கிராமத்திற்கும், கலசப்பாக்கத்திற்கும் இடையில் ஓர் ஞான சித்த மகா புருஷர் வந்து கொண்டிருக்கிறார். இவர் வருவதை முன் கூட்டியே கலசப்பாக்கம் வட்டம், மேட்டுப்பாளையம் என்ற கிராமத்திலிருக்கும் சாது குரு நாதன், தன்னை மறந்து ஆனந்தத்துடன் கைகொட்டிப் பாடலாக பாடிக் கொண்டிருந்தார்.

மேட்டுப்பாளையத்தில் சாது குருநாதனை அந்த ஊர் மக்கள் பைத்தியம் என்று நினைத்து வந்தார்கள். சாது குருநாதன் நம் பூண்டி மகான் கலசப்பாக்கம் வர இரண்டு நாட்களுக்கு முன்னதாக இதுவரையில் இல்லாத ஆனந்தத்துடன்,

மகான் வரார்! மகான் வரார் வழிவிடுங்கோ!
மழை வருகிறது! மழை வருகிறது குடைபிடியுங்கோ!

என்று கைகொட்டிப் பாடிக் கொண்டிருந்தார். இதைக் கண்ட கிராம மக்கள் இந்தப் பைத்தியம் ஏன் இப்படி குதுகலம் ஆக ஆடிப் பாடுகிறது என்று நினைத்தார்கள்.

மகானைப் பற்றி மகானுக்குத்தான் தெரியும். நாம் தான் அவர்களை பித்தம் பிடித்தவர்கள் என்று நினைத்து ஒதுக்கி விடுகிறோம். ஆனால் இந்த பைத்தியக்கார உலகத்தைக் கண்டு அவர்கள் நல்வழிப்படுத்த வரும் நல்ல தேவ புருசர்கள்.

மேட்டுப்பாளையம் சாது குருநாதன் ஆனந்தக் களி நடனம் புரிந்தபடி இரண்டு நாள் கழித்து ஓர் மகான் பித்தம் பிடித்தவர் போல் தோற்றம் கொண்டு ஒரு அழுக்கு மூட்டையுடன் பல சட்டைகளை ஒன்றன்மீது ஒன்றாக அணிந்து கொண்டு மேட்டுப் பாளையம் குண்ணடிமேடு என்ற இடத்தில் நாகதாளிமுட் புதரில் வந்து அமர்ந்து கொண்டிருந்தார்.

அப்போது கடந்த ஆறு மாத காலமாக இல்லாத மழை பொழிந்து தள்ளிவிட்டது. மூட்டையுடன் திரிந்து கொண்டிருந்த நம் பூண்டி மகான், மேட்டுப் பாளையும் ஆற்றுக் கால்வாய் மேல் உள்ள நாகதாளி முட்புதரின் உள்ளே போய் நிட்டை கூடி அமர்ந்து விட்டார். அந்த நாகதாளி முட்புதரில் மனிதன் உள்ளே போக முடியாது. ஆனால் நம் பூண்டி சுவாமிகள் எப்படி போனார் என்று யாருக்கும் தெரியாது.

சாது குருநாதன் சொல்லியபடி மழை வந்துவிட்டது. ஆனால் மகான் வருகிறார் என்றாரே, மகானைக் காணவில்லையே என்று மேட்டுப்பாளையம் மக்கள் தமக்குள் பேசிக் கொண்டார்கள்.

நாகதாளி முட்புதரில் அமர்ந்து நிட்டை கூடிய நம் பூண்டி மகான் அன்ன ஆகாரமின்றிப் பல நாட்கள் இருந்து விட்டார். அந்த பக்கம் நிலத்திற்கு தண்ணீர் பாய்ச்ச சென்ற விவசாயிகள், யாரோ ஒரு பெரியவர் இரண்டு நாட்களாக முட்புதரில் உள்ளாரே என்று அறிந்து அந்த முட்புதரை வெட்டி வழியாக்கி நம் பூண்டி மகானை வெளியே கொண்டு வந்தனர்.

சுவாமிகள் நாகதாளிப் பழத்தையும் ஆற்று மணலையும் உணவாக கொண்டு, கலசப்பாக்கம் செயாற்றிலும், ஆற்றுக்கால்வாய்களிலும் உட்கார்ந்து விடுவார். நாட்கணக்கில் அப்படியே உட்கார்ந்து இருப்பார். யாரையும் பசி என்றும், தாகம் என்றும் கேட்க மாட்டார். கலசப்பாக்கம் ஆற்றில் வெயில் என்றும் மழை என்றும் பாராமல் நாட்கணக்கில் யோக நிட்டையில் மூழ்கி விடுவார்கள்.

எப்போதும் ஒரு அழுக்குத் துணி மூட்டையுடனும் பல சட்டைகளை உடலில் அணிந்து கொண்டும் நடமாடிக் கொண்டிருந்தார். யானை நடையை ஒத்த நடையாக இருக்கும். கைகளை வீசி, வீசி நடப்பார். அவருடன் யாரும் நடந்து போக முடியாது. அவ்வளவு வேகமாக நடப்பார்கள்.

கலசப்பாக்கம் காக்கங்கரை விநாயகர் கோயில் வாசற்படியில் உட்கார்ந்து இருப்பார்கள். கலசப்பாக்கம் வெள்ளிக்கிழமை சந்தைக்கு வரும் சனக்கூட்டங்களைக் கண்டு சும்மா பார்த்துக் கொண்டு, உட்கார்ந்து இருப்பார். யாரையும் எதையும் கேட்க மாட்டார். யாராவது ஏதோ ஒரு சாது உட்கார்ந்துள்ளார் என்று டீ, வாங்கிக் கொடுத்தால் \அதை வாங்கி சாப்பிட்டுவிட்டு எழுந்து போய் விடுவார். யாரிடமும் எதையும்பேசமாட்டார்.



சுவாமிகள் நடமாடிக் கொண்டிருத்தல்

கலசப்பாக்கம் பாலகிருட்ண முதலியார் சோடா கடைப்பக்கம் வந்து ஒரு ஓரமாக உட்காருவார். அப்போது கடைக்காரர் கலர் கொடுத்தால் சாப்பிட்டு விட்டுப் போய் விடுவார். யாரிடமும் எதையும் பேச மாட்டார்கள். எப்போதும் மௌனமாக நடமாடிக் கொண்டிருப்பார்கள். கலசப்பாக்கம் வெங்கிடாசல செட்டியார் ஒரு டம்ளர் கூழ் கொடுப்பார். சுவாமி ஆனந்தமாகச் சாப்பிடுவார்.

இப்படியே பல ஆண்டுகள் கலசப்பாக்கம், மேட்டுப்பாளையும், பில்லூர் போன்ற கிராமங்களில் நடமாடிக் கொண்டிருந்தார். எப்போதும் யாரையும் பசிக்கு அன்னமோ, தாகத்திற்குத் தண்ணீரோ கேட்டது கிடையாது.

சுவாமிகள் கலசப்பாக்கம் ஆற்றில் வெயில் என்றும் பாராமல் மணலில் படுத்து விடுவார்கள். கலசப்பாக்கம் பள்ளிக்கு வரும் சிறுவர்கள் ஒன்று சேர்ந்து சுவாமியை அசைத்துப் பார்ப்பார்கள். சுவாமியை அசைக்க முடியாது. மரக்கட்டைபோல் இருக்கும். சுவாமிகள் உடம்பில் எறும்புகள் சாரை சாரையாக போய்க் கொண்டு இருக்கும். தன் உடலை மறந்து நிட்டையில் இருப்பார்கள். தன் உடலைப்பற்றிக் கவைப்பட மாட்டார்கள்.

சுவாமிகள் மேட்டுப்பாளையம் மடம் அருகில் உள்ள குண்ணடிமேடு என்ற இடத்தில் சூரியனைப் பார்த்தபடி மல்லாந்து படுத்து விடுவார். நாட்கணக்கில் அப்படி இரவு பகல் என்று நிட்டையில் கூடி இருப்பார்கள். அப்போது அவர் சிம்மம் மாதிரி கர்சனை செய்வார். யாரும் அவர் அருகில் போகப் பயப்படுவார்கள். கண்களில் பீளை பயங்கரமாக இருக்கும். இப்படி நாட்கணக்கில் அன்ன ஆகாரம் இன்றி இருந்து விடுவார்கள்.

இப்படி நிட்டை கூடி வரும் நாளில்-ஒரு நாள் இரண்டு அன்பர்கள் சுவாமியிடம் வந்து தன் குடும்பக் குறைகளைக் கூறிக் கொண்டிருந்தனர்.

அதற்கு சுவாமிகள் :

"மாடுதான் வைக்கோலை கவ்வுது
மனிதன் ஏன் மண்ணை கவ்வ வேண்டும்"

என்று இதையே பல முறை கூறிக்கொண்டு இருந்தார். வந்த அன்பர்கள் இருவர்களுக்கும் ஒன்றும் புரியாமல் போய்விட்டனர். மறுநாள் வந்த அன்பர்களில் ஒருவர் அகால மரணமடைந்தார். அந்த அன்பருக்கு பரிபாசையாக சுவாமிகள், மண்ணில் போகப் போகிறாய் என்று கூறினார். இதை மற்ற அன்பர் மூலம் கேள்விப்பட்ட மக்கள், இவர் ஒரு மகானாக இருக்கும் என்று நம்பத் துவங்கினர்.

நடமாடிய நேரம்

சுவாமிகள் கலசப்பாக்கம் ஆற்றில் இருக்கும்போது, கலசப்பாக்கம் அக்கரையிலிருந்து பள்ளி வரும் மாணவர்கள் சுவாமியிடம் வந்து வணங்கி, 'சுவாமி இந்த ஆண்டு நான் கல்வியில் தேர்ச்சியடைவேனா?' என்று கேட்பார்கள். அதற்கு சுவாமிகள், ஆமாம்! ஆமாம் என்று கூறிவிடுவார். வரும் மாணவர்களில் ஒருவனைக் கண்டு 'வாய்யா! ஜட்ஜ்' என்று கூறுவார். அந்த மாணவர் பின்நாளில் கல்வியில் தேர்ச்சி பெற்று ஜட்ஜாக திருவண்ணாமலைக்கே வந்து பணி புரிந்தார்.

முக்காலமும் உணர்ந்த மகான்களுக்கு இது பெரிய விசயம் அல்ல. மகான்கள் வாயில் வருவதும் எப்போதம் பொய்ப்பது கிடையாது. இப்படி வருங்காலத்தைக் கூறிக் கொண்டும் நடமாடிக் கொண்டிருந்தார்.

சுவாமிகள் மகிமை வெளிப்படுதல்

சுவாமிகள் கலசப்பாக்கம் காக்கங்கரை வினாயகர் கோயில் அருகில் இருந்த விறகு மூங்கில் கடையில் போய் உட்கார்ந்து இருப்பார். அவர் கண்ணில் பீளையும் மூக்கில் சளியும் பார்க்க அருவறுக்கத்தக்கவாறு இருக்கும். ஞானிகள் தன் தோற்றத்தை அருவறுக்கதக்கதாக வெளி உலகத்திற்குக் காட்டிக் கொண்டிருப்பார்கள். ஏன் என்றால் அப்போதுதான் மக்கள் அவர்கள் உருவம் கண்டு சமீபமாக வரமாட்டார்கள் என்பது ஞானிகளின் நோக்கம். அவர்களின் யோக நிலைக்கு மக்களால் இடைஞ்சல் ஏற்படா வண்ணம் இருக்க அப்படிப்பட்ட உருவத் தோற்றத்துடன் இருப்பார்கள்.

காக்கங்கரை வினாயகர் கோயில் அருகில் இருந்த அந்த விறகு கடைக்காரர் சுவாமியின் தோற்றத்தைக்கண்டு இந்த அழுக்குப் பிடித்த பைத்தியம் இங்கேயே உட்கார்ந்து இருக்கிறதே இதை எங்கேயாவது கொண்டு போய் விட்டு விடவேண்டும் என்று மனதில் எண்ணிக் கொண்டார்.

ஒருநாள் அந்த விறகு கடைக்காரரும் அவர் நண்பர்கள் இருவரும் கூடி சுவாமியை அழைத்துக் கொண்டு ஆரணி வழியாக செய்யாற்றை அடைந்து செய்யாறு பேருந்து நிலையத்தில் விட்டுவிட்டு அடுத்த வண்டியில் கலசப்பாக்கம் விறகு கடைக்கு வந்தனர். ஆனால் சுவாமிகள் எப்போதும் போல விறகு கடை ஓரமாக உட்கார்ந்து கொண்டிருந்தார்கள்.

விறகு கடைக்காரருக்கும் அவரது நண்பர்களுக்கும் ஒன்றுமே புரியவில்லை. நாம் இப்போதுதான் செய்யாறு பேருந்து நிலையத்தில் விட்டுவிட்டு வருகிறோம். அதற்குள் இவர் எப்படி இங்கு வந்து விட்டார் என்று நினைத்து ஆச்சர்யம் அடைந்தனர். ஆனால் விறகு கடை சமீபம் உள்ளவர்கள் இவர் நீண்ட நேரமாக இங்கே தான் உள்ளார் என்று கூறினார்கள்.

விறகு வியாபாரியும் நண்பர்களும் மற்றவர்களும் இந்த சம்பவத்தைக்கொண்டு இவர் சாதாரண மனிதரல்ல. இவர் ஒரு பெரிய மகான் என்று உணர்ந்தனர். இந்த செய்தி ஊர் முழுவதும் பரவத் தொடங்கியது.

சுவாமிகள் பிறகு அந்த விறகு கடைப் பக்கம் போகவே இல்லை. அந்த விறகு வியாபாரிக்கு வியாபாரம் நலிந்து பெரும் துன்பத்தை அனுபவிக்க நேர்ந்தது.

ஞானிகள் கால் பட்டாலே அந்த இடம் செழுமையுடன் திருமகள் தாண்டவமாடும். நல்ல அரசன் நல்ல ஆன்மாக்கள் இருக்கும் ஊர் செழுமையுடன் இருக்கும். பஞ்ச பாண்டவர்கள் 12 ஆண்டு வனவாசம் முடிந்து ஒரு ஆண்டு மறைந்து வாழவேண்டும் என்பது கௌரவர்களுக்கும் பாண்டவர்களுக்கும் ஏற்பட்ட நிபந்தனை.

பாண்டவர்கள் 12 ஆண்டு வனவாசம் முடிந்து ஒரு ஆண்டு அஞ்ஞாத வாசம் (யாருக்கும் தெரியாமல்) செய்து வரும்போது துரியோதனன் சபையில் பஞ்ச பாண்டவர்களைக் கண்டு பிடிக்க விவாதித்தனர்.

பலர் பலவித யோசனைகளை துரியோதனனுக்கு கூறினர். ஆனால் பெரியவர் பீஷ்மர், 'துரியோதனா, நம் ஐம்பத்தாறு தேசங்களில் எங்கு நல்ல மழையும், பயிர் பச்சையுடன் செழுமையாக உள்ளதோ அங்கே பாண்டவர்கள் இருப்பதாக அறிவாய்'' எனறு கூறினார். 'தருமன் புண்ணிய ஆத்மா. மேலும் அவர் உடன் பிறந்தவர்களும் நல்ல ஆத்மாக்கள். அதனால் அவர்கள் இருக்கும் இடம் செழுமையாக இருக்கும்' என்று கூறினார்.

இந்த 56 தேசங்களிலும் விராட தேசம் மிகச் செழுமையாக உள்ளதை அறிந்து பஞ்ச பாண்டவர்கள் விராட தேசத்தில் உள்ளார்கள் என்று துதியோதனன் அறியலானான்.

மகான்களும், சித்த மகா புருஷர்களும், மற்றும் நல்ல புண்ணிய ஆத்மாக்கள் இருக்குமிடம் செல்வம் கொழிக்கும். நாம்தான் மகான்களை மகான் என்று உணராமல் நம் ஆணவ கர்மத்தால் அவர்களைப் பைத்தியம் என்று நினைத்து விடுகிறோம். ஏதாவது ஒரு அற்புதம் அவர்களால் நிகழ்ந்தால் அவர்களை மகானாக ஏற்றுக்கொண்டு அவர்களுக்குத் தொந்தரவு கொடுத்து விடும் நிலை நம் நிலையாகும்.

சுவாமிகள் கலசப்பாக்கம் சந்தை மேட்டில் உள்ள மசூதிப் பக்கம் அடிக்கடி போய் உட்கார்வார்கள். அப்படி மசூதி பக்கம் சுவாமிகள் அமர்ந்திருந்த போது, ஒரு முசுலீம் அன்பர் சுவாமியிடம் வந்து, சாத்துக்கொடி பழத்தை உரித்து சுவாமிக்கு ஒவ்வொரு சுளையாக ஊட்டினார். சுவாமிகள் ஒரு சுளை வாயில் பெற்றுக்கொண்டு பிறகு, இரண்டு சுளையாக வாயிலிருந்து வந்து விழ ஆரம்பித்தது. முசுலீம் அன்பருக்கு ஒன்றும் புரியவில்லை. அப்போது அங்கு இதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த அன்பர், சுவாமியைப் பார்த்து,

"என்ன சுவாமி! ஒரு சுளைக்கு இரண்டு சுளையாக தங்கள் வாயிலிருந்து வந்து விழுகிறது" என்று கேட்டனர். அதற்கு சுவாமிகள்,

"ஒன்றுக்கு ரெண்டாய் எதிர்பார்த்து
சுளை சுளையாய் எதிர்பார்க்கிறார்ப்பா!"

அதனால் அது அப்படி இரண்டு இரண்டாய் வருகிறது என்று கூறினார். பழம்கொடுத்த முசுலீம் அன்பர் 'சுவாமி! என்னை மன்னித்து விடுங்க! நான் மறுமணம் செய்து கொண்டால் சொத்து வரும் என்று ஆசைப்பட்டு தங்களின் ஆசியை எதிர்பார்த்தது உண்மை. ஆனால் இனி அந்த எண்ணம் அடியோடு போய் விட்டது. என்னை நல்வழிப்படுத்திய தெய்வம் நீங்கள், என்று கூறி சுவாமியின் கால்களில் வீழ்ந்து வணங்கினார்.

ஞானிகளிடம் தவறான வழியில் வருமானம் வர வேண்டினால் அவர்கள், நம் கைகொண்டு நம் கண்ணை குத்துவதுபோல், நம் உள்ளத்தில் நல்ல எண்ணங்களை உற்பத்தி செய்து, நல்வழி காட்டுவார்கள்.

இப்படி சுவாமிகள் நடமாடும் சமயம் பில்லூர் பச்சையப்ப நையனார், துரைசாமி முதலியார், கலசப்பாக்கம் தங்கவேலு நையனார், மாணிக்கநையனார் போன்ற அன்பர்கள், சுவாமி இருக்கும் இடம் தேடி கண்டுபிடித்து சுவாமிக்கு, அன்னமளித்து வந்தனர்.

கலசப்பாக்கம் வெள்ளையன் என்பவர் தினம் இரவில் சுவாமி இருக்குமிடம் தேடி உணவு கொடுத்து வந்தார். சுவாமிகள் கலசப்பாக்கம் ஈசுவரன் கோயில் வெளியே கீழே கிடக்கும் கல் தூணில் போய் படுத்துக் கொள்வது வழக்கம். ஒரு நாள் வெள்ளையன் சுவாமிக்கு ஆகாரம் எடுத்துக் கொண்டு இரவு 9 மணி அளவில் கலசப்பாக்கம் ஈசுவரன் கோயிலை அடைந்தார். சுவாமி ஈசுவரன் கோயில் கீழே கிடக்கும் கல்தூணில் படுத்திருப்பது, அன்று வெள்ளையன் கண்ணுக்கு தூண் மீது ஒரு புலி படுத்திருப்பதைக் கண்டு பயந்து ஓடி வந்து விட்டார். இந்த சம்பவம் கலசப் பாக்கம் ஊர் முழுவதும் பரவி சுவாமி ஓர் தேவ புருசர் என்று உணர்ந்தனர்.

பல மகிமைகளும் பல பெருமைகளும் வாய்ந்த திருவண்ணாமலை அருணாசல ஈசுவரன் பிரதி ஆண்டு தைத்திங்கள் அமாவாசை கழிந்த ஏழாம் நாள் சப்தமி திதியில் ரத சப்தமி அன்று கலசப்பாக்கம் செய்யாற்றை வந்து அடைந்து தீர்த்தவாரி விழா விமரிசையாக நடைபெறுவதை ஏற்றுக் கொள்கிறார்.

சிலா ரூபத்தில் வந்த அருணைவாழ் அண்ணாமலையாரே மானிட உருவம் கொண்டு கலசப்பாக்கம் செய்யாற்றை அடைந்து சித்தம் தடுமாறிய உருவில் சித்த மகா புருசராக தோன்றி ஒரு அழுக்கு மூட்டையை தன் கக்கத்தில் வைத்துக் கொண்டு பல சட்டைகளை ஒன்றன் மீது ஒன்றாக அணிந்து கொண்டு உலக மாந்தர்கள் நன்மையைக் கருதி மானிட உருவில் வந்த மகானே நம் பூண்டி ஆற்று சுவாமிகள் ஆவார்.

ஈஸ்வரன் யோகியர்களுக்கு யோக நிலை தந்தும் போகம் வேண்டியவர்கள் போக நிலை தந்தும் ஆசீர்வதிப்பார். அதுபோல் யோக நிலை பயிலும் யோகியர்களுக்கு யோக நிலையைப் புகட்டவும், போக நிலை வேண்டியவர்களுக்கு போக (குடும்ப வாழ்க்கை) நிலையை புகட்டவும் மானிட உருவம் தாங்கி வந்த அருணாசல சித்தேவரனே நம் பூண்டி மகான் ஆற்று சுவாமிகள்.

ஸ்ரீ பூண்டி மகான் ஆற்று சுவாமிகள் பிரதி வருடம் அண்ணாமலை யாருக்கு செய்யாற்றில் எங்கு அபிடேகம் ஆறாதனை நடைபெறுகிறதோ அங்குதான் முதன் முதலில் காணப்பட்டார் என்று பில்லூர், கலசப்பாக்கம் மேட்டுப்பாளையம் வாழும் வயதானவர்கள் கண்டதாகக் கூறுகின்றனர்.

சுவாமி நடமாடிக் கொண்டு இருக்கும்போது பெரும்பாலும் சப்பாத்திப்பழம் கலசப்பாக்கம் செய்யாற்று மணலைத் தான் உணவாக உண்பார். அப்போது கலசப்பாக்கத்தைச் சேர்ந்த கோபால் நயினார், கைலாச நாயுடு ஆகிய இருவரும் சுவாமி எங்கு இருக்கிறார் என்று தேடி கண்டு பிடித்து உணவு ஊட்டுவார்கள்.

அப்படித் தேடிக் கண்டு பிடிக்க இருவரும் கலசப்பாக்கம் ஆற்றிலும், மேட்டுப்பாளையம் குண்ணடிமேடு, கலசப்பாக்கம் சந்தைமேடு எல்லாம் தேடி சுவாமி கிடைக்காமல் சேர்ந்து போய் விட்டனர்.

அவர்கள் இருவரும் மேட்டுப்பாளையம் ஆற்றுக் கால்வாயில் உள்ள நாகதாளி முட்புதரின் சமீபம் அமர்ந்து கொண்டு 'என்ன ஆச்சர்யம், சுவாமியை இங்கு பார்த்தேன்,அங்கு பார்த்தேன் என்று கூறுகிறார்கள். நம் கண்ணுக்கு அவர் புலப்படவில்லை. எங்கு தான் போயிருப்பார்' என்று பேசிக்கொண்டு அமர்ந்திருந்தனர். அந்தநேரம் இவர்கள் அமர்ந்திருந்த கால்வாய்க்கரையை ஒட்டி ஒரு கருநாகம் அமைதியாகச் சென்று நாகதாளி முட்புதரில் போய் விட்டது.

இவர்கள் இருவருக்கும் பயம் வந்து நாம் இன்று சுவாமியைப் பார்க்க முடியாது. ஊருக்குள் போய்விடுவோம் என்று பேசிக்கொண்டிருந்தனர்.

அப்போது நாகதாளி முட்புதரில் புஸ்! புஸ் என்று சத்தம் கேட்க இவர்கள் பயந்து கொண்டு நாகதாளி முட்புதரைப் பார்த்தனர். என்ன அதிசயம்! சுவாமி முட்புதரில் மத்தியில் அமர்ந்து கொண்டிருக்கிறார். இவர்கள் முட்புதர் உள்ளே செல்ல முடியாதபடி புதர் மண்டி கிடைக்கிறது.

பிறகு ஆடு மேய்க்கும் பையன்களை கூப்பிட்டு ஆட்டுத் துறடு கொண்டு நாகதாளி முட்புதரை ஒரு நபர் செல்லும் அளவிற்கு வழிசெய்து உள்ளே

சென்று சுவாமிக்கு வலுக்கட்டாயமாக உணவை ஊட்டினார்கள். அவ்விடம் நாகதாளி பழத்தோல்கள் நிறைய சிதறியிருப்பதைக் கண்ட அன்பர்கள், 'சுவாமி தினம் நாங்கள் உங்களுக்குத் தேவையான உணவைக் கொண்டு வந்து ஊட்டி விடுகிறோம். இந்த நாகதாளிப் பழம் சாப்பிடுவதை விட்டு விடுங்கள்' என்று கூறினார்கள்.

அதற்கு சுவாமிகள் 'அது தேவ உணவப்பா! நீங்க போய் வாங்க!' என்று மட்டும் கூறிவிட்டார். வந்த அன்பர்கள், 'சுவாமி, சற்றுமுன் பெரிய கருநாகம் இந்த புதருக்குள் வருவதை நாங்கள் கண்டோம். அதனால் இந்த இடம் வேண்டாம் எங்களுடன் வந்து ஆற்று மணலில் உட்கார்ந்து கொள்ளுங்கள்' என்று கூறினார்கள். அதற்கு சுவாமி, 'ஒரு கருநாகம் இல்லை. பல கருநாகம் உள்ளது. ஆனால் அவைகள் நல்லவைகளப்பா! நீங்க பயமில்லாமல் போய் வாங்க!' என்று கூறிவிட்டார்கள்.

சுவாமியின் தவ வலிமையை உணர்த்த இந்த சம்பவம் ஒரு எடுத்துக்காட்டு ஆகிவிட்டது. இது கலசப்பாக்கம், மேட்டுப்பாளையம், பில்லூர் போன்ற அருகில் உள்ள கிராமங்களில் பரவி சுவாமி ஒரு தேவ புருசர் என்று உணர்ந்து, பல புண்ணிய ஆன்மாக்கள் உணவு கொண்டு சென்று ஊட்டினார்கள். சுவாமி ஒரு இடத்தில் உட்கார்ந்தால் பலநாள் அப்படியே இருப்பார். நடக்க ஆரம்பித்தால் தொடர்ந்து நடமாடிக் கொண்டேஇருப்பார்.

கலசப்பாக்கத்தில் மாணிக்க நையனார், தங்கவேலு நையனார் இருவரும் சகோதரர்கள், வசதி படைத்த குடும்பம். அந்த நாட்களில் கிராமங்களில் பகலில் அரிசி சாதம் கிடையாது. பெரும்பாலும் கேழ்வரகு கூழ்தான், பகல் உணவாக இருக்கும். சிறு குழந்தைகளுக்கு அரிசி சாதம் தேவை என்பதால் கலசம் பாக்கம் பக்கமுள்ள கிராமங்களில் உள்ளவர்கள் அனைவரும் குழந்தைகளுக்கு சாதம் வேண்டி மாணிக்க நையனார் வீட்டிற்கு வருவார்கள். அந்த அளவிற்கு வசதி படைத்த குடும்பம் மாணிக்க நையனார் குடும்பம்.

இப்படி வசதியுடன் வாழ்ந்து வந்த மாணிக்க நையனார், தங்கவேல் நையனாருக்கு இரவு உணவு அந்த பக்கமுள்ள ஆற்றின் கரையோரமுள்ள நிலத்திற்கு எடுத்துச் சென்று கொண்டிருந்தார். அப்போது மாணிக்க நையனார், கீழ்க்கண்ட மாணிக்கவாசக சுவாமிகள் திருவாசகப் பாடல்களைப் பாடிக்கொண்டு சென்றார்.

"அன்றே எந்தன் ஆவியும் உடலும் உடமை எல்லாம்
குன்றே அனையாய் என்னை ஆட்கொண்டபோதே
கொண்டிலையோ
இன்று ஒரு இடையூறு எனக்குண்டோ எண்தோள்
முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழைசெய்வாய் நானோ இதற்கு நாயகமே!
அம்மையே அப்பா ஒப்பிலாமணியே அன்பினில்
விளைந்த ஆரமுதே

பொய்மையே பெருக்கிப் பொழுதினை சுருக்கும் புழுத்தலைப்
புலையோன் தனக்குச்
செம்மையேயாய சிவபதம் அளித்த செல்வமே சிவபெருமானே
இம்மையேஉன்னைச் சிக்கெனப் பிடித்தேன் எங்கெழுந்
தருளுவ தினியே!

பால்நினைந் தூட்டும் தாயினும் சாலப்பரிந்துநீ பாவியா னுடைய
ஊனினைஉருக்கி யுள்ளொளி பெருக்கி உவப்பிலா ஆந்தமாய
தேனினைச்சொறிந்து புறம்புறந்திரிந்த செல்வமே
சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன் எங்கெழுந்
தருளுவ தினியே!

என்று மூன்று மாணிக்கவாசகர் திருவாசகப் பாடல்களை தினம் பாடுவதுபோல் பாடிக்கொண்டு ஆற்றின் அக்கரைக்குச் சென்றார்.

சுவாமியின் மகிமைகள்

அப்போது சுவாமிகள் அக்கரையில் உள்ள நர்கதாளி முட்புதரில் அமர்ந்து கொண்டு இருந்தார். அப்போது அவர் மாணிக்க நையனார் பாடி வந்த பாடல்களைக் கேட்டு "மாணிக்க வாசகா! உன் பாட்டு கேட்கும்போது நெஞ்சம் தித்திக்கிறதையா"! என்று கூறினார். மாணிக்க நையனார் புதரிலிருந்து பேசிய சுவாமியின் வார்த்தைகளைக் கேட்டுப் பயந்து விட்டார். சுவாமி மாணிக்க நைனாரைப் பார்த்து "பயப்படாதே, தைரியமாகப் போய் வா!" என்று கூறினார்.

மாணிக்க நைனார் அன்றிரவு தன் சகோதரருக்குக் கொண்டு சென்ற உணவை சுவாமிக்கு ஊட்டினார். அன்றையிலிருந்து மாணிக்க நைனார் அல்லது தங்கவேலு நைனார், சுவாமி இருக்குமிடம் தேடி உணவு அளித்து வந்தனர்.

மாணிக்க நைனார் சகோதரர் தங்கவேலு நைனார் மணிலா வியாபாரம் செய்து வந்தார். தங்கவேலு நைனார் ஒரு நாள் சுவாமிதன் வீட்டுத் திண்ணையில் அமர்ந்திருப்பதைக் கண்டு சுவாமிக்கு அன்னமிடப் போனார். அதற்கு சுவாமிகள் "இந்த ஆண்டு அதுவும் இப்போது மணிலா வியாபாரம் வேண்டாம்பா! அதை கூறத்தான் வந்தேன்" என்றார். தங்கவேலு நைனார் இதை பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. மறுநாள் மாணிக்க நைனார் சுவாமிக்கு உணவை எடுத்துச் சென்று வாயில் ஊட்டிக் கொண்டு இருந்தார். சுவாமிகள் அப்போது "தங்கவேலுவை மணிலா வியாபாரத்தை விட்டு விடச்சொல்" என்றார்.

ஆனால் தங்கவேலு நைனார் தொடர்ந்து மணிலா வியாபாரம் செய்து வந்தார். சுவாமியின் வாக்கை மீறி நூற்றுக் கணக்கான மணிலா காய் முட்டைகளை வாங்கி கல்சப்பாக்கம் ஆற்றங்கரையோரம் உலர்த்திக்

கொண்டிருந்த சமயம், திடீரென்று ஏற்பட்ட மழையின் காரணமாக, ஆற்றில் வெள்ளம் பெருகி கரையோரம் உலர வைத்திருந்த மணிலா காய் அத்தனை மூட்டைகளும் ஆற்று வெள்ளத்தில் அடித்துக் கொண்டு போய்விட்டது. பெரும் நட்டம் ஏற்பட்டு தங்கவேலு நைனார் சொத்துக்களை விற்று நட்டங்கள் ஈடு செய்யப்பட்டது. இதனால் மாணிக்க நைனார் தன் மனதில் சுவாமி ஒரு பெரிய தேவ புருசர் என்று உணர்ந்து அவருக்குத் தன் வீட்டில் தினம் அன்னமளித்து வந்தார்.

திரைபூலம் மூலம் ஆன்ம விளக்கம்

சுவாமிகள் நடமாடிக் கொண்டிருந்த சமயம், வில்வாரணியிலிருந்து, சுவாமியின் பக்தர் சுவாமியைத் தரிசனம் செய்ய கலசப்பாக்கம் வந்து சுவாமியைத் தரிசனம் செய்து விட்டு, “சுவாமி, கல்சப்பாக்கம் டூரிங் சினிமா கொட்டகையில் நல்ல சினிமா நடைபெறுகிறது, வாருங்கள்” என்று அழைத்துச் சென்றார். திரைப்படம் ஆரம்பம் ஆகியது. படம் திரையில் ஓடிக் கொண்டிருக்கிறது. ரசிகர்கள் தன் கதாநாயகனுடைய வீரதீரச் செயல்களுக்கு தன் விசிலின் மூலம் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டிருக்கின்றனர். ஆனால் சுவாமியை அழைத்துச் சென்ற அன்பருக்கோ ஒன்றுமே தெரியவில்லை. வெறும் வெண்திரை மட்டும் தெரிகிறது.

அந்த அன்பர் சுவாமியைப் பார்த்து, “என்ன சுவாமி, எல்லோரும் மகிழ்ச்சியாகத் திரைப்படம் பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள். எனக்கு மட்டும் வெறும் வெண் திரையாகத் தெரிகிறது” என்று கூறியபின் சுவாமியிடம் “உங்களுக்கு ஏதாகிலும் தெரிகிறதா?” என்று கேட்டார். அதற்கு சுவாமிகள்.

“விஞ்ஞானமும், மெய்ஞானமும் போட்டி
போட்டால் நான் என்ன செய்ய?”

என்று கூறி விட்டுத் திரை அரங்கை விட்டு எழுந்து கலசப்பாக்கம் ஆற்றை நோக்கிப் போய்விட்டார். வந்த அன்பரும் சுவாமியைப் பின்தொடர்ந்து ஆற்றை அடைந்தார். இருவரும் ஆற்று மணலில் அமர்ந்தனர். சுவாமியைப் பார்த்து அன்பர், “சுவாமி! எனக்கு மட்டும் படம் தெரியாததற்கு காரணம் என்ன?” என்று வேண்டினார்.

அதற்கு சுவாமிகள்:

“மனதை வெட்டவெளி யாக்கப்பா!
நல்லதெல்லாம் நாடி வரும்”

“பரிபாசை புரியவும் பக்குவம் வேணும்பா!”

“வந்த வேலையை விட்டுவிட்டு
பந்தக்காலை நாம் ஏன் பிடிக்கவேண்டும்”

என்று கூறிவிடடு எழுந்து போய்விட்டார்கள்.

ஞானிகள் தம் தவவலிமையால் மனதை அடக்கி அவ்விடம் ஒன்றுமில்லா வெட்ட வெளியாக்குகின்றனர். வெட்ட வெளி ஆகாயம் பிர்மம் உறையும் இடமாகும். அப்படி பரபிர்மத்துடன் ஒன்றிய நிலை ஞானிகள் நிலை. அதை அடைய வழியைப்பார் என்று கூறினார்.

எண்ணங்கள் உற்பத்தியாகும் இடம் மனம். எண்ணங்கள் புற உலகில் தன் விருப்பம்போல் சென்று தொல்லைகள் பலவற்றில் அகப்பட்டு மாயையில் சிக்கி அல்லல் படுகிறது. எண்ணங்களை உற்பத்தி ஆகும் மனதில் ஒடுக்கி விட்டால், மனம் தன்னால் ஒருநிலைப்பட்டு ஒடுங்கிவிடும். மனம் ஒடுங்கினால் அந்த இடம் வெட்டவெளியாகும். வெட்ட வெளியான சூன்யமான இடமே பரபிர்மம் உரையும் இடமாகும். இது மெய்ஞானிகளின் நிலையாகும்.

சினிமா கொட்டகையில் வெண்திரை ''ஆன்மா'' ஆகும் ஆன்மா சஞ்சலமற்று எந்தச் செயல்பாடும் இல்லாமல் ஆனந்த நிலையில் உள்ளது. ஆனால் மனம் என்னும் சினிமா படம் இயக்கும் (புரொஜெக்டர்) கருவியில் எண்ணங்கள் என்ற சினிமா பிலிமைப் போட்டால் அது திரையில் பல மாயா சாலங்களையும், காதல், சோகம், சண்டை, வீரதீர சம்பவங்களையும் காட்டுகிறது. ஆனால் திரை என்ற ஆன்மா எந்தவித செயல்பாடும் இல்லாமல் சும்மா இருக்கிறது. ஆனால் திரைதான் (ஆன்மா) சகலகாரியங்களையும் செய்வதுபோல் தோன்றுகிறது. ஆனால் அது செய்யவில்லை.

மனிதனின் ஆன்மாவும் துன்பங்களையும், ஆனந்தங்களையும் அனுபவிக்கவில்லை. அதை மனிதன்தான் அனுபவிக்கிறான். ஆன்மா சாட்சி பொருளாகச் செயல்பாடு இல்லாமல் தனித்து இருந்து பார்க்கும். ஆன்மாவை தன் உடலில் தனியே பிரித்துப் பார்க்கும் நிலை ஞானிகளின் நிலை.

இந்த ஆன்மாவைத் தம்மிடமிருந்து தனியாகப் பிரித்துப் பேரான்மாவிடம் சேர்ப்பதே ஞானியின் ஞான நிலையாகும்.

பிலிம் என்ற எண்ணங்களை மனம் என்ற படம் இயக்கும் கருவியில் இருந்து எடுத்துவிட்டால் பிறகு படம் ஓடுவது நின்று விடும். படம் நின்றுவிட்டால் வெட்டவெளி வெண்திரை தெரியும்.

மனம் ஒடுங்குதலே ஆன்மப் பயிற்சிக்கு மிக முக்கியம் என்பதை சுவாமிகள் தன் பரிபாஷையில் விளக்கினார்.

''மனமது செம்மையானால் மந்திரஞ் செபிக்க வேண்டாம்
மனமது செம்மையானால் வாயுவை வுயர்த்த வேண்டாம்
மனமது செம்மையானால் வாசியை நிறுத்த வேண்டாம்
மனமது செம்மையானால் மந்திரஞ் செம்மையாமே. – அகத்தியர்

சுவாமிகள் பரிபாஷையில்தான் பேசுவார்கள், நாம் தான் அதனின் உட்பொருளை உணரவேண்டும். ஞானிகளே சாதாரணமாக பரிபாஷையுடன் மறைமுகமாக இரண்டு ஒரு வார்த்தையுடன் நிறுத்திக் கொள்வார்கள். அதை ஆராய்ந்தால் ஞானப் பெரும் புதையல்கள் இருக்கும்.

எண்ணங்களின் ஒடுக்கமே சிதாகாசம் எனப்படும் வெட்ட வெளியாகும். வெட்டவெளி ஆகாயமே பரபிர்மம் உறையுமிடம் என்று ஞானிகள் கூறுகின்றனர். ஆன்மாவை பரபிர்மமான பர ஆன்மா (வெட்ட வெளி) விடம் ஒன்றிவிடும் நிலை ஞானிகள் நிலையாகும். வெட்டவெளி சிவன் உறையுமிடம். வெட்டவெளி சிவனுடன் சேர்ந்து விட்டால், சத்-சித்-ஆனந்தம் பேரின்ப பெருநிலையடைவதே ஞானிகள் நிலையாகும். இதை இடைக்காட்டுச் சித்தர் பாடுகிறார்.

"பாழ் வெளியை நோக்கிய தும்பீபற - மாயைப்
பற்றற்றோம் என்றேநீ தும்பீபற
வாழ்விடம் என்றெய்தோம் தும்பீபற - நிறை
வள்ளல்நிலை சார்ந்தோமே தும்பீபற

உலகப்பற்றை அறுத்து பாழ்வெளியாகிய வெட்டவெளி ஆகாயத்தில் பரபிர்மத்தைக் கண்டு அந்த பரபிர்ம நிலை அடைந்தோம் என்று பாடுகிறார். அப்படிப்பட்ட பரபிர்ம நிலை நம் பூண்டி மகான் ஆற்று சுவாமிகளின் நிலை.

"கற்றூணைப்போல் மனதைக்காட்டு மயிலே வரும்
காலனையும் தூரத்தில் ஓட்டு மயிலே
பாற்றுருவமே பாயுமயிலே - அகப்
பற்று சற்றும்இல்லாமற் பண்ணு மயிலே

பொறி ஐந்தும், புலன் ஐந்தும், அந்தக்கரணங்கள் நான்கும், மனம் ஒன்றும் ஆக பதினைந்தும் அடக்கி மனதை கல்தூணைப் போல் ஒரே நிலையில் நிறுத்த வேண்டும். பற்று சற்றுமில்லையானால் எமனையும் தூரமாக ஓட்டி விடலாம் என்று கூறுகிறார்.

"பெட்டியில் பாம்பெனப் பேய்மனம் அடங்க
ஓட்டியே ஊதுகுழல் - கோனே
ஓட்டியே ஊதுகுழல்"

பாம்பைப் பெட்டியில் போட்டு அடைப்பதுபோல் நம் அலை பாயும் பேய் மனதை அடக்கிவிட்டால், மனம் அடங்கினால், எண்ணங்கள் உதிக்காது. எண்ணங்கள் உதிக்காத இடம் வெட்ட வெளியாகும். அதுவே பரபிர்மம் உறையுமிடமாகும் என்று கூறுகிறார் இடைக்காட்டுச் சித்தர்.

ஒரே துணியில் வெண்திரை உள்ளது. ஆனால் அதில் பல சித்திரங்கள், ஆடல், பாடல் நடைபெறுகிறது. மலை, காடு, செடி, கொடி, நதி முதலியவை அனைத்தும் தோன்றுகிறது. ஆனால் இவைகள் அனைத்திற்கும் வெண்திரையே ஆதாரம்.

அதேபோல் இவ்வுலகில் சேதன (அசையும் பொருள்) அசேதனப் பொருள் (மலை, நதி, காடு) அனைத்திற்கும் ஆதாரம் பரபிர்ம சொருபமே. அதுவே வெட்டவெளி ஆகாயமாகும். அதுபோல் வெண்திரையும் வெட்ட

வெளியாக உள்ளது. மனதை அடக்கி யோகப் பயிற்சியானால் பரபிர்மத்தை அடைய வழி பார் என்று அந்த அன்பருக்கு தன் குறிப்பால் உணர்த்தினார்.

அற்புதக் காட்சி

திருவண்ணாமலையில் இரும்புச் சால், இரும்புக் குடம் செய்யும் நாட்டார் ஒருவர் தினம் தன்னுடைய இரும்புப் பட்டறை பணிமுடிந்தவுடன் திருவண்ணாமலையிலிருந்து கலசப்பாக்கம் வரை சென்று, கலசப்பாக்கத்திலிருந்து ஆற்றில் நடந்து 3 கி.மி. ல் உள்ள பழங்கோயில் என்ற ஊரில் கள் குடிக்கச் செல்வது வழக்கம். அப்படி செல்லும் சமயம் ஆற்றில் அமர்ந்திருக்கும் சுவாமிகளைக் கண்டு வணங்கி விட்டுப் போவார். சுவாமிகள் ஏதும் பேசாமல் மௌனமாக அந்த இருண்ட இரவில் ஆற்றில் யோகத்தில் இருப்பார்.

ஒரு நாள் வழக்கம்போல் கள் சாப்பிட திருவண்ணாமலையில் இருந்து கலசப்பாக்கம் இரவு 1 மணி அளவில் வந்து அங்கிருந்து கால்நடையாக செய்யாற்றில் இறங்கி, பழங்கோயில் நோக்கி நடந்து வந்து கொண்டிருந்தார்.

பூண்டி என்னும் கிராமத்திற்கும் கலசப்பாக்கம் என்னும் கிராமத்திற்கும் இடையில் ஆற்றில் இறங்கி நடந்து வரும் சமயம் அவர் கண்ட காட்சியை அவரே கூறுகிறார்:



பழங்கோயிலில் உள்ள ஈசுவரன் கோயிலில் சுவாமிகள் அமர்ந்திருக்கிறார்

"சுமார் 5, 6 வெள்ளை உடை தரித்த பெண்கள் கண்கள் கூசும் அளவிற்கு அந்த ஆடைகள் வெண்மை நிறம் கொண்டுள்ளது. வயது 16, 17 இருக்கும். ஒருவர் கையில் வெண்சாமரம், ஒருவர் கையில் பூமாலை, ஒருவர்

கையில் பால் குடம். ஒருவர் கையில் கங்கை நீர். இப்படி உள்ள தோற்றத்துடன் சுவாமிக்கு அபிடேக ஆராதனை செய்து கொண்டிருக்கிறார்கள். என் கண்களை என்னால் நம்ப முடியவில்லை தேவலோகப் பெண்கள் என்பார்களே அவர்கள் இவர்கள் தான் போலும் என்று நினைத்துக் கொண்டேன். நான் சுமார் 100 அடி தூரம் இருந்து இந்த அற்புதக் காட்சியைக் கண்டேன். ஆனால் என் உள்ளத்தில் பயம் குடிகொண்டு விட்டது. ஏன் என்றால் அப்போது கோடைக் காலம். காற்று இல்லாமல் சனங்கள் துன்பப்படும்போது நமக்கு மட்டும் இவ்வித பனிக்குளிர் காற்று வரக் காரணம் என்ன? மேலும் இப்படிப்பட்ட நறுமண வாசனையை இதுவரையில் நான் உணர்ந்தது கிடையாது. மணியோ இரவு 12; நான் ஓடிவிடலாம் என்று நினைத்தால் எந்தப் பக்கம் ஓடினாலும் ஒரே தூரம். கலசப்பாக்கம், பூண்டி, பழங்கோயில் எப்படி நோக்கி ஓடுவது என்று புரியாமல் பயத்தில் ஒரு நிமிடம் இந்த அற்புதக் காட்சியைக் கண்டேன்.

இப்படிப்பட்ட அற்புதக் காட்சி சுமார் 5 நிமிடம் தெரிந்தது. பிறகு அத்தனை தேவ மாதர்களும் என் கண்ணிலிருந்து மறைந்து விட்டனர். எனக்கும் பயம் அதிகமாகிவிடவே பூண்டியை நோக்கி ஓடிவிட்டேன். அன்று இரவு பூண்டியில் கழித்துவிட்டு மறுநாள் காலை சுவாமியைக் காண ஆற்றிற்குச் சென்றேன். சுவாமி இரவு எப்படி மௌனமாக இருந்தாரோ அப்படியே இருந்தார். நான் தூரநின்று வணங்கிவிட்டு வந்து விட்டேன்'' என்று கூறினார். இதற்கு என்ன பொருள் என்று கேட்டதற்கு அவர் ஏதும் கூற மறுத்து விட்டார். அது தேவ இரகசியம் என்றார். ஆனால் உடன் ஒரு பாடலையும் பாடிவிட்டு மேற்கொண்டு பேச மறுத்து விடடார்:

1. அஞ்ஞானம் போயிற்று என்று தும்பீபற - பர
மானந்தங் கண்டோம் என்று தும்பீபற
மெய்ஞ்ஞானம் வாய்த்ததென்று தும்பீபற - மலை
மேலேறிக் கொண்டோம் என்று தும்பீபற

2. அல்லல்லலை இல்லை யென்றே தும்பீபற - நிறை
ஆணவங்கள் அற்றோம் என்றே தும்பீபற
தொல்லைவினை நீங்கிற்று என்று தும்பீபற - பரஞ்
சோதியைக் கண்டோம் எனத் தும்பீபற

என்ற இரு இடைக்காட்டுச்சித்தர் பாடல்களைப் பாடிவிட்டு மேற்கொண்டு, அவர் பெரிய தேவ புருசர்; இதற்கு மேல் நான் ஒன்றும் கூறமாட்டேன் என்று கூறிவிட்டார்.

சுவாமிகள் இந்த விதமாக ஒரு அழுக்குமுட்டையுடன் நடமாடும்போது சுவாமியின் மகிமைகள் தெரிந்தவர்கள் அன்னார் எங்கு இருக்கிறார் என்று தேடிக் கண்டுபிடித்து அன்னம் கொடுப்பார்கள். பெரும்பாலும் சுவாமிகளுக்குக் கையால் ஊட்டினால்தான் சாப்பிடுவார்கள். ஒருசில சமயம் வாயில் கோலை விட்டு வாயை நீக்கிய பிறகு சாப்பாடு ஊட்டுவார்கள்.

பலநாள் அன்ன ஆகாரமில்லாமல் இருப்பார்கள். பெரும்பாலும் சுவாமி களின் வாயை நீக்கி வலுக்கட்டாயாமாக அன்னமிட்டவர்கள் ஏராளம். ஞானிகள் நான்கு விதமானவர்கள் அவர்கள்: 1. பிரம்மவித்து 2. பிரம்மவரியன் 3. பிரம்மவரயன் 4. பிரம்மவரிட்டன்.

பிரம்ம வித்து : மனதை எந்தவித உலக விசயங்களில் பற்றுதல் இல்லாமலும் விருப்பு, வெறுப்பு, காமம், கோபம், மதம், மாச்சரியம் இன்றி இறைவன் ஒருவன் என்று உணர்ந்து மனதில் எந்தவித விசயங்களையும் நில்லாது இருப்பவர். உலகத்தோடும் இல்லறத்தில் இருக்கும் ஞானி, தாமரை இலைத் தண்ணீர்போல் உலகாருடனும் நம் குடும்பத்தாருடனும் இருப்பவர் பிரம்மவித்து.

பிரம்ம வரயன் : இல்லறத்தில் இல்லாமலும் துறவியாய் ஞானம் பெற்று சமாதி நிலையில் இருப்பவர் எப்போதும் உள்தவத்தில் அகத்தவத்தில் சமாதி கூடியிருப்பவர் தேவையானபோது சமாதிநிலையினின்று பகிர் முகப்பட்டு அன்னியரிடம் கேட்டும் அவர்கள் கொடுத்த உணவை உண்ணும் ஞானி பிரம்ம வரயன்.

பிரம்ம வரியன் : யோக நிலையில் சமாதி கூடியிருந்த போதிலும் சமாதியிலிருந்து புற உலகில் வந்த போதும், யாரையும் எதையும் கேட்பது மில்லை. கொடுத்தால் மட்டும் வாங்கிச் சாப்பிடும் ஞானி பிரம்மவரியன்.

பிரம்ம வரிட்டன்: புற உலகை மறந்து எப்போதும் அக உலகில் சமாதியில் இருப்பார்கள். தானும் அன்னியரை எதையும் கேட்க மாட்டார்கள். அன்னியர்கள் எதைக் கொடுத்தாலும் வாங்கமாட்டார்கள். நம் சுவாமி அன்னியர் வலியவந்து வாயைத் திறந்து ஊட்டினால் சாப்பிட்டார்கள். இவர்களை சீவன் முக்தர் என்பர்.

சுவாமி ஞானிகளிலும் உயர்ந்தவர் என்று தெரிகிறது. விருப்பு, வெறுப்பு அற்ற ஞானி, வேண்டும் வேண்டாம் என்ற தன்மை அற்ற ஞானி, பிறப்பு, இறப்பு அற்ற பெரிய பொருள். ஞானப்பழம், கருணைக்கடல், ஞானக்கடல் என்று கூறுவார்கள்.

இரும்பைத் தங்கமாக்கியது

முக்காலமும் உணர்ந்த மெய் ஞானிகளின் வாக்கை, தேவ வாக்காகக் கொள்ள வேண்டும். அவர்கள் மூன்று காலங்களையும் உணர்ந்தவர்கள். நடந்தது, நடப்பது, நடக்கப்போவது யாவையும் அறிந்தவர்கள். அவர்கள் சாதாரணமாக கூறும் வார்த்தைகளில் பெரிய பொருள் அடங்கியிருக்கும். முக்காலத்தையும் உணர்ந்து பித்தம் பிடித்தவர்கள்போல் காட்சியளிப் பார்கள்.

சுவாமியின் மகிமையைக் கேள்விப்பட்டு சென்னையிலிருந்து ஒரு அம்மாள் சுவாமியைக் காணக் கலசப்பாக்கம் வந்தார். வரும் சமயம் வழியில் சில கயவர்கள் அந்த அம்மாவை மிர ்டி, காதில் இருந்த கம்மல், மூக்குத்தி போன்ற பொன் நகைகளை அபகரித்துக் கொண்டனர்.

சென்னையில் இருந்து வந்த அந்த மாது சுவாமியை ஆற்றில் கண்டு அவர் காலில் விழுந்து, "சுவாமி! நான் தங்கள் தரிசனத்திற்கு வந்து என் நகைகளைப் பறிகொடுத்து விட்டேன். என் கதி இப்படியா நடக்க வேண்டும்" என்று கூறி அழுதார். இதை மௌனமாக கேட்டுக்கொண்டிருந்த சுவாமிகள், "தரித்திரம் போகட்டும், கவலைப் படாதே! கலசப்பாக்கத்தில் மாணிக்கம் இடம் சென்று ஒரு இரும்புக் கம்பி கொண்டு வா!" என்று கூறினார்.

அந்த அம்மாள் கலசப்பாக்கம் சென்று மாணிக்கம் வீட்டைக் கண்டு சுவாமி இரும்புக் கம்பி கேட்டார் என்று கேட்டு வாங்கி வந்தார். அந்த அன்பர் அந்த அம்மாவைப் பின் தொடர்ந்து வந்து ஆற்றில் ஒரு ஓரமாக என்ன நடக்கிறது என்று கவனிக்கத் தொடங்கினார்.

சுவாமிகள் அந்த அம்மாள் கொண்டு வந்த இரும்பு கம்பியை வாங்கி மேலும் கீழும் இரண்டு முறை பார்த்துவிட்டு அந்த அம்மாளிடம் திருப்பிக் கொடுத்துவிட்டார். அந்த அம்மாள் அதை வாங்கிப் பார்த்தால் பல ஆயிரம் மதிப்புள்ள தங்கமாக மாறியிருந்தது. "உடனே வீடு போய்ச்சேர்" என்று கூறி விட்டு சுவாமிகள் ஆற்றை விட்டு எழுந்து போய்விட்டார். இதையெல்லாம் மறைந்து இருந்த பார்த்த அந்த அன்பருக்கு தங்கத்தின்மேல் ஆசை வந்துவிட்டது.

அந்த அன்பர் உடனே வீட்டிற்குச் சென்று ஏர் உழும் கார் கம்பியைக்கொண்டு வந்து சுவாமியிடம் கொடுத்து அதைத் தங்கம் செய்து கொடுக்குமாறு சுவாமியைக் கேட்டார். அதற்கு சுவாமிகள் :

"மனம் பழுத்தால் பிறவி தங்கம்
மனம் பழுக்காவிட்டால் பிறவி பங்கம்"

என்று கூறிவிட்டார்.

அந்த அன்பர் சுவாமியை விடுவதாக இல்லை. சில நண்பர்களுடன் சுவாமியை மேட்டுப்பாளையம் குண்ணடிமேட்டில் வைத்து அடிக்க முயன்றனர். சுவாமிகள் உடனே "முருகா! முருகா!" என்று மூன்று முறை கூப்பிட்டார். அந்த இரவு நேரம் எங்கோ இருந்து ஒரு பெரிய மயில் பறந்து வந்து அந்த அன்பரையும் அவருடன் சென்ற அன்பர்களையும் கொத்தவந்தது. இதைக் கண்டவுடன் அவர்கள், கலசப்பாக்கம் நோக்கி கை, கால் உடைய ஓடி வந்துவிட்டனர்.

அந்த அன்பர் சுவாமியின்மேல் வஞ்சம் வைத்து விட்டார். நாம்இவ்வளவு நாள் உணவு கொடுத்து வந்தோம், நமக்குத் தங்கம் செய்து கொடுக்கவில்லை. நேற்று வந்த யாரோ ஒரு பெண்ணிற்குத் தங்கம் செய்து கொடுத்தாரே, இவரைச் சும்மா விடக்கூடாது என்று உள்ளே எண்ணிக் கொண்டார்.

ஒரு நாள் தன்னுடன் போளூரில் உள்ள தன் நண்பர்களுடன் சுவாமியை மாட்டு வண்டியில் ஏற்றிக் கொண்டு மல்லவாடி என்ற காட்டில் சொரகொளத்தூர் என்ற ஊரின் சமீபமுள்ள காட்டில் கொண்டு போய் தங்கம் செய்ய வழி முறைகளைச் சொல்லிக் கொடுக்கச் சொல்லி சுவாமியை

வற்புறுத்தினார். சுவாமி மௌனமாக இருந்தார். சுவாமியின் கை விரல்களை ஒரு கல்லின் மேல் வைத்து நசுக்கப் போனார்கள். அப்போதும் சுவாமிகள்,

"தங்கத்தை எண்ணி பங்கம் போகாதே!
தங்க இடம் பாரப்பா!"

என்று கூறினார். மேலும் அவர்கள் துன்புறுத்த "நாசம்! நாசம்!" என்று சுவாமிகள் கூறினார்கள்.

"மகானை பகைத்தால் மண்ணும் மாய்ந்து விடும்"

என்றார்.

வந்த போளூர் அன்பர்களில் ஒருவர் தன் மடியில் வைத்திருந்த கத்தியை தங்கம் செய்ய வழிசொல்லாவிட்டால் கொன்று விடுவதாக மிரட்டிக் கத்தியை ஓங்கினார். அப்போது சொரகொளத்தூர் காட்டில் திடீரென்று ஒரு பயங்கரமான புலி அவர்கள் முன்தோன்றி உறுமி ஆரம்பித்தது. அந்த அன்பரும் அவருடன் வந்த அன்பர்களும் சுவாமியை சொரகொளத்தூர் காட்டில் விட்டுவிட்டு கலசப்பாக்கம் நோக்கி ஓடி வந்துவிட்டார்கள்.

கலசப்பாக்கம் காக்கங்கரை வினாயகர் கோயில் சமீபம் இவர்கள் இரவு 1 மணி அளவில் ஓடிவந்து கொண்டிருந்தபோது இவர்களுக்கு முன் வண்டிமாடும், சுவாமியும் கோயில் சமீபமிருக்கக்கண்டு அதிர்ச்சியை அடைந்தனர்.

மேலும் தங்கத்தின்மேல் ஆசை கொண்ட அன்பர் சுவாமியை வெட்டிவிடவேண்டும் என்று எண்ணிக் கொண்டிருந்தார்.

ஒருநாள் இரவு சில நண்பர்களுடன் தங்கத்தின் மேல் ஆசை கொண்ட அன்பரும் கலசப்பாக்கம் ஆற்றில் உள்ள சுவாமியை தீர்த்துக் கட்டிவிட வேண்டியது என்று எண்ணி, சுவாமியிடம் நெருங்கினார்கள். ஆனால் அவர்கள் கண்ட காட்சி, சுவாமியின் தலை வேறு, முண்டம் வேறு, கை கால் வேறாக இருக்கக் கண்டு ஊரை நோக்கி ஓடி வந்து விட்டனர். தமக்கு முன் யாரோ சுவாமியைக் கொன்று விட்டிருப்பதாக எண்ணிக் கொண்டனர்.

ஆனால் மறுநாள் காலை வழக்கம்போல் சுவாமிகள் கலசப்பாக்கம் தெருவில் மூட்டையுடன் நடமாடுவதைக் கண்ட அன்பர்கள், ஐயோ! இவர் பெரிய சித்த மகா புருசர். இவரைக் கொல்ல நினைத்தோமே என்று எண்ணி வருந்தினார்கள் இந்த சம்பவம் ஊர் முழுவதும் பரவி சுவாமியின் மகிமை வெளிவரத் தொடங்கியது.

கை வேறு, கால் வேறு ஆகச்செய்த காட்சி

சுவாமிகள் அந்த அன்பர்களை பயமுறுத்த அப்படிச் செய்யவில்லை. ஹடயோகத்தில் கை வேறு, கால் வேறு செய்வது, 'சொருப சித்து' என்று பெயர்.

கலசப்பாக்கம் தங்கவேலு நைனார், சண்முக நைனார் நாரதாம் பூண்டி மேஸ்திரி, ஆகியோர் ஆற்றில் இருக்கும் சுவாமிக்கு சாப்பாடு கொண்டு

சென்றனர். சுவாமிகள் காக்கங்கரை வினாயகர் கோயிலுக்கு கிழக்கே இருக்கும் சுடுகாட்டில் இருப்பதாக அறிந்து அவ்விடம் வந்தனர். சுவாமிகள் கை வேறு, கால் வேறு முண்டம் வேறாக காட்சியளித்தனர்.

தங்கவேறு நைனார் பயப்படாமல் அந்தந்த அவயவங்களை மும்முறை வலம் வந்தார். பிறகு, தெற்குப் பக்கம் தலை வைத்து வடக்கே காலை நீட்டி கீழே வீழ்ந்து வணங்கினார். வலது, இடது கால்கள் கூடின. பிறகு கிழக்கே தலையை வைத்து மேற்கே காலை நீட்டி கீழ் வீழ்ந்து வணங்கினார். தோள் பட்டையும், தலையும் சுவாமியின் உடலோடு கூடின.

அப்போது சுவாமிகள் தங்கவேலு நைனாரைப் பார்த்து "ஏன் இப்படி திடீரென்று வந்தீர்கள். உத்தரவு இல்லாமல் வந்தால் ஆபத்து. காலம் நேரம் கண்டு வரவேண்டும்" என்று கூறினார். நைனார் சுவாமியின் கால்களில் வீழ்ந்து வணங்கி 'சுவாமி, உணவு தயாரிக்க நேரம் ஆகிவிட்டது. இனி அப்படி வரமாட்டேன்" என்றும், தன்னையும் தன்னுடன் வந்தவர்களையும் மன்னிக்கும் படி கூறினார்.

ஞானிகள் பலவித யோகங்களைக் கையாளுகின்றனர். அதில் தன் அவயவங்களை தனித்தனியே பிரித்து அவைகளைத் தானே காணுதல் ஹடயோகத்தின் ஒரு கூறாகிய "சொரூப சித்து" என்று பெயர். நம் பூண்டி சுவாமிகள் சொரூப யோகம் பயிலும் சமயந்தான் தங்கத்தின்மேல் பற்றுக்கொண்ட அன்பர்களும் போக நேர்ந்தது. இவர்களை பயமுறுத்த சுவாமிகள் அப்படிக் காட்சி கொடுக்கவில்லை. மேலும் அப்படிப்பட்ட சொரூப காட்சி காண்பவர்கள் பெரும் புண்ணியம் செய்து இருந்தால்தான் காண முடியும்.

போக மகரிசி சொரூப சித்தைப்பற்றி தன் "போகர் 7000" என்ற நூலில் "யூகி முனிவர்' அடிக்கடி செய்வார் என்று கூறுகிறார்.

வேறாகத் தானிருந்த வண்ணம் சொல்வேன்
வேண்டியே கைவேறாய்க் கால்வேறாய்
நேராக வுடல்வேறாய்த் தலைவேறாய்
நேர்மையுடன் பூமிதனிலிருந்து சித்து
சீராக லோகமதில் அனேகங் கூத்துச்
சிறப்புடனே யாடினது மெத்தவுண்டு
பாராமல் கேட்டவரும் பார்த்தோருண்டு
பாரினிலே அதிசயங்கள் மெத்தத்தானே!

தானான அதிசயங்கள் சாற்ற கேளும்
தகைமையுள்ள குருபரனார் வித்தைகோடி
தேனான நூல்கள் முதல் யாவும் தேர்ந்து
தெளிவுறவே யோக முதல் உளவுகற்று

கோனான எனது ஐயர் காலாங்கிநாதர்
குருபரனார் அருளுடனே பாசங் கொண்டார்
வேனான வெகு சித்து சொரூப சித்து
வெளியான நாதவொளி வதீதமாமே! - 'போகர் 7000'

இந்த மகத்தான 'சொருப சித்து' சுவாமிகளால் பல முறை செய்யப்பட்டுள்ளது. அப்போது பல அன்பர்கள் இதைக் கண்டு பயந்து விட்டனர். ஞானி ஒருவர் சொருப சித்தாடும்போது அவர்களைக் கண்டால் நமக்கு மறுபிறவி என்பதே கிடையாது என்ற ஞான நூல்கள் கூறுகிறது. அதைக் கண்ட அன்பர்கள் அனைவரும் புண்ணியவான்கள் ஆவார்கள்.

பூண்டி மகான். ஞானத்தின் பெரிய நிலையை அடைந்தவர். அவரே பெரிய ஞானத் தங்கம். அவரிடம் போய் தங்கம் செய்யச் சொன்னால் அது மூடர்களின் செயல் ஆகும். அவரைத் தரிசனம் செய்த போதே நம் பாவங்கள் அத்தனையும் நெருப்பில் இட்ட பஞ்சு போல் பொசுங்கி விடும். பிறகு நமக்குத் தங்கம் எதற்கு? நமது பிறவியே தங்கமாகும்.

நாம் ஒரு மகானையோ, ஆண்டவன் சந்நிதானத்திற்கோ சென்று தரிசிக்கும்போது, நமக்கு இது வேண்டும், அது வேண்டும் என்று கேட்க கூடாது. நமக்கு என்ன கொடுத்தால் நாம் தாங்குவோம் என்று அவர்களுக்குத் தெரியும். அவர்கள் தரிசனம் ஒன்றே போதும் என்று வந்துவிட்டால் நமக்கு எல்லா நன்மைகளும் தேடி வரும்.

"முக்கோணம் தன்னில் முளைத்த மெய்ஞானிக்கு
தங்கம் ஏதுக்கடி ஞானப்பெண்ணே தங்கமேதுக்கடி!
உச்சிக்கு மேற்சென்று உயர்வெளி கண்டவர்க்கு
தங்கம் ஏதுக்கடி ஞானப்பெண்ணே தங்கமேதுக்கடி!
தன்னை அறிந்து தலைவனைச் சேர்ந்தார்க்கு
தங்கம் ஏதுக்கடி ஞானப்பெண்ணே தங்கமேதுக்கடி

வாசியோகப் பயிற்சியில் ஞானி ஒருவர் இடக்கலை, பிங்கலை சுழிமுனை இம்மூன்றையும் புருவ நடுவில் சங்கமாக்கி ஞானப்பால் உண்ணும் ஞானிக்கு எதற்குத் தங்கம்? அவருக்கு மண்ணும் தங்கமும் ஒன்றே.

ஆறு ஆதாரங்களையும் அதற்குமேலே உள்ள ஏழாவது ஆதாரமாகிய சகசுராரத்தையும் கண்டு வெட்டவெளியைக் கண்ட ஞானிக்குத் தங்கமும் கல்லும் ஒன்றே!

தன்னுள் உரையும் பிரமத்தை கண்டு தன்னைத்தான் உணர்ந்து அந்த தலைவனாகிய பரபிர்மத்துடன் ஒன்றிய நிலையெய்திய மெய்ஞானிக்கு தங்கமும் இரும்பும் ஒன்றே. ஆண்டியும், அரசனும் அவர்களுக்கு ஒன்றே என்று நினைக்கும் ஞான நிலையெய்திய ஞானியைப் போய் இந்த அறிய உலகம் தங்கம் செய்யச் சொல்லுகிறது.

"நாலு தெருவிலே நாலுகம்பம்
நடுத்தெருவிலே பொன் கம்பம்போல்
விளங்கும் பொன்கம்பத் தினுக்கே
பூமாலைசூட்டி நின்றாடாய் பாம்பே!"

என்று பாம்பாட்டிச் சித்தர் தன் பாடலில் கூறுகிறார். ஞானிகள் தன் யோக பலத்தால் பிராணனை இடக்கலை, பிங்கலை, சுழிமுனை இவைகளை புருவ நடுவில் சங்கமித்து, அதற்குமேல் உள்ள கபால உச்சியில் பிரம்மரந்திரத்தில் கொண்டு சேர்த்து, ஒரே பிரம்மமாக ஒன்றிவிடும் தன்மையுள்ளவர்கள். அதை யோகியர் பொன்கம்பம் என்று வர்ணிக்கிறார்கள். அப்படிப்பட்ட பொன் கம்பமாகிய பிர்மநிலையை அடைந்த மெய் ஞானியைப் போய் தங்கம் செய்து தரச் சொன்னால், அது நம் அறியாமையின் சின்னமாகும்.

ஒரு மெய் ஞானியை நாம் தரிசிக்கும்போது பொன்வேண்டும் பொருள் வேண்டும் என்றுதான் இந்த அறியா மனம் கேட்கிறதே தவிர, அவர்களிடமுள்ள ஞான வைரங்களையும், ஞான மாணிக்கங்களையும் பற்றி அறியவும் கேட்கவும் நம் மனம் வேண்டுவதில்லை. குழந்தைகளின் நிலை நம் நிலை, அவர்களின் தரிசனமே நாம் செய்த பூசா பலன் என்று எண்ணி நாம் உணர வேண்டும். "சாது தரிசனம் பாவ விமோசனம்" என்று உணர வேண்டும்.

பூ உலக மாந்தர்களின் உள்ளத்தையும், உடலையும் பொன் மயமாக்க வந்த சித்த மகா புருசர் நம் பூண்டி மகான். அவர் தரிசனம் ஒன்றே போதும் என்று வந்துவிட்டால், நம் வாழ்க்கையில் எல்லா நன்மைகளும் நமக்கு வந்து சேரும் என்பதை நாம் உணர வேண்டும்.

சுவாமிகள் கலசப்பாக்கத்தில் நடமாடிக் கொண்டிருந்த சமயம், செய்யாற்றில் போய் படுத்து நிட்டை கூடி விடுவார். நாட்கணக்கில் இருந்த இடத்தைவிட்டு எழாமல், அன்ன, ஆகாரமில்லாமல் ஆற்றில் உட்கார்ந்து விடுவார்கள். பெரும் யோக நிலையில் இருப்பதால் யாரும் அவர் அருகில் போகப் பயப்படுவார்கள்.

ஆற்றுச் சுவாமிகள்

சுவாமிகள் கலசப்பாக்கம் ஆற்றில் நிட்டை கூடியிருக்கும் போது, 1943ஆம் ஆண்டு தமிழ் சுபானு வருஷம் வைகாசி மாதம் 12ந் தேதி, பெரு மழையின் காரணமாக, ஆற்றில் இருகரையும் தொட்டுச் செல்லும் அளவிற்கு வெள்ளம் பெருகி ஓடியது. சுவாமிகள் சுமார் மூன்று நாட்களாக ஆற்றில் கடும் நிட்டையில் இருந்து வருகிறார். கலசப்பாக்கத்தைச் சேர்ந்த அன்பர்கள் சுவாமி மழையில் நனையாவண்ணம் இருக்க ஏற்கனவே ஆட்டுக் கூண்டை மூடிவிட்டுச் சென்றிருந்தனர். ஆனால் அன்று இரவு பெரும் வெள்ளத்தின் காரணமாக ஆட்டுக் கூண்டு அடித்துக் கொண்டு போய் விட்டது.

மறுநாள் அன்பர்கள், இந்த பெரும் வெள்ளத்தைக் கண்டு, சுவாமியையும், ஆட்டுக் கூண்டோடு வெள்ளம் அடித்துச் சென்று

விட்டதாக எண்ணி விட்டனர். சுவாமி 'கூண்டோடு கைலாயம்' போய் விட்டதாக எண்ணி விட்டார்கள்.

மூன்று நாட்கள் கடந்து வெள்ளத்தின் சீற்றம் குறைந்து, வடிய ஆரம்பித்தது. சுவாமியை வெள்ளம் கொண்டு போய் விட்டதாகத் தீர்மானித்து விட்டனர். ஆனால் சுவாமி அமர்ந்து இருந்த ஆற்றில் மணலுக்கு மேல் முடி தெரியவே அன்பர்கள் ஒன்று கூடி, மணலை அகற்றி சுவாமியை வெளியே கொண்டு வந்தனர். பிறகு கலசப்பாக்கம் ஆற்றங்கரைக்கு சுவாமியை கொண்டு சென்று பந்தல் போட்டு அதில் அவரை உட்கார வைத்து, அபிடேகம், ஆராதனை செய்து மக்கள் மகிழ்ந்தனர். இவர் ஒரு தேவ புருஷர் என்று உணர்ந்தனர். ஆற்றிலிருந்து, மீட்டு வந்ததால் அவருக்கு 'ஆற்றுசுவாமி' என்று பெயர் இட்டு அழைக்கலானார்கள். அதற்கு முன் 'முட்டை சாமி' என்றும், 'அழுக்கு சாமி' என்றும் கூறி வந்தனர்.

போளூர், ஆற்காடு, ஆரணி, திருவண்ணாமலை போன்ற ஊர்களில் இருந்து அன்பர்கள் கலசப்பாக்கம் வந்து ஆற்றங்கரையில் பந்தல் போட்டு சுவாமியை அந்தப் பந்தலில் ஒரு இடமாக அமர வைத்தனர். அபிடேகம், ஆராதனை செய்தும் அன்னாருக்கு உணவு ஊட்டியும் மகிழ்ந்து வந்தனர்.

ஆனால் நாளடைவில் சுவாமி இருந்த பந்தலில் தட்டு வைக்கப்பட்டு அதில் அன்பர்கள் காசு போட ஆரம்பித்தனர். காசுகளும் சேரத் தொடங்கின. ஆனால் நம் பூண்டி சுவாமிகள், காசு சேருவதை விரும்பாமல், அந்த இடத்தை விட்டு எழுந்து, கலசப்பாக்கம் மேற்கே உள்ள தர்மராசா கோயில் திண்ணையில் போய் உட்கார்ந்து விட்டார். அங்கேயும் பக்தர்களின் அன்புத் தொல்லை தாங்காமல் காப்பாலூர், பழங்கோயில், பூண்டி போன்ற ஊர்களில் நடமாடத் தொடங்கி விட்டார். ஒரு இடமாக அமராமல் நடமாடிக் கொண்டிருப்பார். இரவில் ஆற்று வாய்க்கால், பூண்டி சுடுகாடு போன்ற இடங்களில் மௌனமாக அமர்ந்திருப்பார்.

மகான்களிடமும், பிரசித்தி பெற்ற கோயில் தலங்களிலும் பணம் பறிக்க, இப்படி ஒரு கூட்டம் சேர்ந்து விடுகிறது. அந்தக் கூட்டம், அவ்விடமுள்ள மகானின் ஞானநிலையை வெளி உலகம் அறிய ஒட்டாமல் செய்து விடுகிறது. மேலும் இவர்கள் பணம் பறிக்க மகானின் பெயரையும் அவர்கள் நிலையையும் பாழாக்கி விடுகின்றனர். நானும் பல மகான் சமாதி கோயில்களைக் கண்டு இருக்கிறேன். எங்கும் இப்படி ஒரு கூட்டம் இருக்கத்தான் செய்கிறது.

பக்தியினால் வரும் அன்பர்களும் தன் குறை நீங்கக் காணிக்கை என்ற பெயரில் ஏதாவது செய்துவிட்டுப் போய்விடுகின்றனர். அது நாளடைவில் உண்மை ஊழியனையுங்கூட கண் சாடை காட்டி மயக்கி விடுகிறது. அன்றாடத் தேவைக்குப் பணம் தேவைப் படுவதால் உண்மை ஊழியனுக்கும் அது ஒரு மயக்கத்தை ஏற்படுத்தி விடுகிறது. பணம் ஒரு கேடு கெட்ட விபச்சாரியின் தன்மை உள்ளது.

எண்ணங்கள் உற்பத்தி ஆகும் இடம் மனம். அதில் வேண்டும், வேண்டாம் என்ற நிலை - அறிவு. நான் என்று நினைப்பது அகங்காரம்.

எல்லா நினைவுகளையும் சேர்த்து வைத்திருப்பது சித்தம். இந்த நான்கு அந்தக்கரணங்களை அதாவது, மனம், அறிவு, அகங்காரம், சித்தம் இவைகளை இவைகளின் செயல்களிலிருந்து விருப்பு, வெறுப்பு, அற்ற தன்மையான வெட்டவெளி என்னும் உள்ளத்தில் இலயித்திருப்பது சமாதி ஆகும். சீவ பிரக்ஞையற்று எல்லாம் பரப்பிரமம் என்றிருப்பது நிர்விகற்ப சமாதி ஆகும். அப்படி நிர்விகற்ப சமாதி நிலையில் இருந்தவர் நம் பூண்டி சுவாமிகள்.

சுவாமிகள் இப்படியே நடமாடிக் கொண்டிருக்கும்போது, வில்வாரணி நட்சத்திரக் கோயில் வந்து சேர்ந்தார். இதைக் கிருத்திகை கோயில் என்றும் கூறுவர். இது பூண்டியிலிருந்து 3 கி.மீ தூரமும், போளூர் முதல் செங்கம் சாலையில் 13 கி.மீ தூரமும் உள்ளது. அந்தச் சிறிய குன்றின்மேல் வள்ளி தேவசேனா சமேத சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் உள்ளது. அடி வாரத்தில் அழகிய சரவணப் பொய்கை உள்ளது.

சுவாமிகள் அந்த சரவணப் பொய்கைக் கரைமீது ஒற்றைக் காலில் பலநாள் வெயிலையும் மழையையும் பொருட்படுத்தாது நின்றது நின்றபடியே யோக நிலையில் இருப்பார்கள். அப்படிப்பட்ட நாட்களில் சுமார் ஒரு வாரம் வரையிலும் அன்ன ஆகாரமில்லாமல் தவநிலையில் நின்றிருப்பார். அப்பவும் அந்த அழுக்கு மூட்டையை விடாமல் தன் தோளில் தொங்கியபடி வைத்திருப்பார். அதில் காலி தீப்பெட்டிகள், அழுக்குத் துணிகள், பீடி கட்டுகள் இருக்கும். போளூர் முதல் செங்கம் சாலையில் ஓரத்தில் நாட்கணக்கில் அன்ன ஆகாரமின்றி யோக நிட்டையில் அமர்ந்து விடுவார். அன்னம் கொடுக்க வரும் அன்பர்கள் வாயில் கோலை விட்டு நீக்கி உணவுகளை ஊட்டுவார்கள்.

1954-ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் பெருமழை ஒரு வாரமாகக் கொட்டித் தீர்த்து விட்டது. சுவாமிகள் மலை அடி வாரத்தில் உள்ள குளக்கரையில் ஒற்றைக் காலில் யோக நிலையில் நின்றவர் நின்றபடி அந்த ஒரு வாரமும் அப்படியே இருந்து விட்டார். மாடு, கன்று ஆடுகள் கூட ஒரு வார காலமாக மேய்ச்சலுக்கு வெளியே வர முடியாதபடி ஒரே அடைமழை பெய்து கொண்டிருக்கிறது.

பிறகு வானம் ஒரு வாரம் கடந்து திறந்தது. மாடு, ஆடு வெளியே வர ஆரம்பித்தன. அங்குள்ள நாவிதர் ஒருவரும், மேஸ்திரி ஆதிமூலம் என்பவரும் ஒரு வாரகாலமாக சுவாமியின் கதி என்னவோ! ஏதோ! என்று சுவாமி நின்றிருந்த இடத்தை நோக்கி வந்தனர். என்ன ஆச்சர்யம்! அவர் நின்றிருந்த இடத்தில் அவர்மீது ஒரு துளி கூட மழைத் தூறல் விழவில்லை. ஒரு வாரத்திற்கு முன்பு எப்படி இருந்தாரோ அப்படியே எந்தவித மாறுதல்களும் உடலிலும், உள்ளத்திலும் காண முடியவில்லை. மேலும் அவரைச் சுற்றி, 3 அடி வட்டத்திற்கு தரை சாதாரணமாகவே இருந்தது. இந்த நிகழ்ச்சி ஊர் பூராவும் பரவியது. சுவாமியின் மகிமை பரவத் தொடங்கியது.

வெளியூர்களிலும் குறிப்பாக சென்னை, வேலூர், ஆரணி, திருவண்ணாமலை, திருப்பத்தூர், செஞ்சி போன்ற ஊர்களிலிருந்து அன்பர்கள் வரத் தொடங்கினர்.

கடலாடி சிவானந்த முதலியாரும், காஞ்சி நாராயணசாமி முதலியாரும் சுவாமியைத் தேடி அவர் எங்கிருக்கிறாரோ அவ்விடம் போய் உணவை ஊட்டிவிட்டுத் தரிசனம் செய்துவிட்டு வருவது வழக்கம். ஒரு நாள் சுவாமிகள் நட்சத்திரக் கோயில் அடிவாரத்தில் ஆதிமூலம் மேஸ்திரி கொட்டகையில் உட்கார்ந்து இருந்தார். சிவானந்த முதலியார் உணவை ஊட்டச் சென்றார். சுவாமிகள் 'சாப்பிடலாம்! சாப்பிடலாம்! சாப்பிடலாம்!'' என்ற மூன்று முறை கூறிவிட்டு உணவை சாப்பிடவே இல்லை. அன்று இரவு முழுவதும் சுவாமிகள் நடமாடிக் கொண்டிருந்தார். காலை 4 மணி அளவில் கிருத்திகை கோயிலின் குளத்தில் தண்ணீர் குடித்துவிட்டு ஆதிமூலம் மேஸ்திரி கொட்டகையில் வந்து உட்கார்ந்தார். அன்று இரவு கல் மழை கொட்டியது. சிவானந்த முதலியாரைப் பார்த்து சுவாமிகள், 'நீங்கள் வராவிட்டால் எனக்கு சௌக்கியமாக இருந்திருக்கும். இப்படிப்பட்ட இரவு அகலா நேரத்தில் இனி வராதீர்கள்' என்று கூறிவிட்டு அந்த கொட்டும் கல் மழையில் புகுந்து சுவாமி எங்கோ மறைந்து விட்டார்.

ஒரு நாள் சுவாமிகள் கிருத்திகை கோயில் அடி வாரத்தில் உள்ள சந்தைமேட்டில் உட்கார்ந்து இருந்தார். ஒரு பெண், சுவாமி, மூன்று நாட்களாக அன்ன ஆகாரம் இல்லாமல் இருக்கிறாரே என்று, கேழ்வரகு கூழைக் கொண்டுவந்து சுவாமியிடம், கொடுத்தார். சுவாமிகள் ''வேண்டாம்மா! எனக்கு வேலூரில் இருந்து மூன்றுவித பதார்த்தங் களுடனும், வடையுடனும் எடுத்துக்கொண்டு வழி தெரியாமல் போளூரில் இருந்தார்கள். அவர்களுக்கு வழி சொல்லி விட்டு வருகிறேன். நீ போய் உன் குடும்பத்தைக் கவனி'' என்று கூறி விட்டார்.

சிறிது கடந்து ஒரு குடும்ப அன்பர்கள் சுவாமியைத் தேடி வந்து விட்டார்கள். அவர்கள் மூன்றுவித பதார்த்தங்களுடனும், வடையுடனும் சாப்பாடு கொண்டு வந்திருந்தனர். வந்த அந்த குடும்ப அன்பர்கள் இதற்குமுன் சுவாமியைப் பார்த்தது கிடையாது.

இவர்தான் ஆற்று சுவாமி என்று பார்த்துவிட்டு ஆச்சர்யம் அடைந்தனர். அவர்கள் சுவாமியைக் கண்டு ''ஏன் சுவாமி, ஒரு மணி நேரத்திற்குமுன் தாங்கள் எங்களுக்கு போளூர் பேருந்து நிலையத்தில் நட்சத்திரக் கோயிலுக்கு வழி சொன்னீர்கள். அதற்குள் எப்படி இவ்விடம் வந்து விட்டீர்கள்'' என்று கேட்டார்கள். சுவாமி மௌனமாக இருந்து விட்டார்.

கூழைக் கொண்டு வந்திருந்த பெண், வேலூர் அன்பர்களைக் கண்டு, ''என்னங்க, சுவாமிகள் மூன்று நாட்களாக இந்த இடத்தை விட்டு எழுந்திருக்காமல், மேலும் இரண்டு மணி நேரமாக அன்ன ஆகாரமின்றி இருக்கிறாரே என்று கூழ் சாப்பிட வேண்டிக் கொண்டிருக்கிறேன். அதற்கு அவர் எனக்கு வேலூரில் இருந்து மூன்றுவித பதார்த்தங்களுடனும் வடையுடனும் உணவு வருகிறது. அவர்களுக்கு போளூரில் வழி கூறிவிட்டு வருகிறேன் என்று சுவாமிகள் கூறிக்கொண்டிருக்கிறார் என்று அந்தப் பெண் கூறினாள்.

வந்தவர்களுக்கு ஒன்றுமே புரியவில்லை. நாமும் வடையுடன், மூன்றுவித பதார்த்தங்களுடன் சாப்பாடு கொண்டு வந்துள்ளோம் என்று

எண்ணி, இவர் பெரிய தேவ புருசராய் இருப்பார் போலும் என்று எண்ணி வணங்கி உணவை ஊட்டினர். இந்தச் சம்பவம் அன்று சந்தைக்கு வந்த மக்களுக்குப் பரவி விட்டது. கிராமம் முழுவதும் பரவி மேலும் சுவாமியின் மகிமை புரியத் தொடங்கியது.

சித்திரை மாதம் கோடை வெய்யில் கொடுமை அதிகமாக இருக்கிறது. சுவாமிகள் நட்சத்திரக் கோயில் அருகில் உள்ள தார் ரோட்டில், கிழக்கு, மேற்காக நடந்து கொண்டிருக்கிறார். இதைக் கண்ட அன்பர்கள் சுவாமியைப் பார்த்து "ஏன் சுவாமி, இந்த கடும் வெயிலில் இப்படி இரண்டு மணிநேரமாக கிழக்கு மேற்காக நடமாடிக் கொண்டிருக்கிறீர்" என்று கேட்டனர். அதற்கு சுவாமிகள்,

"எலுமிச்சம் சாதம் உடலுக்கு நல்லது,
எலுமிச்சம் ஊறுகாய் உடலுக்கு நல்லது,
ஒரே சந்தைக் கூட்டம்"

என்று கூறிக் கொண்டிருந்தார். அன்று மாலை திருப்பத்தூரில் இருந்து ஒரு தம்பதியினர் சுவாமியைக் காண வந்து அவ்விடம் உள்ளவர்களை விசாரித்தனர். சுவாமிகள் இதை மௌனமாகப் பார்த்துக் கொண்டிருக்கிறார். அங்கிருந்த அன்பர்கள் "அதோ உட்கார்நதிருக்கிறாரே, அவர்தான் நீங்கள் தேடிவந்த சுவாமிகள்" என்று சுவாமியைக் காட்டினார்கள். திருப்பத்தூர் தம்பதிகள் சுவாமியிடம் சென்று அவரைப் பார்த்ததும் பெரும் ஆச்சர்யம் அடைந்து விட்டனர்.

திருப்பத்தூரிலிருந்து வந்த தம்பதிகளுக்கு ஒன்றுமே புரியவில்லை. 'இவரா சுவாமி! இவரை காலை 10 மணிக்கு திருப்பத்தூர் சந்தையில் பார்த்தோம்' என்று கூறினார்கள்.

மேலும் தம்பதிகள் கூறினார்கள்: 'நாங்கள் ஆற்று சுவாமியைப் பற்றிக் கேள்விப் பட்டோம். அதனால் அவருக்கு எலுமிச்சம் சாதமும் எலுமிச்சம் ஊறுகாயும் பக்குவமாக செய்து கொண்டு போகலாம் என்று காலையில் திருப்பத்தூர் சந்தைக்குப் போய் எலுமிச்சம்பழம் வாங்கலாம் என்றும் பழம் விற்பவரைத் தேடினோம். கிடைக்கவில்லை. அன்று காலை 8 மணியிலிருந்து எலுமிச்சம்பழம் தேடுகிறோம். சந்தையில் கிடைக்கவில்லை. மனம் கொஞ்சம் வேதனைப்பட்டது. பிறகு, ஆற்று சுவாமிகளைப் பற்றி இவ்வளவு மகிமையாய் கூறுகிறார்களே என்று அவருக்கு எலுமிச்சம் சாதம் செய்ய வேண்டும். அதற்கு அவர்தான் அருள் புரிய வேண்டும் என்று மனமார வேண்டிக் கொண்டோம். மீண்டும் சந்தையைச் சுற்றிவந்ததோம். பழம் கிடைக்கவில்லை. வீடு திரும்பிப் போய் விடலாம் என்று சந்தையை விட்டு வெளிவர, எனக்கு நேர் எதிரில் ஒரு கூடை எலுமிச்சம்பழத்துடன் ஒரு பெரியவர் வந்தார். அவர் இவரைப் போலவே இருந்தார். ஏன்? அவர் இவரேதான். உடனே கேட்ட விலைக்கு கொடுத்து விட்டு மாயமாய் போய்விட்டார்' என்று கூறி சுவாமியின் கால்களில் வீழ்ந்து வணங்கினார்கள்.

அப்போது சுவாமிகள் முன்பு கூறியதுபோல,

"எலுமிச்சம் சாதம் உடலுக்கு நல்லது! எலுமிச்சம் ஊறுகாய் உடம்புக்கு நல்லது"

என்று கூறினார்.

அப்போதுதான் அங்கிருந்த அன்பர்களுக்கு புரிந்தது. இதற்குத்தான் சுவாமி காலையிலிருந்து 'எலுமிச்சம் சாதம் உடலுக்கு நல்லது. எலுமிச்சம் பழம் உடம்புக்கு நல்லது' என்று கூறிக் கொண்டிருந்தார். அதே நேரம் திருப்பத்தூர் சென்று அவர்களுக்கும் எலுமிச்சம்பழ வியாபாரியாகக் காட்சி கொடுத்தார் போலும் என்று கூறினர். சுவாமியைத் தரிசித்த தம்பதிகளிடம் அங்கிருந்த அன்பர்கள் சுவாமி சுமார் 5 நாட்களாக இவ்விடத்தை விட்டுப் போகவில்லை. நாங்கள் சுமார் ஐந்து நாட்களாக இங்குதான் இவர் இருப்பதைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம் என்றனர். அத்தம்பதிகள் செய்த தவப்பயன் சுவாமி திருப்பத்தூர் போய் அவர்களுக்கு தரிசனம் கொடுத்துள்ளார். அன்றுமுதல் அந்தத் தம்பதிகள் அடிக்கடி சுவாமியை தரிசிக்க வந்தனர்.

ஞானிகளுக்கு இந்த சிறிய அற்புதமெல்லாம் பெரிய விசயமல்ல. நமக்குத்தான் இது பெரிய விசயம். ஆறு ஆதாரங்களைக் கண்டு அதற்குமேல் உள்ள சகசுராரம் கண்டு சமாதி நிலை எய்திய ஞானிகளுக்கு இது பெரிய அற்புதமல்ல. ஆனால் அவர்கள் தன் பெரும் நிலையிலிருந்து இறங்கி பக்தர்களுக்காக இப்படியெல்லாம் செய்வதுண்டு.

உச்சிக்குமேல் சென்று உயர்வெளி கண்டு ஞானாமிர்தத்தை வயிரார உண்டவர்களுக்கு எலுமிச்சம் சாதம் உடலுக்கு முக்கியமல்ல. ஞானிகள் உலக மாந்தர்கள் பொருட்டு கீழ்நிலை வந்து மக்களுடன் மக்களாய் கலந்து அவர்களுக்கு நல்வழிகாட்ட இப்படிப்பட்ட நாடகங்களை நடத்துவார்கள்.

ஆதியந்தமென் றுரைத்தாய் வெண்ணிலாவே - அந்த
ஆதியந்த மாவதென்ன வெண்ணிலாவே!

ஞானிகள் தன்னுள் பரபிர்மத்தைக்கண்டு பரபிர்மமமாக அதுவானவர்கள், ஞானிகள் தன் உடலில் உள்ள மூலாதாரத்தில் உள்ள குண்டலினியை எழுப்பி சூக்குமனா நாடி வழியாக சகஸ்ராரத்தில் நிறுத்தி ஞானப் பாலாகிய அமிர்தத்தை உண்டவர்களுக்கு எலுமிச்சம் சாதம் வேண்டுவது, உண்பதெல்லாம் உலக மக்களுக்கு நல்வழிகாட்டவே தவிர, வேறு ஒன்றுமில்லை.

மாங்காய் பாலுண்டு மலைமேல் இருப்போர்க்கு
தேங்காய் பால் ஏதுக்கடி - குதம்பாய்
தேங்காய் பால் ஏதுக்கடி.

மாங்காய் பால் என்பது ஞானிகள் தன் ஞானநிலையில் கபாலத்தின்கண் உள்ள அமிர்த்தத்தை உண்பவர்கள். அவர்களுக்குப் பசி என்பது கிடையாது.

ஞானி உலக மாந்தருடன் வரும்போது உலகமாந்தர்களுக்காகவே உணவு உண்பது போல் காட்சி அளிப்பார்கள். இதையே இராமலிங்க சுவாமிகள் 'அருளமுது' 'கருணையமுது' 'அருட்பெருஞ்சோதி அமுது' என்றெல்லாம் அழைக்கிறார்.

காயாத பாலையுண்டு கனக அம்பலத்தைக் கண்டு
மாயாம நாகை நாதர் மலரடி வணங்கு நெஞ்சே!

கறவாத, காயாத ஞானப்பாலை உண்டவர்களுக்கு உணவு ஒரு பொருட்டல்ல என்பதாம்.

சுவாமிகள் வில்வாரணி, மேலாரணி, எலத்தூர், தென்மாதி மங்கலம், கடலாடி, சிங்கார்வாடி, மாம்பாக்கம், சோழவரம் போன்ற ஊர்களில் அந்த அழுக்கு மூட்டையுடன் திரிந்து கொண்டு பசி என்று யாரையும் எதையும் கேட்காமல் நடமாடிக் கொண்டிருந்தார். அப்படி நடமாடும் காலத்தில் தென்மாதி மங்கலத்தின் அருகில் உள்ள பர்வதமலையில் அடிக்கடி தென்படுவார். பர்வதமலையில் சித்தர்கள் பூசை செய்யும்கோயில் உள்ளது. அதில் மல்லிகார்ச்சுன சுவாமியும், பிரமராம்பிகையும் எழுந்தருளி உள்ளனர்.

சுவாமிகள் ஒரு முறை கடலாடி அருகில் உள்ள சிங்கார வாடியில் சிறு பாலத்தில் (வாராவதி) உட்கார்ந்து இருந்தார். சுவாமியை அறிந்த ஒரு அன்பர் சுவாமியைப் பார்த்து, 'சுவாமி! இங்கு ஏன் மௌனமாக வெயிலில் உட்கார்ந்து இருக்கிறீர். சைக்கிளில் பின் சீட்டில் உட்கார்ந்து கொள்ளுங்கள். இன்று ஆடிக் கிருத்திகை, வில்வராணி சிவசுப்பிரமணியர் கோயிலில் விசேடம், அங்கு போகலாம் என்று கூறினார். அதற்கு சுவாமிகள் நீங்க போங்க! நான் வருகிறேன். சந்தைக் கூட்டம். நீங்க போங்க!' என்று கூறிவிட்டு மௌனமாக இருந்தார்.

சைக்கிளில் வந்த அன்பர் பேசாமல் சைக்கிளில் வில்வாரணி சிவசுப்பிரமணி கோயிலை அடைந்தார். என்ன ஆச்சரியம்! சுவாமி அங்கு மௌனமாக நிட்டையில் கண் திறவாமல் அமர்ந்துள்ளார். ஒரு பாறையின்மேல் இருந்தார். உடனே அன்பர் சுவாமியிடம் சென்று 'சுவாமி! இது என்ன அதிசயம், நான் 1 மணி நேரத்திற்குமுன், சிங்காரவாடியில் கண்டு பேசினேன். அதற்குள் இவ்விடம் எப்படி வந்துவிட்டீர்கள். எனக்குப் பின்னால் பஸ்ஸோ, லாரியோ, சைக்கிளோ எந்த வாகனமும் என்னை முந்தவில்லை. தாங்கள் எப்படி வந்தீர்கள்' என்று கேட்டார். சுவாமிகள் கண் திறவாமல் பாறையின்மீது யோகத்தில் இருந்தார். அங்கிருந்த அன்பர்கள், நீங்கள் கூறுவது பொய், சுவாமி சுமார் 4 நாட்களாக அன்ன ஆகாரமின்றி இருந்த இடத்தை விட்டு எழவில்லை. மேலும் அவரது வாயில் கோலைவிட்டு நீக்கி 5, 6 இட்டிலிகளை உள்ளே முழுங்க வைத்து படியில் தண்ணீர் கொடுத்தோம் என்று கூறினார்கள்.

வந்தஅன்பர் சத்தியமாக நான் இவரை 1 மணி நேரத்திற்கு முன் சிங்காரவாடி வாராவதியில் மௌனத்துடன் உட்கார்ந்து இருந்ததைக் கண்டேன் என்றார். அன்று கிருத்திகை நன்நாள். கோயிலுக்கு வந்த பக்தர்கள்

மத்தியில் இந்த நிகழ்ச்சி பரவி சுவாமியின் யோகமகிமையும் இவர் ஒரு அவதார புருசர் என்றும் மக்கள் மத்தியில் பரவத்தொடங்கின.

ஞானிகள் தன் யோக நிலையில் அட்டமா சித்திகளைப் பெறுகின்றனர். அப்படிப்பட்ட சித்திகளில் ஒரே சமயம் பல இடங்களில் பல அன்பர்களுக்கு தோற்றத்தை அளிப்பார்கள். இது அவர்கள் பல தோற்றத்துடன் தோன்ற ஒரே நேரத்தில் ஞானிகளின் வினைகளையும் போக்கிக் கொள்வார்கள்.

சுவாமியின் யோகநிலை புகழ் நாளுக்கு நாள் மக்கள் மத்தியில் பரவத்தொடங்கியது. அவரை தேடிவரும் பக்தர்கள் கூட்டமும் பெருகத் தொடங்கியது. சுவாமிகள் ஒரு நாள் பூண்டிக்கும் கலசப்பாக்கதத்திற்கும் இடையில் ஆற்றில் யோகத்தில் அமர்ந்து இருந்தபோது திடீர் என்று மேற்கே மழை பெய்த காரணத்தால் செய்யாற்றில் வெள்ளம்வரத் தொடங்கியது. சுவாமிகள் முன்போல உட்கார்ந்த இடத்தை விட்டு எழுந்திருக்காமல் யோகத்தில் இருந்தார். ஆனால் ஆற்று வெள்ளம் அவரை தொடமல் அவர் அமர்ந்த இடத்தைவிட்டு இருபுறமும் ஒதுங்கிச் சென்றது. இதைக் கண்ட அன்பர்கள் பெரும் வியப்பிற்கும் ஆச்சரியத்திற்கும் உள்ளானார்கள். இந்த நிகழ்ச்சி ஊரெங்கும் பரவத் தொடங்கியது. இந்த கலியின் பிடியிலும் இப்படிப்பட் மகான் உள்ளார் என்றால், நாமெல்லாம் முன்செய்த தவப்பலனே என்று மக்கள் ஆனந்தம் அடைந்தார்கள்.

ஐம்பூதங்கள் ஆகிய மண், ஆகாயம், நீர், நெருப்பு, காற்று, இவைகளை தன் கண், மூக்கு, செவி, வாய், மெய் ஆகிய ஐம்பொறிகளைக்கொண்டு அவைகளின் தன்மையாகிய சுவை, ஒளி, ஓசை, ஊறு, நாற்றம் ஆகியவைகளை அண்டத்தில் உள்ள தன் பிண்டத்தில் அகத்தவத்தால் கண்டு அடக்கி ஆள்பவரே ஞானி ஆவார். அப்படிப்பட்ட ஞானிகளுக்கு மண், நெருப்பு, நீர், ஆகாயம், காற்று எல்லாம் தன் வசப்பட்டுவிடும். அதை அடக்கி யாளும் தன்மையை ஞானிகள் கைவரப் பெறுகின்றனர்.

புலன் ஐந்து வீதியில் வையாளி பாயும்
புரவியெனும் மனதை ஒருமைப்படுத்தி
மலபந்த வுலகங் கடந்ததாலே
சந்திர மண்டலமுங் கடந்த தாகும்
அலமந்து பூலோகக் கடலை நீக்கி
ஆனந்தமாக நின்றாடு பாம்பே! - பாம்பாட்டி சித்தர்

எண்ணங்களை உற்பத்தி செய்வது மனம், மனம் ஐம்புலன்களின் வழியாகச் சென்று அதன் விருப்பத்திற்குப் போய்விடும். அப்படிப்பட்ட புலன்களை அடக்கினால் மனம் ஒரு நிலைப்படும். மனம் ஒருநிலைப் பட்டால் எண்ணங்கள் அறுபடும். எண்ணங்கள் அறுபட்டால் வெட்டவெளியாகும் மனம். மனம் வெட்டவெளியிடமே பிர்மமாகும். அப்படிப்பட்ட பிர்மத்தை கண்டவர்கள் ஞானிகள். அவர்களுக்கு எல்லாம் கட்டுப்படும். ஏன், ஈசனே சித்தர்களுக்குக் கட்டுப்படுகிறார். இந்த ஞான நிலையைப் பாம்பாட்டி சித்தர் ஆனந்தத்துடன் கீழ்க்கண்டவாறு பாடிக் களிக்கிறார்.

1. எட்டுநாகம் தம்மைக் கையால் எடுத்து ஆட்டுவோம்
இந்திரனார் உலகத்தை இங்கே காட்டுவோம்
கட்டுக் கடங்காத பாம்பை கட்டிவிடுவோம்
கடுவிடந்தன்னைக் கக்கி ஆடுபாம்பே!

2. ஆதிசேடன் ஆயினுமெம் மங்கை யினாலே
ஆட்டிவிடுவோ மெங்கள் ஆக்கினைக்குள்ளே'
நீதியோடு மடங்கியே நின்றிடச் செய்வோம்
நின்றநிலை தவறாமல் ஆடுபாம்பே!

3. தூணை சிறுதுரும்பாகத் தோன்றிடச் செய்வோம்
துரும்பை பெருந்தூணாகத் தோன்றச் செய்வோம்
ஆணைபெண்ணும் பெண்ணைஆணும் ஆச்செய்வோம்
ஆரவாரித்து எதிராய்நின்று ஆடுபாம்பே!

4. எட்டுமலைகளைப் பந்தாய் எடுத்து எறிகுவோம்
ஏழுகடலையுங் குடித்து ஏப்பம் விடுவோம்
மட்டுபடா மணலையும் மிதித்து விடுவோம்
மகராசன்முன்பு நீநின்று ஆடுபாம்பே!

5. மண்டலமுற்று மெங்கையால் மறைத்து விடுவோம்
வானத்தை வில்லாக வளைத்து விடுவோம்
தொண்டருக்குச் சூனியஞ் சொல்லிக் காட்டுவோம்
தோன்றலுக்குமுன் நீநின்று ஆடுபாம்பே!

6. வேதன் செய்த சிருட்டிகள்போல் வேறு செய்குவோம்
வேதனையும் எங்கள் கீழே மேவச்செய்குவோம்
நாதனுடன் சமமாக நாங்கள் வாழ்வோம்
தங்கள் செய்கையாம் இதுவென்று ஆடுபாம்பே!

7. செப்பரிய மூன்றுலகுஞ் செம்பொன் ஆக்குவோம்
செங்கதிரை தன்கதிராய்ச் செய்துவிடுவோம்
இப்பெரிய உலகத்தை இல்லாமல் செய்வோம்
எங்கள் வல்லபங் கண்டு ஆடுபாம்பே!

8. சிறு புலியானை யாளி சிங்கமுதலாய்ச்
சிற்றடிக்குக் குற்றேவல் செய்யச் சொல்லுவோம்
வீறுபெருங் கடவுளை எங்களுடனே
விளையாட செய்குவோமென் றாடுபாம்பே!

சித்தர்கள் தம் உடம்பினுள் ஆறு ஆதாரங்களாகிய மூலாதாரம், சுவாதிட்டானம், மணிப்பூரகம், அனாகதம், விசுத்தி, ஆக்ஞை முறையே படத்தில் காட்டியுள்ளதுபடி மூலாதாரத்தில குண்டலினி சக்தியாகப்பட்டது பாம்புபோல் சுருட்டி தன் வாயால் தன் வாலை கவ்வியதுபோல் உள்ளது. இதை யோகி தன்யோக சாதனையால் எழுப்பி, ஒவ்வொரு ஆதாரமூலம் மிகவும் கவனமாகவும் கடும் வாசியோகப் பயிற்சியாலும் கண்ணுக்கும் புருவமத்தியில் கொண்டுவந்த சக்தியை சிவனுடன் சேர்த்து சகசுராரத்தில் உள்ள ஆயிரம் இதழ் கொண்டதில் ஐக்கியமாகி உச்சிக்குமேல் உள்ள கபாலத்தில் வடியும் ஞான அமிர்தத்தை அருந்தி பிறப்பு, இறப்பு அற்ற தன்மையுடன் சிவனுடன் ஒன்றிய தன்மை ஞானநிலை ஆகும். அதில் வரும் குண்டலியைத்தான் பாம்பாட்டி சித்தர் பாம்பாக உருவகம் கொடுத்து பாடி சித்தர்களின் யோக வலிமையை ஆனந்தமாகப் பாடுகிறார்.

திருவண்ணாமலையில் எழுந்தருளியிருந்த ஈசானதேசிகருக்கு அவர் யோக நிலைக்கும் தவ நிலைக்கும் ஊறு வராவண்ணம் அண்ணாமலையாரே புலி உருவம் கொண்டு அவர் தவம் செய்யும் இடத்தில் காவல் புரிந்துள்ளார் என்பது சமீபகால நிகழ்ச்சியாகும். கடும்புலி, சிங்கம், போன்ற கொடிய விலங்குகளும் அவர்கள் ஞானநிலைக்குக் கட்டுப்படும். கேவலம் மனிதன்தான் ஞானிகளை ஞானிகளாக உணரும் தன்மைகூட கைவரப்பெறுவதில்லை. அவர்கள் ஏதாவது ஒரு அற்புதம் செய்தால்தான் உணருகிறான். நெருப்பு சுட்ட பின்தான் நெருப்பு என்று உணருகிறான். அவன் நிலைசிறு குழந்தைபோல் உள்ள தன்மையாகும். இதற்கு மேலே பேசினால் தான் முற்போக்குவாதி என்று தன்னைத்தானே படுகுழியில் விழ வழி வகுத்துக் கொள்வது மில்லாமல் பிறரையும் அந்தப் படுகுழியில் தள்ள காரணமாகிறான்.

இப்படிப்பட்ட மகான் பல அற்புதங்களையும் பலர் வினைகளையும் நீக்கியும் நடமாடி வருங்கால், விழுப்புரத்திலிருந்து கடலூர் செல்லும் வழியில் பட்டாம்பாக்கம் என்ற ஒரு ஊரில் இருந்து ஒரு சாது சுவாமியை தரிசிக்க வந்தார்.

ஒரு நாள் இரவு சுவாமியும் கடலூர் அருகில் உள்ள பட்டாம்பாக்கத்து சாதுவும், பூண்டிக்கும் கலசப்பாக்கத்திற்கும் இடையில் உள்ள பாதையில் படுக்க நேர்ந்தது. நடு இரவு நேரம் பட்டாம்பாக்கத்து சாதுவுக்கு விழிப்பு வந்து சுவாமியைத் தேடினார். அப்போது சுவாமிகள் ரோட்டின் ஓரமாக கொட்டியுள்ள பெருஞ் சல்லிக்கற்களை கடித்துத் தின்று கொண்டிருக்கிறார். அவர் உருவம் விசுவ ரூபமாக இருந்தது. இதைக் கண்ட அந்த சாது பயம் கொண்டு பூண்டிக்கு ஓடிவிட்டார். பூண்டியில் அன்று இரவு கழித்துவிட்டு காலை சுவாமியைத் தேடிச்சென்று அவர் பாதங்களில் வீழ்ந்து வணங்கி 'சுவாமி! நேற்று இரவு என்று கூற ஆரம்பித்தார் அதற்குள் சுவாமிகள்அ 'ஆமாம்பா! நேற்று அப்படி ஆகிவிட்டது! நல்லது. போய் வாங்க! அகால நேரத்தில் வராதீர்கள்' என்று கூறி விட்டார்.

இந்த நிகழ்ச்சியைக் காணும்போது 'கல்லைத்தான் மண்ணைத்தான் காய்ச்சித்தான் குடிக்கத்தான் கற்பித்தானா' என்று ஞானிகள் கூறுவது உண்மையாக உள்ளது.

ஞானிகளுக்கு பசி என்பது ஏது. அவர்கள் அருந்தும் அமிர்தம் அவர்களை பசியிலிருந்து எங்கோ பெரும் நிலைக்கே கொண்டுபோய் விடும் தன்மை தான் ஞானியின் நிலை. பாம்பாட்டி சித்தர் "ஏழு கடலையும் குடித்து ஏப்பம் விடுவோம்' என்று கூறுகிறார். ஞானிக்குக் கல்லும் கனியும் ஒன்றே-ஆகும்.

சுவாமிகளை செங்கம் போளூர் செல்லும் கடைசி நடை பஸ்ஸில் வில்வாரணியிலிருந்து செங்கத்திற்கு டிரைவரும் கண்டக்டரும் அழைத்துச் சென்று அன்று இரவில் பஸ்ஸியே செங்கத்தில் தங்களுடன் தங்க வைத்துக்கொண்டனர். மறுநாள் காலை 5 மணிக்கு வண்டி போளூர் புறப்படுமுன் சுவாமிக்கு டீ வாங்கிக் கொடுத்துவிட்டு அங்கேயே இருக்கும்படி கண்டக்டரும் டிரைவரும் சென்னார்கள். சுவாமியும் அதற்கு 'சரி! போய் வாங்க! என்று கூறி செங்கம் ஆற்றுப் பக்கம் போய்விட்டார்.

பஸ் செங்கத்தைவிடடு போளூரை நோக்கி வந்து கொண்டிருக்கிறது. வில்வராணி நட்சத்திரக் கோயில் சமீபம் மிருகண் நதி எலத்தூரில் சேயாற்றுடன் கலக்கிறது. அவ்விடம் சுவாமிகள் நடமாடிக் கொண்டிருப் பதைக் கண்ட டிரைவருக்கு ஒன்றும் புரியவில்லை. "செங்கம் வில்வாரணி பஸ் நேரம் அப்போது 1 மணி நேரம் ஆகும். இந்த ஒரு மணி நேரத்திற்குள் எந்த பஸ்ஸும் கிடையாது. இவர் எப்படி இங்கு வந்தார் என்பது புரியவிலலை. பஸ்ஸை நிறுத்தி பேருந்திலிருந்து பயணிகள் டிரைவர் மூலம் சுவாமியின் பெருமையை உணர்ந்து அனைவரும் வணங்கினார்கள்.

இந்த பஸ் சம்பவத்திற்குப் பின் சுவாமிகளின் பெருமை மேலும் பரவத் தொடங்கி அன்பர்களின் வருகை பல மடங்கு உயர்ந்துவிட்டது.

வடநாட்டில் ஞானேசுவரன் என்ற மகான் ஒரு நீண்ட சுவற்றின்மீது 1000 பேரை உட்கார வைத்து 'போ! என்றாராம்' அது விண்ணில் ஆகாய விமானம்போல் 1000 பேருடன் சென்றதாக மகான்களின் சரித்திரத்தில் காண்கிறோம். அதுபோல் சுவாமிகள் நினைத்த இடத்தில் நினைத்த மாதிரி செல்லும் ஆற்றல் படைத்தவர்கள். உலக மாந்தர்களின் நன்மை பொருட்டே மகான்கள் சமாதியைவிட்டு எழுந்து வருகிறார்கள். இப்படி போகரும் சீனாவிற்கு போய்வந்தார் என்று அறிகிறோம். இப்படி பல வருடங்கள் ஒரு அழுக்குமுட்டையுடன் வன்னியனூர், காப்பலூர், மோட்டூர், பிராயம்பட்டு, பூண்டி பழங்கோயில், காஞ்சி, கடலாடி, சிங்காரவாடி, எலத்தூர், மேல்வாரணி, நட்சத்திரக் கோயில், தென்மாதி மங்கலம், பர்வத மலை, கலசப்பாக்கம், பில்லூர், மேட்டுப்பாளையம் போன்ற ஊர்களில் நடமாடி உற்சவமூர்த்தியாக நடந்து கொண்டிருந்த பூண்டி மகான், மூலவராக பூண்டியில் ஒரு ஓட்டு வீட்டுத் திண்ணையில் வந்து சேர்ந்தார்.

பூண்டி என்னும் கிராமம், வேலூர் - திருவண்ணாமலை சாலையில் திருவண்ணாமலையில் இருந்து 16 மைலில் கலசப்பாக்கத்தில் இறங்கி 2 கி.மீ. செங்கம் சாலையில் போக வேண்டும். திருவண்ணாமலையிலிருந்து பூண்டிக்குச்செல்ல பல பஸ்களும் டவுன் பஸ்களும் உள்ளன. போளூரில் இருந்த செங்கம் (வழி) கல்சப்பாக்கம் செல்லும் எல்லா பஸ்களும் பூண்டியை அடையும். 15 நிமிடத்திற்கு ஒரு வண்டி வீதம் ஏராளமான பஸ் வசதி உண்டு. தற்போது அங்கு சுவாமிகள் சமாதியின்மேல் சிறந்த

கற்கோயில் கட்டி தினம் 3 வேளை பூசை, அபிடேக ஆராதனை செய்து வருகிறார்கள் வரும் பக்தர்கள். சுவாமி சமாதியிடம் தங்க வசதி உள்ளது. ''சாது தரிசனம், பாப விமோசனம்', 'சமர்திதரிசனம் சகல பாப விமோசனம்' என்பதை அறியவேண்டும்.

அட்டமாதி சித்துகளைக் கைவரப்பெற்று, பிர்மநிலையை அடைந்த மெய் ஞானிகள், தன் சூக்குமமான உடலுடன் பல இடங்களில் ஒரே நேரத்தில் தோன்றும் வல்லமை உள்ளவர்கள். ஒரு மெய் ஞானியை பல பக்தர்கள் தங்கள் குறை தீர ஒரே நேரத்தில் வேண்டிக்கொண்டால், பக்தர்களின் குறை தீர அவர்கள் நலன் பொருட்டு ஒரே நேரத்தில் பல இடங்களில் பல பக்தர்களுக்குக் காட்சி கொடுப்பது ஞானி ஒருவரின் திருவிளையாடல் ஆகும்.

இப்படிப் பல பேர்களுக்கு பல இடங்களில் ஒரே நேரத்தில் காட்சி தந்து அருள் பாலித்ததை பல அன்பர்கள் என்னிடம் கூறினார்கள். ஆனால அவை அனைத்தும் சுவாமி தன் பக்தர்களின் நலன் கருதி செய்த திருவிளையாடல்கள். அவை அனைத்தும் ஒரே மாதிரியான நிகழ்ச்சியாக இருப்பதால் 'பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம்' என்ற அடிப்படையில் ஏதோ ஒரு நிகழ்ச்சியை மட்டும் எழுத நேர்ந்தது.

இதுபோல நிகழ்ச்சியை எனக்குத் தபால்மூலம் குடியாத்தத்தை சேர்ந்த சண்முகநாதன், விழுப்புரம் வட்டம் சிருவந்தாடு என்ற ஊரைச் சேர்ந்த பொன்னுரங்கம் பிள்ளை, மணலூர் பேட்டையைச் சேர்ந்த வடிவேல் என்பவர்களும் எழுதி அனுப்பியுள்ளனர். அந்த புண்ணிய ஆத்மாக் களுக்கும், எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். இன்னும் பல சம்பவங்கள் நமக்குத் தெரியாமல் இருக்கிறது. அந்த சம்பவங்களைக் கண்ட அன்பர்கள் அனைவருக்கும் மறுபிறவி இல்லை என்பது உறுதி.

செங்கம் தாலுக்கா, கிருஷ்ணாவரம் என்ற கிராமத்தில் இருந்து இரண்டு நண்பர்கள், சுவாமியை தரிசனம் செய்ய நட்சத்திரக் கோயில் வந்தனர். (இதற்கு கிருத்திகை கோயில் என்று பெயர். செங்கம் முதல் போளூர் வழியில் போளூரில் இருந்து 17 கி.மீ. தூரத்தில் உள்ளது. குன்றின்மீது சிவ சுப்பிரமணிய சுவாமி, வள்ளி தெய்வயானை சமேதராய் உள்ள கோயில்). ஆற்று சுவாமிகள், அப்போது, அவ்விடம் நடமாடிக் கொண்டு உற்சவ மூர்த்தியாக இருந்தார்.

கிருஷ்ணாபுரம் நண்பர்கள் இருவரும் சுவாமியைத் தேடி, இட்டிலியையும் வடையையும் வாயில் ஊட்டி விட்டும், சுவாமியை தரிசனம் செய்து கொண்டு மீண்டும் தங்கள் ஊர் திரும்ப செங்கம் செல்லும் பஸ்ஸில் சென்றனர். நட்சத்திரக் கோயிலிலிருந்து செங்கம் செல்லும் பாதையில் கடலாடி என்ற ஊர் உள்ளது.

நண்பர்கள் ஏறிவந்த பஸ் கடலாடியை அடைந்தது. நண்பரில் ஒருவர் மற்றவரைப் பார்த்து "ஆற்று சுவாமி, இதோ இருக்கிறாரே! நாம் கொஞ்சம் நேரம் முந்தி, நட்சத்திரக் கோயிலில் தரிசித்தோம். பஸ்ஸை விட்டு கீழே இறங்கு'' என்று இறங்கி விட்டனர்.

செங்கம் போவதை விட்டு விட்டு சுவாமி அமர்ந்து இருக்கும் புளிய மரத்தை அடைந்தனர். கடலாடியைச் சேர்ந்த கணக்குப் பிள்ளை சீனு என்பவர் சுண்டல் விற்றுக் கொண்டிருந்தார். நண்பர்கள் இருவரும் சீனுவிடம் போய், 'ஐயா! நாங்கள் சற்று முன்புதான் சுவாமியை நட்சத்திரக் கோயில் சமீபம் தரிசனம் செய்துவிட்டு உணவு வகைகளை ஊட்டி விட்டு வருகிறோம். எங்களுக்கு முன் எந்த வாகனமும் செல்லவில்லை. ஆனால் இவர் எப்படி இங்கு, இவ்வளவு விரைவில் வந்தார் என்பது புரிய வில்லை' என்றனர்.

அதற்குச் சுண்டல் விற்கும் கணக்குப்பிள்ளை சீனு என்பவர், "இவர் கடந்த மூன்று நாட்களாக இந்த புளிய மரத்தின் கீழ்தான் உட்கார்ந்து கொண்டிருக்கிறார். மூன்று நாட்களாக அன்ன ஆகாரம் இல்லாமல் உள்ளார். சற்று முன்புதான் காஞ்சி நாராயணசாமி முதலியாரும் கடலாடி சிவானந்த முதலியாரும் என்னிடம் சுண்டல் வாங்கி ஊட்டிவிட்டு சுவாமியைத் தரிசனம் செய்து கொண்டு போனார்கள்" என்று கூறினார்.

கிருட்ணாவரம் நண்பர்கள் இருவருக்கும் பேராச்சரியமாகி விட்டது. இவர் சாதாரண மகான் அல்ல. சித்த மகாபுருசர் என்று எண்ணிக்கொண்டனர். கணக்குப்பிள்ளை சீனுவிடம் சுண்டல் வாங்கிக் கொண்டு சுவாமியிடம் சென்று சுவாமியின் வாயில் சுண்டலை ஊட்ட முற்பட்டனர். அதற்கு சுவாமிகள் "ஏம்பா, இப்பத்தானே இட்டிலி வடை சாப்பிட்டேன், சுண்டல் வேறு எதற்கு? என்று கூறிவிட்டு புளிய மரத்தை விட்டு எழுந்து காஞ்சியை நோக்கிச் சென்று விட்டார். (காஞ்சி என்னும் ஊர் கடலாடி திருவண்ணாமலை சாலையில் உள்ளது).

வந்த அன்பர்கள் பிரமை பிடித்தவர்போல் இருந்தனர். வந்த அன்பர்கள் சுவாமி அமர்ந்திருந்த இடத்தைப் பார்த்தனர். ஒரு மனிதன் பலநாள் ஒரே இடத்தில் உட்கார்ந்து இருந்தால் தடயம் எப்படியிருக்குமோ அப்படி இருந்தது. அவ்விரு அன்பர்களும் பின்னாளில் சுவாமியைத்தவிர வேறு தெய்வமில்லை என்று உறுதி பூண்டு, பூண்டியில் சுவாமி இருந்தபோது அடிக்கடி வந்து தரிசனம் செய்து இன்று நல்ல வாழ்க்கையுடன் வாழ்ந்து வருகின்றார்கள். பூண்டி மகானைத்தவிர எங்களுக்கு வேறு தெய்வம் உலகத்தில் இல்லை என்று கூறுகிறார்கள்.

ஒவ்வொரு பௌர்ணமி தோறும் இரவு 9 மணி முதல் இரவு 12 மணி வரை பௌர்ணமி பூசை தவறாமல் நடைபெறுகிறது. அச்சமயம் ஏராளமான பக்தர்கள் ஒன்றுகூடி அன்னதானம் அபிடேகம் செய்து பூண்டி மகான் அருளைப் பெறுகின்றனர்.

வருடத்தில் தைப்பூசம், சித்தர்களுக்கு உகந்த சித்ரா பௌர்ணமி, சுவாமிகளின் குருபூசை நாளாகிய ஐப்பசி சுக்லபட்ச அனுச நட்சத்திரத்திலும் பக்தர்களும் ஊர் மக்களும் பெரும் விழாக் கொண்டாடுகிறார்கள். அதுசமயம் துறவிகளுக்கு அன்னதானம், வத்திரதானம் செய்யப்படுகிறது. ஆயிரக்கணக் கான பக்தர்கள் கூடி நம் கண்கண்ட கலியுக தெய்வம் ஸ்ரீ பூண்டி மகானுக்கு அபிடேகம், ஆராதனை, அலங்காரம் செய்து மகிழ்கின்றனர்.

பலகாலம் நடமாடிய தெய்வம் ஸ்ரீ பூண்டி மகான் பூண்டியில் ஒரு ஓட்டு வீட்டுத் திண்ணையில் அமர்ந்தார். அந்த வீடு கிழக்கு மேற்கு தெருவில் தெற்கே பார்த்த வீட்டின் மேல்புறம் திண்ணையில் வந்து அமர்ந்துவிட்டார்.

திண்ணையில் அமர்ந்த பிறகு அவர் அந்த இடம் விட்டு கீழ்த் திண்ணையில் மாறி 1960 ஆடி மாதம் பரணியில் அமர்ந்தார். இப்படி அமர்ந்த அந்த முக்காலமும் உணர்ந்த ஞானப்பொருள் 1978 வரை சுமார் 19 ஆண்டுகள் இருந்த இடத்தை விட்டு எழுந்திருக்காமல் மலசலம் கழியாமலும் தினம் வரும் ஆயிரக்கணக்கான பக்தர்களின் குறைகளை நீக்கி அருள் பாலித்து வந்தார். மகான்கள் கண் பார்வை நம்மீது பட்டாலே நம் சகலபாவப் பிணிகள் அகன்றுவிடும்.

அப்படிப்பட்ட பார்வைக்கு இலட்சோபலட்சம் பக்தர்கள் இலக்கு ஆகி. அவர்களுக்கு எல்லாம் அவர்களின் வினைகளை அகற்றி நல்வழிப்படுத்தி வந்தார்.


அப்படிப்பட்ட நல்வழிப்படுத்தப்பட்டவர்கள் ஏராளமானவர்கள். அவர்கள் கண்ட அற்புதங்கள் சுவாமியினால் ஏற்பட்ட நன்மைகள். அவர் கொடுத்த சிறு விபூதியினால் பிள்ளைச் செல்வங்கள் இல்லாதவர்களுக்கு பிள்ளைச் செல்வங்களும் வறுமையில் வாடியவர்கள் எல்லா செல்வமும் பெற்றதையும் தீராத நோயுற்றவர்களுக்கு நோய் தீர்ந்ததையும் தீராத வழக்குகள் தீர்ந்ததையும் எனக்கு ஏராளமானவர்கள் கூறினார்கள். ஆனால் அவை அனைத்தும் இதில் எழுத இடமில்லாத காரணத்தால் ஒரு சில சம்பவங்களை மட்டும் எழுதியிருக்கிறேன். அதைப்படித்து மகானின் அருளைப் பெறுமாறும் அன்பர்களை வேண்டுகிறேன்.

மூலவர் (மலப்பீட நாயகன்)

தந்தைதாய் தமரும்நீ சகலதேவதையும் நீ
சிந்தைநீ தெளிவுநீ சித்திமுத்தி தானும்நீ
விந்துநீ விளைவுநீ மேலதாய வேதம்நீ
எந்தைநீ இறைவன்நீ என்னையாண்ட ஈசன்நீ.

பல வருடங்கள் உற்சவ மூர்த்தியாக நடமாடியபடி பல அன்பர்களுக்கு காட்சி கொடுத்துக் கொண்டு வந்த நம் பூண்டி சுவாமிகள், பல கிராமங்களில் உதாரணமாக, மேட்டுப்பாளையம், பில்லூர், பழங்கோயில் வன்னியனூர், மோட்டூர், நட்சத்திரக் கோயில், வில்வாரணி, சோழவரம், எலத்தூர், சேங்கப்புத்தூர், காப்பலூர், தென்மாதி மங்கலம், காஞ்சி, கடலாடி, மாம்பாக்கம், பர்வதமலை, சிறுவள்ளூர், எல்லுப் பாறை, காங்கனூர் போன்ற கிராமங்களில் நடமாடிக்கொண்டு யாரையும் எதையும் கேட்காமல் இருந்த உற்சவமூர்த்தியாகிய நம் பூண்டி ஆற்று சுவாமிகள் மூலவராக பூண்டியில் ஸ்ரீராமுலு நாயுடுவுக்குச் சொந்தமான ஒரு ஓட்டு விட்டுத் திண்ணையில் வந்து அமர்ந்து விட்டார்.

பூண்டி கிராமத்தின் மேற்கு கிழக்கு வீதியில் ஊரின் மத்தியில் உள்ள ஸ்ரீராமுலு நாயுடு வீட்டின் இரண்டு திண்ணையில் மேற்புறமுள்ள திண்ணையில் வந்து அமர்ந்து விட்டார்.



திண்ணையில் அமர்ந்த தினகரன் பூண்டி மகான்

மேற்புறத் திண்ணையில் அமர்ந்த சுவாமிகள் கடும் நிட்டையில் சமாதியில் இருந்துவிட்டார். கண்கள் கோவைப்பழம் போல் .சிவந்து பயங்கரமாக யாரும் அருகில் போக முடியாதபடி சமாதி நிலையில் இருந்தார். சட்டைகள் ஒன்றன்மீது ஒன்றாகப் பல சட்டைகளைப் போட்டிருப்பார். (இந்த சட்டைகள் அன்பர்கள் அணிவிப்பவை, அதைக் கழட்ட மாட்டார்.) தன் திரேகத்தை மறந்த நிலை புற உலகில் என்ன நடக்கிறது என்று கவலைப் படாமல் அக உலகில் சமாதியில் ஆழ்ந்திருந்தார்.

சட்டையின் பையில், பல்லி முட்டையிட்டு குஞ்சு பொரித்திருக்கும். தேள், நட்டுவாக்கிளி எல்லாம் அந்த சட்டைகளின் பையில் இருக்கும். அவைகளைப் பற்றிய நினைவு இல்லாமல், என் ஈசன், என் அப்பன், என் அன்னை, என் குரு, என் தெய்வம் பூண்டி சுவாமிகள் சமாதி கூடி கடும் நிட்டையில் இருந்தார்.

பூண்டியில் அந்த ஒட்டு வீடு தெற்குப் பார்த்த வாசற்படி உள்ளது. சுவாமிகள், மேற்புறம் திண்ணையில் தெற்கு பார்த்த மாதிரி யோக தட்சிணாமூர்த்தியாய் அமர்ந்து விட்டார். திண்ணைக்கு தெற்கே காலி மனை. திண்ணையிலிருந்து பார்த்தால் திருவண்ணாமலை, மலை தோற்றமளிக்கும்.

சுவாமிகள் ஒரு காலை மடித்து ஒரு காலை திண்ணை ஓரம் தொங்க விட்டபடி, பார்க்க தட்சிணாமூர்த்திபோல் தோற்றமளித்தார். இருந்த

இடத்தை விட்டு எழாமல் இரவும் பகலும் உட்கார்ந்தவர். உட்கார்ந்தவரே, சுவாமிகள் கால் பாதத்தில் எறும்புகள் ஓட்டை போட்டு முட்டிப்பக்கம் வெளியே சாரை சாரையாக போவதும் வருவதுமாக இருக்கும். பார்க்க பயங்கரமாக இருக்கும். அதை மௌனமாக பார்த்துக் கொண்டிருப்பார். அந்த ஓட்டையுள்ள முட்டியிலிருந்து சில சமயம் புழுக்கள் கீழே விழும். அதை எடுத்து திரும்பவும் தன் ஓட்டையுள்ள முட்டியில் போட்டுக் கொள்வார். இதிலும் ''பிர்மம்'' உள்ளது என்பார்.



அண்ணாமலையிலிருந்து வந்த ஆதிமூலம்

இதைப்போலவே தன் சட்டைப் பைகளிலிருந்து வெளி வரும் தேள், நட்டுவாக்கிளிகள் கீழே வந்தால் அதை எடுத்துச் சட்டைப் பையில் போட்டுவிடுவார். இதிலும் ''சிவன்'' உள்ளார் என்று கூறுவார். திண்ணையில் வெயிலிலும், மழையிலும், இடி, மின்னலிலும் அப்படியே ஆடாமல் அசையாமல் உட்கார்ந்து விடுவார். பஞ்சபூதங்களை அடக்கிய மெய் ஞானிகளை இடி, மின்னல், மழை, வெயில் எதுவும் அவர்களை ஒன்றும் செய்யாது. அவைகள் மெய் ஞானிகளுக்கு காவலாக இருக்கும். மெய்ஞானிகளும் அவைகளைப்பற்றிக் கவலைப்படுவதில்லை. அக உலகில் உள்ள இடி, மின்னல்களை அடக்கி அக உலகில் இருக்கும் தவயோகியர்களுக்கு புற உலக இடி, மின்னல், மற்ற அலுவல்களைப் பற்றி கவலை இல்லை. புற உலக அலுவல்களுக்கு அப்பால் சமாதி கூடியிருந்தார்.

சுவாமிகள் மேற்புறத் திண்ணையில் மலப்பீட நாயகனாக அமர்ந்திருந்தபோது பெரும்பாலும் நாட்கணக்கில் உணவு உட்கொள்வது கிடையாது. நல்ல யோக நிலையில் இருந்து, சமாதி கூடிய நேரம் அது.

யாராவது உணவு ஊட்டச் சென்றால் "உம்" என்று கர்சிப்பார். அதனால் அன்பர்கள் சுவாமியின் அருகில் செல்ல பயந்து தூர இருந்து வணங்கிவிட்டு சென்றுவிடுவார்கள்.

ஞானிகளுக்கு உணவு தாம் பயிலும் வாசி யோகத்திலுள்ள பிராணவாயுவே அவர்களுக்கு உணவு ஆகும். பசித் தன்மை அற்றவர்கள்.

நடுநாடியாகிய சுழிமுனையில் சந்திரகலையாகிய இடக்கலை (இடது மூக்குத் துவார காற்று) சேரின் பஞ்ச பூதங்களாகி மண், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் அறிவும் ஒடுங்கிவிடும்.

சூரியக் கலையாகிய பிங்கலை (வலது மூக்குத் துவார காற்று) நடு நாடியாகிய சுழிமுனையில் சேர்ந்து நடந்தால் ஐம்புலன்களாகிய (சுவை, ஒலி, ஓசை, ஊறு, நாற்றம்) அறிவு பெருகும்.

ஆனால் இடக்கலை, பிங்கலை இரு நாடிகளும் சுழிமுனையில் கூடினால் அறிவும் பத்துவித வாயுக்களும் ஒடுங்கிவிடும்.

மூன்றும் கூடி (இடக்கலை, பிங்கலை, சுழிமுனை) வாசியை நாபித்தலத்திலோ, கண்டத்திலோ சுழியிடம், சதா சஞ்சலமற்று நிறுத்துபவர்கள் மெய்ஞானிகள். புற உலகத்தைப் பற்றி எந்தவித சஞ்சலமும் அடையமாட்டார்கள்.

அவர்களுக்கு நான்கு வேதங்களை கற்ற பிராமணர்களும், நாட்டை ஆளும் அரசனும், நாயை, நரியை உண்வாக உண்ணப் பட்ட சண்டாளன், மாடு, யானை, நாய் இவைகளைக் கண்டால், ஞானி ஒருவர் ஒரே நோக்குடன் அதனிடத்திலும் பிர்மம் உள்ளது என்று உணர்ந்து அவைகளை வேறு படுத்திப் பார்க்கும் தன்மைக்கு அப்பால் உள்ளவர்கள் மெய்ஞானிகள்.

ஞானேந்திரங்கள் ஐந்தும், கர்மேந்திரங்கள் ஐந்தும் பத்து வாயுக் களையும் அடக்கி, மனதை ஒருநிலைப்படுத்தி யோக அக்னியில் அவை களை ஓமம் செய்தவர்கள் மெய்ஞானிகள்.

மலர் மெழுகுபோல் சேரச்சேர அதன்மீது இருந்த சுவாமிகள் உயர்ந்துகொண்டே போய் வீட்டின் கூரை சுவாமியின் தலையில் படும் அளவிற்குப் போய்விட்டது. படத்தில் இருப்பதுபோல் திண்ணையில் புறத்தே மெழுகுபோல் ஒழுகிக் கொண்டிருக்கும். அவை எந்தவித துர்நாற்றமோ அருவருப்பு கொள்ளும்படியோ இருக்காது. மாறாக, அத்தர், புனுகு, சவ்வாது வாசனை வந்து கொண்டிருக்கும். விபூதி, ஊதுவத்தி வாசனை அவ்விடம் வந்தது போல் வேறு எங்கும் அப்படிப்பட்ட மணத் தை நாங்கள் நுகரவில்லை. அந்த நறுமணம் பூண்டி சுவாமிக்கே உரியது.

பக்தர்கள் ஒன்றுகூடி அந்த மெழுகுபோல் இருந்த மலத்தை, கடப்பாரையைக் கொண்டு இடித்து எடுத்தனர். சுவாமியை "மலப் பீட நாயகன்" என்று பக்தர்கள் அழைக்கலாயினர். மும்மலங்களை வென்ற ஞானி தன் மலத்தையே பீடமாகக் கொண்டு அமர்ந்திருந்தார். மும்மலங்கள் அற்ற மெய்ஞானி அவர்.



சுவாமிகள் மலத்தின் மீது அமர்ந்திருக்கும் காட்சி "மலப்பீட நாயகன்"

1. உடலும், உடலைப் பொருந்தியது - காமம்

2. உலகமும், உலகத்தைப் பொருந்தியது - மாயை

3. உயிரும், உயிரைப் பொருந்தியது - ஆணவம்

மும்மலமாகிய காமம், மாயை, ஆணவத்தை வேறோடு அறுத்தவர்களே மெய்ஞானிகள். அப்படிப்பட்ட மெய்ஞானி நம் பூண்டி மகான், அவருக்கேது உடலில் மலம். அவர் மலமில்லாதவர், மாசில்லாதவர். ஆணவமற்ற ஞானி.

மும்மலம் அற்ற மெய்ஞானிக்கு தன் உடலில் ஏற்படும் மலம், சலத்தைப் பற்றிக் கவலையோ சிந்தனையோ கிடையாது. தன் உடலை மறந்தவர்கள் உடலை மறந்த பிறகு உடலில் ஏற்படும் உபாதைகளைப்பற்றி அவர்களுக்கு கவலை இல்லை.

மெய்ஞானி ஒருவர் தன் வாசியோகப் பயிற்சியால் ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்களை வென்றவர். நாடி சுத்தியால் தொண்டை நீர், இடுப்பு நீர், மலசல நீர் எல்லாம் அற்றவர் என்று காகபுசண்டர் தன் புசண்டர் 1000த்தில் கூறுகிறார்.

உற்சவர் (மலப்பீட நாயகன்)

"சொல்லுவேன் தொண்டைநீர் இடுப்பின்நீரும்
தொங்குகின்ற சலநீரு மலநீர் மூன்றும்
கெல்லு கெல்லிடுங்கள் உடலே சுத்தி
கேசரத்திற் தொங்கிடலாம் உச்சிமேடை
நல்லவனே உச்சிமுதல் பாதமட்டும்
நடுநாடி மூலம் வரை மலத்தைப்போக்கும்
வல்லவனே மும்மலந்தான் தடையே சத்துரு
வாசி வலுவாகினவன் போக்குவானே! -புசண்ட மகரிஷி

மேலும் இதை பாம்பாட்டிச் சித்தர் தன் பாடலில் நாம் கொண்ட ஆணவம், கன்மம், மாயை என்ற மலங்களை அறுக்கக் கூறுகிறார். அப்படிப்பட்ட மும்மலத்தை அறுத்தவர் நம் பூண்டி மகான். அவர் உடலில் ஏற்படும் மாற்றத்தைப்பற்றி சிந்தனை அற்ற சித்த மகா புருசர் ஆவார்.

"நாறுமீனைப் பலதரம் நல்ல தண்ணீரால்
நாளுங் கழுவினும் அதன்நாற்றம் போமோ
கூறுஉடல் பல நதியாடிக் கொண்டதால்
கொண்ட மலம் நீங்காதென் றாடுபாம்பே!

நாற்றங் கொண்ட மீனைத் தூய நீரில் தினம் கழுவினாலும் அதன் நாற்றம் போகாது. அதுபோல் நாம் கோயில் பல சென்று, தீர்த்தங்கள் பல் மூழ்கியும் புனித நதிகளில் மூழ்கினும், நம்மிடம் உள்ள ஆணவம், கன்மம் மாயை போன்ற மும்மலம் போகுமோ? போகாது. அதை வேறுடன் களைந்தவன் மலங்களை அறுத்தவன் ஆகிறான். அப்படிப்பட்ட மும்மலத்தை வென்ற முனிவர் நம் பூண்டி மகான். அவருக்கேது மலமும், சலமும். தன் திரேகத்தை விட்டு "ஆன்மா" வைப் பிரித்து அதனுடன் ஒன்றி தன் உடலையே வேறாக நின்று பார்க்கும் நிலை ஞானிகள் நிலை. அவர்கள் தன் உடல்படும் உபாதைகளைப்பற்றி விருப்பு, வெறுப்பு அற்ற தன்மையில் உள்ளனர்.

மெய்ஞானி ஒருவர் தன் ஞான யோகத்தால் தன்னைத்தான் உணர்ந்து, தான் அதுவானவர்கள். தலைவனைச் சேர்ந்து தலைவன் ஆனவர்கள் மெய்ஞானிகள். இங்கு தன்னை என்பது தன் உடலை அல்ல. தன்னுள் உள்ள சீவான்மாவைக் கண்டு உணர்ந்து அதை பேரான்மாவில் ஒன்றிவிடும் நிலை. பேரானந்த நிலை.

அப்படி தன்னைத்தான் உணர்ந்து தான் அதுவானவருக்கு மலத்தைப் பற்றியோ, சலத்தைப் பற்றியோ, எறும்பு தன் காலில் ஓட்டை போட்டு போவது பற்றியோ, தன் உடலில் தேள், நட்டு வாக்கிளி நடமாடுவதைப் பற்றியோ கவலையோ, துன்பமோ, இன்பமோ ஏதும் கிடையாது.

அவர்கள் அக உலகத்தில் இருப்பவர்கள். புறஉலக நினைப்போ, கவலையோ கிடையாது. புற உலக நினைப்பும், மறப்பும் அற்ற நிலை நம் பூண்டி சுவாமிகள் நிலை.

தானான காயத்தை நிறுத்த வேண்டும்
சதாகாலமும் சுக்கிலத்தைக் கட்டவேண்டும்
வேனான மும்மலத்தை யறுக்க வேண்டும்
வெளியான சிதாபாசம் நீக்க வேண்டும்
பானான முச்சுடரை யறுக்க வேண்டும்
பாழான தூலமதை வெறுக்க வேண்டும்
பானான பராபரியை நிர்த்தன் செய்து
மானிலத்தில் வாழ்பவனே சித்தன்.

"மலமும் சலமும் அற்று, மாயை அற்று மானம் அற்று
நலமும் குலமும் அற்று நான் இருப்பதெக் காலம்."

"மும்மலமும் சேர்ந்து முளைத்தெழுந்த காயம் இதை
நிர்மலமாய்க் கண்டு வினைநீங்கி இருப்பதெக் காலம்".


"செம்பில் களிம்புபோல் சிவத்தை விழுங்க மிக
வெம்பி நின்ற மும்மலத்தை வேறுசெய்வதெக் காலம்".

ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலம் அறுந்தால் இந்த உள்ளமும் உடலும் தூய்மையை அடையும். இது சமாதி நிலைக்கு ஏற்ற நிர்மலமாகி விடும். இப்படிப்பட்ட சமாதி நிலை கடந்தவர் நம் பூண்டி தேவ தேவன்.

1. காமக்கடலை கடந்து கரையேறிப் போனவர்
2. ஆட்டம் ஒன்றுமில்லாமல் அசைவு சற்றும் காணாதவர்
3. தேட்டம் அற்ற வான்பொருளைக் கண்டவர்
4. மும்மலத்தால் உடைய காயத்தை நிர்மலமாய் கண்டவர்
5. பிறப்பும் இறப்பும், மறப்பும் நினைப்பும் அற்று மாண்டிருந்தவர்
6. கூடு விட்டுக் கூடு பாயும் குறிப்பறிந்தவர்
7. ஆங்காரம் உள்ளடக்கி ஐம்புலனைச் சுட்டறுத்து தூங்காமல் தூங்கும் சுக தேவர் அவர்
8. மாயப் பிறப்பறுத்து காயாபுரிக் கோட்டையை கைக்கொண்டவர்
9. ஆறு ஆதாரங்களையும் அதற்கு மேலுள்ள ஆதாரமும் கண்டு ஆதாரமான ஆண்டவன் அவர்.
10. மாளாமல் மாண்டு மாற்றிப் பிடிக்க மருந்தைக் கண்ட மெய் ஞானி அவர்.

ஞானிகளைப்பற்றி இடைக்காட்டுச் சித்தர் தன் சித்தர் பாடலில் கூறுகிறார். ஆட்டையும், கோனாரையும் முன்னிலைப் படுத்திப் பாடுகிறார். இவர்

பொதிகைமலைச் சாரலில் ஆடு மாடுகளை மேய்த்துக் கொண்டிருக்கும் போது, நவநாத சித்தர்களில் ஒருவர், அவ்வழியே செல்லும்போது அந்த நவநாத சித்தருக்கு பால் கொடுத்து உபசரித்தார் என்றும், அதற்கு நவநாத சித்தர் இவருக்கு ''ஞானப்பால்'' ஊட்டி விட்டார் என்றும் கூறுவர். இவரின் சமாதியே திருவண்ணாமலை கோயில் ஆகும்.



சுவாமியின் மடிமீது பூனை வடிவில் பல சித்த மகா புருசர்கள் இருத்தல்

அந்தகரணமெனச் சொன்னால் ஆட்டையும்
அஞ்ஞானம் என்னும் அடர்ந்தவன் காட்டையும்
சந்தத் தவமென்னும் வாளினால் வெட்டினேன்
சாவாது இருந்திட கோட்டையும் கட்டினேன்.
தாந் திமித் திமி தந்த கோனாரே!
தீந் திமித் திமி திந்தக் கோனாரே!

அந்தக்கரணங்களாகிய மனம், அறிவு, புத்தி, அகங்காரம் என்ற ஆட்டையும், அஞ்ஞானம் என்ற ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலக் காட்டையும் தன் யோக தவத்தினால் வெட்டி வீழ்த்தியவன், மெய்ஞானி. அந்த மெய்ஞானிக்கு பிறப்பு, இறப்பு இல்லை என்று கூறுகிறார்.

இடைக்காட்டுச் சித்தர் பாடல்களில், ஆட்டையும், மாட்டையும், கோனாரையும் முன்னிலைப்படுத்தி ஞான மார்க்கப் பாடல்களைப் பாடுகிறார். மீன் விற்பவனை பாடச் சொன்னால், நெத்திலி, கெண்டை,

கெளுத்தி, எரால் என்றுதான் பாடுவார். அதனதன் தன்மை சித்தர்கள் காலத்திலும் இருந்திருக்கும் போலும்.

சீவான்மா சமாதியிலிருக்கும்போது அந்த சீவான்மா தான் சார்ந்த உடலைப்பற்றி கவலைப்படுவது கிடையாது. உடல் பற்று சீவான்மாவிற்கு இருந்தால் பிம்பம், பிரதி பிம்பம் என்று இரண்டாக காணும் தன்மை வந்து விடும். பிம்பம் போலவே பிரதி பிம்பமும் உண்மை என்ற எண்ணம் தோன்றுகிறது. ஆனால் இந்த எண்ணம் மறைந்ததும், நானே அந்த பிர்மம் என்ற மெய்யுணர்வு வந்து விடும். அப்படிப்பட்ட மெய்யுணர்வில் சமாதி கூடி நிட்டையில் சுவாமிகள் சில காலம் மேற்புறம் திண்ணையில் அமர்ந்து இருந்தார்.

பழமலை நாதர்

ஒரு நாள் நள்ளிரவில் பூண்டியிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் நல்ல மழை பெய்து கொண்டிருக்கிறது. பூண்டியே நிசப்தமாக உள்ளது. பூண்டியில் விவசாயம் சீவனம் செய்யும் ஒரு உடையார், தன் மாட்டுக் கொட்டகையில் பசுவைக் காணவில்லை என்று, கையில் குடையை எடுத்துக் கொண்டு, சுவாமி அமர்ந்து இருந்த வீட்டுப் பக்கமாக வந்தார்.

மழை இன்னும் விட்டபாடில்லை. ஆதனால் குடை பிடித்துக் கொண்டு சுவாமி அமர்ந்திருந்த வீட்டிற்கு மேற்குப் பக்கமாக சுமார் 100 அடி தள்ளி வந்து கொண்டிருந்தார் அப்போது அவர் கண்ட காட்சி-

"சுமார் நான்கு பேர் மிக அழகான ஆண் உருவம். பூலோக மக்கள் போல் தோன்றவில்லை. சுவாமிக்கு சாமரம் வீசிக் கொண்டிருப்பதைக் கண்டார். தன் கண்ணில் தெரிவது மாயத்தோற்றமா என்று நினைத்து அப்படியே தெருவில் நின்றுவிட்டார். அவ்விடம் ஒளி நிறைந்து காணப்பட்டது. அந்த அன்பருக்குப் பயம் வந்துவிட்டது. இது சாதாரண தோற்றமாகத் தெரிவிலலை. தெய்வீகத் தோற்றமாகக் கண்டு பயந்து வீட்டிற்கு ஓடிவிட்டார். இந்த சம்பவம் மறுநாள் காலையில் ஊர் முழுவதும் பரவத்தொடங்கியது. சுவாமி பெரிய சித்த மகா புருசர் ஆகத்தான் இருக்க முடியும் என்று மக்கள் நினைத்து விட்டனர். இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு சுவாமி மகிமை வெளியே பரவத்தொடங்கியது. இதைப் புரட்டாசி மாதம் இரவு, மழையில் கண்டார். இந்த சம்பவமும் மற்றோர் சம்பவமும் சுவாமி சாதாரண மகான் இல்லை. அவர் பெரிய பொருள். விளக்கிட முடியாத ஞானப்பொருள் என்பதை மக்கள் உணர காரணமாக அமைந்தது.

சுவாமிகள் மேற்புறம் திண்ணையில் யோகசமாதியில் இருந்தார். ஒரு ஆடி மாதம் பெரும் சுழற்காற்று அடித்து இடியும், மின்னலுமாக, மூன்று நாள் மழை கொட்டியது. பூண்டி ஆற்றங்கரையில் மரங்கள் வேருடன் சாய்ந்து விட்டது. மாலை 3 மணிக்கு ஆரம்பித்த காற்று மழை இரவு 8 மணி அளவில் பெய்து முடித்தது.

பொதுவாக கிராமங்களில் மாலை 6 மணி (அல்லது) 7 மணிக்கெல்லாம் ஆள் நடமாட்டம் குறைந்து ஊர் நிசப்தமாகக் காணப்படும். காற்று, மழை வேறு பெய்ததால் ஊர் 7 மணிக்கெல்லாம் அடங்கி விட்டது. பூண்டியைச்

சேர்ந்த அன்பர் ஒருவர் சுவாமியிடம் பக்தி உள்ளவர். (பெயர் வேண்டாம் என்று கூறிவிட்டார்). சுவாமியின் மகிமைகளையும் அற்புதங்களையும் கண்ட பலர், தங்கள் பெயரை எழுத வேண்டாம் என்று கூறிவிட்டனர்.

அந்த நண்பர், சுவாமி மூன்று நாட்களாக யோகத்தில் கண்ணைத் திறக்காமல் இருக்கிறாரே, இன்று மழை வேறு. அதனால் சுவாமிக்குச் சுடச்சுட சோளக்களியை செய்து சுமார் 11 மணி அளவில் சுவாமி இருக்கும் திண்ணையை நோக்கி நடந்தார். திண்ணைக்கும் இவர் நடந்து கொண்டிந்ததற்கும் சுமார் 50 அடி தூரமிருக்கும். அப்போது அவர் கண்ட காட்சி: திடீரென்று ஒரு மின்னல் போல் ஒளி. சுவாமி அமர்ந்து இருந்த திண்ணைக்கு கீழ் சுமார் 10, 15 பாம்புகள் படம் எடுத்துக் கொண்டு சுவாமியைப் பார்த்தவாறு குத்திட்டு ஆடாமல் அசையாமல் இருந்தன.

சோளக்களியை கொண்டு சென்ற அன்பருக்குப் பயம் வந்து விட்டது. சோளக்களியை கீழே போட்டுவிட்டு பிரமை பிடித்தவர் போல் சுமார் ஐந்து நிமிடம் அப்படியே நின்றுவிட்டார். முன்னுக்கோ பின்னுக்கோ போக அவருக்குத் தைரியம் வரவில்லை. சற்றுமுன் ஏற்பட்ட மின்னல் போன்ற ஒளியால் கண் வேறு கூசுகிறது. என்ன செய்வதென்று தெரியாமல் நின்று விட்டார்.

அப்போது சுவாமி அமர்ந்திருந்த வீட்டின் திண்ணைப் பக்கமிருந்து நரன் வருகிறான்! நரன் வருகிறான்! என்ற ஒலியைத் துல்லியமாகக் கேட்கிறார். உணவு கொண்டு சென்ற அன்பருக்கு ஒன்றும் புரியவில்லை. நம்மை நரன் என்றால் இவர்கள் யார்? இவர்கள் வணங்கும் மகான் எப்படிப்பட்ட நிலையை அடைந்தவர். மேலும் பாம்புகள் தவிர மனிதன் யாரும் அவ் விடமில்லை. பேச்சுக் குரல் எப்படி வந்தது என்று புரியாமல் நின்றுவிட்டார்.

அந்த நேரம் இவர் நின்றிருக்கும் இடத்திற்கு எதிர்ப்புறமாக ஒரு உடையார் ராந்தலுடன் வருகிறார். அவரைப் பார்த்து உணவு கொண்டு போன அன்பர், சுவாமி இருக்கும் திண்ணைப் பக்கம் வராதே என்று கூற வாயெடுத்தார். ஆனால் வாய் பேச முடியவில்லை. ராந்தலுடன் வந்த உடையார் 'ஏன் இங்கு தனியாக நின்று கொண்டிருக்கிறாய்' என்று கேட்டார்.

உணவு கொண்டு சென்ற அன்பர் நடந்த விவரங்களைக் கூறினார். அதற்கு ராந்தலுடன் வந்த உடையார் 'நான் திண்ணையை ஒட்டித்தான் நடந்து—வருகிறேன். ஒரு பாம்பு மில்லையே, ஏதோ உனக்கு மயாத் தோற்றம். வீட்டிற்கு போய்ப் படு' என்று கூறிவிட்டு போய்விட்டார்.

மறுநாள் காலையில் அன்றிரவு நடந்த சம்பவம் மெதுவாக ஊர் முழுவதும் பரவத் தொடங்கியது. ராந்தல் கொண்டு வந்ததாகக் கூறப்பட்ட உடையாரை அழைத்து, ஊரார் கேட்கும்போது 'நேற்று நான் ஊரிலேயே இல்லை. காற்று மழைக்கு பயந்து கொண்டு போளூரிலேயே நேற்றிரவு தங்கிவிட்டு காலை 8 மணி வண்டிக்கு பூண்டி வந்தேன் என்று கூறினார். இந்த நிகழ்ச்சி சுவாமி ஒரு பெரிய தேவ புருசர் என்றும், பாம்புகள் நிறைய வந்ததால் ''பாம்பாட்டிச் சித்தராக'' இருக்கும் என்றும் மக்கள் மத்தியில் நம்பப்பட்டது.

அன்றிரவு வந்த பாம்புகள் யார்? பாம்புருவில் வந்த சித்த மகா புருசர்கள் யார்? ராந்தல் கொண்டு வந்த உடையார் யார்? என்ற கேள்விக்கு கடைசிவரை பதில் கிடைக்கவில்லை.

இந்த சம்பவம் நட்சத்திரக் கோயிலுக்கு ஆடிக் கிருத்திகைக்கு வந்த மக்கள் மூலம் வெளியூர்களிலும் பரவத்தொடங்கியது. வெளியூர் அன்பர்கள் நிறைய வர ஆரம்பித்தனர்.

வெளியூர்களிலும் பக்கத்துக் கிராமங்களிலிருந்தும் வரும் பக்தர்கள் கொடுக்கும் வாழைப்பழம், சாத்துக்கொடி, பூமாலைகள், இன்னும் பலவித பழங்கள், பணம்காசுகள் போன்றவற்றை சுவாமி அமர்ந்திருந்த வீட்டின் தெரு நடையில் போட்டுவிடுவார்கள். அதை யாரும் எடுக்கக்கூடாது என்று சுவாமி கூறிவிட்டார். அவனவன் கர்மாவைத் தொலைக்க இங்கு கொண்டு வந்து போடுகிறான். அதைத் தொட்டால் அந்த கர்மா உன்னைத் தொடரும். அதனால் அதை எவரும் தொடக்கூடாது'' என்பார். நாளடைவில் அவை ஒரு மலை போல் சேர்ந்து விட்டது.



சுவாமிகள் கைஆட்டினால் 4, 5 நாள் கையை ஆட்டியபடியே இருப்பார். இது அவர் மெய்யுணர்வு அற்ற நிலை

அதில் சின்ன அதிசயம் என்றால் பக்தர்கள் கொண்டு வந்து போட்ட பழங்கள் அழுகுவதில்லை. ஈ,எறும்பு, கொசு மொய்ப்பது கிடையாது. போட்டபொழுது எப்படி இருந்ததோ அப்படியே இருக்கும். அழுகல் வாசனையோ, மற்ற வாசனையோ கிடையாது. எப்போதும் அத்தர், புனுகு, சவ்வாது, சாம்பிராணி வாசனை வந்து கொண்டிருக்கும். விபூதி வாசனையும், ஒரு வித வத்தி வாசனையும் சுவாமியிடம் எப்போதும் வந்து

கொண்டிருக்கும். பூண்டியில் நாம் அந்தத் திண்ணை சமீபமாக போனதும், ஒருவித நறுமண வாசனை விபூதி வாசனை கலந்து வரும். அந்த மாதிரி வாசனையை நான் வேறெங்கும் கண்டதில்லை. அந்த நறுமணம் பூண்டி மகானுக்கே உரியது. இப்போதும் நம் பூண்டி மகானை மனதில் வணங்கினால், நம் நாசியில் அந்த நறுமணம் வாசனை நுகர்வது போல் உணர்வு ஏற்படும். இப்படி அன்பர்கள் கொண்டு வந்த இனிப்பு பண்டம், பழவகைகள் எல்லாம் ஒரு பெரிய குவியலாகச் சேர்ந்துவிட்டபோதும் அழுகல் தன்மையில்லாமல் இருந்ததாலும் பழமலைபோல் சேர்ந்து விட்டதால் சுவாமிகள் "பழமலைநாதர்" என்று அன்பர்களால் பக்தியுடன் அழைக்கப்பட்டார்.

மேலும், சுவாமிகள் பாம்பாட்டிச் சித்தர் என்பது, சுவாமியிடம் வந்த அன்பர்கள், சுவாமியிடம் பணியாற்றிய சாதுக்கள் போன்றோரின் கருத்து ஆகும். அதற்கு உதாரணமாக, சுவாமி அமர்ந்திருந்த இடத்தில் சுவாமியின் தொடை இடுக்கு, சுவாமியின் கால் அடியில் அடிக்கடி பாம்பு தென்படும். யாரையும் எதுவும் செய்தது கிடையாது.

பாம்பாட்டி சித்தரின் சமாதி கோயிலே விருதாசலம். மணி முத்தாற்றங் கரையில் இருக்கும் திருமுதுகுன்றம் என அழைக்கப்படும் பழமலை நாதர் உறையும் கோயில். அங்கு உறையும் ஈசனுக்கு பழமலை நாதர் என்றும், இறைவிக்கு பெரிய நாயகி என்றும் திருநாமம் வழங்கப்படுகிறது. அதனால் நம் பூண்டி சுவாமியை எந்தக் காரணம் கொண்டு பெயர் வந்தாலும் சரி, அவர் "பழமலை நாதரே" ஆவார். நீண்ட நாள் பொறுத்து அப்பழக் குவியலை அப்புறப்படுத்தினர். அதன் அடியில்கூட எந்தவித பழமோ, பூவோ, அழுகல் தன்மையே அடையவில்லை என்பது ஒரு பெரிய அதிசயமே.

ஸ்ரீ பூண்டி சுவாமிகள் பாம்பாட்டிச் சித்தர் என்பதை, என் நண்பர் ஒருவர் கந்தர் நாடியில் உள்ளதை என்னிடம் கொடுத்தார். அதை அப்படியே கீழே கொடுத்துள்ளோம்.

இனி அந்தப் பாடல்களைப் பாருங்கள்.

முதல் பாடல்

முப்பொருளாய் மூலப் பொருளாய்
மோனநிலை முப்பதுவாய்
அப்பென அரிய பொருளாய்
முன்னிலையில் முந்தித்தோளாய்
முடிவில் ஒன்றாய் அறநிலையாய்
அருள் நிலையாய்
எப்பொருளும் திரிநிலையாய்
இனையதனின் சிவசக்தியாய்

அணுநிலையாய். ஐங்கரமாய்
ஏற்ற நிலையாய்
சுழுத்திஒட்டி ஆக்கமிசை
நவகோளாய் ஆண்டேன்
கதிர்திடத்துப் பிரி நிலையே
காப்புக் காப்பு.

முதல் பாடலுக்குப் பதவுரை

முப்பொருளாய் : இயல், இசை, நாடகமாய்

மூலப்பொருளாய் : அறம், பொருள், பேரின்பமாய்

மோன நிலை : மேலான நிலை, தவநிலை, தியானநிலை என்பன.

முப்பதுவாய் : சிவ, பிர்மா, விட்ணுவாய்

அப்பென அரிய பொருளாய் : முப்புறமும் நீரால் சூழப் பட்டதாய்

முன்னிலையில் முந்தித் தோளாய் : முதல் நிலையில் உருவாகி

முடிவில் ஒன்றாய் : கடைசியில் ஒன்றாகி

அறநிலையாய் : அறமாகவும் (தோற்றமாகவும்)

அருள்நிலையாய் : அருளாகவும் (வளர்ச்சியாகவும்)

எப்பொருளும் திரிநிலையாய் : எல்லாப் பொருளும் மாறுதலாகி (மறைவுற்று)

இனையதனின் சிவசக்தியாய் : இப்படி இயங்கும் அவற்றுள் ஆண்பெண்ணாகி

அணுநிலையாய் : கண்ணுக்கும் புலப்படாத அணுவாகவும்

ஐங்கரமாய் : ஐந்து விதமாய். நீர், நிலம், தீ, காற்று, ஆகாயம்

ஏற்ற நிலையாய் : இதற்கெல்லாம் காரண கர்த்தாவாகியும்

சுழுத்தி ஒட்டி ஆக்கமிசை : இவைகள் செயல்படவும்

நவக்கோளாய் : நவக்கிரகங்களால் ஆளப்பட்டதாகவும்

ஆண்டு, ஏன : ஆட்சிசெய்தும், ஏனைய

கதிர்திடத்து : சூரியனிடத்திலிருந்து

பிரிநிலையே : பிரிந்து வந்ததுவே

காப்பு காப்பு : காப்பாயாக, காப்பாயாக.

விளக்கவுரை

முப்பொருள் எனப்படும் மூலத்திற்கெல்லாம் தலைவனாய் விளங்கும் இறைவனே! முருகா! உன்னை வணங்குகிறேன்.

அதாவது பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரை அவர்கள் எழுதியுள்ள இலக்கிய வரலாறு முதற்பாகத்தில் சூரியனின் ஒரு சிறு பகுதி விண்டு விழுந்ததே பூமியானது என்று இருக்கிறது. அந்த பூமிக்கு காரக தெய்வம் அதாவது கிரகம் அங்காரகன். அங்காரகனுக்கு அதிதேவதை முருகன்: இங்கே கொண்ட நூல் கந்தர் நாடி என்பதாலும் முருகன் கந்தனானதாலும் காப்புச் செய்யுள் முருகன் மேலேற்றியதாயிற்று.

2வது பாடல்

பற்றொவ்வ பருவம் பல்லார் பிணைந்திட்ட
மண்நிலையாய் அறுவென கருநிலையாய்
வடிமேலாய் விந்தென மறுநிலையாய்
வகுத்திட்ட குவலயத்தில் குறித்திட்ட
ஞானநிலை சித்தன் கோர்வை
சிறப்புற சாற்றுகின்ற
ஞானநிலை கோர்வை ஒட்டி அருள்நிலையாய்
யாக்கை வென்ற யோகி நிலை இப்புவியில்
புகன்றிடவே பதினெண்
சித்தரிடைப் பற்று ஒட்டி.

2வது பாடலுக்குப் பதவுரை

பற்று = ஆசை; ஒவ்வ = பிணைக்க; பருவம் = மழை, வெயில், பனி; பல்லார் = பலவகை மண்; பிணைந்திட்ட = இணைந்துள்ள; மண்நிலையாய் = மனோநிலையாய்; அறுநிலையாய் = அணுவுக்குள் அணுவாய்; கரு நிலையாய்; உற்பத்தியின் உறைவிடமாய்; வகுத்திட்ட = இறைவனால் படைக்கப்பெறும். குவலயத்தில் = பூவுலகில்; குறித்திட்ட = குறிப்பிட்டபடி; ஞான நிலை சித்தன் = ஞானிகள் ஆகிய சித்தர்கள்; கோர்வை = வரிசையில்; சிறப்புற சாற்றுகின்ற = சிறப்பாகச் சொல்லக்கூடிய; ஞான நிலை கோர்வை ஒட்டி = ஞானிகள் வரிசையில் வைத்து, அருள் நிலையாய் = அருளாகிய நெறியில்; யாக்கை வென்ற = உடம்பை வெற்றி கொண்ட; யோகிநிலை = யோக நெறியில்; இப்புவியில் = இவ்வுலகில்; புகன்றிடவே = சொல்வதற்கு; பதினெண் சித்தரிடை = பதினெட்டு சித்தர்களின்மேல் பற்று ஒட்டி, பற்று வைத்து.

2வது பாடலின் விளக்கவுரை

தற்பரை, வினாடி, நாழிகை, நாள், வாரம், பட்சம், மாதம், ருது, அயனம், ஆண்டு எனவும் மழை, பனி, வெயில் எனவும் பல பருவமாய் மாறிமாறி வரும் இப் பூமண்டலத்தில் பல்வகை நிற பேதம் கொண்ட மண்ணுலகில் பரம அணுவுக்கணுவாகவும் இந்திரிய பலத்தாலும் விருத்திபெறும் மனித வர்க்கங்கள் நிறைந்திருக்கின்றனர். இவ்வுலகத்தில் சித்தர்கள் நிலையைக்

குறிப்பிடும் போது, அருளான நிலையிலே தன் உடம்பையே வென்ற ஞான இந்திரியங்களை ஆண்டு வெற்றி கொண்ட காமக் குரோத மத மாச்சர்யங் களை மாய்த்து வென்று நின்ற பதினெட்டு சித்தர்களில் இன்று மண்ணுலக மாந்தர்கள் கண்ணெதிரில் காணும் வகையிலே ஒருவரைச் சொல்லுகிறேன்.

3வது பாடல்

பகருகின்ற காய நிலை கற்பகமாக
　　கருத்துபர கலியுகம் சார் சாற்றிட
அருள்நிலைக்க சித்தநிலை வாக்கு ஒட்டி
　　அருளுகின்ற மோனநிலை அரவு ஆட்டி
பூர்வ ஜென்மம் புனிதமுற இப்புவியில்
　　தோற்றம் அன்னார் காளயுத்தி
மகரத் தன்னில் தொன்புரவே பூசம் சார்பாய்
　　பொருள் திடவே சித்தநிலை தீபகிரி எல்லை

3ம் பாடல் பதவுரை

பகருகின்ற காயநிலை கற்பகமாக = சொல்லக்கூடிய உடம்பானது காய கற்ப மருந்துண்டதுபோல் காட்சியளிக்க; கருத்து பர கலியுகம்சார் சாற்றிட = கருத்துச் சொல்லும்போது இந்தக் கலியுகத்தில்; அருள்நிலைக்க சித்தநிலை வாக்கு ஒட்டி = (வந்து) அருள் விளக்கம் செய்யும் சித்தனின் நிலையைக் கூறும்போது; அருளுகின்ற மோன நிலை = அருள் தரும் தவநிலையில்; "அரவு ஆட்டி" = "பாம்பு ஆட்டி" (என்று); பூர்வ சென்மம் = முன் சென்மம் புனிதமுற இப்புவியில் = பூமியில் புனிதத்தன்மை வளர்ச்சி பெற; தோற்றம் = காணப்பட்டார். (பாடலில் பிறந்தார் என்று குறிப்பிடவில்லை; தோன்றினார், அதாவது காணப்பட்டார்) அன்னார் = அவர்; காளயுத்தி = காளயுக்தி வருடம்; (இது 23வது) பரிவர்த்தி காளயுக்தியாகும். அதாவது கி.பி. 1918. அடுத்த 60ம் ஆண்டு கி.பி. 1978. காளயுக்தி 2-11-78ல் சமாதியானார் என்பதும் குறிப்பிடத்தக்கது. மகரத் தன்னில் = தை மாதத்தில் தொன்புரவே = பழமையாகக் கூறும்; பூசம் சார்பாய் = பூச நட்சத்திரம் உடைய நாளில்; பொருள் திடவே = தெரியும்படி; சித்தநிலை = சித்தனின் உருவம்; தீபம் = விளக்கு; கிரி = மலை; எல்லை = எல்லையில்,

3ம் பாடல் விளக்கவுரை

அருமருந்தான காயகல்பம் உண்டவர் போன்ற உடலமைப்பு உள்ளவர் என்று இக்கலியுகத்தார் கூறும்படி அருள்வழி நின்றவர்கள் கூறும் "பாம்பாட்டிச் சித்தர்" என்று முன்சென்மத்தில் விளங்கி வந்தவரான சித்தர் இந்தக் கலியுக மக்களுக்கு கண்களில் தெரியும்படி காளயுக்தி வருடம் தை மாதம் பூசம் சேர்ந்த நன்னாள் தீபம் எரியும் மகிமை பொருந்திய திருவண்ணாமலையில் மக்கள் கண்களுக்குப் புலப்பட்டார்.

4வது பாடல்

பற்றிடவே பண்பொவ்வ பவநிலையில்
சித்தும் ஆடி நாமமிசை சட்டமுகம்
திருவுடனே இன்ப நிலை ஒட்டியுற
ஆற்றிடைச்சார் அமைதியுற அடக்கம்ஒட்டி
அன்னிலையில் அன்பரிடை கண்முனையே
கான் நிலைக்கு மக்கள்முன் தெரிவதாக
வாக்கு ஒட்டி பூரணத்தின் சித்தமொடு
பொருந்தப் பின்னும் அறிவிக்க எல்லையாக

4வது பாடல் பதவுரை

பற்றிடவே = பற்றுபாசம் நிறைந்துள்ள இப்பூவுலக மக்கள் மத்தியில்; பண்பொவ்வ = பண்பொவ்வ = பண்பாடு குறையாமல் ஒப்பும்படி; பவ நிலையில் = அருள் பெரும் தவநிலையில்; சித்தும் ஆடி = சித்துக்கள் காட்டி (விளையாடி); நாமமிசை சட்டமுகம் = பெயர் சண்முகம் என்பதாக; திருவுடனே = தெய்வத் தன்மையுடனே; இன்ப நிலை = பேரின்ப நிலை (யோக நிலை); ஒட்டியுற = வந்து அமைய; ஆற்றிடைச்சார் = ஆற்றில் இருந்து; அமைதியுற = அமைதியாக இருந்து; அடக்கம் ஒட்டி = அடக்கம் வைத்து (இருந்து); அன்னிலையில் = அப்படி இருந்த சமயத்தில்; அன்பரிடை = அன்பர்களின்; கண் முனையே = கண் முன்னால்; கான் நிலைக்கு = காணும்படிக்கு; மக்கள்முன் = மனிதர்முன்; தெளிவதாக = அவர்கள் கண்ணும் கருத்தும் தெளிவு பெற; வாக்கு ஒட்டி = வாக்கு யாவும் (மனம் யாவும்); பூரணத்தின் = பூரணமாக; சித்தமொடு = சிவன்பால் செலுத்தி; பொருந்த = அமைய; பின்னும் = பிறகும்; அறிவிக்க = அறியும் படியாக; எல்லையாக = எல்லையில் இருக்க.

4வது பாடல் விளக்கவுரை

பற்றுமிக்க இப்பூவுலகில், பல சித்துக்கள் ஆடி சண்முகம் என்ற பெயரோடு, தெய்வத் தன்மையான பேரின்ப நிலையுடன், செய்யாற்றில் அமைதியாக யோகத்தில் இருந்தார்.

5வது பாடல்

கும்பம் ஒட்டிக் கூறுகின்ற முன்பின்
மக்கள் முன்னும் முறை நலமே மதியவனார்
கற்கடகமாம் கூறிடமே குடஅரவு
கதிர் ஞானி புலியதாக கந்தனவன் நீசமாக

மாலரக்கண் மங்கைஎன
மறைசுரா தங்க
வர்த்தனை தன் காகன்வில்
சித்தர் கோளாய்
அறிவிக்க கற்கடக ராசிஒட்டி
ஆவியதாய் கவலமாக அரவுகுட்டி

5வது பாடல் பதவுரை

கும்பம் = கலசம்; ஒட்டி = வைத்து; கூறுகின்ற = சொல்லுகின்ற; முன் = முன்னும்; பின் = பின்னும்; மக்கள் = மனிதர்கள்; முன்னும் = முன்பாக; முறைநலமே = முறையுடன் (இருக்கும் இவர் சாதக நிலை).

மதியவனார் = சந்திரனானவர்; கற்கடகமாம் = கடகத்திலாம்; கூறிடவே = சொல்லும்போது; குடம் = கும்பம்; அரவு = பாம்பு (இராகு); கதிர் = சூரியன்; ஞானி = கேது; புலியதாக = சிம்மத்திலாக;

குறிப்பு : புலி = சூரியன்; அம்புலி = சந்திரன் என்பார்கள். (புலி சிங்க இனம்) என்வே சூரியன் சிம்மத்தில் இராகுவுக்கு 7ல் கேது, எனவே கும்பராகு சிம்மகேது; கந்தனவன் = செவ்வாயானவன்; நிச்சமாக = நீசமாக (அங்காரகனுக்கு நீசவீடு கடகம்) எனவே கடக குசன்; மால் = புதன்; அரக்கன் = சுக்ரன்; மங்கைஎன = கன்னியில் எனவும்; மறை = குரு; சுரா = மகரம்; தங்க = இருக்க; வர்த்தனை தன் = பரிவர்த்தனை யோகத்தில்; காகன் = சனி; வில் = தனுசு; சித்தர்கோளாய் = சித்தனுக்கு கிரகமாய் அமைய; அறிவிக்க = (கிரகநிலைகள் இப்படி அமைந்து சித்தனின் யோக பலனை) அறிவிக்க; கற்கடகராசி ஒட்டி = கடகம் சந்திரா லக்னமாகவும்; ஆவியதாய் = உயிராகிய (சென்ம லக்னமாகிறது) கவலமாக = கும்பமாக (லக்னம் அமைய) அரவு = பாம்பு; குட்டி = குட்டி (மறுபிறவி தோன்றியதால் குட்டியானார்).

5வது பாடல் விளக்கவுரை

இவர் மனிதர் கண்ணுக்கு தென்பட்டு நாளாக நாளாக மகானின் மகத்துவத்தை அறியத்தொடங்கினர். உடனே அவரை கலசப்பாக்கம் என்ற எல்லைக்கு முன்பின்னான இடமான பூண்டி கிராமத்தில் அமர்த்தினர். அவரும் அங்கேயே யோகத்தில் இருந்தார். மக்களும் கண்டனர், மனமுருகி நின்றனர், வணங்கினர், வரம்பல பெற்றனர்.

இப்படி அமர்ந்த இந்த மகானின் சாதக அமைப்பும் கும்ப லக்னம், கடக ராசி, கும்பத்தில் இராகுவும் சிம்மத்தில் சூரியன் கேதுவும், கடகத்தில் அங்காரகனும் சந்திரனும், கன்னியில் சுக்ரனும் புதனும், மகரத்தில் குருவும், தனுசில் சனியும் அமைந்திருக்கலாயிற்று.

6ம் பாடல்

சித்தநிலை இப்புவியில் சுழுத்தியதும்
அறிவிக்க சுகம்தனக்கு சுருதிப்படி
கதிர்சிகி அகமதனில் கூட்டதுவும்
இன்பம் பின் ஒற்றபடி அம்மையருள்
சக்திசார்பாய் அகமிசையே அமைதியதும்
ஆராதாரம் அறிவிக்க துடர்பதுவாய்
மூலாதாரம் சுகமதுவே இன்பநிலை
சுவாதிட்டானம் சுருதிப்படி அறிவிக்க.

6வது பாடல் விளக்கவுரை

இனிவரும் பாடல்களுக்கு பதவுரை தேவையல்ல என்பதால் விளக்கவுரை மட்டும் எழுதப்படுகிறது.

சித்தனாகிய இவர் நிலை உலகுக்குப் புலப்பட்டதும் இவர் சாதகத்தில் சிம்மத்தில் ரவி சிகி கூடிக்கொண்டு இருப்பதால் இவருக்குப் பின்னால் பேரின்பமே கிட்டும்.

சக்தியின் காரகக் கிரகமான இராகு இலக்னத்தில் இருப்பதால் இவருக்கு மூச்சுக்கலை என்று சொல்லப்படும் பிராணாயாமம், யோகம், நிட்டை வந்து கூடியது.

7வது பாடல்

மணிபூரகத்தின் இன்பநிலை அடியினொடு
அனாகதம் ஆகினைதன் ஏற்றமுற
விசுத்தியதாய் புவியுதனில் தென்பொவ்வ
இன்பநிலை அடியார்கள் ஏற்றமொடு
துடர்பதுவாய் ஆண்டி இல்லாம் உரைத்திடவே
இன்பம் பல பெரியதோடு கெட்டதனில்
சிதரக்காசம் பெரியதாக கட்டமர
துடர்பதுவாய் அகமதனில் கலிப்பதுவே.

7ம் பாடல் விளக்கவுரை

உந்திக் கமலத்திலே இருந்து கபாலத் தண்டுவரை யோகப் பயிற்சியை வென்று அடியார்கள் அன்பால், இவனே ஸ்ரீ தண்டபாணி யென்றுரைக்கும் வண்ணம், உலகப் பற்றுக்களை உதறி, ஆண்டியைப்போல் ஆனந்த சித்துக்கள் பாடி, அடியார்களின் துன்பங்களை நீக்கினார்.

8ம் பாடல்

இன்பநிலை சத்சித்தோடு வட்டபுவியின்பம்
கும்பமிசை உயர்ச்சியோடு அறிவிக்க
முப்பதுவும் முடித்தான் ஒட்டி
இப்புவியில் அறிவிக்க ஞானம் ஒட்டி
தென்புமுன அதீதி யோகங்கள் பற்றொவ்வ
ஞானமிசை பலன் தரக்கு ஆர்வமுற
அரவுசார் நோக்கதானின் குறைபெறவே
யோகிமுன் சத்சித்தோடு.

8ம் பாடல் விளக்கவுரை

சத்து, சித்து, ஆனந்தம் என்ற சொல் சச்சிதானந்தம் என்ற பேரானந்தத்தையடைந்து, தன் பஞ்சேந்திரியங்களை வென்று மக்கள்முன் பொறுமையாக அமர்ந்து, அதியோகமடைந்து, கேது இலக்னத்தை நோக்குவதால் இவரும் மக்களை பாம்புப் பார்வை போல் கடைக்கண் பார்வையால் மக்களைப் பார்த்து ஆனந்தம் அடைந்தார்.

9ம் பாடல்

வல்லமையாம் திறமையதே ஸ்பரிசம் ஒட்டி
சரக்கலையும் வாசியோக திறமையதே
வையமதில் கண்டிடவே ஞானமதும்
சித்தம் ஆட தனக்குறவே இன்பநிலை
உயர்ச்சியோடு அறிவிக்க இக்கலியுகங்கள்
சித்தரிடை படிமேலாய் புகலுகின்ற
அரவு ஆட்டி அருள்வைக்க ஆதிநிலை
அழகன்வாக்கு நாடிநிலை முற்றுமுற்று.

9ம் பாடல் விளக்கவுரை

வல்லமையான அவருடைய ஸ்பரிசத்தினால் சரக்கலையும் வாசியோகமும் கண்டு தனக்குத் தானே சித்துக்களைச் செய்து கொண்டு தன் மனதிடத்தே பேரின்ப நிலையும் கண்டு இக்கலியுகத்தில் இருக்கின்ற சித்தர்களிலே எல்லோரையும் விட மேம்பட்டவராய் இருக்கின்ற இவர் -

ஆதியிலே பாம்பாட்டி சித்தராய் இருந்து, இன்று ஸ்ரீ "சண்முகானந்தா" என்றும், ஸ்ரீலஸ்ரீ "பூண்டி மகான்" என்றும் குவலயத்தில் கொண்டாடப் படும் அருள்மேலான அவரின் சாதக ஆரம்ப இலக்ன காண்டம் முருகனின் வாக்கு ஒட்டி நாடி முடிந்தது.

இந்தக் கட்டுரை மகானின் பூர்வ சென்மம் பற்றியும், இலக்னம், இராசி, கிரக நிலைகள், யோகங்கள் பற்றியும் அவர் இலக்ன காண்டத்துடன் நிறைவு பெற்றுள்ளது.

இனி இதன் தொடர்பாக கந்தர் நாடியில் பதினோரு கண்டங்கள் ஆராயப்பட வேண்டும்.

சுவாமிகளின் சாதக விமர்சனம்

ல / இரா	இராசி குண்டலி		சந். அ
கு			சு. கே
சனி			பு. சு

இனி சுவாமிகளின் சாதக கிரகநிலை பற்றியும் யோகம் பற்றியும் பார்ப்போம்.

மகானின் சாதக கிரக அமைப்பைப் பாருங்கள். பெருக்கல் குறி போட்ட மாதிரி இந்தப் பக்கம் 3 வீட்டிலும் அந்தப் பக்கம் 3 வீட்டிலும் கிரகங்கள் அமைந்து இருக்கிறது பாருங்கள். இந்த மாதிரி அமைப்பு இலட்சத்தில் ஒருவருக்குத்தான் அமையும். மகான்களும் இலட்சத்தில் ஒருவர்தானே.

1. குருச் சந்திர யோகம்
2. கச கேசரி யோகம்
3. சந்திர மங்கள யோகம்
4. குரு மங்கள யோகம்
5. நீசபங்க ராச யோகம்
6. பரிவர்த்தனை யோகம்
7. சித்திர யோகம்
8. தர்ம கர்மாதிபதி யோகம்
9. பாஞ்சஜன்ன யோகம்

10. புட்கள யோகம்
11. வாசி யோகம்
12. வேகி யோகம்
13. உபசரி யோகம்
14. அசுவ யோகம்
15. ஈசுவர யோகம்

இத்தனை யோகத்திலும் மகானுக்கு அருள் கொடுத்த யோகம் எது தெரியுமா? குரு தியானத்தானத்தில் நின்றதும், 5-9க்குரிய புதன் சுக்ரன் ஒன்று கூடியதும் ஞானகாரக கேது இலக்னத்தைப் பார்த்ததும்தான்.

எல்லாவற்றையும்விட முக்கியமானது ஈசுவரயோகம். இது தான் மகானை உச்சகட்டத்தில் நிறுத்தியது.

அதாவது, நீசம்பெற்ற குரு, நீசமான அங்காரகன், சுக்ரன் இருவரையும் பார்ப்பது. நீசமான அங்காரகன் சமசப்தம கேந்திரத்தில் நின்று நீசமான குருவைப் பார்ப்பது.

இதற்கு சுருதி கூறும் பழமொழி:

"நீசனை நீசன் நோக்கில்
ஈசனும் ஆவான் பாரீர்.

மகானும் ஈசுவரன்தான் என்று சொல்லவும் வேண்டுமா?

மேற்புறத் திண்ணை

மெய்ஞானி ஒருவர் தன்னுள் உள்ள ஆன்மாவைக் கண்டு அதை பர ஆன்மாவுடன் சேர்ந்து பரபிர்மமாய் இருப்பதே சீவன் முக்தர் நிலை. சீவன் முக்தர் ஆனவர் தன்னுடைய நிலையை இறைநிலைக்கு உயர்த்தி பரிபூர்ண நிலை அடைகின்றனர். இதுவே நிர்மலமான சொரூப நிலை ஆகும். இந்த நிர்மலமான சொரூப நிலை. தன் நிலையில் இருந்து பிறழாது, சலியாது, அழிவில்லாத நிலையாகும். இது சீவன் முக்தர்கள் நிலை. அப்படிப்பட்ட சீவன் முக்தரே நம் பூண்டி ஆற்று சுவாமிகள்.

நாம் நம் நிழலைப்பற்றிக் கவலைப்படுவது கிடையாது. அது காலையில் நீண்டிருந்து, உச்சியில் சுருங்கி மாலையில் நீண்டிருக்கும். அது எப்படி போனாலும் நாம் அதைப்பற்றிக் கவலைப் படுவது கிடையாது. அதுபோல் பிர்மஞானி ஒருவர் தன் ஆன்மாவை, உடலிலிருந்து வேறுபட்டு நாம் நம் நிழலைப் பார்ப்பதுபோல் ஞானி, தன் உடலை பார்ப்பார். நாம் நம் நிழலைப்பற்றிக் கவலைப் படாததுபோல் ஞானி, தன் உடலைப் பற்றிய கவலை சிறிதும் கிடையாது. தன்னை உணர்ந்து தன் திரேகத்தை மறந்த நிலை. சீவன் முக்தர்கள் நிலை. அப்படி சுவாமிகள் தன்னைத்தான் உணர்ந்து தன் திரேகத்தை மறந்த நிலையில், சுமார் 2 ஆண்டு காலம் இப்படி நிர்விகல்ப சமாதி கூடி மேற்புறத் திண்ணையில் அமர்ந்து இருந்தார்.

சீவன்களுக்கும், பரம பிர்மமான மெய்ப்பொருளுக்கும் இடையில் அஞ்ஞானமென்றும், மாயை என்றும் திரை மூடிக் கொண்டிருக்கிறது. அந்த மாயை என்ற திரையை ஞானி தன் ஞானயோகத்தால் விலக்கிப் பரம்பொருளைக் கண்டுணர்ந்து அதனுடன் ஐக்கியமாகிவிடும் தன்மை ஞானிகள் நிலையாகும். அப்படி ஐக்கியமாகிவிட்ட ஞானிக்கு வேண்டும், வேண்டாம் என்ற தன்மையும், பிறப்பும், இறப்பும், நினைப்பும், மறப்பும் அற்று பேரான்மாவிடம் பெரும் ஆனந்த நிலையில் உள்ளவர்களே, பிர்ம ஞானிகள், அப்படிப்பட்ட பிர்ம ஞானியே நம் பூண்டி மகான். தேடக் கிடைக்காத தங்கம், காணக் கிடைக்காத பொருள் நம் பூண்டி மகான் ஆற்று சுவாமிகள்.

மெய் ஞானி ஒருவர் தன்னுள் உறையும் ஆண்டவனைக் கண்டு ஆண்டவனானவர்கள்.

மனிதன் புறக்காட்சிக்கு அவன் ஒரு ஜீவன்போல் தோன்றுகிறான். ஆனால் உண்மையில் அவன் பரபிர்மத்தின் ஒரு கூறே. அதுவே ஈசுவர அம்சமாகும். கடல் பரபிர்மம் என்றால் அதில் ஒரு குடம் தண்ணீர் என்று உணர்ந்து அந்த குடநீரைக் கடலில் சேர்த்து கடல் நீருடன் குடநீரை ஒன்றி கடலாவதுதான் ஞானிகள் முடிபு. தன்னுள் உள்ள பிர்மத்தைக் கண்டு பரபிர்மத்துடன் சேர்த்து அதுவும் பரபிர்மமாக ஆவதுதான் சீவன் முக்தர்களின் நிலை. அப்படிப்பட்ட சீவன் முக்தராய் திண்ணையில் இருந்தவர் நம் பூண்டி மகான்.

இதைத்தான்

1. தீர்த்த மாடவேண்டுமென்று தேடுகின்ற தீனர்கள்
தீர்த்த மாடல் எவ்விடம் தெளிந்துநீர் இயம்புவீர்
தீர்த்தமாக உம்முள்ளே தெளிந்துநீர் இருந்தபின்
தீர்த்தமாக உள்ளதும் சிவாய அஞ்செழுத்துமே.

2. கோயிலாவ தேதடா குளங்களாவ தேதடா
கோயிலுங் குளங்களும் கும்பிடுங் குலாமரே
கோயிலும் மனத்துள்ளே குளங்களும் மனத்துள்ளே
ஆவதூவும் அழிவதூவும் இல்லை, இல்லை, இல்லையே.

3. நட்டகல்லை தெய்வமென்று நாலுபுட்பம் சாத்தியே
சுற்றிவந்து மொணமொணவென்று சொல்லும் மந்திரமேதடா
நட்டகல்லும் பேசுமோ நாதன் உள்ளிருக்கையில்
சுட்ட சட்டி சட்டுவம் கறிச்சுவையும் அறியுமோ!

4. ஊரில் உள்ள மனிதர்காள் ஒருமனதாய் கூடியே
தேரில் வடத்தை விட்டுச் செம்பை வைத்திழுக்கிறீர்

ஆறினாலும் அறியொணாத ஆதிநாத சித்த நாதரை
பேதையான மனிதர் பண்ணும் பிரளி பாரும்! பாருமே!

5. கோயில் பள்ளி ஏதடா குறித்து நின்ற தேதடா
வாயினால் தொழுது நின்ற மந்திரங்கள் ஏதடா
ஞாயமான பள்ளியில் நன்மையாய் வணங்கினால்
ஞாயமான பள்ளியில் காணலாம் இறையே.

தன்னுள் உள்ள பிரம்மத்தைக் காண யோகப்பயிற்சி செய்யும் யோகியர்களுக்காக சிவவாக்கியர் பாடுகிறார். உனக்கும், எனக்கும் பாடப்பட்ட பாடல்கள் அல்ல.

சிவவாக்கியர், நதிகள் தோறும் மூழ்கித் தீர்த்தமாட வேண்டாம். தன்னுள் உறையும் ஈசனை தெரிந்து கொள் என்கிறார். பேரண்டத்தில் (உலகத்தில்) உள்ள தீர்த்தங்கள், கோயில்கள் எல்லாம் உன் பிண்டத்தில் (உன் உடலுக்குள்) உள்ளது. அதைத் தெரிந்துகொள் என்கிறார்.



பலநாள் ஒரே பார்வையாக யோக நிலையில் இருக்கும் யோகராசன்

நட்ட வெறும் கல்லில் ஆண்டவன் இல்லை, உன் உடம்பிற்குள் நாதன் உறைகிறார். அவரைக் காண வழியைப்பார் என்கிறார். காய்கறிகளை சமைக்க உதவும் மட்பாண்டம் எப்படி அதனிடத்தில் சமைக்கப்பட்ட காய், கறிகளின் சுவை அறியாதோ, அதேபோல் நட்டகல்லு எப்படிப் பேசும்? பேசாது. நம்முள் உறையும் ஆண்டவனைக் காண வேண்டும். அப்படிக் கண்டு இறைத்தன்மை அடைந்தவர்களே மெய்ஞானியே நம் பூண்டி மகான்.

இது யோக நிலைக்கு போகும் யோகியர்களுக்கு மட்டும் பாடப்பட்டது. இதைப் படித்துவிட்டு நீங்கள் கோயில், குளம் போவதையும், திருவண்ணா மலை, திருவாரூர் தேர்களை இழுப்பதையும் விட்டுவிடாதீர்கள்!

ஒரு பெண் திருமணம் முடிந்ததும், தன் கணவனுடன் இல்லறம் நடத்த மாமியார் வீடு போகுமுன், இல்லறத்தை இனிதாக நடத்தி வெற்றி கண்ட பக்கத்து வீட்டுப் பெண், எதிர் வீட்டுப் பெண், அந்த மாமியார் வீடு போகும் பெண்ணுக்கு எப்படி இல்லறத்தை நல்லறமாக நடத்த வேண்டும் என்று அறிவுரை கூறுகிறார்களோ, அதே மாதிரி நிலையை நோக்கிப் போகும் யோகியர்களுக்காக ஞானம் பெற்ற ஞானிகளால் பாடப்பட்ட பாடல்கள் மேலே கூறியவை.

புதிதாகக் கல்லூரி பட்டப்படிப்பிற்குச் செல்லும் மாணவனைக் கண்டு ஏற்கனவே பல பட்டங்களைப்பெற்ற பேராசிரியர் அம்மாணவனைக் கண்டு எப்படியெல்லாம் சிரமப்பட்டுப் படித்தால் பல்கலைக் கழகப் பட்டத்தைப் பெறலாம் என்று அறிவுரையைக் கூறுவாரோ, அதுபோல் ஞானப் பட்டம் பெற விரும்பும் யோகியர்களைக் கண்டு அறிவுரையை மெய் ஞானிகள் பாடல் வடிவாக எழுதி வைத்துள்ளனர். நமக்காக அல்ல. ஏன்? என்னால் முடியும் என்று நீ நினைக்கிறாய் என்று எனக்குத் தெரியும். அது உன்னால் முடியாது. ஏன் என்றால் உன்னுடன் தொடர்ந்து வரும் சென்மாந்திர கர்மவினை நீங்கினால்தான் உனக்கு அந்த நிலை அடைய வழி ஏற்படும். அதனால் உன்னைப் பல பிறவிகளாக தொடர்ந்து வரும் கர்ம வினையைத் தீர்ப்பதற்கு வழியைப்பார்.

நாம் இன்னும் ஆன்மீகத்தில் தவழும் குழந்தைப் பருவத்தைக் கூட அடையவில்லை. நாம் ஆன்மீகத்தில் படிக்க வேண்டிய அரிச்சுவடிப் பாடங்கள் எவ்வளவோ இருக்கிறது. அந்த அரிச்சுவடி ஆன்மீகப் பாடம் படிக்கவே எத்தனையோ பிறவிகள் தேவைப்படும். அதனால் ஆன்மீகக் கல்லூரிப் படிப்பைப்பற்றி நீ நினைக்க வேண்டாம்.

நாம் பொம்மை, படங்கள் வைத்து விளையாடும் தன்மை உள்ள ஆன்மீகக் குழந்தைகளாக உள்ளோம். யானை, மாடு, மனிதன் என்றால் நம்மால் உணர முடியாது. யானை போன்ற பொம்மை, யானை போன்ற படங்களைக் கொடுத்தும், மனிதன், மாடு போன்ற பொம்மைகளையும் படங்களையும் கொடுத்து விளக்கினால்தான் நாம் புரிந்து கொள்ளும் நிலைமையில் உள்ளோம். பிறகு பல ஆன்மீகப் பாடங்களைக் கண்டு தேர்ந்த பிற சித்தர்கள் பாடுவதுபோல் கோயிலுக்கும், குளங்களுக்கும் போகாமல் இருக்கலாம். தற்போது நம் நிலைமைக்கு ஏற்றார்போல் நடப்பது தான் நமக்கு தர்மம். எல்லோரும் ஞானம் வேண்டி ஓடிவிட்டால் பிறகு உலகமே சூன்யம். அதனால் நீங்கள் இல்லற தர்மத்தை நல்லறமாக நடத்திச் செல்ல முயல வேண்டும்.

துறவிகளுக்கு உணவு, உறைவிடம், பாதுகாப்பு கொடுப்பதற்காகவே இல்லறத்தார்கள் தவம் செய்ய மறந்தார்களோ என்று திருவள்ளுவர் தன் திருக்குறளில் கூறுகிறார்.

"துறந்தார்க்கு துப்புரவு வேண்டி மறந்தார்கள்
மற்ற யவர்கள் தவம்"

என்று கூறுகிறார். நாம் இல்லற தர்மத்தை ஒழுங்காக கடைப் பிடித்து வந்தால் அதுவும் ஓர் ஞானநிலைக்குச் சமம் ஆகும். நீ உன் இல்லற வாழ்க்கையை நல்லறமாக நடத்திச் செல். உன்னை யாரும் தாடி, மீசை வளர்த்து காட்டிற்கு ஓடிவிட எந்த மகானும் கூறவில்லை.

"இல்லறமே நல்லறம்" என்பது ஆன்றோர் வாக்கு.

மேலும்

சன்னியாசி ய்ரனதிலும் மூடருண்டு
சம்சாரி செய்வதிலும் ஞானி உண்டு

அதனால் உனக்கு ஏற்பட்ட சம்சாரக் கடலை முதலில் நீந்திக் கரையேற வழிபார். பிறகு ஞானம் தன்னால் கைகூடி வர பாதையை ஏற்படுத்தும். அதனால் உன்னால் தற்போது சம்சாரக் கடலைக் கடக்க வழி ஏற்படட்டும்.

ஒரு தடவை நானும் சில அன்பர்களும், பூண்டி மகான் கோயிலை, கட்டுவதற்கு பொருளைப்பற்றி ஆலோசனைகளைக் கேட்க திருவலம் மௌனகுரு சிவானந்த சுவாமியிடம் போய் தரிசனம் செய்துவிட்டு, அமர்ந்து இருந்தோம். சுவாமிகள் "நாங்களே இல்லறத்தானை நம்பிக்கொண்டு இருக்கிறோம். நீ என்னடான்னா! துறவறத்தானை நம்பி கூப்பிடுகிறாய்! இல்லறத்தான் துணையில்லாமல் துறவறத்தான் நாங்கள் என்ன செய்துவிடமுடியும். நீ போய் உன் கடமையை ஒழுங்காகச் செய். திருவருள் துணையிருந்து கூட்டி வைக்கும்" என்று கூறி விட்டார். இதையே திருவள்ளுவர் தன் திருக்குறளில், பற்றற்ற துறவிகளுக்கும், பொருளற்ற ஏழை எளியவர்களுக்கும், தன்னிடத்தே ஆதரவின்றி இறந்தவர்களுக்கும், இல்லறத்தை மேற்கொண்டவன் துணையாவான் என்று கூறுகிறார்.

"துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை."

அதனால் உன் இல்லறக் கடமையைச் செய்து வெற்றியடைய வழி பார். இது ஞானப் பெருங்கடல். நம் கண்ணால் கண்ட தெய்வம் ஸ்ரீ பூண்டி மகானின் நிலையென்ன? அத்தெய்வம் மனிதர்களுக்கு ஆற்றிய நன்மைகள் என்ன? அவர் உலக மக்களுக்கு என்னென்ன வினைகளைத் தீர்த்து வைத்தார். அத்தெய்வத்திடம் விபூதியை மருந்தாகப் பெற்று எத்தனை பேர் எத்தனை விதமான நோய்களைப் போக்கிக் கொண்டனர் என்றும், கண் பார்வையால் ஞானத்தை எத்தனை பேர் அடைந்தார்கள் என்பதையும், உலக மாந்தர்கள் அறியும் பொருட்டு எழுதப்பட்ட புத்தகம் இது என்று உணர வேண்டுமே தவிர, உன்னை யாரும் தாடி, மீசை வளர்த்து சாமியாராகப் போய்விடச் சொல்லி எழுதப்பட்ட புத்தகம் அல்ல என்று உணர வேண்டும்.

நாம் தக்க குரு கொண்டு, குரு காட்டும் வழியாக யோகப் பயிற்சியைச் செய்து, நம்முள் உள்ள "ஆன்மா" வைக் கண்டு, ஆன்மாவே நான் என்று உணரும்வரை, உருவங்களுடன் (சிலா வடிவம்) உள்ள கடவுளை வணங்கும் தன்மையுள்ளவர்கள் ஆகிறோம். கடவுளுக்கு உருவம் இல்லை என்றாலும், நமதுவழிபாட்டை அவர் ஏற்றுக் கொள்வார்.

உலகில் சேதனப் பொருள் (மரம், செடி, கொடி, மாடு, கன்று போன்றவை)களிலும், அசேதனப் பொருள் (மலை, குன்று, பாறை, கல் போன்ற உயிர் அற்ற பொருள்)கள் அனைத்திலும் பிர்மம் இருப்பதாக ஞானிகள் கூறுகிறார்கள். அப்படி பிர்மம் உறையும், சேதன அசேதனப் பொருளாகிய கல்லையும், மாட்டையும் உருவப்படுத்தி நாம் வணங்குவதில் எந்தவிதத் தவறும் இல்லை. தவறு ஒன்றும் ஏற்படவும் போவதில்லை.

இந்த நூற்றாண்டில் திருவண்ணாமலையில் எழுந்தருளியிருந்த நடமாடும் தெய்வம் "சேசாத்திரி சுவாமிகள்" ஒரு நாள் குட்டையில் சேருடன் படுத்துக்கொண்டு இருந்த எருமையைக் கட்டிப்பிடித்து வணங்கினாராம். இதைக் கண்ட அன்பர்கள் "என்ன சுவாமி, எருமை மாட்டைப் போய் கட்டிப்பிடித்து வணக்கம் சொல்கிறீர்" என்று கேட்டனர். அதற்கு சேசாத்திரி சுவாமிகள் "இது எருமையல்ல, பிர்மம்! பிரம்மம் என்று கூறு" என்று கூறிவிட்டு ஓடிவிட்டாராம். சுவாமிகள் கூறுவதுபோல் எல்லா வசுத்துக்களிலும் பிர்மம் இருப்பதால் யானை முகம் கொண்ட கணபதியையோ, பன்றி முகம் கொண்ட நாராயணனையோ வணங்குவதில் தவறு ஒன்றும் இருப்பதாகத் தெரியவில்லை. அதனால் நம் இல்லற அன்பர்கள் உருவ வழிபாட்டையும் குளங்கள் தோறும் நீராடி ஆண்டவனை வழிபட்டு விட்டபிறகு ஆன்மீகப் பள்ளியில் முதல் பாடமான உருவமற்ற ஆண்டவனை வணங்குவோம் என்று அறியவும்.

தூங்காமல் தூங்கிச் சுகம்பெறுதல்


மேற்புறத் திண்ணையில் சுவாமிகள் இரவும், பகலும் உட்கார்ந்தவர் உட்கார்ந்தபடியே இருந்தார். அவர் தூங்கவே இல்லை. ஆனால் தூங்காமல் தூங்கிச் சுகம் பெற்றார். அவருக்கு தூக்க நிலை, விழிப்பு நிலை என்ற மாறுபாடு அற்ற தன்மையில் தூங்காமல் தூங்கிச் சுகம் பெற்று திண்ணையில் யோக தட்சிணா மூர்த்தியாக காட்சியளித்து வந்தார்.

சமாதி நிலையில் சுவாமிக்கு உலக உணர்வு கிடையாது. புற உலகில் அவர் இல்லை. புற உலகில் நடப்பதைப் பற்றி கவலையோ ஆனந்தமோ அடையும் நிலையில் சுவாமிகள் இல்லை. அக உலகில் தன்னைப் பற்றிய உணர்வு. தன்னை தானறிந்த நிலையில் சமாதியில் இருந்தார். தன்னுள் உள்ளதை உள்ளபடி அறியும் மெய்யறிவாய் அவர் சமாதி நிலையில் இருந்தார்.

உறக்கத்தில் இருப்பதுபோல் நம் உள்ளம் இருக்க வேண்டும். அப்போதுதான் நம் உள்ளம் புற உலகில் இருக்காது. மனம் புற உலகில் இல்லையானால் எண்ணங்கள் புற உலகில் செல்லாமல் ஒடுங்கிவிடும். எண்ணங்கள் ஒடுங்கினால் மனமும் புற உலகில் இருந்து ஒடுங்கிவிடும்.

மனம் ஒடுங்கிய நிலை தவநிலை. ஆனால் தன்னுள் உள்ள ''ஆன்மா'' உறங்காமல் விழித்திருக்க வேண்டும். உடலும், உள்ளமும் உறங்க வேண்டும். ஆன்மா விழித்திருந்து சாட்சிப்பொருளாக சும்மா இருக்க வேண்டும். இப்படிப்பட்ட ஞானநிலையே ''தூங்காமல் தூங்கிச் சுகம் பெறுவது'' என்று பொருள். அப்படித் தூங்காமல் தூங்கிச் சுகம் பெற்ற சுகமுனிவர் நம் திண்ணையில் அமர்ந்திருந்த தினகரன் பூண்டி மகான்.

''ஆன்மா'' தன்னைத்தான் உணர்ந்து தனித்து தன் உடல், உள்ளம் படும் பாட்டைக்கண்டு சாட்சிப் பொருளாய் சும்மா இருப்பது ''தன்னைத் தான் உணர்ந்த நிலை ஆகும்'' அப்படி தன்னைத்தான் உணர்ந்து யோக சமாதியில் இருந்தார் நம் பூண்டி மகான். தன்னைத்தான் உணர்ந்து ஆன்மா தனித்து ''சும்மா இரு'' என்ற மாபெரும் தத்துவத்துடன் யோக சமாதியில் இருந்தவர் நம் பூண்டி மகான்.



தூங்காமல் தூங்கிச் சுகம் பெறும் தத்துவத்திலிருந்த பூண்டி மகான்

சும்மா இருந்த நிலை (தூங்காமல் தூங்கிச் சுகம்)

இதைப் பத்திரகிரியார் தன் பாடலில் அழகாகவும் ஆழ்ந்த பொருளுடனும் விளக்குகிறார்.

1. ''ஆங்காரம் உள்ளடக்கி ஐம்புலனைச் சுட்டறுத்துத்
   தூங்காமல் தூங்கிச் சுகம் பெறுவ தெக்காலம்''.

2. ''சுட்டறுக்க ஒண்ணாக் கருவிகரணாதி எல்லாம்
   சுட்டறுத்து நிட்டையிலே தூங்குவதும் எக்காலம்.''

3. "பாசத்தை நீக்கி பசுவைப் பதியில்விட்டு
நேசத்தின் உள்ளே நினைத்திருப்பது எக்காலம்."

4. "சாவாமல் செத்திருந்து சற்குருவின் பொன்அடிக்கீழ்
வேகாமல் வெந்திருக்க வேண்டுவது எக்காலம்."

5. "நடனத்திடை வெளிபோய் நண்ணும் பரவெளியில்
சயனித் திருந்து தலைப்படுவ தெக்காலம்."

6. "தன்னையும் தானேமறந்து தலைவாசல் தாழ்போட்டே
உன்னை நினைத்துள்ளே உறங்குவது எக்காலம்."

7. "மாயப் பிறவி மயக்கத்தை ஊடறத்துக்
காயாபுரிக் கோட்டை கைக்கொள்வது எக்காலம்."

-பத்திரகிரி சுவாமியார்.

ஓங்காரக் கம்பத் தினுச்சி மேலே
உள்ளும் புறம்பையு மறியவேண்டும்
ஆங்கார கோபத்தைத் தாங்கிக் கொண்டே
சாங்கால மில்லா மற்றுணர்வுடனே
சட்ட திட்டமாகச் சேர்த்து சாந்தமாகவே
தூங்காமல் தூங்கியே சுகமடைந்து
தொந்தோம் தொந்தொமென் றாடாய் பாம்பே!

-பாம்பாட்டிச் சித்தர் பாடல்

"தூங்கி விழித் தென்னபலன் தூங்காமல் தூங்கியே நிற்கும்
பாங்கு கண்டால் அன்றோ பலன் காண்பேன் பைங்கிளியே!

என்று தாயுமானவ சுவாமிகளும்

பிறப்பும் இறப்புமற்று பேச்சு மூச்சுமற்று
மறப்பும், நினைப்புமற்று மாண்டிருப்ப தெக்காலம்

ன்று பத்திரகிரி சுவாமிகளும் பாடுகிறார்.

நம் உள்ளத்தில் நிகழும் நினைப்புகளாகிய கோபம், காமம், வெகுளி, ாதம், மாச்சரியம் போன்ற செயல்களுக்குச் சிறிதும் தொடர்பு இல்லாமல் அன்னியன் ஒருவன் போல் நின்று "ஆன்மா" சும்மா அதைப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டும். ஆன்மா சும்மா இருந்து நம் உள்ளத்தில் நிகழும் அலுவல்களைச் சாட்சியாக கவனித்துக் கொண்டு சும்மா இருக்கிறது. சும்மா இருக்கும் செயலுக்கும் சோம்பேரித்தனத்திற்கும் நிறைய வித்தியாசம் உண்டு. இதைத் தான் அருணகிரிப் பெருமான் முருகனைப் பார்த்து,

"செம்மான் மகளை திருடும் திருடன்-இறைவன்
பெம்மான் முருகன் பிறவான் சும்மாயிரு
சொல்லற என்னலுமே அம்மா! பொருள்
ஏதும் அறிந்திலேன்."

முருகப் பெருமான் அருணகிரிநாதரை குன்றுதோறும் வரும் படி பணிந்து "திருப்புகழ்" பாடவைத்து 'சும்மா இரு' என்று விராலி மலையில் கூறிய தாகவும் அந்த சும்மா இரு! என்ற தத்துவம் அறிந்திலேன், எனக்கு அறிய வரம் தர வேண்டும் என்று முருகப் பெருமானை வணங்கிக் கேட்கிறார்.

சும்மா இரு என்று சொல்ல, வேதங்களுக்கும் எட்டாத சித்தமகா புருசர்களும் தேடும், முருகன் மயில்மீது வரவேண்டிய அவசியம் என்ன. அப்படி என்ன "சும்மா இரு" என்ற சொல்லில் தத்துவங்கள் முடங்கிக் கிடக்கிறது என்று அறிய வேண்டும்.

"சும்மா இரு" என்ற சொல்லைச் சொல்ல அறுபடை வீடுகளையும் கோடான கோடி பக்தர்கள் இதயக்கோயிலையும் தன் சக்திகள் இருவரையும் விட்டுவிட்டு அந்த் ஞானப் பழம் வர வேண்டுமா? தேவையில்லை! நாம் எல்லாம் சும்மாதானே இருக்கிறோம், என்ன சாதித்து விட்டோம். இதற்கு ஒரு உபதேசமா என்று நினைக்கிறோம்.

இங்கு "சும்மா இரு" என்றால் சும்மா யிருக்கும் சோம்பேறித்தனமல்ல. "ஆன்மா" மனதுடன் கலந்து புற உலக விசயங்களில் மனதை செலுத்தி அல்லல் படுகிறது. அந்த அல்லல் படும் ஆன்மாவை மனதிலிருந்து பிரித்து சும்மா வேறாக இருந்து மனம் படும் செயல் பாட்டை கவனித்துக் கொண்டிருக்கும் ஞான நிலையே, "சும்மா இரு" என்பதன் பொருள்.

இதுவே சீவ "சாட்சித் தன்மை" என்றும் ஞானிகள் கூறுகிறார்கள்.

அப்படி புற உலகையும், தான் சார்ந்திருக்கும் உடலையும் மறந்து "ஆன்மா" தனித்திருந்து, தன் உள்ளமும், உடலும் செய்யும் செயல்பாட்டிற்கு ஆன்மா தான் காரணமில்லாமல் சும்மா இருக்கும் நிலைக்கு 'சும்மா இரு' என்றும், தூங்காமல் தூங்கிச் சுகம் பெறும் நிலை என்றும் கூறுவர். இதைத்தான் இராமலிங்க சுவாமிகள் "தனித்திரு" "விழித்திரு" "பசித்திரு" என்ற மாபெரும் தத்துவ மூலம் உலகிற்குக் கூறினார்.

நம் மனமும், சித்தமும் கட்டுக்கடங்காமல் புற உலகில் திரிவதை, கட்டுப்படுத்தி சமநிலைக்குக் கொண்டு வந்து சும்மா இருக்கும் சமநிலையே "தூங்காமல் தூங்கும் நிலை" என்றும் "இறவாமல் இறந்த நிலை" என்றும் கூறுவர். சித்தம் புறநிலையை அறியாமல் அது பரிபூர்ணத்தில் ஒன்றி பரிபூர்ணத்துடன் இறை இன்பம் அனுபவிக்கும் நிலை. அது தூங்குவதுபோல் தெரியும். ஆனால் அது தூங்கவில்லை. இதைத்தான் பத்ரகிரியார் "தூங்காமல் தூங்கிச் சுகம் பெறுவதெக்கலாம்" என்று பாடுகிறார். அப்படி தூங்காமல் தூங்கிச் சுகம் பெற்ற மாபெரும் நிலையில் நம் பூண்டி சுவாமிகள் மேற்புறம் திண்ணையில் சமாதிநிலை கூடி அமர்ந் திருந்தார்.

பாலில் மோரை புறை குற்றினால் அந்தப் பாலை ஆடாமல், அசையாமல் இருந்தால்தான், பால் தயிராகி, தயிர் மோராகி, மோரிலிருந்து வெண்ணை எடுத்து நெய் ஆக்க முடியும். பால் ஆடும் பாத்திரத்தில் இருந்தால் அது தயிர் ஆகாது. அதுபோல் சஞ்சலமற்ற அசையாத மனம் தவத்திற்கு உகந்ததாகும். மனம் இந்திரியங்களை விட்டு நீங்கிச் சும்மாயிருக்கும் அளவிற்கு அது சுகசொருபம் ஆகிறது. அதுவே "சும்மாயிருக்கும் சுகம்."

அசையாத, ஆடாத நீரில் நம் முகம் தெளிவாகத் தெரியும். அசையும் தண்ணீரில் நம் முகம் தெரியாது. எனவே மனம் இந்திரியங்களின் அலுவல்களைவிட்டு தெளிவுடன் இருந்தால் சுக சொருபத்தன்மை அடையும். அப்படிப்பட்ட சுக சொருபத் தன்மையில் இருந்தால் நம் பூண்டி அவதார புருசர்.

இதைத் தாயுமான சுவாமிகள் தம் பாடலில் கூறுகிறார்.

1. "ஏதுக்குஞ் சும்மா இருநீ எனவுரைத்த
சூதுக்கோ தோன்றத் துணையாகிப்-போதித்து
நின்றதற்கோ என்னையா நீக்கிப் பிரியாமல்
கொன்ற தற்கோ பேசாக் குறி."

2. "குறியுங் குணமுமறக் கூடாத கூட்டத்
தறிவறிவாய் நின்றுவிட ஆங்கே - பிறிவறவுஞ்
சும்மா இருத்திச் சுகங்கொடுத்த மோனநின்பால்
கைமாறு நானொழிதல் காண்."

3. "சும்மா இருக்கச் சுகமுதய மாகும்
இம்மாயா யோகமினி யேனடா - தம்மறிவின்
சுட்டலே யாகுமோ சொல்வேண் டாங்கன்ம
நிட்ட சிறுபிள்ளாய் நீ."

4. "சும்மா விருக்கச் சுகஞ்சுக
மென்ற சுருதியெல்லாம்
அம்மா நிரந்தரஞ் சொல்லவுங்
கேட்டும் அறிவின்றியே
பென்மான் மவுனி மொழியையுந்
தப்பிஎன் பேதமையால்
வெம்மாயக் காட்டில் அலைந்தேன்
அந்தோஎன் விதிவசமே."

5. "தேகச்செயல் தானுஞ் சிந்தையுடனே குழையில்
யோகநிலை ஞானிகளுக் கொப்புவதோ - மோகநிலை
அல்லலிலே வாழ்வாரோ அப்பனே நீயற்ற
எல்லையிலே சும்மா இரு." -தாயுமானவ சுவாமிகள்

"இன்றுவருமோ நாளைக்கேவருமோ அல்லது-மற்
றென்று வருமோ அறியேன் எனகோவே - துன்றுமல
வெம்மாயை யற்று வெளிக்குள் வெளிகடந்து
சும்மா இருக்கும் சுகம்".

சென்ற நூற்றாண்டில் இருந்த சித்தர் வள்ளலார் தனக்கு "சும்மா இருக்கும் சுகம்" எப்போது வரும் என்று ஆண்டவனை வேண்டி வணங்கிக் கேட்கிறார்.

-இராமலிங்க சுவாமிகள்

"சும்மா இரு - நானே
கடவுள் என்று அறி".

"உள்ளது நானே உள்ளேன்
கடவுள் ராஜ்யம் உன்உள்ளே உள்ளது."

"ஏப்ரகம் தோன்றும்முன் நானே உள்ளேன்
நானும் என்தந்தையும் ஒன்றே".

என்கிறது கிறித்தவ மதம்.

ஆதாம் என்பவன் உலகிலே முதன்முதலாகத் தோன்றிய மனிதன் என்கிறது கிறித்துவ மதம். அவன் தூய்மையே வடிவானவன். அத்தூய்மை நிலையிலிருந்து வழுவிப் போனான். அந்த ஆதாம் பழையபடி மனிதத் தூய தன்மையை அடைய வேண்டும் என்பதே ஒட்டுமொத்த கிறித்தவ மத சித்தாந்தம் *(Be ye Perfect the Father in Heaven in Perfect)*.

ஆக, மனிதன் திரும்பவும் தனது தூய பரிபூர்ண நிலைபெற வேண்டும் என்கிறது. இதை இசுலாம் மதம் ஏற்றுக் கொள்கிறது. இதையே இந்து மதம் பிர்மம் என்கிறது. புத்த மதம் நிர்வாணம் என்று கூறுகிறது. நிர்வாணமாக பரிசுத்த நிலை அடைய புத்த மதம் கூறுகிறது.

இப்படி எல்லா சமயங்களும், மதங்களும் ஒரே தூய்மையான பரபிர்மத்தை அடைய வழி கூறுகிறது. காலங்களாலும், இடங்களாலும், மொழிகளாலும், பாதைகள், கொள்கைகள், நடை முறைகள் மாறுபட்டிருந் தாலும், கடைசியில் ஒட்டுமொத்தமாக எல்லா மதங்களும் ஒன்றையே நாடுகிறது.

1. ஒரு மதம் சில சடங்குகளையும், கிரியைகளையும் செய்ய வேண்டும் என்று ஆணை இடுகிறது.

2. ஒரு மதம் கோயிலில் காணிக்கை செலுத்து, உன் பாபங்கள் தீர்ந்து நீ மோட்சம் போவாய் என்கிறது.
3. ஒரு மதம் இன்ன, இன்ன உணவை சாப்பிடு. இதைச் சாப்பிடாதே! அப்போதுதான் உனக்கு நற்கதி என்கிறது.
4. உன் வாழ்க்கையை இன்ன வழியில் இன்ன சின்னத்தை அணிந்து கொள்ள என்கிறது.
5. நீ கண்ணீரும் கம்பலையுமாக சாட்டாங்க வணக்கம் செய்ய வேண்டும். அதுதான் நற்கதிக்கு வழி என்கிறது.
6. ஒரு மதம் இப்பரம்பொருளிடம் நீ செய்த குற்றத்தையும், பாவத்தையும் பாவமன்னிப்புக் கேள் என்கிறது.
7. ஒரு மதம் நீ பரம்பொருளிடம் முழுமனதுடன் வணங்கினால் நீ மரணம் அடைந்ததும் முக்தி அடைவாய் என்கிறது.
8. ஒரு மதம் யோக சாதனங்கள் மூலம், நாடிசுத்தி, மலசுத்தி செய்த பரபிரமத்துடன் சேரலாம் என்கிறது.
9. ஒரு மதம் பரம்பொருளை ஓயாமல் உச்சரித்து வந்தால் உனக்கு முக்தி உண்டு என்கிறது.
10. ஒரு மதம் உயிர்கள் அனைத்திலும் ஆண்டவன் உள்ளான். அவை களுக்கு பணிவிடை செய் என்கிறது.
11. நிலையானது ஏன்? நிலையில்லாதது ஏது? என்று நீ தினம் விசாரணை செய்து முக்தியை அடைய வழிபார் என்கிறது.

ஆனால் சித்த மகாபுருசர்களோ இதையெல்லாம் மூட்டை கட்டச் சொல்லுகிறார்கள். மதம், மொழி, நாடு, இனம் அப்பாற்பட்டு நின்று, "நீ பறிகொடுத்து பரிபூர்ண நிலையைத் திரும்பப் பெறுவது எப்படி என்று கவலைப் படுகிறாய். கவலைப் படாதே! நீ எதையும் பறிகொடுத்து விடவில்லை. நீ பறிகொடுத்து விட்டதாக நினைக்கும் பரிபூர்ண நிலையை நீ பறிகொடுக்கவில்லை. அப்பரிபூர்ண நிலை உன்னிடத்திலேயே அப்படியே இருக்கிறது. நீ தூயவானகத்தான் உள்ளாய். அதை அறிய நீ தக்க குருவை நாடி அவர் கருணைக்கடாட்சத்தால் விசாரணை செய்து அறிந்துகொள்.

—"தன்னுள் உள்ள பரிபூர்ணத்தைக் கண்டு உணர்ந்து தன்னைத் தான் அறிந்து அந்த பரிபூர்ண நிலையுடன் அடை" என்கிறது சித்த மகாபுருசர்கள் குழாம்.

இவர்கள் எல்லா தத்துவங்களையும் கடந்துவந்து இந்த நிலை அடைகின்றனர். உபநிடதமும் இதைத்தான் கூறுகிறது. அப்படிப் பட்ட பரிபூர்ண நிலையெய்தி பரிபூர்ணமாய் நின்ற பரிசுத்த ஞான நாயகன் நம் பூண்டி மகான் ஆற்று சுவாமிகள்.

இதையே சங்கரர், ராமானுசர், மத்துவர், புத்தர், ஏசு பிரான், நபிகள் நாயகம் எல்லா மத போதகர்களும் கூறும் ஒட்டு மொத்த முடிவு. இவர்கள் மனிதன் கீழ்நிலையிலிருந்து பரிபூர்ண நிலையை அடைய வழி கூறவந்த மத

ஆச்சார்யர்கள் ஆவார்கள். மனிதன் பரிபூர்ண நிலை அடைய வழி கூற தன் வாழ்நாட்களையே அர்ப்பணித்த மகான்கள் அந்த மதபோதகர்கள்.

ஒரு பெரும் நகரை அடைய பல பாதைகள் மூலம் சென்று அடையலாம். பாதைகள் பலவிதமாக இருக்கலாம். ஆனால் நம் குறிக்கோள் அந்த பெரும் நகரை அடைவதில் இருக்க வேண்டும்.. அதுபோல் பரிபூர்ண நிலையை அடைய பல மதங்களில் பலவித கருத்து பேதங்கள் இருந்த போதிலும், நம் குறிக்கோள் பரிபூர்ண நிலை அடைய வேண்டும். அப்படிப்பட்ட பரிபூர்ண நிலையை அடைய நம்மை அழைத்துச் செல்ல வந்த மகானே நம் பூண்டி ஆற்று சுவாமிகள்.

மதம், மொழி, நாடு, இனம், கடந்தவர்கள் சித்த தேவ மகா புருசர்கள். சில சுயநல கயவர்கள்தான் வேறுபடுத்தி ஆதாயம் தேடுகின்றனர். முசுலீம் தர்காவில் இந்துவும், இந்து கோயிலில் முசுலீமும் தங்களை இன வேறுபாடு பார்க்காமல் போகின்றனர். உதாரணமாக, நாகூர் ஆண்டவர். சென்னை மவுண்ட் ரோடு தர்காவுக்கு வரும் பக்தர்களில் இந்துக்களே அதிகம். ஏன், நம் பூண்டி மகானிடம் நிறைய முசுலீம்கள் வருவார்கள். நம் பூண்டி சுவாமியும் தினமும் மாட்டிற்கு இலாடம் அடிக்கும் முசுலீம் அளிக்கும் உணவையே முதலில் சாப்பிட்டு வந்தார்.

1959ஆம் ஆண்டு நான் சென்னையில் என் 'சகோதரி இல்லத்தில் இருந்து படித்து வரும்போது என்னுடன் என் தோழன் முஸ்லீம் அன்பர் ஒருவர் படித்துக் கொண்டிருந்தார்.

1959ஆம் ஆண்டு. முஸ்லீம் பாபா - அவர் பெயர் "மோதி பாபா" - அவரிடம் நாங்கள் சென்று வணங்குவது வழக்கம். அவர் 1959ஆம் ஆண்டு சமாதி நிலையெய்தினார், அந்த நேரம் நானும் என் முசுலீம் அன்பரும், "மோதி பாபாவை" சமாதி செய்யும் போது அவ்விடம் இருந்த அந்த சமாதி சடங்கைக் கண்டோம். அதில் முசுலீம் அன்பர்களை விட இந்துமத அன்பர்களே மிகுதியாக வந்திருந்து அத்தர், புனுகு, சவ்வாது விபூதி போட்டு தான் கண்ணால் கண்ட மகான் மோதி பாபாவிற்கு வணக்கம் செய்ததை நான் கண்ணால் கண்டவன்.

அந்த "மோதி பாபா" சமாதியில் தான் பிற்காலத்தில் மக்கள் வியாழக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை போன்ற நாட்களில் பெரும் திரளாக வந்து வணங்கும் காட்சியை நாம் பார்க்க முடிகிறது.

இது சென்னை எழும்பூரில் பாந்தியன் சாலை, ஆரீஸ் சாலை, போலீசு கமிசனர் அலுவலக சாலை, கண் ஆசுபத்திரி சாலை கூடும் இடத்தில் அமைந்துள்ளது

சில சுயநல கயவர்களால்தான் இந்து, முசுலீம், கிறித்து என்று பேதப்படுத்தப்படுகிறதே ஒழிய, மெய்ஞான சித்த மகா புருசர்கள் எல்லா மதத்திலும் தோன்றுகின்றனர். அவர்கள் செய்கை, நடவடிக்கை எல்லாம் ஒரே மாதிரியாக இருக்கக் காணலாம். மெய்ஞானி ஒருவர் எந்த மதத்தில் தோன்றியிருந்தாலும் அவர்கள் எல்லா மதத்தவரையும் ஆசீர்வதிப்பார்கள். சூரியன் ஒன்றே. முசுலீம்களுக்கு வேறு, இந்துக்களுக்கு வேறு சூரியன்

அல்ல என்பதை உணர வேண்டும். அப்படி மதம், சாதி, கடந்தவர் நம் பூண்டி மகான்.

தூங்காமல் தூங்கிய நம் பூண்டி மகான் சிவன் படைத்த உலகத்தைத் தம்முள் கண்டு சும்மா இருக்கும் நிலையெய்திய சிவனார். அவர் சும்மா திண்ணையில் அமர்ந்திருந்து சிவலோகத்தைப் பார்த்திருந்தவர்.

ஞானிகள் தாங்கள் இருந்த இடத்திலேயே சிவலோகத்தைத் தன்னுள் கண்டு வழிபட்ட மரபினர்கள் ஓசையும் அவ்வோசையில் ஒடுங்கும் தூய மாயையும் தன்னுள் கண்ட தத்துவ புருசர்கள். இவர்கள் சிவனுடன் (பரபிர்மத்துடன்) ஒன்றியதால், பிறப்பு, இறப்பு, நினைப்பு, மறப்பு, விருப்பு, வெறுப்பு கடந்த நிலையில் உள்ளவர்கள்.

மும்மலமற்றவர்கள் (ஆணவம், கன்மம், மாயை) மும்மலச் சார்பாக நிகழும் இருவினைகளை நல்வினை தீவினை அகற்றியவர்கள். என்றும் அழியாத நிலை உள்ளவர்கள். அருஞ்சைவத் தத்துவம் முப்பத்தாரினை கடந்து நின்ற தோற்றமுடையவர்கள்.

சித்தர் சிவலோகம் இங்கே தெரிந்தோம்
சத்தமுஞ் சத்தமுடிவுந் தம்முள் கொண்டோம்
நித்தர், நிமலர், நிராமயர், நீள்பர
முத்தர் தம் முத்தி முதல் முப்பத்தாறே. -திருமூலர்

(நித்தர் = ஆத்மா, கடவுள்; நிமலர் = அழுக்கில்லா கடவுள்; நிராமயர் = நோயில்லா சிவபெருமான்.)


தூங்கிக் கண்டார் சிவலோகமும் தம்முள்ளே
தூங்கிக் கண்டார் சிவயோகமும் தம்முள்ளே
தூங்கிக் கண்டார் சிவயோகமும் தம்முள்ளே
தூங்கிக் கண்டார் நிலை சொல்வதெவ்வாறு. -திருமூலர்

மெய், வாய், செவி, மூக்கு, கண் ஆகிய ஐம்பொறிகளின் தொழிலாகிய ஊறு, சுவை, ஓசை, நாற்றம், ஒளி போன்ற தத்துவங்களையும் ஐம்பூதங்களாகிய மண், நீர், நெருப்பு, ஆகாயம், காற்று போன்றவைகளையும் அடக்கியவர்கள், சிவனையே நினைத்து யோகநிலை பெற்று சிவமானவர்கள். சிவன் தவிர வேறு பொருள் இல்லை என்று உணர்ந்து சிவமான நிலை சித்தமகா புருசர்கள் நிலை. இப்படிப்பட்ட பெருநிலையில் பெரிய பொருளார் ஸ்ரீ பூண்டி மகான், ஒரு பிச்சைக்காரனைப் போல் வேறு ஒருவன் வீட்டுத் திண்ணையில் அமர்ந்திருப்பது நமக்கெல்லாம் காட்சி தந்து நம் வினைகளை அகற்ற வந்த பெரும் கருணைக்கடல் நம் பூண்டி மகான்.

இப்படிப்பட்ட "ஆன்மா" நிலையைக் கண்டு அதைப் பர ஆன்மாவுடன் (பரபிர்மம்) சேர்த்து பரபிர்மமாவது ஞானியின் முக்தி நிலையாகும்.

ஆன்மா உருவமற்றது. அது ஆண், பெண் என்ற வேறுபாடு அற்ற தன்மை. உடல் தான் ஆண், பெண் என்ற வேறுபாடு உள்ளதே தவிர

ஆன்மா ஒரே தன்மை உள்ளது. ஆன்மாவைக் கொல்லவும் முடியாது, எரிக்கவும் முடியாது. நீரில் நனைக்கவும் முடியாது, காற்றில் உலர்த்தவும் முடியாது.



சும்மா இருக்கும் சுகம் என்ற தத்துவத்துடன் இருக்கும் பூண்டி மகான்.

ஆன்மா கொல்லப்படுவதாக நினைப்பது அவன் உண்மை நிலை அறியாதவன். ஆன்மா ஒரு உடலை விட்டு வேறு உடலில் புகும். இதையே பிறப்பு, இறப்பு என்கிறோம். ஆன்மா நாம் சட்டையை மாற்றுவதுபோல் ஒரு உடலிலிருந்து வேறு உடலுக்குள் போய்விடும்.

ஆன்மா என்றும் நிலையாக உள்ளது. இது அழிவு இல்லாதது. மிகப் பழமையானது. உடல் கொல்லப்படலாம், எரிக்கப்படலாம், புதைக்கப்படலாம். ஆனால் ஆன்மாவை, கொல்லவோ, எரிக்கவோ, புதைக்கவோ முடியாது. அழிவற்றது. என்றும் எப்போதும் நிலையாய் உள்ளது.

புலன் ஐந்துமாகிய கண், மூக்கு, வாய், செவி, மெய்யும், பொறி ஐந்துமாகிய சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றமும் ஏன் மனதிற்கும் எட்டாத தன்மையில் உள்ளது. இன்ன கலர், இன்ன வடிவம் என்று விளக்கிட முடியாத தத்துவப் பொருளாகும். அதுவே நம்முள் உறையும் இறை வடிவம். இதைத்தான் மெய் ஞானிகள் தன்னைத்தான் உணருதல் என்று கண்டு பர ஆன்மா விடம் ஒன்றி இறை நிலையை அடைகின்றனர்.


''நான்'' என்பதுதான் ஆன்மா. ''நீ'' யார்? நான் ராயப்பேட்டையில் வாழும் பரமசிவம் மகன் பலராமன் என்கிறாய். பலராமன் என்பது உன் உடலுக்குத்தான் பெயர். நான் உயரமானவன் என்கிறாய். அது உன்

உடலுக்கு ஏற்பட்ட வடிவம். நான் கருப்பாய் இருக்கிறேன் என்கிறாய். அது உன் உடல் கொண்ட நிறத்திற்குத் தான்.

நான் தமிழன், தெலுங்கன் என்கிறாய். அது உன் உடல் தங்கியிருக்கும் இடத்தைக் கொண்ட பெயர். பலராமன் என்பது உன் கைக்கு, உன் காலுக்கு, உன் தலைக்கு - ஆக உன் உடலுக்குத் தான்.

நேற்று கருப்பனைக் கொன்றுவிட்டார்கள் என்று கூறுகிறாய். கருப்பன் தாங்கியிருந்த உடலைத்தான் கொன்றார்கள். கருப்பன் யார்? கருப்பன் எங்கே? நேற்று மலையசாமி இறந்து விட்டான். அவனை பாலாற்றில் புதைந்து விட்டார்கள் என்று கூறுகிறாய். மலையசாமியின் உடலைத் தான் புதைத்தார்கள். மலையசாமி எங்கே?

இப்படி ''நான் யார்?'' என்ற விசாரணை செய்து தன்னைத் தான் ஆன்மா உணர்ந்த நிலை ஞான நிலை. ஞானிகள் தன்னைத் தான் விசாரிப்பதே தவநிலை. புற உடலுக்குக் கருப்பன், வெள்ளையன், முனுசாமி, வடிவேலு என்று பெயர் சூட்டுகிறார்கள். உன் உடலின் அக உலகில் உள்ள கருப்பன், வெள்ளையன், முனுசாமி, வடிவேலுவை கண்டவர்கள் மெய்ஞானிகள். அதுவே ''ஆன்மா'' என்று மெய் ஞானிகள் கூறுகின்றனர்.




ஆன்மாவை தன் உடலிலிருந்து தனித்து இருக்கச் செய்து தவமிருந்த தவமணி

ஆன்மா அழிந்துவிட்டதாக நினைக்கக்கூடாது. ஒரு சந்தைக் கூட்டம் ஒரு நாள் புதன் கிழமையில் ஒரு ஊரிலும், பிறகு கலைந்து வேறு ஊரில் மற்றொரு வியாழக் கிழமையிலும் கூடும். அது போல் ஆன்மா காலி என்று நினைக்கக் கூடாது. அது வேறு உலகில் வேறு உடலில் இருக்கும்.

ஆன்மா, உடல்பற்றை விட்டு, உடலிலேயே புளியம்பழம், அதன் ஓடும் ஒன்றை ஒன்று ஒட்டாமல் எப்படி இருக்கிறதோ அப்படி, ஆன்மாவை உடல் பற்றைத் துறக்கச் சொன்னார்களே ஒழிய, தாடி, மீசை வளர்த்துக் கொண்டு கலர், கலராக உடலில் காவி உடையை அணிந்து, உள்ளத்தில் பஞ்ச பூதங்களையும், பொறி ஐந்தையும் அறிவு ஒன்றையும், ஆட்டம் போட விட்டு விட்டு உன்னைத் துறவி என்று பெயரிட எந்த மகானும் கூறவில்லை. எந்த மதத்திலும் கூறவில்லை எந்த வேதங்களிலும் கூறவில்லை. இனியாகிலும் நாம் இதைக் கடைப்பிடித்து நடக்க வேண்டும்.

தன்னுள் இறைவன்

இந்த தூல தேகம் நான் அல்ல. ஞானேந்திரங்கள் கண், வாய், செவி, மூக்கு, மெய் நானல்ல. கர்மேந்திரங்கள் வாய், கால், கை, மலவாய், குறி ஐந்தும் நானல்ல. பிராணனும் நானன்று, மனமும் நானன்று, அறிவின் உறக்கம் நான் என்று தன் ஞான யோகப் பயிற்சியால் உணர்ந்து பின் தனித்து நிற்பது ஆன்மா (ஆண்டவன் சொரூபம்). தூய உணர்வே 'ஆன்மா'. அப்படி 'நான் யார்?' என்ற ஆன்மாவை கண்டு பிறகு வெளியே ஆண்டவன் கோயிலில் இல்லை, தன்னுள் இருக்கிறார் என்று அறிந்தவர்கள் மெய்ஞானிகள்.



தன்னைத்தான் உணர்ந்த தனிப்பெரும் தெய்வம் பூண்டி மகான்

நம்முடைய உடலும், உள்ளமும் வெறும் சட்டையைப் போல் ஒன்றன்மீது ஒன்றாகப் போட்டுள்ளதுபோல் உள்ளது. அதை விசாரணை செய்துகொண்டு விட்டால் உள்ளம், உடல், என்ற சிறையிலிருந்து

விடுபட்டு தன்னைத் தான் உணரலாம் அப்படி தன்னைத்தான் உணர்ந்தவர்கள் மெய்ஞானிகள். அப்படிப் பட்ட மெய்ஞானியான நம் பூண்டி மகான் திண்ணையில் அமர்ந்திருந்தார்.

''யானே என்னை அறிய கிலாதே
யானே என்றெனதே என்றிருந்தேன்
யானே நீ என்னுடைமையும் நீயே
வானோர் ஏத்தும் எம் வானவர். -நம்மாழ்வார்

''ஆன்மா'' எந்த வேலையையும் செய்யாமல் சாட்சிப் பொருளாய் உள்ளது. ஆன்மா செயல்படுவதாக நினைக்கிறோம். அது சஞ்சலமற்று இருக்கிறது. சூரியன் உதிக்கவுமில்லை. மறையவும் இல்லை. பூமிதான் சூரியனைச் சுற்றி வருகிறது. ஆனால் சூரியன் தோன்றி மறைவதாக தென்படுகிறது. அதுபோல் ஆன்மா தோன்றவுமில்லை, மறையவுமில்லை. அது சஞ்சலமற்று துன்பமற்று நிற்கிறது. இதை அறிந்தவர்கள் மெய் ஞானிகள்.

இப்படி ''நான் யார்?'' என்று தன்னைத் தான் உணர்ந்து தலைவனை சேர்ந்து தலைவன் ஆனவர் நம் பூண்டியில் இருந்த புனித சோதி பூண்டி மகான்.

''சீவன் எனச் சிவன் என்ன வேறில்லை
சீவனார் சிவனாரை அறிகிலர்
சீவனார் சிவனாயிட் டிருப்பரே! -திருமூலர் பாடல்

''மனம் ஒடுங்கினால் நல்லதுப்பா!'' என்று ஒருமுறை சுவாமிகளைத் தேடிவந்த ஒரு யோக நிலை விரும்பும் அன்பருக்குக் கூறினார்.

மனம் புற உலகில் உள்ள விசயங்களில் பரவி அது கட்டுக் கடங்காமல் சென்று நம்மை பல வழிகளில் துயரத்தில் ஆழ்த்தி விடும். மனதில் நினைவுகள் தோன்றத் தோன்ற அதன் உற்பத்தித்தானத்திலே அழித்துவிட வேண்டும். மனம் அடங்கினால் துயரங்கள் தொடராது. துயரங்கள் அற்ற இடம் வெட்ட வெளி ஆகாயம். அந்த வெட்டவெளி ஆகாயமே இறைவன் உறையுமிடம் ஆகும்.

ஒரு கோட்டையில் உள்ளே உள்ள எதிரிகள் வெளியே வர, வர வெட்டி வீழ்த்தி விட்டால் பிறகு கோட்டையில் உள்ள எல்லா எதிரிகளும் மாண்டு போய்விடுவார்கள். கோட்டையை எளிதாகப் பிடித்து விடலாம். அப்படி பேரின்ப கோட்டையைப் பிடித்து ஞான அரசன் ஆனவர் நம் பூண்டி மகான்.

இது யோகப் பயிற்சியால் பெற வேண்டும். தேன் இனிக்கிறது என்று ஏட்டில் எழுதியதைக் கண்டு அந்த ஏட்டை நக்கினால் உன்னால் இனிப்பை பெற முடியாது. பலர் பல கருத்துடன் ஏட்டில் எழுதியதைக் கண்டு மயங்கி விடாதே. தக்க குரு மூலம் கற்க வேண்டும்.

ஒரு மனிதனுக்கு பல சென்மாந்திர புண்ணிய வசத்தால் குரு கிடைப்பார். அப்போது கிடைக்கும் நல்குருவை கெட்டியாக அவர் பாதாரவிந்தமே கதி என்று கருதித் தன்னலம் கருதாமல் இருந்தால், அந்த குரு காட்டிய வழியில் யோகம் பயின்றால், உனக்கும் அந்த யோகநிலை கூடிவரும்.

உனக்கு மட்டும் எப்படி இந்த ஞானம் வந்தது. என்று நீ கேட்பது எனக்கு புரிகிறது. யார் சொன்னது எங்களுக்கு ஞானம் வந்து விட்டதாக. நானும் கூறவில்லை. பிறரையும் சொல்லச் சொல்லவில்லை. ஞானிகள் ஞானநூல்களில் எழுதிவைத்திருக்கிறார் என்றும், பூண்டியில் நம் கலியுக தெய்வம் அப்படிப்பட்ட மெய்ஞான நிலையில் இருந்தார் என்றும் நாம் கூறுகிறோம்.

''நூறு ஆண்டு காலம் வரை வாழும் முறை'' என்று புத்தகம் எழுதியவர் ஐம்பது வயதில் காலமானார். வாதம், பித்தம் போன்ற நோய்களுக்கு மருத்துவ நூல் எழுதியவர் வாதம், பித்தம் கண்டே காலமானார். பல மொழி நூல்களுக்கு அகராதி எழுதியவர் தன் அகராதி என்ன என்று தெரியாமல் காலமானார். ''நாம் வாழ்க்கையில் முன்னேற பலவழிகள்'' என்று புத்தகம் எழுதியவர், தான் ஒரு வழியிலும் முன்னேறாமல் காலமானார்.

உலகில் ''சைவ சமயமே சிறந்தது'' என்று கூறிப் பிரசாரம் செய்தவர் புலால் உணவைச் சாப்பிட்டே இறந்தார். அதுபோல் ஞானம் இன்னதென்று எங்களுக்குத் தெரியாமல் நாங்கள் எழுதியதில் தவறு ஒன்றும் இல்லை. இதை யார் எழுதினார்கள், அவர்களுக்கும் ஞானத்திற்கும் என்ன சம்பந்தம் என்ற கேள்வி ஞானம் உனக்கு வேண்டாம்.

இந்த புத்தகம் படிப்பதால் உனக்கு என்ன பயன்? என்று நீ உணர்ந்து எல்லாம் வல்ல கலியுகக் கண்கண்ட தெய்வம் பூண்டி மகான் அருளைப் பெற எழுதப்பட்ட புத்தகம் இது என்று கூறி இதனால் நீ நல்வழி அடைவாய் என்று நினைப்பதே எங்கள் நோக்கம்.

கல்வி அறிவு இல்லாத மூடன்கூட ஒரு முறை பூண்டி மகான் சீவ சமாதியைக் கண்டால் உடனே தத்துவம் பேசும் அளவிற்கு அவர் நிலை உயரும். பூண்டியில் தெருவில் நடமாடினால்கூட அவனுக்கு ஞானம் வர வழி ஏற்படும் என்று எண்ண வேண்டும். பூண்டியில் உள்ள புல், பூண்டு, மரம் செடிகூட ஞானம் பேசும். மகான் காலடிபட்ட இடமெல்லாம் ஞான பூமியே. ஞானிகள் கண் திருட்டிப் பட்டவர்கள் அத்தனைபேரும் புண்ணியவான்களே, பூண்டியை ஒரு தடவை சென்று வந்தவர்களும் புண்ணியவான் என்று நாம் எண்ண வேண்டும். ''ஐயனார் கோயில் செங்கல் அத்தனையும் தெய்வம்'' என்ற பழமொழிபோல் பூண்டியில் உள்ள கல் கூட தத்துவம் பேசும்.

யானைக்கு வெளியே தெரியும் பல் வேறு, உள்ளே உள்ள பல் வேறு ஆக இரண்டு வித பல் உள்ளது. இதுபோல் பூண்டி மகான் போன்ற அவதார புருசர்கள் நம் கண்களுக்கு சாதாரண மனித தோற்றத்துடன் காட்சி அளித்தாலும் அவர்கள் உலக கர்மாக்களுக்கு அப்பாற்பட்டு வெகுதூரம் உள்ளவர்கள். நம் கருத்துக்கு அப்பாற்பட்ட நிலையில் உள்ளவர்கள்.

கண்ணுக்கு மட்டும் புலப்படுவார்கள், பரிபூர்ண பிர்ம நிலையில் உள்ளவர்கள் அவதாரப் புருசர்கள். அப்படிப்பட்ட அவதார சித்த மகா புருசரே நம் பூண்டி மகான் ஆற்று சுவாமிகள்.

பூசனிக்கொடியில் காய் தோன்றிய பிறகு பூ தோன்றுவது போல் தோன்றுபவர்கள் மெய்ஞானிகள். அப்படி பூவில்லாமல் மகரந்த சேர்க்கையின்றி காய்க்கும் பூசனிக்காய் போன்றவர் நம் பூண்டி மகான் ஆற்று சுவாமிகள்.

ஊர் இலார்! பேரிலார்! உற்றார், உறவினர் இலார்! யாதும் ஊரே, யாவரும் கேளீர் என்பதே மெய்ஞானிகளின் நிலை. ஒன்றே குலம், ஒருவனே தெய்வம் என்ற கொள்கையே பிர்ம ஞானிகளின் நிலை ஆகும்.

உலகியலைத் துறந்தவர். சித்தத்தை சிவன்பால் வைத்து சிவனானவர். செய்ய வேண்டியதைச் செய்து முடித்து வெற்றி கண்டவர். ஆணவ கன்மங்களை கழுவியவர். ஆண்டவனைக்கண்டு தெளிந்து இறைநிலையெய்திப் பிறப்பறுத்தவர். சித்தாகிய பேறறிவு வரப்பெற்றவர். இயற்கையைக் கடந்து கடவுள் நிலையெய்தியவர். நம் பூண்டி மகான் ஆற்று சுவாமிகள். உடலில் உயிர் உள்ளபோதே ஆன்மா விடுதலை பெற்றவர். ஆன்ம விடுதலைபெற்று ''சும்மா இருக்கும் சுகம்'', ''தூங்காமல் தூங்கியவர்'', ''மாளாமல் மாண்டவர்'' நம் பூண்டி சற்குரு நாதர்.

மல பீடம்

நம் உடலில் ஏற்படும் மலத்தை நீக்கச் சொல்லவில்லை. நம் மனதில் ஏற்படும் மும்மலமாகிய ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலத்தை அறுக்கக் கூறுகிறார்கள் ஞானிகள். அப்படி மும்மலத்தை அறுத்தவர் நம் பூண்டி மகான் ஆற்று சுவாமிகள்.

மனம் நிறைய உலக ஆசையில் ஊன்றிக்கொண்டு உதட்டளவில் மந்திரங்களை முணமுணவென்று செபிப்பதால் ஆத்ம ஞானம் ஏற்பட்டு விடாது. விவேகமும் வைராக்கிய மனமும் தேவை. ஞானமடைய யோகி ஒருவர் தனது சரீர சுகதுக்கங்களையும் மனம் புற உலகின்கண் அலைபாயாமலும் பொன், பொருள் ஆசைகளை தியாகம் செய்தவர்கள் மெய்ஞானிகள்.

கோழைத்தனமும், விரோத மனப்பான்மையும், பொறாமை குணமும், பயமற்ற தன்மையையும் விட்டவர்களே மெய் ஞானிகள்.

''நான்'' எப்போது ஞானமடைவேன். ''எனது'', ''நான்'' என்ற எண்ணக் குவியல்களை ஒருவர் அகற்றும்போது ஞானம் பெற வழியாகும்.

''நான்'', ''எனது'' என்பது அஞ்ஞானத்தைக் குறிக்கும். ''நீ'', ''உனது'' என்பது ஞானத்தைக் குறிக்கும். ''நீ'', உனது என்பது இவ்விடம் இறைவனைக் குறிக்கும் அல்லது தன்னுள் உள்ள இறை ஆன்மாவைக் குறிக்கும். தன்னுள் உள்ள இறை ஆன்மாவை அறிவது ஞானமாகும்.

அழுக்கு படிந்த கண்ணாடியில் நம் உருவத்தைப் பார்க்க வேண்டுமானால் நம்மால் நம் உருவத்தைக் காண முடியாது. அந்த அழுக்கை

துணிகொண்டு துடைத்து சுத்தப்படுத்திவிட்டால் நம் உருவம் தெளிவாகக் கண்ணாடியில் தெரியும். அதுபோல் புற உலகின்கண் திரிந்த மனமானது பலவித களங்கத்துடன் நிறைந்து காணப்படுகிறது. அந்த களங்கத்தைத் தக்க சற்குரு துணையுடன் நீக்கினால் உன்னுள் உறையும் ஆன்ம நிலை தெரியும்.

நடப்பதெல்லாம் என்னால் என்ற அகங்காரங்களைக் கொண்டவன் மனது ஞான நிலைக்கு ஏற்றதல்ல. எல்லாம் நீயே என்று பரபிர்மத்திடம் விட்டுவிட வேண்டும். அப்பரபிர்மம் உன்னை தன்னுடன் சேர்த்து நீயும் பிரபிர்ம நிலையை அடைவாய் என்று மெய்ஞானிகள் தன் பாடல் மூலமாக விளக்குகின்றனர்.

புற உலகில் உள்ள லௌகீகப் பற்றுகளைத் தன் அக உலகில் (தன் உள் மனதில்) ஒட்டாமல் தாமரை இலை தண்ணீரில் மிதந்து இருந்தாலும் தண்ணீர் தாமரை இலையின்மேல் ஒட்டுவது இல்லை. மீன் சேற்றில் இருந்தாலும் சேறு அம்மீன் மீது படிவது கிடையாது. மீன் எப்பவும் பளபளப்புடன் காணும். அதுபோல் உலக மக்கள் மத்தியில் வாழ்ந்தாலும் ஞானி ஒருவர் ஆசாபாசங்களை அறுத்து ஒதுங்கி வாழ்வார்கள். உலகப் பற்றுகளை அறுத்தவன் பற்றற்ற ஞானி ஆவார்.

பற்றொழிந்து சிந்தைப்
பதைப்பொழிந்து தானேதான்
அற்றிருப்ப தென்றைக்
கமைப்பாய் பராபரமே. -தாயுமானவ சுவாமிகள்

தன் பக்தி பாடல்களில் மனதில் உலகப்பற்றை ஒழித்து, சிந்தனையில் சஞ்சலமற்று இருப்பது வேண்டும் என்று சிவனை எண்ணிப் பாடுகிறார்.

ஞானிகள் தன் உடல் படும் பாட்டையோ மனம் படும் பாட்டையோ கவலைப்படாமல் ஆன்மாவை தனியே பிரித்து, உடலும், மனமும் படும்பாட்டைக் கண்டு சும்மா இருக்கச் செய்வது ஞானநிலை ஆகும். அவர்களுக்கு விருப்பு, வெறுப்பு வேண்டும் என்ற நிலை, வேண்டாம் என்ற நிலை, நினைப்பு என்ற நிலை, மறப்பு என்ற நிலைகளைக் கடந்தவர்கள் நம் பூண்டி மகான் ஆற்றுச் சுவாமிகள். நினைப்பும், மறப்பும் அற்ற இடம் சிவன் வாழுமிடம் என்று "ஔவையார்" கூறுகிறார்.

"நினைப்பும் மறப்புமில்லாதவர் நெஞ்சந்
தனைப் பிரியாது சிவன்"

"நினைப்பும் மறப்பும் நெடும் பசியும் அற்றல்
அனைத்துலகும் வீடாம் அது"

இவைகளை எல்லாவற்றையும் கடந்து, கடவுள் என்ற நிலையில் இருந்தவர் நம் பூண்டி மகான் ஆற்று சுவாமிகள் என்பதை நாம் உணர வேண்டும்.

சீவன் முக்தர் ஒருவரின் உருவம் நிச்சயமானது. கவலையற்ற ஒரு பெரும் சக்ரவர்த்திப்போல இருப்பார்கள். தாயின் மடியில் எந்தக் கவலையுமின்றி ஆனந்தமாக பால் அருந்தும் குழந்தையைப் போல ப்ரமானந்தத்தில் சுகானந்த உருவமாக இருப்பார்கள்.

மோட்சம், நரகம், சொர்க்கம் என்பது அவர்கள் நினைப்பில் இல்லை. பிறப்பு, இறப்பு என்ற நினைவு ஒழிந்துபடப் போய்விடும் தன்மை. அவர்கள் நிட்காமியத் தவத்தில் உள்ளவர்கள். அப்படிப் பட்ட நிட்காமிய தவயோகியே நம் கண்கண்ட பூண்டி மகான் ஆற்று சுவாமிகள்.

சுட்ட சட்டி உடைந்துவிட்டால் குயவன் தூர எறிந்து விடுகிறான். ஆனால் சுடாத பச்சை மண் சட்டி உடைந்துவிட்டால் குயவன்திரும்ப அந்த உடைந்த பச்சை மண் சட்டியை மண்ணுடன் சேர்த்து மட்பாண்டம் செய்து விடுவான்.

அதுபோல் ஞானம் பெற்ற மெய்ஞானிகள் தன் பிறப்புப் பிணியை சுட்டெறித்து விடடவர்கள். அவர்கள் பச்சை மண் பாண்டமல்ல திரும்பப் பிறவிகள் பல எடுக்க. இந்த உடலுடன் அவர்கள் பிறவி சுட்டெரிக்கப்பட்டு விடுகிறது.



பரப்பிரம்மத்தைக் கண்ட பரமன்

மேலும் உலக மக்கள் பிறப்புப் பிணியைச் சுட்டெறிக்க வந்தவரே நம் பூண்டி மகான் ஆற்று சுவாமிகள். வீடில்லை, வாசலில்லை, தாயில்லை, தந்தையில்லை, உற்றார் உறவினரில்லை அந்த சீவன் முக்தருக்கு. அந்த பிறவியைச் சுட்டெறித்தவருக்கு. அந்த நிட்காமியத் தவ சிரேட்டருக்கு, அந்த ஆற்றில் கண்டெடுத்த அற்புத மாணிக்கத்திற்கு எதுவுமில்லை என்று நாம் உணர வேண்டும்.

பிர்ம நிலையை பேரான்மாவைக் கண்ட மெய் ஞானிகளுக்குத்தான் கோயில், குளம், நதி தீர்த்தமாடல் தேவையில்லை என்று அறிய வேண்டும். வியாசர் போன்ற பெரிய பிர்மநிலை அறிந்த ஞானிகளுக்குத்தான் இப்படிப்பட்ட நிலையே தவிர, சித்த மகாபுருசர்கள் நமக்கு எழுதிய பாடலாக எண்ண வேண்டாம். ஏன் நாம் அந்த நிலையெய்தக் கூடாது என்று நம் உள்மனம் கேட்கிறது. அதற்கு நாம் பல பிறவிகளாக தொடர்ந்து வந்த மாயையை அகற்ற தக்ககுரு கிடைத்து அந்த குரு காட்டிய வழியில் சென்றால் நாமும் அந்த நிலை அடையலாம்.

வியாச பகவான் பரபிர்மத்திடம் மூன்று தவறு செய்து விட்டதாக மன்னிப்புக் கேட்கிறார்.

1. உருவமில்லா பரப்பிர்மத்திற்கு தன் மனதில் உருவம் கற்பித்தல்.
2. சொற்பதங்களால் கடந்த பரப்பிர்மத்தை சொற்பதங்களைக் கொண்டு கூறியது.
3. எங்கும் நிறைந்த பரம்பொருளை, கோயில்களில் மட்டும் உள்ளதாக எண்ணி யாத்திரை சென்றது, நதி நீர் ஆடியது என்று மனம் வருந்திக் கூறுகிறார்.

தனித்திரு

தனித்திரு: வெளி உலகத்தையும் தான் சார்ந்த உடலையும், உள்ளத்தில் ஏற்படும் எண்ணங்களையும் மறந்து "ஆன்மா" தனித்திருக்க வேண்டும். உடல் படும் பாட்டையும் மனம் படும் அவத்தையையும் 'ஆன்மா' ஒதுங்கி தனியே இருந்து பார்க்க வேண்டும். அப்படிப்பட்ட தத்துவம் மெய்ஞானி ஒருவருக்கு மட்டும் கைவரப்படும். இப்படி 'ஆன்மா' உடல், மனம் படும் அவத்தைகளுக்கு தான் காரணமில்லை என்று தனியே இருந்து சாட்சிப் பொருளாக இருக்கும் தன்மை, 'தனித்திரு' என்று ஞானிகள் கூறுகிறார்கள். தத்துவங்கள் அற்ற ஆன்மநிலை ஆகும். இதுவே நம் பூண்டி மகான் நிலையாகும்.

"தன்னரசே செலுத்தி நின்ற தத்துவங்கள்
தனித்தனி என்வசமாகித் தாழ்ந்தேவல் இயற்ற
முன்னரசும் பின்னரசும் நடுவரசும் போற்ற
முன்னு மண்டபிண்டங்க ளெவற்றினு மெப்பாலு
மென்னரசே யென்றுரைக்க வெனக்கு முடிசூட்டி
இன்ப வடிவாக்கி யென்றுமிலங்கவைத்த சிவமே
என்னரசே யென்னுயிரே யென்னிரு கண்மணியே
இணைய்டிப் பொன்மலர்களுக் கென்னிசையு மணிந்தருளே"

- திருவருட்பா அருள் விளக்கமாலை

இப்படி ஆன்மா உடல்படும் பாட்டிலிருந்தும் எண்ணங்களிலிருந்தும் தனித்திருந்த தவமணி நம் பூண்டி மகான் ஆற்று சுவாமிகள் நிலையாகும். தன் உடற் சிந்தனையோ, விருப்பு, வெறுப்பு உள்ள மனமோ அவருக்கில்லை.

வெளி உலக சிந்தனையோ புற உடல் சிந்தனையோ அற்றுத் ''தனித்திரு' என்ற தத்துவத்தில் யோக சமாதியில் மேற்புறம் திண்ணையில் அமர்ந்த தனிப்பெரும் ஞானி நம் பூண்டி மகான்.

இப்படி தனித்திருந்து ஆன்மா, தன் உடலும் உள்ளமும் படும்பாட்டை கண்டு எந்தவித சஞ்சலமுமின்றி இருந்த தவமுனி நம் பூண்டி மகான் ஆற்று சுவாமிகள்.

ஒரு நாள் இரவு வழிபாட்டிற்குப் பிறகு வழக்கமாக சுவாமிகள் திருவாயால் ஏதாகிலும் கூறமாட்டார்களா! என்று உள்ளூர் வெளியூர் அன்பர்கள் கைகட்டி வாய் மூடிக்கொண்டு இருந்தனர். சுவாமிகள் திடீரென்று ஒரு பாடலைப் பாடினார்கள். அதை ஒலி நாடாவில் பதிவு செய்து வைத்துள்ளோம். அப்பாடலின் கடைசி வரியாக 'நெஞ்சமே நீ அஞ்சாதே! நெஞ்சமே நீ அஞ்சாதே!' என்று இருமுறை கூறி மௌனமாக இருந்து விட்டார்.

ஆன்மா, மனம் படும் பாட்டைக் கண்டு நெஞ்சமே நீ அஞ்சாதே என்று கூறிவிட்டு அது 'சும்மா இருக்கும் சுகம்' என்ற தத்துவத்தில் தவமிருந்த மாதவப் பொருள் நம் பூண்டி மகான் ஆற்று சுவாமிகள். இப்படிப்பட்ட 'தனித்திரு' என்ற தத்துவத்தின் கண் இருந்த தவமணி, சாகாமல் செத்து மரணமில்லா பெருவாழ்வு வாழ்ந்தவர் நம் பூண்டி மகான் ஆற்று சுவாமிகள்.

சாகாக்கால்	:	பிராணன் மரணமிலாப் பெரு வாழ்வு வாழ்தல்
போகப் புனல்	:	பிராணன் போகாமல் தன் வசம் செய்தல்
வேகாக்கால்	:	பிராணன் என்னும் வாயு ஆகாசவெளி

யென்னும் கபால உச்சியாகிய சகசுராரத்தில் அழியாமல் நிற்பது. இப்படிப்பட்ட சாக்கால், போகப்புனல், வேகாக்கால் என்ற தத்துவத்துடன் தனித்துத் திண்ணையில் அமர்ந்திருந்த திருவருள் நம் பூண்டி மகான் ஆற்று சுவாமிகள்.

''சாகாத கல்வி தரம் அறிதல் வேண்டும் - என்றும்
வேகாத கால் உணர்தல் வேண்டும் உடன் - சாகாத்
தலையறிதல் வேண்டும் தனிய்ருளால் உண்மை
நிலையடைதல் வேண்டும் நிலைத்து - திருஅருட்பா

சாகாத தலையறியேன் வேகாத காலின் தரமறியேன்
போகாத தண்ணீரையறியேன் ஆகாய நிலையறியேன்
மாகாய நிலையுமறியேன் மெய்ந்நெறிதனை யோரணு
வள்வுமறியேன்
மாகாதலு வடற்பெருந் திருவாளர் வழுத்தும்
மணிமன்றந்தனையடையும் வழியறியேன்
ஏகாய வுலகினிடையெங்ஙன நான்புகுவேன் யாங்குரைப்
பேன் என்னசெய்வே னேதுமறிந்திலன்
- திருஅருட்பா ஆற்றாமை

மேலும் இதையே சட்டைமுனி நாயனார் தன் வாத காவியம் 1000த்தில் 'கால்' என்பதை 'விந்து' எனப்பாடுகிறார்.

போகாத விந்துவினால் பிறக்கும் கோடி புகழான வித்ததினால்
மரமோகோடி
சாகாத காலது தானறியாய் மக்காள் சமுசயங்கா னெண்ணாதே
சனனமில்லை
வேகாத தலையறிந்தா லெல்லாம்போச்சு வெட்டவெளியான மனம்
பிறக்குமோடா
பாகான திரோதகையின் மயக்குமானால் பரிவான நாதவிந்து
பரிசயயாமே.

'விந்து' என்னும் கருப்பொருளை வீணாகப்போக விடமாட்டார்கள். அதை சாகவிடமாட்டார்கள். அதை வேக விடாமல் வைத்துக்கொண்டு தன் யோகப் பயிற்சியில் மேலேற்றி சகசுராரம் என்னும் கபால உச்சியில் நாதமும் விந்தும் சேர்பவனே மெய்ஞானி ஆகும். அப்படி வேகாக்கால், போகப்புனல், சாகாத்தலை என்ற தத்துவத்துடன் ஒட்டுத் திண்ணையில் அமர்ந்திருந்த ஒப்பில்லா மாணிக்கம் நம் பூண்டி மகான் ஆற்றுச் சுவாமிகள்.

'பசித்திரு'

நமது உடலின் மூலாதாரமாகிய முதல் ஆதாரத்தில் இருந்து எழுப்பிய குண்டலினி சக்தி மற்ற ஐந்து ஆதாரங்களைக் கடந்து சகசுராரம் என்னும் கபால உச்சியில் அமுதமாக மாறி அவ்வமுதம் கீழ்நோக்கி வரும். மெய்ஞானி ஒருவர் கீழ்நோக்கி வரும், அமுதத்தைத் தன் உள்நாக்கை மடித்து அவ்விடம் அவ்வமுதத்தை நிறுத்திச் சுவைப்பர்.

இப்படிப்பட்ட அமுதத்தைப் பருகும் மெய்ஞானிக்கு பசி, தூக்கம், பிணி, மூப்பு, சாக்காடு என்பவைகள் அற்றுப்போய், என்றும் இளமைத் தோற்றத்துடன் பசியற்று இருப்பர்.

இதைத்தான் ஞானிகள் மதியமுதம், அருளமுதம், சுரவாப்பால், காயாப்பால், அமிர்தம் என்றும், மாங்காய்ப்பால் என்றும் வர்ணிக்கிறார்கள்.

1. சாவாது இருந்திடப் பால்கற - சிரம்
தன்னில் இருந்திடும் பால்கற
வேவாது இருந்திடப் பால்கற - வெறு
வெட்ட வெளிக்குள்ளே பால்கற

2. தோயாது இருந்திட பால்கற
தொல்லை வினையறப் பால்கற
வாயால் உமிழ்ந்திடும் பால்கற - வெறு
வயிறார உண்டிடப் பால்கற

3. நாருதிருந்திடம் பால்கற நெடு
நாளும் இருந்திடப் பால்கற
மாறாது ஒழுகிடும் பால்கற - தலை
மண்டையில் வளரும் பால்கற

4. உலகம் வெறுத்திடும் பால்கற - மிக
ஒக்காளம் ஆகிய பால்கற
கலசத்தினுள்விழப் பால்கற - நிற
கண்டத்தின் உள்விழப் பால்கற

என்று இடைக்காட்டுச் சித்தர் ஞானப்பாலைப்பற்றிப் பாடுகிறார். இப்படிப் பட்ட அமிர்தப்பாலை அருந்தப் பசித்திருக்க வேண்டும் என்று ஞானிகள் கூறுகிறார்கள்.

''மதியமிர் துண்ணப் பசித்திருத்தல்
ஓங்கு நிலா மண்டபத்தே என் கணவருடனே
உவட்டாத தெள்ளமுது உண்டு பசி தீர்ந்தேன்

என்று 'அருட்பா அனுபவ மாலை 30ல்' இராமலிங்க சுவாமிகள் பாடுகிறார். இதையே பத்திரகிரி சுவாமிகள் தேனாக உருவகப் படுத்திப் பாடுகிறார்.

''மீனை மிக உண்டு நக்கி விக்கி நின்ற கொக்கதுபோல்
தேனை மிக உண்டு தெவிட்டி நிற்பது எக்காலம்?

- பத்திரகிரி சுவாமிகள்

''காயாத பாலையுண்டு கனகவம் பலத்தைக் கண்டு
மாயாம நாகைநாதர் மலரடி வணங்கு நெஞ்சே'

என்று கணபதி தாசர் தன் 'நெஞ்சறி விளக்கம்' என்ற பாடல்களில் பாடுகிறார்.

''மாடமிசை ஓங்குநிலா மண்டபத்தே எனது
மணவாளர் கொத்தத்திரு அருளமுதம்'

என்று இராமலிங்க சுவாமிகள் தன் 'அனுபவ மாலை' என்ற திருவருட் பாவில்பாடுகிறார்.

இப்படிப்பட்ட கறவாத பால், காயாத பால், தெள்ளமுதம், மதியமுதம், அருளமுதம், மாங்காய்ப் பால் என்று ஞானிகளால் வர்ணிக்கப்படும் ஞான அமிர்தத்தை சாப்பிட்டுத் திண்ணையில் பசி, தூக்கம் அற்று இரவும் பகலும் உட்கார்ந்தபடியே மேற்புறத் திண்ணையில் அமர்ந்திருந்த ஆதி மூலம் நம் பூண்டி மகான் ஆற்று சுவாமிகள். அவர் உடல் வளர்க்கும் உணவைப்பற்றி எந்தவித சிந்தனையுமின்றி இருந்த மெய்ஞானி அவர்.

'விழித்திரு'

ஆன்மாவின் விழிப்பு நிலையைத்தான் ஞானிகள் 'விழித்திரு' என்று மறைமுகமாக அவர்களுக்கே உரிய பரிபாஷையில் கூறுகிறார்கள். நம் உடலின் ஆறு ஆதாரங்களாகிய மூலாதாரம் (குதம்), சுவாதிட்டானம் (குறி), மணிபூரகம் (தொப்புள்) அனாகதம் (இருதயம்) விசுத்தி (உள்நாக்கின் அடிப்புரம்), ஆக்கினை (கண்கள் இரண்டிற்கும் நடுவில் இருக்கும் புருவ நெற்றி) இவற்றின் முதல் ஆதாரமாக விளங்குவது மூலாதாரம் என்பதாகும். இது மலவாய்க்கும், ஆண், பெண் குறிக்கும் இடையில் உள்ள பாகமாகும்.

மூலாதாரத்தில் உள்ள குண்டலி சக்தியை (சுக்கிலம் + சுரோணிதம்: குண்டலி (அ) ஆண் அணு + ரத்தம் = குண்டலி ஆகும்) எழுப்பி மற்ற ஐந்து ஆதாரங்களில அச்சக்தியை வெகு சாக்கிரதையாகக் கடக்கத் தூங்காமல் அக உலகில் விழிப்புடன் இருப்பதே 'விழித்திரு' என்ற மாபெரும் தத்துவத்தை ஞானிகள் தன் பரிபாஷையில் கூறுகின்றனர்.

அப்படி அக உலகில் தூங்காமல் விழித்திருந்து தன் யோக வலிமையால் குண்டலியை ஏழாவது ஆதாரம் என்று ஞானிகளால் வர்ணிக்கப்படுவதும் சகசுராரம் என்னும் கபால உச்சியில் கொண்டு சேர்த்து விந்தும், நாதமும், உயிரும், இறைவனும் ஒன்றுபடும் நிலை, சிவன், சக்தி புணர்ந்த நிலை என்பது, அதுவே கந்தன் உற்பத்தி நிலை - ஞானிகளின் நிலை, இப்படிப்பட்ட சிவன், சக்தி இணைக்கும் நிலைக்கு யோகி ஒருவன் அக உலக யோகத்தால், தூங்காமல் அக உலகில் விழிப்புடன் இருக்கும் நிலைக்கு 'விழித்திரு' என்று பெயர். இதையே 'தூங்காமல் தூங்கி சுகம் பெறு' என்று ஞானிகள் கூறுகிறார்கள். சென்ற நூற்றாண்டில் வாழ்ந்த ஞானி வள்ளல் பெருமான் தன் 'அனுபவ மாலை' என்ற பாடலில் கீழ்க்கண்டவாறு பாடுகிறார்.

தூங்குகநீ என்கின்றாய் தூங்குவேனோ எனது
துரைவரும் ஓர் தருணம் இதில் தூக்கந்தான் வருமோ
ஈங்கினி நான் தனித்திருக்க வேண்டுவதாதலினால்
என்னுடைய தூக்கமெலாம் நின்னுடையதாக்கி
ஏங்கலறப் புறத்தே போய்த் தூங்குகநீ தோழி
என்னிருகண் மணியனையார் எனையணைந்தவுடனே
ஓங்குறவே நான் அவரைக்கலந் தவரும்நானும்
ஒன்றான பின்னர் உனை எழுப்புகிறேன் உவந்தே

என்று 'அனுபவமாலை 66' என வரும் அருட்பாவில் இராமலிங்க சுவாமிகள் பாடுகிறார்.

நம் மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்னும் அந்தக்கரணம் நான்கும், ஆணவம், கன்மம், மாயை, என்ற மும்மலங்களில் நம் புத்தியைப் பரவவிட்டு உலக மாயையில் உழலாமல் இருக்க அந்தக் கரணம் நான்கும், மும்மலங்களும் நம்மை ஆட்டிப்படைக்கா வண்ணம் அதனிடமிருந்து

ஆன்மா விழிப்பு நிலையில் இருக்க வேண்டும் என்று ஞானிகள் கூறுகின்றனர்.

ஸ்ரீ பூண்டி மகான் ஆற்று சுவாமிகள் தன் உடல் படும் பாட்டையும் மனம் படும் பாட்டையும் விடுத்து ஆன்மா விழிப்புநிலையில் மேற்புறம் திண்ணையில் சுமார் 3 1/2 ஆண்டு காலம் எந்த நேரமும் விழிப்பு நிலையில் யோகத்தில் அமர்ந்திருந்த அமரன் நம் பூண்டி மகான் ஆற்று சுவாமிகள். அவர் உடலின் கண் விழிப்பு நிலையில் இருந்ததாக நாம் எண்ணுகிறோம். அது அல்ல உண்மை நிலை. அவர் ஆன்ம நிலையில் விழிப்புடன் இரவு பகல் திண்ணையில் உட்கார்ந்தவர் உட்கார்ந்தபடியே இருந்த உலகநாதர் நம் பூண்டி மகான்.

நம் உடலில் உள்ள தொண்ணூற்றாறு தத்துவங்களைக்கண்டு அவைகளைத்தன் வயப்படுத்தித் தன் விருப்பம்போல் செயல் படச்செய்பவர் எவரோ அவர் இறைவன் நிலைபோன்றவர்.

தத்துவந் தொண்ணூற்றாறுந் தாழ்விலா வாயுபத்தும்
மெத்தென நாடிபத்தும் மெய்யுள்ளே ஆறாதாரஞ்
சுத்தமாங் கரணநான்குந் தோற்றுமண்டலங்கள் மூன்றும்
இத்தனை யறிவல்லா ரிறையவ ராகுந்தானே.

நாடிகள் 72,000

உற்ற விவரம் உறுதியாம் என்நந்தி
பற்றிய மூலம் பகர்ந்திடும் நாடிதான்
எற்றிய எண்ணிடில் எழுபத் திராயிரம்
மற்றதில் பத்து வளமான நாடியே. — திருமூலர்

அதில் முக்கியமானது

வளமான பத்தில் வழங்கும் தசவாய்வு
உளமாம் இடைபின் சுழியென மூன்றுண்டு
கலமான சக்கரங் காட்டியது ஆறுண்டு
தலமான மண்டலம்தான் மூன்று பாருமே.

★ ★ ★

யாரும் இடைகலை பின்கலை மாறியே
தாரும் பெருவிரல் காலோடுதான் ஏறி
காருங் கழுத்திற் கபாலவரை நின்று
வாரும் இடமாய் வலக்கரஞ் சாருமே
வலக்கரந் தன்னில் வளமான பின்கலை

துலக்க நடுமையஞ் சுழிமுனை யோடிடும் —
பிலக்க இவை முன்றாற் பிறந்தது தாதுவே.

★ ★ ★

இடகலை	-	வாதநாடி = மலம்
பின்கலை	-	பித்தநாடியாகும் = நீரில்
சுழிமுனை	-	சிலோத்துமம் = விந்துவில் அடங்கும்
இடக்கலை	-	12'' பிரமாணம் ஓடும்
பிங்கலை	-	8'' பிரமாணம் ஓடும்
சுழிமுனை	-	இரண்டும் பகிர்ந்து ஓடும்
வாதம்	-	வாயு, குணம், புளிப்பு, குளிர்ச்சி, கருமைநிறம்
பித்தம்	-	நெருப்பு, கசப்பு, கதகதப்பு, பச்சை நிறம்
ஐயம்	-	நீர், குணம், இனிப்பு, வியர்வை
வாதம்	-	மயில்போல, அன்னம், கோழி போல நடக்கும்
பித்தம்	-	ஆமைபோல், அட்டைபோலும் நடக்கும்
ஐயம்	-	பாம்புபோல, தவளைபோலும் நடக்கும்

இல்லையே வாதம் எழில்நடை கோழியாம்
எல்லையே பித்தம் எழும்பும் தவளைபோல்
ஒல்லையே ஐயம் ஊர்ந்திடும் பாம்புபோல்
அல்லையே கண்டு அறிந்தவர் சித்தர். -திருமந்திரம்

வாசியோகம்

1. கயறவிலாது நடுக்கண் புருவப்பூட்டு
கண்டுகளிகொண்டு திறந்துண்டு- நடுநாட்டு
ஐயர் மிகவுய்யும் வகையப்பர் விளையாட்டு
ஆடுவதென்றே மறைகள் பாடுவதுபாட்டு

2. சிற்சபையும் பொற்சபையுஞ் சொந்தமெனதாச்சு
தேவர்களு மூலர்களும் பேசுவதென் பேச்சு
இச்சமய வாழ்விலெனக் கென்னையினியேச்சு
என்பிறவித் துன்பமெலா மின்றோடே போச்சு

3. ஐயரருட்சோதி யரசாட்சி யெனதாச்சு
ஆரணமுமாகமும் பேசுவ தென்பேச்சு
எம்முலக வாழ்விலெனக் கென்னை யினியேச்சு
என்பிறவித் துன்பமெலா மின்றோடே போச்சு

4. ஈசனருளாற் கடலிலேற்றதொரு வோடம்
ஏறிக்கரையேறினே னிருந்ததொரு மாடம்
தேசுறும்மாட நடுத்தெய்வமணிப் பீடம்
தீபவொளி கண்டவுடன் சேர்ந்தது சந்தோடம்

5. மேருமலை உச்சியில் விளங்கு கம்பநீட்சி
மேவுமதன் மேலுலகில் வீறுமரசாட்சி
சேறுமதிற் கண்ட பலகாட்சிகள் கண்காட்சி
செப்பலரிதா மிதற்கென்னப்ப னருட்சாட்சி

6. துரியமலை மேலுளதோர் சோதி வளநாடு
தோன்றும் மதிலையர் நடஞ்செய்யு மணிவீடு
தெரியுமது கண்டவர்கள் காணிலுயிரோடு
செத்தவரெழுவாரென்று கைத்தாளம்போடு.

-ஆறாம் திருமுறை

அட்டமா சித்தி

சிவமே பொருளென் றறிவாலறிந்தேன்
செத்தாரை மீட்கின்ற திண்மையைப் பெற்றேன்
உவமேயில்லாத் திருவாரு நிலைதன்னி
லொன்றிரண் டென்னாத வுண்மையி னின்றேன்

சுவாமி எந்த ஊர்

ஊரு மில்லீர் ஒரு பேருமில்லீர்
வோருமில்லீ ரிங்கு வாரீர்
யாருமில்லீ ரிங்கு வாரீர்.

பக்தி யோகம்

1. அன்றே யென்னை யடியனாக்கி யாண்ட சோதியே
யதன்பின்பிள்ளையாக்கி யருளிங்களித்த சோதியே
நன்றே மீட்டு நேயேனாக்கி நயந்த சோதியே
நானும்நீயு மொன்றென் றுரைத்து நல்குசோதியே.

2. நீயே வலிந்திங் கென்னையாண்ட நீதிச்சோதியே
நின்னைப்பாட வென்னை வளர்க்கு நிமலச்சோதியே
தாயேயென வந்தென்னைக் காத்த தருமச்சோதியே
தன்மை பிறரா லரிதற்கரிய தலைமைச்சோதியே.

அடிமை

புழுவிற் புழுத்த புழுவுநிகராப்
 போதா நாயினேன்
பொதுவில் நடிக்குந்தலைவ நினைக்கே
 யடிமை யாயினேன்
தழுவற்கரிய பெரியதுரியத்
 தம்பத் தேறினேன்
தனித்தப்பாலோர் தவள மாடத்
 திருந்து தேறினேன்.

-ஆறாம் திருமுறை

அருட்பெருஞ் சோதி

"எப்பாலுமாய் வெளியெல்லாங் கடந்துமே
அப்பாலுமாகிய அருட்பெருஞ்சோதி".

"எட்டிரண்டேன்பன வியலு முற்படியென
அட்ட நின்றருளிய வருட்பெருஞ்சோதி".

"வல்லப சக்திகள் வகையெலா மலித்தென
தல்லலை நீக்கிய யருட்பெருஞ்சோதி"

"முச்சுடர்களுமொளி முயங்குறவளித்தறா
ளச்சுடராஞ்சபை யருட்பெருஞ்சோதி"
காற்றுறு காற்றாய்க் கானிலைக் காற்றா
யாற்ற விளங்கு மருட்பெருஞ்சோதி.

எட்டிரண்டு வென்னென்றால் மயங்கிய வென்றனக்கே
 யெட்டாத நிலையெல்லா மெட்டுத்தரு குருவே
சுட்டிரண்டுங் காட்டாதே துரியநிலை நடுவே சுகமயமாய்
 விளங்குகின்ற சுத்தம் பரம்பொருளே
மட்டிதுவென்ற வென்றறிவதற்கு மாட்டாதே மறைகள்
 மவுமுறப்பரம் பரத்தே வயங்கின்ற வொளியே
தட்டறியாத் திருபொது விறனிநடஞ்செய் யரசேதாழ்
 மொழியென் றிகழாதே தரித்து மகிழ்ந்தருளே.

(எட்டு கணித முறையில் அகரம் என்றும், இரண்டு என்பது உகரமுமாகும். எனவே எட்டு, இரண்டு என்பதை அகர, உகர கலப்பாகிய "ஓம்" என்னும் பிரணவமாகும்.)

8+2 = 10. 10 ஙகரமாகும். ஞானிகள் மொழியில் ஙகரம் என்பது "ஆன்மா" ஆகும். ஆன்மா ஞானத்தின் முதல் பாடம் 'ஓம்' ஆகும்.

மேலும், எட்டு என்பது புரியட்ட காயம். புரியட்ட காயம் என்பது சீவான்மாவை பற்றிக்கொண்டிருக்கிறது. சீவான்மாவை பற்றியுள்ளது 8. அவை ஆங்காரம், சித்தம், புத்தி, மனம். அந்தகானம், ஆணவம், கன்மம், மாயை. இரண்டு என்பது ஆன்மாவும், பேரான்மாவும்.

ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி

பூண்டி கிராமத்தில் விவசாய குடும்பமான தொண்ட மண்டல துளுவ வேளாளர் மரபில் அருணாசலம், ஆதியம்மை என்ற தம்பதிகள் விவசாயம் செய்து சீவனம் செய்து வந்தனர். அவர்களுக்கு மூன்றாவது மகனாகப் பிறந்தவருக்கு சுப்பிரமணி என்று பெயரிட்டு வளர்த்து வந்தனர். (தெய்வீக பெயர் பொருத்தம் பாருங்கள். அருணாசலம், ஆதி தம்பதிகளுக்கு சுப்பிரமணி என்ற பெயருடைய பிள்ளை; சிவனுக்கும் சக்திக்கும் பிறந்த பிள்ளை சுப்பிரமணியர் என்பதுபோல்.)


சுப்பிரமணியம் ஆரம்பப்பள்ளி நான்காம் வகுப்பு வரை படித்தார். பிறகு குடும்ப சூழ்நிலையில் கல்வியைத் தொடராமல் தையல் தொழில் புரிந்து வந்தார். பெண்கள் துணி தைப்பதில் சிறந்து விளங்கினார் தக்க வயது வந்ததும் அவருக்கு அருணாசலம் ஆதியம்மை தம்பதிகள் திருமணத்தை செய்து வைத்தனர். சுப்பிரமணி தன் இல்லறத்தை நல்லறமாக நடத்தி வந்தார். சுவாமிகள் நடமாடும் சமயம் சுப்பிரமணி தையல் கடையில் தன் துணி மூட்டையுடன் வந்து உட்கார்வது வழக்கம். அப்போது சுப்பிரமணி சுவாமிக்கு தன் வீட்டில் உள்ள எளிய உணவான கேழ்வரகு கூழ் கொடுப்பார். சுவாமிகளும் அதை அமிர்தமாகக் குடிப்பார்.

அண்டமாகிய உலகத்தில் உள்ள அத்தனை தத்துவங்களையும் தன் பிண்டமாகிய உடலில் கண்டவர்கள் மெய் ஞானிகள். தன்னுள் உள்ள ஆன்மாவைக் கண்டு தன் உடலை வேறுபடுத்தி "சும்மா இருக்கும் சுகம்" என்ற மாபெரும் தத்துவங்களைக் கண்டவர்கள் மெய்ஞானிகள். அவர்களுக்குப் பசி, பிணி என்பது கிடையாது. பூலோக மனிதர்கள் நலமடையவும் நல்வழிப்படுத்தவும் வந்து சாப்பிடுவது போலவும், மாந்தராய் இருப்பார்கள். சுப்பிரமணியின் தாய், தந்தையர் செய்த தவப் பயன், சுப்பிரமணியிடம் சுவாமிகள் அடிக்கடி வந்து உட்கார்வதும், அவர் கொடுக்கும் எளிய உணவை உண்பதுமாகும். ஞானப்பாலை பருகியவர்களுக்கு கேழ்வரகுக் கூழ் தேவையில்லை. நம் நலம் பொருட்டே மெய்ஞானிகள் இவ்விதம் நடப்பார்கள்.

பின்நாளில் சுவாமிகள் பூண்டி ஸ்ரீராமுலு நாயுடு வீட்டுத் திண்ணையில் அமர்ந்துவிட்ட போதும். சுப்பிரமணி தன் தையல் கடைவேலை முடிந்ததும் இரவு சுவாமியிடம் போய்த் தரிசிப்பதும், அவருக்கு உணவு வகைகளை ஊட்டி வருவதுமாக தன்னலம் கருதாமல் சுவாமியின் பணிகளைத் தொடர்ந்து செய்து வந்தார்.




சுமார் 30 ஆண்டு காலம் ஸ்ரீ பூண்டி மகான் தொண்டே தன் வாழ்க்கை என்று கருதி சுவாமிக்கு 6 கால பூசையும், பூண்டி வரும் அன்பர்களுக்கு அன்னதானமும் இன்றுவரை தொடர்ந்து பணியாற்றி வரும் பிரதம சீடர் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணி சுவாமிகள்



கணவர் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணி சுவாமிகளுடன் கடந்த 30 ஆண்டு காலம் வறுமையிலும் பூண்டி வரும் பக்தர்களுக்குத் தன் கணவருடன் முக மலர்ச்சியுடன் அன்னதானம் செய்துவரும் பூண்டி அன்னதான அன்னை ஸ்ரீ மார்த்தம்மாள்

தன் மூத்த மகள் சாந்தியை சுவாமிக்கு தினம் பகல் மதிய வேளையில் உணவு கொடுத்துவிட்டு வர உத்தரவு இட்டார்.



பூண்டி ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணி சுவாமியின் மூத்த மகள் சாந்தி சுவாமிக்கு தினம் 11 மணி காலை உணவு ஊட்டுதல்

சுவாமிக்கு உணவு ஊட்டாவிட்டால் அந்த சிறுமிக்கு வீட்டில் சாப்பாடு போடக் கூடாது என்றும் தன் மனைவியிடம் கூறி விட்டார். அந்தச் சிறுமி தினம் பகல் வேளை உணவை சுவாமிக்குத் தவறாமல் ஊட்டி வந்தாள்.

இரவு நேரங்களில் சுப்பிரமணி சுவாமிக்குத் துணையாக சுவாமி அமர்ந்திருந்த வீட்டு திண்ணையின் ஓரம் கீழே படுத்து வந்தார். தன் மனைவி மார்க்கம்மாளை அழைத்து சுவாமி அமர்ந்திருந்த வீட்டு திண்ணையின்முன் தினம் காலை, மாலை தண்ணீர் தெளித்துக் கோலம் போட வேண்டும் என்று கூறிவிட்டார். அந்த மாதரசியும் இப்பணியைத் தவறாமல் செய்து வந்தார்.

சுப்பிரமணியத்தின் தையல் தொழிலும், சவுளி தொழிலும் நட்ட கதியில் சென்று கொண்டிருந்தது. வறுமை தாண்டவம் ஆடியது. அந்த நிலையிலும் சுவாமிக்கு உணவு ஊட்டி வருவதைத் தன் தெய்வப் பணியாக கருதி தொடர்ந்தார். சில சமயம் கேழ்வரகு கூழ்கூட வீட்டில் இல்லாத நேரம் அப்போது கடைகளில் உள்ள சோடா, கலர், பிஸ்கட் வாங்கி ஊட்டி வந்தார்.

ஒரு நாள் சுப்பிரமணியின் தாய், ஆதியம்மையார், குடும்பத்தை சுப்பிரமணி சரிவர நடத்தவில்லை என்றும் சுப்பிரமணியின் குடும்பம் படும் துன்பத்தை திண்ணையில் உள்ள சுவாமியிடம் முறையிட்டார். அதற்கு சுவாமிகள்,

''நான் கடை திறக்கப் போறேம்மா! அதில் அவனை வேலைக்கு வைத்துக் கொள்கிறேன். கவலைப்படாமல் போ!'' என்று கூறிவிட்டார்.

பொதுவாக பூண்டி மகான் யாரையும் ஏக வசனத்தில் பேச மாட்டார். வாங்க! போங்க! என்றும் நல்லதுங்க! சரிங்க! என்றும் தான் கூறுவர். பிறரைப்பற்றிக் கூறும் போது அவர்கள் வயதில் எவ்வளவு சிறியவர்களாயிருந்தாலும், அவர், இவர் என்று தான் தன் வார்த்தையில் உபயோகிப்பார். ஆனால் சுப்பிரமணி அவர்களை மட்டும் சுப்பிரமணியைக் கூப்பிடு! அவன், இவன் என்ற ஏக வசனத்தில் கூப்பிடுவார். இது நாங்கள் கண்ட உண்மை. அதன் இரகசியம் பூண்டி மகானுக்கு மட்டுமே விளங்கும்.




— அருளாசி வழங்கும் அண்ணாமலை ஆதிமூலம்

இந்த சுப்பிரமணி தான் பின்னாளில் சுவாமிக்கு அடிமையாகி, தன் கரங்களால் தினம் ஆறுகாலப் பூசையைச் சுவாமிக்கு செய்ய சுவாமிகள் ஏற்றுக் கொண்டார். சுப்பிரமணியைத் தவிர வேறு எவரையும் தன்னை அபிடேக ஆராதனை செய்ய சுவாமிகள் அனுமதிக்கவில்லை. அவரே பின்னாளில் சுவாமிக்கு அடிமையானார். ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிகள் ஆனார்.

ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணி சுவாமிகள் கடந்த முப்பது ஆண்டுகளாக தினம் பூண்டிக்கு வரும் பக்தர்களுக்கு அன்னமளித்தும், தங்க இடமளித்தும் சுவாமி சமாதி கோயிலில் தவறாமல் தினம் மூன்று கால பூசைகளும் செய்து வருகிறார். பிரதி பௌர்ணமிதோறும் ஆயிரக்கணக்கான பக்தர்களுக்கு உணவும், சுவாமிக்கு பௌர்ணமி பூசையும் செய்து வருகிறார். தன்னலம் கருதாமல் இந்தப் பணியைத் தொடர்ந்து செய்து வருகிறார்.

"ஸ்ரீ பூண்டி மகான் ஆற்று சுவாமிகள் ஆசிரமக் கமிட்டி" என்று ஒரு பதிவுக் கமிட்டியை உருவாக்கி அதில் தான் முக்கிய பதவி வகித்து அந்த கமிட்டியை நல்ல விதமாக செயல்படுமாறு நடத்திச் செல்கிறார்.



யோக நிலையில் யோக அரசன் ஸ்ரீ பூண்டி மகான்

பிரதி வருடம் கமிட்டியைக்கொண்டு தைப்பூசம், சித்திரா பௌர்மணி, ஐப்பசி அன்ன அபிஷேகம், மார்கழி ஆருத்திரா போன்ற விழாக்களை செய்து வருகிறார்.

பிரதி வருடம் சுவாமிகள் கைவல்யமான ஐப்பசி மாதம் சுகல பட்சம் அனுச நட்சத்திரத்தில் சமாதி கோயிலுக்கு கமிட்டியாராலும், அன்பர்களின் நன்கொடையாலும், அபிடேகம், ஆராதனைகளைச் செய்தும் சாதுக்களுக்கு மகேசுவர பூசையைச் செய்துத் ஆயிரக் கணக்கான பேர்களுக்கு அன்னதானம், வசுதிரதானம் செய்து வருகிறார்.

ஸ்ரீ பூண்டி மகான் ஆற்று சுவாமிகள் ஆசிரமக் கமிட்டியை நல்ல செயல்பாட்டுடன் நடத்திச் சென்று அன்பர்களின் நன்கொடையால் பல இல்ட்ச ரூபாய் செலவு செய்து சுவாமியின் தேவ உருவினைச் சுற்றி சிறந்த சிற்பக் கற்கோயிலைக் கட்டித் தன் திருக்கரத்தால் கும்பாபிடேக நன்னீராட்டி வைத்தார்.

ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணி சுவாமிகளும் அவர் மனைவி மாதரசி மார்க்கம்மாளும் இன்றுவரை மேற்கண்ட பணிகளைத் தொடர்ந்து செய்து வருவதுடன் தங்களுக்குப் பிறந்த அருந்தவக் குமரனையும் இந்தப் பணியில் தொடர வைத்து மகிழ்ந்து வருகின்றனர். அந்த அருந்தவப் புதல்வன் "பூண்டி மகான்" திருவாயால் "பால முருகன்" என்று பெயரிடப்பட்டவன்.

அந்த பாலமுருகன் அவர்களும் தன் தாய், தந்தையர் செய்து வரும் தெய்வீகப் பணியை தொடர்ந்து செய்துவர எல்லாம் வல்ல எம்பெருமான் ஸ்ரீ பூண்டி மகான் ஆசி வழங்க வேண்டுகிறோம்.




கருணைக் கடல் ஸ்ரீ பூண்டி மகான்

சுவாமிகள் சுமார் மூன்று ஆண்டுகள் மேற்புறத் திண்ணையில் கடும் நிட்டை கூடியிருந்தார். பிறகு ஒரு நாள் ஆடிமாதம் பரணி நட்சத்திரம் கூடிய நன்னாளில் மேற்புறம் திண்ணையை விட்டு இறங்கி அதே ஓட்டு வீட்டில் கீழ்ப்புறம் உள்ள $3^1/_2$ அடி $1^1/_2$ அடி திண்ணையில் அமர்ந்து விட்டார். பிறகு சுமார் பதினோறு ஆண்டுகள் அந்த இடம் விட்டு எழுந்திருக்காமல் உட்கார்ந்தவர் உட்கார்ந்தவரே. தினம் வரும் ஆயிரக்கணக்கான மக்களுக்குத் தன் கையினால் விபூதியைக் கொடுத்து அவரவர் கோரிக்கைகளைத் தீர்த்து வைத்தார்.

ஒரே ஒரு பீடியை சுவாமியின் வாயில் வைத்து பற்ற வைத்துவிட்டு, ஆயிரம் கேள்விகளைக் கேட்டாலும் அமைதியாக அதற்கெல்லாம் பதிலும் விளக்கமும் கூறி வந்தார்.

தினம் அன்பர்கள் கொண்டு வரும் பழம், இனிப்பு பண்டங்கள், பிஸ்கெட் போன்றவைகளை சுவாமிகள் அமர்ந்து இருந்த திண்ணைக்கு பின்புறம் வீட்டின் நடையில் போட்டுவிடச் சொல்லுவார். அதை யாரும் எடுக்க அனுமதிக்க மாட்டார். "அவன் கருமம் உனக்கு ஏன்?" என்று கூறி விடுவார். அந்த பழங்கள் அழுகல் தன்மையோ, இனிப்பு பண்டங்கள் மீது ஈ, எறும்புகளோ காணவில்லை. மாறாக, அங்கு ஒருவித தெய்வீக விபூதி வாசனை வரும்.

பூண்டி மகான் கையினால் வாங்கிய விபூதியின் நறுமணமே தனி. அந்த நறுமணம் பூண்டி பகவானுக்கே சொந்தம். அந்த மாதிரி நறுமணம் கூடிய விபூதியை நான் இதுவரையில் கண்டதில்லை. நாங்கள் இதைச் சோதிக்க வேண்டும் என்றே போளூரில் இரண்டு விபூதி பொட்டலம் வாங்கிச் சென்றோம். ஒன்றைப் பிரித்து சுவாமியிடம் கொடுத்து மடியில் வைத்து விட்டோம். சற்று நேரம் போய் சுவாமியின் மடியிலிருந்த விபூதியை சுவாமியிடம் கேட்டுப் பெற்றுக்கொண்டோம்.



தினம் வரும் இலட்சோப இலட்சம் மக்களுக்கு சுவாமி விபூதி அளிக்கும் காட்சி

பூண்டி ஆற்று மணலில் போய் (சுவாமியிடம் கொடுத்த விபூதி பொட்டலம்) விபூதியைப் பிரித்து நுகர்ந்து பார்த்தால் சுவாமியிடம் இருந்த விபூதி நறுமணம் கமழ் வாசனை வந்தது. மற்றொறு விபூதி பொட்டலத்தில் எந்தவித வாசனையும் இல்லை. சுவாமி உட்கார்ந்திருந்த திண்ணைக்கு 100 அடி சமீபம் நாம் போகும்போதே ஒரு தெய்வீக வாசனை வரும். இதை சுவாமியிடம் வந்த இலட்சோப இலட்சம் பக்தர்கள் உணர்ந்திருக்கின்றனர்.

சுவாமி அமர்ந்திருந்த திண்ணைக்கு நேரில் உள்ள தெருவில் நின்று சுவாமியைக் கண்டால் ஏதோ நம் உள்ளத்திலும், உடலிலும் இருந்த பாரம் குறைந்த மாதிரியும். நம் உடலில் புது பொலிவு வந்தது போலவும் தெரியும்.

தினம் வரும் அன்பர்கள் தேநீர், காபி, குளிற்பானம் போன்றவைகளைக் கொடுப்பார்கள். சுவாமிகள் விருப்பப்பட்டால் தான் வாங்குவார். விருப்பமில்லாவிடில் ''அப்படியே கீழே வையுங்கோ'' என்பார். பிறகு அதைத் தொடமாட்டார். அதை அங்கு பணி புரிந்த சாதுக்கள் கீழே ஊற்றி விடுவார்கள். சுவாமிக்கு விருப்பமில்லா விட்டால் நாம் என்ன பிரயத்தனம் செய்தாலும் வாங்க மாட்டார்.

அதுபோலவே விபூதியை சுவாமிகள் தன் தேவகரத்தால் கொடுப்பார். வந்தவர்கள் கோரிக்கை ஞாயமற்றும், அது நடை பெறாது என்றும் தன் ஞானதிருட்டியால் கண்டு அவர்களுக்கு கொடுக்காமல் "நீங்களே ஏடுத்துக் கொள்ளுங்கள்" என்று அமைதியாகக் கூறிவிடுவார். மேலும் சுவாமிகள் வரும் பக்தர்களில் பல பேர்களுக்குத் தன் கையாலேயே விபூதியை நெற்றியில் இட்டு, குங்குமமும் இடுவார். அப்படிப்பட்ட அன்பர்கள் கோரிக்கை நிறைவேறும்.

ஒரு நாள் ஒரு அன்பர் தேநீர் வாங்கிக்கொண்டு சுவாமியிடம் கெஞ்சுகிறார். சுவாமி மௌனமாக வாங்காமல் தன் தாடியை உருவிக் கொண்டு அமைதியாக வந்த அன்பரைப் பார்த்துக் கொண்டிருந்தார். கடைசி வரையிலும் வாங்கவில்லை. வந்த அன்பர் மனம் வேதனைப் பட்டார். சுவாமியிடம் பல சாதுக்கள் பணி புரிந்து வந்தனர். (இப்புண்ணிய ஆத்மாக்களைப்பற்றி பின்னால் கூறுகிறோம்). அதில் ஒருவர் 'என்ன சுவாமி, அவரிடம் தேநீர் வாங்கவில்லை என்று அந்த அன்பர் மனம் வேதனைப்படுகிறார்' என்று கேட்டார்.

அதற்கு சுவாமிகள்:


"ஏம்பா, அந்த ஆள் ஒரு தேநீர் வாங்கிக் கொடுத்துவிட்டு நாளைக்கு வேலூர் கோர்ட்டுக்கு சாட்சி சொல்ல கூப்பிடுறாம்பா! நமக்கு ஏம்பா அந்த கர்மம்" என்று கூறிவிட்டார். உடனே பணிபுரியும் சாது அந்த அன்பரிடம் வந்து விபரம் கேட்டார்.

எனக்கு ஒரு சிக்கலான வழக்கு வேலூரில் நடைபெறுகிறது. அதற்கு சுவாமியின் ஆசீர்வாதம் இருந்தால் வழக்கு வெற்றியடையும் என்று வேலூரில் என் நண்பர் கூறினார். அதனால்தான் வந்தேன் என்றார். ஆனால் சுவாமி நான் கொடுத்த தேநீரை வாங்க மறுத்துவிட்டார் என்று கூறினார்.

பூண்டி மகான் முக்காலமும் உணர்ந்த மெய்ஞானி. அவரைக் காட்டிப் பிழைக்கலாம் என்று நினைத்தால் அது நடக்காத காரியம். சுவாமிகள் பணக்காரர், ஏழை என்று பிரித்துப் பார்க்கும் நிலைமைக்கு அப்பால் இருந்தவர். வரும் அன்பர்கள் அனைவரையும் ஒரே நோக்கோடுதான் பார்ப்பார். மேலும் கூறுவதானால் ஏழை, எளியவர்களுடன்தான் அவர் அன்பாகப் பேசி அவர்கள் கொடுக்கும் தேநீர், காபி, மிட்டாய் போன்றவற்றை வாங்கிக் கொள்வார். பெரிய பந்தாவுடன் வந்தால் அவரிடம் எதுவும் வாங்க மாட்டார். இப்படிப்பட்ட தேவ புருசர் தன் யோக சமாதி நிலையை விட்டு உலக மக்களுக்காக நன்மை செய்யும் பொருட்டு மக்களுடன், மனிதர்போல் பேசியும் உணவு வகைகளை ஊட்ட சாப்பிட்டும் ஆசீர்வதித்து வந்தார்.

தாருகாவன முனிகள், இந்திரன், தருமன், பத்மாசூரன், அர்ச்சுனன், சூரபத்மன் போன்றோரும் இன்னும் தேவர்கள், அசுரர்கள் செய்யும் யாகமும், தவமும், தன் சொந்த நலன் கருதியும், இந்திர பதவி அடையவும், போரில் வெற்றிகளை அடையவும், மோட்சம், சொர்க்கம், போன்ற பதவிகளை அடையவும், தன் சொந்த நலன் கருதியே அவர்கள் யோகம், யாகம், தவம் போன்றவை எல்லாம் செய்தார்கள். இது காமியத்தவம்.

ஆனால் உண்மை தெளிந்த மெய்ஞானிகள் தன் சுயநலம் சிறிதும் இல்லாமலும் தங்களுக்கு இந்திர பதவி, சொர்க்கம், மோட்சம் போன்ற உயர்ந்த பதவிகள் கிடைக்கத் தகுதியும் வாய்ப்பும் இருந்தபோதிலும் அதை விடுத்து (அந்த நிலையிலும் பற்று அறுத்தவனே மெய்ஞானி) உலக மாந்தர்களின் நன்மை கருதியும், அவர்களை மேல்நிலைக்கு கொண்டு போகவும் அவர்கள் நற்கதி அடையவும் மாந்தர்களுடன் மாந்தராய் வருவார்கள். இது நிட்காமியத் தவம்.



முக்காலமும் உணர்ந்த மெய்ஞ்ஞானி


அவர்கள் நமக்கு உண்பது போலவும், உறங்குவது போலவும் இருப்பார்கள். அவர்கள் உண்ணவுமில்லை, உறங்கவுமில்லை. தேநீர், பீடி குடிக்கவுமில்லை. அவர்கள் பிறக்கவுமில்லை, இறக்கவுமில்லை, தன்னால்தான் தோன்றி வந்தவர்கள் மெய்ஞானிகள்.

"மோட்சம் வேண்டார்கள் - அகப்பேய்
முக்தியும் வேண்டார்கள் - அகப்பேய்
சின்மய மானவர்கள்"

என்று அகப்பேய்ச் சித்தர் பாடுகிறார்.

இப்படிப்பட்ட நிட்காமியத்தவம் புரிந்து வந்து திண்ணையில் அமர்ந்த தேவ புருசர் பூண்டி மகான் பார்வை நம்மீது பட்டாலே நம் சகல வினைகளும் அற்றுப் போய்விடும். அவர்களின் ஒரு சொல்லே பல வேதமந்திரங்கள் ஆகும். அவர் கைப்பட விபூதியைப் பெற்றுக் கொண்டால் நம் சென்மாந்திர கர்மங்கள் அகன்று விடும்.

மேலும், ஞான புத்தகங்களைக் கொண்டு அதில் மெய்ஞானிகளின் நிலை என்ன என்று இரவில் என் வியாபாரத் தலத்தில் படித்து எழுதிய புத்தகம் இது. எல்லாவற்றிற்கும்மேல் எங்கள் கண்கண்ட கலியுக தெய்வம். திண்ணையில் இருந்த தினகரன், மும்மலங்களை நீக்கிய முனிவர், அந்தக்கரணங்களை அகற்றிய ஆண்டவர், ஆறு ஆதாரங்களைக் கண்டு தேர்ந்த ஆற்று சுவாமி, ஓட்டுத் திண்ணையில் அமர்ந்திருந்த ஒப்பிலா மாணிக்கம், கலசப்பாக்கம் ஆற்றில் கண்டெடுத்த ஞான கற்பக விருட்சம் பூண்டி மகான் ஆசீர்வாதத்தால் எழுதிய புத்தகம் இது.



அன்பர்களுக்கு ஆசி வழங்குதல்

சுவாமிகளிடம் வந்து நன்மைகள் அடைந்த அன்பர்களின் எண்ணிக்கையில் சில சம்பவங்கள் ஒரே மாதிரி இருப்பதை நாங்கள் அறிய நேர்ந்தது. அதனால் ஒவ்வொரு சம்பவங்களிலும் ஒவ்வொன்றை மட்டும் உதாரணத்திற்கு மட்டும் எழுத வேண்டியுள்ளது. அத்தனையும் எழுத வேண்டுமானால் புத்தகம் பல பிரிவுகள் பதிப்பிக்க வேண்டி வரும். அதனால் ஒரு சில சம்பவங்களுடன் நிறுத்திக் கொண்டோம். சுவாமிகள் திண்ணையில் இருக்கும்போது நடந்த அற்புதங்களையும் அவர் நடமாடும் நடந்த அற்புதங்களை எங்களுக்கு கூறிய சாதுக்களுக்கும் அன்பர்களுக்கும், பக்தர்களுக்கும் என் இனிய நண்பர்களுக்கும் நன்றி கூறிய அன்னார்களுக்கும் பூண்டி மகான் அருளாசி வழங்க வேண்டுகிறேன். மேலும் சுவாமியின் மகிமையைப்பற்றி புத்தகம் எழுதுவதை அறிந்து எனக்கு தபால் மூலமாகவும் தொலைபேசி மூலமாகவும் நேரிலும் வந்து சுவாமியின் மகிமையைக் கூறிய அத்தனை பேர்களுக்கும் என் இரு கரங்களையும் சிரம்மேல் வைத்து வணங்குகிறேன்.

இனி நம் பூண்டி மகான் ஆற்று சுவாமிகளின் அருட்பார்வை கடாட்சத்தாலும், அவர் திருக்கரத்தாலும் விபூதியைப் பெற்றுச் சென்ற அன்பர்களின் வினைகளை எப்படி எப்படியெல்லாம் தீர்த்தார்

என்பதையும், தான் அமர்ந்திருந்த திண்ணையிலிருந்து எழுந்திராமல் பல மைல்களுக்கு - ஏன் பல நாடுகளுக்கும் சென்று அங்குள்ள அன்பர்களுக்கும் அவர் என்ன நன்மைகள் செய்தார்கள் என்று பார்ப்போம்.

சுவாமியின் மகிமைகளையும், சுவாமிகள் அன்பர்களுக்கு அவர் நீக்கிய தீய வினைகளையும், அன்பர்களுக்கு என்ன, என்ன, அருள் பாலித்தார் என்று அறிய சுமார் ஒன்பது ஆண்டுகளாக சிறுகச், சிறுக சேர்த்து எழுதிய புத்தகம் இது.

மதுரை, சென்னை, வேலூர், திண்டிவனம், விழுப்புரம் திருக்கோயில், திருவண்ணாமலை, ஆரணி, போளூர் போன்ற ஊர்களில் நானே நேரில் சென்று சுவாமியிடம் வந்த பக்தர்களைக் கண்டு சுவாமி அந்த பக்தர்களுக்கு என்ன என்ன அருள் பாலித்தார் என்று கேட்டு எழுதி ஒலி நாடாவில் பதிவி செய்து கொண்டு வந்து எழுதப்பட்ட புத்தகம் இது.

மேட்டுப்பாளையம், நாயுடுமங்கலம், பொற்குணம், வில்வாரணி, காஞ்சி, கடலாடி, கலசப்பாக்கம், இலாடவரம் பூண்டி, தென்மாதி மங்கலம் போன்ற கிராமங்களுக்கு நானே நேரில் போய் சுவாமியின் அன்பர்களைக் கண்டு சுவாமியின் மகிமைகளைக் கேட்டு எழுதிய புத்தகம் இது.



பாத பூசையின்போது ஆசி வழங்குதல்

ஒரு சில அன்பர்கள் சுவாமியின் மகிமைகளைக் கூறுகிறார்கள். ஒரு சில அன்பர்கள் அதைக் கூறமுடியாது என்று கூறி விட்டனர். அதெல்லாம் தேவ இரகசியம். எனக்கும் சுவாமிக்கும் உள்ள தொடர்புகளைக் கூறமுடியாது என்று கூறிவிட்டனர். அப்படியும் அவர்களைக் கேட்கும் முறையில் தாழ்மையாகக் கேட்டு எழுதப்பட்ட புத்தகம் இது. கற்பனையாக எழுதிய புத்தகமாக நினைக்க வேண்டாம்.

இது ''காலையில் வந்த கனகா'', ''இரவில் வந்த இந்திரா'', ''மாலையில் வந்த மல்லிகா'' போன்ற நாவல் புத்தகம் என்று எண்ணிவிடாதீர்கள் என்று பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

சுவாமியின் மகிமைகளை எங்களுக்கு நல்ல மனதுடன் கொடுத்த புண்ணியவான்கள் தங்களின் பெயர்களைப் போட வேண்டாம் என்று வேண்டி எங்களைக் கேட்டுக் கொண்டதன் பேரில் அவர்கள் பெயர்களை அன்பர், பக்தர் என்று மட்டும் எழுத நேர்ந்தது. அவர்களின் ஒட்டு மொத்தக் கருத்து, நாம் இந்தப் பிறவியில் இப்படிப்பட்ட மெய்ஞானியைக் கண்டதே போதும் என்று கூறிவிட்டதனால் சிலர் பெயர்களை எழுத நேர்ந்தது. பலர் பெயர்களை இதில் குறிப்பிட முடியாமல் போய் விட்டது.

தீராத குன்ம வியாதி தீர்ந்தது

தஞ்சை மாவட்டம் மாயவரம் பக்கம் ஒரு சிறு கிராமத்திலிருந்து ஒரு அன்பர் சுவாமியிடம் வந்தார். அப்போது கார்த்திகை மாதம் பூண்டி செய்யாற்றில் இரு கரையையும் தொட்டு புதுவெள்ளம் போய்க் கொண்டிருக்கிறது.

மாயவரம் அன்பர் ஒரு நாள் காலை ஆற்று நீரில் குளித்துவிட்டு ஒரு சொம்பு தண்ணீர் (புது வெள்ளம்) கொண்டு வந்து பூண்டி மகான் பாதங்களைக் கழுவி புதிதாகக் கறந்த பசுவின்பாலை எடுத்துச் சென்று சுவாமியிடம் கொடுக்கப் போனார். அதற்கு சுவாமிகள்.



சுவாமிகளின் சின்முத்திரை அசீர்வாதக் காட்சி

''வேண்டாம்பா! வேண்டாம்''-என்று கூறிவிட்டார். வந்த அன்பர் மேலும் வேண்ட, அதற்குச் சுவாமிகள்

"வேண்டாண்ணா! வேண்டாம் கீழே வைப்பா! யார் செய்த கர்மத்தை யார் ஏற்றுக் கொள்வது?"
என்று கூறிவிட்டார்.

சுவாமியிடம் பணிபுரியும் சாது ஒருவர் அந்த மாயவரம் அன்பரை அப்புறம் அழைத்துச் சென்று, என்ன செய்தி என்று கேட்டார். அதற்கு மாயவரம் அன்பர் கீழ்க்கண்டவாறு கூறினார்.

"நான் மாயவரம் பக்கமிருந்து வருகிறேன். எனக்கு தீராத குன்ம நோய் உள்ளது. இதுவரையில் பல ஆயிரம் ரூபாய் செலவு செய்து வைத்தியம் பார்த்து விட்டேன். என் நோய் குணமாக வில்லை. பிறகு என் மாமனாரின் ஆலோசனைப்படி தஞ்சாவூரில் கந்தர் நாடி காண்ட ஓலைச் சுவடி பார்த்தேன். அதில் இந்த தீராத நோய்க்குக் காரணம், எங்கள் முன்னோர்கள் கோயில் சொத்தைத் தின்றதால் அந்தப் பாவம் என்னை நோயாக வந்து வாட்டுகிறது என்றிருந்தது. அதற்குப் பரிகாரமும் சொல்லி இருந்தது.

"திருவண்ணாமலைக்கு வடக்கே ஒரு காதம் தூரத்தில் ஆற்றங்கரையில் ஒரு சிறிய கிராமத்தில் ஓடுவேய்ந்த வீட்டின் திண்ணை மீது அமர்ந்து பிர்மஞானி ஒருவர் இருக்கிறார் அவருக்கு குரு பகவான் நாளில் அதிகாலை 5 மணிக்கு பசுவின் பாலைக்கொடுத்து வந்தால் இந்த நோய் தீரும்" என்று படிக்கக் கேட்டு ஒரு மாத காலமாக தேடி நேற்றுத்தான் இங்கு வந்தேன். இன்று வியாழக்கிழமை. அதனால்தான் பால் கொண்டு வந்தேன். வாங்கவில்லை" என்று கூறி அழுதார்.

பிறகு சாமியிடம் அந்த சாது மாயவரம் அன்பரை அழைத்துச் சென்றார். அதற்கு சுவாமிகள்

"அவரைக் கொஞ்ச நாளைக்கு வந்து போகச் சொல்லுங்க.
பாவங்களைப் படிப்படியாகத் தீர்க்கவேண்டும்"

"கருமத்தினால் வந்தவினை தருமத்தினால் போக வேண்டும்பா!"

என்று மகான் கூறிவிட்டார். பிறகு அந்த மாயவரம் அன்பர் ஒவ்வொரு வியாழக்கிழமையிலும் அதிகாலை பசும் பால் கொண்டு வந்து சுவாமிக்கு எதிரில் ரோட்டில் இருகால்களையும் முட்டிப்போட்டு வேண்டி வந்தார். நாளடைவில் அந்தத் தீராத குன்ம நோய் தீர்ந்துவிட்டது.

ஒரு மெய்ஞானியின் பார்வை நம்மீது பட்டுவிட்டாலே போதும், பல சென்மங்களாக தொடர்ந்து வந்த நம் கர்ம வினைகள் தீர்ந்துவிடும். அட்டமா சித்திகளைப் பெற்றவன் சிவன் ஆவன். அவன் எல்லாவற்றையும் படைக்கவும், காக்கவும், அழிக்கவும் வல்லவன் ஆவான். சிவன் இவனே என்ற நிலையினை அடைவார் என்று திருமூலர் கூறுகிறார்.

"தானே படைத்திட வல்லவன் ஆயிடும்
தானே அளித்திட வல்லவன் ஆயிடும்
தானே சங்காரத் தலைவனும் ஆயிடும்
தானே இவன்எனும் தன்மையன் ஆமே!" -திருமந்திரம்

தன்னைத்தான் உணர்ந்து தலைவன் ஆனவர் நம் பூண்டி பிர்ம ஞானி. அவர் கண் பட்ட பிறகு எப்படிப்பட்ட கர்ம வினைப் பயனும் ஓடிவிடும். அப்படி மாயவரம் அன்பருக்கு, உடல் நலம் அடைந்துவிட்டது பிறகு அவர் சுவாமியின் பக்தர் ஆகிவிட்டார்.

வேலூரில் நேதாசி மார்க்கெட்டில் கோணி வியாபாரம் செய்து வருபவர் தன்சிங் என்ற நம் பூண்டி சுவாமியின் பக்தர். அவருக்கு உடலில் சர்க்கரை வியாதி சுவாமியின் கண்பார்வையால் எப்படி தீர்ந்தது என்று அவரே கூறுகிறார்.

"நம் குரு நாதர் பகவான் பூண்டி மகான் ஆற்றுச் சுவாமிகளிடம் பல்லாயிரக் கணக்கானோர் சென்றனர். பகவான் அருள் பெற்ற அனுபூதி ஒவ்வொருவருக்கும் தனியாக இருக்கக் கூடும். அதேபோல் நானும் பலமுறை ஐயாவிடம் சென்றுள்ளேன். அவர் பாதார விந்தங்களில் சரணடைந்து ஐயாவின் ஆசியைப் பெற்றுள்ளேன். ஆனால் ஒவ்வொரு முறை தரிசனத்திலும் ஒரு புதிய அனுபவமும் ஆனந்தமும் எனக்கு ஏற்பட்டது உண்டு. பகவான் பூண்டி மகானின் அனுபூதிகளில் சொல்ல முடியாதவையும் ஏட்டில் எழுத முடியாதவைகளும் நிறைய உள்ளது. ஒன்றை மட்டும் கூறுகிறேன்."

எனக்கு உடல் நலம் சற்று குறைவாகத் தெரிய, நான் டாக்டரிடம் சென்றேன். அதற்கு டாக்டர் சர்க்கரை வியாதி இருக்கிறதா என்று பார்ப்போம் என்று கூறி பரிசோதனை செய்து, சர்க்கரை வியாதி உள்ளது. அதனால்தான் உங்கள் உடல் பலகீனமாக உள்ளது. இனிப்புப் பண்டங்களைச் சாப்பிடக் கூடாது என்று கூறிவிட்டார். மாதங்கள் சென்று விட்டது. டாக்டரின் ஆலோசனைப்படி கடும் பத்தியமாக இருந்து வந்தேன். ஆனாலும் சர்க்கரை நாளுக்கு நாள் அதிகமாகி நான் மிகவும் பலகீன நிலை அடைந்து விட்டேன்.

ஒரு நாள் பூண்டி சுவாமிகளிடம் சென்று வணங்கினேன். நான் ஏதும் கேட்கவில்லை. கேட்பதும் கிடையாது. என் நண்பர் தூண்டுவதால் குருக்கள் சுப்பிரமணி சுவாமியிடம் "ஏன் சாமி, நம் கோணி மண்டிக்காரருக்கு சர்க்கரை வியாதியாம். அதை நல்ல விதமாக ஆக்கிடக் கூடாதா?" என்று கேட்டார். அதற்குச் சுவாமிகள், நம் குருநாதர் - கருணைக் கடல், காருண்ய மூர்த்தி - ஒளிப்பிழம்பாக என்னைப் பார்த்து நோக்கினார். பிறகு சுப்பிரமணி சுவாமி குருக்களிடம் "அவருக்குச் சர்க்கரை நோய் இல்லப்பா! என்றார். எனக்கு சமாதானம் ஆகவில்லை. குருக்கள் சாமி மறுபடியும் கேட்கிறார். அதற்கு சுவாமிகள் "அவருக்குச் சர்க்கரையே இல்லையப்பா!" என்றார். சுவாமியின் வார்த்தை ஆணித்தரமாக இருந்தது.

மறுநாள் வேலூர் வந்து டாக்டரிடம் பரிசோத்னை செய்தேன். என்ன ஆச்சர்யம்! சாதாரணமாக ஒரு மனிதனுக்கு இருக்க வேண்டிய சர்க்கரைகூட என் உடலில் இல்லை என்றும் நேற்று வரை சர்க்கரை அளவிற்கு அதிகமாய் இருந்தது என்றும் கூறி டாக்டர்கள் ஆச்சர்யப்பட்டனர். அன்று முதல் நான் சுவாமியே என் குருநாதர் என்று எண்ணி வாழ்ந்து வருகிறேன்.

அன்று பௌர்ணமி. நான் சுவாமியை வணங்கி நின்றேன். அப்போது குருக்கள் சுவாமிகள் சுவாமியை நோக்கி, கேசரியை சுவாமிக்கு ஊட்டியபடி

''ஏன் சாமி, நம் கோணி மண்டி தன்சிங் கடைக்குப் போய் வாங்களேன்'' என்றார். அதற்கு சுவாமிகள்:

''யாருப்பா சொன்னது நான் அவர் கடைக்கு போகலன்னு! தினம் நேராய் காட்பாடி போய் ரயில் நிலையத்தில் இருப்பவர்களைக் கவனித்து விட்டு அங்கிருந்து நேராக நடந்தே தோட்டப்பாளையம் வந்து அங்கே இருக்கிற பெரியசாமி, சின்ன சாமி இவங்களையெல்லாம் பார்த்துவிட்டு பிறகு மார்க்கெட் போய் இவரு கோணிக் கடையில் வந்து உட்கார்ந்து பார்த்து விட்டுத்தான் வரேம்பா!'' என்றார். எனக்கு ஆனந்தம் எல்லையைக் கடந்தது. அவர் சொன்னதற்குச் சாட்சியாக இன்று வரை பூண்டி மகான் படம் கடை எதிரில் இருக்கிறது. தினம் பல ஆயிரம் பேர் வணங்கிச் செல்வதும் கண்கூடு என்று தன்சிங் கூறுகிறார்.

சென்னையை அடுத்த சிறு கிராமத்தில் இருந்து பெரிய சமீன் பரம்பரையைச் சேர்ந்த தம்பதிகள் இருவரும் பூண்டி சுவாமியைத் தரிசிக்க பூண்டி வந்தனர். அந்தச் சமீன் தம்பதியின் உறவினர் குழந்தைக்கு வயது 9 ஆகியும் பேசும் தன்மை வராமல் ஊமையாகவே இருந்தது.

அந்த தம்பதிகள் இருவரும் சுவாமியிடம் தன்னுடன் அழைத்துச் சென்ற ஊமைச் சிறுவனைக் கொண்டு சென்று சுவாமியிடம்-

''சுவாமி, இந்தச் சிறுவன் என் தங்கையின் மகன். செல்வங்கள் பல இருந்தும் இந்த ஒரே பிள்ளை ஊமையாக இருப்பதால் மனது வேதனைப்படுகிறது தாங்கள்தான் இந்த பிள்ளையைப் பேச வைக்கவேண்டும்'' என்று வேண்டினர். அதற்கு சுவாமிகள்,

''பேச வைப்போம்! பேச வைப்போம்! கொஞ்ச நாள் போகட்டும்!'' என்று கூறித் தன் கையால் விபூதியைக் கொடுத்தார்.

அந்த தம்பதிகள் சுவாமியிடம் பணிபுரிந்த சாதுவின் ஆலோசனையின் படி, பூண்டியில் ஒரு மாதம் தங்கினார்கள்.

தினமும் காலை அத்தம்பதிகள் தம் கையாலே இட்லி மாவை அரைத்து அதை சமைத்து ஆற்றில் குளித்துவிட்டு ஈரத்துணியுடன் சுவாமிக்கு காலை உணவு ஊட்டி வந்தனர். இப்படி நாற்பத்து எட்டு நாள் விரதம் இருந்து சுவாமியிடம் வணங்கி விபூதி பெற்று வந்தனர்.

பிறகு பேச்சற்ற ஊமைப்பிள்ளை தூய தமிழில் தன் வாயால் கவிதை உதிர்க்க ஆரம்பித்து விட்டது. வந்த சமீன் தம்பதிகளுக்குச் சுவாமியிடம் அசைக்க முடியாத நம்பிக்கையும் பக்தியும் ஏற்பட்டுவிட்டது.

சமீன் தம்பதிகள் சுவாமியிடம் சென்று ''சுவாமி இதுவரை எவ்வளவு வைத்தியச் செலவு செய்து விட்டோம். எங்கள் பிள்ளையினால் பேச முடியவில்லை. தங்கள் விபூதியினால் எங்கள் செல்வம் பேசுகிறது. அதனால் நாங்கள் எவ்வளவு பொருள் கேட்டாலும் தரத் தயாராக இருக்கிறோம் உத்திரவு இடுங்கள்'' என்று வேண்டிக் கேட்டனர். அதற்கு சுவாமிகள்,

''எனக்கெதற்கப்பா கூலி, நான் பரதேசி!

"அஞ்சுபேர் கூலியைக் கைக்கொள்ள வேண்டாம்
அதுவேதிங் கென்னினி சொல்லக் கேளாய்
தஞ்சமுடன் வண்ணா னாவிதன்தன் கூலி
சகலகலை யோதுவித்த வாத்தியார் கூலி
வஞ்சமற நஞ்சறுத்த மருத்து விச்சிகூலி
மகா நோவுதனைத் தீர்த்த மருத்துவன் தன்கூலி
இன்சொலுட னிவர்கூலி கொடாத பேரை
ஏதேது செய்வானோ வெமன்தானே!"

என்று பாடல் பாடிவிட்டார்.

வண்ணார் கூலி, நாவிதன் கூலி, பல கலைகளைக் கற்றுத்தந்த ஆசிரியர் கூலி, நஞ்சுக் கொடியாகிய தொப்பிளை அறுத்த மருத்துவச்சி (பிரசவம் பார்க்கும் பெண்) கூலி, கொடியநோயினை நீக்கும் வைத்யன் கூலி, ஆக ஐந்து பேர் கூலியை அன்புடனும் இன்சொல்லுடனும்கொடுக்க வேண்டும். அப்படி கொடுக்காதவனை காலன் துன்பம் செய்வான் என்று அறிய வேண்டும். பரதேசிக்கு ஏன் கூலி என்று கூறிவிட்டார்.

சுவாமி அங்கு அன்பர்கள் கொடுக்கும் பீடி, தீப்பெட்டியைக் கூட யாரையும் தொட விடுவதில்லை. 'அவனவன் கர்மத்தைத் தொலைக்க இதை இங்கு கொண்டு வருகிறான். உனக்கு ஏன் அவன் கர்மம் என்பார். அப்படிப்பட்ட மகானுக்கு பொன், பொருள் தேவையில்லை. விருப்பு, வெறுப்பற்ற ஞானி, தேவையற்ற தெய்வம் அவர்.

மாற்றிப்பிடிக்க மருந்தென்ன சொல்லடி சிங்கி - அது
மாளாமல் மாண்டு மறைந்துஇருப்பதே - சிங்கா!

அப்படி மாளாமல் மாண்ட மெய்ஞானி அவர். தூங்காமல் தூங்கிய ஞானதுரை அவர். அவருக்கு எதற்கு பொன், பொருள்? பொன்னும் மண்ணும் அவருக்கு ஒன்றே.

★ ★ ★

'பூண்டிக்கு அருகாமையில் உள்ள ஒரு கிராமத்தில் செல்வந்தரான ஒரு ரெட்டியார் குடும்பம் பூண்டி சுவாமியைத் தரிசனம் செய்ய வந்தது. வரும்போது தன் வீட்டில் சுவாமிக்கு பலவித இனிப்புப் பண்டம், பலகாரங்கள், கூடை கூடையாக தயார் செய்து மாட்டு வண்டியை பூட்டிக்கொண்டு வந்தனர். அதே ஊரில் ஒரு சலவைத் தொழிலாளிப் பெண், இந்த மாட்டு வண்டியிலே தானும் வருவதாகக் கூறி மாட்டு வண்டியில் ஏறிக் கொண்டார்.

வண்டியில் பார்த்தால் கூடை கூடையாக இனிப்புப் பண்டங்களும், பழத்தினுசுகளுமாக உள்ளது. ஏழை சலவைத் தொழிலாளிப் பெண் பத்து காசு மிட்டாய் வாங்கி சுவாமிக்குத் தன் மடியில் மறைத்து எடுத்துக் கொண்டு வந்தார்.

பூண்டி சுவாமியிடம் வண்டி வந்து நின்றது. ரெட்டியார் குடும்பம் கூடை, கூடையாக தாம் கொண்டுபோன தின்பண்டம், பழங்களை சுவாமியிடம் கொண்டு சென்றனர். அதற்கு சுவாமிகள்: ''அப்படி எட்ட வெய்யுங்கோ! என்று கூறிவிட்டார். ரெட்டியார் குடும்பம் சுவாமியை வணங்கிவிட்டு தன்னுடன் கொண்டு வந்த பொருட்களை சுவாமி அமர்ந்து இருந்த திண்ணைக்கு அடியில் வைத்துவிட்டு வந்து விட்டனர். இதையெல்லாம் கண்ட ஏழை சலவைத் தொழிலாளிப் பெண்ணுக்கு ஒன்றும் புரியவில்லை. இப்படி விலை உயர்ந்த இனிப்புப் பண்டங்களையே சுவாமி வாங்காதபோது நாம் கொண்டு வந்த பத்து பைசா மிட்டாயையா வாங்கப் போகிறார் என்று எணி, சுவாமியிடம் சென்று வணங்கி விபூதி வாங்கிக் கொண்டு புறப்படத் தயார் ஆனார். அப்போது பூண்டி சுவாமிகள் அந்த சலவைத் தொழிலாளிப் பெண்ணைப் பார்த்து,

''ஏம்மா எனக்குனு வாங்கியாந்த அந்த
மிட்டாயைக் கொடுத்துட்டுப் போம்மா!'

என்று கூறிவிட்டார். அந்தப் பெண் அப்படியே சுவாமியின் காலில் வீழ்ந்து வணங்கி 'சுவாமி, இப்பேர்ப்பட்ட பலகாரங்களையே நீங்கள் தொடாத போது என் மிட்டாயையா வாங்குவீர், என்று பயந்து விட்டேன்' என்று கூறினார். அதற்கு சுவாமிகள்:

''எட்டி பழுத்த இருங்கனி வீழ்ந்தன
ஒட்டிய நல்அறம் செய்யா தவர்செல்வம்
வட்டி கொண்டீட்டியே மண்ணின் முகந்திடும்
பட்டிப் பதகர் பயன் அறியாரே''

என்று நின்று நிதானமாக மேற்கண்ட பாடல்களைப் பாடிவிட்டு மெளனமாக இருந்து விட்டார். இதற்கு அர்த்தமும் இந்தப் பாடல் எதில் வருகிறது என்று புரியாமல் ஒரு குழு பல புத்தகங்களை புரட்டினர். கடைசியில் திருமூலர் தன் திருமந்திரத்தில் அறன் செய்யாதவன் செல்வம் பயனற்றது என்று கூறியுள்ளதைக் கண்டனர்.


எட்டிப் பழம் பெரிதாக பழுத்து பூமியில்தான் விழும். அதை மனிதர் களோ, பறவைகளோ உண்பது கிடையாது. அதுபோல் விரும்பித் தருமம் செய்யாதவன் செல்வத்தை எவரும் விரும்பமாட்டார்கள். வட்டி வாங்கி பணம் சேர்ப்பவன் பட்டி (நாய்)க்கு சமம் என்ற விளக்கத்தைக் கண்டோம்.

சுவாமிகள் திண்ணையில் அமர்ந்துகொண்டு வரும் அன்பர்களிடம் பரிபாசையாகவும், பாடல்களாகவும் பதில் கூறுவார். இதை அங்கிருந்த சாதுக்கள், அன்பர்கள் உடனே குறித்து வைத்தனர். அதற்கு விளக்கம் புரியாவிட்டால் பல புத்தகங்களைப் பார்க்க நேரும். அப்படியும் பல பரிபாசைகளுக்கு பொருள் கிடைக்காமல் போனதும் உண்டு.

பூண்டியில் ஒரு அன்பர் சுவாமியிடம் நெருங்கிப் பழகும் பேறு பெற்றவர். அவர கொஞ்சம் கல்வி அறிவும் தத்துவ அறிவும் உள்ளவர்.

சுவாமி கூறும் பரிபாஷைகளை உடனே புரிந்து கொள்ளும் ஆற்றலும் உடையவர். அவர் தன் விவசாயத் தொழில் நேரம் போக மீதி நேரம் முழுவதும் சுவாமியிடமே இருப்பார். வரும் அன்பர்களின் குறைகளை சுவாமியிடம் கூறுவார். வரும் அன்பர்கள் தேநீர் வாங்கிக் கொடுத்தால்கூட குடிக்க மாட்டார். அவரே, வரும் அன்பர்களுக்கு தேநீர், காபி, சிற்றுண்டி தன் சொந்த பணத்தில் வாங்கிக் கொடுப்பார்.

இவர் தினம் வரும் அன்பர்களின் குறைகளுக்கு சுவாமிகள் கூறியதை நேரம், காலத்துடன் குறித்து வைத்துள்ளார். வரும் அன்பர்களுக்கு சுவாமி கூறிய பரிபாஷைகளுக்கு விளக்கம் கூறுவார். இவர் தலைமையில் ஆரணி, திருவண்ண்ாமலை அன்பர்கள் ஒன்றுகூடி சுவாமியைப்போல் ஐம்பொன் சிலையை சுவாமிமலை தேவசேனா தபதிகள் மூலம் செய்து வைத்துள்ளனர்.



சுவாமிகளின் ஐம்பொன் சிலை

உருவாக்கியவர் : (தபதி) எஸ். தேவசேனாபதி

9, ராஜ வீதி, சுவாமிமலை, தஞ்சை மாவட்டம்.

5-5-1974 (ஆனந்த ஆண்டு சித்திரை 22உ ஞாயிற்றுக்கிழமை)

திண்ணையில் வைக்கப்பட்டது.

ஒரு நாள் திருக்கோயிலூரில் இருந்து கணவனும் மனைவியும் தனக்கு பிள்ளைக்கனியமுது இல்லை என்று பூண்டி வந்து, பூண்டி மகானை வேண்டி வணங்கி நின்றார்கள். அதற்கு சுவாமிகள் 'அவனவன் பெரும் கர்மாக்களைச் செய்து விட்டு திண்ணையிலிருக்கும் பரதேசியிடம் வந்தால் பரதேசி என்ன செய்வது?' என்று கூறிவிட்டார். வந்த தம்பதிகள் வேண்டி வணங்கி நின்றனர். 'பிறக்கும், போய் வாங்க' என்று கூறித் தன் கையால் விபூதியை வழங்கினர்.

தம்பதிகளும் சுவாமியின் அருளால் ஆண் குழந்தை பிறந்தால், பிறந்து ஆறு மாதம் கடந்து சுவாமியின் பாதத்தில் போட்டுப் பெயர் வைப்பதுஎன்று மனதாரப் வேண்டுதல் செய்துகொண்டு போய்விட்டனர்.

தம்பதிகளுக்கும் ஆண் குழந்தை பிறந்தது. அழகில் சுந்தரனாக வளர்ந்து வந்தது. தம்பதிகள் தாங்கள் மனதார சுவாமியிடம் வேண்டுதல் செய்தபடி குழந்தையைக் கொண்டு வரவில்லை, மறந்து விட்டார்கள். வருடம் ஆறு ஆகியது குழந்தை அதுவரை அம்மா, அப்பா என்று அழைக்கக்கூடப் பேச்சு வரவில்லை. ஊமையாக இருந்தது. தம்பதிகளும் பல கோயில், குளங்களுக்கு குழந்தையை எடுத்துச்சென்று காணிக்கைகளைச் செலுத்தியும், பேச்சு வரவில்லை.

தம்பதிகள் பூண்டி மகானிடமாவது சென்று பார்ப்போம் என்று பூண்டி வந்தனர். ஆனால் தாங்கள் மகானிடம் மனதால் வேண்டுதல் செய்ததை மறந்து விட்டனர். ஆறு ஆண்டு கடந்து பூண்டி வந்து பூண்டி மகான் எதிரில் நின்றனர். சுவாமிகள் அத்தம்பதிகளைப் பார்த்து கீழ்க்கண்டவாறு கூறினார்.

'மண்டை குளத்தூர் மண்ணு மாடுபிடிக்கப் பணம் வாங்கிச் சென்றான். ஆறு மாதத்தில் வருவதாகச் சொல்லிப்போய் ஆறு வருடமா ஊமையாய் பேசாமல் இருக்கிறான்'

'நெல்லி மேட்டு மாணிக்கம் நெல்லு வித்து 6 மாதத்தில் பணம் தருவதாக கூறிச்சென்று ஆறு வருடமா ஊமையா இருக்கிறான். ஊமையா இருந்தால் விட்டு விடுவேனா?' என்று கூறினார்கள்.

சுவாமிகள் கொஞ்சம் நேரம் மௌனமாக இருந்து விட்டார். சற்று நேரம் கடந்து திருக்கோயிலூரிலிருந்து வந்த தம்பதிகளைப் பார்த்து 'அந்த ஊமைக்குழந்தையை ஆறு மாதத்தில் கொண்டு வருகிறேன்னு வேண்டுதலை செய்துவிட்டு ஆறு வருடமாச்சப்பா!' என்று கூறினார்கள்.

வந்த தம்பதிகளுக்கு அப்போதுதான் நாம் குழந்தை பிறந்தால் ஆறு மாதத்தில் குழந்தையைச் சுவாமியிடம் கொண்டு வருவதாக மனதுள் வேண்டிக் கொண்டது ஞாபகம் வந்தது. தம்பதிகள் சுவாமியின் பாதத்தில் வீழ்ந்து வணங்கி சுவாமி இப்போதுகூட அந்த குழந்தையைக் கொண்டு வரவில்லை என்று கூறி மன்னிக்குமாறு வேண்டினர். அதற்கு சுவாமிகள் 'பூண்டியில் குழந்தையுடன் கொஞ்ச நாள் இருங்க, எல்லாம் நல்ல விதமாக முடியும்' என்று கூறிவிட்டார்.

சுவாமிகள் பரிபாசையில் கூறிய நெல்லிமேடு மாணிக்கம் என்பது தங்கள் ஊமைக் குழந்தைக்கு மாணிக்கம் என்று பெயர் வைத்துள்ளதை மறைமுககமாகக் கூறினார். மேலும் மண்டை குளத்தூர் மண்ணு என்று குறிப்பிட்டது, வந்த தம்பதிகளில் மனைவியின் பெயர் மண்ணம்மாள் என்பதாகும்.

ஒரு மெய்ஞானி தன் ஞான திருட்டியில் இவ்வளவு துல்லியமாக பரிபாசையில் கூறுகிறார் என்றால் அவர் பெருமையை எப்படி அறிவது!

பூண்டி மகானின் ஞானப் பெருமையைக் கூற ஆயிரம் நாக்குப் படைத்த ஆதிசேடனாலும் முடியாது என்றால் நாம் எத்தனை சென்மம் எடுத்தாலும் அவர் பெருமையைக் கூற முடியாது.

"துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்து
இறந்தாரை எண்ணிக் கொண்டற்று"

பற்றற்ற ஞானிகளின் பெருமையை அளந்துகூற முடியாது. அப்படி அவர்களின் பெருமையை அளந்து கூற எண்ணினால், இதுவரையில் உலகத்தில் பிறந்து இறந்தவர்கள் எத்தனை பேர் என்பதை கணக்கிடுவதுபோல் ஆகும் என்கிறார் தெய்வப்புலவர் திருவள்ளுவர்.

பூண்டி மகானிடம் அத்தம்பதிகள் ஒரு வாரம் அந்த ஊமைக் குழந்தையுடன் தங்கினார்கள். பிறகு குழந்தை மழலையை உதிர்க்க ஆரம்பித்தது.

பிறகு அந்த தம்பதிகள் பூண்டிக்கு அடிக்கடி வந்து போக ஆரம்பித்தனர். அவர்களின் ஒரே செல்வ குமாரன் இன்று கல்வியில் சிறந்து விளங்கி சென்னையில் உயர்ந்த பதவியிலிருந்து கொண்டு, பூண்டி மகான்தான் என் இன்றைய வாழ்க்கைக்கு வழிகாட்டிய, காட்டும் தெய்வம் என்று கூறுகிறார். என் வாழ்விற்கு பிச்சையிட்ட தெய்வம் பூண்டி மகான் என்று கூறி அவர் நினைவுடன் வாழ்ந்து வருகிறார்.

★ ★ ★

மதுரையிலிருந்து மூன்று அன்பர்கள். சுவாமியின் மகிமையைக் கேள்விப்பட்டு அவரைத் தரிசனம் செய்ய வந்தனர். வரும் வழியில் திருவண்ணாமலையில் இறங்கி அண்ணாமலையாரையும் உண்ணாமுலைத் தாயையும் தரிசனம் செய்து கொண்டு பெரிய பூமாலை வாங்க பூக்கடைக்குச் சென்று பெரிய மாலையாகக் கட்டிக்கொண்டு பூண்டி சாமியைப் பார்க்க பூண்டி புறப்பட்டனர்.

வந்த மூன்று நபர்களில் இரண்டு நபர்கள் அந்த பெரிய பூமாலையைப் பார்த்து 'ஆகா! இந்த பூமாலை என்ன அழகு! இதை நடராசருக்குப் போட்டால் எவ்வளவு அழகாக இருக்கும்' என்று கூறினார்கள். மூன்றாம் நபர், 'வேண்டாம், பூண்டி மகானுக்கு வாங்கினது. அவருக்கே போட்டு விடுவோம்' என்று கூறினார்.

மூவரும் பூண்டி வந்து பூண்டி மகான் எதிரில் நின்றனர். மாலை போட ஒருவர் மாலையுடன் சுவாமியை நெருங்கினார். அப்போது பூண்டி சுவாமிகள் தன் கையால் தடுத்துவிட்டு "நில்லுங்க!" என்றார்.

"ஆகா! இந்த பூமாலை என்ன அழகு! இதை நடராசருக்குப் போட்டால் எவ்வளவு அழகாக இருக்கும்' என்று கூறிவிட்டு 'அது நடராசருக்கு உரிய மாலையப்பா' என்று கூறினார். வந்த மூன்று மதுரை அன்பர்களுக்கும் நடுக்கம் வந்து சுவாமியின் கால்களில் வீழ்ந்து வணங்கினர். மன்னிக்குமாறு வேண்டினர். சுவாமிகள் அதற்கு

"அங்குள்ள பொருள் இங்குள்ளது
இங்குள்ள பொருள் அங்குள்ளது
அங்கும், இங்கும் ஒன்றேஎன நினை"

என்று கூறிவிட்டார்.

திண்ணை

சுவாமிகளின் பூர்வாசிரமம் தெரிந்து கொள்ள எவ்வளவோ பேர்கள் முயற்சி செய்து பார்த்து விட்டனர். சுவாமிகள் பரிபாசையில்தான் கூறினார்கள். நேர் முகமாக அவர் எப்போதும் யாரிடமும் கூறவில்லை. எவராலும் அறிய முடியவில்லை என்பது தான் உண்மை.

சுவாமிகள் ஒரு தரம் கொல்லிமலையில் 40 ஆண்டு இருந்தேன். திருப்போரூரில் 30 ஆண்டு இருந்தேன் என்றார்.

'திருப்போரூர் மடத்தில் மாடுமேய்த்துக் கொண்டிருந்தேம்பா! மடத்தை சுத்தமாகத் தினம் கூட்டிப்பெருக்கி சுத்தம் செய்ய வேண்டும்பா! எத்தனை நாளைக்கு இப்படி என்று ஒருநாள் இரண்டாம் எண் அறையில் பதினொரு சாவிகளை மடத்தில் வைத்துவிட்டு சொல்லாமல் கொள்ளாமல் வந்து விட்டேம்பா!' என்று பரிபாசையில் கூறினார்.

ஒரு நாள் இரவு பல வெளியூர் அன்பர்கள் சுவாமிக்கு இரவு பூஜை முடிந்தவுடன் சுவாமி ஏதாவது கூறுவாரா என்று ஆவலுடன் நின்று கொண்டிருந்தனர். சுவாமிகள் சம்மந்தா சம்மந்தமில்லாமல் எதை எதையோ பேசிக் கொண்டேபோய் திடீரென்று 'குற்றாலத்தில் ஐந்தருவியில் இன்ப எழிலோடு பன்னிரெண்டு வருஷமிருந்தேம்பா! அப்போது மா! பலா! கதலி சாப்பிட்டு வந்தேம்பா! புலி, சிங்கம் வரும்பா! கர்ச்சனை செய்து விட்டுப் போய் விடும்பா! நான் மௌனமாக ஆனந்தமாக அமர்ந்திருந்தேம்பா! என்றார்.

ஆனால் வரும் அன்பர்களின் விருப்பம் சுவாமி யார்? எந்த ஊர்? அவர் வயது என்ன? அவர் பெயர் என்ன? அவர் தாய், தந்தை யார்? என்று ஆவலுடன் சுவாமியிடம் கேட்கும்போது சுவாமிகள் பரிபாசையில் பேசி மடக்கி விடுவார்.

ஒரு நாள் திடீரென்று சுவாமிகள் 'திருவண்ணாமலை மதிற்சுவர் கட்டும்போது கல் எடுத்துக் கொடுத்தேம்பா! தம்பிடி சம்பளம் தருவார்கள் நாங்கள் நிறைய பொருள். தின்பண்டம் வாங்கி சாப்பிடுவோம்பா! என்று கூறினார். சுவாமியை எந்தவிதத்திலும்மடக்கி அவர் பூர்வீகம் காண முடியவில்லை. சித்தம்கா புருசனுக்கு பூர்வீகம் ஏது? இதை நாம் உணர வேண்டும்.

பூண்டி சுவாமிக்கு தினம் இரவு 9 மணிக்கு இரவு பூசை முடிந்தவுடன் வெளியூர் அன்பர்கள் அன்று இரவு பூண்டியில் தங்குவார்கள். படுக்கப் போகுமுன் சுவாமிகள் ஏதாவது கூறுவார்களா என்று எண்ணி வணங்கி கை கட்டி பயபக்தியுடன் நிற்பார்கள். அப்படியிருக்கும்போது ஒரு நாள் சுவாமிகள் திடீரென்று திண்ணையில் இருந்தபடி,

'அட என்ன? இந்தக் கொடுமை! ஏம்பா! உனக்கு இதெல்லாம்? மானிடப் பிறவி கிடைத்தற்கரியதப்பா! வீட்டிற்கு போ! துன்பம் நீங்கி விடும்' என்றார்.

சுவாமி அமர்ந்திருந்த திண்ணைக்கு எதிரில் நின்று கொண்டிருந்த அன்பர்களுக்கு ஒன்றுமே புரியவில்லை. சுவாமி யாரை இப்படிக் கூறுகிறார் என்று ஒருவருக்கும் விளங்கவில்லை. மேற்கொண்டு சுவாமிகள் ஏதும் பேசாமல் நிட்டையில் அமர்ந்து விட்டார். சுவாமியிடம் நின்றிருந்த அன்பர்களும் அன்று இரவு பூண்டியில் தங்கப் போய்விட்டனர்.

மறுநாள் காலை 11 மணி அளவில் அரக்கோணத்தில் இருந்து ஒரு Ex-Service மேன் சுவாமியிம் வந்து சுவாமியைப் பார்த்து தேம்பி தேம்பி அழுது கொண்டு, "சுவாமி, நான் பிள்ளை குட்டிக் காரன், தெரியாமல் தற்கொலை செய்து கொள்ளப்போனேன். என் தெய்வமே இங்கிருந்து எப்படி என்னைக் காப்பாற்றினாய்" என்று கூறி அழுதார். சுவாமி மௌனமாக இருந்தார்.

சுவாமியிடம் சுற்றியிருந்த அன்பர்கள் அந்த அரக்கோணம் பக்தரை தனியே அழைத்துச் சென்று என்ன செய்தி என்று கேட்டனர். அதற்கு அவர்,

நேற்றிரவு 9 மணி அளவில் என் குடும்ப வறுமை தாளாமல் பம்பாய் துரித ரயிலில் தலை கொடுக்க அரக்கோணம் தாண்டி உள்ள ரயில் ரோட்டிற்குப் போனேன். ரயில் வருமுன் தலையை தண்டவாளத்தில் வைத்து விட்டேன். இதோ திண்ணையில் அமர்ந்திருக்கும் தெய்வம் என்னை அப்படியே அலக்காக தூக்கி அருகில் உள்ள பள்ளத்தில் மெதுவாக வைத்து விட்டு 'ஏம்பா, உனக்கு இது எல்லாம், மானிடப் பிறவி கிடைக்கக் கூடியதா? வீட்டிற்குப் போ! துன்பம் நீங்கும்' என்று கூறி என்னைப் போக வைத்தார். வீட்டிற்குப் போனால் அங்கே எனக்கு முன்பே அறிமுகமான ஆங்கிலோ இந்தியன் எனக்கு மாதம் 750 சம்பள வேலை கொடுத்துள்ளதாக சென்னையிலிருந்து ஒரு ஆள் வந்து வீட்டில் உட்கார்ந்துள்ளார். நான் நாளை மறுநாள் வருவதாக கூறிவிட்டு தூங்கி எழுந்ததும் நேராக பூண்டி வந்து என்னையும் என் குடும்பத்தையும் காப்பாற்றிய கலியுக கண்கண்ட தெய்வத்தைப் பார்க்க ஓடி வந்துவிட்டேன் என்று கூறினார்.

சுவாமிகள் நேற்றிரவு திண்ணையில் 9 மணி அளவில் என்ன கூறினாரோ அதையே அரக்கோணம் அன்பரும் கூறினார் என்றால் சுவாமிகள் நேற்றிரவு 9 மணி அளவில் அரக்கோணத்தில் நடந்த சம்பவத்தைத்தான் இப்படி கூறினார்கள் என்று அன்பர்கள் உணர்ந்தனர்.

அட்டமா சித்திகளைப் பெற்ற சித்தமகா புருடர்கள், ஒரே நேரத்தில் பல இடங்களில் சூசுமமாக தோன்றி பல பேர்களுக்கு நன்மைகள் புரியும் சக்தியுடையவர்கள். மேலும் சுவாமிகள் முக்கியமானவர்களின் நலன் பொருட்டு வெளியே செல்லும் சமயம் தன் உடலில் வேறு ஒருவரை இருக்கச் செய்துவிட்டுப் போய் வருவது உண்டு.

அப்படி வேறு ஒருவரை தன் உடலில் இருக்கச் செய்துவிட்டு போகும்போது சுவாமியின் உடலில் உள்ள வேறு சாமியார், வரும்

அன்பர்களிடம் எரிந்து விழுவார். விபூதியைக் கொடுக்க மாட்டார். கண்டபடி பேசுவார். திரும்ப சுவாமிகள் தன் தேகத்தில் வரும் வரை சுவாமிக்கு பணிவிடை செய்யும் சாமியார்கள்பாடு பெரிய திண்டாட்டமாக இருக்கும். சுவாமிகள் யாரையும் வா! போ! என்று ஒருமையில் பேசுவது கிடையாது. போய் வாங்கோ! நல்லதுங்கோ! சரிங்கோ! என்றுதான் பேசுவார்கள்.

சுவாமி இவ்வளவு துல்லியமாக முக்காலத்தையும் கூறி வருகிறாரே இவர் யார்? எங்கிருந்து வந்தார்? என்று அறிய அன்பர்கள் அனைவரும் விரும்பினார்கள். ஆனல் ஒருவராலும் அவரின் இரகசியம் அறிய முடியவில்லை.

ஒருமுறை கடலாடியைச் சேர்ந்த சிவானந்த முதலியாரும் சின்ன காஞ்சி நாராயணசாமி முதலியாரும் பூண்டி சாமியாரிடம் வந்து வணங்கி "சுவாமி தாங்கள் ஊர், பெயர் அறிய அன்பர்கள் ஆவலாக உள்ளனர்" என்று கூறினார்கள். சிவானந்த முதலியாரும் சின்னகாஞ்சி நாராயணசாமி முதலியாரும் சுவாமிகள் முட்டையுடன் நடமாடியபோதே நெருக்கமாக இருந்து வந்தவர்கள். சுவாமி எங்கு இருக்கிறார் என்று தேடிச் சென்று உணவை ஊட்டி வந்த புண்ணிய ஆத்மாக்கள். சிவானந்த முதலியாரும் சின்னகாஞ்சி நாராயணசாமி முதலியாரும் சுவாமியிடம் நெருங்கி சில ஆன்மீக சந்தேகங்களை கேட்கும் அளவிற்கு நெருக்கமாக இருந்தனர். அதனால் சுவாமியின் பெயரையும் ஊர், தாய், தகப்பனாரைப்பற்றியும் கூற வேண்டினார்கள், அதற்கு சுவாமிகள் கூறினார்.

"எங்க தாத்தா இரண்டு தம்பிடிக்கு பென்சிலும் புத்தகமும் வாங்கிக் கொடுத்து சாக்கிரதையாக ரயில்ரோடு வழியாகப் போய், வா! என்று கூறுவார்" என்றார். "நான் கவனமாக ரயில் ரோடு ஓரமாகப் பள்ளிக்குச் சென்று வருவேன் தெரியுமா?" என்று கூறினார். அதற்கு சிவானந்த முதலியார் "ஏன் சாமி ரயில்வே கேட் இருந்ததா?" என்று கேட்டார். "ரயில்வே ஸ்டேசன் கூட இருந்தது" என்று சுவாமி கூறினார்.

சிவானந்த முதலியார் மீண்டும் "ஆமாம் சுவாமி, சின்ன ரயில் பாதைதானே அது" என்றார். அதற்குச் சுவாமிகள் "சின்ன ரயில் பெரிய ரயில் ரெண்டு பாதையும் இருந்ததுப்பா!" என்று கூறிவிட்டார். உடன் வந்த சின்னகாஞ்சி நாராயணசாமி முதலியார் "ஏன் சுவாமி, அங்கே மாதா கோயில் இருக்கிறதா!" என்றார். அதற்கு சுவாமிகள் "மாதா கோயிலும் இருந்தது, சுவாமியை எப்படி மடக்கிக் கேள்வி கேட்டாலும் அவர் அதற்கு தகுந்த பதில் கூறி விடுவார்.

நாயுடுமங்கலத்திலிருந்தும், கலசப்பாக்கத்திலிருந்தும் இரு நண்பர்கள் சுவாமியிடம் அடிக்கடி வந்து சுவாமியை வணங்கி விட்டுப் போவது வழக்கம். ஒரு நாள் இருவரும் சுவாமியிடம் வந்து "சுவாமி, எங்களை நீங்கள் ஏமாற்றக்கூடாது. உங்கள் ஊர், பெயரைக் கூறவும்" என்று வேண்டி நின்றனர். அதற்கு சுவாமிகள்.

"கார்த்திகேயன் சர்வீஸில் $2^1/_2$ அணா பலகை புஸ்தகத்துடன் போனேம்பா! கூத்தம்பாடி களம்பூர் பள்ளத்தில் இறக்கி விட்டு

விட்டானுங்கப்பா! அங்கிருந்து நடந்து போளூர் மாம்பட்டு மலை அடிவாரம் வந்தேம்பா!'

''வரும்போது அங்கு திருச்சூர் ரத்தினவேலு சீட்டாடிக் கொண்டிருந்தான். சௌக்கியமான்னு கேட்டான். சௌக்கியம் தான்னு சொன்னேம்பா! திருச்சூர் கழனிக்காட்டிலே வரப்பு மேலே சேறு போட்டிருந்தானுங்க. பக்குவமா நடந்து வந்தேம்பா!'' என்று கூறினார். பிறகு அந்த அன்பர்களுக்கு பதில் கூறவில்லை. சுவாமியிடம் எத்தனையோ பேர் எத்தனையோ தடவைகள் கேட்டும் இரகசியத்தை வாங்க முடியவில்லை என்பது தான் உண்மை.

ஒரு சமயம் ஒரு சாது சாமியிடம் வந்து ''ஏன் சாமி, 50 வருடங்களுக்கு முன் விருதாசலம் மணிமுத்தா நதிக்கரையில் பிள்ளையார் கோயில் பக்கம் மௌனமாக உட்கார்ந்து இருந்தீர்கள். நான் உங்களுக்குப் பால் வாங்கி கொடுத்தேன். நீங்களும் சாப்பிட்டீங்களே, அவர்தானே நீங்கள்'' என்றார். ''இருக்கும்! இருக்கும்!'' என்று சுவாமிகள் கூறிவிட்டாரே தவிர 'ஆமாம்' என்று கூறவில்லை.

சுவாமிகள் சமாதியைவிட்டு வந்த பரபிர்மம். அதனிடம் போய் உன் பெயர் என்ன? தாய் தந்தை யார்? என்று கேட்பது நம் அறியாமையின் சின்னமே ஆகும். அவர் மடாதிபதியுமல்ல. பரம்பரை ஆண்டியுமல்ல. பஞ்சத்தால் ஆன ஆண்டியுமல்ல. வாழ்க்கை என்னும் சூழலில் சமாளிக்க முடியாது ஓடிவந்த சாமியாரும் அல்ல. அது தானே தோன்றி வந்த பிர்மமாகும்.

மடாதிபதிகளுக்குத்தான் பூர்ண ஆசிரமம் என்று இருக்கும். அதில் தாய், தந்தையர் இன்ன கோத்திரம் என்றும், பல மனைவிகளும் இருக்கும், பிள்ளைகளும் பல இருக்கும். மாமன், மைத்துனர்களும் இருப்பார்கள். இன்னும் பல இல்லற விஷயங்கள் அனைத்தும் இருக்கும். ஆனால் நம் பூண்டி மகான் - ஞானப்பழம் அவர். சமாதியை விட்டுவந்த சங்கரன் அவர். அண்ணாமலையிலிருந்த வந்த ஆதிமூலம் அவர். அண்ணாமலையாருக்கு யார் தாய், தந்தை என்று நாம் உணர முடியாதோ, அதுபோல் நம் பூண்டி மகானுக்கு தாம், தந்தை யார் என்று உணரமுடியாது. உணரவும் கூடாது. அவரே தாய், அவரே தந்தை, அவரே குரு, அவரே தெய்வம், அவரே நண்பன் என்று வணங்கி வந்துவிடவேண்டும்.

மடாதிபதி என்பவர் தான் சார்ந்த மடத்தின் மூல தெய்வத்தை விக்ரகவடிவில் ஆசார அனுட்டானங்களுடன் தினம் அபிடேக ஆராதனை செய்து வருவார்கள். மேலும் அந்த மடத்திற்குரிய கோயில்களையும், சொத்துக்களையும் நல்லவிதமாக நிர்வாகம் செய்து தனக்கு பின்னால் அந்த மடத்தையும் அதைச் சார்ந்த கோயில்களையும், சொத்துக்களையும் தக்க சீடரிடம் ஒப்படைப்பார்கள். ஆனால் மெய்ஞானி தன்னுள் உள்ள மூலவரை அகத் தவத்தால் அபிடேகம் செய்து அந்த மூலவர் என்னும் பிர்மமாகி ஞான சொத்தை தக்க சீடனைக் கண்டு அவர்களுக்கு உபதேசம் செய்துவிட்டு சமாதி கூடிவிடுவர் என்று நாம் உணர வேண்டும். அவர்களுக்கு ஏது குலமும், கோத்திரமும் என்று அறிய வேண்டும்.

நாட்டில் உள்ள எல்லா சாமி படங்களையும், சுவற்றில் மாட்டிவிட்டு, அதற்கு வண்ண, வண்ண விளக்குகளை பொருத்தி பூமாலைகள் சூட்டி, சாம்பிராணி புகையைப் போட்டுவிட்டு வரும் பக்தர்கள் என்ற அப்பாவி மக்களிடம், தட்டில் விபூதியை வைத்துக்கொண்டு, வேப்பிலையை விபூதியில் அடித்து, விபூதியை வரும் பக்தர் முகத்தில் அடித்து, வாயால் முண முணத்துவிட்டு, உனக்கு இன்ன தோசம் உள்ளது, அதனால் பெரிய பூசை போடவேண்டும். அடுத்த வாரம் இன்ன கிழமை, இன்ன இன்ன பொருளைக் கொண்டுவா என்று கூறும் சாமியாருமல்ல.

"எழும்பானை எண்பான் பார்க்க
நான்பான் நடுவில் நிற்க
ஐம்பான் ஆதரிக்க மறுக்க
பன்னிருபான் பரதவிக்க
எண்பான் என்ன செய்வான்?"

என்று சொல்லி ஆறாயிரம் வருடத்திற்குமுன் உள்ள ஓலைச்சுவடி என்று அடுக்குமொழியில் கூறி காசு பறிக்கும் சாமியாருமல்ல.

சித்தர்கள் எழுதி வைத்த பாடல்களில் குண்டலினி யோகத்தை எப்படி அனுசரிக்க வேண்டும் என்றும் அந்த குண்டலி சக்தியை ஒவ்வொரு ஆதாரங்களிலும் ஒரு பெயர் இட்டு சித்த மகா புருசர்கள் மகிழ்கின்றனர். அப்படி இடும் பெயரில் "வாலை" என்றும், அதற்கு பூசை போடு என்று பரிபாசையிலும் எழுதி வைத்துள்ளனர்.

இதை அரைகுறையாகப் படித்துவிட்டு வாலை என்றால் பருவப்பெண் என்றும், அதற்கு பூசைபோடு என்று எழுதியதை அந்த பெண்ணுக்குப் பூசை போடுவது என்று எண்ணி வயது வந்த பெண்ணை பூசை போடப் போவதாக அழைத்துக் கொண்டு போகும் தாடி வைத்த சாமியாருமல்ல என்று உணரவேண்டும். அவர் ஒரு பரபிர்ம ஞானி. மூன்று காலங்களையும் உணர்ந்த முனி புங்கர். நவகிரகங்களையும் தன்வசப்படுத்தும் மெய்ஞானி அவர். அவரை அறிய இன்னும் பல பிறவிகளை எடுக்க வேண்டும்.

மகான்கள், சித்த மகா புருஷர்கள் நமக்கு எவ்விதமான அறிவுரைகளைப் பாடிச்சென்றுள்ளனர். ஆனால் அதன் உள் ரகசிய பரிபாசை நமக்குப் புரியாது. அதைத் தக்க குருவின் மூலம் படிக்கக் கேட்க வேண்டும்.

ஞானிகள் மறைமுகமாக ஞானம்பெற வழிமுறைகளையும், மருத்துவத்திலும் அவர்கள் பலவித பரிபாசையில் எழுதி வைத்து விட்டுப் போய் உள்ளனர். ஆனால் கால ஓட்டத்தில் அர்த்தங்கள் மாறியிருக்கலாம். இதையெல்லாம் மனதில் வைத்து தக்க குரு மூலம் தெரிந்து தெளிய வேண்டும்.

ஒரு நாள் ஒரு சாது சாமியிடம் வந்து தனக்கு ஞானவழிக்கு ஆசீர்வாதம் செய்யச் சொல்லி வேண்டி நின்று கொண்டிருந்தார். அப்போது அந்த சாதுவைப் பார்த்து சுவாமிகள்:

"பரதேசி யானால் பரிபாசை புரியவேணும்பா!
அது கரடு முரடான பாதையாச்சே!

என்று கூறிவிட்டு,

"தாரம் இரண்டிற்கு தாலி
இரண்டை விடாமல் கட்டி
பாதம் ஒன்றைப் பதமாகப் பிடித்து
மணிமண்டபத்தில் மாம்புழம் பறித்துக்கொண்டு
பள்ளியறையில் போ என்றார்."

வந்த சாதுவுக்கு ஒன்றும் விளங்கவில்லை. நாம் ஏற்கனவே இரண்டு மனைவிகள் கட்டியதால்தானே சாமியார் ஆனோம். இவர் வேறு திரும்ப இரண்டு தாரத்திற்கு தாலி கட்டச் சொல்லுகிறார் என்று ஒண்ணும் புரியாமல் வந்துவிட்டார். அங்கிருந்த அன்பர்கள் வந்த சாதுவின் மனவாட்டத்தை அறிந்து அதற்கு விளக்கம் கூறினார்கள்.

தாரம் இரண்டு	-	சூரியக்கலை, சந்திரக்கலை
பாதம் ஒன்று	-	சுழிமுனை
மணி மண்டபம்	-	புருவநடு
மாம்பழம்	-	ஞானம்
பள்ளியறை	-	நாதமும், விந்தும் கூடும் இடம் சகசுராரம்.

நம் உடலில் உள்ள இடது மூக்குத் துவாரத்தில் நடைபெறும் காற்றுக்கு இடக்கலை (அ) சந்திரகலை, வலது துவாரத்தில் நடைபெறுவதற்கு பிங்கலை (அ) சூரியக்கலை என்று பெயர். யோகம் பயிலும் யோகிகள் வாசியோகப் பயிற்சியைக் கையாண்டு சூரிய, சந்திரனில் நடக்கும் வாயுவை சுழிமுனை என்னும் முதுகு தண்டின் அடியில் உள்ள குண்டலினி சக்தியை சுழிமுனையில் கும்பித்த வாயுவினால் எழுப்பி முதுகு தண்டின் மூலம் மேலேற்றி இரு கண் புருவ நடுவில் கொண்டு வந்து நிறுத்தியவர் பிறகு தன் ஞானயோகப் பயிற்சி மூலம் கபால உச்சியில் கொண்டு சேர்த்து ஞானநிலையில் உச்சநிலை என்பது ஞானிகளின் நிலை. அதைத்தான் சுவாமிகள் பரிபாசையில் கூறினார் என்று அங்கிருந்த அன்பர்கள் வந்த சாதுவுக்கு விளக்கினர்.

சாது மறுபடியும் சுவாமி இருந்த திண்ணைப் பக்கம் போனார். சாதுவைக் கண்டு சுவாமிகள்:

"தவளை கூட மனிதனின் பரிபாசையைப் புரிந்து கொள்கிறது. சூ! என்று சூள் கொட்டினால் ஒதுங்கிப் போய் விடுகிறது" என்று கூறிவிட்டு போய்யா! வீட்டிற்கு! ஞானம் வேணும்பா! மளிகைக் கடையில் நாலணாவுக்கு ஒரு வீசை பூண்டு. அதை வீட்டிற்கு வாங்கிப்போ!" என்று கூறிவிட்டார்.

இப்படி எத்தனையோ சாதுக்கள் வந்து ஞானம் பெற வழி கேட்டபோது அதற்குச் சுவாமிகள் மௌனமாக இருந்து விடுவார்கள். வேறு ஏதாவது கூறி அனுப்பிவிடுவார்.

சுவாமிகள் கடும் நிட்டை கூடினார், அவர்கள் என்ன என்ன செய்வார்களோ, அதை அப்படியே செய்து அவர்கள் பட்ட துன்பத்தை தக் காண்போம்.

கீழ்ப்புறம் திண்ணை

சுவாமிகள் யோக நிட்டையில் சமாதியில் இருக்கும்போது கை ஆட்ட ஆரம்பித்தால் நாட்கணக்காக அந்த கை ஆடிக் கொண்டே இருக்கும். பார்க்க பயங்கரமாக இருக்கும். அந்த சமயம் யாரும் கிட்ட நெருங்க முடியாது. சிம்மம் கர்சிப்பது போல் கர்சிப்பார்.

ஞானி ஒருவர் புற உலகில் இருந்து அக உலகிற்கு யோக சமாதியில் புகுமுன் புறஉடல் அவயவங்கள் என்ன செயல் பாட்டில் உள்ளதோ அதையே செய்து கொண்டிருக்கும். ஞானி திரும்ப சமாதி நிலையை விட்டு புற உலகிற்கு வரும் வரை அந்த ஞானியின் உடல் உறுப்புகள் தொடர்ந்து (யோக நிட்டைக்கு போகு முன் எப்படி உடல் உறுப்புகள் செயல் பட்டதோ அதே மாதிரி செயல்படும்) புற உலக சிந்தனை வந்த பிறகு தான் அந்த உடல் உறுப்புகள் தன் செய்கையிலிருந்து மாறுபடும். இத்தன்மை ஆன்மா வேறுபட்டு தன் உடலின் தன்மையைக் காணும் தன்மை. இது மெய்ஞானிகள் நிலை. தன் உடலை மறந்த நிலையாகும்.

சுவாமியிடம் வந்த சில அன்பர்கள் கை ஆட்டுவது, தலை யாட்டுவதுதான் யோக நிலை என்று தவறாக புரிந்து கொண்டு, கையையும், தலையையும் நாட்கணக்காக சுவாமியின் முன் உள்ள இடத்தில் அமர்ந்து சுவாமி பார்க்க ஆட்டிக் கொண்டிருந்தனர். பிறகு கை, தலை காணாமல் அவர்களும் காணாமல் போய் விட்டார்கள்.

ஆட்டம் போடும் மனதையும், கர்மேந்திரங்களையும், ஞானேந்திரங் களையும் ஒருநிலைப்படுத்தி சமாதி நிலையில் இருந்தார்கள் நம் சுவாமிகள், அதனால் உடல் போடும் ஆட்டத்தையும், அது என்ன செயல்பாட்டில் உள்ளது என்று அறிந்து கொள்ளவும், அதைப்பற்றிக் கவலைப்படவும் இல்லை. ஆனால் சுவாமியைப் பார்க்க வந்த தாடி வைத்த யோகிகள் தன்னுள் ஆட்டம் போடும், மனம், பூதம் ஐந்தையும், பொறி ஐந்தையும் அகங்காரத்தையும் அடக்க தெரியாமல், கையையும், தலையையும் ஆட்டி விட்டு வீக்கம் கண்டு காணாமல் போனார்கள். இது புலியைப் பார்த்து பூனை சூடு போட்ட கதை போல் முடிந்து விட்டது. இதையெல்லாம் தக்க குருவின் மூலம் கற்க வேண்டும்.

திருக்கோயிலூர் (தென்னார்க்காடு மாவட்டம்) தபோவன சுவாமி தவத்திரு ஞானானந்தகிரி சுவாமிகள் தன்னிடம் ஆசி வாங்க வரும் அன்பர்களிடம் "பூண்டியில் ஒரு ஞானப் பழம் ஒரு ஓட்டு வீட்டுத் திண்ணையில் அமர்ந்துள்ளது. அது பெரிய பொருள். அதைக் காண

கொடுத்து வைத்திருக்க வேண்டும். நீங்களும் அந்த ஞானப் பழத்தைக் கண்டு வணங்கி செல்லுங்கள்'' என்று கூறுவார்.

தவசி, ஞானானந்த சுவாமிகளையே பெரிய ஞானியாக நாங்களும் ஏராளமான பக்தர்களும் உணர்ந்து வணங்கி வருகிறோம். அவரே பூண்டி மகானை ''ஞானப் பழம்'' என்றால் பூண்டி மெய் ஞானியின் நிலைதான் என்ன என்று நம்மால் கூற முடியுமா?

மேலும் ஞானானந்தகிரி சுவாமிகள் தன்னிடம் வரும் பக்தர்களிடம் ''பூண்டி மகானிடம் போகும் அன்பர்கள் பீடி, சிகரெட், தேநீர் போன்ற வற்றைக் உடலை கொடுக்காதீர். அவர் தன் திரேகத்தை மறந்த நிலையில் உள்ளார். தன் உடல் என்ன செய்கிறது என்று அறியும் நிலைக்கு அப்பால் உள்ளது. அதனால் அது யார் எதைக் கொடுத்தாலும் வாங்கிக் கொள்கிறது. வேண்டும் தன்மை, வேண்டாம் தன்மையற்று வெகுதூரம் அது உள்ளது. இதை அறியாத சுவாமியிடம் போகும் அன்பர்கள் சாமி பீடி, தேநீர் குடிக்கிறார் என்று எண்ணி தேநீரையும், பீடியையும் கொடுக்கிறார்கள். அது தவறு'' என்று கூறிஅனுப்புவார். மேலும் அவர் ''பிர்ம ஞானியின் தரிசனம் ஒன்றே ஆயிரம் கோடி யாகம் செய்த புண்ணியம் என்று உணரவேண்டும். உன்னுடைய பீடி, தேநீருக்காக அந்த பிர்மம் திண்ணையில் இருப்பதாக நினைத்து ஏமாந்து விடாதே'' என்று வரும் பக்தர்களுக்கு அறிவுரை கூறி அனுப்பி வைப்பார்.

ஞானிகள் எத்தனையோ பிறவிகளில் அட்டாங்க யோகங்களை தக்க குரு மூலம் பயின்று, அதைக் கடைப்பிடித்து பிறகு நம் உடலில் உள்ள ஆறு ஆதாரங்களைத் தன் ஞான வலிமையால் உணர்ந்து, அதில் மூலாதாரத்தில் உள்ள மர்ம குண்டலி சக்தியை, பல காலம் இடைவிடாமல் தக்க குரு மூலம், இடக்கலை, பிங்கலையில் செயல்பட்டு வரும் பிராண வாயுவை, சுழிமுனையில் பிராண வாயுவை கும்பகம் செய்து குண்டலினி சக்தியை எழுப்பி அதை ஒவ்வொரு ஆதாரமாக மிகவும் எச்சரிக்கையுடன் மேலேற்றி கபால உச்சியில் ஆயிரம் தாமரை இதழ் கொண்ட வெகு நுட்பமான சகசுராரத்தில் சக்தியை பரபிர்மத்துடன் சேர்த்து அதில் ஏற்படும் ஞான அமிர்தத்தை உண்டு பல காலம் சமாதி நிலை யெய்தி தன்னில் உறையும் பிர்மத்தை பரபிர்மத்துடன் சேர்த்து பரபிர்ம நிலை அடைவதுதான் மெய்ஞானியின் நிலை. ஆன்மா தன்னைத் தான் உணர எத்தனையோ பிறவிகள் எடுத்து வந்த மெய் ஞானி செய்கைக்கு காரணம் நமக்கு புரியாது. அது தேவ இரக்சியம்.

ஆனால் வாழ வகை தெரியாமல் குடும்பச் சூழ்நிலையினால் துறவியாகி தாடி வளர்த்துக் கொண்டு ஆறு ஆதாரங்கள் இன்ன தென்றும் அறியாமல் ஆறு மைல்களுக்கு அப்பால் பெண் கையால் இட்லி, தோசை தின்றுவிட்டு ஒரு பிர்மஞானியின் எதிரில் வந்து உட்கார்ந்து கையையும், தலையையும் ஆட்டினால் அவர்கள் ஞான நிலையை எந்தப் புத்தகத்தில் எழுதினால் தீரும். உலகையே இலஞ்சமாகக் கொடுத்தால் கூட நம்மால் ஞானம் பெற முடியாது. அந்த சென்மாந்திர வாசனை தொடர்ந்து வந்து குருவருள் இருந்தால் கிடைக்கும்.

இந்த ஞானம் பெற எத்தனையோ சக்ரவர்த்திகள் தன் நாட்டை தானமாகக் கொடுத்து ஞானம் பெற முடியவில்லை என்பதை நாம் உணர வேண்டும்.

"மனம் என்னும் மாடு அடங்கில் - தாண்டவக்கோனே
முக்தி வாய்த்தது என்று எண்ணுடா தாண்டவக்கோனே.

இடைக் காட்டு சித்தர் மனதை அடக்கினால், புற உலக ஆசா பாசங்கள் ஒழிந்தால் முக்தி தன்னால் கிட்டும்.

பூண்டி மகானிடம் சாம்பல் கலரில் ஒரே மாதிரியான பல பூனைகள் இருக்கும். அவைகள் சுவாமியின் மடிமீதும் தோள்மீதும் ஏறி விளையாடிக் கொண்டிருக்கும். சுவாமிகள் அந்த பூனைகளை மடிமீது வைத்துக் கொண்டு அன்புடன் தடவிக் கொடுத்துக் கொண்டிருப்பார்கள்.

பூனைகள் அங்கு சாதத்தைத் தின்னும்போது, மனிதன் கையால் சாப்பிடுவதுபோல் முன்காலில் எடுத்துச் சாப்பிடும். அதை பார்க்க அதிசயமாக இருக்கும். இன்றும் அந்தப் பூனைகள் சுவாமியின் சமாதி கோயிலைச் சுற்றிக் கொண்டிருக்கிறது. சுவாமியிடம் இருந்த பூனைகள் எந்த தேவ புருசர்களோ யார் அறிவார்.

தினம் சுவாமியிடம் வரும் அன்பர்கள் கொடுக்கும் பலநூறு தேநீர்களையும், பலநூறு குளிர்பானங்களையும் வாங்கி ஒரே மூச்சில் குடித்து விடுவார்கள். ஒருசில அன்பர்களிடம் வாங்க மாட்டார்கள். "அப்படிக் கீழே வையுங்கோ! என்று கூறிவிடுவார். அதைக் கடைசிவரை தொடமாட்டார். ஒருசில அன்பர்கள் கொடுப்பதை மிகவும் வேகமாகவும் அன்பாகவும் வாங்கிச் சாப்பிடுவார். தேநீர் எவ்வளவு சூடாக இருந்தாலும் ஒரே மூச்சில் குடித்து விடுவார்கள்.

அதே மாதிரி தினம் வரும் அன்பர்களின் வேண்டுகோளுக்குப் பதில் கூறுவார். சில அன்பர்களுக்குப் பதில் கூறாமல் மௌனமாக இருந்து விடுவார்கள். வரும் அன்பர்களுக்குத் தன் கையாலே விபூதியை கொடுப்பார். ஒரு சிலருக்கு நெற்றியில் இடுவார்கள். வந்த அன்பர்களின் வினை தீராது என்றிருந்தால் அவர்கள் எத்தனை குட்டிக்கரணம் போட்டாலும் விபூதி தரமாட்டார். "நீங்களே எடுத்துக் கொள்ளுங்க" என்று கூறிவிடுவார்கள். சுவாமிகள் தேவகரத்தால் விபூதியை ஒருவர் வாங்கினால் அந்த அன்பர் கோரிவந்த கோரிக்கை நிறைவேறும் என்று பொருள். சுவாமிகள் தன் கையால் விபூதியைக் கொடுக்க மறுத்துவி[illegible]ால் வந்த அன்பர்களின் கோரிக்கை நிறைவேறாது என்று பொருள். தினம் அன்பர்கள் கொடுக்கும் (சுவாமி வாயில் வைத்து பற்ற வைக்க வேண்டும்) சிகரெட்டுகளை ஒரே இழுப்பில் இழுத்து விடுவார். ஆனால் புகை கொஞ்சம்கூட வராது. புகையைப் பந்தனம் செய்து விடுவார்கள்.

இப்படி ஒரு நாளைக்கு சராசரி 500, 600 தேநீரையும், பீடிகளையும் குடித்து விடுவார். அவரிடம் எந்தவித மாறுதலும் தெரியாது.

ஒரு பால் வியாபாரி தினம் சுவாமி அமர்ந்துள்ள பூண்டியைத் தாண்டி கலசப்பாக்கம் போகும்போது சும்மா போகாமல் சுவாமியைப் பார்த்து

''என்ன சாமி, தேநீர் காபி, போதுமா? பால் ஏதாகிலும் தேவையா? என்று கூறிவிட்டுப் போய் விடுவார்.

இப்படியே பலமுறை பால்காரர் கேட்கும்போது சுவாமிகள் ''வேண்டாம்பா!'' என்று மட்டும் கூறிவிட்டு மௌனமாக இருந்து விடுவார்கள். ஒரு நாள் அந்த பால்காரர் வழக்கம்போல் சுவாமியிடம் ''என்ன சுவாமி தேநீர், காபி போதுமா? இன்னும் பால் ஏதாவது வேண்டுமா?'' என்று கேட்டார்.

சுவாமிகள் 'ஆமாம்பா சக்கரை அதிகம். அந்தப் பாலைக் கொண்டுவா!' என்று கூறினார்கள்.

பால்காரரும் தன் சைக்கிளில் இருந்த 25 லிட்டர் பால் கேனைத் தூக்க முடியாமல் தூக்கிச் சென்று சுவாமியிடம் கொடுத்தார். 25 லிட்டர் கேன் பாலை அனாவசியமாக வாங்கி ஒரே மூச்சில் அந்த 25 லிட்டர் பாலையும் குடித்து விட்டார்கள். மேலும் சைக்கிள் கை பிடியில் உள்ள 6 லிட்டர் பாலையும் கொண்டுவரச் சொல்லி குடித்துவிட்டு பெரும் ஏப்பம் ஒன்றை விட்டுவிட்டு மௌனமாக இருந்து விட்டார்கள்.

பால்காரருக்கு மயக்கமே வந்துவிடும்போல் ஆகிவிட்டது. மொத்தம் 30 லிட்டர் பாலையும் சுவாமி குடித்துவிட்டாரே. நம் வாடிக்கையாளர்களுக்கு என்ன பதில் சொல்வது என்று புரியாமல் சுவாமியின் எதிரில் நின்று மன்னிப்புக் கேட்டுக் கொண்டிருந்தார். சுவாமிகள் 'நல்லது, போய் வாரப்பா!' என்று கூறிவிட்டார். 2 காலி கேனுடன் பால்காரர் மாமூல் கடைகளுக்கு என்ன பதில் கூறுவது என்று வருத்தப்பட்டுக்கொண்டு போய்விட்டார்.

பால்காரர் பூண்டி சுவாமியை விட்டு போன சற்று நேரம் கடந்து சுவாமிகள் திண்ணையிலிருந்தபடி வாயைத் திறந்தார். வாயிலிருந்து கிராம பம்புசெட் பைப்பில் தண்ணீர் வருவதுபோல் தெருவில் வந்து விழுந்து, தெருவெல்லாம் பால் மயமாகிவிட்டது. அங்கிருந்த சாது சுவாமியிடம் பாவம் அந்த பால்காரர் பயந்து விட்டார் என்று கூறினார். அதற்குப் பூண்டி சுவாமிகள் அங்கிருந்த அன்பர்கள் சாதுக்களிடம் கீழ்க்கண்டவாறு கூறுகிறார்: அந்தப் பாலைக் காண்பித்து, 'ஏம்பா 30 லிட்டர் பாலை எத்தனை பேர் குடிப்பார்கள். பார், அதில் பல்லியும் தேளும் இறந்து கிடக்கிறது. அவனுக்குத் தெரியாமல் கொண்டு போராம்பா! என்று கூறினார்.

(முன்னாள் முதலமைச்சர் அறிஞர் சி.என். அண்ணாதுரை காலமான போது கடைகள் இல்லாமல் தேங்கிய பால் அது. அதில் எப்படியோ 2 தேளும் 1 பல்லியும் விழுந்து இறந்து கிடந்தது)

ஞானப் பழமான நம் பூண்டி மகான் இருந்த திண்ணையை விட்டு எழுந்திருக்காமல் எங்கோ! எப்போதோ பாலில் விழுந்த தேளையும், பல்லியையும் தன் ஞான திருட்டியால் தெரிந்து கொண்டு, அந்தப் பாலை மக்கள் அருந்தினால் அவர்கள் உயிருக்கும் உடலுக்கும் ஊறு விளைவிக்கும் என்று எண்ணி அதைத் தானே அருந்தி, தெருவில் அதை யாரும் குடிக்கா வண்ணம் செய்து விட்டார் என்றால், என்னே அவர் கருணை! அந்தக் கருணைக் கடலை, ஞானக் கடலை எத்தனை முறை வணங்கினாலும் தகும்.

பாற்கடலை தேவர்களும், அசுரர்களும் வாசுகி என்ற பாம்பைக் கொண்டு கயிறாக்கி மேருமலையை மத்தாகக் கொண்டு அமிர்தம் பொருட்டு கடைந்தார்கள். வாசுகி பாம்பு விட்ட மூச்சு விடமாக மாறி தேவர்களையும் அசுரர்களையும் கொல்ல வரும்போது அந்த விடத்தை சிவன், தேவர்கள், அசுரர்கள் இறந்து விடுவார்களே என்று கருணைகொண்டு தானே அருந்தி நீலகண்டன் என்று பெயர் பெற்றார் என்று புராணத்தில் கதையில் நாம் படித்துள்ளோம். அதுபோல் இந்த கலியுகத்திலும் அந்த சிவனே மனித உரு தாங்கி பூண்டிக்கு வந்து இப்படிப்பட்ட நன்மைகளையும் பல திருவிளையாடல்களும் ஆடினார்.

சமாதி

கோடைவாய் விரிந்த குளிர்தரு நிழலே
மேடைவாய் வீசிய மெல்லிய காற்றே
களைப்பாறக் கிடைத்த கருணை நந்நீரே
இளைப்பாற வாய்த்த விண்சுவை உணவே

தென்னைவாய் கிடைத்த செவ்விள நீரே
தென்னைவான் பலத்திற் றிறகு தீம்பாலே
நீர்நசை தவிர்க்கும் நெல்லியங் கனியே
வேர்விளை பலாவின் மென்சுவைச் சுளையே

கட்டுமாம் பழமே கதலிவான் பழமே
இட்டநற் சுவைசெய் இலந்தையங் கனியே
புனிதவான் றருவிற் புதுமையாம் பலமே
கனியெலாங் கூட்டிக் கலந்த தீஞ்சுவையே

என்மனக் கண்ணே என்னருட் கண்ணே
என்னிரு கண்ணே யெங்கணுண் மணியே
என்பெருங் களிப்பே என்பெரும் பொருளே
என்பெருந் திறலே எம்பெருஞ் செயலே


என்பெருந் தவமே என்தவப் பலனே
என்பெருஞ் சுகமே எம்பெரும் பேறே
என்பெரும் வாழ்வே யென்றன் வாழ்முதலே
என்பெரு வாழ்வே எம்பெரும் கணக்கே

என்பெரும் நலமே எம்பெருங்குலமே
என்பெரு வலவே எம்பெரும் புலமே
என்பெரும் வரமே யென்பெரும் தரமே
என்பெரு நெறியே என்பெரு நிலையே.

- திருஅருட்பா அகவல்

உன் கருணைமுகம் காண்பதெக்காலம். உன் இணையடி பாதம் பார்ப்பது எக்காலம். உன் செவ்வாயிதழ் மொழி கேட்பதெக்காலம். அருணை வாழ் அருணாசலனே, பூண்டியில் புனிதனாய் வந்தவனே.

ஞானிகள் தன்னலம் கருதாத நிட்காமியத் தவமிருப்பர். அவர்கள் அந்த தவப்பயனை உலக மாந்தர்கள் பயனடையப் பயன்படுத்துவார்கள். சுய நலம் பொருட்டு எப்போதும் தன் தவசக்தியைப் பயன்படுத்த மாட்டார்கள். எந்த சந்தர்ப்பங்களிலும் அவர்கள் செயல் உலக நன்மைக்காகவே இருக்கும்.



தினம் ஆறுகால பூஜையை ஏற்றுக்கொண்ட ஆற்று சுவாமிகள்
உடன் : ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணி சுவாமி, பூண்டி

அவதார புருசர்கள், ஈசுவரன் என்னும் எல்லையில்லா விவரிக்க முடியாத சமுத்திரத்திலிருந்து ஏற்படும் அலைகள் போன்றவர்கள். சம்சாரக் கடலில் கரை ஏறத் தெரியாமல் அல்லல்படும் மக்களை கரைசேர்க்க வந்த ஈசுவர அலைகள் அந்த அவதார புருசர்கள்.அப்படி இந்த கலியின் பிடியில் இருந்து கரை சேர்க்கவந்த அவதாரப் புருசரே நம் பூண்டி மகான். முக்காலத்தையும் உணர்ந்து மக்களை நற்கதியடையச் செய்ய வந்தவர்கள் தேவ தூதர்கள்.

தினம் வரும் பக்கதர்களிடம் பரிபாசையில் பேசி நன்மை பல புரிந்து வந்தார். பூண்டி கிராமத்திற்கு தெற்கே நெல்லிமேடு என்ற கிராமம் உள்ளது. அங்கே விவசாயம் செய்து சீவனம் செய்து வருபவர் சிவராம கவுண்டர். அவர் மனைவி ஒரு சீமைப் பசுவை வளர்த்து வந்தார். பசு நிறைமாத சினையாக இருந்தது. கவுண்டரின் மனைவி, பசு நல்லவிதமாக பெண் கன்று போட்டால் முதலில் கறக்கும் பாலை பூண்டி சுவாமிக்கு கொடுப்பதாக மனதார வேண்டுதல் செய்து கொண்டார்.

பசுவும் அந்தத் தாய் வேண்டியபடி பசு கன்று நல்லவிதமாக ஈன்றது. அந்த அம்மாவும் பூண்டி மகானிடம் வேண்டியபடி முதல் முதலில் கறந்த பாலை தன் 12 வயது சிறுமியிடம் கொடுத்து பூண்டி சுவாமிக்கு கொடுத்துவிட்டு வரும்படி கூறினார்.



பசுவுடன் பசுபதி

சிறுமியும் அந்தப் பாலை எடுத்துக்கொண்டு பூண்டி சுவாமியிடம் போக தெருத் திண்ணையை அடைந்தாள். அப்போது சிவராம கவுண்டர் "பாலை எங்கு கொண்டு போகிறாய்' என்று தன் மகளைப் பார்த்து கேட்டார். அதற்கு அவர் மகள் 'அம்மா, நம்ம சீமை பசு நல்லவிதமாக பெண் பசு கன்று போட்டால் முதலில் கறக்கும் பாலை பூண்டி சுவாமிக்கு கொடுப்பதாக வேண்டுதல் செய்து கொண்டார்களாம். அதற்காக பாலை பூண்டி சுவாமியிடம் கொண்டு போகிறேன்' என்று கூறினாள். அதற்கு சிவராம கவுண்டர்,

"ஆமாம்! முதல் முதலாக அந்த பல் விளக்காத சுவாமிக்குத் தான் கொடுப்பதா? உள்ளே கொண்டு போ"என்று தன் மகளைப் பார்த்து கூறினார்.

ஆனால் அந்த சிறுமி கவுண்டரின் சொல்லுக்குப் பதில் கூறாமல், நேராக பூண்டி வந்து திண்ணையில் உள்ள சுவாமிக்கு அந்தப் பாலை கொடுக்கச் சென்றாள். அதற்கு சுவாமிகள்:

'பல் விளக்குகிற சுவாமி உன் வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்துள்ளான். அவனுக்குக் கொடு! இது பல் விளக்காத சாமி" என்று கூறி பாலை வாங்க மறுத்துவிட்டார்.

சிறுமி நெல்லிமேடு சென்று தன் தகப்பானாரிடம் பூண்டியில் சுவாமி கூறியதை அப்படியே கூறினாள். நாம் இங்கு கூறியதை சுவாமி தன் ஞான திருட்டியில் தெரிந்து கொண்டு திரும்ப நமக்கே அப்படி கூறினார் என்று தெளிந்து, சிறுமியிடமிருந்து பாலை தானே வாங்கிச் சென்று சுவாமியிடம் போய் நின்றார் சிவராம கவுண்டர். அதற்கு சுவாமிகள்:

''பல் விளக்கும்போது சாப்பிடுறேன். அப்படி வைப்பா!' என்று கூறிவிட்டார். கீழே வைத்துவிட்டால் பிறகு அதை யாரும் தொடமாட்டார்கள். கீழே ஊற்றிவிடவேண்டியதுதான். சிவராம கவுண்டர், ''சுவாமி தெரியாமல் கூறிவிட்டேன், மன்னிக்கவும்' என்று சுவாமியை வேண்டினார்.

'சர்தான்! சர்தான்! போய்வாங்க!' என்று கூறிவிட்டார். (சர்தான் என்றால் சரி என்று பொருள்) மெய்ஞானி ஒருவர் தன் தவ வலிமையால் பல மைல்களுக்கு அப்பால் நடக்கும் நிகழ்ச்சிகளையும் எதிர்காலத்தையும் இருந்த இடத்திலே அறியும் தன்மை உள்ளவர். நம் மனதில் என்ன நினைக்கிறோமோ அதை அப்படியே அறியும் தன்மை உள்ளவர்கள் அப்படிப்பட்ட மெய் ஞானி நம் பூண்டி மகான்.

சாவா திருந்திட பால்கற - சிரம்
　　தன்னில் இருந்திடும் பால்கற
வேவாது இருந்திட பால்கற - வேறு
　　வெட்ட வெளிக்குள்ளே - பால்கற
தேயாது இருந்திடும் பால்கற
　　தொல்லை வினையறப் பால்கற
வாயால் உமிழ்ந்திடும் பால்கற - வேறு
　　வயிறார உண்டிப் பால்கற

- இடைக்காட்டு சித்தர்

ஞானி ஒருவர் தன் உடலில் உள்ள தொண்ணூற்றாறு தத்துவங்களை யோகப் பயிற்சியால் தன் வசப்படுத்தியும், வாசி யோகப் பயிற்சியினால் தன் உடம்பில் உள்ள ஆறு ஆதாரங்களில் முதல் ஆதாரத்தில் உள்ள குண்டலினி சக்தியை எழுப் மற்ற ஆதாரங்களின் மேலேற்றி, தன் தலை கபால உச்சியில் உள்ள ஆயிரம் தாமரை இதழ் போன்ற சகசுராரத்தில் சேர்த்து அதில் உண்டாகும் ஞான அமிர்தத்தை உண்டு ஞானிகள் பல ஆயிரம் ஆண்டுகள் இருப்பார்கள். அது பிறப்பு, இறப்பையும், மூப்பையும் வெல்லும் சக்தியுடையது.

தன்னில் இருக்கும் அமிர்தப் பாலைக்குடித்து சாவாத தன்மை பெற்ற ஞானிக்கு பசும்பால் எதற்கு? வெட்டவெளிதனைக் கண்டு உண்மை என்றிருப்போர்க்கு பசும்பால் எதற்கு? தொல்லை வினைகளாகிய, மும்மலம், அந்தக்கரணம் நான்கை வென்றவர்க்கு பசும்பால் எதற்கு?

ஏப்பம் விடாமலே பால்கற - வரும்
எமன்விலக்கவே பால்கற
தீப்பொறி ஓய்ந்திட பால்கற
சிவத்துடன் சாரவே பால்கற

– இடைக்காட்டுச் சித்தர்

ஞானி ஒருவர் தன் ஞானத்தின் முதிர்ச்சியில் தன் யோகப் பயிற்சியினால் தன் சிரசில் உற்பத்தியாகும் அமிர்தத்தைச் சாப்பிடுவார். அது ஏப்பம் வராமல் இருக்கும் தன்மையுள்ளது. அப்படிப்பட்ட அமிர்தத்தை அருந்தும் ஞானிகளுக்கு யமபயம் கிடையாது. அப்படி எமனை ஏப்பமிடும் ஞானி நம் வீட்டுப் பாலுக்கு அவர் திண்ணையில் உட்கார்ந்திருக்கவில்லை. நம் வினைதீர்க்க வந்த ஆண்டவன் அவர்.

ஆரணியிலிருந்து ரெட்டியார் அம்மா, பூண்டி மகானிடம் போய்தரிசனம் செய்ய ஆரணி பேருந்து நிலையம் வந்தார். சுவாமிக்கு வாழைப்பழம் வாங்கலாம் என்று கடைக்குச் சென்று 1 டசன் வாழைப்பழம் வாங்கி மடியில் வைக்கப் போகும்போது எங்கிருந்தோ ஒரு குரங்கு அந்த அம்மா வைத்திருந்த வாழைப் பழத்தில் பாதியை பிடுங்கிச் சென்று விட்டது.

அந்த அம்மையார் அதிர்ச்சியடைந்து 'என்ன, பூண்டி ம்கானுக்கு வாங்கிய பழம் குரங்கு தின்ன நேர்ந்து விட்டதே' என்று வருத்தம் அடைந்தார். பிறகு 'குரங்கும் ஒரு ஆத்மா தான், சாப்பிடட்டும்' என்று மனதில் எண்ணிக்கொண்டு பூண்டி போய்ச் சேர்ந்தார்.

பூண்டியில் சுவாமி இருக்கும் திண்ணையை அடைந்து சுவாமியிடம் வாழைப்பழத்தைக் கொடுக்கலாமா, வேண்டாமா என்று எண்ணிக் கொண்டிருக்கையில் சுவாமி கீழ்க்கண்டவாறு கூறினார்.

"கொண்டு வந்த வாழைப் பழத்தைக் கொடும்மா"

"குரங்கும் ஒரு ஆத்மாதான் அதுவும் சாப்பிடட்டும்
இதுவும் ஒரு ஆத்மாதான் இதுவும் சாப்பிடட்டும்"

என்று கூறினார். வந்த அம்மையாருக்குப் பெரும் வியப்பு ஆகி விட்டது. ஆரணி பேருந்து நிலையத்தில் குரங்கு பிடுங்கிச் சென்ற வாழைப்பழ சம்பவத்தை அப்படியே கூறுகிறார். மேலும் நம் மனதில் நினைத்துக் கொண்டதையும் அப்படியே கூறுகிறார் என்றால் இவர் சாதாரண மகான் இல்லை என்று உணர்ந்து சரி இன்று நம் கவலையெல்லாம் இவரிடம் கூறி அதற்கு வழி கேட்க வேண்டும் என்று எண்ணிக் கொண்டார். விபூதி வாங்கிக் கொண்டு வெளியே திண்ணைக்கு எதிரில் வந்து நின்று விட்டார். வேறு ஒரு தம்பதிகள் சுவாமியிடம் வந்து சுவாமியின் ஆசீர்வாதத்திற்கு நின்று கொண்டிருந்தனர். தம்பதிகள் கேட்கும் கேள்விகளுக்கு சுவாமிகள் கூறும் பதில்கள், ஆரணியிலிருந்து சென்ற அம்மை கேட்க நினைத்த கேள்விகளுக்குச் சரியான பதில்களாக ஒத்திருந்தது.

தம்பதிகள் கேட்கிறார்கள்:

'சுவாமி, என் மனைவிக்கு, தீராத வயிற்றுவலி. அதை நீங்கள்தான் சரியாக்க வேண்டும்.

சுவாமி: 'ஆயிரம் மாமியார்கிட்டே வாழ்ந்திடலாம். அரை நாத்தனார் கிட்ட வாழ முடியாதுப்பா!''

ஆரணியிலிருந்து சென்ற அம்மா கேட்க மனதில் நினைத்தது - தன் மகள் மாமியார் வீட்டில் கல்யாணமாகாத நாத்தனாரிடம் (கணவனுக்கு சகோதரி நாத்தனார்) சண்டையிட்டு விட்டு தன் வீட்டிற்கு வந்து ஒரு மாதம் ஆகியும் மாமியார் வீட்டிற்குச் செல்ல மறுத்துக் கொண்டிருக்கிறது என்பதுதான்.

தம்பதிகள் : 'சுவாமி போகாத கோயில்இல்லை. பார்க்காத வைத்திய மில்லை. அப்படியும் இந்த வயிற்றுவலி தீரவில்லை. நீங்க தான் நல்ல படியாக்க வேண்டும்'' அதற்கு சுவாமிகள்: 'சம்பா விளைந்து கிடக்குது, உண்பாரில்லாமல் ஊர்க்குருவி மேயுது' என்றும் பனை பழுத்தது ஏன் ? பருவப்பெண் கொழுத்தது ஏன்?

என்றும் கூறிவிட்டார்கள். தம்பதிகளுக்கு ஒன்றும் புரியாமல் விபூதியைப் பெற்றுக் கொண்டு வந்தனர். ரெட்டியார் அம்மா, அந்த தம்பதிகளைக் கூப்பிட்டு, சுவாமி கூறியது அத்தனையும் எனக்குத்தான், உங்களுக்கு அல்ல. விபூதியைப் பெற்றுக் கொண்டதினால் உங்கள் வயிற்றுவலி கண்டிப்பாக குணமாகி விடும். நான் என்ன என்ன கேட்க வேண்டும் என்று நினைத்தேனோ அத்தனையும் நான் கேட்காமலே எனக்குக் கூறிவிட்டார் என்று அந்த அம்மையார் கூறினார்.


என் மகள், மாமியார் வீட்டில் அங்குள்ள கல்யாணமாகாத அதன் நாத்தனாரிடம் பல கொடுமைகளை அனுபவித்துவிட்டு வந்து விட்டது. அந்த மாமியார் வீட்டில் உள்ள பெண்ணுக்கு என்று நான் நினைத்ததை எல்லாம் சரியாகப் போய்விடும் என்று நான் நினைத்ததை அப்படியே கூறிவிட்டார் என்றால் உங்களுக்கு அவர் கண்பார்வைப்பட்டு விட்டதால் கண்டிப்பாக குணமாகிவிடும் என்று கூறினார். ரெட்டியார் அம்மா மறுபடியும் சுவாமியிடம் சென்று ''போய் வருகிறேன் சாமி'' என்று கூறினார். அதற்கு சுவாமிகள்:

''நல்லதும்மா! போய் வாங்க!

''ஈசனெனக் கருதி யெல்லா உயிர்களையும்
நேசத்தால் நீ நினைத்து கொள்''

என்று ஒளவையார் பாடலைக் கூறி அனுப்பினார். சுவாமிகள் கையினால் விபூதியைக் கொடுத்து விட்டால் அந்த அன்பர்களின் கோரிக்கை நிறைவேறிவிடும். விபூதி என்பது: வி-மேலான பூதி - ஐஸ்வர்யம் என்று பொருள். மேலான ஐஸ்வர்யம் என்று விபூதிக்கு பொருள் ஆகும். தன்னைத்தான் உணர்ந்து தலைவன் ஆனவர் நம் பூண்டி மகான். மேலான நிலையில் உள்ள ஞானப் பொருள். அவரின் கைப்பட விபூதியைப் பெற்றுக் கொண்டால், அதன் மகிமையை எப்படி விளக்கிக் கூறுவது!

சித்தம் தடுமாறியவர்கள் சுவாமியின் கையினால் விபூதியைப் பெற்று சித்த சுவாதீனம் அடைந்தனர். தனக்கு வாரிசே இல்லை என்று டாக்டர்களால் கூறப்பட்ட தம்பதிகள் சுவாமியிடம் அவர் கையால் விபூதியைப் பெற்று மக்கள் செல்வத்தை அடைந்தவர்கள் ஏராளம். டாக்டர்களால் கைவிடப் பட்ட நோயாளிகள், பூண்டி வந்து இரவு தங்கி காலை விசுவருப தரிசனம் செய்து தன் தீராத வியாதிகளைத் தீர்த்துக் கொண்டவர்கள் ஏராளம்.



தியான நிலையிலிருக்கும் திண்ணையிலமர்ந்துள்ள தினகரன்

பேசும் சக்தியற்றவர்கள் சுவாமியிடம் வந்து பல நாள் தங்கி, சுவாமி கையினால் விபூதி பெற்று அதை, பாலில் சேர்த்து சாப்பிட்டு பேசும் சக்தியைப் பெற்றவர்கள் ஏராளம். விவசாயப் பெருமக்கள் தான் எங்கு தன் நிலத்தில் கிணறு தோண்டினால் தண்ணீர் வரும் என்று சுவாமியிடம் கேட்டு, சுவாமி சொல்படி கிணற்றைத் தோண்டி வற்றாத தண்ணீர் கண்டவர்கள் ஏராளம். இவர்கள் அனைவரும் என்னிடம் நேரிலும் தபால் மூலமும் தெரிவிக்கின்றனர். அத்தனையும் ஒரே மாதிரியாகவும் இருப்பதாலும், அனைத்தையும் எழுத முடியாது என்று அவர் ஞான நிலைக்கு ஓரிரு சம்பவம்மட்டும் எழுத முடிந்தது என்று அறிய வேண்டும்.

இந்த இடத்தில் நாங்கள் ஒன்று கூற விரும்புகிறோம். என்னிடம் நேரிலும் தபால் மூலமம் தகவல் கொடுத்ததை அத்தனையும் எழுத வேண்டி வந்தால் அது சுவாமியின் பெருமையை நாங்கள் மிகைப்படுத்தி விட்டதாக ஆகிவிடும்.

நாங்கள் மிகைப்படுத்திக் கூறவேண்டிய நிலையில் இருந்த மகான் அல்ல அவர். நாங்கள் அதை மிகைப்படுத்த வேண்டிய அவசியமும் இல்லை.

சுவாமியின் மகிமைகளைக் கண்டவர்கள் இலட்சோப இலட்சம் பேர்கள். அவரவர் உணர்ந்தால்தான் தெரியும் மகானின் பெருமை. பிறர் விளக்கிக் கூறக்கூடாது என்பது எங்கள் நோக்கம்.

இதைநாங்கள் மிகவும் பயபக்தியுடன் எழுத வேண்டியதாயிற்று. இதை படிக்கும் அன்பர்கள் பூண்டி மகானின் பெருமையை மிகைப்படுத்தி விட்டதாகவோ அல்லது சுருக்கி எழுதி விட்டதாகவோ எண்ண வேண்டாம் என்று தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம். எங்கள் ஒன்பது ஆண்டு கன்னி முயற்சியில் இவ்வளவுதான் அவரின் மகிமைகளை எழுத வேண்டி வந்தது. அது நமது புண்ணியம் என்று நாம் நினைக்க வேண்டும்.

அதனால் இச்சிறியோர்கள் எழுதிய இந்த சிறிய புத்தகத்தில் ஏராளமான குறை, குற்றங்கள் இருக்கலாம். அதை பெரிது படுத்தாமல் ஸ்ரீ பூண்டி மகான் அருள் ஒன்றே முக்கியம் என்று நினைத்து இதைப்படித்து எல்லாம் வல்ல ஸ்ரீ பூண்டி மகான் அருள் ஆசிக்கு உரியவர் ஆகுக, என்று வேண்டிக் கேட்டுக்கொள்கிறோம்.

''தரிசிக்கின்ற பல்லுயிர்க் கெல்லாந் தலைவன்
இருக்கின்ற தன்மையை ஏதும் உணரார்
பிரிக்கின்ற இந்தப் பிணைக்கறுத் தெல்லாங்
கருக்கொண்டு ஈசனைக் கண்டு கொண்டேன் - திருமந்திரம்

''இறைவனே பூண்டி மகானாக வந்து எங்கள் குற்றங்களை மன்னித்து எங்களுக்கு நற்கதியடைச் செய்தார்' என்பதை நாங்கள் உணர நேர்ந்தது.

★ ★ ★

போளூர் தாலுக்காவில் உள்ள ஒரு கிராமத்திலிருந்து கணவனும் மனைவியும் கடலாடி என்னும் ஊரில் உள்ள மருத்துவ மனைக்கு தன் ஒரு வயது குழந்தையுடன் சென்றனர். போகும் வழியில் எலத்தூர் ஏரியில் நீர் நிரம்பி வழிந்து கொண்டிருந்தது. கணவன் மனைவிக்கு தாகம் எடுக்கவே ஏரியில் தண்ணீரை குடித்து விட்டுக் கடலாடி மருத்துவமனைக்குச் சென்றனர்.

மருத்துவ பரிசோதனைகளை முடித்துக் கொண்டு தன் வீடு திரும்பப் புறப்பட்டனர். அப்போது மனைவி தான்அணிந்து வந்த பத்து சவரன் சங்கிலியைக் காணவில்லை என்று தன் கணவனிடம் சொல்லி அழுதாள். வீட்டில் மாமியாருக்கு என்ன சொல்வது என்று தெரியாமல் கவலையுடன் மருத்துவமனை வாசலில் உட்கார்ந்து விட்டனர்.

அப்போது ஒரு வயதான மாது இவர்களின் முக வாட்டத்தின் காரணம் கேட்டார். தம்பதிகளும் தங்களின் பத்து சவரன் நகை எங்கேயோ யாரோ எடுத்து விட்டிருக்கிறார்கள் என்று கூறி வருத்தப்பட்டனர்.

அதற்கு அந்த வயதான மாது ''நீங்க, கவலைப்படாதீங்க. பூண்டியில் ஒரு வீட்டு திண்ணையில் ஒரு சாமியார் இருந்த இடம் விட்டு எழுந்திருக்காமல் உட்கார்ந்து உள்ளார். அவர் முக்காலமும் உணர்ந்த பெரிய மகான் அவரிடம் போய் வணங்கி வேண்டினால், அவர் சரியாக

கூறிவிடுவார். அதைக் கிடைக்கும் படியும் ஆசிர்வாதம் பண்ணுவார்' என்று கூறினார்.

தம்பதிகள் இருவரும் பூண்டி வந்து சாமியார் முன்பு வணங்கி நின்றனர். இவர்கள் சாமியாரிடம் கேட்குமுன் சுவாமிகளே பேச ஆரம்பித்து விட்டார்.

"ஆமாம்பா! ஆண்அலை! பெண்அலை
ஆஸ்பத்ரி! பாட்டல்! எலத்தூர்ஏரி! போய்யா!"

என்று கூறிவிட்டார். வந்த அன்பருக்கு ஒன்றும் புரியவில்லை. சுவாமியிடம் பணிபுரிந்து வந்த சாதுக்களில் ஒருவர் இத்தம்பதிகளை அழைத்து என்ன விபரம் என்று கேட்டார். அவர்களும் நடந்ததைக் கூறினார்கள். நீங்கள் வரும்போது ஏரியில் தண்ணீர் குடித்ததாக கூறுகிறீர்கள். அதைத்தான் சுவாமி தன் பரிபாசையில் கூறுகிறார். எதற்கும்நீங்கள் தண்ணீரை அருந்திய எலத்தூர் ஏரிக்குச் சென்று பாருங்கள். கண்டிப்பாக கிடைக்கும் என்று கூறினார். தம்பதிகளும் உடனே 3 கி.மீ. தூரத்தில் உள்ள எலத்தூர் ஏரியில் தாங்கள் தண்ணீர் அருந்திய இடத்தை அடைந்தனர். என்ன ஆச்சர்யம்! ஏரியின் கரையோரம் அலைகள் மோத அந்த பத்து சவரன் நகையும் இருந்தது. தம்பதிகளுக்கு அளவிட முடியாத ஆனந்தம். அன்றையிலிருந்து பூண்டி சாமி தான் அவர்களுக்கு குலதெய்வமாகி விட்டார். சுவாமியை கேட்காமல் எந்த வேலையையும் தொடங்க மாட்டார்கள்.

★ ★ ★

வேலூரில் கொசப்பேட்டையில் இருந்து ஒரு தாய் தன் மகளுடன், பூண்டியில் மகானுக்கு நடக்கும் தைப் பூசத் திருவிழாவைக் காண வந்தனர். வந்தவர்கள் பூண்டி ஆற்றில் ஓடும் புனித நீரில் குளித்து விட்டுச் சுவாமியை தரிசிக்கலாம் என்று எண்ணி ஆற்றுக்கு குளிக்கப் போனார்கள். தாய் தன் மகளின் கம்மல்களைக் கழற்றி தன் முந்தானையில் முடித்துக் கொண்டார்.

குளியல் முடித்துக்கொண்டு சுவாமியிடம் வந்தனர். வந்து சாமியிடம் தரிசனத்திற்காக வரிசையில் நின்று கொண்டிருந்தனர். தாய் தன் மடியில் இருந்த கம்மலைக் காணவில்லை என்று அதிர்ச்சி அடைந்தார். சுவாமியிடம் வந்து சுவாமி என் மகள் கம்மலை என் மடியில் சுற்றி வைத்திருந்ததேன். அது எங்கோ விழுந்து விட்டது. தாங்கள்தான் அதை திரும்பக் கிடைக்க ஆசி கூற வேண்டும் என்று வேண்டினார். அதற்கு சுவாமிகள்,

"உன் கண்உன்னை ஏமாற்றினால் என்மேல் கோபம்
உண்டாவதேன்" என்று பாடலாகப் பாடினார்.

'ஒன்று போளுருக்குப்போய் இப்போது வந்து கொண்டிருக்கிறது. ஒன்றுக்குத்தான் அந்தப் பாடல்' என்று கூறினார். அந்த அம்மாவுக்கு ஒன்றுமே புரியவில்லை. சற்று நேரம் கடந்து போளூரிலிருந்து ஒரு பேருந்து சுவாமி இருக்கும் திண்ணை எதிரில் வந்து நின்றது. சுவாமிகள் அந்த அம்மாவைக்கண்டு 'அந்த பேருந்தின் பின் சக்கரத்தில் வலது பக்கமாக உள்ள டயரிலும், உன் கண் எதிரில் உள்ள குழியில் ஒன்றும் உள்ளது பார்! என்றார்.

போளூரில் இருந்து வந்த பேருந்து ஒரு மணி நேரத்திற்கு முன் தான் பூண்டி வழியக போளூருக்குச் சென்றது. போகும்போது மடியில் இருந்து ஒரு கம்மல் கீழே வீழ்ந்திருக்க பின் டயரில் ஒட்டிக்கொண்டு போளூர் போய்விட்டது. இதைத்தான் சுவாமி 'ஒருவன் போளூருக்குப் போய் வந்து கொண்டிருக்கிறான்' என்று கூறினார். ஒரு கம்மல் அந்தம்மா எதிரிலேயே உள்ள ஒரு சிறு குழியில் இருந்தது. இதைத்தான் சுவாமிகள் ன் கண் உன்னை ஏமாற்றினால் என்மேல் கோபம் உண்டாவதேன்' என்று பாடல் மூலம் கூறினார்கள்.

தினம் பூண்டியில் இப்படிப்பட்ட அதிசயங்கள் நடப்பது ஏராளம். சுவாமி என் மாடு, காணவில்லை; என் மகன் காணவில்லை என் நகை காணவில்லை; நீங்கள்தான் கண்டுபிடித்து தரவேண்டும் என்று கேட்டு தினம் வரும்பக்தர்கள் கூட்டம் கூடிக்கொண்டே போனது.

ஒரு மெய்ஞானி தன் ஞான திருட்டியினால் கேட்பவர்கள் கேள்விக்கு சரியான பதில் கூறிவிடுகிறார். அவர் உன் நகை நட்டைக் கண்டுபிடிக்கத் திண்ணையில் உட்கார்ந்து இருக்கவில்லை. அவர் உன் கிணற்றில் தண்ணீர் வருமா, வராதா என்று குறிசொல்ல திண்ணையில் உட்கார்ந்து இருக்க வில்லை. உன் மகன் (அ) மகள் கல்யாணத்தை நல்லபடி நடக்க, நாட்குறிக்க அவர் திண்ணையில் உட்கார்ந்து இருக்கவில்லை. பின் யார் அவர்? எதற்காக பூண்டியில் திண்ணையில் அமர்ந்து இருந்தார் என்று நீ என்னை கேட்பது புரிகிறது. அவர் ஒரு விளக்கிட முடியாத தத்துவ மெய்ஞானி.

சாற்றுகின்றேன் மகனே வாசிநாத!
சத்தியமா யண்டத்திற் செல்லும்போது
போற்றுகிற அக்னியும் பிரவேசித்துப்
புலன்கள் ஐந்தும் சேர்ந்ததனாற் போதமாகும்
மாற்றிலே அதிகமடா உந்தன்தேகம்
மைந்தனே அபுரூப மாகுமப்பா!
வாற்றியநிகழ் சாய்கை யற்றுபோகும்
வலுத்ததடா காயசித்தி யாச்சுபாரே!
ஆச்சென்று அபுருபமான போதே
அட்டமா சித்திவகை யெட்டுமாடும்
மூச்சென்றி யடங்கிப்போய் பிரமத்தூடே
முன்னணியும் பின்னணியு மொன்றாய்ப் போகும்
காச்சென்று காச்சிடு மவுனங்கண்டு
கலைமாறி நின்றிடமே கனகபீடம்
நீச்சென்று மில்லையடா வுன்னைக்கண்டால்
நிலைத்ததடா சமாதி என்ற மார்க்கந்தானே

- காகபுசுண்டர் மகரிஷி

போக்குவீரென்று சொல்லிப் போக்கத்தானே
பொருளதனைச் சொல்லி வைத்தேன் இடங்கள்தோறும்
நாக்குமேல் அண்ணாக்கு உண்ணாக்குள்ளே
நடுத்தாமரைத் தான்திறந்தால் உச்சிவாசல்
மூக்குமேற் தண்டினிலே முனைமூக்குக்குள்
முளைத்தெழுந்த வாசி வரப்பார்த்த பேர்கள்
தாக்குவார் புருவநடு மேலே பார்ப்பார்
தமர்வாச லடைத்திருக்கும் பூட்டுத்தானே
பூட்டுடைத்துக் கண்டவர்கள் மெத்தவுண்டு
புத்தியுள்ளோ ரவர்களே சித்தர்சித்தர்
ஆட்டமிதிற் காண்பார்கள் அனேகங்காட்சி
அம்மம்மா வென்றார்கள் சுத்தவீரர்
காட்டம்விற கொய்தாமற் தீயிடாமல்
கதிர்மதிக்கும் மத்தியது புருவமத்தி
நாட்டமிடக் கோபுரத்தின் வாசற்பூட்டு
நாசிமுனை புருவமத்தி திறந்து கொள்ளே.

- காகபுசுண்டர் மகரிஷி

இப்படிப்பட்ட சமாதி நிலையெய்திய சித்தமகா புருசர் நம் பூண்டி மகான். அட்டங்க யோகங்களைக் கடந்து அட்டமா சித்திகளை கைவரப் பெற்று சமாதி நிலையில் நிட்காமியத்தவம் புரியும் பூண்டி மகானிடம் என் நகை எப்போது கிடைக்கும்? என் மகன் டாக்டருக்குப் படிப்பானா? நான் வெட்டும் கிணற்றில் தண்ணீர் வருமா? என் வயிற்று வலி தீருமா? என் தலைவலி தீருமா? என் வியாபாரம் இலாபகரமாக நடக்குமா? என் வழக்கு வெற்றி பெறுமா? என்றுதான் கேட்கத் தோன்றுகிறதே ஒழிய என் புத்தி நான் பிறந்திலிருந்து காணாமல்போய விட்டது. அது எப்போது எனக்கு வரும்? என்னுடைய யோக்கியதாம்சம் கடந்த ஒரு சென்மமாக காணவில்லை. அது எப்போது எனக்கு வரும்?

மலங்கள் மூன்றையும் அறுக்கும் நாள் எப்போது? என் அகங்காரத்தை எப்போது வெட்டி வீழ்த்துவேன்?

"காமக்கடல் கடந்து கரைஏறிப் போவதற்கு
ஓமக்கனல வளர்த்து உள்ளிருப்பது எக்காலம்?"

"அத்தன் இருப்பிடத்தை ஆராய்ந்து பார்த்துநிதம்
செத்த சவம்போல் திரிவது இனி எக்காலம்?"

"பேய்போல் திரிந்து, பிணம்போல் கிடந்து பெண்ணைத்
தாய்போல் நினைத்துத் தவம்முடிப்பது எக்காலம்?"

"கஞ்சா அபினியுடன் கள்ளுண்டு வாடாமல்
பஞ்சாமிர்தம் பருகுவதும் எக்காலம்?"

என்று யாரும் சுவாமியிடம் கேட்பது கிடையாது. ஏன் மனதில் நினைப்பதும் கிடையாது. சந்தையில் பல பொருட்கள் உள்ளது. பலவித பதார்த்தங்கள் ஆடு, மாடு, கோழி, துணி, மணி, கருவாடு போன்றவைகளும் நல்ல அறிவுள்ள நூல்களும் சந்தைக்கு விற்க வந்திருக்கும். கருவாட்டு கடையில் உள்ள கூட்டம் அறிவுள்ள நூல் விற்கும் இடத்தில் இருக்காது. ஏன் விற்பனையே ஆகாமலும் போய்விடும். நம்மனது பல காலங்களாக உலக வாசனையிலேயே உள்ளது. அதை அதிலிருந்து விடுபட்டு தன் நிலைக்குக் கொண்டுவரவும், நமக்கு நற்கதியடைச் செய்யவும், இப்படிப்பட்ட மகான்கள் தோன்றி மனிதருள் மனிதராய் இருந்து செயல்படுவார்கள். அதை நாம் உணர்ந்து மகானிடம் தரிசனம் செய்வதோடு நிறுத்திக் கொள்ள வேண்டும். அவர்களை ஒன்றும் நாம் கேட்கக்கூடாது. நமக்கு என்ன செய்ய வேண்டும் என்று அவர்களுக்குத் தெரியும்.

★ ★ ★

ஒரு ஊரில் இரண்டு மீனவப் பெண்கள் சந்தைக்குச் சென்று மீன் விற்பனை செய்துவிட்டு தங்கள் வீடு திரும்பிக் கொண்டிருந்தனர். வரும் வழியில் மழைகொட்டத் தொடங்கியது. தங்களுக்கு அறிமுகமான பூ விற்கும் வியாபாரி வீட்டை அடைந்து மழை விட்டபிறகு போகலாம் என்று தங்களுடன் காலி மீன் விற்ற கூடையுடன் தங்கினார்கள்.

மழை பலமாக விடாமல் பெய்து கொண்டிருக்கிறது. அதனால் அன்றிரவு அந்த பூ வியாபாரி வீட்டில் தங்கிவிட்டனர். பூ வியாபாரியோ மறுநாள் நடக்க இருக்கும் மாரியம்மன் திருவிழாவிற்கு மல்லிகை, முல்லை போன்ற நறுமணப்பூக்களை கூடை, கூடையாக சரங்களாகக் கட்டி ஒரு அறையில் வைத்திருந்தார். மீனவப் பெண்களை அந்த பூ இருக்கும் அறையில் தங்கும்படி கூறிவிட்டார். மீனவப்பெண்களும் அந்த அறையில் படுத்துக் கொண்டனர்.

இரவு வெகு நேரமாகியும் இரண்டு மீனவப் பெண்களுக்கும் தூக்கம் வரவில்லை. ஒருவள், மற்றவளைப் பார்த்து "ஏன்டி உனக்கு தூக்கம் வருதா? எனக்கு தூக்கமே வரவில்லை. இந்த பூவின் வாசனை என்னை தூங்கவிடாமல் செய்கிறது" என்றாள்.

அதற்கு மற்றவள் என்னை மாதிரி மீன் கூடையை முகத்தில் கவிழ்த்து வைத்துக் கொண்டு தூங்கு. அப்போதுதான் அதன் வாசனையில் தூக்கம் வரும் என்றாள். மற்றவளும் அதே மாதிரி காலி மீன் கூடையை முகத்தில் கவிழ்த்துக் கொண்டு தூங்க ஆரம்பித்தாள்.

மறுநாள் பொழுது விடிந்தது. ஒருவள், மற்றவளைப் பார்த்து, 'என்ன? இரவு நன்றாகத் தூங்கினாயா?' எனபுறு கேட்டாள். அதற்கு மற்றவள் 'மீன் கூடையை தலையில் கவிழ்த்து மூக்கின் சமீபம் வைத்த பிறகுதான் அந்த மீன் வாசனையில் ஆனந்தமாக தூங்கினேன். அதற்குமுன் அந்த பாழாப்போன பூ வாசனை என்னைத் தூங்கவிடாமல் மூக்கைத் துளைத்துவிட்டது' என்று கூறினாள்.

பல ஆயிரம் வருடங்களாக மனிதனின் நிலை புற உலகத்தின் கண் மனதையும், பொறி, புலன்களையும் பரவவிட்ட நிலை, மீனவப் பெண்களின் நிலைபோல் ஆகும். அந்த நிலையிலிருந்து மனிதனை தன் நிலைக்குக் கொண்டுவர அவ்வளவு எளிதில் மாற்ற மனிதனால் முடியாது. மீனவப் பெண்களுக்கு நறுமணம் கமழும் மலர்களை விட நாற்றம் வீசும் மீன் வாசனையே அவர்களுக்கு ஒத்து வருகிறது. இப்படிப்பட்ட நாற்றமாகிய உலக விசயங்களில் நம் மனம் போகாமல் நறுமணம் என்ற நற்கதியை நாம் அடைய வழிகாட்ட வந்த அவதார புருசர்களே மெய்ஞானிகள். அப்படிப்பட்ட அவதார புருஷரே நம் பூண்டி மகான்.

ஒரு மகான் தன் தவ வலிமையால் தனக்கு கிடைக்கக்கூடிய சொர்க்கம், மோட்சம், முக்தி போன்றவைகளை உதறித் தள்ளி விட்டு, உலக மாந்தர்களை நல்வழிப்படுத்தத் தன் மேல்நிலையிலிருந்து கீழ்நிலைக்கு இறங்கி, மக்களுடன் மக்களாய்த் தோன்றி வருவார்கள். இவர்களுக்கு காலத்தாலும் இடத்தாலும், உருவத்தாலும் பல பெயரிட்டு நாம் அழைக்கிறோம். அவர்கள் பிறக்கவும் இல்லை, இறக்கவும் இல்லை. அவர்களுக்கு தாயுமில்லை. தந்தையும் இல்லை. குருவுமில்லை. பிரதம சீடனுமில்லை. துவாதசி சீடனுமில்லை. அவர்கள் சகோரப் பட்சியைப் போன்றவர்கள். சகோரப்பட்சி பூமிக்கு வராது. அது உண்பது உறங்குவது எல்லாம் ஆகாயத்திலே அதன் முட்டை பூமியை நோக்கி வரும் போதே குஞ்சு பொறித்துவிடும். அந்த குஞ்சும் அப்படியே மேல்நோக்கிப் பறந்து தன் நிலையை உணர்ந்துவிடும்.

நமது சென்மாந்திர வாசனை மீன்காரிகளின் நிலையைப்போல் ஆகும். மனதை உலக மாயையில் பரவ விட்டுவிட்டால் அதை பிறகு அடக்குவது அவ்வளவு எளிதல்ல. அதனால் மனதை உலக மாயையில் பரவவிடாமல் ஒடுங்கச் செய்வதே தன்னைத் தான் அறிய வழியாகும்.

மனமன மெங்குண்டு மாயையும் இங்குண்டு
மனமன மெங்கில்லை மாயையும் இங்கில்லை
மனமாயை யன்றி மற்றொன்று மில்லை
பிணையாய வேண்டாம் பிதற்றவும் வேண்டாம்
தனியாய்ந்திருப்பது தத்துவந்தானே! (பாடுதுறை)

கட்டையால்செய் தேவரும் கல்லினாசெய் தேவரும்
மட்டையால்செய் தேவரும் மஞ்சளால்செய் தேவரும்

சட்டையால்செய் தேவரும் சாணியால்செய் தேவரும்
வெட்டவெளியதன்றி மற்றவேறு தெய்வம் இல்லையே

- சிவவாக்கியர்

மரத்தினால் செய்த தெய்வமும் கற்சிலையினால் செய்த தெய்வமும் துணியில் வரைந்த தெய்வமும் சாணியால் பிடித்த தெய்வமும் மஞ்சள் தூளினால் செய்த தெய்வமும் தெய்வமில்லை. மனம் ஒடுங்கி அந்த இடம் ஒன்றுமில்லா சூன்யமாகி வெட்ட வெளியாக்க வேண்டும். வெட்ட வெளியான இடமே தெய்வம் என்று நாம் உணர வேண்டும் என்று சிவவாக்கியர் அழகாகக் குறிப்பிடுகிறார்.

புலன்களை அடக்கியவன் எவனோ அவன் அறிவே நிலையானது. அவனே ஞானி. மனம் வெளி உலகப் பற்றுதல் கொள்ளும்போது, ஆசை உண்டாகிறது. ஆசையால் கோபம் உண்டாகிறது. கோபத்தால் மயக்கம் வருகிறது. மயக்கத்தால் மனம் தடுமாறுகிறது. மனம் தடுமாறுவதால் அறிவு கெட்டுப்போய் விடுகிறது. அறிவு கெடுவதால் மனிதனை அழிவுப் பாதையில் கொண்டு செல்லுகிறது. அழிவுப் பாதையில் சென்ற மனிதன் தன்னையும் தான் சார்ந்த சமூகத்தையும் அழிவுப் பாதையில் கொண்டு போய்விடும் நிலை வந்துவிடுகிறது.

புலன் ஐந்தையும், பொறி ஐந்தையும், பூதம் ஐந்தையும் மனம்ஒன்றையும் அடக்கி ஆளும் வீரனே மெய்ஞானி. அப்படிப்பட்ட பொறி, புலன், அந்தக்கரணம், மும்மலங்கள் போன்ற உடலில் உள்ள தொண்ணூற்றாறு தத்துவங்களையும் அடக்கி, தன் வசப்படுத்தியவர் நம் பூண்டியில் திண்ணை மீது காட்சி தந்த ஆண்டவர் பூண்டி மகான்.

சுவாமிகள் கீழ்ப்புறம் திண்ணையில் அமர்ந்து தினம் வரும் ஆயிரக்கணக்கான அன்பர்கள் குறைகளை நீக்கி வந்தார். தினம் சுவாமியின் மகிமை கண்டு வெளியூர், வெளி மாநிலம், வெளி நாடுகளிலிருந்தும் வரத் தொடங்கினார்கள்.

நம்தமிழ்த் திரைப்படத்தில் முன்னணி கதாநாயகியாக நடித்துக் கொண்டிருந்த ஒருவரும், பிரபல குணசித்திர நடிகர் எஸ்.வி. சுப்பையாவும்அடிக்கடி சுவாமிகளைத் தரிசிக்க வந்து தரிசனம் செய்து அவரே தெய்வம் என்ற முடிவுக்கு வந்தவர்கள்.

ஒருநாள் அந்த நடிகை சுவாமியின்பேரில் வேண்டுதல் செய்து ஒரு வேனில் பல அண்டாக்களில் தயிர்சாதம், எலுமிச்சம் சாதம், பருப்பு சாதம் போன்ற உணவு வகைகளை சென்னையிலே தயார் செய்து எடுத்துக் கொண்டு வந்தார். சுவாமியிடம் வந்து வணங்கி ஆசீர்வாதம் பெற்றுக் கொண்டார். அன்று சுவாமியிடம் வரும் அன்பர்கள் மிகக்குறைந்து காணப்பட்டது. நடிகை சுவாமியைப் பார்த்து "என்ன சுவாமி! இன்று நான் தங்கள் பெயரால் அன்னதானம் செய்ய சுமார் 500 பேருக்கு உண்டான சாப்பாட்டுடன் வந்துள்ளேன். ஆனால் இங்கே கூட்டம் இல்லை. சாப்பாடு எல்லாம் வீணாகிவிடும் போல் தோணுதே! என்று வேண்டினார். அதற்கு சுவாமிகள்,

''பழனியிலிருந்து பருப்பு சாதத்திற்கும்
தணிகையிலிருந்து தயிர் சாதத்திற்கும்
எருமேலிக்கு போகிறவர் எலுமிச்ச சாதத்திற்கும்
வரச் சொல்லியுள்ளேன். வந்து கொண்டிருக்கிறார்கள்''

என்று கூறினார். நடிகை சுவாமிகள் தம்மைப் பரிகாசம் செய்வதாக எண்ணி மௌனமாக சுவாமியைத் தரிசனம் செய்து கொண்டிருந்தார்.

சற்று நேரம் கடந்து சபரிமலைக்குப் போகும் உல்லாச பிரயாண பேருந்து ஒன்றும், பழனியிலிருந்து உல்லாசப் பிரயாண பேருந்து ஒன்றும், திருத்தணியிலிருந்து மதுரை செல்லும் உல்லாசப் பிரயாண பேருந்து ஒன்றும் ஆக 3 பேருந்து வந்து இறங்கியது. வந்த பஸ் பயணிகள் சுவாமியை தரிசனம் செய்தனர். சுவாமி, வந்த பேருந்து பயணிகளிடம் உங்களுக்காக தயிர்சாதம், பருப்பு சாதம் காத்துக் கொண்டிருக்கிறது. போய்ச் சாப்பிடுங்கள்' என்று கூறிவிட்டார்.

நடிங்கையைப் பார்த்து 'அன்னதானத்திற்கு ஆள் கேட்டாயே வந்து விட்டார்கள். போய் முகம் கோணாமல் அன்னமிடு' என்றார்.

சென்னையை அடுத்த தாம்பரம் கிளப்பில் நான்கு பேர் சீட்டு ஆடிக் கொண்டிருந்தனர். அதில் ஒருவர் பேருந்து முதலாளி. மற்ற மூவர்களும் வியாபாரிகள். பேருந்து முதுலாளிக்கு சுவாமியார்களைக் கண்டால் பிடிக்காது. நால்வர்களில் ஒருவர் சுவாமி (பூண்டி) யின் பக்தர் ஆவார். சீட்டாட்டம் வெகு விறுவிறுப்பாக ஆடிக் கொண்டிருந்தனர். அதில் பூண்டி மகானின் பக்தர் ''என்ன இன்று நமக்கு சீட்டு கைப்பிடிக்கவில்லை பூண்டி சாமி, நல்ல சீட்டாக வரவிடு சாமி'' என்று கூறிக்கொண்டு சீட்டு ஆடினார். மற்ற மூன்று நபர்களும் 'என்ன நீ, எப்போது பார்த்தாலும், பூண்டி சாமி, பூண்டி சாமி என்கிறாய், யார் அவர்? எங்குள்ளார்? அவர் மகிமை என்ன?' என்று கேட்டார்கள்.

அதற்கு அவர் 'போளூர் பக்கம் பூண்டி என்ற சிறிய கிராமம் உள்ளது. அங்கு ஒரு சாமியார் கொஞ்ச காலம் அங்கிருக்கும் கிராமங்களில் நடமாடிக் கொண்டிருந்தார். பிறகு பூண்டியில் ஒரு ஓட்டு வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்து விட்டார்; உட்கார்ந்தவர் எழுந்திருக்கவேயில்லை. மலஜலம் எப்படிக் கழிக்கிறார் என்று கூட தெரியவில்லை. படுப்பதே கிடையாது. இரவும் பகலும் அப்படியே உட்கார்ந்துள்ளார். அவர் பெரிய சித்த மகா புருசர் போல் தோன்றுகிறது. யாரிடமும் அதிகம் பேச மாட்டார். ஒரு சிலரிடம் பேசுகிறார். அவரிடம் போனால் நமக்கு எல்லா நன்மைகளும் ஏற்படும். நான் அவரிடம் போய் வந்த பிறகு பத்து அண்டுகளாக தீராத வழக்கு தவிடுபொடியாகிவிட்டது. அன்று முதல அவர் தான் எனக்குத் தெய்வம் அவரை மனதில் நினைக்காமல் எந்த காரியமும் செய்வது கிடையாது. இந்த கலியுகத்தில் நான் அப்படிப்பட்ட மகானைக் கண்டது கிடையாது'' என்று கூறினார்.

அதற்கு சீட்டாடிக் கொண்டிருந்த பேருந்து முதலாளி 'சாமி யாருன்னு ஊரை ஏமாத்தி திண்ணுவானுங்கோ! சோம்பேறிப் பசங்க! பேசாம சீட்டு ஆடு' என்றார்.

இருவருக்கும் சுவாமியைப்பற்றி வாக்கு வாதம் மூண்டது. உன் பூண்டி சாமியார் சக்தி வாய்ந்தவர் என்றால், இன்று சீட்டாட்டத்தில் நானே எல்லா ஆட்டங்களிலும் செயிக்க வேண்டும். அப்படி செயித்து விட்டால் இன்று செயித்த பணத்தில் இப்போதே பூண்டிக்குப் போகலாம் என்று கூறி எல்லோரும் மும்மரமாக சீட்டாடினார்கள். சீட்டாட்டத்தில் பஸ் அதிபரே எல்லா ஆட்டங்களிலும் மற்ற மூவரை வென்றார். பேசியபடி நால்வரும் ஒரு காரில் பூண்டியை நோக்கி, சுவாமியிடம் வந்தனர்.

சுவாமிகள் அப்போது இரவும், பகலும் படுக்காத நேரம். (பின்னாளில் அன்பர்களின் வற்புறுத்தலுக்காக சுவாமிகள் இரவு பத்து மணிக்கு அதே திண்ணையில் படுக்க இசைந்தார். வரும் பக்தர்கள் கூட்டம் சமாளிக்க முடியாமல் சுவாமியைப் படுக்க வைத்தனர்).

தாம்பரத்தில் இருந்து வந்த நான்கு பேரும் இரவு ஒரு மணியளவில் சுவாமி அமர்ந்திருந்த திண்ணைக்கு எதிரில் வந்து நின்றனர். பூண்டி மகான் அவர்களை அமைதியாகப் பார்த்து விட்டு, தனக்குப் பணிவிடை செய்யும், பூண்டி சுப்பிரமணியக் குருக்களைப் பார்த்து எதிரில் நிற்கும் நால்வரைக் காட்டி, ''ராணி, ராஜா, கிளாவர், ஜோக்கர் என்று கூறிவிட்டு ''ஏண்டா! சுப்பிரமணி! நாமோ அந்த நாளில் சீட்டு ஆடினால் கடவுளையா சாட்சிக்குக் கூப்பிட்டோம்'' என்று கூறிவிட்டு அமைதியாக நால்வரையும் பார்த்துக் கொண்டிருந்தார்.

வந்த நான்கு அன்பர்களுக்கும் உதறல் கண்டு விட்டது. நாம் தாம்பரத்தில் சீட்டு ஆடியதைத்தான் சுவாமிகள் மறைமுகமாக சீட்டுக் கட்டில் உள்ள ராணி, ராஜா, கிளாவர், ஜோக்கர் என்கிறார் என்று உணர்ந்து, ஒவ்வொருவராக சுவாமியின் அருகில் சென்று வணங்கினார்கள்.

முதலில் பேருந்து முதலாளி சுவாமியிடம் சென்று வணங்கினார். அதற்கு சுவாமிகள் 'சாமியாருன்னு ஊரை ஏமாற்றி திண்ணுவாங்கோ! சோம்பேறிப் பசங்க'' என்று கூறினார். மேலும் பேருந்து முதலாளி பயம் வந்து விடடது. 'சுவாமி, என்னை மன்னிக்க வேண்டும். உங்கள் சக்தி அறியாது கூறிவிட்டேன்.' என்றார். அதற்கு சுவாமிகள்,

'நல்லதையே நினை; நல்லதெல்லாம் நாடிவரும்' என்று கூறினார்.

சுவாமியின்பேரில் அதிக பக்தியுள்ள அன்பர் விபூதி வாங்க வந்தார். சுவாமிகள் அந்த அன்பரைப் பார்த்து, 'ஏம்பா சீட்டு ஆட என்னைக் கூப்பிட்டு சீட்டு எடுத்து கொடுக்கச் சொல்லி கூப்பிடுகிறாயே, அது ஞாயமாப்பா! என்று கூறிவிட்டு 'என்னை ஏம்பா கத்திரிக்காயைக் கூவி விற்பதுபோல் கூவி காட்டிக் கொடுக்கிறாய். உனக்குக் கிடைத்ததை நல்லவிதமாக நல்லதை அடைய வழியைப் பாருப்பா!' என்றார்.

சுவாமிகள் முக்காலத்தையும் உணர்ந்தவர். அவர் ஞானப் பெருங்கடல். உட்கார்ந்த இடத்தை விட்டு எழுந்திருக்காமல், எங்கோ நடக்கும் சம்பவங்களைத்தன் ஞானதிருட்டியால உணரக் கூடியவர். அட்டமா சித்துக்கள் அனைத்தையும் பெற்றவர். உலக மாந்தர்கள் நன்மை அடைய வேண்டும் என்று வந்த சித்தமகா புருசர் நம் பூண்டி மகான்.

திருவண்ணாமலை தாலுக்கா அவலூர்பேட்டை சமீபம் உள்ள கிராமத்தில் இருந்து மூன்று நண்பர்கள் சுவாமியைத் தரிசனம் செய்ய பூண்டி கிராமம் வந்தனர்.

மூவரும் ஒரு மூன்று சிகரெட்டில் கஞ்சாவை நிரப்பி, சுவாமியின் வாயில் வைத்து சிகரெட்டைப் பற்ற வைத்தனர். சுவாமிகள் அமைதியாக அந்த மூன்று கஞ்சா நிரம்பியுள்ள சிகரெட்டை ஒரே இழுப்பில் இழுத்து முடித்து விட்டார். வந்த நண்பர்கள் மூவரும் பூண்டி ஆற்றில் அமர்ந்து விடடனர்.

மூவரும் ஒருவரைப் பார்த்து ஒருவர் 'டேய், மூன்று சிகரெட் கஞ்சாவையும் ஊதிவிட்டு மனிதன் குத்துக் கல்லாட்டம் ஒன்றுமே நடக்காததுபோல உட்கார்ந்து இருக்கிறார்! இவரை என்ன வென்று நினைப்பது' என்று பேசிக் கொண்டிருந்தனர்.

அதில் ஒருவர் 'இன்னும் ஒரு சிகரெட்டில் கஞ்சாவை அடைத்து கொடுப்போம் வாருங்கள்' என்று கூறி மூவரும் சுவாமியிடம் வந்து நின்றனர்.

சுவாமி திண்ணையில் இருந்தபடி அந்த நண்பர்கள் மூவரையும் பார்த்து 'டேய், மூன்று சிகரெட்டையும் ஊதிவிட்டு மனிதன் குத்துக் கல்லாட்டம் ஒன்றுமே நடக்காததுபோல் உட்கார்ந்து இருக்கிறார்ப்பா! என்று கூறிவிட்டு 'இது சாதாரண சாமிப்பா!' என்று கூறி விபூதி கொடுத்து அனுப்பிவிட்டார்.

மூன்று நண்பர்களும், ஒன்றுமே புரியாமல் நின்று விட்டனர். நாம் ஆற்றில் பேசியதை சுவாமி திண்ணையிலிருந்தபடி அப்படியே திருப்பிக் கூறுகிறார் என்றால் இவர் சாதாரண சுவாமியல்ல, பெரிய மகானாக இருக்கும் என்று பேசிக் கொண்டனர்.

சுவாமியார் என்றால் கஞ்சா பிடிப்பவர்கள், பீடி, சிகரெட் பிடிப்பவர்கள் என்று சில அன்பர்கள் தவறாக நினைத்து இப்படிச் செய்து விடுகின்றனர்.

ஞானிகள், புற உலக சிந்தனையோ புற உலக நடப்புகளைப் பற்றியோ கவலைப்படுவது கிடையாது. அவர்கள் அக உலகில் உலகத்தில் உள்ள அனைத்தையும் கண்டு இதை தன் வயப்படுத்தியவர்கள். அதன்கண் உள்ளவர்கள். அப்படிப்பட்ட சமாதி நிலையில் இருக்கும்போது, புற உலகில் நம்மால் கொடுக்கப்படும் பொருள்களை வாங்கி, சாப்பிட்டுவிடும் தன்மை உள்ளவர்கள். அவர்கள் அதன் மணம், சுவை, காரம், உப்பு, சப்பு அற்ற தன்மை ஏதும் அறிய மாட்டார்கள். வெளி உலக செயல்பாடுகளைப் பற்றிக் கவலைப்படாமல் அக உலகின்கண் சமாதியில் இருப்பார்கள்.

பரணீதரன் பேட்டி

எத்தனையோ தினசரி பத்திரிகையின் நிருபர்களும், வாரப் பத்திரிகை நிருபர்களும், கல்லூரிப் பேராசிரியர்களும் , ஆன்மீக நண்பர்களும் சுவாமியிடம் வந்து உங்களைப் பற்றிய விபரம் அறிய மக்கள் ஆவலாய் உள்ளார்கள். அதனால் தாங்கள் யார், தங்கள் ஊர் எது தாங்கள் தாய், தந்தையர்கள் விபரம் கூறினால் நாங்கள் எங்கள் தினசரியில் எழுத உள்ளோம் என்று கேட்பார்கள். புத்தகம் வெளியிட உள்ளோம்

என்பார்கள். சுவாமிகள் அதற்கு எந்தவித பதிலும் கூறமாட்டார். மௌனமாக இருந்து விடுவார்.

ஆனால் 'ஆனந்த விகடன்' துணையாசிரியராய் இருந்தவரும் 'மெரினா' என்ற புனைப் பெயரில் பல சிறு கதைகள், பல நாடகங்கள் எழுதியவரும், ஸ்ரீதர் என்ற பெயருடையவரும் எங்கள் ஆன்மீக நண்பருமான திரு. பரணீதரன் தனது புனிதப் பயணக் கட்டுரையால் பல நாத்திகர்களை ஆஸ்திகர்களாக மாற்றிய ஆன்மீக வள்ளல் திரு. பரணீதரன். அவர்கள் சுவாமியிடம் கேட்டபோது மட்டும் சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளி கூறியதையும், பரணீதரன் அவர்கள் பூண்டியில் ஏற்பட்ட அனுபவங்களையும் 'ஆனந்த விகடன்' வார இதழில் எழுதியதை நன்றியுடன் அவர் மொழி நடையிலேயே கீழ்க்கண்டபடி வெளியீடு செய்ததற்கு திரு. பரணீதரன் அவர்களுக்கும் பிரபல 'ஆனந்த விகடன்' பத்திரிகைக்கும் நன்றி பல.

அது ஒரு சிறு ஓட்டுவீடு. வலப்புறத்தில் நாலடிக்கு நாலடி ஒரு திண்ணை. இடப் புறத்தில் ஒன்றரையடிக்கு நாலடி ஒரு குட்டித் திண்ணை. அதில்தான் பூண்டிச் சாமியார் உட்கார்ந்திருந்தார். ஒரு பக்கமாகத் தலையைச் சாய்த்து மின்னல் வெட்டுவதுபோல் "பட் பட்" என்று எதிரில் நின்றிருந்தவர்களை அவ்வப்போது பார்த்தார். வலக்கையில் இரண்டு நெருப்புப் பெட்டிகள் இருந்தன. இடக்கையால் சிறு தாடியை உருவி விட்டுக் கொண்டிருந்தார். அதிலிருக்கும் பேனையோ, அழுக்கையோ எடுத்துப் பார்ப்பதுபோல் அவ்வப்போது விரல்களை உன்னிப்பாகக் கவனித்துவிட்டு மீண்டும் தாடியை நீவி விட்டுக் கொள்ள ஆரம்பித்தார்.

ஓர் இளைஞர் வந்தார். சாமியாருக்கு வெகு அருகில் சென்று மெள்ள ஏதோ சொன்னார். அவர் 'ம்....' என்று உத்தரவளித்தார். இளைஞர் ஒரு சிகரெட்டைக் கையில் எடுத்து, சாமியாரின் வாயில் வைத்து, தீக்குச்சியைக் கிழித்துப் பற்ற வைத்தார். சாமியார் தம் கையை நீட்டி, நெருப்புப் பெட்டியை வாங்கிக் கொண்டார். இப்போது, அவர் கையில் மொத்தம் மூன்று வத்திப் பெட்டிகள் அடக்கமாகிவிட்டன. இடக் கையால் சிகரெட்டைக் குடித்தார். ஆனால், சாதாரணமாகப் பிறர் புகைப்பதற்கும், சாமியார் புகைப்பதற்கும் நிறைய வித்தியாசம் இருந்தது. ஒரு முறை இழுக்கிறார். எடுக்கிறார் 'குப் குப்' பென்று புகை விடுகிறார். உடனேயே சிகரெட் உதட்டுக்குப் போகிறது. இழுக்கிறார். எடுக்கிறார். மீண்டும் இழுத்துப் புகை விடுகிறார். ஆனால், புகை அதிகமாக வெளிப்படுவதில்லை. அவர் அதை உள்ளே இழுத்து விழுங்குவதாகவும் தெரியவில்லை. இரண்டே நிமிஷத்தில் முழுச் சிகரெட்டையும் ஊதித் தள்ளி விடுகிறார்.

இரண்டு பேர் தரையில் விழுந்து கும்பிட்டு விட்டு, அவரது கால்களை தொட்டுக் கண்ணில் ஒற்றிக் கொண்டு கை நீட்டி, பயபக்தியுடன் திருநீறு கேட்கிறார்கள்.

"எடுத்துக்க" என்கிறார் சாமியார். அவர்கள் எடுத்துப் பூசிக்கொண்டு "போய் வரேன் சாமி" என்கிறார்கள்.

ஒரு பையன் வந்தான். கையிலிருந்த கலர் சோடாவை உடைத்துச் சாமியாரிடம் கொடுத்தான். அதைப் பெற்றுக் கொண்டு, உதட்டிலிருந்து எடுக்காமல் ஒரே வாயில் குடித்து விட்டுப் புட்டியைக் கொடுத்தார். பிறகு ஒரு பெரும் ஏப்பம் விட்டார். பையன் ஒரு துணியை எடுத்து சாமியாரின் வாயையும் மூக்கையும் துடைத்து விட்டான். அவர் ஒரு சாதுவான குழந்தையைப் போல அசையாமல் முகத்தைக் காட்டினார். ''போய் வரேன் சாமி'' என்று பையன் சொன்னதும், திருநீறு எடுத்து அவன் நெற்றியில் இட்டு அனுப்பினார்.

சாமியாரையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தேன் நான். சட்டென்று அவருடைய பார்வை என் மீது விழுந்தது. இல்லை, ஒரு குளுமையான மின்னல் என்னைத் தாக்கியது. சீரடி பாபாவின் 'யோகப் பார்வை'யைப் பற்றிப் படித்தபோது, அதன் பொருளை என்னால் முழுமையாக உணர முடியவில்லை. பூண்டி சாமியாரின் பார்வையின் மகிமையை உணர்ந்ததும் சாயிபாபாவின் அருள் நோக்கு இப்படித்தான் இருந்திருக்குமோ என்று எனக்குள் எண்ணிக் கொண்டேன் நான்.

அத்தனை நேரம் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த என்னையும் அறியாமல் சட்டென்று கீழே விழுந்து வணங்கி விட்டு எழுந்து நின்றேன். ஓர் அம்மாள் வந்தாள். காகிதத்தைப் பிரித்து ஒரு மிட்டாய் எடுத்துச் சாமியாரின் வாயில் போட்டாள். அவர் கையை நீட்டி அந்தக் காகிதத்தையும் வாங்கிக் கொண்டு விட்டார். சாமியாருக்கு ஏதாவது வாங்கிக் கொடுக்க வேண்டும் என்று எனக்குத் தோன்றவே, நண்பரிடம் அருகிலிருக்கும் டீக்கடையி லிருந்து ஒரு கப் காப்பி வாங்கி வரச் சொன்னேன்.

சாமியார் விருப்பப்பட்டால்தான் நம்மிடமிருந்து வாங்கிச் சாப்பிடுவார் என்றும், அப்படி வாங்கிச் சாப்பிட்டால் அவருடைய ஆசி நமக்கு இருக்கிறது என்று அர்த்தம் என்றும் பக்கத்தில் நின்றிருந்த உள்ளூர்வாசி என் காதில் இரகசியமாகக் கூறவே, சற்றுத் தயக்கத்துடனேயே காப்பியை அவரிடம் நீட்டி, ''காப்பி சாப்பிடுங்க சாமி'' என்றேன்.

என்னை ஒரு முறை நன்றாகப் பார்த்துவிட்டு, காப்பியைக் கையில் வாங்கிக் கொண்டார் சாமியார். அப்போது அவரது விரல்களைப் பார்த்தேன். நீண்ட, பருத்த விரல்கள். நீளமான வலுவுள்ள கைகள். அவர் எழுந்து நின்றால் ஆசானுபாகுவாக இருப்பார்; சந்தேகமில்லை.

தம்ளரை உதட்டிலிருந்து எடுக்காமலும், தலையை நிமிர்த்தாமலும் நாக்கினால் சிறுகச் சிறுக உறிஞ்சியே காப்பி பூராவையும் குடித்து விட்டார். எனக்குப் பரம திருப்தியாக இருந்தது. அடுத்து, வேறோர் அன்பர் ஒரு தேநீர் வாங்கிக் கொடுத்தார். அதையும் காப்பியைப் போலவே ஒரே மூச்சில் உறிஞ்சிக் குடித்தார். அவர் செய்கைகள் எல்லாமே வினோதமாக, சாதாரணமாக இருந்தன.

சாமியாரைச் சுற்றிலும் பழங்களும், தின்பண்டங்களும் ஏராளமாகக் கிடந்தன. ஆரஞ்சு, திராட்சை, வாழைப்பழம், லட்டு, பூந்தி, அல்வா, சாக்லெட், மிட்டாய், பிஸ்கட்... மடியின் மீது சிகரெட் பாக்கெட். இரண்டு

சாக்லெட் காகிதங்கள். ரூபாய் நோட்டு ஒன்று. ஆறிப்போன காப்பியுடன் எதிரில் இரண்டு கண்ணாடித் தம்ளர்கள்—சுற்றிலும் சுவாமி படங்கள். பின்னால் மாடத்தில் ஒரு சிறு பிள்ளையார் பொம்மை. ஒரு பெரிய வேல், அவருக்கு நேரே தூணில் ஆறுமுகனின் படம். அதை அடிக்கடி பார்த்துக் கொள்கிறார். இரண்டு திண்ணைகளுக்கும் இடையே ஓர் அறை. அதில் சாமியாருக்கு அளிக்கப்படும் பொருள்கள் மலையாகக் குவிந்திருக்கின்றன. சிகரெட் பாக்கெட்டுகள். தீப்பெட்டிகள், பூமாலைகள், பழங்கள், இலைகள், காகிதங்கள் இன்னும் ஆயிரத்தெட்டு பொருட்கள் அங்கே காணப்படுகின்றன. தமக்காக அளிக்கப்படும் பண்டங்களை அந்த அறையில் தூக்கிப்போட்டு விடும்படி கூறிவிடுகிறாராம். அந்தத் திண்ணையிலிருந்து ஒரு துரும்பையும் அவர் அனுமதியின்றி ஒருவரும் தொட்டுவிட முடியாது.

குப்பையும் கூளமும் நிறைந்த அந்த அறையில் ஓர் அதிசயத்தைக் கண்டேன். அங்கு போடப்பட்டிருந்த பழங்கள் அழுகி, உலர்ந்து சுருங்கிப் போய் இருக்கவில்லை. துர்நாற்றமே அங்கு சிறிதும் இல்லை. ஏன், ஓர் ஈ, கொசுவைக் கூடக் காண முடியவில்லை.

அந்த வீட்டுக்கு எதிரிலுள்ள கொட்டகைக்கு அருகில் நின்றிருந்த சுப்பிரமணி என்ற நபரை எனக்கு அறிமுகம் செய்து வைத்தார்கள். அவர் ஒரு தையல் தொழிலாளி. மூன்று நான்கு வருடங்களாக சாமியாருக்குப் பணிவிடைகள் செய்து வருகிறாராம். அதற்கு முன், சாமியார் பெரிய திண்ணையில் அமர்ந்திருந்தபோது, அவர் யாரையும் தம்மிடம் அண்ட விடவில்லையாம். இரண்டு மூன்று வருடங்களாகத்தான் திண்ணையைச் சுத்தம் செய்யவும், உடலைத் துடைத்து விடவும் அனுமதிக்கிறாராம். சுப்பிரமணி, சாமியாருக்குக் காலையிலும், பகலிலும் சிறிது ஆகாரம் கொண்டு வந்து தருகிறார். சாமியார் பசிக்கிறது என்று இதுவரை யாரையும் ஒன்றும் கேட்டதில்லை என்றும், வாயில் ஊட்டினால்தான் சாப்பிடுவார் என்றும், விருப்பமில்லா விட்டால் அதையும் நிராகரித்து விடுவார் என்றும் சுப்பிரமணி கூறினார். இரவு எட்டு மணிக்குக் காலை நீட்டி, சாமியாரைப் படுக்க வைத்து விட்டு, தானும் கீழே படுத்து விடுவாராம். சாமியார் காலையில் நான்கு மணிக்கெல்லாம் எழுந்து பழையபடி உட்கார்ந்து விடுவாராம்.

''அவர் யாருடனும் பேசுவதில்லையா?'' என்று கேட்டேன் நான்.

''நல்லாப் பேசுவாருங்க; ஆனா, விருப்பம் இருந்தாத்தான் பேசுவாரு. சில சமயம் நான் கேட்பதற்கு நேரடியாகப் பதில் சொல்லுவார். சில சமயம் மறைமுகமாகப் பேசுவார். அதை நாம்தான் சிரமப்பட்டுப் புரிஞ்சுக்கணும்.''

''அவருக்குச் சொந்த ஊர் எது, அவர் பேரு என்ன என்பதைப் பற்றியெல்லாம் நீங்க அவர்கிட்டே எப்போதாவது கேட்டிருக்கீங்களா?''

''எத்தனையோ தரம் கேட்டிருக்கேன். அதை மட்டும் சொல்ல மாட்டாரு...'அதெல்லாம் தேவ இரகசியம். உனக்கேண்டா'ன்னு சொல்லி மடக்கிடுவாரு.''

''இவர் ஒரு சித்தர்னு நம்பற மாதிரி இங்கே ஏதாவது அதிசயம் நடத்திருக்கா?'' என்று நான் சுப்பிரமணியிடம் கேட்டேன்.

அவர் எதையோ சொல்லத் தொடங்கினார். சட்டென்று நிறுத்திக் கொண்டு விட்டார்.

''சும்மா சொல்லுங்க''என்று அவரை நான் உற்சாகப்படுத்தினேன்.

''தினம் எத்தனையோ விசயம் நடக்குது...அதையெல்லாம் நான் சொல்லலாமோ கூடாதோ...சாமியார் விசயத்திலே ரொம்ப சாக்கிரதையா இருக்கணுங்க..அவர் சாதாரண சாமியார் இல்லீங்க அவங்க அவங்களே அனுபவப் பட்டாத்தான் அவர் பெருமை புரியும்.. ஒரு விஷயம் கேளுங்களேன்.இதோ, இந்த டீக்கடைக்காரர்தான் தினமும் காலையிலே சாமிக்கு தேநீர் கொடுப்பாரு. ஒரு நாள் குரல் கொடுக்காமலேயே தினரர் துணியை விலக்கிக்கிட்டு உள்ளே போயிட்டாரு... அவ்வளவுதான். திண்ணை மேலே சாமியார் இல்லையாம். அவ்ருக்குப் பதிலா அங்கே ஒரு பெரிய மலைப் பாம்பு படுத்துக்கிட்டிருந்ததாம். தேநீர்க்கடைக்காரர் அலறிப் புடைச்சுக்கிட்டு வெளியே ஓடியாந்துட்டாரு. அப்புறம் நாங்களெல்லாம் எழுந்து ''என்னா..ஏது?' அப்படீன்னு விசாரிச்சோம்....அவருக்குப் பேச முடியலே. நல்லாப் பயந்து கிட்டாரு. அன்னி பூராவும் பேய் அறைஞ்ச மாதிரியே இருந்தாரு...அப்புறம் சாமியார்கிட்டே விசயத்தைச் சொல்லித் திருநீறு வாங்கிப் பூசிக்கிட்ட பிறகுதான் பயம் தெளிஞ்சுது'' என்று சுப்பிர்மணி கூறிக் கொண்டிருக்கும்போதே எனக்கு முதுகெலும்பில் பாம்பு நெளிவது போல் சில்லிட்டது. நேரே சாமியாரிடம் போய் அவர் காலைத் தொட்டுக் கும்பிட்டுவிட்டு, விபூதியை எடுத்துப் பூசிக்கொண்டு அவரிடம் உத்தரவு பெற்றுக் கொண்டு கிளம்பினேன். இன்னொரு முறை பூண்டிக்கு வந்து சாமியாருடன் இரண்டு வார்த்தைகளாவது பேச வேண்டும் என்ற எண்ணத்துடனேயே கீழ்மின்னலை நோக்கிப் பயண மானேன்.

அருணாசலத்தின் அருள்பெற்ற சீவன் முக்தர்களும், பிரும்ம ஞானிகளும், சித்த புருசர்களும் எப்படி வாழ்ந்தார்கள் என்பதை நாம் படித்தோ, கேட்டோதான் தெரிந்து கொள்ள வேண்டும். நம் கண்ணுக்குப் புலப்படாதவர்களைக் கற்பனையில் கண்டுதான் புண்ணியம் பெற வேண்டும். அப்படியிருக்க, 'மறைந்த மகான்கள் இப்படித்தான் இருந்திருப்பார்களோ?' என்று ஓரளவு தெரிந்து கொள்ள எனக்கு ஒரு வாய்ப்புக்கிட்டியதைப் பெரும் பாக்கியமாகக் கருதுகிறேன். பூண்டி கிராமத்தில் ஒரு வீட்டுத் திண்ணையில் அமர்ந்திருக்கும் சாமியாரை எதிர்பாராமல் தரிசனம் செய்ய நேர்ந்ததும் குருநாதனின் சங்கல்ப கருணை என்றே எனக்குத் தோன்றுகிறது.

முதல் முறையாக பூண்டி சாமியாரைத் தரிசித்துவிட்டு, நான் பெற்ற அனுபவங்களை உணர்ச்சி பொங்க ஸ்ரீ காமகோடி சுவாமிகளிடம் கூறியபோது, பெரியவர்கள் அதிசயமோ ஆச்சரியமோ அடையாமல் அப்படியொரு சாமியார் இருப்பதை தாம் முன்பே அறிந்திருப்பதுபோல் அத்தனை சாதாரணமாக அச்செய்தியைக் கேட்டுக் கொண்டார்கள்.

பின்னர் மூன்று, நான்கு முறை நான் பூண்டிக்குச் சென்று அந்தச் சாமியாரைத் தரிசனம் செய்தேன். ஒவ்வொரு முறை சென்றபோதும் அவரிடம் எனக்கு ஏற்பட்ட மரியாதையும் பக்தியும் அதிகமாயின. அங்கு போனால் அந்த சந்நிதியை விட்டு வரவே மனம் இடம் கொடுப்பதில்லை. திரும்பி வந்த பிறகு, மீண்டும் எப்போது செல்லலாம் என்ற எண்ணமே மேலோங்கி நிற்கிறது.

முதல் நாளன்று நான் அவருடன் பேச முடியவில்லை. அவருடைய ஆழ்ந்த மௌனமும். அருள் பார்வையும் ஒரு நிம்மதியையும் மனத்தெம்பையும் அளித்தன. 'அவருக்கு எல்லாமே தெரியும்' என்ற ஒரு நம்பிக்கை எனக்கு ஏற்பட்டது.

அடுத்த முறை சென்றபோது அவரிடம் ஏதாவது பேச வேண்டும் என்று தோன்றவே. "சாமி, நான் போன வாரம் வந்திருந்தேன். மறுபடியும் உங்களைப் பார்க்கணும்னு தோணிச்சு, வந்தேன்" என்றேன். ஏதோ சொல்ல வேண்டும் என்று தோன்றியதால் சொன்னேன். அவர் பதில் கூறுவார் என்று நான் எதிர்பார்க்கவேயில்லை.

திடீரென்று அவர் பேசினார்:

"நாகரத்தினம் பிள்ளை கூட அப்படித்தான் சொல்றாரு... 'நீங்க நினைச்சுக்கிட்டா நான் வந்துடணுங்கிறாரு. அதான் ஐயா, ஆற்காடு நாகரத்தினம் பிள்ளை.... வேலூர் ஆற்காடு...."

எனக்குச் சற்று நம்பிக்கை வந்தது. கூடவே தைரியமும் வந்தது....

"சாமி பேர் என்னா? எந்த ஊர்....?" என்று கேட்டேன்.

"அரிசி ஆலை கோவிந்தராச முதலியாருக்கு நான் என்னா செஞ்சேன்? அவருதான் எனக்கு என்னா செஞ்சாரு? அதெல்லாம் அந்தக்காலம் ஐயா. நல்லது, கெட்டது. ஒழுங்கு கட்டுப்பாடு.... போக்குவரத்து, நீதி, நேர்மை.... என்னாய்யா நான் சொல்றது? ரோடு போட்டானுங்க.... பேருந்து ஓடிச்சு, கரண்ட் வந்தது.... போஸ்ட் நட்டுகினே போனான்... கோனேரிகுப்பம், பில்லூரு, மேல் வைத்தியநாத குப்பம்... வெள்ளிக்கிழமை சந்தை..... கும்பல் இருக்காதா, வரவங்க போறவங்க பிள்ளை குட்டிங்க், அதெல்லாம் ஆட்டோமாடிக்கா நடக்க வேண்டியதுதானே.... என்னாய்யா, நான் சொல்றது...? அண்ணாமங்கலம் ஆதிமூலம், ஏர்ணாமங்கலம் சிவராமன்.... டோல் கேட் போட்டான்.... அதுக்கு துட்டு வாங்கி இரசீது கொடுத்தான். ஆனா, அது ராத்திரி வரைக்கும்தான் செல்லும்.... மறுநாள் வேறே இரசீது வாங்கிக்கிணும், தெரியுமா?" இப்படி அவர் பேசிக்கொண்டே போனார். எனக்கு ஒன்றுமே புரியவில்லை இவர் எத்தனை வருடத்துக்கு முந்திய விசயங்களைச் சொல்கிறார் என்று தெரிந்து கொள்ள, "அப்போதெல்லாம் வெள்ளைக்காரன் இருந்தானா?" என்று நான் கேட்டேன்.

"சப்பான்காரன் கூட இருந்தான்" என்று அவர் பதில் சொன்னார்.

"சாமி பேரு என்னா? சாமிக்கு எந்த ஊர்?" என்று சந்தடி சாக்கில் மறுப்படியும் கேட்டு வைத்தேன்.

''அதெல்லாம் சொல்லமுடியாது போய்யா'' 'பட்'டென்று முகத்தில் அடித்தாற்போல் கூறிவிட்டார் அவர்.

அவர் பேசுகிற விசயங்களையும், பயன்படுத்தும் சொற்களையும் கேட்டால், கிராமியச் சூழ்நிலையில் பலகாலம் அவர் பழகியவர்போல் தோன்றுகிறது. பெரும்பாலும் விவசாயம் சம்பந்தமான பிரச்னைகளைப்பற்றியே பேசுகிறார். அவருடைய பேச்சின் பொருள் நமக்குப் புரிவதில்லை அந்த மகான் நடந்ததைப் பற்றிப் பேசுகிறாரா, நடந்து கொண்டிருப்பதைப் பற்றிப் பேசுகிறாரா, நடக்கப் போவதைப் பற்றிப் பேசுகிறாரா என்பதைப் புரிந்து கொள்ளும் பக்குவம் நமக்கேது?

பூண்டி சாமியார் நாம் கேட்பதற்கெல்லாம் பதில் கூறி விடுவதில்லை. சில கேள்விகளுக்கு நேரிடையாகப் பதில் கூறுகிறார். சில கேள்விகளுக்கு மறைமுகமாகப் பதில் கூறுகிறார். சிலருடன் மட்டுமே பேசுகிறார். பெரும்பாலும் மௌனமாகவே அமர்ந்திருக்கிறார். பழக்கப்பட்டவராக இருந்தாலும் எல்லோரையும் ஒரே மாதிரியாகத்தான் பார்க்கிறார். அவர் முகபாவத்தில் எவ்வித மாறுதலும் இல்லை.

அக்கம்பக்கத்திலிருக்கும் கிராம மக்கள் அவரைத் தரிசிப்பதற்காக வந்துகொண்டே இருக்கிறார்கள். சிலர் தரையில் விழுந்து கும்பிட்டு விட்டு, திருநீற்றைப் பெற்றுக் கொண்டு போய் விடுகிறார்கள். ''போய்வரேன்சாமி'' என்றால், ''நல்லது, போய் வா'' என்று கூறுகிறார். சில சமயம் தலையை மட்டும் ஆட்டுகிறார். சில சமயம் சடமாக உட்கார்ந்திருக்கிறார்.

அவரிடம் வரும் சிலர் தங்கள் சொந்தப் பிரச்னைகளை அந்தரங்கமாகக் கூறுகிறார்கள். அதைக் கருணையோடு காது கொடுத்துக் கேட்கிறார். அவரவர்களுக்குத் தேவையான உபதேச மொழிகளைக் கூறுகிறார். நாட்டுப் பழமொழிகளையும், கிராமத்து மக்களுக்குத் தெரிந்த எளிய உதாரணங்களையும் கூறிப் புரிய வைக்கிறார். சிந்திக்கச் சிந்திக்க, மகத்தான தத்துவங்களும் வாழ்க்கை நெறிகளும் அவற்றில் புதைந்து கிடப்பதை நம்மால் உணரமுடிகிறது.

ஒரு வயதான அம்மாள், தன் மகன் தீய பழக்க வழக்கங்களுக்கு அடிமையாகி வீண் செலவு செய்கிறான் என்று மனம் குமுறி சாமியாரிடம் முறையிட்டுக் கொண்டாள். அந்த அம்மாளின் நிலை கண்டு அவர் மனம் இரங்கியதை அவர் கூறிய ஆறுதல் மொழிகளில் காண முடிந்தது.

''என்னாம்மா செய்யறது? கலிகாலம். பன்னண்டணா செலவு செய்தா. நாலணா மிச்சம் பிடிக்கணும். நமக்குப் பிறர் சொத்து வேணாம், உடமை வேணாம். கால் வயத்து கஞ்சிக்கு இருந்தா போதும்.. என்னாம்மா நான் சொல்றது? பெத்த மனம் பித்து, பிள்ளை மனம் கல்லுங்கிற மாதிரி நீ கட்டப்படறே.... என்னா செய்யறது? இது கலிகாலம்... ஒருத்தரும் 'ஐயோ'ன்னு நினைக்க மாட்டாங்கம்மா. கால்லே முள்ளு குத்தினா பக்கத்திலே இருக்கிறவன் எடுக்க மாட்டான். அப்படிப்பட்ட காலம்மா இது! ஒழுங்கா இருந்து கொஞ்சம் துட்டு மிச்சம் பிடிச்சாதானே பொழைக்க முடியும்.... சிறு துளி பெரு வெள்ளம்.... அருளிலார்க்கு அவ்வுலகம்

இல்லே. பொருளிலார்க்கு இவ்வுலகம் இல்லை....? அந்த அம்மாள் குறுக்கிட்டு ஏதோ முணுமுணுக்கிறாள்.

சாமியார் தொடருகிறார்: "ஆமா... பட்ட கால்லே படும். கெட்ட குடியே கெடும்னு சும்மாவா சொன்னாங்க... கெட்ட சகவாசம்... என்ன செய்யறது.... கலிகாலம்மா இது.... கீரையை விதைச்சா பயமில்லை. பக்கத்துலேயே முருங்கை மரத்தை வெச்சா, அதுக்கு வேலி போட்டுத்தான் ஆவணும். இல்லேன்னா காயைத் திருடிக்கிட்டுப் போயிடுவாங்க.... அப்படிப்பட்ட காலம்மா இது....".

வேறொரு பக்தர் வந்தார். நண்பர் ஒருவருடன் கூட்டுச் சேர்ந்து ஏதோ வியாபாரம் செய்யப் போவதாகவும், அதற்கு சாமியாரின் ஆசி வேண்டும் என்றும் கோரினார் அவர்.

"ஒரே தாய் வயத்திலே பொறந்த பிள்ளைங்களே ஒழுங்கா ஒத்துமையா இருக்க மாட்டேங்கிறாங்க.... சண்டை போட்டுக்கிறாங்க.... நீ பார்த்து செய்" என்று அவருக்கு அறிவுரை கூறினார். அவர்களுக்குள் சண்டை வரும் என்று எச்சரித்தாரோ என்னவோ!

ஒரு நாள் எதையோ பற்றிப் பேசிக்கொண்டு வந்த சாமியார் திடீரென்று, "உலகத்திலே தர்மம் போயிடுச்சு. அதனாலே ஒற்றுமை போயிடுச்சு" என்று கூறினார். கேட்கும்போது அது சாதாரணப் பேச்சாகத்தான் இருந்தது. ஆனால், அதைப் பற்றி அடிக்கடி சிந்தித்துப் பார்த்தபோது அது ஒரு வேதவாக்கு என்பது புரிந்தது. எத்தனை மகத்தான ஒரு சத்தியத்தை எத்தனை சாதாரணமாக, எத்தனை எளிதாக அவர் சொல்லி விட்டார் என்று அதிசயித்தேன்.

ஸ்ரீ சேசாத்ரி சுவாமிகளைப் பற்றியும், இரமண பகவானைப் பற்றியும் எழுதப் போவதாகக் கூறி, "சாமி அந்த மகான்களைப் பார்த்திருக்கா?" என்று கேட்டேன்.

"அவங்களைப் பற்றித் தெரியணும்னா தபோவனம் போய்யா" என்று கூறினார் அவர். சாமியார் எந்த இடத்தைக் குறிப்பிடுகிறார் என்பது அந்தக்கணம் எனக்குப் புரியவில்லை. அவர் திருக்கோயிலூர் தபோவனத்திலுள்ள ஞானானந்தகிரி சுவாமிகளைக் குறிப்பிட்டிருக்க வேண்டும் என்பது இரண்டு நாட்களுக்குப் பிறகுதான் புலனாயிற்று. தபோவனம் சுவாமிகளை நான் ஆறு மாதங்களுக்குமுன் முதன் முறையாகத் தரிசிக்கும் பாக்கியம் பெற்றேன். பூண்டி சாமியார் மீண்டும் அவரிடம் என்னைப் போகச் சொல்கிறார்.

ஒரு நாள் பூண்டி சாமியாரிடம், "ஸ்ரீ காமகோடி சங்கரா சாரியாரைத் தெரியுமா?" என்று கேட்டேன்.

"கரண்ட், மோட்டார், பம்ப்செட் எல்லாத்துக்கும் சங்கராச் சாரி தான் கண்ட்ரோல், தெரியுமா?" என்று பதிலுக்கு என்னிடம் கேட்டார் அவர். அந்த சமயத்தில் சாமியார் என்னவோ பேசுகிறார் என்றுதான் நினைத்தேன். ஆனால், அந்த வார்த்தைகளைப் பற்றி நினைக்க நினைக்க எனக்குச் சாமியாரின் பரிபாசை தெளிவாகப் புரிய ஆரம்பித்தது.

அறுபது வருடங்களுக்கு மேலாக தெய்வ பக்தி வளரவும், ஆத்திகம் தழைக்கவும், ஆன்மீகம் சிறக்கவும் ஸ்ரீ காஞ்சிப் பெரியவர்கள்தான் மூலகாரணமாக இருந்து வருகிறார் என்பது மறுக்கமுடியாத உண்மை. தமது தவ வலிமையால் பாரத மெங்கும் ஆன்மீக மின்சாரத்தைப் பாய்ச்சி வருகிறார் சுவாமிகள். மறைந்துவரும் நமது வேதநெறியையும், புதைந்து கிடக்கும் புராதன கலைச் சிறப்புக்களையும் தமது ஆன்மீகச் சக்தியால் மீண்டும் வெளிக்கொண்டு வருகிறார் அதனால் தார்மிக வெள்ளம் பாரதமெங்கும் பாய்ந்து, பாரெங்கும் சாந்திப் பயிர் தழைக்கச் செய்கிறார். இந்த உண்மையைத்தான் பூண்டி சாமியார் தமக்கே உரிய உதாரணத்தால் விளக்கியுள்ளார் என்று எனக்குத் தோன்றியது. சாமியார் கூறியதைப் பின்னர ஒரு சமயம் நான் காஞ்சிப் பெரியவர்களிடம் கூறியபோது சுவாமிகள் புன்முறுவல் பூத்தார்.

'அருணாசல மகிமை' முதல் கட்டுரை வெளியானதும் விகடன் இதழை எடுத்துச்சென்று பூண்டி சாமியாரின் மலரடிகளில் வைத்து ஆசி கோரினேன். "அருணாசல மகிமை'யைப் பற்றி எழுதறேன். அது நல்லபடியா முடிய உங்க அனுக்ரகம் இருக்கணும் சாமி" என்றேன்.

"என்னாய்யா அருணாசல மகிமை? பன்னண்டனா, பதினாலணா கொடுத்தா அருணாசல புராணம் கிடைக்கும். வாங்கிப் படிச்சா போச்சு" எனறார்.

"அதைப் படிச்சுக்கிட்டுத்தான் வரேன் சாமி" என்றேன் நான்.

"ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது ஐயா" என்றார் சாமியார்.

"புத்தகமும் படிக்கிறேன். எல்லா இடத்துக்கும் நேரிலே போயும் பார்க்கிறேன். படித்தது, பார்த்தது எல்லாம் எனக்கு விளங்கி, அதை நான் எழுதி, அதை மத்தவங்க படிச்சு, அதனாலே நன்மை ஏற்படற மாதிரி நீங்க ஆசீர்வாதம் பண்ணணும்" என்று உளமாரப் பிரார்த்தித்துக் கொண்டேன் நான்.

"அதெல்லாம் நாலு யுகத்துக் கதை. தெரிஞ்சுக்க....அதுலே செய்யுள் தான் முக்கியம்... என்னாய்யா, நான் சொல்றது?" என்றார் சாமியார்.

நான் கைகட்டி நின்று அந்த சித்த புருசரின் அருளுப தேசத்தைப் பயபக்தியுடன் கேட்டுக் கொண்டேன். என்னுடன் பேசிக் கொண்டே சாமியார். தரிசனத்திற்கு வந்தவர்களுக்கு விபூதி, குங்குமப் பிரசாதம் கொடுத்துக் கொண்டு இருந்தார். கீழே சிந்திய விபூதியும் குங்குமமும் பிரித்து வைக்கப்பட்டிருந்த விழுந்திருப்பதைக் கவனித்தேன். உள்ளம் மகிழ்ச்சியால் பொங்கியது. அண்ணாமலையாரின் ஆலய கோபுரங்களில் பூண்டி சாமியார் விபூதி, குங்கும அபிடேகம் செய்து விட்டிருந்தார். 'அருணாசல மகிமை' சிறக்க, பூண்டி சாமியாரின் பரிபூரண ஆசியும் கிடைத்துவிட்டது.

அன்று அவரிடம் விடைபெற்றுக் கொள்வதற்குமுன், "சாமியாரைப் பற்றி எல்லாரும் தெரிஞ்சுக்க ஆசையாயிருப்பாங்க, எனக்குத் தெரியப்படுத்தினா எழுதலாம்னு பார்க்கிறேன்" என்றேன் நான்.

'சொல்ல முடியாது' என்றோ, 'சொல்கிறேன்' என்றோ சாமியார் கூறவில்லை.

"சரி, போய் வா" என்று மீண்டும் வரும்படி கூறி, விபூதிப் பிரசாதம் கொடுத்து அனுப்பினார்.

எப்படியாவது தம்மைப் பற்றிய விவரங்களை அவர் தெரியப்படுத்தி விடுவார் என்ற நம்பிக்கையுடன் நான் பூண்டியிலிருந்து புறப்பட்டேன்.

அடுத்த முறை நாங்கள் பூண்டிக்குச் சென்றபோது இரவு ஒன்பது மணியாகி விட்டது. அமைதியான அந்தக் கிராமம் உறங்கி விட்டிருந்தது. சாமியாரின் திண்ணைக்கு எதிரே நின்றிருந்த ஓரிருவர் இரகசியக் குரலில் பேசிக்கொண்டிருந்தனர்.

அருகில் சென்று பார்த்தோம். மின்விசிறி சுழல, அந்தப் பரதேசி திண்ணையில் மகாராசாவைப்போல் படுத்திருந்தார். அவருடைய இமைகள் மூடியிருந்தன. ஆனால், கால்கள் அசைந்து கொண்டே இருந்தன. விளக்கை அணைத்துவிட்டு, திரையைப் போட்டார் சுப்பிரமணி.

"சாமி எத்தனை மணிக்குப் படுத்தது?" என்று கேட்டேன் நான்.

"கொஞ்ச நேரத்துக்கு முன்னேதான் படுக்க வைத்தோம்."

"காலையில் எத்தனை மணிக்கு எழுந்திருப்பார்?"

"தூங்கினாத்தானே எழுந்திருக்க! எப்போ கூப்பிட்டாலும் கண்ணை முழிச்சுப் பார்ப்பாரு. படுக்க வைக்கிறாங்களேன்னு சும்மா படுக்கிறாரு. அவ்வளவுதான். முந்தாநாள் கூட கோயம்புத்தூரிலேருந்து பாதி ராத்திரி ஒரு பார்ட்டி வந்தது.... குரல் கொடுத்தோம். உடனே எழுந்து உட்கார்ந்து பேசினாரு... அவங்க ஆசையா கொடுத்த பழத்தைக் கூடச் சாப்பிட்டாரு.... உங்களுக்கு ஏதாவது பேசணுமா. எழுப்பபட்டுமா?" என்று கேட்டார் ஓர் உள்ளூர்வாசி.

"வேண்டாம்.... நான் ராத்திரி இங்கேயே தங்கப் போகிறேன். காலையிலே பார்த்துக்கலாம்" என்று கூறி அவரைத் தடுத்தேன். அசையாமல் நாளெல்லாம் அந்தத் திண்ணையில் அமர்ந்திருந்துவிட்டு, கால்களைச் சற்று நீட்டிப் படுத்திருப்பவரை எழுப்பி உட்கார வைப்பது மகா பாவம் என்று தோன்றியது எனக்கு.

எதிரிலுள்ள கொட்டகையில் சமக்காளத்தை விரித்தோம். அப்போது அங்கு ஒரு சாது வந்தார். நல்ல நிறம். சித்த முகம். அவருக்கு முப்பது முப்பத்தைந்து வயது இருக்கும்.

"இவர் பெயர் பூர்ணானந்தா. வட நாட்டிலேருந்து வந்திருக்கார்" என்று ஒருவர் அவரை எனக்கு அறிமுகம் செய்து வைத்தார். அவருக்கு ஒரு கும்பிடு போட்டு விட்டு, "இங்கே எப்படி வந்து சேர்ந்தீங்க" என்று கேட்டேன் நான்.

"என் குருநாதர் கணேசபுரி நித்தியானந்த பாபாவின் அருள்தான் என்னை இங்கு கொண்டு வந்து சேர்த்திருக்கிறது. 'பதினைந்து ஆண்டுகள் கழித்து, மூன்றாம் பிறையன்று தென்னாட்டில் சீவன் முக்தர் ஒருவரின் தரிசனம் உனக்குக் கிடைக்கும்' என்று அவர் எனக்கு ஆசி வழங்கினார். அவர் வாக்கு

சாத்தியமாயிற்று. கடந்த மூன்றாம் பிறையன்று நான் பூண்டிக்கு வந்தேன். இந்த மகானைத் தரிசித்தேன். இவர் என்னை ஆட் கொண்டுவிட்டார். அன்றுமுதல் இங்கேயே இருக்கிறேன்'' என்று கூறிவிட்டு, தன் கதையைச் சொல்லத் தொடங்கினார் அந்த சாது.

பூர்ணானந்த சுவாமிகள் தென்னாட்டைச் சேர்ந்தவர்தான். மழலை மொழியில் தமிழ் பேசுகிறார். பத்தொன்பதாவது வயதில், கும்பமேளாவைக் காணவேண்டும் என்ற ஆசையில், சொல்லிக் கொள்ளாமல் வீட்டை விட்டுக் கிளம்பிய இவர், வடநாட்டில் நுழையாத ஆசிரமம் இல்லை, தரிசிக்காத மகான் இல்லை, காணாததலங்கள் இல்லை. அரியானாவில் ஒரு குகையில் தவம் இருந்த நிகழ்ச்சியை அவர் விவரித்துக் கொண்டிருந்தபோது, பிரயாண அசதியால் எனக்குத் தூக்கம் கண்ணைச் செருகியது. ''தயவு செய்து காலையில் உங்கள் அனுபவங்களின் தொடர்ச்சியைக் கேட்கிறேன். இப்போது சற்று ஓய்வெடுத்துக் கொள்ளுகிறேன்'' என்று கூறிவிட்டுக் கண்ணயர்ந்தேன். அப்போது மணி பன்னிரண்டு இருக்கும்.

விடியற்காலை நான்கு மணி. எதிரிலுள்ள தேநீர்க்கடைக்காரம்மா, பால் வாங்கி வரப் பையனை எழுப்பும் குரல் கேட்டுக் கண் விழித்தோம். ஸ்ரீ காஞ்சி காமகோடிப் பெரியவர்களின் விசுவரூப தரிசனத்தைக் காண்பதற்காக அவர் படுத்துறங்கும் மேனாவுக்கெதிரில் மண் தரையில் துண்டை விரித்துப் படுத்திருந்த நாட்கள் என் நினைவுக்கு வந்தன.

எழுந்து சாமியாரின் திண்ணைக்கெதிரே போய் நின்றோம். அங்கு ஒரு பூனைக்குட்டி ஓடி வந்தது. நான் ஏற்கெனவே அதை அங்கு பார்த்திருக்கிறேன். அது சாமியாரின் மடியில் தன் விருப்பத்துக்குக் கொஞ்சி விளையாடும்; சுருட்டிக் கொண்டு படுத்துறங்கும்; தோள் மீது ஏறிக் குதிக்கும்; எதிரிலுள்ள கிண்ணத்தில் பக்தர்கள் ஊற்றி வைக்கும் பாலைக் குடிக்கும். ஆனால், சாமியார் அதைக் கண்டு கொள்ளவே மாட்டார். அவர் அதைத் தொட்டுக்கூட நான் பார்த்ததில்லை.

எங்கிருந்தோ வந்த அந்தப் பூனைக் குட்டி, அவர் படுத்திருந்த திண்ணைக் கருகில் சென்று 'மியாவ்' என்று இரண்டு மூன்று தரம் கத்திற்று. ''சுப்ரபாதம் பாடுகிறது'' என்றார் என் நண்பர் பாப்ஜி. சாமியார் விரல்களைச் சொடுக்கும் சப்தம் கேட்டது. அடுத்த கணம் தேநீர்க்கடைப் பையன் 'தேநீரை'யை எடுத்து வந்து, 'சாமி' என்று லேசாகக் குரல் கொடுத்தான். உடனே சாமியார் எழுந்து உட்கார்ந்து விட்டார். தேநீரைக் குடித்து முடித்ததும் பயங்கரமாக இருமினார். அந்த ஒலி பூண்டி கிராமத்தையே ஒரு குலுக்குக் குலுக்கி விட்டது.

அடுத்து, சுப்பிரமணி, சாமியாரின் முகத்தைத் துடைத்து விட்டு, சட்டையை மாற்றி, திருநீறு பூசி, சந்தனம், குங்குமம் இட்டு, மாலைகள் அணிவித்து, திரையை விலக்கி விட்டு அவருக்குப் பூஜை செய்தார். அங்கு கூடியிருந்தவர்களும், அப்போது திண்ணைக்கு நேரே வந்து நின்ற முதல் பேருந்தில் இருந்த பிரயாணிகளும் கன்னத்தில் போட்டுக் கொண்டனர்.

சாமியார் கடையைத் திறந்து விட்டார். கொடுத்து வைத்தவர்கள் வந்து தரிசனம் செய்து புண்ணியம் பெற்றுச் செல்லலாம்!

சுற்றுப்புறமுள்ள கிராமப் பகுதிகளில் இந்த சித்தர் இருபது முப்பது ஆண்டுகள் சுற்றித் திரிந்திருக்கிறார் என்று எல்லாரும் சொல்லுகிறார்கள். அந்த இடங்களைக் காண வேண்டும் என்று புறப்பட்டுச் சென்றோம். அந்தப் பகுதியில் அவர் உட்காராத கோயில் மண்டபம் இல்லை, மரத்தடி இல்லை, பாறை இல்ல. "சாமியார் இங்கே உட்கார்ந்திருப்பார், அங்கே படுப்பார், இந்த வீட்டில் சாப்பிடுவார், அந்தக் கடைக்கு வருவார்" என்று அந்தப் பகுதி மக்கள் எல்லா இடங்களையும் சுட்டிக் காட்டுகிறார்கள்.

இருபத்தைந்து வருடங்களுக்கு முன் செய்யாற்றின் தென் கரையிலுள்ள மேட்டுப்பாளைய ஓடையில் இவரைக் கண்டெடுத்து ஆற்றங்கரையில் இவருக்கு அபிடேகம் செய்து, ஒரு கொட்டகை போட்டு அமர்த்தி, ஆகாரம் கொடுத்திருக்கிறார்கள். அவர் பகல் பூராவும் எங்கெல்லாமோ சுற்றி விட்டு, படுப்பதற்கு இரவில் அங்கு வந்து விடுவாராம். சில சமயம் சுடுகாட்டிலும் போய்ப் படுப்பாராம். தலையில் ஒரு மூட்டையும், கையில் ஒரு மூட்டையுமாக அலைந்து கொண்டிருப்பாராம். சாமியாரிடம் அன்பு பாராட்டிய ஒருவர், அவரிடம் எதையோ எதிர்பார்த்து ஏமாந்து, அவரை அடித்துத் துன்புறத்தவே, அங்கிருந்து கிளம்பி, புல்லூருக்குச் சென்று விட்டார். அங்கு சப்பாத்திக் கள்ளிக் காடுகளிலும், முட்புதர்களிலும் உட்கார்ந்திருந்தார். ஓடையில் வந்து குந்துவார். பேய் மழை அடித்தாலும் எழுந்திருக்க மாட்டார். வெள்ளம் வந்து அடித்துக் கொண்டு போய் விடப்போகிறதே என்று அவ்வூர் மக்கள் ஒரு கூண்டை எடுத்து வந்து அவருக்குப் பாதுகாப்பாக வைத்திருக்கிறார்கள். ஒரு நாள் பெய்த பெரு மழையின் காரணமாகப் பெருகிய வெள்ளத்தில் சாமியார் மூழ்கியே விட்டார். பின்னர், பயந்து போன கிராமப் பெரியவர்கள் அவரை எடுத்து வந்து, வைக்கோல் கொளுத்தி சூடேற்றி, பச்சையப்ப நயினார் வீட்டில் வைத்துக் காப்பாற்றினார்கள்.

இந்தத் தகவலைப் பஞ்சாயத்து போர்டு தலைவராக இருந்த பொன்னுசாமி நயினார் கூறினார். பூண்டி சாமியாரைக் கடவுளாக மதிக்கிறார் அவர். சாமியாரைப் பற்றிப் பேசும்போது கண் கலங்கி விடுகிறார் அவர். சாமியார் மீது தனக்கு எல்லையற்ற பக்தியும் நம்பிக்கையும் ஏற்படுவதற்குக் காரணமாயிருந்த நிகழ்ச்சியையும் கூறினார் அவர்.

ஒரு சமயம் ஊரில் ஏற்பட்ட பகையின் காரணமாக இவருடைய கரும்பு ஆலை இயந்திரங்களை யாரோ திருடிக் கொண்டு போய் விட்டார்கள். போலீசுக்குத் தகவல் கொடுத்தும் பயனில்லை. மனம் நொந்து போன நயினார், சாமியாரிடம் போய், களவு போன பொருள் கிடைக்குமா என்று மனத்திற்குள் கேட்டபடி கவலையோடு கை கூப்பி நின்றார்.

அப்போது சாமியார், "பொருள் எங்கேயும் போகலையா. நாசந்தோப்புக் கிட்டே ஆத்தங்கரையிலே கிடைக்கும்; போய்யா" என்று கூறி அனுப்பிவிட்டார்.

"ஆச்சரியத்தைப் பாருங்க. அன்னிக்கே மணலுக்கு மேலே ஒரு ஆணி மாதிரி தெரியுதுன்னு யாரோ தோண்டிப் பார்க்க, எல்லா சாமான்களும் கிடைச்சுப் போச்சு. திருடனுங்க புதைச்சு வெச்ச இடத்தை சாமியார் கரெக்டா

சொல்லிட்டாரு.... அன்னிலேருந்து எனக்கு அவர்தானுங்க கடவுள். தினம் ஒரு முறை அவரைத் தரிசனம் செய்துட்டு வந்துடுவேன். ஒண்ணுமே பேச மாட்டேன். எல்லாம் மனசிலே நினைச்சுக்குவேன். அவர் சரி பண்ணிடுவார்... இப்போது கூட என் குடும்பத்திலே ஒரு புயல் வீசிச்சு. அவர் என் பையனுடைய சொப்பனத்திலே வந்து அந்தப் பிரச்னையையும் தீர்த்து வெச்சிட்டார்'' என்று உணர்ச்சி பொங்கக் கூறினார் பொன்னுசாமி நயினார்.

அந்தப் பகுதி மக்கள் இம்மாதிரியான அதிசய அனுபவங்களை நிறைய கூறுகிறார்கள். ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் மறக்க முடியாதவாறு ஏதாவது ஓர் அற்புதத்தை நிகழ்த்தியிருக்கிறார் பூண்டி சாமியார்.

ஒரு சமயம் இரவில் ஆற்றங்கரை ஓரமாக கலசப்பாக்கத்தைச் சேர்ந்த ஒருவர் போய்க்கொண்டிருந்தபோது சாமியார் கண்ட துண்டமாக வெட்டப்பட்டு. கை ஓரிடம் கால் ஓரிடமாக இருந்த பயங்கரக் காட்சியைப் பார்த்துப் பயந்து, அலறிக் கொண்டு ஓடி வந்தாராம். மறுநாள் சாமியார் சாதாரணமாகத் தெருவில் நடந்து போவதைப் பார்த்துப் பிரமித்துப் போய் விட்டாராம் அவர் 'பசிக்குது ஏதாவது கொடுங்க என்று சாமியார் இதுவரை யாரிடமும் கேட்டதே இல்லை என்று எல்லோரும் சொல்லுகிறார்கள். சிலசமயம் பசியாயிருக்கும்போது கல்லையும் மண்ணையும் அவர் தின்பதைப் பார்த்தவர்களும் இருக்கிறார்கள்.

பூண்டிக்கு மேற்கே பிராயப்பட்டு, மோட்டூர், வில்வாரணி முதலிய சிற்றூர்களில் அவர் நடமாடிய இடங்களுக்குச் சென்று சுற்றிப் பார்த்து விட்டு வந்தோம். பூண்டியைச் சேர்ந்த 'ஞானம்' என்பவர் சாமியாரிடம் உத்தரவு பெற்றுக் கொண்டு எங்களை அங்கெல்லாம் அழைத்துச் சென்றார். ரொம்பவும் நெருங்கிப் பழகுபவர்கள் சாமியாரைக் கேட்காமல் எதைச் செய்யவும் அஞ்சுகிறார்கள்.

வில்வாரணி குன்றின்மீதுள்ள நட்சத்திரக் கோயிலில் முருகன், வள்ளி தெய்வயானை சமேதராய் எழுந்தருளியிருக்கிறார். முருகனுக்கு முன்னால் முக்கால் அடி உயரத்தில், சுயம்புலிங்கம் ஒன்று காணப்படுகிறது. அதனால் அங்கு முருகனுக்கு சிவசுப்பிரமணியன் என்ற திருநாமம் வழங்கப்படுகிறது.

பூண்டி சாமியாரை அப்பகுதி மக்கள் தெய்வமாக வழிபடுகிறார்கள். குழந்தையாக நேசிக்கிறார்கள். அவர் திருட்டிப் பட்டால் சகல துன்பங்களும் தீர்ந்துவிடும் என்றும், அவர் திருநீறு கொடுத்தால் எல்லா வியாதிகளும் மறைந்து விடும் என்றும் அனுபவத்தால் நம்புகிறார்கள்.

அவருக்கு விருப்பமில்லை யென்றால் தலைகீழாக் நின்றாலும் அவரிடமிருந்து நம்மால் பிரசாதம் வாங்கிவிட முடியாது. அன்று காரில் வந்த ஒரு பக்தர், சாமியாருக்கு இலஞ்சம் கொடுப்பதுபோல் என்னென்னவோ கொடுத்துப் பார்த்தார். எப்படியாவது அவர் கையால் திருநீறு பெற்றுச் சென்று விடவேண்டும் என்று படாதபாடு பட்டார். ஆனால், சாமியார் மசியவேயில்லை. 'எடுத்துக்கய்யா' என்று கிண்ணத்திலிருந்த திருநீற்றை வந்த வரையே எடுத்துக் கொள்ளும்படிக் கண்டிப்பாகக் கூறிவிட்டார்.

பணக்காரன் - ஏழை, தெரிந்தவன் - தெரியாதவன் என்ற பாரபட்சமே அவரிடத்தில் காணமுடியாது.

'தேவைகளே அற்ற ஒரு தூய்மையான துறவி; விருப்பு வெறுப்பற்ற உண்மையான ஞானி; சரீரத்தை மறந்து, ஆத்ம சொருபத்தில் இலயித்திருக்கும் தவயோகி, நயனமொழியில் பேசி, நன்மைகள் புரியும் சித்த மகா புருசன்; என்றெல்லாம் இவரைப் பற்றிக் கூறிக்கொண்டே போகிறார்கள். ஆனால், எந்த விளக்கத்திற்குமே பிடிபடாத புதிராக இருக்கிறார் பூண்டி சாமியார்.

அன்று சாமியாரின் எதிரில் வந்து நின்ற ஒரு பால சந்நியாசியை சந்தித்துப் பேசினேன். அவர் வட நாட்டுக்காரர். பத்திரிநாத்திலிருந்து வந்தவர். முகத்தில் அழகு பொலிகிறது. ஆங்கிலத்தில் பேசினார்.

கார்த்திகை தீபத்திற்கு முன் திருவண்ணாமலைக்கு வந்தாராம். மலையுச்சி வரையில் ஏறினாராம். அங்கிருந்து பார்த்த போது வடக்கே ஒரு சோதி தெரிந்ததாம். கீழிறங்கி, அதைத் தொடர்ந்து கொண்டே வந்தாராம். அந்த சோதி அவரைப் பூண்டிக்கு அழைத்து வந்து விட்டதாம். அருணாசலத்தின் மகிமையைக் கண்டு வியப்பதாகக் கூறினார் அந்த பால சந்நியாசி.

"நான் இத்துடன் மூன்று நான்கு முறை பூண்டிக்கு வந்து விட்டேன். நான் எங்கு சென்றாலும் இவர் என் முன் தோன்றி இங்கே அழைத்துக் கொண்டு வந்து விடுகிறார். இம்மாதிரி ஒரு மகானை நான் இதுவரை கண்டதேயில்லை. இவரைப் புரிந்து கொள்ளவே முடியாது. இவர் எல்லா நிலைகளையும் கடந்து மிக உயர்ந்த இடத்தில் இருக்கிறார்" என்றார் அந்த இளந்துறவி.

பூண்டியிலிருந்து சென்னைக்குத் திரும்பவும் வழியில் நான் கீழ் மின்னல் இரத்தினகிரிக்குப் போனேன். பூண்டியில் நான் கண்டதையும் கேட்டதையும் பாலமுருகனடிமையிடம் கூறினேன். அவர் கரும்பலகையை எடுத்து,

"எட்டாத கனி. லேசில் அறிந்து கொள்ள முடியாது என்று எழுதி, கையை மிக உயர்த்திக் காட்டினார்.

பத்திரிநாத், சந்நியாசியும், இரத்தினகிரி சாமியாரும் பூண்டி மகானைப் பற்றி ஒரே மாதிரியான அபிப்பிராயம் கூறியதை நினைத்து ஆச்சரியப்பட்டுக் கொண்டே சென்னை வந்து சேர்ந்தேன் என்று கூறுகிறார் திரு. பரணீதரன்.

அட்டமா சித்திகளைப் பெற்ற யோகிகள் தன் அன்பர்களின் வேண்டுதல்களை ஏற்றுக் கொள்ளும் பொருட்டு இருந்த இடத்தில் வேறு ஒரு உருவத்தை (பிரதி பிம்பத்தை) விட்டு விட்டு பக்தர்களுக்காக பக்தர்கள் இருப்பிடம் சென்று வருவார்கள்.

மேலும் நம் பூண்டி மகான் பாம்பாட்டிச் சித்தர் என்பது பெரியோர்களின் எண்ணம். அதற்குத் தகுந்தபடி, அவர் இன்னும் பல பேர்களுக்கு பாம்பு உருவுடன் சென்று வந்திருக்கிறார். ஞானிகள் தன் ஞான நிலையில் இருக்கும்போது மற்றவர்களின் இடஞ்சல்கள் அந்த ஞான நிலைக்கு ஊறு வராவண்ணம் இருப்பதற்கு இப்படிப்பட்ட உருவங்களை அவர்களுக்கு காட்டி தன்னிடம் வராமல் மிக சாக்கிரதையாக செயல்படுவார்கள்.

இந்த அற்புத நிகழ்ச்சி ஊர் முழுவதும் பரவ ஆரம்பித்தவுடன் சுவாமிகளின் பெருமைகளும் அவர் ஞானநிலைகளையும் காண வெளியூரிலிருந்து மக்கள் கூட்டம் கூட்டமாக வர ஆரம்பித்து விட்டனர்.

பூண்டியில் தினம் திருவிழாக்கோலமாகவே காணப்படும். வரும் அன்பர்கள் சுவாமி உனக்கு என்ன வினைகளைத் தீர்த்தார். எனக்கு இந்த வினை அகன்றுவிட்டது என்று கூட்டம் கூட்டமாக பேச ஆரம்பித்து விட்டார்கள். அவர்கள் சுவாமியை தரிசித்த பிறகு ஆற்று மணலில் போய் அமர்ந்து சுவாமியின் பெருமைகளையும் அவர் ஞான நிலையையும் பேசுவார்கள். ஆற்றிலும் பூண்டி கிராமத்திலும் எப்போது பார்த்தாலும் கூட்டம் நிரம்பி வழியும்.

சுவாமி நம்மிடம் ஒரு வார்த்தை பேசினால் போதும், நம் வினை அகன்றுவிடும் என்றும். அவர் தன் திருக்கரத்தால் விபூதியைக் கொடுத்தால் போதும். நம் குறைகள் எல்லாம் தீர்ந்துவிட்டது என்றும், தினம் வரும் இலட்சக்கணக்கான அன்பர்களின் வருகை நாளுக்கு நாள் கூடிக்கொண்டே போனது.

சாதாரண மக்கள் மட்டும் அல்லாமல் சன்யாசிகள், பரதேசிகள், யோகிகள், ஞானிகள் போன்றவர்களின் வருகையும் நாளுக்கு நாள் கூடிக்கொண்டே போனது.

இரவு பகல் என்றில்லாமல் சுவாமியின் தரிசனத்திற்கு வரும் கூட்டம் கட்டுக்கடங்காமல் போய்விட்டது. குறிப்பாக யோகியர், ஞானிகள் இரவு நேரங்களில் திடீரென்று தோன்றி சுவாமி அமர்ந்திருந்த திண்ணைக்கு நேரே நின்று சுவாமியை சுமார் 1 மணி நேரம் உற்றுப் பார்த்துவிட்டு ஏதும் கேட்காமல் போய்விடுவார்கள். அவர்களின் தெய்வ பரிபாசையில் என்ன கருத்தை பரிமாறிக் கொண்டார்கள் என்பது நமக்குப் புரியது அதெல்லாம் தேவ இரகசியம். இப்படி வந்த பல யோகியர்களில் ஒருவர் அவருக்கு இருந்த சடை அவருக்குப் பின்பக்கம் தெருவில் தவழ்ந்து வரும் அளவுக்கு மிக நீண்டிருந்தது. கால் வரையிலும் ஒரே துணியாக சட்டையைப் போட்டிருந்தார். வடநாட்டவர் பேசும் கொச்சைத் தமிழில் பேசினார். கண்கள் எட்டிப் பழம் போல் சிவந்து இருந்தது. பார்த்தவர்கள் அச்சுறும் வண்ணம் அவர் தோற்றம் காணப்பட்டது.

சுவாமிகள் அமர்ந்திருந்த திண்ணைக்கு நேரே வந்து நின்று சுவாமியை உற்று ஒரு 15 நிமிடம் பார்த்துக் கொண்டிருந்தார். சுவாமியும் அவரை வைத்த கண் வாங்காமல் உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார். பிறகு தன் சட்டையில் உள்ள பெரிய சட்டைப் பையில் கையைவிட்டு ஒரு கரு நாகத்தை எடுத்தார். அதை தன் கையை கொத்த விட்டார். அந்த பயங்கர கருநாகம் பிறகு அதை தன் சட்டைப் பையில் போட்டுக் கொண்டு வேறு மறுபடியும் முன்போல அந்த கருநாகத்தைத் தன் கையைக் கொத்தவிட்டு மீண்டும் சட்டைப் பையில் போட்டுக் கொண்டு பீடியைப் புகைக்க ஆரம்பித்துவிட்டார். இப்படி பலமுறை செய்து கொண்டிருந்தார்.

இதையெல்லாம் மௌனமாகத் தன் தாடியை உருவிக் கொண்டு பார்த்துக் கொண்டிருந்த சுவாமிகள் அந்த யோகியைப் பார்த்து.

''ஏம்பா! அவன் பிள்ளைகள் குட்டிக்காரன். அந்த பிள்ளைகள் அல்லல் படுகிறது. அவனை விட்டு விடப்பா. யாரோ செய்த பாவத்திற்கு இவனை தண்டிப்பதா!

நல்லதை நினைத்து நல்லதையே செய்து வந்தால் நல்லதே நமக்கு கிடைக்கும்பா!'' என்றார்.

''இது எல்லாம் நம் நிலைமைக்கு தேவையில்லை'' என்றார். வந்த யோகி ஆனந்த சிரிப்பு சிரிப்பு விட்டு ''உன் உத்தர்வுப்படி செய்கிறேன்'' என்று கூறிவிட்டுத் தெருவில் கொஞ்ச தூரம்தான் நடந்திருப்பார். பிறகு மாயமாய் அவர் தோற்றம் மறைந்து விட்டது.

இந்த நிகழ்ச்சியை நடுநிசியில் கண்ட பக்தர்கள் சுமார் ஆறு பேருக்கும் கை கால் உதறல் கண்டுவிட்டது. அப்போது பூண்டியைச் சேர்ந்த சுவாமியிடம் நெருக்கமாக பழகும் அன்பர், சுவாமியைப் பார்த்து ''இதெல்லாம் என்ன மாயசித்து சுவாமி'' என்று கேட்டார்.

''உனக்கெதுக்கையா இதெல்லாம், இது தேவ இரகசியம். நீ கடைத்தேற வழிபார்'' என்று கூறிவிட்டார்.

இப்படிப்பட்ட யோக சித்து உடையவர்களும் பெரும் ஞானிகளும் சுவாமியை வந்து வணங்கி அவர் ஆசீர்வாதத்தைப் பெற்றுச் சென்றார்கள் என்றால் சுவாமியின் ஞான நிலைமை என்னவென்று நாம் கூறுவது. அவர் ஞான நிலையைக் கூற, இன்னும் பல செனமங்களை எடுத்தாலும் நம்மால் கூறமுடியாது.

யோகி கொண்டு வந்த பாம்புருவில் உள்ளவர் யாரோ, அவர் என்ன தவறு செய்தாரோ, அவர் முன்னோர்கள் என்ன பாவம் செய்தார்களோ, யாருக்குத் தெரியும் எதை நாம் உணர்ந்து விட்டோம் அதை நாம் புரிந்து கொள்ள இப்படிப்பட்ட யோகிகள் அடிக்கடி பூண்டியில் பார்க்கலாம். இப்படிப்பட்ட அதிசயங்களைத் தினம் பூண்டியில் காணலாம். ஏன், இன்றும் பல யோகிகள் இரவில் சமாதியை தரிசனம் செய்து விட்டு உடனே அவர்கள் திரும்பி போய்விடும் நிகழ்ச்சிகள் பல நாம் காண்கிறோம்.

சுவாமி கீழ்ப்புறம் திண்ணையில் அமர்ந்து இருந்தபோது அன்பர் ஒருவர் தன் வேண்டுதலின் பொருட்டு சுவாமிக்கு கை விரலில் ஒரு தங்க மோதிரம் அணிவித்தார்.

நாளடைவில் அந்த மோதிரம் சிறியதாக இருந்ததால் விரல் பெரும் வீக்கம் கண்டுவிட்டது. சுவாமிகள் அதன் வலியைப் பற்றிக் கவலைப் படாமல் மௌனமாக இருந்து வந்தார்.

ஒரு நாள் திருவலம் சிவானந்தா மௌன குரு சுவாமிகள் பூண்டி மகானை தரிசனம் செய்ய வந்தார்கள். வந்தவர் இந்த மோதிர விரல் வீக்கத்தைக் கண்டு அதற்கு பச்சிலையை கொண்டு வந்து தன் கையால் பிழிந்து அதன் சாரத்தை மோதிர விரல் மீது விடப்போனார். அதற்கு பூண்டி மகான்:

''அந்த விரல் தங்கத்திற்கு ஆசைப்பட்டது.- அதனால் அது பங்கப்படட்டும் மருந்து வேண்டாம், விட்டு விடப்பா!'' என்றார்.

அதற்குத் திருவலம் சிவானந்த மௌனகுரு சுவாமிகள் பூண்டி மகானைப் பார்த்து,

நீ ஒரு முச்சந்தியில் இருக்கும் கல். வேண்டும் தன்மை வேண்டாம் தன்மை அற்றுவிட்ட பிறகு மாடு, ஆடு, தேய்க்கும். அதற்கு நீ சும்மாதான் இருக்க வேண்டும் என்றார். அப்படி ஆனால் உன் விருப்பம் போல் செய் என்று பூண்டி மகான் கூறி விட்டார்.



மோதிர விரல் வீக்கத்தை கிளி போக்கியதன் காட்சி

"அதற்கென்றே ஒருவன் வரப்போறான். அவன் செய்யட்டுமே' என்று சொன்னேனப்பா! என்றார். பிறகு சில நாள் கடந்து ஒரு கிளி தினம் காலை 11 மணிக்கு வந்து அந்த விரலைக் கொத்தி கொத்தியே வீக்கத்தை குறைத்தது அந்த கிளிதான் சுவாமியின் தோள் மீது ஆனந்தமாக படத்தில் உள்ளபடி அமர்ந்து உள்ளது. அந்த கிளி எந்த சித்த மகா புருசரோ, அவர் என்ன வேண்டுதலோ யார் அறிவார். இப்படிப்பட்ட தேவரகசியங்கள் தினம் தினம் பூண்டியில் நடைபெறும். பிறகு, அது விரலில் இருந்து அப்புறப்படுத்தப் பட்டது.

1972 ஆம் ஆண்டு மார்கழி மாதம் பூண்டி செய்யாற்றில் சுமாராக தண்ணீர் போய்க் கொண்டிருக்கிறது. கர்நாடக மாநிலம், கோலர் தங்க வயலில் வேலை செய்யும் வசதி படைத்த ஒரு அன்பர், பூண்டி மகானின் மகிமையைக் கேள்விப்பட்டு பூண்டிவந்து சேர்ந்தார்.

பூண்டியில் பூண்டி மகானிடம் பணி புரியும் ஒரு சாதுவை அறிமுகம் செய்து கொண்டார். எனக்கு கடந்த இரண்டு வருடங்களாக உடலில் விரும்பத்தகாத நோய் கண்டுவிட்டது. பல வைத்தியம் செய்து

பார்த்துவிட்டேன். நோய் குணமாக வில்லை. நீங்கள் சுவாமியிடம் சொல்லி நோயை எப்படியாவது குணப்படுத்தினால், நான் என்னுடைய சொத்தில் ஒரு பங்கு பூண்டி மகானுக்கு எழுதி விடுகிறேன் என்று கூறினார்.

அதற்கு பூண்டியில் மகானிடம் பணியாற்றி வந்த சாது கூறினார். "நீங்களே சுவாமியிடம் மண்டியிட்டு வருந்திக் கேளுங்க. அவர் பெரிய கருணைக் கடல். உங்கள் கோரிக்கையை நிறைவேற்றி வைப்பார்". நாங்கள் வந்து கூறினால் "நீ அந்தக் கர்மத்தை ஏற்றுக் கொள்கிறாயா? என்று எங்களிடமே திருப்பிக் கேட்டு விடுவார். அதனால் நீங்கள் நாளை காலை 3 மணிக்கு பூண்டி ஆற்றில் நீராடிவிட்டு ஈரத் துணியுடன் சுவாமி முன் நின்று வேண்டுங்கள். அவர் உங்கள் கோரிக்கையை நிறைவேற்றுவார்" என்று அந்த சாது கூறிவிட்டார்.

கோலர் தங்க வயலில் இருந்து வந்த அன்பர் பூண்டியில் சாது கூறியபடி விடியற்காலை 3 மணிக்கு பூண்டி ஆற்றில் நீராடி விட்டு பூண்டி மகான் அமர்ந்து இருந்த திண்ணைக்கு எதிரில் வந்து நின்றுகொண்டு சுவாமியின் விசுவருப தரிசனத்திற்கு காத்திருந்தார்.

சுவாமியும் திண்ணையில் இருந்தபடி அமைதியாக கோலாரிலிருந்து வந்த அன்பரைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

வந்த அன்பர் சுவாமியிடம் தன் நோயைப்பற்றிக் கூறக் கூடவில்லை. அதற்குள் சுவாமிகள் "சண்டாளா, தாயிக்கும், தாரத்திற்கும் வித்தியாசம் தெரியாத காமுகனே! மிருகங்கூட காலத்தோடுதான் சேர்கிறது. உன் காமக் களியாட்டத்தை அந்த ஒண்ணுந் தெரியாத ஏழைப் பெண்ணிடமா நடத்துவது. வந்ததை அனுபவி!" என்று கூறிவிட்டார்.

வந்த அன்பருக்குப் பயம் வந்துவிட்டது கோலாரில் நடந்ததை அப்படியே நேரில் கண்டவர் மாதிரி கூறுகிறார் என்றால் இவர் சாதாரண மகானாக இருக்க முடியாது. இவர் பெரிய தேவ புருசர். இவரை விட்டால் நம் நோயை யாராலும் குணப்படுத்த முடியாது என்று உறுதிகொண்டு பூண்டியிலேயே நான்கு நாள் தங்கிவிட்டார். அந்த நான்கு நாளும் காலையில் ஆற்றில் குளித்து விட்டு ஈரத்துணியுடன் சுவாமியின் முன்நின்று மனதால் அழுது வேண்டிக்கொண்டார்.

நான்காம் நாள் சுவாமிகள் அந்த கோலார் அன்பரைப் பார்த்து,

"தாசிவீடு சென்ற தறுதலைக்குச் செம்மையாய்
தருக செறுப்படிதான் காசும் அற்றுவிடும்
கவமிளகும் கதியே சைவமென் றாடுபாம்பே"

என்று பாம்பாட்டிச் சித்தர் பாடலைப் பாடிவிட்டு மௌனமாக இருந்து விட்டார். வந்த அன்பருக்கு ஒன்றும் புரியவில்லை. சுவாமிகள் நம்மை செறுப்பால் அடிக்கச் சொல்லுகிறார் என்று கவலையுடன் நின்று கொண்டிருந்தார். சுவாமியிடம் பணிபுரியும் சாதுக்களில் ஒருவர் அந்த அன்பரைத் திண்ணைக்கு மறுபுறம் அழைத்துச் சென்று, "நீங்கள் கவலைப்பட வேண்டாம். உங்கள் நோய்க்கு மருந்து சுவாமிகள் தன்

பரிபாஷையில் கூறிவிட்டார். வாருங்கள் விளக்கிக் கூறுகிறேன்'' என்று ஆற்றுக்கு அழைத்துச் சென்று சுவாமி பாடிய பாடலின் பொருள் கூறினார்.

''நீங்கள் உங்களின் தவறான காமக் களியாட்டத்தினால், உங்கள் உடம்பில் உள்ள மூலத்தில் வெப்பம் அதிகமாகி, தலை வரையில் மேகம் வெந்துருகி, உடலாலும் விந்து கெட்டு உடலில் உள்ள நரம்பு தளர்ச்சியாகி விடுவது மேக நோய். அந்த மேக நோய் தீர, செறுபடை என்னும் ஒரு பூண்டின் மூலம் இந்நோய் தீரும் என்று சுவாமிகள் பரிபாசையில் கூறுகிறாரே தவிர நீர் நினைப்பதுபோல் செறுப்பால் (காலணியால்) அடிப்பது அல்ல'' என்று விளக்கம் கூறினார். ''விந்து இளகிவிடுவதால் ஏற்படும் காசநோய்க்கு தாளிசபத்திரி என்ற ஒரு மருத்துவச் செடியினைக் காய்ச்சி இரசமிரக்கி சாப்பிட்டு வந்தால் உன் நோய் தீரும்'' என்று அந்த சாது கூறினார்.

கோலார் அன்பர் உடனே பூண்டி மகானிடம் சென்று வணங்கி நின்றார். சுவாமிகள்

''காமம் வெகுளி மயக்கம் இவைமூன்றின்
நாமம்கெடக் கெடும் நோய்''

என்று திருக்குறளைப் பாடி அமைதியாக தியானத்தில் அமர்ந்து விட்டார் பூண்டி மகான். யாரோ ஒருவரிடம்தான் பேசுவார். அதுவும் பரிபாஷையுடன் தான பேசுவார். நாம்தான் அதன் உட்பொருளை உணர்ந்து அதன்படி நடந்தால் நமக்கு எல்லா நன்மைகளும் வந்து சேரும்.

பெண்களை காமக்கூடமாக எண்ணக் கூடாது. ''பிறர் மனைவியரைப் பெற்ற தாய் எனவும், பிறர் பொருளை எட்டிப் பழமாகவும்'' எண்ண வேண்டும்.

நெடுநாள் கழித்து சுமார் 6 மாத காலம் கடந்தபின் அந்த கோலாரைச் சேர்ந்த அன்பர் உடல்நலம் பெற்று பூண்டி வந்து சுவாமியைத் தரிசனம் செய்தார்.

ஒரு கோடி காக்கைகள் ஒன்றுகூடி கூட்டமாக இருந்தாலும் ஒரு சிறு கல்லின் முன் நிற்காமல் பறந்து ஓடிவிடும் தன்மைபோல், கணக்கற்ற பாவங்களை ஒருவன் செய்து இருந்தாலும், அவனுடைய பூர்வ புண்ணிய வசத்தால் ஒரு பிர்ம ஞானி கண்டு விட்டால் - அவர் கண் திருட்டி இவன் மீது பட்டுவிட்டால் - கல்லைக் கண்டு பறந்து ஓடிய கோடி காக்கைகள் போல் இவன் சேர்த்திருந்த கணக்கற்ற பாவம் அகன்றுவிடும் என்று நாம் உணர வேண்டும். அப்படிப்பட்ட பிர்ம ஞானி நம் பூண்டி மகான் ஆற்று சுவாமிகள். இப்படிப்பட்ட ஞான வேந்தன் பரதேசியாக ஒரு ஓசி ஓட்டு வீட்டுத் திண்ணையில் அமர்ந்து அருள் பாலித்து வந்தார்.

''கண்டாரைக் கண்டு கொண்டால்
கடைத்தேறலாகும் இடர்போகும்''

என்று மகான் அச்சுதாச சுவாமிகள் பாடுகிறார். அப்படி பிர்மத்தைக் கண்டு பிர்ம நிலை யெய்தியவர் நம் பூண்டியில் உறையும் புனித சோதி மகான் ஆற்றுச் சுவாமிகள். அவரைக் கண்டாலும் அவர் நாமத்தைக் கூறினாலும்

அல்லது அவரை மனதார நினைத்தாலும் கூட நாம் கடைத்தேறுவோம் என்று உணரவேண்டும்.

பிறகு கோலாரைச் சேர்ந்த அன்பர் பூண்டிக்கு அடிக்கடி வந்து போய்க் கொண்டிருந்தார். சுவாமியிடம் "சுவாமி நான் தாங்களுக்கு ஏதேனும் பயன்படுவேனா" என்று கேட்டார். அதற்கு சுவாமிகள், "இல்லறத்தை நல்லறமாக நடத்து, பரதேசி உறவும் பனைமரத்து நிழலும் ஒன்று" என்று கூறிவிட்டார்.

ஸ்ரீ பூண்டி மகானை இரவு 9.30 மணிக்கு இரவு நேர அபிடேக ஆராதனைக்குப்பின் அந்தக் கீழ்ப்புறம் திண்ணையிலேயே படுக்க வைத்து விடுவார்கள். சுவாமிகள் பலகாலம் இரவிலும் உட்கார்ந்தபடியே இருந்தார். வரும் அன்பர்களின் அன்புக் கட்டளையால் இரவில் படுக்க நேர்ந்தது. ஒரு மெய் ஞானி படுப்பதும் உட்கார்ந்திருப்பதும் ஒன்றே. அவர்களுக்கு இதில் வித்தியாசமே தெரியாது. அவர்களின் ஆன்ம நிலை எப்போதும் உடலையும் மனதையும் விட்டு தனித்திருந்து, விழித்திருக்கிறது. அது ஏகாந்த சொருப நிலையில் உள்ளது. தூங்காமல் தூங்குகிறது.

ஒரு நாள் தருமபுரி மாவட்டம் ஊத்தங்கரையில் இருந்து ஒரு அன்பர் பூண்டிக்கு இரவு 9 மணியளவில் வந்தார். சுவாமிக்கு அந்த நேரம் இரவு அபிடேக ஆராதனை நடந்து கொண்டிருக்கிறது. வந்தவர் மனம் குளிர சுவாமியைத் தரிசனம் செய்தார். ஆனால் அவர் சுவாமியிடம் தன் குறையைக் கூறி பரிகாரம் கேட்கும்முன் சுவாமிகள் சம்மந்தா சம்மந்தமின்றி பேசத் துவங்கினார். இப்படிப்பட்ட நேரங்களில் என்ன பேசுகிறார், யாருக்காகப் பேசுகிறார் என்று நம்மால் கண்டறிய சிரமமாக இருக்கும். ஆனால் அத்தனையும் நாம் கூர்ந்து கவனித்தால் அதில் பெரிய இரகசியங்களும், வந்திருக்கும் அன்பர்களின் கோரிக்கைகளும் நிறைவேறி விடும் இரகசிய குறிகள் அதில் காணப்படும். அதனால் சுவாமிகள் பேசும் போது அமைதியாக அதைக் கேட்க வேண்டும். சுவாமி பேசுகிறார்:

"முன் ஏறு ஓட்டுற முனுசாமி சரியில்லை பின் ஏறு ஓட்டுறவனும் சரியில்லை. அப்புறம் எப்படி நிலத்தை ஒழுங்காகப் பயிரிடுவது? நரி தின்ற கோழி கதையாகிவிடும். சாக்கிரதை!"என்று கூறி விட்டார்.

அதாவது தர்மபுரியில் இருந்து வந்த அன்பரின் அண்ணனும் சரியில்லை, தம்பியும் சரியில்லை. அதனால் சொத்துக்கள் வீணாகிவிடும். உசாராக இருக்க, சுவாமிகள் அந்த அன்பரை பரிபாசையில் எச்சரிக்கையை விடுத்தார். வந்த அன்பர் "இதற்கு என்ன உபாயம் சுவாமி" என்றார்.

"ஒரு காலக் கட்டத்தில் நாற்றைப் பிடுங்கி, நட்டல்தான் பயிர் நன்றாக இருக்கும். நாற்றங்காலில் நாற்று இருந்தால் அது பயிராகாது" என்று கூறிவிட்டார்.

அந்த அன்பரை பாகப்பிரிவினை செய்து கொண்டு தனியாகப் போகச் சொல்லிவிட்டார்.

தர்மபுரி அன்பரும் அப்படி செய்து விட்டு ஒரு வருடம் கழித்து சுவாமியிடம் வந்தார்.

அவர் குடும்பத்தில் அண்ணன், தம்பி சரியில்லாமல் எல்லா சொத்தையும் விற்றுவிட்டு வறுமையில் உள்ளார்கள் என்று கூறினார்.

''சுவாமி சொல்லால், என் சொத்துக்கள் காப்பாற்றப்பட்டது'' என்று கூறி அன்று முதல் பூண்டி மகான்தான் அவருக்கு குலதெய்மானார்.

1968 ஆம் ஆண்டு தமிழ் நாட்டில் மழை இல்லாமல் பெரும் வறட்சியாகி விட்டது. அதிலும் வட ஆற்காடு மாவட்டம் மிகவும் மோசமான வறட்சியை அனுபவித்து வந்தது.

வேலூரில் இருந்து அன்பர்களும், திருப்பத்தூரில் இருந்து அன்பர்களும் சுவாமியிடம் அடிக்கடி வந்து தரிசனம் செய்து வருவார்கள். அப்படி வரும் அன்பர்களில் திருப்பத்தூர் அன்பர்கள் பூண்டி மகானிடம் மழை வேண்டி பிரார்த்தனை செய்து, ''சுவாமி, வறட்சி அதிகமாகிக் கொண்டே போகிறது. கால்நடைகளுக்கு குடிக்கத் தண்ணீர்கூட இல்லை. தாங்கள்தான் மனது வைத்து மழை பெய்யச் செய்ய வேண்டும்'' என்று வேண்டுதல் செய்தனர். அதற்கு சுவாமிகள்:

''மழை பெய்வது என்பது ஒருவரால் ஆகக்கூடிய காரியமில்லைப்பா! தீர்த்த மலைக்கு அனுப்பியுள்ளேன்.அரை கொட்டாங்கச்சியில் தண்ணீர் கொண்டு வராங்கப்பா!'' என்று கூறிவிட்டு மௌனமாக இருந்தார். என்ன ஆச்சரியம்! அன்று இரவு நல்ல மழை பெய்து, சுற்று வட்டார கிராம ஏரிகளில் அரை ஏரி நிரம்பியது. இதைத்தான் அரை கொட்டாங்கச்சி என்று தனக்கே உரிய பரிபாசையில் சுவாமிகள் கூறினார்கள்.

சித்த மகா புருஷர்கள் நினைத்தால் என்னதான் செய்ய முடியாது. அவர்களால் எல்லாம் சாதிக்க முடியும். தன் கண் பார்வையால் இரும்பை தங்கமாக்குவார்கள். மலையை மடுவாக மாற்றுவார்கள். மடுவை மலையாக ஆக்குவார்கள். ஏன், புதிய உலகத்தையே சிருட்டிப்பார்கள்.

திருவண்ணாமலையில் உறையும் இடைக்காட்டு சித்த மகா புருசர் வராற்றில் ஒரு நிகழ்ச்சியைக் காணும்போது இவர்களால் முடியாத காரியம் உலகில் இல்லை என்றே நாம் உணர வேண்டும். (தனியாக இந்த நிகழ்ச்சியைப் பின்னால் பார்க்கவும்)

பூண்டி சுவாமியிடம் பணிபுரிந்து வரும் பூண்டியைச் சேர்ந்த சுப்பிரமணிய சுவாமியின் மனைவி நிறை மாத கர்ப்பிணி. பிரசவ வலியால் துடித்துக் கொண்டிருக்கிறார். பூண்டி மகானிடம் சென்று சுவாமி, பிரசவத்திற்காக வேலூர் C.M.C. மருத்துவ மனைக்குப் போகிறேன். நீங்கள் என்னுடன் வந்து காப்பாற்ற வேண்டும் என்று வேண்டுகிறார். சுவாமி விபூதியை அந்த அம்மாவிடம் கொடுத்து ''நல்லதும்மா! வரேன்! போய் வா!'' என்று கூறி அனுப்பி விட்டார்.

அந்த மாதரசியை வேலூர் C.M.C. மருத்துவமனையில் சேர்த்து விட்டனர். பிரசவம் ஆகாமல் துடியாய் துடித்துக் கொண்டிருக்கிறார்.

அதே நேரம் பூண்டியில், சுவாமிகள் திண்ணைமீது மௌனமாக இருக்கிறார். அப்போது சுவாமியிடம் ஒரு வெளியூர் அம்மா வந்து தன் குறையைக் கூறிவிட்டு விபூதியை சுவாமியிடம் கேட்கிறார். சுவாமி

மௌனமாக உள்ளார். அந்த அம்மா திரும்பத் திரும்ப சுவாமியிடம் விபூதி கேட்கிறார். சுவாமிகள்:

''போம்மா! அந்தாண்ட! வேலூரில் பிரசவ வேதனைப்படும் பெண்ணைப் பார்ப்பேனா! செங்கம் துக்காப்பேட்டையில் லாரி கவுரப் போகுது. டிரைவர் கூப்பிடறான். அதைப் பார்ப்பேனா! பந்தல் போடறவன், வேலையை விட்டுவிட்டு வீண் பேச்சு பேசி விழுகிறான். அவன் கூப்பிடுகிறான்! நான் துடியாய் துடிக்கிறேன்! போம்மா! நீ வேற வந்துட்ட!'' என்று கூறிவிட்டு மௌனமாக உட்கார்ந்திருக்கிறார். அதே நேரம்:

வேலூர் மருத்துவமனையில் பிரசவ வலியால் பூண்டி சுப்பிரமணிய சுவாமியின் மனைவி மார்கம்மாள். வலி தாங்க முடியாமல் சுவாமியை நினைத்து வேண்டுதல் செய்கிறார். பிரசவம் நல்லவிதமாக ஆகி ஆண் மகவை ஈன்றெடுக்கிறார்.

அதே நேரம், பூண்டி மகானிடம் பக்தியுள்ள டிரைவர் ஒருவர், லோடு லாரியில் பிரேக் பிடிக்காமல் லாரி தாறுமாறாக செங்கம் துக்காப்பேட்டை சமீபம் போய்க் கொண்டிருக்கிறது. அந்த டிரைவர் சுவாமியை எண்ணிப் வேண்டுதல் செய்து ஒரு வழியாக லாரி ஒரு புளிய மரத்தின் சமீபம் போய் நல்லவிதமாக நின்று விடுகிறது.

அதே நேரம் : திருவண்ணாமலையில் அருணகிரிநாதர் உற்சவத்திற்கு பந்தல் வேலை நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது பந்தல் போடுபவர் பேச்சு வாக்கில் கால் தவறி சுமார் 50 அடி உயரத்திலிருந்து விழ அப்போது யாரோ ஒரு பெரியவர் அவரைக் குழந்தையை தாங்கிப் பிடிப்பதுபோல் ஒரு கையால் தாங்கிப் பிடித்து தரையில் படுக்க வைத்து விட்டு ''வேலையை விட்டுவிட்டு வீண் பேச்சு ஏனய்யா! என்று கூறிவிட்டு மறைந்து விட்டார்.

மூன்று நாள் கழித்து, வேலூரில் இருந்து சுப்பிரமணி சுவாமிகள் மனைவி தன் குழந்தையுடன் பூண்டி மகானிடம் வந்து நின்றனர். இதில் இன்னொரு அதிசயம், துக்காபேட்டையில் கவிழ இருந்த லாரி டிரைவர், திருவண்ணா மலையில் பந்தலில் இருந்து விழ இருந்த அன்பர் ஆகிய மூவரும் ஒரே நேரத்தில் சுவாமியிடம் வந்தனர். சுவாமிகள் அம்மூவரையும் பார்த்து:

''ஊருக்கு ஒரு தாசி யாருக்குனு ஆடுவா!
அவங்கவங்க உசாரா இருக்க பார்க்க வேண்டும்.

என்று கூறிவிட்டார். லாரி டிரைவரும், பந்தல்காரரும் சுவாமி என்று இருந்த திண்ணையின் எதிரில் தெருவில் சாட்டாங்கமாக விழுந்து ''எங்களைக் காத்த தெய்வமே, நாங்கள் செய்த புண்ணியம்தான் இந்தப் பிறவியில் உங்கள் தரிசனமும், ஆசியும் கிடைத்தது'' என்று கூறினார்கள். அன்றையிலிருந்து பூண்டி மகான் தவிர உலகில் வேறு தெய்வமில்லை என்று கூறி வருகிறார்கள்.

பூண்டியில் சுவாமி அமர்ந்திருந்த தெருவில் குடியிருந்த ஒரு அம்மா. சுவாமியிடம் கேட்காமல் எந்த வேலையையும் செய்ய மாட்டார்கள். ஒரு நாள் காலை 8 மணிக்கு சுவாமியிடம் வந்து ''சுவாமி, நான் கழனியில் நாற்று

நடப் போகிறேன். வீட்டிற்கு தாங்கள்தான் காவலாக இருக்க வேண்டும்'' என்று கூறிவிட்டு கழனிக்காட்டு வேலைக்கு சென்று விட்டார்.

மாலை 4 மணி அளவில் கழனி வேலை முடிந்ததும், வீடு திரும்பினார். வீட்டை அடைந்ததும் பெட்டி திறந்துள்ளது என்று அலறி அடித்துக் கொண்டு பெட்டியைத் தூக்கிப் பார்த்தார். தான் இதுவரை சேர்த்து வைத்திருந்த பணம் மூன்று நூறும் காணவில்லை. உடனே பூண்டி மகானிடம் வந்து ''என்ன சாமி, நான் உங்களிடம் சொல்லிவிட்டுத் தானே கழனி வேலைக்குப் போனேன். என் பணம் ரூ300ம் யாரோ திருடி விட்டார்கள். பணம் கிடைக்குமா? சுவாமி'' என்றார்.

சுவாமிகள் ''பற்றாதவன் எடுத்துக் கொண்டான்! கண்ணும் நமது, மூக்கும் நமது, என்னை என்ன செய்யச் சொல்கிறாய். அவன் இப்போதுதான் விபூதி வாங்கிக் கொண்டு போனான்'' என்று கூறிவிட்டார்.

அந்த அம்மாளின் ஒரே மகன் அந்தப் பணத்தை எடுத்துக் கொண்டான் என்பதை மறைமுகமாக கண்ணும் நமது, மூக்கும் நமது என்று கூறினார். உட்கார்ந்த இடத்தை விட்டு எழுந்திருக்காமல் (சுமார் 19 வருடகாலம் உள்ள சுவாமிக்கு) தெருவில் கண்டு கூறுகிறார் என்றால் அவர் ஞான நிலையை உணர நாம் இன்னும் எத்தனைப் பிறவி எடுத்தாலும் அறிந்து கொள்ள முடியாது என்பதுதான் உண்மை.

குரு

ஞானம் பெற, தக்க குருவை நாடிப் போகவேண்டும் என்று சொல்லுகிறீர்! அப்படிப்பட்ட குரு யார்? எங்கு உள்ளார்? எப்படி நாம் அறிந்து கொள்வது? என்பதை நீ கேட்பது எங்களுக்குப் புரிகிறது.

நம்முள் உள்ள அஞ்ஞானத்தைப் போக்க வல்லவரே தக்க குரு ஆவார். குரு என்றால் அஞ்ஞானத்தை போக்குபவன் என்று அர்த்தமாகும். ''கு'' என்றால் இருள் அல்லது மாயை எனப் பொருள்படும். ''ரு'' என்றால் அந்த இருளை அல்லது மாயையைப் போக்குபவன் என்று பொருள். மாயை அகன்றால் ஞானம் தன்னால் கைகூடி வரும். அதனால் நம்மிடம் காலாகாலமாக மண்டிக் கிடக்கும் அஞ்ஞான இருளை நீக்க வல்லவரே தக்க குரு ஆவார்.

நம்முள் உறையும் ஆன்மாவை நாம் அறியக் காட்டிக் கொடுப்பவரே தக்க குருவாகும். அண்டமாகிய உலகத்தில் உள்ள எல்லா தத்துவங்களும் நம் பிண்டமாகிய உடலில் உள்ளது என்பதைக் காட்டிக் கொடுப்பவரே தக்க குரு ஆவார்.

தொட்டிலில் இருக்கும் குழந்தை தன் பசிக்கு உணவு வேண்டி குவா! குவா! என்று கத்துகிறது. அதன் தாய் வந்து தொட்டிலில் இருந்து எடுத்து தன் முலைப்பாலை ஊட்டும் வரை அதன் குவா! குவா! என்ற அழுகை ஒலி அடங்குவது இல்லை. அதுபோல் ஞானப் பசியுள்ள யோகியர்கள் ஞான உணவு வேண்டி அதை ஊட்டும் குருவை நோக்கி கதறுங்கள். குரு கிடைக்கும் வரை உள்ளூர கதறி அழுங்கள். உன்னுடைய ஞானப் பசியைப்

போக்க ஆண்டவன் குருவடிவில் வருவார். உன்னுடைய அகத்தில் நீ கதறி அழும் நிலைகண்டு குரு ஒருவர் தாய் ஓடிவருவதுபோல் உன் ஞானப் பசி நிலை அறிந்து ஓடி வருவார். ஞானத்தை தன் கண் பார்வையாலே ஊட்டுவார். அவர் கிடைக்கும் வரை ஓயாமல் அகத்தில் அழவேண்டும்.

மேய்ச்சலுக்கு சென்ற பசுவானது தன் கன்றை நினைத்து அதற்குப் பால் கொடுக்க வேண்டும் என்று மாலை வேளையில் கன்றை நோக்கி ஓடிவருவது போல், உன் ஞானப் பசி கண்டு குருவாகிய பசு ஓடோடி வந்து உன்னைக் கண்டு உனக்கு ஞானப் பாலை பருக ஆசீர்வதிப்பார். "குரு இல்லாமல் வித்தை இல்லை". புரோகிதர் ஒருவர் ஒரு ஆணையும், பெண்ணையும் விவாகம் செய்து ஒன்று சேர்ப்பதுபோல் குரு ஒருவர் மனிதப் பிறவியை சர்வேசுவரனுடன் சேர்ந்து வைக்கப் பாடுபடுபவரே தக்க குரு ஆவார்கள். சீவாத்மாவை பரமாத்மாவிடம் சேர்க்க உதவுவார்.

தன் சீடனிடம் "உன்னிடமே பரபிர்மம் கலந்துள்ளது என்று கூறியும், அதைத் தட்டி எழுப்பி காட்டிக் கொடுப்பவருமே" தக்க குரு ஆவார். பசிக்கு எப்படி உணவு தேவைப்படுகிறதோ அப்படி இந்த பிறவிப் பிணி தொடர்ாமல் இருக்க குருவின் திருவருள் தேவை. அதனால்தான் பெரியோர்கள் "குருவருளின்றி திருவருள் வராது" என்று கூறியுள்ளார்கள்.

ஒரு தாய் தான் பெற்ற குழந்தைக்கு இவர் தான் உன் தந்தை என்று காட்டித் தருவதுபோல், நம்முள் உறையும் பிர்மநிலை கண்டு அறிய அந்த பிர்ம நிலையைக் காட்டிக் கொடுப்பவரே தக்க குரு ஆவார்.

நமது உடலுக்கும் ஆன்மாவிற்கும் உள்ள தொடர்பு புல்லின் மேல் உள்ள பனித் துளிக்கும் புல்லிற்கும் உள்ள தொடர்பு என்று அறியவும். தண்ணீருக்கும் தண்ணீரின் மேல் உள்ள குமிழுக்கும் உள்ள தொடர்பு நம் உடலுக்கும் ஆன்மாவிற்கும் உள்ள தொடர்பு என்று அறியவும் குருவருள் தேவை. ஒரு குடம் தண்ணீரை பெருங்கடலில் கொண்டுபோய் சேர்க்க நமக்கு கடல் இருக்குமிடத்தைக் காட்ட எப்படி ஒருவர் உதவி தேவையோ, அப்படி நம் ஜீவாத்மா என்னும் குடநீரை பரமாத்மா என்னும் கடலில் சேர வழி காட்டுபவரே தக்க குருவாவார்.

இரும்பு பூமிக்குள் உள்ளது. மனிதன் தன் அறிவினால் தெரிந்து விடாமுயற்சியால் அதை வெளியே கொண்டு வருகிறான். அந்த இரும்பு கருமானின் உலைக்களத்திற்கு போய்ச் சேருகிறது. கருமான் உலைக்களத்தில் பழுக்கக் காய்ச்சி ஒரு பகுதியை கூர்மையான கத்தி ஆக்குகிறான். ஒரு பகுதியை, கோயில் துவசத்தம்பத்தின் அடிப் பீடமாக்கி அடிப்பட்டை ஆக்குகிறான்.

கூர்மையான கத்தி கசாப்புக் கடைக்காரனிடம் சென்று பல உயிர்களை வெட்ட உதவுகிறது. அதே நேரம் கோயில் துவசத்தம்பம் அடிப்பட்டை இரும்பை தொட்டு வணங்குகின்றார்கள். சூழ்நிலையாலும் அதன் தன்மை வேறுபடுகிறது. அதுபோல் ஆன்மா ஒன்றுதான். உருவத்தாலும், இருக்கும் இடத்தாலும், சூழ்நிலையாலும் வேறுபடுவதுபோல் தோன்றும்.

பூந்தோட்டத்தில் பூக்களைப் பறித்து ஒரு கூடையில் கொண்டு வந்து மாலைகளாகக் கட்டுகின்றனர். அந்த மாலைகளில் ஒன்று ஆண்டவன் அலங்காரத்திற்கும், ஒன்று மணமக்கள் அலங்காரத்திற்கும் பயன்படுகிறது. மற்றொன்று பிணத்திற்கு மாலையாகப் போட்டு பிறகு அதை தெருவில் வீசியெறிந்து மிதித்துக் கொண்டு நடக்கின்றனர். ஆண்டவன் அலங்காரப் பூவை குருக்கள் மூலம் பெற்று கண்ணில் ஒற்றிக் கொள்கிறார்கள். பூ ஒன்றுதான். அது அதன் இடம், சூழ்நிலையைப் பொருத்து அதற்கு மதிப்பு ஏற்படுகிறது. அதுபோல் ஆன்மா ஒன்றுதான். அந்தந்த ஆன்மாவிற்குக் கிடைக்கும் குருவைப் பொருத்தது. அந்தந்த ஆன்மாவைப் பெற்ற உடலுக்கு ஏற்படும் மதிப்பும் மரியாதைகளும் கொலை பாதகம் புரிபவன் ஆன்மாவும், பொய், சூது, களவு செய்து பிழைப்பவன் ஆன்மாவும், உழைத்து உண்ணுபவன் ஆன்மாவும் ஒரே பரபிர்மத்தினடமிருந்து வந்த ஒரு துளியே. அவனவனுக்கு கிடைத்த குருவைப் பொருத்தது அவனுடைய செயல். உண்மை பேசி நல்லொழுக்கத்தைக் கடைப்பிடிப்பவன் ஆன்மாவும், பரபிர்மத்தினிடம் வந்த ஒரு துளியே. அவனவன் சேரும் இடம், சாரும் மனிதனைப் பொருத்து அவனவனுடைய செயல் வெளிப்படுகிறது. ஆனால் நமக்கு கிடைக்கும் குரு, நீ பரபிர்மத்தின் ஒரு துளி என்பதையும் அந்த பிர்ம நிலையை உணரவும் அதை பரபிர்மத்துடன் சேரும்படி நாம் செயல்படவும் காட்டிக் கொடுப்பவரே தக்க குரு ஆவார்.

நம் உடலில் உள்ள ஆறு ஆதாரங்களாகிய 1. மூலாதாரம் (எருவாய்) 2. சுவாதிட்டானம் (கருவாய்) 3. மணிபூரகம் (தொப்புள்) 4. அனாகதம் (இருதயம்) 5. விசுத்தி (உள்நாக்கின் அடிப்புறம்) 6. ஆக்கினை (புருவ நடு நெற்றி) இவைகளில் மூலாதாரத்தில் உள்ள குண்டலினி சக்தியை தட்டி எப்படி எழுப்புவது என்றும் மேலேற்றிய குண்டலினி சக்தியை ஒவ்வொரு ஆதாரமாக எப்படி செயல்பட்டு ஏற்ற வேண்டும் என்றும் நமக்குத் தட்டி எழுப்பிக் காட்டிக் கொடுப்பவரே தக்க குரு ஆவார்.

"இருவினைப் பகுதியாலே எடுத்திந்தந் தேகந்தன்னை
மருவிய நானான்என்று மாயையால் அழிந்தாய்நீதான்
குருவினால் குறியைப்பார்த்து குண்டலிவழியே சென்றாங்கு
உருவினால் நாகைநாதர் உண்மையை உணர்வாய் நெஞ்சே."

-கணபதி தாசர்

உண்மை பிர்மநிலை அறியச் செய்பவரே தக்க குரு ஆவார். இப்பிறவியை அறுப்பதற்கும் இந்த சீவனை பரபிர்ம நிலையுடன் கலக்க குருவருள் இருந்தால் அந்த நிலையை நாம் அடைய முடியும். குருவருள் இன்றி தன்னைத்தான் உணரமுடியாது. ஒரு சீவாத்மா தன்னைத்தான் உணர்ந்துவிட்டால், பிறகு அதற்கு அடுத்த நிலை பரமாத்மாவுடன் ஐக்கியமாகும் நிலை எய்துவிடும். இப்படிப்பட்ட நிலை எய்த ஒரு குருவருள் இருந்தாலன்றி, அந்நிலை ஏற்படாது.

பணம் கோடி, கோடியாக இருந்தால் என்ன? வித்தைகள் பல கோடி இருந்தால் என்ன? பந்தங்கள் பல இருந்தும் என்ன? மனதை அடக்கி

யோகநிலை எய்தினால் என்ன? குருவருள் இன்றி இவைகள் பயனற்றவையே.

சிலை வடிவில் உள்ள விக்கிரகங்களுக்கு அபிடேக ஆராதனை செய்வதைவிட, நடமாடும் மெய் ஞானியை குருவாகக் கொள்வது, பரபிர்ம நிலையெய்ய தக்க வழி என்று நாம் உணர வேண்டும். இதைத்தான் ஞான நூல்கள்.

''குருர் பிரம்மா. குருர் விட்ணு, குருர் தேவோ
மகேசுவரா!''

என்று கூறுகிறது. எனவே குருவின் நிலை இம் மும்மூர்த்திகளையும் கடந்த பரபிர்ம நிலையாகும். அந்த பரபிர்மமும் நமது சீவாத்மாவும் ஒரு நிலையே என்று உணர்ந்து குருவை நாடிப் போக வேண்டும். பரபிர்மம், குரு, சீவாத்மா எல்லாம் ஒன்றே என அறிய குருவருளின்றி நாம் உணரமுடியாது.

''குரு: சாட்சாத் பரபிரம்மா தசுமை
ஸ்ரீகுருவே நம:''

என்பது ஆரம்ப ஞானப் பயிற்சியின் பாடமாகும். இப்படிப்பட்ட பரபிர்ம நிலையை காட்டிக் கொடுக்க மானிட உருவில் வந்தவரே நம் பூண்டி மகான் ஆற்றுச் சுவாமிகள்.

அதற்குத்தான், மாதா, பிதா, குரு, தெய்வம் என்று நம் முன்னோர்கள் வரிசைப்படுத்தியுள்ளனர். தாய் தான் பெற்ற பிள்ளைக்கு, அவன் தந்தை யார்? என்று காட்டிக் கொடுப்பாள். தந்தை தக்க குருவைக் காட்டிக் கொடுப்பார். குரு தெய்வ நிலையைக் (பிர்மநிலையை) காட்டிக் கொடுப்பார்.

சிவனே குரு உருவில் வருவார். விட்ணுவே குரு உருவில் வருவார். அல்லாவே குரு உருவில் வருவார். ஏசுவே குரு உருவில் வருவார். உனக்கு கிடைத்த குருவை நீ சார்ந்த மதத்தின் தெய்வமாக உணர வேண்டும். ஏன், தீர்த்தங்கரரே குரு உருவில் வருவார். பேரான்மா ஒன்றுதான். அது நீ சார்ந்த இடத்தையும், நீ சார்ந்த மதத்தின் தெய்வத்தின் பேரால் மாறுபடலாமே ஒழிய பேரான்மா ஒன்றே என அறியவும்.

குலம் கெட்டு, கோத்திரம் கெட்டு, (கெட்டு என்பது இங்கு விட்டு என்று அறியவும்) மதம் கெட்டு, மானம் கெட்டு வந்தவர்களே மெய் ஞானிகள். அப்படிப்பட்ட மெய் ஞானியை நாம் குருவாகக் கொண்டபின், அவர்கள் குலம், கோத்திரம், மதம் என்னவென்று நாம் அறிய முற்படக் கூடாது. ரிசிமூலம், நதி மூலம் நமக்குத் தேவையில்லை. தன்னுள் உள்ள பிர்மத்தைக் கண்டவர் அத்தனை பேரும் பிராமணனே. பிர்ம நிலையைப் பார்த்தவன் பிராமணன். அப்படி பிர்ம நிலையைக் காணாதவன் அத்தனை பேரும் கீழ்க்குலத்தவனே. இதில் எல்லோரும் ஒன்றே!

புருவ நடுவில் மூலாதாரத்தில் இருந்த குண்டலி சோதியை ஏற்றிப் பார்த்தவன் அத்தனைபேரும் பிராமணன் (பிர்மத்தை பார்த்தவன் என்று பொருள்). குரு இல்லாமல் ஏட்டில் எழுதியதைக் கண்டு மயங்கி, நம்முள்

உள்ள சோதியைக் காணாமல் போனவர்கள் கோடானு கோடி என்று திருமூல பகவான் கூறுகிறார்.

''ஓடி ஓடி ஓடி ஓடி உட்கலந்த சோதியை
நாடி நாடி நாடி நாடி நாட்களும் கழிந்துபோய்
வாடி வாடி வாடி வாடி மாண்டு போன மாந்தர்கள்
கோடி கோடி கோடி கோடி எண்ணிறந்த கோடியே''

என்கிறார் குருவில்லா கல்வியை கற்றவர்களின் நிலையை. யோக நிலை விரும்பும் சாதகன் தக்க குருவை நாடி அவரை குரங்குக் குட்டி தன் தாயை விடாமல் பற்றிக்கொள்வதுபோல் பற்றிக் கொள்ள வேண்டும். ஏட்டில் பலர் பலவித கருத்துடன் எழுதி வைத்ததை படித்து விட்டு மயங்கிவிடக் கூடாது. ''பிள்ளையார் பிடிக்க குரங்காகப் போய்விடும்'' தன்மைபோல் ஆகிவிடும் என்று உணரவேண்டும்.

தக்க குருமூலம் ஞானம் பெற முயற்சி வேண்டும். அதை விட்டுவிட்டு ஏட்டில் எழுதியதைக் கொண்டு ஞானப் பயிற்சி மேற்கொண்டால் ஆட்டின் கழுத்தில் தொங்கும் சதைத் தோலை (ஆட்டின் தாடி) ஆட்டின் முலைக்காம்பு என்று நினைத்து அதில் பால் வரும் என்று ஒருவன் கறந்தால் எப்படி பால் வரும். ஏமாற்றமே மிஞ்சும், அறியாமையே மிஞ்சும் என்றும் கூறுகிறார் திருமூல பகவான்.

''காட்டுங் குறியுங் கடந்தவர் காரணம்
ஏட்டின் புறத்தில் எழுதிவைத் தென்னபயன்
கூட்டுங் குருநந்தி கூட்டிடின் அல்லால்
ஆட்டின் கழுத்தில் அதர் கறந்தற்றே!'' -திருமந்திரம்

மேலும் விவேக சிந்தாமணி என்னும் நூலில் குரு இல்லாத ஞானம், எப்படிப்பட்டது என்று கூறப்பட்டுள்ளது.

''மூப்பில்லா குமரிவாழ்க்கை முனையிலா வரசன்வரங்
காப்பிலா விளைந்தபூமி கரையிலா திருந்தவேரி
கோப்பிலான் கொண்டகோலம் குருவிலான் கொண்டஞானம்
ஆப்பில்லாச் சகடுபோலே யழியுமென் றுரைக்கலாமே''

ஒரு வாலிப வயது வந்த பெண் தனக்கு முன் பிறந்த பெரியோர்கள் இல்லாமல் தனித்து வாழ்வதும், கோபமில்லாத அரசன் வீரமும், காவல் இல்லாமல் செழுமையாக பயிர் வளர்ந்த பூமியும், கரையில்லாமல் நீர் நிறையும் ஏரியும், தகுதி இல்லாதவன் வீண் பெருமையும், தக்க குரு மூலம் கல்லாதவன் ஞானமும், கடையாணி இல்லாத வண்டிபோல் கழிந்து அழிந்து போய்விடும் என்று உணர வேண்டும்.

தக்க குரு கிடைத்துவிட்டால், அவர் கண் திருட்டி நம்மீது பட்டு விட்டால் ஞானம் தன்னாலே வரும் என்றும், ஞான நூல்கள் கூறுகிறது. பரிசனவேதி

என்கிற சஞ்சீவி மூலிகை எந்தப் பொருள் மீது பட்டுவிட்டாலும் அது தங்கமாகி விடும் தன்மை உள்ளது. அதுபோல் மூடர்களுக்கும் அவர்கள் முன்செய்த தவப் பயனால் தகுந்த குரு கிடைத்து விட்டால், அந்த மூடர்களின் பிறவி, ஆணவம், கன்மம், மாயை அற்றுத் தங்கமாகி விடும் என்று ஞானநூல் கூறுகிறது.

"பரிசனவேதி பரிசித்த தெல்லாம்
வரிசைதரும் பொன்வகை யாகும்போல்
குரு பரிசித்த குவலயமெல்லாம்
திரிமலம் தீர்ந்து சிவகதியே"

ஞானத்திற்கு முதல் ஆதாரம் தக்க குருவே ஆகும். நீர்மடையனாக இருந்தாலும் சரி, தடியனாக இருந்தாலும் சரி, தக்க குரு உன் பூர்வ புண்ணிய வசத்தால் கிடைத்து விட்டால் இப்பிறவி தங்கமே என்று அறிய வேண்டும்.

"சும்மா இருக்கும் சுகம்" என்ற தத்துவத்தையும் "தூங்காமல் தூங்கி சுகம் பெறும்" தத்துவத்தையும் நமக்கு உணர வைப்பவரே தக்க குரு ஆவார்.

"என்னையே நானறிய இருவினையு மீடழித்துத்
தன்னை யறியத் தலமெனக்குச் சொன்னாண்டி"

என்று பட்டினத்தடிகள் தன் குரு சிவபெருமானை நினைத்துப் பாடுகிறார். குருவே சிவன். சிவனே குரு. அப்படித் தன்னைத் தானறிய நல்வினை, தீவினை அகல தக்க குரு அருள் நமக்குத் தேவை. அப்படிப்பட்ட குருவைத் தேடி ஓடு, ஓடிக்கொண்டே இரு! தக்க குரு கிடைக்கும் வரை. குரு கிடைத்தபின் அவர் காலை விடாமல் பற்றிக்கொள். அவர் கூறும் வழியை விடாமல் பின் பற்று. அப்படி பின்பற்றினால் உன்னுடைய பிறவி, தங்கமய்மாகும் என்று உணர வேண்டும்.

இந்திரியங்களின் வழியே நம் மனம் சென்று அடிமையாகாமல் மனதால் இந்திரியங்களை வசப்படுத்தி வைக்கும் தத்துவத்தை அறிவிப்பவர் தக்க குரு ஆவார்.

ஒவ்வொரு சீவனும் பரபிர்மத்தினிடம் இருந்து வந்த சிறு துளியே. அப்படி வந்த ஜீவனிடம் பிர்ம பரிபூர்ண நிலை அப்படியே உள்ளது. அதை அந்த சீவன் அறியாமல் மாயா உலகின்மேல் மாயையால் உழன்று கொண்டிருக்கிறது. அந்த மாயையிலிருந்து விடுபட்டு அந்த சீவனிடம் உள்ள பரிபூர்ண நிலைய்க் காட்டிக் கொடுப்பவரே தக்க குரு ஆவார்.

ஒரு சிங்கம் காட்டில் ஒரு சிங்கக் குட்டியை ஈன்று விட்டு இறந்து விட்டது. அந்த சிங்கக் குட்டியை ஆடு மேய்ப்பவன் கண்டு எடுத்து தன் ஆட்டுக் குட்டியுடன் வளர்த்து வந்தான். சிங்கக் குட்டியும், ஆட்டின் பாலைக் குடித்து வளர்ந்து, ஆட்டுக் கூட்டத்துடன் தினம் மேய்ச்சலுக்குப் போய் புல்லை உணவாக உண்டு வாழ்ந்து வந்தது. சிங்கக் குட்டி புல் மேய்வதைக் கண்ட வேறு ஒரு சிங்கம் அந்தக் குட்டியை ஆட்டுக் கடையிலிருந்து நைசாகப் பேசி காட்டிற்குள் கொண்டு சென்று விட்டது. அங்கு அது அந்த சிங்கக்

குட்டியைப் பார்த்து. "நாம் ஆட்டை உணவாகக் கொள்ளும் இனம். நீயோ! அந்த ஆட்டுக் கிடையுடன் புல்லை மேய்கிறாய்" என்று கூறி மிருக மாமிசத்தை அந்த சிங்கக் குட்டிக்கு உணவாகக் கொடுத்து அந்த சிங்கக் குட்டியை ஒரு குளத்தினருகே அழைத்துச் சென்று அதன் உருவத்தை தண்ணீரில் காண்பித்து "நீ ஆடு அல்ல. என் போல் சிங்கம்" என்று பக்குவமாகக் கூறி, அந்த சிங்கக்குட்டி தான் "சிங்கம்" என உணர வைத்தது.

இதுபோலவே உன்னிடம் உள்ள பரிபூர்ண தெய்வநிலை எங்கும் போய்விடவில்லை. அந்த பரிபூர்ண நிலையை உனக்கு பக்குவமாக காட்டிக் கொடுக்க தக்க குரு தேவை. ஏட்டில் எழுதி வைத்துவிட்டுப் போனதைப் படித்துவிட்டு மயங்கி விடக் கூடாது என்று ஞானிகள் அறுதியிட்டு கூறுகிறார்கள்.

"என்னறிவை உள்ளடக்கி
என்போல் வருமவுனி
தன்னறிவுக் குள்ளேநான்
சாருநாள் எந்நாளோ!"

என்று தாயுமானவ சுவாமிகள் தன் "குருமரபின் வணக்கம்" என்ற பகுதியில் பாடுகிறார். அப்படி "தன்னைத்தான் அறிய" ஒரு தக்க குரு தேவை என்பதை எல்லா ஞானிகளும் தன் ஞான நூல்களில் அறுதியிட்டு கூறுகிறார். அவர்கள் மிகவும் எச்சரிக்கையுடன் குருவை அடையச் சொல்கிறார்கள்.

1. கடவுளிடம் செல்பவனுக்குச் சத்தியம் வேண்டும்.
2. வைத்தியனிடம் செல்பவனுக்கு பத்தியம் வேண்டும்.
3. அரசியல்வாதிக்கு கொள்கை வேண்டும்.
4. குருவினிடம் ஞானம் பெற வைராக்கியம் வேண்டும்.

ஈசுவரனைக்காண நீ எங்கும் தேடி அலைய வேண்டாம். அவன் உன்னிடமே உள்ளான். உன்னில் தேடு. வேறு எந்த பொருட்களிலும் விலங்குகளிலும் உன்னில் அதிகமாக உள்ளான். அப்படி உன்னில் உள்ளவனைக் காண உன்னால் முடியாது. குருவருள் ஒன்றே ஈசனைக் காணத் தக்க வழியாகும். அதனால் அன்பில் பொங்கி வழிகின்ற புருசர், பந்தமில்லா புருசர். வெறுப்பு, விருப்பு அற்ற புருசர். நினைப்பும், மறப்பும் அற்ற புருஷர். தன்னைத்தான் உணர்ந்து தான் அதுவான புருசர் யாரோ, அவரைத்தேடி உன் ஞானப் பசியைப் போக்கிக் கொள். அவர் உன்னில் உறையும் ஈசனைக் காட்டி, பிறவிப் பெருங்கடலில் இருந்து கரைசேர்ப்பார் என்று அறியவும்.

அப்படி நம் பிறவிப்பிணி தீரவும் நல்வினை, தீவினை அகலவும், நம்மில் நாம் யார்? என்று உணரவும் அருள்புரிய வந்த சித்தமகா புருசரே நம் பூண்டி ஆற்று சுவாமிகள்.

உன்னை யாரும் வீட்டையும், மனைவி, மக்களையும் துறந்து காட்டிற்கு ஓடி விடச் சொல்லவில்லை. எண்ண விருத்திகளினால் ஏற்படும் ஆசாபாசங்

களைத்தான் துறக்கச் சொல்கிறார்கள். அருச்சுனன் ஞானமடைய பூப்பறிக்க வில்லை. கோயில் குளம் போகவில்லை, காசாயம், பாதக்குறடு போட வில்லை. தக்க குரு மூலம் (கிருட்ணபரமாத்மா மூலம்) ஞானம் பெற்றான். அப்படிப்பட்ட ஞான குருவை தேடி அலைய வேண்டுமே தவிர, காட்டிற்கு ஓடிவிடச் சொல்லவில்லை.

நம் உடல் மனதோடு மாயையில் ஒன்றிய ஆன்மாவின் அழுக்கை நீக்கி பரமான்மாவோடு இந்த ஆன்மா அன்புடன் இணைக்க வழி காட்டவும், ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்களோடு ஆன்மா சேராமல் அந்த மும்மலங்கள் ஒழிய நீக்குவோர் சற்குரு ஆவார். தன் உலக ஆசாபாசங்களையும் தன்னை அடைந்தவர் பாசத்தையும் ஒழித்து இறைவனை நாடி மலம் மூன்றையும் அகற்றியவர்களே தக்க சற்குரு ஆவார்.

"பாசத்தை நீக்கி பரனோடு தன்னையும்
சேர்த்துநாடி மலம்அற நீக்குவோர்
அசற்ற சற்குரு ஆவோர் அறிவற்றுப்
பூசற்கிரங்குவோர் போதக் குருஅன்றே!"

திருமந்திரத்தில் திருமூல பகவான் சற்குருவின் தன்மை எப்படிப்பட்டது என்று கூறுகிறார். இப்படி நாம் இவ்வுலக மாயையான வாழ்வில் ஆணவம், கன்மம் மாயையை விடாமல் பற்றிக் கொண்டுள்ளோம். இதை அறுத்து நல்வழி காட்டவே ஸ்ரீ பூண்டி ஆற்று சுவாமிகள் போன்ற சற்குரு நாதர்கள் தோன்றுவார்கள். அப்படி நமக்குக் கிடைத்த சற்குரு காட்டிய பாதையில் நாம் வழி தவறாமல் நடந்தோமானால், நாம் பிறப்பறுக்கும் பேறும் பிறவிப் பெருங்கடலில் இருந்து கரையேறும் நற்கதியையும் அடைந்தால் நம் பிறவி தங்க மயமாகிவிடும்.

சற்குரு ஒருவர் தன் யோக மாணாக்கனுக்கு மாணாக்கனின் ஆன்மா பற்றியுள்ள பாசத்தை நீக்கி 'ஆன்மா'வை உடல் படுத்தும் உபாதைகளிலிருந்து தனியே பிரித்துப் பேரான்மாவில் சேரும் வழியைப் பலவிதங்களில் கற்றுத் தருபவரே தக்க குரு ஆவார்.

மீன் தண்ணீரில் முட்டைகளை வெளிப்படுத்திக் கொண்டே போகும். பிறகு அவைகளைத் தன் கண்ணால் திரும்பிப் பார்த்தால் அவைகள் மீன் குஞ்சுகளகும். அதுபோல் சற்குரு ஒருவர் தன் மாணாக்கனை தன் அருட்பார்வையால் அவனுக்குள் இருக்கும் ஆன்ம பேதத்தை புரிய வைப்பார். இது 'நயன தீட்சை' என்று கூறுவர்.

கோழி ஒன்று தன் முட்டைகளை தன் இரு இறகுகளால் பாதுகாத்து குஞ்சு பொரிக்கும். அதுபோல் சற்குரு ஒருவர் தன் மாணாக்கனை தன்னுடைய ஞான அத்திரம் கொண்டு அவன் தலையில் தொட்டு பாசத்தை நீக்கி 'ஆன்மா' வை உணர வைப்பார். இதற்கு 'பரிச தீட்சை' என்றும் கூறுவர்.

கடலில் உள்ள ஆமை கடல் மணலில் முட்டைகளை ஈந்து மணலை மூடிவிடும். பிறகு ஆமை கடலில் சென்று விடும். சில நாள் கழித்து கடலில் உள்ள ஆமை தன் முட்டைகளை மனதால் எண்ணிப் பார்த்த அளவில்

கடற்கரையில் மணலில் உள்ள ஆமை முட்டைகள் குஞ்சு பொரித்துவிடும் தன்மைபோல், சற்குரு ஒருவர் தன் மாணாக்கனை வெகு தொலைவில் இருந்து மனதால் நினைத்தவுடன் அம்மாணாக்கனுக்கு தன் பிர்ம நிலையை உணர குரு தீட்சை கிடைத்துவிடும். இதற்கு 'மானச தீட்சை' என்றும் கூறுவர்.

இந்த மாதிரி மீன் தன் முட்டைகளைத் தன் பார்வையாலும், கோழி தன் முட்டைகளை தன் உடல் பரிசத்தாலும், ஆமை தன் முட்டைகளை மனதால் நினைப்பதாலும் எப்படி முட்டைகளைக் காத்து குஞ்சு பொரிக்கிறதோ, அப்படி உண்மை சற்குரு தன் உண்மை மாணாக்கனை தன் அருட்பார்வையாலும், தன் பரிச தொடுதலாலும், தன் மானச நினைப்பாலும், அந்த மாணாக்கனுடைய ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்களை நீக்கி, தன்னுள் உள்ள பிர்ம நிலையை உணர்த்தி, ஜீவான்மாவை பரமான்மாவிடம் சேர, வழி வகுப்பவரே சற்குரு ஆவார்.

அப்படி நம்முள் காலா காலமாக தொடர்ந்து வந்த மும்மலங்களையும், அந்தக்கரணங்கள் நான்கையும் ஒழித்து, நம்முள் உறையும், பிர்மநிலையை தட்டி எழுப்பி, பரபிர்மத்துடன் சேர்க்க வந்த பரம்பொருளே நம் பூண்டி மகான் ஆற்று சுவாமிகள்.

பிர்ம ஞானி ஒருவர் பல மைல்களுக்கு அப்பால் உள்ள தன் மாணாக்கனை இருந்த இடத்தில் தன் மனதால் நினைத்தவுடன் அம்மாணாக்கனின் உலக ஆசாபாசங்களை ஒழிக்கும்நிலை ஏற்பட்டு, ஆன்மாவின் சுய சொருபத்தைக் காணும் நிலையையும் அடைந்து விடும் தன்மை வரச் செய்துவிடுவார்கள்.

அப்படி வடநாட்டில் உள்ள தன் உண்மை மாணாக்கனை பூண்டி என்ற சிறிய கிராமத்தில் உள்ள ஒரு ஓட்டு வீட்டுத் திண்ணையில் அமர்ந்தபடியே வரவழைத்து அருள்பாலித்தார். வட நாட்டில் இருந்து வந்த யோகியர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள், ஸ்ரீபாத சுவாமிகள், ஸ்ரீ பூர்ணானந்த சுவாமிகள், ஸ்ரீ சங்கலிச் சுவாமிகள் போன்ற மகான்களும் நம் பூண்டி மகான் ஆற்றுச் சுவாமிகளின் அருட் பார்வைக்கும், ஞானப் பார்வைக்கும் இலக்கானர்கள் என்பது உலகறிந்த உண்மை.

போலி குரு

போலிச் சாமியார்கள் நிறைந்த உலகமாகி விட்டால்தான், தக்க குருவை நாட வேண்டும் என்று ஞானிகள் உறுதிபடக் கூறுகின்றனர்.

தாடியையும், மீசையையும் வளர்த்துக்கொண்டு, தனக்குக் குண்டலினி மூன்றாவது ஆதாரத்தில் இருக்கிறது என்பான். நான்கு வேதங்களையும் கரைத்து ஒரே மூச்சாக குடித்துவிட்டேன் என்பான். குண்டலினி என்றால் என்ன பொருள் என்றே தெரியாதவன், குண்டலினியை மேலேற்றிக் கொண்டிருக்கிறேன் என்பான். பொய் யோகி, இப்படிப்பட்ட பொய் யோகிகளை அடையாளம் காட்டுகிறார் கருவூர்த்தேவர் என்ற சித்த மகா புருசர்.

"புகலுவார் வேதமெல்லாம் வந்ததென்று
பொய்பேசிச் சாத்திரங்கள் மிகவும்கற்றே
அகலுவார் பெண்ணாசை விட்டோமென்றே
அறிவுகெட்டே ஊர்தோறுஞ்சுற்ற சுற்றிச்
சகலமுமே வந்தவர்போல் வேடம்பூண்டு
சடைமுடியுங் காசாயந் தன்னைசாற்றி
இகலும் மனமடங்காமல் நினைவுவேறாய்
எண்ணெமெல்லாம் பெண்ணாசை பூசைதானே"

நம் நாட்டில் இன்று மலிவாகவும் எந்த அரசாங்கக் கட்டுப் பாடுமில்லாமல் மிகுந்து காணப்படுகிறது, போலிச் சாமியார்கள் தான். அவர்கள், அப்பாவி மக்களைத் திசை திருப்பி, அழிவுப் பாதையில் கொண்டு செல்வதால்தான் 'தக்க குரு' தேவை என்று ஞானிகள் பல ஆயிரம் வருடங்களுக்கு முன்னாலே பாடலாகப் பாடி, மக்களின் மாயையை அகற்றி வந்துள்ளனர். வாலை பூசை என்பான். குண்டலி பூசை என்பான். ஆனால் வாலை, குண்டலி என்றால் என்ன பொருள் என்றே முதலில் அவர்களுக்குத் தெரியாது.

பொய் குரு

"தானென்ற பிரமத்தை யடுத்திடாமல்
தாரணியில் தெய்வமடா அனந்தமென்றும்
ஊனென்ற குருவென்றுஞ் சீடனென்றும்
உதயகிரி பாராத வுலுத்தமாடு
வேனென்ற பொய்களவு கொலைகள்செய்து
வேசையர்மேல் ஆசைவைத்து வீணனாகிக்
கோனென்ற குருபாதம் அடையமாட்டான்
கூடுவான் நரகமதில் வீழ்வானன்பரே" - காகபுசுண்ட மகரிஷி

மேலும் பொய்க் குருவைப்பற்றி தன் 'புசண்டர் 1000' என்ற நூலில் பாடுகிறார்.

1. நாட்டுவார் சித்தரெல்லாம் பேதமாக
நலம்போல சாத்திரங்கள் கட்டினார்கள்
பூட்டியே மனிதரெல்லாம் நூலைப்பார்த்துப்
பூரணமாய் அண்டமதைப் பாராமற்றான்
காட்டிலே திரிந்தலைந்த மானைப்போல
கபடமாய் வாய்ஞானம் பேசுவார்கள்
கூட்டிலே அடைத்திருக்கும் குயிலைப்பாரார்
கூறாத மத்திரத்தின் குறியைப்பாரே!

2. குறியென்ற உலகத்திற் குருக்கள்தானும்
கொடியமறை வேதமெல்லாங் கூர்ந்துபார்த்தே
அறியாமற் பிரமத்தைப் பாராமற்றான்
அகந்தையால் பெரியோரை அழும்புபேசி
விரிவான வேட்மிட்டு காவிபூண்டு
வெறும்பிலுக்காய் அலைந்திடுவான் நாயைப்போலே
பரியாச மாகவுந்தான் தண்டும்ஏந்தி
பார்தனில் குறட்டிடு நடப்பான்பரே!

3. பாரப்பா சீடர்களை அழைப்பான்பாவி
பணம்பறிக்க உபதேசம் பகர்வோன்என்பான்
ஆரப்பா பிரமநிலை காட்டமற்றான்
ஆகாசப்பொய்களையும் அவன்தான் சொல்வான்
நேரப்பா சீடனுக்குப் பாவமாச்சு
நிட்டைசொல்லுங் குருக்களுக்குத் தோடமாச்சு
வீரப்பா அடங்குகின்ற இடத்தைப்பாரான்
விதிபோ லெழுந்ததுஎன்று விளம்புவான்!

என்று பொய் வேடதாரிகளை காகபுசண்டர் சாடுகிறார். பல பொய்த் துறவிகளின் நடமாட்டத்தால்தான், உண்மை ஞானிகளை நம்மால் காண முடியாமல் போய் விடுகிறது. உண்மை ஞானி எப்படி இருப்பார் என்று பட்டினத்து அடிகள் கூறுகிறார்:

பேய்போல் திரிந்து பிணம்போல் கிடந்து இட்டபிச்சை எல்லாம்
நாய்போல் அருந்தி நரிபோல் உழன்று நன்மங்கையரைத்
தாய்போல் கருதி தமர்போல் அனைவருக்கும் தாழ்மை சொல்லி
சேய்போல் இருப்பர் கண்டீர் உண்மை ஞானம் தெளிந்தவரே!

மேலும் ஞானகுரு எப்படி இருப்பார் என்று சிவவாக்கியர் கூறுகிறார்:

சுடர் எழும்பும் சூட்சுமமும் சுழிமுனையின் சூட்சுமமும்
அடர் எழும்பி ஏகமாக அமர்ந்து நின்ற சூட்சுமமும்
திடர் அதானசூட்சுமமும் திரியின்வாலை சூட்சுமமும்
கடலெழும்பு சூட்சந்தன்னை கண்டறிந்தோன் ஞானியே!

பொய் ஞானியைப்பற்றி சிவவாக்கியர் கூறுகிறார்:

ஞானிஞானி என்றுரைத்த நாய்கள் கோடிகோடியே
வானிலாத மழைநாளென்ற வாதி கோடிகோடியே
தானிலான சாகரத்தின் தன்மைகாணா மூடர்கள்
மூனிலாமல் கோடிகோடி முன்றமைந்த தென்பரே!

ஒரு ஊரில் ஒரு பொய் குரு. அவருக்கு ஒரு பொய் சீடனும் இருந்தான். சீடன் தினம் ஊரில் சென்று பொருள் யாசகம் பெற்று வந்து உணவு வகை சமையல் செய்து இருவரும் உண்டு கொழுத்து காலத்தை வீணாக்கிக் கொண்டும் ஊரை ஏமாற்றியும் வந்தனர்.

ஒரு நாள் சீடன் தன் குருவை நோக்கி 'குருவே, இன்று ஊரில் யாரும் பிச்சை போடவில்லை. அதற்குக் கோடி வீட்டில் வசிக்கும் குப்பம்மாள் தான் காரணம்' என்று கூறினான். அதற்கு குரு, என்ன விசயம் என்று சீடனைப் பார்த்துக் கேட்டார். சீடன் 'குருவே, அந்த கோடி வீட்டில் வசிக்கும் குப்பம்மாள் இதுவரையில் நமக்கு எந்தப் பிச்சையையும் போட்டது இல்லை. மற்றவர்களையும் அந்த தடி சன்யாசிப் பயல்களுக்கு ஏன் வீணாகப் பிச்சை போடுகிறீர்கள் என்று கலகம் செய்துவிட்டு தன் புருசனுடன் ஆனந்தமாக இருக்கிறாள்' என்று கூறினான்.

அதற்கு குரு 'சீடா, நாம் நம் குடும்பத்தில் ஆனந்தமாக மனைவிகளுடன் வாழ முடியாமல்தான் சாமியாரானோம். ஆனால் கோடி வீட்டுத் தம்பதிகள் மட்டும் எப்படி ஆனந்தமாக வாழலாம், வாழ விடக்கூடாது. அதற்கு நான் ஒரு உபாயம் சொல்லுகிறேன். அதன்படி நீயும் நானும் செய்வோம். அவர்கள் குடும்பம், என்ன கதி ஆகிறது என்று பார்ப்போம்' என்று குரு கூற சீடனும் சேர்ந்து ஒரு தந்திரம் செய்தனர்.

மறுநாள் கோடிவீட்டுக் குப்பம்மாள் கணவன் சந்தைக்குப் போய்விட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்தான். அவனை சீடன் மடக்கி மிகவும் பணிவாக, 'ஐயா! நீங்கள் எவ்வளவு நல்லவர்! எவ்வளவு உயர்ந்த குலத்தவர் என்று எனக்குத் தெரியும். ஆனால் உமக்கு வாய்த்த மனைவியோ போன பிறவியில் சொறிநாயாக இருந்தவள். அவளுடன் தாங்கள் எப்படித்தான் (அந்த நாயுடன்) வாழ்கிறீர்கள் என்று புரியவில்லை' என்று கூறினான். அதற்கு குப்பம்மாள் கணவனுக்கு கோபம் வந்து சீடனைக் கண்டு திட்ட ஆரம்பித்தான். அதற்கு சீடன் என் மீது ஏன் கோபப்படுகிறீர். நான் சொல்வது உண்மையா? பொய்யா? என்று இன்று இரவு நீங்கள் தூங்கும்போது நடு இரவில் தங்கள் காலை உமது மனைவி நக்குவதை நீரே பார்த்து தெரிந்துகொள்கள் என்று கூறிவிட்டான். குப்பம்மாளின் கணவனும் சரி, இதை இன்று இரவு தூங்குவது போல் இருந்து சோதிக்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டு வீடு திரும்பினான்.

அதே தினம் குப்பம்மாள் தண்ணீர் எடுக்க, ஊர் குளத்திற்கு சென்று தண்ணீர் எடுத்துக்கொண்டு வீடு திரும்பிக் கொண்டிருந்தாள். வரும் வழியில் குரு எதிர்ப்பட்டார். 'ஐயோ! மகளே, நீ எவ்வளவு அழகு, அறிவு படைத்து உயர்ந்த குலத்தில் பிறந்து போயும் போயும் போன பிறவியில் உப்பு விற்கும் குறவனை மணந்துவிட்டாயே என்றுதான் எனக்கு வருத்தம்'' என்று கூறினார். அதற்குக் குப்பம்மாள் கோபமாக என் கணவர் அப்படிப் பட்டவர் அல்ல என்று கூற, அதற்கு குரு 'ஏம்மா என் மீது கோபப்படுகிறாய். நான் ஞான திருட்டியில் கண்தான் இதை கூறுகிறேன். நான் சொல்வது உண்மையா? பொய்யா? என்பதை இன்று இரவு நடுசாமத்தில் உன் கணவன் தூங்கும் சமயம் அவன் காலை நக்கிப் பார். போன ஜென்மத்தில்

உப்பு விற்ற காரணத்தால் அவன் காலை நக்கினால் உப்பு கறிக்கும் என்பதை உணர்வாய்'' என்று கூறிவிட்டுப் போய்விட்டார்.

குப்பம்மாள், சரி இன்று இரவு நடுநிசி நேரம் இதைச் சோதிக்க வேண்டும் என்று நினைத்துக்கொண்டு வீடு திரும்பினாள்.

அன்று இரவு குப்பம்மாள் தம்பதிகள் இருவரும் தனித்தனியாக சோதித்துப் பார்த்து விடவேண்டியது என்று தம்முடைய மனதில் எண்ணிக்கொண்டனர். இரவு வந்தது.

தம்பதிகள் இருவரும் ஒருவர், மற்றவருக்குத் தெரியாமல் தூங்குவது போல் நடித்தனர். நடு இரவு மனைவி எழுந்து வந்து தன் கணவனின் காலை நக்கிப் பார்த்தாள். தூங்குவதுபோல் இருந்த கணவன் இதை பார்த்து சீடன் சொன்னதுபோல் இவள் முற்பிறவியில் நாய்தான் என்று எண்ணி, 'அட, சீ. போ! நாயே' என்றான்.

அதற்கு மனைவி 'போடா உப்புக்குறவா!' என்று கூற இருவருக்கும் வாக்குவாதம் முற்றித் தனித்தனியே வாழ்ந்து வரலானார்கள். இப்படிப்பட்ட இல்லறவாசிகளைக் கெடுக்கும் சாமியார்கள் நம் நாட்டில் ஏராளமாக நடமாடுவதால்தான் உண்மை அறிந்த ஞானிகளையும் மக்கள் அடையாளம் காண முடியாமல், சாமியார் என்றாலே ஒரு பகுதியினர் வெறுக்கின்றனர்.

ஒரு பிர்மநிலை அறிந்த மெய்ஞ்ஞானி தன்னை ஞானி என்று கூறவோ, காட்டிக் கொள்ளவோ மாட்டார்கள். நம் பூர்வ புண்ணிய வசத்தால்தான் நமக்குப் புரிய வைப்பார்கள்.

''குக்கலைப் பிடித்து நாவிக் கூண்டினிலடைத்து வைத்து
மிக்கதோர் மஞ்சள் பூசி மிகுமணஞ் செய்தாலுந்தான்
அக்குலம் வேறதாமோ வதனிடம் புனுகுண்டாமோ
குக்கலே குக்கல் அல்லாற் குலந்தனில் பெரியதாமோ'

- விவேக சிந்தாமணி

புனுகை வெளியிடும் புனுகு பூனை இருந்த கூட்டில் தெரு நாயைப் பிடித்து அதில் அடைத்து வைத்து அதன்மேல் உயர்ந்த மஞ்சளைப் பூசி அதிக மணம் வரும்படி செய்தாலும் அந்த தெரு நாய் 'புனுகு' என்பதை வெளிப்படுத்தாது. நாய் நாயாகுமே தவிர, அதன் குணம், குலம் பெரியது ஆகிவிடாது. அதுபோல் ஒருவன் காவி உடை, நீண்ட அழகிய தாடி, மீசை வளர்த்துக் கொண்டால் மட்டும் அவன் ஞானி ஆகிவிட முடியாது. பூர்வ புண்ணியம் இருந்து இப்போது நம் செய்தவப்பயனால் ஒரு பிர்மஞானியின் தரிசனம் கிடைத்தால் அவரைவிடாமல் பற்ற வேண்டும். 'பற்று அற்றானை' பற்ற வேண்டும். அப்படிப் பற்று அற்றானைப் பற்றியவனே ஞானியாக வழியுண்டு என்று ஞான நூல்கள் கூறுகிறது.

காவியுடையும், நெற்றியில் விபூதி பட்டையையும் கழுத்தில் உத்திராட்சை கொட்டையயும் அணிந்து கொண்டு மனதில் பெண், பொன், மண் ஆசையையும் விடாமல் அணிந்து கொண்டு இருப்பவன் யோகி அல்ல. அப்படிப்பட்டவன் யோகியில் விபச்சாரி யோகி ஆவன்.

ஒரு ஊரில் இரண்டு முற்றும் துறக்காத துறவிகள் வாழ்ந்து வந்தனர். புறப்பார்வைக்கு அவர்கள் கைலாயத்தில் இருந்து புட்பக விமானத்தில் பூமியை நோக்கி வந்தவர்கள்போல் இருந்தனர். அந்த ஊரில் உள்ள விவசாயக் குடிமக்கள் இவர்களுக்கு அன்ன ஆகாரம் கொடுத்து வந்தனர். வீட்டிற்கு ஒரு நாள் உணவு கொடுப்பது என்று அவ்வூர் மக்கள் கூடிப்பேசி உணவு அளித்து வந்தனர்.

இந்த முற்றும் துறக்காத சாமியார்கள் தினம் வரும் உணவை வயிறு நிறைய தின்றுவிட்டு, ஊர் சத்திரத்தில் தங்கி காலம் கழித்து வந்தனர். ஊர் சத்திரத்தின் அருகில் விலை மாதர்கள் வசித்து வந்தனர்.

இந்த முற்றும் துறக்காத யோகியர்களுக்கு அந்த விலைமாதர் மேல் சதா ஒரு மனதுடன் நிட்டை கூடி 'சமாதி நிலை'யில் இருந்தனர். காலமும் கனிந்து வந்தது. விலை மாதர்கள் இவர்களுக்கு அன்னம் அளிக்கும் முறைநாள் வந்தது. விலை மாதர்கள் உணவுடன் சாமியார்கள் இருக்குமு இடத்தை அடைந்தனர். சாமியார்கள் யோகத்தில் இருப்பது போல் நடித்தனர்.

அந்த விலைமாதர்களைப் பார்த்து சாமியார்கள் 'பெண்களே! எங்களுக்கு உணவு வேண்டாம். எங்களைக் காமன் கொல்லுகிறான். அந்த காமப் பசியைத் தீர்த்து விட்டால் நீங்கள் மோட்சம் போக நாங்கள் ஆசீர்வாதம் செய்கிறோம்' என்று காமப்பிச்சை கேட்டார்கள். விலைமாதர்களும் இப்படிப்பட்ட யோகியருடன் கூடினால் நமக்கு இந்த இழிபிறவிபோய் நற்கதி அடையலாம் என்று எண்ணி அன்று இரவு சாமியார்களைத் தங்கள் இல்லத்திற்கு வருமாறு அந்த விலைமாதர்கள் கூறிவிட்டுப் போய்விட்டனர்.

அன்று இரவு சாமியார்கள் இருவரும் அக்கா, தங்கையை ஆளுக்கு ஒருவராக இன்பம் அனுபவித்து விட்டு மறுநாள் எப்போதும்போல் சத்திரத்தில் புறவேட்தாரிகளாக இருந்தனர்.

மறுநாள் விலைமாதர்கள் இருவரும் ஊரணிக் குளத்தில் தண்ணீர் எடுக்க சாமியார்கள் தங்கியுள்ள சத்திரம் வழியாகச் சென்றனர். அப்போது சாமியார்கள் இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்து, நேற்றிரவு நீர் இன்பம் அனுபவித்த பெண் எப்படி இருந்தாள் என்று பாடலாகப் பாடிப் பறிமாறிக் கொண்டிருந்ததை விலைமாதர்கள் ஒட்டுக் கேட்டுக் கொண்டிருந்தனர்.

ஒரு சாமியார் பாடினார் :

''சங்கரன் தேவி தமையன் மனைவி தனக்கு மூத்தாள்
அங்கவள் ஏறிய வாகனங் காணிவள்''

சிவபெருமானுக்கு மனைவியாகிய பார்வதிதேவியின் சகோதரன் மகாவிட்ணு. மகாவிட்ணுவின் மனைவி இலக்குமி. அந்த இலக்குமிக்கு முன்தவள் மூதேவி. அம்மூதேவியின் வாகனம் கழுதை. அப்படிப் பட்ட கழுதை போன்றவள் நான் கூடிய விலைமாது என்று வேத பாடம் கூறுவதுபோல் மறைமுகமாக கூறினார். அதற்கு மற்றொரு சாமியார் பாடினான்:

நான் கூடிய பெண் எப்படியெனில்:

"கொங்கைகள் ஈரைந்துடையவளாய்க் குவலயத்தில்
எங்கும்திரியும் பயிரமூர்த்தியென் றன்னையே!'

'பைரவக் கடவுளின் வாகனமாகவும், இரு ஐந்து பத்து முலைக் காம்புகளையுடையதாகவும், ஊர் எங்கும் சுற்றித்திரியும் நாய் என்ற மிருகம்போல் இருந்தாள்'' என்று கூறினான்.

இவைகளைக் கேட்டுக் கொண்டிருந்த விலை மாதர்கள் இருவரும் ஒன்றையும் கவனியாததுபோல் குளத்திற்குச் சென்று தண்ணீர் எடுத்துக் கொண்டு வரும்போது அந்தச் சாமியார்கள் காதில் படும்படி ஒருவள் மற்றவளைப் பார்த்து அன்றிரவு கூடிய சாமியார்களைப் பற்றிப் பாடலாகப் பாடிப் பதில் அளித்தனர்.

ஒருவள் பாடலாகப் பாடினாள்:

"அரவிந்தன் நண்பன் சுதன்றம்பிமைத்துனன் அண்ணன்கையில்
வரமுந்தி யாயுதம்பூண்டவன் காணுமற் றங்கவனே''.

"தாமரை மலருக்கு நண்பனாகியவன் சூரியன். அவன் குமாரன் கர்ணன். அவன் தம்பி அர்ச்சுனன். அந்த அர்ச்சுனன் மைத்துனன் கிருட்டிணன். அக் கிருட்டிணன் அண்ணன் பலராமன். அந்த பலராமனின் ஆயுதமோ கலப்பை. அந்த கலப்பையை பூமியில் உழும் எருமைக்கடா போன்றவன் என்னிடம் வந்த சாமியார்'' என்றாள்.

மற்றவள் பாடினாள் :

"பரமன் றிகிரியை யேந்திய மைந்தன் பகைவன் வெற்பை
உரமன்றெடுத்தவன் மாற்றான்றன் சேவகனொண்டொடிய''

"சிவபெருமான் இருக்கும் கயிலை மலையை எடுத்தவன் இராவணன். அந்த இராவணனுக்கு பகையாளியாகிய இராமபிரானுக்குத் தொண்டு புரிந்தவரும், இராவணனுடன் எதிர்த்துப் போர் புரிந்தவனும் சிரஞ்சீவிக்காக மலையைப் பெயர்த்துக் கொண்டு வந்தவனும் ஆகிய அனுமாரின் உருவம்போல் உள்ள குரங்கு போல இருந்தான்'' என்று பொருள்படும்படி இரு விலைமாதர்களும் பாடலாகப் பாடி சாமியார்கள் தெரிந்து கொள்ளும்படி பாடினர்.

இதையெல்லாம் கேட்ட சாமியார்கள் இருவரும் இந்த விலைமாதர்கள் நம் வேடத்தைப் புரிந்து கொண்டார்கள். இனி நாம் இந்த ஊரில் ஏமாற்றிப் பிழைக்கமுடியாது என்று தெரிந்து அந்த ஊரைவிட்டே ஓடிவிட்டனர்.

இப்படிப்பட்ட பொய்த் துறவி, பொய் சந்யாசிகள் நிறைந்த சந்தைக் கூட்டத்தில் உண்மை தெளிந்த பிர்ம ஞானிகள், குப்பை மேட்டில் உள்ள மாணிக்கம்போல் எங்கோ ஒருவர் கண்டிப்பாக உண்டு. ஆனால், நம் பூர்வ புண்ணியவசத்தால்தான் நமக்கு அவர்கள் நம் கண்ணிற்கும் கருத்திற்கும் கிடைப்பார்கள். அதனால் நாம் எல்லா சாமியார்களையும் யோகி என்று நம்பி ஏமாறக்கூடாது. அதே நேரம் எல்லா சாமியார்களையும் நாம் வெறுக்கக் கூடாது. அதில் ஞான மாணிக்கம், ஞான வைரம் கிடைக்காமல் போய்விடும்.

எது எப்படி இருந்த போதிலும் பல பிறவிகள் பூர்வ புண்ணிய பலத்தால்தான் ஓர் உண்மை தெளிந்த பிர்ம ஞானியின் தரிசனம் நமக்கு இப்பிறவியில் கிடைக்கும். அதனால் நம் பூண்டி பரிபூர்ண பிர்ம ஞானி ஆற்று சுவாமிகளை தரிசனம் செய்த அத்தனைப்பேர்களும் புண்ணிய ஆன்மாக்களே என்பதில் எந்தவித சந்தேகமும் கிடையாது.

புத்த மகரிசி கையில் ஓடு ஏந்தி பிச்சை எடுத்து உணவு உண்டு வந்தார். பட்டினத்தடிகள், பத்திரிகிரியார் ஓடு கூட எடுக்காமல் தன் கையாலேயே பிச்சை எடுத்து உணவு உண்டு வந்தார்கள். அதேபோல் வறியவன் (ஏழை) ஒருவன் ஓடு ஏந்தி பிச்சை எடுத்து உண்டு வந்தான். ஆனால் இவர்கள் மூவருக்கும் அந்த ஏழைக்கும் நிறைய வேற்றுமை உண்டு. புத்தர், பட்டினத்தார், பத்திரிகிரியார் நாட்டையும் நகரத்தையும் அரசபோகங் களையும், துறந்து அதன்மீது உள்ள பற்றுகளை அறுத்துக்கொண்டு ஏழையாய் இருந்தால் நமக்கு ஒன்றும் அவமானமில்லை என்று நிருபிப்பதற்காக பிச்சை ஏற்று உண்டார்கள். அவர்களின் ஒட்டுமொத்தக் குறிக்கோள் உலக பற்றுகளை ஒதுக்கி ஞானம் பெறுதலாகும். புத்தர், பத்திரிகிரியார் போன்ற அரசர்கள் துறப்பதற்கு அவர்களுக்கு ஏற்ற அரசபோகமும் அரசும் இருந்தது. அவைகளைத் துறந்ததால் அவர்கள் துறவிகள் என்று கூறலாம்.

ஆனால் ஒரு மனிதன் பொருள்தேட வழியில்லாமலும், உழைத்து உண்ண ஊக்கமில்லாமலும் அவன் பிச்சை எடுத்து உண்பதால் அவன் துறவி ஆகமாட்டான். அவனிடம் துறப்பதற்கு என்று ஒன்றுமில்லை. அதனால் அவன் துறவியல்ல. ஏன் பொன், பொருள் கிடைத்தால் அதை கெட்டியாகப் பற்றிக் கொள்வான். அவன் துறவி ஆகமாட்டான். துறவிபோல் தென்படுகிறான். ஆனால் உள்ளத்தில் பெரும் பற்று உடையவன். அதுபோல் பொய் துறவிகள் தங்களைப் பெரிய யோகியாக உலகத்திற்கு காண்பிப்பதற்காக நீண்ட தாடி மீசைகளை வளர்த்துக் கொள்கின்றனர். தாடி, மீசைகளை வளர்த்துக் கொண்டால் மட்டும் போதாது. யோக நிலையில் தாடிபோல் நீண்டும், மீசையைப்போல் முருக்காகவும் இருக்கவேண்டும். அவர்களே உண்மைத் துறவி. தாடி வைத்தவர் எல்லாம் யோகியுமல்ல. அதே நேரம் தாடியுடன் உள்ளவர் எல்லாம் ஏமாற்றித் திரிபவரும் அல்ல. குப்பையில் உள்ள கோமேதகம்போல் அவர்களை நாம் கண்டு தெளிய வேண்டும்.

"புறம் குன்றிகண்டு அனையரேனும் அகம்குன்றி
மூக்கின் கரியார் உடைத்து" – குறள்

குன்றியமணியானது சிவப்பு நிறமாகப் பளபளப்பாகவும், வழுவழுப் பாகவும் அழகாக இருக்கும் ஆனால், அதன் மூக்கு மட்டும் கருமையாக இருக்கும். சிவப்பு நிறத்தில் கருமை பளிச்சென்று தெரியும்.

இதுபோல் சிவப்பு, மஞ்சள் போன்ற கலர் கலராக காவி உடை உடுத்தியிருப்பார்கள். பார்க்க பரமசிவன் பூமியில் வந்தது போல் இருக்கும். ஆனால் அவர்கள் உள்ளம் குன்றிமணியில் இருக்கும் கருப்புபோல்

வஞ்சகம், பொறாமை நிறைந்ததாக இருக்கும் என்று வள்ளுவப் பெருமான் தன் குறளில் குறிப்பிடுகிறார். இப்படிப்பட்ட பொய்த் துறவியுடன் நாம் வெகு பக்குவமாக இருக்க வேண்டும். ஒருவன் உடலின் புறத்தோற்ற அழகு காவியுடையைக் கண்டு நாம் ஏமாந்துவிடக்கூடாது. அவனது அகத் தோற்றம் இனிமையாகவும் வஞ்சனை அற்றதாகவும் இருக்க வேண்டும்.

"வலியில் நிலைமையான் வல்லுருவம் பெற்றம்
புலியின் தோல்போர்த்து மேய்ந்தற்று" - குறள்

மனதை அடக்க வல்லமை இல்லாதவன் துறவுக் கோலம், பசு ஒன்று புலியின் தோலை தன்மீது போர்த்திக் கொண்டு விளைந்த பயிரை மேயும் தன்மை உள்ளது என்று கூறுகிறார் வள்ளுவப் பெருமான்.

இப்படிக் கேடுகெட்ட பொய்த் துறவிகளை அடையாம் கண்டு அவர்களிடம் நாடக்கூடாது என்பதை நாம் உணரவேண்டும்.

"மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்தது ஒழித்து விடின்" - குறள்

மொட்டை அடித்துக் கொள்வதாலும் தாடி நீளமாகவும், சடைமுடியும் வளர்த்துக் கொள்வதாலும் அவன் யோகி ஆகிவிட முடியாது. உலகத்தில் உள்ள கெட்ட நடவடிக்கை நம்மை அணுகாவண்ணம் ஒழிப்பவனே நல்ல யோகியாவான்.

சத்குரு ஒருவர் தன் யோக பலத்தால் அகஉலக சிந்தனையில் இருப்பார்கள். அவர்கள் புறஉடலின் மாற்றங்களைப் பற்றி விருப்போ, வெறுப்போ அற்ற நிலையில் இருப்பார்கள். அதனால் அவர்களின் புறஉடலின்கண் ஏற்படும் மாறுதல்களைப்பற்றிக் கவலைப்படுவதில்லை. உதாரணமாக சடை வளர்வது, தாடி வளர்வது, தன் கை கால்களில் நகங்கள் வளர்வது போன்றவற்றைப் பற்றி விருப்போ வெறுப்போ அடைவதில்லை.

ஆனால் பொய்குரு தாடி நீளமாக வளர்த்துக் கொள்வது, சடை நீளமாக வளர்த்துக் கொள்வது, கை, கால் நகங்களை நீளமாக வளர்த்துக் கொள்வதுதான் யோகநிலை என்று நினைத்து வளர்த்தால், அது தன்னைத்தான் ஏமாற்றிக் கொள்ளத்தான் உதவுமே தவிர, தன்னைத்தானறிய வழியாகாது என்று உணர வேண்டும். நம் நாட்டில் இப்படிப்பட்ட பொய் குருக்கள் ஏராளமாக மலிந்துவிட்டதால்தான் உண்மை மெய்ஞானிகளைக் கண்டாலும் நாம் ஏமாற்றுச் சுவாமியார் என்று எண்ணி வெறுக்கும் அளவிற்குப் போய்விட வழி வகுக்கிறது.

சந்யாசி என்று கூறிக்கொள்வான், சதாகாலமும் பெண் ஆசையில் இருப்பான். பரதேசி என்பான், சதாகாலமம் பரத்தையின்மேல் நிஷ்டைகூடி சமாதி நிலையில் இருப்பான். இப்படிப்பட்ட வேடதாரிகளை மக்கள் இனம் தெரிந்து சாக்கிரதையாக இருக்க வேண்டும்.

சந்யாசி என்றால் சந்நாசி என்று பொருள் கொள்ளலாம். சந் = சதாகாலமும் நாசி = பிராணவாயுவை (வாசியை) மூக்கின் நுனியில் நிறுத்தி எப்போதும்

இறை தியானத்தில் இருப்பவன் என்று பொருள். அதை விட்டுவிட்டுக் கலர், கலராக தன் பிண்டத்தின்மேல் போர்த்திக்கொண்டு வாசி என்றால் என்ன பொருள் என்று தெரியாமல் உலக மாந்தரை ஏமாற்றிப் பிழைப்பவன். நரகம்தான் அவர் கடைநிலையாக இருக்கும் என்பதை நாம் உணரவேண்டும்.

பரதேசி : பரம் + தேகி தான் பரதேசியாக மாறிவிட்டது. பரம் = கடவுள் (பரமாத்மா), தேகி = சீவாத்மா. சீவாத்மாவாக உள்ள ஒருவன், பரமாத்மாவைத் தேடி கண்டுகொள்ள ஒரு குருதேவை. அந்த குருவைத்தேடி தேசாந்தரம் செல்லுபவன் ப்ரதேசி எனப்பட்டான். பிற தேசஞ் சென்றாகிலும் தக்க குருவை நாடிப்போகும் யோகிக்கு பரதேசி என்று பொருள்.

ஆனால் நம்மில் சிலர் சம்சாரக் கடலைக்கண்டு பயந்து அந்தக் கடலில் நீந்திக் கரை சேர வழி தெரியாமல், பரதேசி என்ற போர்வையில் மக்களை ஏமாற்றி தன் உடலை வளர்க்கின்றனர், இவர்கள் நாயினும் கீழான இழி பிறவியை அடைவார்கள் என்பது திண்ணம்.

தன்னை யறியார் தலைவன் றனையறியார்
முன்னை வினையின் முடியறியார் - பின்னைக்
குருக்களென்றும் பேரிட்டுக் கொள்ளுவார்க ளையோ
தெருக் கடனிலே சிலர். - சிவபோக சாரம்

தன்னைத்தான் உணர்வதே ஞானியின் நிலை. தன்னில் உள்ள பிர்மத்தைத் தான் அறிந்து தான் அந்த பிர்ம நிலையை அடைவது யோகிகளின் ஞான நிலையாகும். இப்படிப்பட்ட தத்துவத்தை அறியாதவர்கள் தன்னையும் அறியார், தன் தலைவனையும் அறியாதவர்கள். பொய்குரு ஆவார்கள்.


ஞானி ஒருவர் நல்வினை, தீயவினை என்ற இரு வினைகளையும் அறுத்து எறிந்து விடுவார்கள். முன்வினைகள் அவர்களைத் தொடராது. அப்படிப்பட்டவர்களே சற்குரு ஆவார்.

ஆனால் புற வேடங்களைத் தரித்துக்கொண்டு புற உலகை ஏமாற்றி தான்தான் சற்குரு என்று கூறி வருபவர்கள் பொய் குரு ஆவார்கள் என்று சிவபோக சாரம் கூறுகிறது.

அதனால் சாதகன் ஒருவன் ஞானநிலை அடைய யோகம் பயில சற்குரு துணையுடன் பயிலவேண்டும். அப்படி சற்குரு இல்லாமல் யோகம் பயில முற்பட்டால் முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்டது போலவும், மலடி பிள்ளைப்பேறுக்கு ஆசைப்பட்டது போலவும் இரு காலும், இரு கையும் இழந்த் ஒருவன் உலகை மூன்று சுற்று சுற்றுவேன் என்று கூறுவதுபோல், ஆகி விடும் என்று மெய்ஞானிகள் எச்சரிக்கை விடுகின்றனர்.

சமாதி கோயில்

1978ஆம் ஆண்டு நவம்பர் மாதம் மூன்றாம் நாள் வெள்ளிக்கிழமை காலை 10 மணி அளவில் திருச்செந்தூரில் உள்ள சுப்பிரமணிய சுவாமியை தரிசிக்க மதுரையில் இருந்து ஒரு தம்பதிகள் வந்தனர். அத்தம்பதிகள் பூண்டி மகானை அடிக்கடி தரிசித்து வந்தவர்கள்.



குருபூசை நிகழ்ச்சி ஊர்வலம்

காலை சுமார் 9 மணி அளவில் திருச்செந்தூர் கடலில் சமுத்திர குளியல் செய்துவிட்டு கோயிலை நோக்கி வந்து கொண்டிருந்தார்கள். கடலோரம் உள்ள கோயிலை ஒட்டிய சுவற்றில் ஒரு மகான் உட்கார்ந்து கடலையே நோக்கிக் கொண்டிருப்பதைக் கண்டனர். அருகில் சென்று பார்த்தனர். என்ன ஆச்சர்யம்! பூண்டி மகான். இங்கு வந்துள்ளாரே என்று அவர் காலில் விழுந்து வணங்கி, 'என்ன சுவாமி, பூண்டியிலிருந்து எப்போது வந்தீர்கள்? இங்கு ஏன் தனிமையில் உட்கார்ந்து உள்ளீர்கள். வாருங்கள், நாங்கள் தங்கியுள்ள இடத்திற்குப் போவோம். கொஞ்சம் உணவு எடுத்துக் கொள்ளுங்கள்'' என்று வேண்டி நின்றார்கள்.

அதற்கு சுவாமிகள், 'எனக்கு இரண்டு பிள்ளைகள். ஒன்று டெய்லர், ஒன்று வாத்தியார். இரண்டும் என்னை கவனிக்கவில்லை. அதனால் பூண்டியைவிட்டு திருவண்ணாமலை வந்தேன். அங்கும் யாரும் கவனிக்கவில்லை. கொல்லிமலை போனேன். அங்கும் யாரும் கவனிக்கவில்லை. அதனால் இப்படி வந்தேம்பா! இமாலயம் போகலாம் என்று இருக்கிறேன்பா!'' என்று கூறிவிட்டு மௌனமாக இருந்துவிட்டார்.

தம்பதிகள் காப்பியாகிலும் சாப்பிடச் சொல்லி சுவாமியை வற்புறுத்தினார்கள். அதற்கும் சுவாமி மறுத்துவிட்டார். தம்பதிகள் திருச்செந்தூர் ஆண்டவனை வணங்கிவிட்டு தாங்கள் தங்கியிருக்கும் விடுதியை நோக்கிச் சென்றுகொண்டிருந்தனர். பூண்டி மகான் உடகார்ந்த இடத்தை விட்டு எழுந்திருக்காமல் பல ஆண்டுகளாக உள்ளார். இன்று எப்படி இங்கு வந்தார் என்று தம்பதிகள் பேசிக்கொண்டு போகும்போது வழியில் உள்ள கடையில் தினசரி மாலைப் பேப்பரின் விளம்பரத்தில் "பூண்டி மகான் சமாதியாகிவிட்டார்" என்று கண்டனர்.

தம்பதிகளுக்கு அதிர்ச்சியாகிவிட்டது. சற்று முன்புதான் நாம் கோயில் வாசற்படி ஓரமுள்ள பிடி சுவற்றில் கண்டோம் என்று நினைத்து மறுபடியும் அந்தக்கோயிலை ஒட்டிய பிடிசுவற்றை நோக்கி ஓடினார்கள். ஆனால் சுவாமி அங்குமில்லை, மற்ற இடங்களிலுமில்லை.

அத்தம்பதிகள் மறுநாள் பூண்டி வந்து சுவாமியின் தேவ உடலைக்கண்டு அழுது மேற்கண்ட நிகழ்ச்சியைக் கூறி, எங்களுக்கு ஆசி வழங்க திருச்செந்தூர் வந்த ஆண்டவரே என்று கதறினார்கள். சுவாமியை சமாதி செய்யும்வரை உடனிருந்தார்கள்.

மேலும் சுவாமிகள் சமாதி ஆக நான்கு நாட்களுக்குமுன், பூண்டிக்கு தெற்கே இருக்கும் மண்டைகொளத்தூரில் இருந்து சிந்தாமணி என்னும் தாய் சுவாமியிடம் விபூதிகேட்டு நின்றனர். அவலூர்பேட்டை நாராயண உடையார் விபூதி கேட்டு நின்றார். அதற்கு சுவாமிகள் 'ஏம்மா, இன்னும் எத்தனை நாள் உங்க அதிகாரம். இதுவரை நீங்க சொல்வதை நான் கேட்டேன். இனி நான் சொல்ல நீங்கள் கேட்க வேண்டும்' என்று கூறி விபூதி கொடுக்காமல் எடுத்துக்கொள்ளச் சொல்லி விட்டார். சுவாமிகள் நான்கு நாள் கடந்து கைவல்யமானார்.

மேலும் பூண்டியைச் சேர்ந்த நாயுடு அம்மா சுவாமியின் ஆசிர்வாதம் வேண்டி நின்றார். சுவாமிகள் நீண்ட நேரம் மௌனமாக இருந்து, 'அளந்து போடக் காத்திருக்கிறேன், பையை பிடிப்பார் யாருமில்லை. அதனால் கடையை மூடி விடலாம் என்றிருக்கிறேன்' என்று கூறிவிட்டு விபூதி கொடுக்கவில்லை. நான்கு நாட்கள் கழித்து தன் ஞானக்கடையை மூடிவிட்டு பிர்ம நிலையை எய்தினார்.

'கடையைத் திறந்தேன். வாங்குவாரில்லை' என்று வடலூர் சித்தர் இராமலிங்க சுவாமிகள் கூறினார். நாம் ஒரு மகானிடம் போகும்போது நம் உலக இல்லற விசயங்களைப் பெறத்தான் நம் மனது போகிறதே தவிர, அந்த ஞானக்கடல்களிடமிருந்து ஒரு துளி ஞானம் பெற நாம் முயற்சிப்பது கிடையாது. நம் மனம், புத்தி புற உலகின்கண் பல காலம். மேவியதால், அக உலக ஞானத்தைப்பற்றிக் கவலைப்படுவதில்லை. அதனால் மெய்ஞானிகள் தோன்றி அந்த ஞானத்தை வாங்க தக்க மாணவன் இல்லாமல் ஞானக் கடையை மூடிவிட்டு வேறு ஒரு ஊரில் ஞானக் கடையை திறக்கப் போய்விடுகின்றனர்.




சுவாமி பரப்பிர்மத்துடன் ஒன்றிய நிலை

அப்படி ஸ்ரீ பூண்டி மகான் பூண்டி என்னும் சந்தையில் சுமார் 19 ஆண்டு காலம் ஒரு ஓட்டு வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்த இடத்தைவிட்டு நகராமல் இரவும், பகலும் ஞான வைரக் கடையைத் திறந்து வைத்திருந்தார். அந்த விலைமதிக்க முடியாத ஞான வைரத்தை வாங்கியவர்கள் யார்? யார்? என்று அந்த ஞானக்கடை முதலாளிக்குத்தான் தெரியுமே தவிர, மற்றவர்கள் அறியவில்லை என்பதுதான் உண்மையாகும்.

சுவாமிகள் கைவல்யம் ஆவதற்கு இரண்டு நாட்களுக்கு முன் அபிடேகம் செய்யும்போது 'உட்கார வைப்பதும், படுக்க வைப்பதும் ஏம்பா! ஒட்டு மொத்தமாக அபிடேகம் செய்து விடலாம்பா!'' என்று தன் பரிபாசையில் சமாதி அடைவதைப் பலகோணங்களில் முன்கூட்டியே அறிவித்து விட்டார்.

இப்படி உலக மாந்தர்கள் வினைகளைத் தீர்த்து அவர்கள் நலன் பொருட்டு பூ உலகம் வந்த ஸ்ரீ பூண்டி மகான், நல்வழி காட்டிய ஞானத் தலைவன். நயன மொழிபேசி நன்மைகள் பல செய்த ஞான நாயகன். உச்சிக்கு மேல் சென்று உயர் வெளியைக்கண்ட ஞான அரசன். தானான காயத்தை நிறுத்திய மெய்ஞ்ஞானி. சதா காலமும் சுக்கிலத்தைக் கட்டிய ஞானசூரியன் பாழான தூலமதை வெறுத்த பரஞ்ஞானி. வேனான மும்மலத்தை வென்ற ஞானவீரன். தான் பரபிர்மத்துடன் சேரும் நாள், நேரத்தைப் பரிபாசையில் முன் கூட்டியே கூறினார். 'பூரம்' , 'பூராடம்' அனுசம் என்றும் வியாழனுக்கு பிந்தி வெள்ளி என்றும், சுக்ரவாரம் சுக்ரவாரம் என்று கூறி வந்தார்.



ஸ்ரீலஸ்ரீ பூண்டி மகான் சமாதி கோயில்

நிகழும் கலியுகம் 5080ம் ஆண்டு, சாலிவாகன சகாப்தம் 1900க்கு சரியாக தமிழ் காளயுக்தி ஆண்டு ஐப்பசி மாதம் 17ந் தேதி வெள்ளிக்கிழமை சரியான ஆங்கிலம் 1978ஆம் ஆண்டு நவம்பர் மாதம் மூன்றாம் நாள் சுக்கில பட்சம் திரயோதசி கூடிய அனுச நட்சத்திரம் காலை 9.40 மணிக்கு பரபிர்மத்துடன் ஐக்கியமாகி சோதி சொருபமானார். சுவாமி இந்நிலை அடைந்ததை தேவர்கள் கண்ணீர் விட்டதுபோல் மழை கொட்டித் தீர்த்துவிட்டது. ஸ்ரீ பூண்டி மகான் தேவ சொருபத்தைக் காண கங்கை செய்யாற்றின் மூலம் ஓடோடி பூண்டியை வந்து அடைந்தது. ஆற்றில் வெள்ளம் கண்டது.

தமிழ் நாட்டிலிருந்தும், கர்னாடகாவில் இருந்தும், ஆந்திராவிலிருந்தும் வடநாட்டிலிருந்தும் சுவாமி மீது பக்திகொண்ட அன்பர்கள், சாதுக்கள் அனைவரும் சுவாமி கைவல்யம் ஆனதைக் கேட்டு திரள் திரளாக பெரும் மழையையும் பொருட்படுத்தாது பூண்டி வந்து தன் ஞான தட்சிணாமூர்த்தியை வணங்கினார்கள். தேவ சொருபத்தை வணங்கினார்கள். பக்தர்களின் நலன் கருதியும் ஞானிகள் தன் பிராணனை அடக்கி திரும்பவும் வரும் நிலை உண்டு என்று கருதியும் மூன்று நாட்கள் கடந்து 5-11-1978 ஐப்பசி மாதம் 19ந் தேதி ஞாயிற்றுக்கிழமை பஞ்சமி திதிமூல நட்சத்திரம் கூடிய சுபதினம் காலை 9 மணி அளவில் ஸ்ரீ பூண்டி மகான் தேவ உருவை ஆகம விதிப்படி பதும ஆசனத்துடன் கீழ்க்கண்டபடி சமாதி செய்யப்பட்டது. மறுநாள் தொடங்கிய மண்டல அபிடேகம் 22-12-78 மார்கழி மாதம் 7ந்தேதி வெள்ளிக்கிழமை, சப்தமி திதி, உத்திர நட்சத்திரத்தில் 48 நாள் மண்டல பூசை பூர்த்தியாகியது.

சமாதி கோயில் நான்கு வாசல்

ஸ்ரீ பூண்டி மகான் தேவ உருவை ஆகம விதிப்படியும் பிரம ஞானிகளின் தேவ உருவை எப்படி சமாதி செய்வார்களோ அந்த முறைப்படியும் சமாதி செய்தனர்.

தன்மனை சாலை குளக்கரை ஆற்றிடை
நன்மலர்ச் சோலை நகரின் நல்பூமி
உன்னரும் கானம் உயர்ந்த மலைசாரல்
இந்நிலம் தான் குகைக்கெய்தும் இடங்கள் - திருமூலர்

ஞானி ஒருவர் வாழ்ந்த (இருந்த) இடம். சாலை ஓரம் குளக்கரை ஆற்றின் மணற்பாங்கான இடம். மலர்சோலைகள் உள்ள இடம். நகரின் ஒரு நல்ல இடம். நினைப்பதற்கு அச்சம் தரும் காடு. உயர்ந்த மலைகளினிடை யேயுள்ள சாரல் ஆகிய இடங்கள், ஞானி ஒருவர் தேவ உருவை சமாதி வைக்கும் இடம் என்கிறார் திருமூலர்.

அதுபோலவே ஸ்ரீ பூண்டி மகான் தேவ உருவை பூண்டி கிராமம் தென்புறமுள்ள செய்யாற்றின் கரையை ஒட்டியும், மணற்பாங்கான இடமாகவும், ஊரின் நடுவில் கீழ்க்கண்ட ஆகம விதிப்படி சமாதி செய்தனர்.

நவம்மிகு சாணாலே நல்ஆழம் செய்து
குவைமிகு சூழ்ஐஞ் சாணாகக் கோட்டித்
தவமிகு குகை முக்கோணமுச் சாணாகிப்
பவமறு நல்குகை பத்மாசனமே! - திருமூலர்

ஸ்ரீ பூண்டி மகான் தேவ சொருபத்தை சமாதி செய்ய ஒன்பது சாண் அளவிற்கு நிலை அறை ஆழமாக்கி சுற்றளவுகள் ஐந்து சாண் கணக்குடன், முக்கோணமாக அகலம் மூன்று சாண் அமைத்து, சுவாமி நிட்டையிருந்தபடி பதும ஆசனமிட்டு யோக நிலையாக சமாதி செய்து அதன் பக்கவாட்டில்களில் விபூதியை மூட்டை, மூட்டையாகவும், பக்தர்கள் கொண்டு வந்த பொன், வெள்ளி காசுகளையும் அறிய கற்களாகிய, பச்சை, நீலம், பவழம் போன்றவைகளையும் கற்பூரம், சந்தனம், புனுகு, சவ்வாது, அத்தர் போன்ற நறுமணப் பொருள்களுடன் பூண்டி தேவதேவன் தேவசொரூபம் சமாதி செய்யப்பட்டது.


பஞ்ச லோகங்கள் நவமணி பாரித்து
விஞ்சப் படுத்தன்மேல் ஆசனமிட்டு
முஞ்சிபடுத்து வெண்ணீ றிட்டதன்மேல்
பொன்செய் நல்சுண்ணம் பொதியலும் வேண்டும் - திருமூலர்

மேலும்,

முக்கால் அரும்பெடுத்து மூவிரண்டாத் தான்தூக்கி
நாக்கால் வளைபரப்பி நாற்சதுர வீடுகட்டி
நாக்கால் வளைபரப்பி நாற்சதுர வீட்டினுள்ளே
முக்காலைக் காணாமல் என்கண்ணமாமுழுதுந்தவிக்கிறாண்டி
அழுகாணி

நல்குகை நால்வட்டம் படுத்ததன் மேல்சாரக்
கள்ளவிழ்த் தாமம் களபம் கத்தூரியும்
தெள்ளிய சாந்து புனுகு பன்னீர்சேர்த்து
ஒள்ளிய கல்தூபம் உவந்திடுவீரே - திருமூலர்

ஸ்ரீ பூண்டி மகான் அமர்ந்து இருந்த வீட்டிற்கு மேற்புறமுள்ள காலிமனையை ஏற்கனவே சுவாமிகள் பெயரிலும், சுவாமிக்கு நீண்ட நாட்களாக அன்னம், ஆகாரம், அபிடேக ஆராதனைகளைச் செய்து வந்த பூண்டியைச் சேர்ந்த ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிகள் பெயரிலும், குடியேற்றம், தாலுக்கா, அம்முண்டி கிராமம் ஆறுமுக சுவாமிகள் பொருள் கொடுத்தும், தஞ்சை மாவட்டம் கும்பகோணம் 'பேலஸ் கேப்' அதிபர், அ. முருகையப் பிள்ளை பொருள் கொடுத்தும், நல் முயற்சியாலும் வாங்கி எழுதி வைத்து இருந்தனர்.



சமாதி கோயில் கும்பாபிடேகக் காட்சி

பூண்டி ஊரின் நடுவே சுவாமி பெயரிலும் ஸ்ரீ சுப்பிரமணி சுவா பெயரிலும் இருந்த காலி மனையில் ஆகம விதிப்படி ஸ்ரீ பூண்டி மகான் தே

உருவை சமாதி செய்து அதன்மேல் சிற்பக் கற்கோயில் கட்ட பூண்டி முன்னாள் மணியம் பெரியவர் நா. கோவிந்தராசு நாயுடு தலைமையில் ஊர் முக்கிய அன்பர்கள் ஒன்று சேர்ந்து, மகாபலிபுரம் பிரபல தபதி வை. கணபதி தபதியார் ஆலோசனையின் பேரில் அவரின் முக்கிய மாணாக்கர் மகாபலிபுரம் பெருமாள் தபதியாரால் சிறந்த முறையிலும் பல புத்தகங்களைக்கண்டு மகான்களுக்கு உள்ள சமாதி ஆகம விதிப்படி கோயில் வரைபடம் வரைந்து கொடுத்தார்.

உயர்திரு. வை. கணபதி தபதியரின் மற்றோர் மாணாக்கர் போளூர் தாலுக்கா முடையூர் கிராமம், கிருட்டிணசாமி முதலியார் குமாரர் கே. துரைசாமி தபதியாரால் கோயில் வரைபடத்தில் உள்ளதுபோல் கடுமையான விரதம் கொண்டு சுவாமியின் வெளியூர் அன்பர்களின் நன்கொடை கொண்டு பல இலட்சம் செலவில் சிற்பக் கற்கோயில் கட்டி முடிக்கப்பட்டது.

பூண்டி முன்னாள் மணியம் பெரியவர் நா.கோவிந்தராசு நாயுடு தலைமையில் நடைபெற்று வந்த கோயில் திருப்பணி அவர் உடல்நிலை காரணமாகத் திருப்பணிப்பொறுப்பை "ஸ்ரீ பூண்டி மகான் ஆற்று சுவாமிகள் தேவாலயத் திருப்பணிக் குழு' என்ற பெயரால் வேலூர் வக்கீல் அ. குமாரசாமி தலைவராகவும், சேலம் தங்கம் சுவாமிகளும், நங்கிலி கொண்டான் முன்னாள் மணியம் டி. ராதாகிருஷ்ணன் அவர்களும் செயலாளராகவும், ஆரணி அரிசி ஆலை கே.ஆர். சிவகாந்தன் பொருளாளராகவும், பொறுப்புகளை ஏற்று திருப்பணி செய்து வந்தனர். பிறகு அவர்கள் சொந்த அலுவல்கள் காரணமாக விலகினர். பிறகு அதையே "ஸ்ரீ பூண்டி மகான் ஆற்று சுவாமிகள் ஆசிரமம் கமிட்டி" யாக மேலாரணி தலைவர் அ. தர்மராஜன் தலைவராகவும், திருவண்ணாமலை நகை வியாபாரம் எஸ். ராஜேந்திரன் செயலாளராகவும, ஆரணி அரிசி ஆலை கே. ஆர். சிவகாந்தன் பொருளாளராகவும் பொறுப்பேற்று, ஸ்ரீ பூண்டி மகான் தேவாலயம் திருப்பணி வெளியூர் அன்பர்களின் நன்கொடையால் பல இலட்சம் ரூபாய் செலவில் கோயில் கட்டி முடிக்கப்பட்டது.

கலசப்பாக்கம் வட்டம் காங்கனூர் குப்பம் ஓய்வு பெற்ற சுபேதார் டி. சம்பத் உடையார் சுவாமிகள் பொருள் உதவியாலும், மகாபலிபுரம் உயர்திரு வை. கணபதி தபதியாரின் மாணாக்கர் பெருமாள் தபதியாரால் மூன்றரை அடி உயரம் ஸ்ரீ பூண்டி பகவான் மூல விக்ரகம் செய்து கோயில் கற்பகிரத்தில் பிர்திட்டை செய்தனர். சுவாமியின் அன்பர்களால் சிவலிங்கமும் கற்பக் கிரகத்தில் பிரதிட்டை செய்து வைக்கப்பட்டது.

இப்படி மகிமை வாய்ந்த மெய்ஞானி ஸ்ரீ பூண்டி மகான் கோயில் நிகழும் பிரபவ வருஷம் வைகாசி மாதம் 28ந் தேதிக்கு சரியான ஆங்கில வருடம் 11-6-1987 வியாழக்கிழமை அனுச நட்சத்திரம் கூடிய சுபதினத்தில் காலை 9 மணிக்குமேல் 10-30 மணிக்குள் கயிலை மாமுனிவர் பேரூர் ஆதினம் தவத்திரு ராமலிங்க இராமசுவாமி அடிகளும், கோயில் உலக நன்மை பொருட்டு 108 கச பூசை செய்ததவசீலரும், கோவை சிரவணபுரம் கௌமார மடாலயம் சந்நிதானம் தவத்திரு சுந்தர் சுவாமிகளின் ஆலோசனை பேரிலும் அவர்கள் தலைமையிலும், போளூர் விட்டோபா சுவாமிகள் சந்நிதானம் சிவராமலிங்க அடிகளார் முன்னின்றும் ஸ்ரீ பூண்டி மகான் சீடர் ஸ்ரீலஸ்ரீ

சுப்பிரமணி சுவாமிகள், கோயிலுக்கு குடமுழுக்கு நன்னீராட்டு செய்து வைத்தார்கள்.



சுவாமிகளின் 6வது குருபூசையை மயிலை மாமுனி குருசி சுந்தர்ராம் சுவாமிகள் நடத்தி வைத்தல்

இப்படிப்பட்ட மெய்ஞானிக்குக் கட்டிய சிற்பக் கற்கோயில் நான்கு புறமும் கற்பக்கிரகம் வாசல்படி வைக்கப்பட்டதன் விளக்கம்:

மூல நாடி முகட்டறை உச்சியில்
நாலு வாசல் நடுவே சிவாலயம்
மேலை வாசல் வெளியுரக் கண்டபின்
காலன் வாசல் கனவிலும் இல்லையே!

நம் உடலில் உள்ள 72,000 நாடிகளுக்கு நாயகமாக விளங்குவது மூல நாடியாகும். இதுவே சுழிமுனை என்றும் கூறுவர். இச்சுழிமுனையின் உச்சியில் கபாலத்தில் ஆயிரம் தாமரை இதழ்கொண்ட சகசுராரம் என்ற அதிநுட்ப பிர்மரந்திரம் உள்ளது. அதற்கு நான்கு வாயில்கள் என்றும், அதில் சிவன் உறையும்இடம் என்றும், அதன்மேல் வாசலில் மனம் ஒன்றி விடுமானால் வெட்டவெளியாகிய சச்சிதானந்தம் பெருவெளியைக் காணலாம் என்பது ஞானிகளின் நிலை. அப்படிப்பட்ட வெட்ட வெளிதனைக் கண்டு சத்திதானந்தப் பொருள் உள்ள ஆலயம் என்பதை அறிய நான்கு வாசல்கள். அவர்களுக்கு எமவாசல் இல்லை.

மேலும் பிராணாயாமம் (வாசியோகம்) சித்த மகா புருசர்கள் யோகப் பயிற்சி ஆகும்.

1. மூக்கிலிருந்து வரும் வாயு மூக்குத் தண்டை சார்ந்து வந்தால் அது மண்ணின் கூறு (1)
2. மூக்கிலிருந்து வரும் வாயு கீழ்நோக்கி வந்தால் அது தண்ணீரின் கூறு (2)
3. மூக்கிலிருந்து வரும் வாயு மேல்நோக்கிச் சென்றால் அது நெருப்பின் கூறு (3)
4. மூக்கிலிருந்து வரும் வாயு மூக்குத் தண்டின் நேராக மறுபுறம் சார்ந்து வந்தால் காற்றின் கூறு (4)

இந்த நான்கு பக்கங்களிலும் எந்தப் பக்கமும் இல்லாமல் நான்கு பக்கமும் கலந்தே வந்தால் அது ஆகாயத்தின் கூறு. ஆகாயத்தின் கூறே வெட்டவெளி என்னும் ஆண்டவன் உறையும் இடம். இதுவே ஞானிகளின் பிரம நிலையாகும். அதுவே சிற்சபை, பொற்சபை, மணிமேடை என்று ஞானிகள் கூறுகின்றனர். அப்படிப்பட்ட ஏகப் பெருவெளி கண்ட மெய் ஞானி சமாதி என்று உணர்ந்த நான்கு வாயில்கள்.

"ஏகப் பெருவெளி பட்டினமாம் - அதில்
எவனோ சித்தன்" ஒருவ னுண்டாம்" - வாலைசாமி

இப்படி சித்தன் உறையும் சீவ சமாதி என்று உணர்த்த நான்கு வாசற்படிகள்.


மேலும் நாம் உள்ளிழுக்கும் காற்றுக்கு சக்தி என்றும், வெளியே விடும் காற்று சிவன் என்றும் கூறுவர். (அதனால்தான் வெளியே காற்று போய் விட்டால் சீவன் போய் விட்டதாக கூறுகிறோம்) சக்தி காற்றிற்கு சரம் என்று பெயர். சரத்தை விடுவது நஞ்சை உண்ணுவது போலாகும். சரத்தைக் கட்டியவன் அமுதம் உண்பது போலாகும். அதனால்தான் 'சரம் பார்ப்பவன் பரம் பார்ப்பான்' என்று ஞானிகள் கூறுகின்றனர்.

1. சரம் மண்ணின் கூறு நடக்கும்போது 12 அங்குலமும்
2. சரம் தண்ணீரின் கூறு நடக்கும்போது 11 அங்குலமும்
3. சரம் நெருப்பின் கூறு நடக்கும்போது 8 அங்குலமும்—
4. சரம் வாயுவின் கூறு நடக்கும்போது 4 அங்குலமும்

காற்று நடைபெறும்.

ஆனால் ஆகாயத்தின் கூறு நடக்கும்போது சரம் ஒரு அங்குலமே நடைபெறும். இவ்விதமாக ஞானி ஒருவர் சரத்தை (மூச்சுக் காற்றை)நடத்திவர வேண்டும். அப்படி நடத்தியவர்களைக் கண்டாலும், பழகினாலும் எல்லா வெற்றிகளும் வந்து சேரும் என்று ஞானிகள் அறுதியிட்டுக் கூறுகிறார்கள். இவ்விதமாகச் சரத்தைக் கட்டியவர் மிக உயர்ந்த ஞானிகள். அவரே எல்லா உயிர்களுக்கும் நன்மை செய்யும் ஆற்றலைப் பெற்ற பிரம ஞானிகள். அவர்கள் பரம்பொருளுடன் வாழும் அமரன் (மரணமில்லாதவன்). அப்படிப்பட்ட அமரத்துவம் வாய்ந்த மெய்ஞானி உறையும் கோயில் என்பதை உணர்த்த நான்கு வாசற்படிகள்.

மேலும் பிராமணர், வைசியர், சத்திரியர், சூத்திரர் ஆகிய நான்கு சாதிகளுக்கும் அப்பாற்பட்ட சாதி, மதம் பேதமற்று 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்ற கொள்கையுடையவர்கள் ஞானிகள். அப்படிப்பட்ட மெய்ஞானி உறையும் கோயில் என்று உணர்த்த நான்கு வாசற்படிகள்.



சுவாமிகளின் முதல் குருபூசை யாகசாலை 1979 அனுச ஆராதனை

மேலும் பிரம்மச்சரிய விரதம், கிரகத்தன் விரதம், வான்ப் பிரத்தன் விரதம், சன்யாசி விரதம் போன்ற விரதங்கள் நான்கையும் கடந்த நிலை ஞானிகள் நிலை அப்படிப்பட்ட கடந்த நிலையில் உள்ள மெய்ஞானி உறையும் கோயில் என்பதை உணர்த்த ஸ்ரீ பூண்டி தேவதேவனின் கோயிலுக்கு நான்கு வாசற் படிகள்.

மேலும் பூமியில் உற்பத்தியாகும் ஒரு அறிவிலிருந்து ஆறு அறிவு படைத்த சீவன் வரை நான்கு வித யோனிகள் மலம் அடங்கும், அவைகள்:

சராயுசம் : கருப்பையிலிருந்து உற்பத்தி - மனிதன், விலங்கு போன்றவை.

அண்சம் : முட்டையிலிருந்து உற்பதி - பறவை, மீன் ஆமை பாம்பு போன்றவை.

சுவேதசம் : அழுக்குவேர்வையிலிருந்து பிறப்பவை - கொசு, பேன் போன்றவை.

விற்பசம் : பூமியிலிருந்து விதைகள் மூலம் மரம், செடி, கொடி.

ஞானிகள் இப்படிப்பட்ட நான்கு விதங்களிலிலும் பிறவாத் தன்மை உள்ளவர்கள் என்றும், இப்படி நான்கு விதங்களில் பிறந்தவைகள் அனைத்தையும் ஞானி ஒருவர் தன் அட்டமா சித்துக்களினால் அடக்கும் சக்தி

பெற்றவர் ஆவார். அப்படிப்பட்ட அட்டமா சித்துக்களைக் கண்ட ஆண்டவர் கோயிலுக்கு நான்கு வாயில்கள்.


மேலும், ஞானிகளில் நான்கு வகையுண்டு. அந்த நான்கு வகை ஞான நிலைகளையும் கடந்த பிர்ம மெய்ஞானி உறையும் கோயில் என்று அறிய நான்கு வாசற்படிகள்.

1. பிர்ம வித்து : இறந்த காலத்தை நினையாமல் எதிர் காலத்தை நினைத்து துய்ப்பவர்கள், சூரியன் அமாவாசை இருளில் வந்தாலும், நிலவு பூமிக்கு வந்தாலும், மாண்டவர்கள் மீளக் கண்டாலும் அதை அதிசயமாக நினைக்காமல் எல்லாவற்றையும் கண்டு நடுவில் நிற்பவர்கள்.

2. பிரம்மவரன் : தான் சமாதி நிலையில் இல்லாதபோது உணவை கேட்டு உண்ணும் தன்மை (உணர்வு) உள்ளவர்கள்.

3. பிர்ம வரியன் : தான் சமாதி நிலையிலிருந்தபோதும் சமாதி நிலையில்லா புற உலகில் மனம் இருந்தபோதிலும் உணவை வலிய ஊட்டினால் உண்ணும் தன்மை உள்ளவர்கள்.

4. பிர்மவரிட்டன் : தன்னாலோ, அல்லது பிறர் உணவு ஊட்டு வதனாலோ உண்பது என்பதை மறந்து உணவு உண்ண உணராத தீவிர சமாதி நிட்டை கூடியவர்கள்.



சுவாமிக்கு ஆறுகால பூசை செய்த பூண்டி ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி, சிலைக்கும் ஆறுகால ஆராதனை செய்கிறார்

இவ்வித நான்கு ஞானநிலைகளையும் கடந்த நிலையில் இருந்த மெய்ஞானி உறையும் கோயில் என்பதை உணர நான்கு வாசற் படிகள்.

மேலும், பிரம்மதேவன் உதித்த இடம் தொப்பிள். எண்ணங்கள் அந்த தொப்பிளிலிருந்து புறப்படுகிறது. எண்ணங்கள் உதிக்காவிட்டால் மனம் அடங்கிவிடும். மனம் அடங்கிய இடம் வெட்டவெளி ஆகாயம். அதுவே பரபிர்மம் உறையும் இடம். அந்த பரபிர்மத்தை நான்கு வேதங்களாகிய ரிக், யசுர், சாமம், அதர்வணம் போன்றவை துதிக்கின்றது. வெட்டவெளிதனை கண்டவர் ஞானிகள், அப்படி நான்கு வேதங்களும் துதிக்கின்ற தன்மை பெற்ற மெய்ஞ்ஞானி உறையும்கோயில் என்று உணர்ந்த ஸ்ரீ பூண்டி மகான் தேவாலயத்திற்கு நான்கு வாசற்படிகள்.

மேலும், நான்கு அந்தக்கரணங்கள் என்று கூறப்படும். மனம், புத்தி, சித்தம், அகங்காரம் ஆகியவைகளை வென்று அடக்கியவர்கள் மெய்ஞ்ஞானிகள். அப்படிப்பட்ட மெய்ஞ்ஞானி உறையும் தேவாலயம் என்று உணர்ந்த ஸ்ரீ பூண்டி மகான் கோயிலுக்கு நான்கு வாசற்படிகள் என்று நாம் அறிய வேண்டும்.

மேலும் ஞானிகள் தன் மெய் ஞானநிலை அடைய நான்கு வித வழிகளைக் கடந்து தன்னைத்தான் உணர்ந்து தான் அது வானவர்கள். அந்த நான்கும் :

சரியை : இறைதொண்டு, இறைவனைப்பற்றி பாடல் பாடக் கேட்டல், கோயில்களைச் சுத்தப்படுத்துதல் பூ தொடுத்தல் போன்றவை.

கிரியை : இறைவனை தாயாகவும், தந்தையாகவும் நல் குருவாகவும், தோழன், தோழியாகவும் போற்றி வழிபடுதல்.

யோகம் : இறைவனை நினைத்து சிவன் ஒருவனே என்று தெளிதல்.

ஞானம் : இந்த மூன்று நிலைகளையும் கடந்த நிலை. பேரின்ப பெருநிலையை அடைந்த நிலை.

இப்படிப்பட்ட நிலைகளைக் கடந்தவர்கள் மெய்ஞ்ஞானிகள் என்று உணர நான்கு வாசற்படிகள்.

மேலும், மெய்ஞ்ஞானிகள் (1) 96 தத்துவங்களை அடக்கி கைவரப்பெற்ற வர்கள் (2) மலமில்லாதவர்கள் (மாசில்லாதவர்கள்) (3) பாவமில்லா தேவர் உலகத்தில் வாழ்பவர்கள் (4) உயிர்களுடன் கூடவே நின்ற ஒப்பில்லாத தேவர்கள் என்று உணர நான்கு வாசற்படிகளை கொண்டுள்ளது நம் பூண்டி மகான் ஆலயம்.

ஒக்க நின்றானை உலப்பிலி தேவர்கள்
நக்கனென் றேத்திடு நாதனை நாள்தோறும்
மக்க நின்றார் அறியாத பரமனைப்
புக்கநின் றுன்னியான் போற்றி செய்வேனே -திருமூலர்

மேலும், ஞானிகள் பிர்ம லோகம், விட்ணு லோகம், மகேசுவர லோகம், உருத்திர லோகங்களையும் கடந்து நின்று ஈசனை கண்டு ஈசுவரத் தன்மையை அடைகின்றனர் என்பதற்கு,

கடந்து நின்றான் கமலம் மலராதி
கடந்து நின்றான் கடல்வண்ணன் எம்மயன்
கடந்து நின்றான் அவர்கப்புற மீசன்
கடந்து நின்றான் எங்கும்கண்டு நின்றானே - திருமூலர்

கமலம் மலராதி என்பது பிர்ம உலகம். இது குருபகவானுக்குரியது. கடல் வண்ணன் எம்மயன் என்பது விட்ணு உலகம். அது செவ்வாய்க்குரியது. அதற்கு மேல் உருத்திர உலகம் புதனுக்குரியது. இந்த நான்கு அண்டங்களைக் கடந்து நின்றவர் சிவபெருமான். மெய்ஞானிகள் தன் ஞானத்தால் சிவனுடன் ஒன்றி சிவமாகிறார்கள். அப்படிப்பட்ட சிவ மெய்ஞானி உறையும் கோயிலுக்கு நான்கு வாசற்படிகள்.



சுவாமியின் உண்மையான பக்தருள் முக்கியமானவர் அ. முருகையப் பிள்ளை
மு. தஞ்சையம்மாள் அதிபர், ஒட்டல் பேலஸ், கும்பகோணம்

மேலும், வரும் அன்பர்களுக்கு ஸ்ரீ பூண்டி மகான் தன் கருணையினால் தாயாகவும், நல்ல வழிகாட்டிய தந்தையாகவும், ஞானம் வேண்டி வந்த யோகியர்களுக்கு நல்குருவாகவும், வந்த அனைவரையும் ஆசீர்வதித்த தெய்வமாகவும் விளங்கி, மாதா, பிதா, குரு, தெய்வம் என்ற நான்கு விதமாக அருள் பாலித்தார் என்பதற்கு, ஸ்ரீ பூண்டி மகான் உறையும் தேவாலயத்திற்கு நான்கு வாசற்படிகள் என்று உணரவேண்டும்.

மேலும் சித்த மகா புருசர்கள் 4 யுகங்களைக் கடந்தவர்கள். சித்த மார்க்கமே "அனாதிமார்க்கம்" என்று காலவரையின்றி கூறப்படுகிறது. அப்படிப்பட்ட சேர்ந்தவர் நான்கு யுகம் கடந்த சித்த மகா புருசர் கூட்டத்தைச்

சேர்ந்தவர் என்று உணர நான்கு வாசற்படிகள் உள்ளன. காகபுசுண்ட மகரிசி தன்னிடம் வந்த வசிட்ட மகரிசியிடம், நான்கு யுகங்களில் கண்ட அதிசயங்களையும், அவர் ஆயுளில் தேவர்கள் பலமுறை பாற்கடலைக் கடைந்ததைப் பார்த்ததாகவும் விட்ணு பகவான் பல அவதாரங்களைக் கண்டதாகவும் வசிட்டரைப்போல் எட்டு வசிட்டரை கண்டதாகவும் சிவன் யுகம் பிரளயத்தின்போது ஏற்படும் மாறுதல்களைத் தன்னிடம் கேட்டு அறிந்ததாகவும் கூறுகிறார். அப்படிப்பட்ட யுகங்கள் நான்கையும் கண்ட சித்த மகா புருசர் கூட்டத்தைச் சேர்ந்தவர் நம் பூண்டி மகான் என்று உணர்த்த அவர் உறையும் சமாதி கோயிலுக்கு 4 வாசற்படிகள்.

மேலும் தத்புருசர், வாமதேவர், அகோரர், ஈசானன் ஆகிய நான்கு விதமான சிவரூபங்கள். ஐந்தாவது நிலையாகிய சகசுர தளத்தில் கூடிநின்று உருவமற்கு அறிவுப்பூர்வமான சதாசிவம் உருக்கொண்டு இந்த உடம்பை இயக்குகிறது என்று உணர்த்த நான்கு வாயில்கள் நம் பூண்டி மகான் ஆற்று சுவாமிகள் உறையும் கோயிலக்கு என்பதை நாம் உணரவேண்டும்.

மேலும் ஞானிகள் நம் உடலில் ஆறு ஆதாரங்கள் உள்ளதாக கூறுகிறார்கள். அந்த ஆறு வித ஆதாரங்களில் முக்கியமானது மூலாதாரம் ஆகும். இது மலவாய்க்கும், குறிக்கும் (ஆண், பெண் உயிர்நிலை) இடையே உள்ளது. இரண்டு கால் எலும்புகளுக்கு மேலேயும் வீணா தண்டு என்று குறிப்பிடும் முதுகு தண்டின் கீழேயும் உள்ளது. அங்கு குண்டலினி சக்தி முக்கோணமாய் உள்ளது. அதன் நடுவே நான்கு இதழ் தாமரை போன்ற வடிவம் உள்ளது. அந்த நான்கு இதழ் தாமரையின் உள்ளே ஓங்கார எழுத்து உள்ளது என்பதுபோல் நான்கு வாயில்களுக்கு நடுவே நம் பூண்டி மெய்ஞானி ஓங்கார வடிவ உருவமாய் வீற்றிருக்கிறார் என்பதை விளக்க ஸ்ரீ பூண்டி தேவதேவன் கோயிலுக்கு நான்கு வாசற்படிகள்.

மேலும், ஞானிகள் சிவன் தன்மை பெற்று சிவனுடன் ஒன்றியிருக்க நான்குவித யோகப் பயிற்சியால் நான்கு வித பதவியை அடைகின்றனர். அவைகள், சரியையைக் கட்டுப்பாட்டுடன் கடைப்பிடித்து, சிவலோக்கியமும், கிரியைய்யைக் கட்டுப்பாட்டுடன் கடைப்பிடித்து, சிவ சாமீப்பியமும், யோக பலத்தால் சிவ சாருப்பியமும், ஞானத்தால் அடையும் பதவி சிவசாயுக்கியமும் ஆகும். அதாவது:

சிவசால்லோபம்
சிவசாமீபம்
சிவசாரூபம்
சிவசாயுச்சியம்

முன் கூறிய மூன்றும் பதமுக்தி. கடைசியில் கூறிய சிவ சாயுச்சியம் பரம முக்தி. பரப்பிரம்மத்துடன் ஒன்றிய மெய்ஞானியின் கோயில் என்பதை விளக்க நான்கு வாயில்கள்

மூல மண்டலத்திலே முச்சதுரம் ஆதியாய்
நாலு வாசல் எம்பிரான் நடுஉதித்த மந்திரம்
கோலி எட்டி தழுமாய்க் குளிர்ந்தலர்ந்த தீட்டமாய்
மேலும் வேறுகாண்கிலேன் விளைந்ததே சிவாயமே -சிவவாக்கியர்

ஏறுமல்லோ நாசிவழியோடு மூச்சு
ஏறுமந்தப் புருவ மத்தி வாசலேறும்
பாருமே யங்கிருந்து மேலேயேறப்
பழகினால் மேலேறும் நாசி வாரா
நீறுமே வாசல்வழி தடைக ளெல்லாம்
நீங்கிடுமே புருவ மதற்குள்ளே யேறும்
காருமே மூக்கு முனைபுருவ மத்தி
கால் வாசி மேலேற யோகசித்தே.

யோகமுற்ற யோகசித்து யோக மார்க்கம்
யோகமுறை யோகவழி யோக தீச்சை
தாகமுறை நாமுறையே கூரீரையே
தானறியச் சொல்லிடுவீர் சாந்தி சாந்தி
யூகமுறை யோகமிது வாசல்பூட்டு
உட்புகுந்து மனதுயிரை யூடுவாசல்
ஆகவுரை நீட்டிமுனை வாசல் கூட்டு
அய்யய்யா தீபவொழி யருட் செஞ்சோதி.

சோதியே பெருஞ்சோதி சொல் லொண்ணாது
சுழிவாசல் தான்திறந்தோர் காண்பார் பூண்பார்
ஆதியோயிவ் வாசல் நுழையக் காணார்
ஆர்காண்பார் மெய்ஞானம் அரிதுசத்தே
வீதியோ மேல்வாசல் கெதியம் வாசல்
மெய்ஞான வீடதனிற் குள்ளே சென்றால்
தீதியோ துன்பமில்லை கண்ணாம் வீட்டில்
செந்தனனைக் கண்டிலாம் தெருவிற்தானே.

தெருவென்ப தெதுவென்றாற் பத்தாம்வாசல்
சிறுவாசற் புருவநடு அறிவின் வாசல்
குருவென்றா லவ்வாசற் திருவாம் வாசல்
கொடுங் கோபந்தா னகற்றும் சமாதிவாசல்

கருவென்றால் நினைவிருக்கும் முக்தி வாசல்
கணக் கறிந்து யேற்வீரோ ஞானவீடு
இருவென்றால் வாராதே யிருந்து பார்ப்பீர்
யித்தனைக்குங் காரணமே நெத்திவாசல்.

நெத்தியுட மத்தியிலே மூக்கு மேலே
நீழ்புருவத் தடியின் கீழ் புருவமத்தி
தத்தியே வுள்மேடை யுள்ளோர் வாசல்
தான் திறவே ஊசிமுனை வாசல்தானே
சித்திதா னிருக்குமந்தச் சிவமாம் வாசல்
திறவாசல் செயவாசல் தெய்வவாசல்
கத்தியே பாராதே சும்மா பாரு
கதவையே திறந்துவிடு மறலிப் பாரே -காகபுசண்டர்


மேலும் நிலைகள் நான்கு. அவை: 1. சகஜ நிலை 2. கற்புநிலை, 3. யோகநிலை. 4. பிர்மநிலை என்று ஞானிகள் தன் யோக நிலைகளை நான்கு விதமாகக் கூறுகின்றனர்.



சித்திரா பௌர்ணமி விழா சுவாமியின் முன்பாக நடந்த கலை நிகழ்ச்சி திரு எ.எம். ராஜா ஜிக்கி அண்டு குழுவினர் மற்றும் பி.என். தியாகராஜன், தலைவர், பூண்டி நா. கோவிந்தராஜுலு நாயுடு எஸ்-மணியம், பூண்டி

1. சகச நிலை : பொறி ஐந்துமாகிய, மெய், வாய், கண், மூக்கு, செவி. இதன் தொழில்களாகிய ஊறு, சுவை, ஒளி, ஓசை, நாற்றம் போன்றவற்றால் ஏற்படும் கோபம், லோபம், மதம், மாச்சரியம் என்னும் அகங்காரத்தை ஒழித்து, ஒரு நிலையாக்கி ஒரு நிலைப்பட்டு அமைதியுடன் இருக்கும் நிலை சகச நிலை என்பர்.

2. கற்பு நிலை : பெண் ஒருவளுக்கு எப்படி அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு, என்ற நான்கும் ஏற்பட்டு தன் கற்பை காப்பாற்றிக் கொள்கிறாளோ, அதே மாதிரி யோகி ஒருவர், 1. ஆசனம் 2. முத்திரை (ஒரு நிலை), 3. பிராண வாயுவை உள்ளே, வெளியே, கும்பகம் (அதாவது, ரேசகம், கும்பகம், பூரகம்) 4. சுழிமுனை போன்ற நான்கு படிகளைப் பெற்று, உலக ஆசையை வெறுத்து நிராசைநிலை பெறவேண்டும். யோகிக்கு நிராசை நிலையே கற்புநிலை எனப்படும்.




திருவண்ணாமலை மலையும் அண்ணாமலை ஈச்வரன் கோயில் கோபுரமும்

3. யோக நிலை : யோகம் என்ற பதம் யோ + அகம் என பொருள். "யோ" என்பது ய்+ஓ ஆகும். "ஓ" என்பது பிரணவத்தின் மூலப்பொருளாகிய ஓங்காரத்தைக் குறிக்கும் அகம் என்பது நம்முள் உள்ள ஓங்காரம் இருக்கும் இடத்தைக் குறிக்கும். அப்படிப்பட்ட ஓங்காரத் தத்துவத்தை நம்முள் உணரும் நிலை யோகநிலை என்று ஞானிகள் கூறுகின்றனர். இப்படிப்பட்ட ஓங்கார பெருநிலையை நம்முள் காண நாம் நம் விந்துவை கட்டி, நம் உடலில் உள்ள குய்யத்தில் (ஆண்குறி அல்லது பெண்குறி) இருந்து கபால உச்சிவரை பிராணவாயுவை எழுப்பி, உள்முகத்தில் சோதியைக் காணும் நிலை, யோகநிலை எனப்படும்.

4. பிர்ம நிலை : நம் உடலில் உள்ள ஆறு ஆதாரங்களில் மூலாதாரத்தில் உள்ள குண்டலினி சக்தியைத் தன் யோக பலத்தால் மற்ற ஐந்து ஆதாரங்களின் வழியே மேலேற்றி உச்சி வரையில் கொண்டு சகசுராரத்தில் சேர்க்கும் நிலை பிர்மநிலை எனப்படும். இது தன்னை மறந்து அந்தகரணங்கள் நான் கையும் வென்று, மும்மலத்தையும் அறுத்து உலக மாயையைக் கடந்து பரவெளியில் நின்று ''நான்'' ''நீ'' என்ற பேதத்தை ஒழித்து பரபிர்மத்துடன் சேரும் நிலையே பிர்மநிலை, கடை நிலை எனப்படும் நிலை. இது பிர்ம நிலையாகும்.

இவ்வாறாகிய நிலைகள் நான்கையும் கடந்த மெய்ஞானி உறையும் கோயில் என்பதை விளக்க நான்கு நிலை வாசற்படிகள். பெரும் ஞானிகள், அறிவுலக மேதைகளால் ஆலோசனை வழங்கப்பட்டு ஸ்ரீ பூண்டி பிர்மஞானியின் சமாதி கோயிலுக்கு நான்கு வாசற்படிகள் என்று உணர வேண்டும்.

சாதாரண மனிதனுக்கு பிறப்பு, தேய்தல், மூப்பு, சாவு என்ற நான்கு மாறுதல் உண்டு. ஆனால் நிட்காமிய தவமியற்றி மெய்ஞானம் கண்ட ஞானிகளுக்கு பிறப்புத் தன்மை, தேய்தல் தன்மை, மூப்புத்தன்மை, இறப்புத் தன்மையாகிய நான்கும் அற்று விட்டவர்கள் என்பதை அறிய பூண்டி மெய்ஞானியின் தேவ உடல் மீது கட்டப்பட்ட சமாதி கோயிலுக்கு நான்கு வாசற்படிகள் என்று அறிய வேண்டும்.



படம்

நிற்பவர்கள் (இடமிருந்து வலம்) :

1. டி. ராதாகிருஷ்ணன், நங்கிலிகொண்டான்

2. ஸ்ரீமத் தங்கம் சுவாமிகள், சேலம்.

3. அ. முனிரத்தின நாட்டார், இரும்பு வியாபாரம், திருவண்ணாமலை

உட்கார்ந்திருப்பவர்கள் :

1. திரு. ரங்கநாத ஐயர், காட்டிலாக்கா, காஞ்சிபுரம்

2. அ. குமாரசாமி, B.A.B.L., வேலூர்

3. ஆறுமுக சுவாமிகள், அம்பூண்டி

4. ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணி சுவாமி, பூண்டி

5. கே.ஆர். சிவகாந்தன், ஸ்ரீ சக்தி அரிசி ஆலை, ஆரணி

மேலும், நம் உடலில் உள்ள ஆறு ஆதாரங்களில் மூலா தாரத்தில் உள்ள குண்டலினி சக்தி இடம் இருந்து பிராணவாயு சிரசில் உள்ள மயிர் பாலம் வரை ஓடியும் பாய்ந்தும், ஒடுங்கியும் உள்ளது. இதன் ஓட்டம் ஒடுக்கத்தைப்பற்றி ஞானி ஒருவரே உணருவார்கள். மற்றவர்களால் அறிய முடியாது.

நம் உடலில் இடக்கலைப் பிங்கலைய்யில் வாசி சுவாசம் நடை பெறுவதால் நாம் உயிருடன் வாழ்கிறோம். உலகில் நடமாடும் சுவாசத்தைக் காற்று என்கிறோம். காற்றால் உலகம் வாழ்கிறது.

பஞ்ச பூதங்களில் கண்ணுக்கு தெரியாதது காற்று ஒன்றே ஆகும். மற்ற நான்கும் (நீர், நெருப்பு, நிலம், ஆகாயம்) கண்ணுக்குத் தெரிவன. அப்படி கண்ணுக்குத் தெரியாத காற்று சிவமாகும். உலகம் சக்தி மயமாகும். சிவன் சக்தியிலும் சக்தி சிவனிலும் ஒடுக்கமாகும். அப்படி "சக்தியும் சிவமுமாகி"ய மெய்ஞ்ஞானியின் சமாதி என்று அறிய, நான்கு பூதங்களாகிய நீர், நெருப்பு, நிலம், காற்று நான்கு வாசற்படிகளாகவும், இவை யெல்லாம் ஆகாயத்தில் ஒடுக்கம் என அறிய கோயிலில் சுவாமி சமாதி என்றும் அறிய நான்கு வாசற்ப்டி என்று அறியவேண்டும்.

சுவாமி சமாதி கோயில்

"மூலவாசல் மீதுளே முச்சதுரம் ஆகிய
நாலுவாசல் எண்விரல் நடுஉதித்த மந்திரம்
கோலம் ஒன்றும் அஞ்சுமாகும் இங்கலைந்து நின்றநீ
வேறுவேறு கண்டிலேன் விளைந்ததே சிவாயமே!"

உ

ஸ்ரீ பூண்டி மகான் துணை

இடைக்காட்டுச் சித்தர்

(பக்கம் 342 குறிப்பிடப்பட்டுள்ள சித்தரின் நிகழ்ச்சியின் தொடர்ச்சி)

இடைக்காட்டுச் சித்தர் சமாதியே திருஅண்ணாமலை கோயில் ஆகும். இடைக்காட்டுச் சித்தர் தன் சிறு வயது பிராயத்தில் பொதிகை மலைச்சாரலில் ஆடு, மாடுகளை மேய்த்துக் கொண்டிருக்கும் போது நவ நாத சித்த மகா புருசர்களில் ஒருவர் அவ்வழியே செல்லும்போது அந்த நவநாத சித்த மகா புருசருக்கு தன்னுடைய ஆட்டின் பாலைக் கறந்து கொடுத்து உபசரித்தார்.

இவரின் மானசீக பக்தியைக் கண்டு மகிழ்ந்து அந்த நவநாத சித்த மகாபுருசர், இடைக்காட்டுச் சித்தருக்கு ''ஞானப்பாலை'' ஊட்டிவிட்டு சென்றுவிட்டார்.

ஞானம் கைவரப்பெற்ற இடைக்காடர் ஆடு, மாடுகளை பொதிகை மலைச்சாரலில் மேய்த்துக் கொண்டு பல ஞான நூல்களைப் பாடலாகப் பாடியுள்ளார்.

ஒரு சமயம் நாட்டில் பெரும் பஞ்சம் வரப்போகிறது என்று தன் ஞான திருட்டியால் உணர்ந்து, தன்னுடைய ஆடு மாடுகளை எருக்க இலையை சாப்பிடப் பழக்கி வந்தார்.

வரகு அரிசி (இது சிறிய சிகப்பு அரிசியாக இருக்கும்) நெல்லையும் எருக்கஞ் செடிகளையும் கொண்டு பொதிகை மலைச்சாரலில் ஒரு குடிசையை நிர்மாணித்து வைத்து இருந்தார்.


ஒன்பது நவகிரகங்களும் தன்னுடைய ராசி வீடுகளில் வக்கிரமாகி சுமார் பன்னிரெண்டு ஆண்டு மழையில்லாமல் செய்து விட்டன.

பூலோகத்தில் எங்கும் தண்ணீர் இல்லாமல் உயிரினங்கள் அழிந்து போய்விட்டன. ஆனால் பொதிகை மலைச்சாரலில் மட்டும் இடைக்காட்டுச் சித்த மகா புருசரும் அவர் ஆடு, மாடுகளும் இறவாமல் இருந்தன. அவைகள் இடைக்காடர் காட்டிய எருக்க இலையுடன் கூடிய வரகு நெல் குடிசையில் உராய்ந்து அதில் விழும் வரகு அரிசியை இடைக்காடரும், எருக்க இலையை ஆடு, மாடுகளும் தின்று உயிருடன் இருந்தனர்.

கிரகங்கள் ஒன்பதும் வக்ரகதியில் பூமியை பஞ்சமாக்கி உயிரினங்களை அழித்துவிட்டோம் என்று ஆரவாரித்தனர். ஆனால் செவ்வாய் பகவான், பூலோகத்தில் எல்லா உயிரினங்களும் அழிந்துவிடவில்லை. பொதிகை மலையில் ஒரு மகானிடம் நம்முடைய அதிகாரம் செல்லவில்லை என்று கூறினார்.

ஒன்பது நவகிரகங்களும் நாம் தற்போது எப்படி வக்கரித்துள்ளோமோ அதன்படியே பூலோகத்தில் போய் பார்ப்போம் என்று பொதிகை மலைச்சாரலை அடைந்தனர்.

இடைக்காட்டுச் சித்தர் மகா புருசர் அனைவரையும் வரவேற்று எருக்க இலை உண்ட ஆட்டின் பாலையும், பசுவின் பாலையும் அவர்களுக்கு கொடுத்து உபசரித்தார்.



தற்போது பூண்டி மகான் வழியில் நடமாடிக் கொண்டிருக்கும் பருவத சுவாமிகள், வில்வாரணி

எருக்க இலையை உண்ட ஆட்டின் பாலையும் பசுவின் பாலையும் உண்ட நவகிரகங்கள் ஒன்பது பேரும் மயங்கிக் கீழே விழுந்து கிடந்தனர். இதுதான் சமயம் என்று இடைக்காட்டு சித்தர் உலகம் நலம் அடைய ஒன்பது கிரகங்களும் எந்த எந்த ராசியில் இருந்தால் நல்லது என்று உணர்ந்து ஆடு மேய்க்கும் துறடு கொண்டு தரையில் 12 கிரக வீடு வரைந்து அந்தந்த வீட்டில் கிரகங்களை தூக்கி வைத்து விட்டார்.

உலக நலமான முறையில் கிரகங்கள் வந்ததும் வானம் பொழிந்து பூமி நலமாக புல், பூண்டு, உயிரினங்கள் உற்பத்தியாகி நலமாக இருந்தது. கிரகங்கள் தங்கள் மயக்கம் தெளிந்து இடைக்காடரின் செய்கையைக் கண்டு தலை வணங்கி இன்றையிலிருந்து எங்கள் ஒன்பது பேர் ஆளுகை சித்த மகா புருசர்களிடம் அவர்கள் கூறுவதுபோல் நடப்பதாக உறுதி கூறி விண்ணுலகம் அடைந்தனர்.

இந்த நிகழ்ச்சியை சித்தர்கள் வரலாற்றில் படிக்கும்போது நம் பூண்டி மகானிடம் 1968-ஆம் ஆண்டு கடும் வறட்சியின்போது மழை வேண்டி கேட்கும்போது அவர் திருவாயால் ''மழை பெய்வது ஒருவரால் ஆகக் கூடிய காரியமில்லப்பா!'' என்று கூறினார்.

பக்தர்கள் வேண்டுகோள் நிறைய இருந்ததால் ''தீர்த்த மலைக்கு (இது தர்மபுரி மாவட்டம் அரூர் தாலுக்காவில் உள்ளது) அனுப்பியுள்ளேன்பா! அரை கொட்டாங்கச்சி தண்ணீர் கொண்டு வராங்கப்பா!'' என்று கூறினார்.

தன்னுடைய உடலில் உள்ள ஒன்பது சக்திகளை அடக்கி யாளும் சித்த மகா புருசர்களுக்கு உலகத்தில் உள்ள ஒன்பது நவகிரகங்களும் கட்டுப்படும் என்று நாம் உணர வேண்டும்.

பஞ்சேந்திரங்களை அடக்கியவர்களிடம் பஞ்சபூதங்களும் கட்டுப்படும். ஒன்பது சக்திகளை (வாசல்களை) அடக்கியவர்களுக்கு ஒன்பது கிரகங்களும் கட்டுப்பட்டு நடக்கும் என்று சித்தர்களைப் பற்றிய நூல்களில் காண்கிறோம்.

அப்படி பஞ்ச பூதங்களையும், நவகிரக நாயகர்களையும் அடக்கியாண்ட நிலை நம் பூண்டி மகான் நிலை என்று நாம் உணர வேண்டும்.

"ஓம்" விளக்கம்

உலகத்தில் படைத்தல் தொழில் புரிபவர் பிரம்மா. உலகத்தை காக்கும் தொழில் புரிபவர் விட்ணு. உலகத்தை ஒடுக்கும் தொழில் புரிபவர் சிவன். "ஓம்" என்ற மந்திரத்தின் மூல எழுத்துக்கள். அ+உ+ம்=ஓம் ஆகும்.

அ = தோற்றம் = பிரம்மா

உ = இருப்புரி = விட்ணு

ம் = ஒடுக்கம் = சிவன்

அ, உ, ம் என்ற கூட்டு எழுத்தின் ஒலியே "ஓம்" ஆகும். அகர ஓசையுடன் வாயுவை நாம் உள்ளிழுத்து, உகர ஓசையுடன் வாயுவை உள் நிறுத்தி, மகர ஓசையுடன் வாயுவை வெளியே விடும் பயிற்சியே "ஓம்" என்றும், பிரணவ எழுத்து என்றும் ஆகும்.

நான்கு வேதங்களாகிய இருக்வேதம், யசுர்வேதம், சாம வேதம், அதர்வண வேதம் ஆகிய எல்லாவற்றிற்கும் முதல் எழுத்து "ஓம்" என்பதாம். எல்லா மந்திரங்களுக்கும் "ஓம்" மூலமான மந்திரமாகும்.

உள்ளிழுக்கும் காற்றுக்கு இரேசகம் என்றும் உள்ளிழுத்த காற்றுக்கு கும்பகம் என்றும், உள்ளிழுக்கும் காற்றை வெளியே விடுவது பிராணம் என்றும் கூறுவர் இதுவே பிராணன். நம் உடலில் உள்ளது என்பதை அறியப் பிராணவாயு என்கிறோம். இதன் மூல ஒலியே "ஓம்" என்பதாகும்.

சுவாமிகள் கலசப்பாக்கம் மேட்டுத் தெருவில் செய்யாற்றுக்கு இறங்கும் படித்துறையின் கண் அமைந்துள்ள அரசமரத்தின் அடியில் உள்ள வினாயகர் சிலையை அப்படியே அலக்காக தூக்கி தன் அக்கிலில் (கையிடுக்கில்) வைத்துக் கொண்டு செய்யாற்றை நோக்கி நடந்து சென்று அந்த வினாயகர் சிலைக்கு தண்ணீர் விட்டு அபிடேகம் செய்வார். மறுபடியும் இருந்த இடத்தில் கொண்டு வந்து வைத்து விடுவார். இதில் வேடிக்கை என்ன வென்றால் அந்த பிள்ளையார் சிலையை நான்கு, ஐந்து பேர் சேர்ந்து தூக்கினாலும் தூக்க முடியாத பளு உள்ளதை தான் ஒருவரே தன் வலது கை ஒன்றினாலேயே தூக்கிச் சென்று அபிடேகம் செய்வார்.

அந்த வினாயகர் சிலை இன்றும் கலசப்பாக்கம் மேட்டுத் தெருவின் ஆரம்பத்தில் அரச மரத்தடியில் ஆனந்தமாக உள்ளது.

மெய்ஞானி ஒருவர் தன் யோகப்பயிற்சியின் காரணமாக இயற்கையிலிருந்து விலகிப் போய்விடும் வலிமை உள்ளவர்கள். அதனால் இயற்கை அந்த மெய்ஞானியின் பின் தொடர்ந்து செல்லும். மெய்ஞானி அதைப் பொருட்படுத்தாது விட்டு விடுவதால் அந்த இயற்கை அவர்களுக்கு அடிமையாகி விடுகிறது.

மெய் ஞானியின் எண்ணங்கள் வலிமை பெற்றது. எண்ணங்கள் எங்கே வலிமை அடைகிறதோ, அங்கே உடல் வலிமை வந்து விடும். மலைகளையும் பெயர்த்து எடுக்கும் தன்மை. ஒரு மெய் ஞானிக்கு வந்துவிடும்


என நாம் அறிய வேண்டும். அப்படிப்பட்ட மெய்ஞானி நம் பூண்டி மகான் ஆற்று சுவாமிகள்

ஒன்றே சிவமென் றுணர்ந்தே னுணர்ந்தாங்கு
நின்றே மெய்ஞான நிலைபெற்றேன் - நன்றே மெய்ச்
சித்தியெல்லாம் பெற்றேன் றிருவம் பலத்தாடி
பக்தியெல்லாம் பெற்ற பலன்.

தூக்கங்கெடுத்தான் சுகங்கொடுத்தானென்றுனுளத்தே
யேக்கந் தவிர்த்தா னிருளறுத்தான் ஆக்கமிகத்
தந்தா னெனையீன்ற தந்தையே யென்றழைக்க
வந்தா னென்னப்பன் மகிழ்ந்து.

பர்வத மலை


வட ஆற்காடு திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம் போளூர் தாலுக்காவிலும் செங்கம் தாலுக்காவிலும் உள்ளது பர்வதமலை. செங்கம் தாலுக்கா கடலாடி என்ற கிராமத்திற்கு வடமேற்காகவும், போளூர் தாலுக்கா தென்மாதி மங்கலம் கிராமத்திற்கு மேற்கேயும், போளூர் தாலுக்கா மூலக்காடு, காந்தம்பாளையம் கிராமத்திற்கு தெற்கேயும், கிழக்காகவும் அமைந்தமலை பர்வமதலை இதன்மேல் மல்லிகார்சுன சுவாமியும் பிரமராம்பிகை அம்மனும் எழுந்தருளி உள்ளார்கள். இந்த சுவாமியையும் அம்மனையும் பன்னிரண்டு சித்த மகா புருடர்கள் தினம் இரவில் அபிடேக ஆராதனை செய்வதாக ஐதீகம்.



காஞ்சிபுரம் திரு ஏகாம்பரேசுவரர் கோயிலில் இருந்த சித்த மகா புருசர்கள் இராமசுவாமி சுவாமிகள்

மலைமீது என்றும் வற்றாத சிங்கக்கிணறு என்ற தெய்வீக சுனை உள்ளது. அந்த சுனைக்கு பின்னால் வாழைத்தோட்டம் இருப்பதாகவும் அதில் சித்த மகா புருஷர்கள் பல ஆயிரம் வருடங்களாக வாழ்ந்து வருவதாக கூறப்படுகிறது. மலைமீது ஏற சரியான படிக்கற்கள் கிடையாது. ஆனால் ஒற்றையடிப் பாதையாக மலை மீது ஏற வழியுள்ளது.

தென்மாதி மங்கலத்திலிருந்தும், கடலாடி என்ற ஊரிலிருந்தும் அம்மலையில் ஏற ஒற்றையடிப்பாதை உள்ளது. கடலாடி பாதையைவிட தென்மாதி மங்கலம் வழியாக மலை ஏறும் பாதையே பெரும்பாலும் மக்களால் உபயோகிக்கப்படுகிறது. அதுவே கரடு, முரடு அற்ற பாதையாகும்.



ஸ்ரீ பூண்டி மகானும் அவருடைய தொண்டருமாகிய
ஸ்ரீலஸ்ரீ சுப்ரமண்ய சுவாமிகள் பூண்டி

மலைமீது எந்தவித உணவு வசதியோ மற்ற வீடு, கடை வீதியோ கிடையாது. எந்தப் பொருளையும் கீழே இருந்துதான் எடுத்துச் செல்லவேண்டும். மலையில் பலவித தேவமூலிகைகள் உள்ளது. ஒருமுறை மலை ஏறி இறங்கிவிட்டால் நம் உள்ளமும், உடலும் உறுதியாக உள்ளது என்பதை என் சொந்த அனுபவத்தில் கண்ட உண்மையாகும்.

மலை ஏறும் பாதையில் சில இடங்களில் பாறையின்மேல் ஏற வேண்டி உள்ளது. அப்பாறை மீது இரும்பு கடப்பாரை கம்பியால் $1^1/_2\,1^1/_2$க்கு ஜம்பர் வைத்து ஈயம் காய்ச்சி, அடிக்கப்பட்டு உள்ளது. அந்த கம்பிகளைப் பிடித்தபடி மலை ஏறவேண்டும். நாங்கள் மலை ஏறும் சமயம் இருந்ததைவிட தற்போது, நடை பாதையில் அன்பர்களால் பல சௌகரியங்கள் செய்யப்பட்டு உள்ளன.

மலை ஏழு பிரிவுகள் ஏழு சடையுள்ளதாக நம்பப்படுகிறது. மலைமீது, பெரிய பாறையின் சமதளத்தில் கோயில் கட்டப்பட்டு உள்ளது.

கோயில் இந்த யுகத்தில் கட்டியதாக தென்படவில்லை, இடையில் கோயிலைப் புதுப்பித்திருக்கலாமே ஒழிய அதன் ஆரம்ப வேலை பல யுகம் கண்டதாக உள்ளது. இரண்டாவது மலையில், பர்வத ராசன் கோட்டை இருந்த அடையாளம் உள்ளது.



கார்த்திகை தீபத்திற்கு முன்நாள் நடக்கும் அண்ணாமலை உடன்உறை உண்ணாமலை அம்மன் பெரிய தேர்த் திருவிழா

மலைமீது பல நோய் தீர்க்கும் அற்புத மூலிகைகள் உள்ளது. சந்தான கரணி, சல்லிய கரணி, சமன்ய கரணி, மிர்தஞ்சிவினி, கருநெல்லி, சின்னாசுருங்கி, பேய் விரட்டி, சஞ்சீவி, மகாவில்வம் போன்ற இன்னும்

நமக்குத் தெரியாத எத்தனையோ மூலிகையை தன்னுள் கொண்டுள்ளது பர்வத மலை.

நம் பூண்டி சுவாமிகள் நடமாடிய சமயம் இம்மலையில் சில நாள் இருந்துள்ளதாக கூறப்படுகிறது. சுவாமிகளைத் தரிசிக்க வரும் அன்பர்களில் நிறையபேர் சுவாமியிடம் உத்தரவு கேட்டுக் கொண்டுதான் பர்வதமலைக்குச் சென்று வருவார்கள்.

அப்படி பர்வதமலை சென்று வரும் அன்பர்கள் மலைமீது உள்ள சிங்கக் கிணறு சுனைத் தண்ணீர் கொண்டு வந்து சுவாமியிடம் கொடுப்பார்கள். சுவாமிகளும் அந்த தண்ணீரை ஆனந்தமாக குடிப்பார்கள்.

இப்படி சுவாமியை தரிசிக்க சென்னையிலிருந்து வந்தார்கள். சுவாமி உத்திரவு கேட்டு மலை ஏறலாம் என்று சாமியிடம் சென்றனர். அதற்கு சுவாமிகள்:

''நல்லது போய் வாங்க. நானும் வருகிறேன்'' என்றார்.

சென்னையிலிருந்து வந்த அன்பர்களும் வெகு சந்தோசத்துடன் மலையில் ஏறிச் செல்வார்கள். சுவாமியும் பர்வதமலையில் அந்த சென்னை அன்பர்களுக்கு பூனை வடிவாகவும், மான் வடிவாகவும் தரிசனம் கொடுத்தார்.

பர்வதமலையில் பூனையோ, மானோ எவரும் இதுவரை கண்டதில்லை. வடஆற்காடு மாவட்டத்தின் பெருமை சேர்க்கும் செய்திகளில் ''பர்வத மலை'' ஒன்றாகும்.

பூண்டி மகானிடம் தொண்டு புரிந்த சாதுக்கள்

ஆறு ஆதாரங்களைக் கண்ட ஆண்டவனை, வெட்டவெளிதனை மெய்யென்று கண்ட ஞானவேந்தனை, சுழிமுனை கண்ட ஞான சூரனை, கள்ளப் புலன் அனைத்தும் அறுத்த ஞானக் கடவுளை, ஐம்பூதங்களையடக்கிய ஞான ஆண்டவனை, மும்மலங்களை அறுத்த ஞான முனிவனை, முன் வினைகளையெல்லாம் அறுத்தெரிந்த ஞானத் தலைவனை, காமனை வென்று கனல் வழிச் சென்ற ஞானக் கடவுளை, நினைப்பும், மறப்பும் அற்ற நிமலனை, பிறப்பு, இறப்புத் தன்மையை வென்ற ஞான வேலனை, இரவும், பகலும் அந்த ஞானக் குழந்தையைப் பேணிப் பாதுகாத்து உலகத்தார் வணங்கி நற்கதி அடைய வழி அமைத்துக் கொடுத்த கீழ்க்கண்ட தவமணிகளுக்கு நாங்கள் இருகரம் கூப்பி சிரம்மேல் வைத்து வணங்குகிறோம்.

1. தவத்திரு செகதீச சுவாமிகள்

ஸ்ரீ பூண்டி மகான் தேடக் கிடைக்காத ஞானத்தங்கம் என்று உணர்ந்து, அவர் வீற்றிருந்த திண்ணையில் தூங்கா விளக்கேற்றி வைத்தவர், ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணி சுவாமியுடன் சுவாமிகள் அணிந்திருந்த பல சட்டைகளை கத்திரிக்கோல் கொண்டு வெட்டி எடுத்தவர். அப்படி வெட்டிய சட்டையுடன் சுவாமி உடலின் சதை ஒட்டியே வந்தது. சுவாமி உடல் எலும்புகள் தெரியும் அளவிற்குப் போய்விட்டது. தினம் மாலை வேளையில் பாராயணம், பசனைகளை செய்து சுவாமியிடம் பணி புரிந்தவர். தற்போது, வெறும் கௌபீனத்துடன் திருவண்ணாமலை தாலுக்கா நாயுடுமங்கலம் கூட்டு ரோடில் எளிய ஆன்மீகப் பாதையில் வாழ்ந்து கொண்டிருக்கும் நல்ல ஆன்மாவாகும்.

2. தவத்திரு சண்முக சுவாமி, காங்கனூர்

போளூர் தாலுக்கா காங்கனூரில் தொண்ட மண்டல துளுவ வேளாளர் குடும்பத்தில் நல்ல வசதியான விவசாயக் குடும்பத்தில் பிறந்து, துறவு பூண்டு, காங்கனூர் மலையில் யோக நிலையில் இருந்து, வந்த பக்தர்களுக்கு அருளாசி வழங்கி வந்தவர். பூண்டி மகானின் தொண்டே இப்பிறவியின் பயன் என்று கருதி பூண்டி மகானிடம் தொண்டு புரிந்து வந்தவர். பூண்டி சுவாமியின் பக்தர்களால் "பூண்டி இளைய சுவாமி" என்று அழைக்கப் பட்டவர். தற்போது காங்கனூரில் "பூண்டி மகான் ஆசிரமம்" நிறுவி அவர் வழியில் ஆன்மீகப் பாதையில் வாழும் நல்ல ஆன்மாவாகும்.

3. தவத்திரு "கோரா" சுப்பிரமணிய சுவாமி, காப்பலூர்

போளூர் தாலுக்கா காப்பலூர் கிராமத்தில் "குல்லாளர்" குடியில் பிறந்தவர். இவர் ஒரு முறை செங்கல் சூளை போட்டுக் கொண்டிருந்தார். அப்போது இடியும், மழையும் வர, பூண்டி மகானிடம் மனமார வேண்டினார். என்ன

அதிசயம்! காப்பலூர் தவிர சுற்று வட்டாரங்களில் மழை பொழிந்து விட்டது. இவர் செங்கற்கள் காப்பாற்றப்பட்டது.

இந்த அற்புதம் பூண்டி மகானால் நடந்தது என்று பூண்டி வந்தார். பூண்டி மகான் இவரைப் பார்த்து, "ஏய்யா! அவனவன் நாற்றங்கால் உழுது விட்டு மழை வேண்டும் என்கிறான். நீ "என்னான்னா நாலு செங்கல் அறுத்துவிட்டு மழை வேண்டாம்!" என்கிறாய் என்று கூறினார்.

பூண்டி மகான் கலியுக அவதாரம் என்று உணர்ந்து அவரிடம் தினம் சென்று வந்தார். ஒருநாள் சுவாமிகள் இவரைப் பார்த்து "வந்த வேலையை விட்டுவிட்டு, பந்தக்காலை ஏம்பா! பிடித்துக் கொண்டிருக்கிறாய்" என்றார். "எனக்கு குடும்பம் உள்ளதே சுவாமி" என்றார் இவர். அதற்கு சுவாமிகள் "ஆட்டைமேய்த்தாற் போல இருக்க வேண்டும். ஆ அறுவாளை பக்குவமா மரத்தில் சாய்த்து விட்டு வரவேண்டும்பா!" என்று கூறினார்.

குடும்ப வேலையை முடித்துவிட்டு ஞானவழியில் வரவேண்டும் என்று பரிபாசையில் கூறினார். சுப்பிரமணிய சுவாமியும், அதன் படி தன் குடும்ப வேலைகளை முடித்துவிட்டு பூண்டி மகானிடம் இரவும் பகலும் தொண்டு புரிந்து வந்தார். தற்போது திருவண்ணாமலை மலைமீது முலைப்பால் தீர்த்தம் அருகில் "ஸ்ரீ பூண்டி மகான் சித்தாசிரமம்" நிறுவி ஆன்மீக வழியில் வாழ்ந்து வருகிறார்.

5. தவத்திரு சொக்கலிங்க சுவாமிகள்

இவர் போளூர் தாலுக்கா, விளாப்பாக்கம் கிராமத்தில் எளிய குடும்பத்தில் பிறந்தவர். 'கிராம சேவக்' ஆக தன் வாழ்க்கையைத் தொடங்கியவர். தினம் பூண்டி வந்து தரிசனம் செய்து பிறகு பூண்டியில் சுவாமி தொண்டே நம் கடன் என்று இருந்தவர். தன் வருவாய் முழுவதும் சுவாமி தொண்டிற்கே செலவு செய்தவர். தற்போது கலசப்பாக்கம் அலுவலகத்தில் சுவாமியின் நினைவாக பணியாற்றிக் கொண்டிருக்கும் நல்ல ஆன்மீக குழந்தையாகும்.

6. தவத்திரு முனிரத்தின சுவாமி, திருவண்ணாமலை

ஸ்ரீ பூண்டி மகான் ஆற்றில் இருக்கும்போது இவர் வியாபாரப் பணியாக கலசப்பாக்கம், வில்வாரணிபோன்ற கிராமங்களுக்கு செல்லும்போது மகானை தரிசனம் செய்துவிட்டுப் போவார். சுவாமிகள் திண்ணையில் அமர்ந்தபிறகு சுவாமியின் தொண்டே சாலச் சிறந்தது என்று உணர்ந்து தொண்டு புரிந்து வந்தவர். இன்றளவும் சுவாமியின் தொண்டே சிறந்தது என்று நினைத்து வாழ்ந்து வருகிறார். இவர் திருவண்ணாமலையில் இரும்பு வியாபாரம் செய்துகொண்டு ஆன்மீக வழியில் எளிய வாழ்க்கை வாழ்ந்து வருபவர்.

7. தவத்திரு "கலர் சாமி", சிதம்பரம்

சுவாமியின் யோக நிலைகண்டு சுவாமி திண்ணையில் அமர்ந்ததிலிருந்து இன்றளவும் சிதம்பரத்திலிருந்து பிரதி பௌர்ணமி, அமாவாசை தவறாமல் வந்து போகும் நல்ல ஆன்மா.

இவர் பல அதர்வண வேதம் தெரிந்தவர். பூண்டி மகான் இவரிடம் ''நமக்கேம்பா அதெல்லாம்! அதை விட்டுவிடு'' என்றார். அன்றையிலிருந்து இன்றுவரை சுவாமியின் புகழ் பாடுவதே நம் தொண்டு என்று சிதம்பரத்தில் எளிய வாழ்க்கை வாழ்ந்து வருகிறார்.

8. தவத்திரு வாலாசா சுப்பிரமணி சுவாமி

இவர் சுவாமியின் ஐம்பொன் சிலை செய்து வர ஆலோசனைகளை கூறி, அன்பர்கள் நன்கொடையால் சிலையைச் செய்து, பூண்டியில், வைத்துவிட்டு சுவாமியின் நினைவாக வட ஆற்காடு மாவட்டம் வாலாசாவில் ''ஸ்ரீ பூண்டி மகான் ஆசிரமம்'' நிறுவி ஆன்மீகப் பணியாற்றி வருகிறார்.

9. தவத்திரு அவலூர்பேட்டை ஆறுமுக சுவாமி

இல்லறத்தைத் துறந்து பூண்டி மகானே தெய்வம் என்று தீர்மானித்து சுவாமிக்கு உற்சவக்கால சப்பரம் செய்ய ஆலோசனையையும் அளித்தவர். சுவாமி நினைவாக, ''ஸ்ரீ பூண்டி மகான் ஆசிரமம்'' அமைத்து செஞ்சி தாலுக்கா அவலூர் பேட்டையில் வாழ்கிறார்.

10. தவத்திரு அவலூர்பேட்டை முருகைய சுவாமி

பூண்டி சுவாமியைக் கண்டவுடன் இவர் கலியுக அவதாரம் என்று உணர்ந்து குடும்பத்தைவிட்டு சுவாமிக்கு தொண்டுபுரிந்து வந்தவர்.

11. தவத்திரு சண்முக சுவாமி, காப்பலூர்

கலசப்பாக்கம் வட்டம் காப்பலூரிலிருந்து பூண்டி வந்து திருமணமே செய்து கொள்ளாமல் இரவும் பகலும் சுவாமிக்கு தொண்டு புரிந்தவர். இவர் போளூர் தாலுக்கா கேட்டவரம் பாளையத்தில் வாழ்கிறார்.

12. தவத்திரு அம்முண்டி ஆறுமுக சுவாமி

பூண்டி வந்து ஸ்ரீ பூண்டி மகான் அருளாசிக்கு உரியவராகி, சுவாமியின் இன்று சமாதி கோயில் உள்ள இடத்தை தன் சொந்தப் பணத்தில் வாங்கி வைத்தவர். மேலும், சமாதி கற்கோயில் கட்ட பொருளும், உடல் உழைப்பையும் கொடுத்து வந்தவர். அவர் நினைவாக குடியாத்தம் தாலுக்கா, அம்முண்டி என்ற கிராமத்தில் ஸ்ரீ பூண்டி மகான் வழியில் ஆன்மீகப் பாதையில் வாழ்ந்து வருகிறார்.

15. தவத்திரு சுபோதர் சச்சிதானந்த சம்பத்

இவர் பூண்டிக்கு அருகில் உள்ள காங்கனூர் குப்பத்தில் பிறந்து பூண்டி மகானின் அருளாசிக்கு உரியவராகி, ராணுவத்தில் சுபேதார் பதவி வகித்து வரும் சமயம் பூண்டி மகான் அவ்விடம் இவருக்கு காட்சி கொடுத்து அருள் பாலித்தார். இன்று சுவாமி சமாதி கற்கோயிலின் மூல விக்ரகத்தை தன் சொந்த செலவில் செய்து வைத்தவர். மேலும், இன்றளவும் சுவாமியின் திருவிழாக்

காலங்களில் அபிடேக ஆராதனை செய்து வருகிறார். பதவி ஓய்வு பெற்று காங்கனூர் குப்பத்தில் ஆன்மீக வழியில் கல்யாணமே செய்து கொள்ளாமல் வாழ்ந்து வருகிறார்.

16. தவத்திரு மடிசுவாமி என்கிற நாராயணசாமி

ஸ்ரீ பூண்டி மகான் ஞானநிலையைக் கேள்விப்பட்டு திருவண்ணாமலை தாலுக்கா. கணப்பாவரம் என்ற கிராமத்திலிருந்து பூண்டி வந்து சுவாமியின் பாதசேவையை செய்தவர். திருமணம் செய்து கொள்ளாமல், ஆன்மீக வழியில் கணப்பாவரத்தில் ஸ்ரீ பூண்டி மகான் நினைவாக வாழ்ந்துவரும் நல்ல ஆன்மா ஆவார்.

17. தவத்திரு புண்டரி சுவாமி

இவர் பூண்டியைச் சேர்ந்தவர். வருவாய்த் துறையில் பணி புரிந்தவர். சுவாமிகள் மூட்டையுடன் நடமாடிக் கொண்டிருக்கும்போதே சுவாமியின் ஆசி பெற்றவர். ஆன்மீக வழியில் இன்று செங்கல்பட்டு, ராதாரபுரத்தில் "ஸ்ரீ பூண்டி மகான் சித்த ஆசிரமம்" அமைத்து ஆன்மீகப் பாதையில் வாழ்ந்து கொண்டு இருக்கிறார்.

18. தவத்திரு சிமிட்டா சுவாமி

இவர் வடநாட்டில் ஒரு குருவின் ஆலோசனைப்படி தெற்கே திருவண்ணாமலையின் சமீபம் ஒரு "சீவன் முக்தர்" உள்ளார் என்று கூறக்கேட்டு தெற்கே பல ஊர்களில் சுற்றி அலைந்து விட்டு கடைசியாக பூண்டியில் வந்து ஸ்ரீ பூண்டி மகானைக் கண்டார். இவரே "சீவன் முக்தர்" என்று உணர்ந்து சுவாமிக்கு பணிவிடை செய்து வந்தவர். இவர் பூண்டி மகான் பாதார விந்தத்தை அடைந்து விட்டார்.

19. தவத்திரு முத்தண்ணா சுவாமி சேலம்

இவர் நித்திய பிரமச்சாரியத்தைக் கடைபிடித்து சேலம் சித்தாசிரமத்தில் பயின்றவர். ஸ்ரீ பூண்டி மகான் ஒரு பிர்ம நிலை கண்ட ஞானி என்று உணர்ந்து, அவர் புகழ் பாடுவதே நம் பிறவியின் பயன் என்று கருதி ஸ்ரீ பூண்டி மகானிடம் தொண்டு ஆற்றியவர். ஸ்ரீ பூண்டி மகான் அன்பர்களால் "முத்தண்ணா சுவாமி" என்று அன்புடன் அழைக்கப்படுகிறவர்.

20. தவத்திரு யோகி : அண்ணாமலை சுவாமி

இவர் மதுராந்தகத்தில் மரவாடி வைத்து வியாபாரம் செய்து வந்து பின் ஸ்ரீ பூண்டி தேவதேவனைக் கண்டு இவரே தக்க குருநாதன் என்று தெளிந்து துறவறம் பூண்டு ஆன்மீக வழியில் திருவண்ணாமலை முலைப்பால் தீர்த்தம் சமீபம் "சித்தாசிரமம்" அமைத்து யோகம் பயின்று வத்தார். தற்போது சென்னையை அடுத்த தாம்பரம் கடப்பேரியில் தன் மக்கள் வசதியுடன்

வாழ்ந்த போதிலும் எளிமையாக சிறு குடில் அமைத்து ஞான வழியில் வாழ்ந்து வருகிறார்.

21. தவத்திரு ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி, பத்திராவதி (கர்னாடகா)

ஸ்ரீ பூண்டி மகான் தேடக் கிடைக்காத தேவ புருசர் என்று உணர்ந்து அவரிடம் சில காலம் பணியாற்றி, யோகநிலையில் வெற்றியடைந்து, இன்று கர்னாடகா மாநிலம் பத்திராவதியில் ஆசிரமம் அமைத்து பக்தர்களுக்கு அருளாசி வழங்கி வருகிறார். பல இலட்சம் செலவில் பத்திராவதியில் "ஸ்ரீ சுப்பிரமணி சுவாமிக்கு" ஆலயம் அமைத்து அதைத் திறம்பட நடத்திவரும் நல்ல ஆன்மா ஆகும்.

22. வி.எஸ். ஹரி சுவாமி, பெங்களூர்

இவர் பூண்டியில் தேவ புருசர் ஒருவர் ஓசித்திண்ணையில் உள்ளார் என்று உணர்ந்து வந்து தரிசனம் செய்தவர். மானசீகமான பக்தியில் இருப்பவர். ஸ்ரீ பூண்டி தேவதேவன் திருக்கோயில் கட்ட எங்களுடன் முழு ஒத்துழைப்பையும், நாங்கள் (கமிட்டியார்) திருப்பணியில் சோர்வடைந்த போதெல்லாம் எங்களுக்கு பொருளும், தைரியமும் வாரி வழங்கியவர்.

இவர் பெங்களூரில் சுவாமியின் நினைவாக ஆன்மீக வழியில் முன்னேறிக் கொண்டிருக்கும் யோகி ஆவார்.

அட்டங்க யோகம் பயின்று ஆன்மீக வழியில் முன்னேறும் நல்ல "ஆன்மா" ஆகும்.